74

CCRAS/Pub. - 2

# அகத்தியர் வைத்திய வல்லாதி-600

(மூலமும் உரையும்)

வெளியீடு:

ஆயுர்வேத, சித்த மைய ஆராய்ச்சிக் கழகம்,

புது தில்லி-110016

1980

# அகத்தியர் வைத்திய வல்லாதி-600

(மூலமும் உரையும்)

பதிப்பு:

சித்த மருத்துவ இலக்கிய ஆராய்ச்சி ஆவணத் துறை

**சித்த மருத்துவ மைய ஆராய்ச்சி நிலையம் (இந்திய அரசு),**

சென்னை-600 029.

வெளியீடு:

ஆயுர்வேத, சித்த மைய ஆராய்ச்சிக் கழகம்,

புது தில்லி - 110 016.

1980

First Edition – 1980

© Central Council for Research in Ayurveda and Siddha,
S-10, Green Park Extn. Market,
New Delhi-110 016.

Price: Rs.

*Printed at*
ST. LOUIS INSTITUTE OF PRINTING FOR THE DEAF
MADRAS - 600 020

## பதிப்பித்தவர்கள்:

1. டாக்டர். **சி. எஸ். உத்தமராயன்,** எச்.பி.ஐ.எம்.,
உறுப்பினர், சித்த அறிவியல் ஆலோசனைக் குழு,
கவுரவ ஆலோசகர்,
சித்த மருத்துவ மைய ஆராய்ச்சி நிலையம் (இந்திய அரசு),
சென்னை—600 029.

2. டாக்டர். **ஆர். தியாகராஜன்**, எல்.ஐ.எம்.,
கவுரவ ஆலோசகர்,
சித்த மருத்துவ மைய ஆராய்ச்சி நிலையம் (இந்திய அரசு),
சென்னை—600 029.

3. டாக்டர். **ஆ. ஆனந்தகுமார்,** ஜி.சி.ஐ.எம்.,
தலைவர், சித்த அறிவியல் ஆலோசனைக் குழு,
திட்ட அலுவலர்,
சித்த மருத்துவ இலக்கிய ஆராய்ச்சி ஆவணத் துறை,
சித்த மருத்துவ மைய ஆராய்ச்சி நிலையம் (இந்திய அரசு),
சென்னை—600 029.

4. டாக்டர். **ச. முத்தரசன்,** பி.ஐ.எம்.,
உதவி ஆராய்ச்சி அலுவலர்,
சித்த மருத்துவ இலக்கிய ஆராய்ச்சி ஆவணத் துறை,
சித்த மருத்துவ மைய ஆராய்ச்சி நிலையம் (இந்திய அரசு),
சென்னை—600 029.

# FOREWORD

A critical edition of Agasthiar Vallathi - 600, a rare Siddha work, which has been out of print for long, has been brought out utilising a hand written manuscript and a printed book dating as back as 1879. This work by and large deals with medicinal preparations which invariably have *Vallathi* (*Semecarpus anacardium Linn. F.*) among the ingredients thereby pointing to its important place in therapeutics. Embryology, pulse reading, diagnostic methods and other subjects relevant for understanding Siddha system of medicine are also dealt with. The Council thanks Thanjavur Maharaja Saraboji Saraswathi Mahal Library and the Madras Oriental Manuscripts Library for having made available the works available there for the preparation of this edition.

The Ccuncil thanks Dr. C. S. Uthamaroyan, Dr. R. Thyagarajan and Late Shri. N. Kandaswami Pillay for the guidance and assitance provided at all stages in bringing out this work. The Council plans to bring out other similar works so that the medical world at large may be benefitted by the lore contained therein.

New Delhi,
31st May, 1979.

P. N. V. KURUP,
*Director.*

# முகவுரை

வல்லாதி என்றால், சேங்கொட்டையை ஆதியாக வைத்துச் செய்யப்படும் மருந்து எனப் பொருள்படும்; அத்தகைய முறைகளை அகத்தியர் அருளிச் செய்தபடி இந்நூலில் கூறப்பட்டுள்ள காரணத்தால், இஃது அகத்தியர் வைத்திய வல்லாதி எனும் பெயருடையதாயிற்று. இதில் அறுநூற்று இருபத்திரண்டு (622) பாடல்கள் அடங்கியுள்ளன. சித்த மருத்துவத் துறையில் ஆதியில் அருளிச்செய்யப்பெற்ற நூல்கள் பல; ஆனால், அத்தகைய மூல நூல்கள் பல இப்போது கிடைக்கவில்லை. கிடைக்கப்பெற்ற நூல்களும் மிகச் சிலவே; அகத்தியர் பெயரால் அமைந்துள்ள பல மருத்துவ நூல்களில், வைத்திய வல்லாதி அறுநூறு ஓர் அருமையான நூல் என்று மதிக்கப்படுகிறது. இதில் அமைந்துள்ள செய்யுள் நடை அகத்தியரின் அரும்பெரும் புலமைக்குப் பொருத்தமாக இல்லையெனினும், ஆதியிலிருந்து வாய்மொழி வாக்காக வந்திருக்கலாமென்றும், காலவேகத்தில் நடைப் பிறழ்ச்சி ஏற்பட்டிருக்கலாமென்றும் ஒரு சாரார் கருதுகின்றனர். ஏனெனில், இந்நூலில் உள்ள செய்யுள் நடை மிக உயர்வாகக் கருதப்படாவிடினும், இதில் அமைந்துள்ள மருத்துவப் பயன் ஒன்றைமட்டும் அடிப்படையாகக் கொண்டு இந்நூலை மதிப்பிடுவதே பொருத்தமாகும் என்று மருத்துவ வல்லுநர் கருதுகின்றனர்.

நோய் நீக்கும் தாதுப் பொருள்களில், இரசம் எங்ஙனம் முதன்மை பெற்று விளங்குகிறதோ, அங்ஙனமே மூலிகை வகைகளில் சேங்கொட்டை முதன்மை பெற்று விளங்குகின்றது; தீராத பல நோய்களையும் தீர்க்கவல்ல பெருமையுடையது சேராங்கொட்டை. ஆனால், அதனை மருந்தில் சேர்க்குமுன், சுத்தி செய்த பின்பேதான் பயன்படுத்தல்

வேண்டும்; இக்கொட்டையிலிருந்து எடுக்கும் எண்ணெய்க்குப் பால் என்று பெயர். அப்பால் நச்சுத்தன்மையுடையது; அது உடலில் பட்டால், கொப்புளங்கள் தோன்றி வீக்கமுண்டாகும். அதன் வாடை பட்டாலுமே முகம் வீங்கும். எனவே, இதனை நன்கு சுத்தி செய்த பின்பே, மருந்தில் சேர்க்கவேண்டும். தேரர் எனும் மருத்துவப் பெரும்புலவர் இதன் சுத்தி முறையைப்பற்றிப் பின்வருமாறு கூறுகின்றார்:

''சேராங் கொட்டை யம்பறவே
சேராங் கொட்டை யிரண்டுபங்கு
சேரன லங்கன் மந்திரமும்
சேதா வளையு நாற்கூறுசேர்த்
தொன்பது நாளூறியபின்
சேனார் மணிக்காந் தியிலதனைச்
சேரொன் பதுநாள் மேலுலர்த்தி
சேதித் துரலி லிடித்தனே''

என்று தேரன் மகா கரிசல் எனும் நூலில் கூறப்பட்டுள்ளது.

சேராங்கொட்டை இரு பங்குக்குப் பனங்கள்ளும், சிவப்புப் பசுந்தயிரும் நான்கு பங்கு சேர்த்து ஒன்பது நாள் ஊற வைக்கவேண்டும். பின்னர், ஒன்பது நாட்கள் சூரிய புடம் வைத்து இடித்து எடுத்து, இதன் வீரியத்தை மிகுவிக்கும் பிற மருந்துகளுடன் சேர்த்துப் பயன்படுத்தல் வேண்டும்; இதனால் புற்றுநோய் போன்ற கொடிய பல நோய்கள் நீங்கும் என்றும் கூறப்பட்டுள்ளன. மருத்துவர்கள் பலர் அம்முறைகளையெல்லாம் தொன்றுதொட்டுக் கையாண்டும் வந்துள்ளனர். இவ்வாறு அமைந்துள்ள மருந்து முறைகள் பல இந்நூலில் அடங்கியுள்ளன. எனவே, இதன் சுத்திமுறையைக் கையாளாமல் இதனை மருந்தில் பயன்படுத்தினால் தீங்கு விளையும் என்பது நன்கு புலப்படுகின்றது. மேல்நாட்டு மருத்துவ முறையில் இவ்வாறு சுத்தி செய்யுமுறை இல்லையாதலால், அதனால் விளையும் தீமையை டாக்டர் சோப்ரா அவர்கள் எழுதிய ''இந்தியாவின் இந்திய மருந்துகள்'' எனும் ஆங்கில நூலில் தெளிவாகக் கூறியுள்ளார்:

## SEMECARPUS ANACARDIUM Linn. (ANACARDIACEAE)

"No work of recent date has been done to find out the nature of the action of the active principles occurring in the drug. Its use as a therapeutic agent even in the indigenous systems of medicine has dwindled to a great extent owing to the fact that the irritation produced by its application cannot be properly controlled, and more often than not, it over–shoots the desired mark. After the administration of *Bhelofruit* for the treatment of piles, 32 patients, developed hapatitis albuminaria and generalised urticaria. Further study is'necessary before it can be usefully employed in medicine."

-*Chopra's Indigenous Drugs of India*
by
Dr. R. N. CHOPRA
Page No. 408, 409

அகத்தியர் வல்லாதி எனும் இந்நூலில் சேராங்கொட்டை சேர்ந்த மருந்து மட்டுமின்றி, வேறு பல அருமையான மருந்துகளும் கூறப்பட்டுள்ளன. மேலும், நாடி நிதானம், நோய் நாடி அறியுமுறை, மருத்துவம் செய்யும் முறை, நோய் வருவதற்குரிய வழி அறியுமுறை, கரு உற்பத்தி முறை, மருத்துவர் ஒழுக்கமுறை, கருமவினை நீக்குமுறை ஆகிய இயல்புகளும் கூறப்பட்டுள்ளன.

தஞ்சை இந்திய மருத்துவ ஆராய்ச்சித் துறை நூல் நிலையத்திலுள்ள அகத்தியர் வைத்திய வல்லாதி 600 எனும் ஏட்டுச் சுவடியை (எல். ஆர். யு. 27) ஆராய்ந்து உரை விளக்கம் செய்து வெளியிட முடிவு செய்தனர். இந்தச் சுவடியோடு ஒப்பிட்டுப் பார்ப்பதற்கு 1 – 10 – 65-இல் எழுதப்பெற்ற சென்னை ஓரியண்டல் நூலகத்தைச் சேர்ந்த சுவடியின் (டி.ஆர். நெ. 126) கையெழுத்துப் பிரதி ஒன்றும், 1879–ஆம் ஆண்டு

பதிப்பித்த அச்சுப் பிரதி ஒன்றும் உதவியாக இருந்தன. இம்மூன்றையும் ஒப்பிட்டுப் பார்த்தபோது, வெவ்வேறு பாட பேதங்கள் காணப்பட்டன. நிர்வாகக் காரியதரிசி திரு. நீ. கந்தசுவாமி பிள்ளை அவர்களின் ஆலோசனைப்படி சித்த மருத்துவ ஆராய்ச்சித் துறையைச் சார்ந்த டாக்டர். ஆர். கண்ணன், பி.ஐ.எம்., அவர்களும், தமிழ்ப் புலவர் திரு. இராமலிங்கம் பிள்ளை அவர்களும், ஆகிய இருவருங் கூடி மூன்று பிரதிகளிலுமுள்ள மூல பாடபேதங்களைத் திருத்திச் செப்பம் செய்தனர். 1 முதல் 286 செய்யுட்கள் வரை அடங்கியுள்ள மருந்துகளுக்கு டாக்டர். கண்ணன் உரை விளக்கம் எழுதியுள்ளார். டாக்டர். ஏ. குமாரவேல், பி.ஏ., பி.ஐ.எம்., அவர்கள் 287-ஆம் செய்யுளிலிருந்து 625-ஆம் செய்யுள்வரை உரை விளக்கமும் அட்டவணையும் எழுதி முடித்தார். இவ்வாறு எழுதி முடிக்கப்பட்டபின் யானும் இந்நூலில் ஆங்காங்கே மருந்து அளவு, உண்ணும் நாள் அளவு முதலியவைகளில் ஏற்றவாறு செப்பம் செய்து திருத்தியுள்ளேன்.

சென்னை இந்திய மருத்துவ டைரக்டர் பதவியிலிருந்து ஓய்வு பெற்றவரும் இந்த ஆராய்ச்சித் துறையின் சித்த மருத்துவ கௌரவ ஆலோசகருமாகிய டாக்டர். சி. எஸ். உத்தமராயன், எச்.பி.ஐ.எம்., அவர்கள் அவ்வப்போது பல ஆலோசனைகள் கூறி ஊக்கப்படுத்தியமைக்கு நன்றி மிகவும் உரியதாகும்.

இந்நூல் ஒரு நல்ல ஆராய்ச்சி நூலாக வெளிவருவதற்கு உறுதுணையாய் உடன் இருந்து உதவிய ஆராய்ச்சிப் பெருந்தகையாகிய நிர்வாகக் காரியதரிசி திரு. நீ. கந்தசுவாமி பிள்ளை அவர்களின் ஒப்பற்ற சேவை மிகவும் பாராட்டத் தக்கது.

இங்ஙனம்,

**ஆ. சண்முகவேலன்**

முன்னாள் உதவி ஆராய்ச்சி அலுவலர்,

தஞ்சாவூர், சித்த மருத்துவ இலக்கிய ஆராய்ச்சிப் பிரிவு,

23 – 10 – 71 தஞ்சை.

# பதிப்புரை

''அகத்தியர் வைத்திய வல்லாதி — 600'' என்னும் இந்நூல், பதினெண் சித்தர்களில் ஒருவராகிய அகத்தியரால் இயற்றப்பெற்ற மருத்துவப் பயன்மிக்க ஓர் அரிய நூலாகும். வல்லாதி என்னும் சேங்கொட்டையை முதன்மையாகக் கொண்டு பல்வகை மருந்துகள் செய்யும் முறைகள், நாடி நிதானம், நோய் நாடி அறியும் முறை, நோய் வருவதற்குரிய காரணங்களை அறியும் முறை, மருத்துவம் செய்யும் முறை, மருத்துவர் ஒழுக்க முறை, கரு உற்பத்தி முறை ஆகியவைகளை விளக்கிக் கூறும் இந்நூல், 1879-ஆம் ஆண்டு பதிப்பிக்கப்பெற்ற அச்சுப் பிரதி நூலைத் துணையாகக் கொண்டு எழுதப் பெற்றது.

தஞ்சை மருத்துவ இலக்கிய ஆராய்ச்சித் துறையின் திட்ட அலுவலர் காலஞ்சென்ற திரு. நீ. கந்தசுவாமி பிள்ளை அவர்களின் ஆலோசனைப்படி டாக்டர். கண்ணன், பி.ஐ.எம். தமிழ்ப் புலவர் திரு. இராமலிங்கம் பிள்ளை, டாக்டர். குமார வேல், பி.ஏ., பி.ஐ.எம்., ஆகியவர்களால் உரை விளக்கம் எழுதப்பெற்ற இந்நூல், முன்னாள் இந்திய மருத்துவத் துறை இயக்குநர் டாக்டர். க. சு. உத்தமராயன் அவர்களது அளப் பரிய ஆலோசனைகளின்பேரில், காலஞ்சென்ற முன்னாள் உதவி ஆராய்ச்சி அலுவலர் திரு. ஆ. சண்முகவேலன் அவர்களால் ஆங்காங்கே திருத்தம் செய்யப்பெற்றது.

சித்த மருத்துவ இலக்கிய ஆராய்ச்சி ஆவணத் துறை யின் பதிப்பாகவும், ஆயுர்வேத, சித்த மைய ஆராய்ச்சிக் கழகத்தின் வெளியீடாகவும் இந்நூல் வெளிவருகின்ற நேரத்தில், ஆலோசனைகள் நல்கிய கவுரவ ஆலோசகர்கள் டாக்டர். க. சு. உத்தமராயன், டாக்டர். ஆர். தியாகராசன் அவர்களுக்கும், ஆயுர்வேத, சித்த மைய ஆராய்ச்சிக் கழக இயக்குநரும்,

இந்திய அரசின் இந்திய மருத்துவத் துறையின் ஆலோசகருமான டாக்டர். பி. என். வி. குருப் அவர்கள் இத்துறையின் வளர்ச்சியில் காட்டுகின்ற தளர்வில்லாத ஆலோசனைகளுக்கும், உதவிகளுக்கும் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், இந்நூல் அச்சிடுங் காலத்தில் துணைபுரிந்த—அச்சுப் பிழை திருத்தி உதவிய டாக்டர். ச. முத்தரசன், பி.ஐ.எம்., உதவிய ஆராய்ச்சி அலுவலர், தமிழ்ப் புலவர் வை. முரு. முத்துக்குமாரசாமி, டாக்டர். கே. மீனாட்சிசுந்தரமூர்த்தி, பி.ஐ.எம்., டாக்டர். ச. ஜெகஜோதிப்பாண்டியன் பி.ஐ.எம். ஆராய்ச்சித் துணையாளர்கள், இளநிலை நூலக உதவியாளர் திரு. த. ப. இராசரத்தினம் ஆகியோரின் சீரிய பணியும் பாராட்டுதற்குரியதே.

இந்நூலை நன்முறையில் அச்சிட்டு செவ்வனே செய்து முடித்த புனித லூயிஸ் அச்சக நிலையத்தாரின் ஒத்துழைப்பும் ஈண்டு குறிப்பிடத்தக்கதே.

**ஆ. ஆனந்தகுமார்**
திட்ட அலுவலர்,
சித்த மருத்துவ இலக்கிய ஆராய்ச்சி
ஆவணத் துறை,
சித்த மருத்துவ மைய ஆராய்ச்சி நிலையம்,

சென்னை-600 029,
12—10—79

## நூலடக்கம்


| பொருள் | பக்கம் எண் |
|---|---|
| காப்பு | 1 |
| ஆசிரியரின் அறிவுரையும் மருந்துகளின் விவரங்களும் | 1 |
| வியாதிகள் வருவதற்குரிய காரணங்கள் | 3 |
| சூதவல்லாதி உருண்டை | 3 |
| சீனவல்லாதி மெழுகு | 6 |
| அமிர்தகெந்திகுக்கில் வல்லாதி | 9 |
| கெந்த வல்லாதி | 13 |
| திலத வல்லாதி | 15 |
| சிந்து வல்லாதி | 16 |
| வல்லாதிச் சூரணம் | 17 |
| நோய் உண்டாதற்குரிய காரணங்கள் | 19 |
| பத்துவகை நாடிகள் | 20 |
| பத்துவகை வாயுக்கள் | 21 |
| திரிநாடி விவரம் — நாடி பார்க்கும் விதம் | 24 |
| நாடி மாத்திரை நிதானம் | 28 |
| பத்து வகை அவத்தைகள் | 31 |
| நூற்கோவை | 32 |
| மருத்துவம் செய்யும் முறை | 34 |
| கருவுற்பத்தி | 34 |
| ஆயுட்காலம் | 36 |
| உணவின் ரசமும் பிரிவுகளும் | 38 |
| பூரணவல்லாதிச் சூரணம் | 39 |
| மருத்துவர்களுக்கு அறிவுரை | 42 |
| சாரத்துலாதிக் குளிகை | 43 |
| மகாசாரத்துலாதிக் குளிகை | 44 |
| அயமாதி வடகம் | 46 |
| திரிலோக வடகம் | 48 |
| மகாசந்தனாதித் தைலம் | 49 |
| மகாநயன சஞ்சீவித் தைலம் | 54 |
| மகாதிரிபலாதித் தைலம் | 57 |
| அமிர்தவல்லித் தைலம் | 60 |

| பொருள் | பக்கம் எண் |
|---|---|
| நாக்குசூலைக்குத் தைலம் | 61 |
| மகாஏலாதித் தைலம் | 62 |
| அமுதாதித் தைலம் | 66 |
| அமுதசஞ்சீவித் தைலம் | 67 |
| அசனவில்வாதித் தைலம் | 68 |
| கன்னரோகத்திற்குத் தைலம் | 70 |
| அதிகரணத் தைலம் | 72 |
| சீதேவித் தைலம் | 74 |
| ஏரண்டத் தைலம் | 75 |
| செம்பிருத் தைலம் | 78 |
| புடத் தைலம் | 80 |
| உள்ளி எண்ணெய் | 83 |
| பீனிசத்திற்கு நசியம் | 85 |
| வச்சிரகபாட மாத்திரை | 86 |
| யாத்திரை போக | 87 |
| வில்வாதி இளகம் | 87 |
| மகாசிந்தாதி இளகம் | 89 |
| நெல்லிமுள்ளி இளகம் | 93 |
| சரபுங்கவில்வாதித் தைலம் | 94 |
| வலிப்புக்கு நசியம் | 97 |
| சண்டமாருத மை | 97 |
| மிருத்துவாதிக் குளிகை | 99 |
| மகாமிருத்துவாதிக் குளிகை | 100 |
| சீதசுராங்குசக் குளிகை | 101 |
| அரிதாரக் குளிகை | 101 |
| அரிதாரக் குளிகை (வேறு) | 103 |
| அரிதார வெள்ளை மாத்திரை | 104 |
| நாசிகாபரணம் சன்னி விட சுரத்திற்கு | 105 |
| திருநேத்திர மை | 106 |
| மகாசுராங்குசக் குளிகை | 107 |
| சுராங்குசக் குளிகை (வேறு) | 109 |
| இங்குலாதிக் குளிகை | 109 |
| மகாஇங்குலாதிக் குளிகை | 111 |
| கெடிசூரணக் குளிகை | 112 |
| நாளையென்பான் நாயகன் குளிகை | 113 |
| நாளையென்பான் நாயகன் குளிகை (வேறு) | 114 |
| ஏலாதி மாத்திரை | 115 |

| பொருள் | பக்கம் எண் |
|---|---|
| சுரத்திற்கு அஞ்சன மை | 117 |
| வாதத்திற்குப் பிட்டு | 117 |
| மகா அனலுருவச் சூரணம் (வாதத்திற்கு) | 118 |
| மகாஅனலுருவச் சூரணம் | 119 |
| கருங்குறுவைச் சூரணம் | 121 |
| மக்களுக்கு அறிவுரை | 122 |
| திருநேத்திரச் சூரணம் | 123 |
| இரசசீனிச் சூரணம் | 126 |
| கருங்கோழிச் சூரணம் (வாதத்திற்கு) | 127 |
| பத்திய உப்பு | 130 |
| பறங்கிப்பட்டைச் சூரணம் | 130 |
| கருவளர்க்கும் எண்ணெய் | 131 |
| கரப்பன் எண்ணெய் | 133 |
| மூலவாயுவுக்கு வெள்ளுள்ளித் தைலம் | 133 |
| மூலவாயுவுக்கு எண்ணெய் | 134 |
| இரத்த மூலத்துக்கு நெய் | 135 |
| நவமூலத்திற்கு நாயுருவி நெய் | 136 |
| வயிற்று நோய்க்கு நெய் | 138 |
| வயிற்று நோய்க்கு நெய்க்கடுகு | 140 |
| வெள்ளுள்ளிப் பற்பம் | 140 |
| கும்மட்டிக்காய்க் குழம்பு | 142 |
| கும்மட்டிக்காய்க் கடுகு | 143 |
| குண்டலாதிக் குழம்பு | 145 |
| கடுக்காய் நெய் | 146 |
| வல்லாரை நெய் | 147 |
| கண்டங்கத்திரி நெய் (காசத்திற்கு) | 148 |
| மாந்த நெய் | 149 |
| குட்டத்திற்கு எண்ணெய் | 150 |
| குட்டத்திற்கு மலைப்பாம்பெண்ணெய் | 151 |
| விரணக் களிம்பு | 153 |
| சண்டரச பற்பம் | 154 |
| இரச பற்பம் | 156 |
| தாளக பற்பம் | 159 |
| தாளகக் கட்டு | 162 |
| இரச பதங்கம் | 164 |
| இரச வேக்காட்டிற்குக் குடிநீர் | 165 |
| மருத்துவத்தைப் பிறருக்குச் சொல்ல விதிமுறைகள் | 166 |

| பொருள் | பக்கம் எண் |
|---|---|
| நாகக் கட்டு | 167 |
| கனக சிந்தூரம் | 169 |
| சலசரி மெழுகு | 171 |
| வெடியுப்புக் கட்டு | 173 |
| முப்புக் கரு | 174 |
| இரசவீர பற்பம் | 175 |
| கிரிச்சனங்கள் ஆறுக்கும் எண்ணெய் | 177 |
| பூசனி எண்ணெய் | 178 |
| சயத்திற்கு எண்ணெய் | 179 |
| மேகசூலைக்குக் கெருடன் கிழங்கெண்ணெய் | 180 |
| நவமூலத்திற்கும் சகல வியாதிகளுக்கும் எண்ணெய் | 182 |
| சகல நோய்களுக்கும் எண்ணெய் | 184 |
| சகல நோய்களுக்கும் எண்ணெய் (வேறு) | 187 |
| சகல குட்டங்களுக்கும் மருந்து | 193 |
| மருத்துவர் ஒழுக்கம் பற்றியது | 194 |
| கருமவினை நீக்கி நோய் நீக்கும் மருந்து செய்வதற்குரிய வேள்விமுறை | 195 |
| சாரச் செயநீர் | 199 |
| துருசுச் சுண்ணம் | 200 |
| வெடியுப்புச் சுண்ணம் | 201 |
| வெடியுப்புச் செயநீரும் கடுங்காரச் சுண்ணமும் | 201 |
| இலிங்க மெழுகு | 205, 251 |
| அரிதார மெழுகு | 206 |
| கௌரி மெழுகு | 206 |
| கெந்தக மெழுகு | 207 |
| தாளகச் சுண்ணம் | 208 |
| பூநீறு தீட்சை | 208 |
| கடுங்காரச் சுண்ணம் | 209 |
| கற்பம் (காரெள்ளின் எண்ணெய்) | 211 |
| சவுக்காரப் பூநீறுவழலை | 213 |
| சவுக்கார எண்ணெய் | 217 |
| சவுக்கார எண்ணெய் எடுக்கும் முறை | 217 |
| சவுக்காரச் சுண்ணம் | 217 |
| வீரமருந்து வேதை | 220 |
| களங்கு செந்தூரம் செய்ய | 221 |
| சூதகக்கட்டு | 221 |
| சூதச்செந்தூரம் | 223 |

| பொருள் | பக்கம் எண் |
|---|---|
| நாகக்கட்டு | 224 |
| கெந்தகக்கட்டு | 225 |
| நாகக்கட்டு | 227 |
| அயச்செம்பு | 228 |
| வெங்காரக்கட்டு | 229 |
| தாமிரபற்பம் | 230 |
| கெந்தகபற்பம் | 233 |
| தாமிரச்சூதம் | 234 |
| பூவழலேக்குரு | 235 |
| காய்ச்சுவழலேக்குரு | 240 |
| பாடாணக்கட்டு | 248 |
| பூபதிச்செந்தூரம் | 253 |

# அகத்தியர் வைத்திய வல்லாதி 600

## காப்பு

1 ஆதியாம் அகண்டபரி பூரணமாய் நின்ற
அகண்டபரா பரத்திருந்த ஐங்கரனே காப்பு
சோதியாம் அறுமுகவன் பாதங்காப்பு
துரியவெளி தன்னில் நின்ற சுந்தரியே காப்பு
வாதியாம் என்குருவின் பாதங் காப்பு
மகத்தான பெரியோர்கள் சரணங் காப்பு
பேதியா வைத்தியந்தான் அறுநூ றுகப்
பேசுகிறேன் வாணிபதம் பேராங் காப்பே.

ஆதியாகவும் எங்கும் நிறைந்தும் மிக உயர்ந்தும் இருக்கிற ஐந்து கரங்களையுடைய பராபரமாகிய கணபதியே காப்பாகும். ஒளிமயமாகிய ஆறுமுகப் பெருமானுடைய பாதங்கள் காப்பாகும். தூய பரவொளியில் நிற்கின்ற உமையே காப்பாகும். வைத்தியப் பெருமகனுகிய என் குருநாதனின் பாதங்கள் காப்பாகும். எல்லா வகையாலும் உயர்ந்த பெரியோர்களது பாதங்கள் காப்பாகும். பலவகைப்பட்ட வைத்தியங்களை அறுநூறு பாடல்களால் தொகுத்துச் சொல்லத் தொடங்குகிறேன். கலைமகளின் பாதங்கள் காப்பாகும்.

### 1. ஆசிரியரின் அறிவுரையும் மருந்துகளின் விவரங்களும்

2 காப்பென்ற வல்லாதி சாற்று மாதி
கருவான வழலைசவர்க் காரச் சுண்ணம்
நாப்பென்ற பற்பமொடு தயில மெண்ணெய்
நாடியொடு வியாதிவரும் நாட்டந் தானும்
தாப்பென்ற சூட்சாதி மருந்து மல்லால்
சாற்றுகிறேன் வடகமொடு குளிகை தானும்
கோப்பென்ற யாகஞ்செய் சாலை யோடு
குறிப்பான கிருதங்கள் கூறு வேனே.

3 கூறுவேன் லேகியங்கள் சூரணங்கள்
குறிப்பான செந்தூரம் கைப்பா கங்கள்
தேறுவேன் உலகத்தோர் பிணிகள் தீரச்
செப்புகிறேன் அறிந்துசெய்யத் தீரும் நோய்கள்

சீறுவேன் பொருள்மேலே இச்சை பட்டுத்
தீராத வியாதிகளைத் தீர்ப்பேன் என்று
தூறுவோர் கைப்பொருளுக் கிச்சி யாதே
துன்பத்துக் காளாகிச் சுழன்றி டாதே.

4 சுழன்றலையும் பாவிகட்கோ சொன்னேன் இந்நூல்
சுந்தரமே ஞானநூல் தொடர்ந்து பாரு
தெரிந்துபல நூல்பார்த்து வைத்தியம் பாரு
தேசத்தில் நல்லவரோடு இணக்கம் பண்ணு
வழிந்து விடும் காமநோய்க்கு உள்ளாய் நின்று
மங்கையர்கள் கற்பழித்து மகிழ்ந்தி டாதே.
அழிந்துமனம் போகாமல் நிலையில் நில்லு
அடக்கமாய் இந்நூலை அறைகின் றேனே.

வல்லாதியை முதலாக வைத்துச் சொல்லப்படுகின்ற மருந்துக்கு ஆதிகருவாக இருக்கின்ற வழலை உப்பு, சவர்க்காரச் சுண்ணம், பற்பம், தயிலம், எண்ணெய், நாடி, நோய் வரும்வழி, நோய்களைப் போக்குவதற்குரிய மிக ஆராய்ந்து அறியப்பட்ட மருந்து ஆகிய இவற்றையெல்லாம் சொல்லுகின்றேன். மேலும் வடகம், குளிகை, யாகசாலை, சிறப்புடைய நெய்வகைகள் இவை களைப்பற்றியும் சொல்லுவேன்.

உலகத்து மக்களின் பிணிகள் தீரும் பொருட்டாக லேகியங் கள், சூரணங்கள், செந்தூரங்கள், கைப்பாக வைத்தியங்கள் ஆகிய இவற்றைச் சொல்லுகின்றேன். நான் சொல்லும் வகையை நன்முக அறிந்து கொண்டு செய்தால் நோய்கள் குணமாகும். பொருள் ஆசை காரணமாகத் தீர்க்க முடியாத நோய்களைத் தீர்த்து விடுவேன் என்று சொல்லித் திரிகின்ற வைத்தியர்களைக் கண்டால் நான் மிகவும் சினங்கொள்வேன். பிறர் கைப்பொரு ளுக்கு ஆசைப்பட்டு, தவமுன வழிகளில் செல்லுகின்றவர்களைத் தூற்றுவேன். ஆதலால் நீங்கள் இவ்வகைத் துன்பங்கட்கு ஆளாகி அலையாதீர்கள்.

இவ்வாறு அலைகின்ற பாவிகளுக்காகவோ இந்நூலைச் சொல் லுகின்றேன்? இல்லை. அறிவால் அழகுடையவனே இந்த ஞான நூலைத் தொடர்ந்து படித்து அறிவாயாக. இந்நூலையும் இது போன்ற நூல்களையும் நன்கு ஆராய்ந்து பிறகு வைத்தியத்தை ஒழுங்குபடச் செய்வாயாக. நாட்டில் நல்லவரோடு பழகுவாயாக. தவமுன வழியாகிய காமநோய்க்கு ஆட்பட்டு, பெண்களோடு கூடி மகிழ்ந்து மயங்கிடாதே. மனம் தீயவழியில் போகாமல் நன்னெறியிலேயே அடக்கமாய் நிற்பாயாக.

## 2. வியாதிகள் வருவதற்குரிய காரணங்கள்

5 அறைகிறேன் விந்தழிந்தால் மேகமாச்சு
அமுதுஅழிந்து சூடுகொண்டால் வாயு சேரும்.
பறைகிறேன் சூலைகுட்டம் கிரந்திப் புற்று
பவுத்திரங்கள் பிளவையொடு கண்ட மாலை
அறைகிறேன் அரையாப்பு ஒட்டி யப்புண்
அருங்கரப்பன் சிரங்குகுன்மம் மலநீர்க்கட்டு
குறையவே நீர்கொண்ட சயநோய் காசம்
குடிலமாம் பேதியொடு கிராணி பாண்டே.

6 பாண்டுடனே காமாலை பீனி சங்கள்
பரிந்துவந்து சேருமடா பலநோய் இன்னும்
தாண்டுமிந்த மேகத்தில் ஐயம் பித்தம்
தான்சேரின் நயனத்தில் சாரும் நோய்கள்
மூண்டிடுமே வாதமீறில் நீரிழிவே யாகும்.
ஊத்தயனே பித்தமீறில் சுரமே தோன்றும்
கூண்டுதடு மாறுமல் இருக்க மாட்டாய்
குறும்பனே உன்உடலம் குலைந்து போமே.

மேலும் சொல்லுகின்றேன். விந்து அழிந்துவிட்டால் மேக நோய் பற்றும். அவ்வாறு விந்தழிவதாலேயும் உடல் மிக்க வெப்பத்தை அடைவதனுலேயும் வாயு வந்து சேரும். பின்னர் சூலை, குட்டம், கிரந்தி, புற்று, ஒட்டியப்புண், கரப்பான், சிரங்கு, குன்மம், நீர்க்கட்டு, மலக்கட்டு, இளைப்பு நோய், இருமல், கொடியபேதி, கிராணி, பாண்டு, காமாலை, பீனிசங்கள் ஆகிய வையும் மற்றும் பல நோய்களும் வந்து சேரும். மேற்சொல்லப்பட்ட மேகத்தில் கபபித்தம் சேர்ந்தால் கண்களைத் தாக்கக்கூடிய நோய் களெல்லாம் உண்டாகும். பிறகு வாதம் மிகுந்துவிட்டால் நீரிழிவு நோய் உண்டாகும். பித்தம் அதிகப்பட்டால் காய்ச்சல் உண்டாகும். பெண் மாயத்தில் சிக்காமல் இருக்கமாட்டாய். அதனுல் தீயவனே உன்னுடல் நிலைகெட்டுவிடும்.

## 3. சூத வல்லாதி உருண்டை

7 குலைந்துவிடும் மேகத்தால் எழுந்த ரோகம்
குடல்வாதம் திமிர்வாதம் குண்டலமாம் வாயு
உலைந்துவிடும் கழல்வாதம் பச்சை வாதம்
உள்நடுக்கல் நரித்தலையாம் வாதத் தோடு

தொலைந்துவிடும் பலவிரணம் எல்லாம் தீரச்
சூதவல்லாதி ஒன்று சொல்லக் கேளு
அலைந்துவிடும் சேங்கொட்டை பழுது போக்கி
அப்பனே விராகனிரு பத்து நாலே.

8 பத்தியென்ற குரோசாணி எடைதான் ரெண்டு
பாருலர்ந்த சதாவேரிக் கிழங்கி ரண்டு
வெத்தியுள்ள நிலப்பனையின் கிழங்கி ரண்டு
வெய்யிலிலே தான்வைத்துச் சூர ணித்து
கத்திபெறக் கல்லுரலில் இட்டுப் பின்னே
கடப்பாரை தன்னாலே இரண்டு சாமம்
சித்தியென்ற சேங்கொட்டை ஒவ்வொன்றாகச்
சேர்த்திடித்துச் சூதமதின் பூரம் ரெண்டே.

9 இரண்டிட்டுச் சேர்த்திடித்து மைபோ லானால்
இருபத்து இரண்டுருண்டை பிடித்துக் கொண்டு
உருண்டைதனை அரன்தனக்கு வைத்துப் போற்றி
ஒன்றைவிட்டு இருபத்தொன்று எடுத்துக் கொண்டு
திரண்டபிணி யாளருக்கு ஏழே உண்டை
தின்னவே பத்தியம்தான் செப்பக் கேளு
திரண்டசிறு பயறுடனே கோழி முட்டை
திறமான துவரைஎன்ற பருப்பு நெய்யே.

10 பருப்புடனே பாலாகும் ஐந்தாம் நாளில்
பாலகனே வறுத்தவுப்பு சற்றே கூட்டு
சுரப்புவாய் வழியோடுஞ் சூலைக் கட்டுஞ்
சொல்லுவேன் முல்லைவெந்த நீரினாலே
கருப்பமாய்க் கொப்பளித்து வெள்ளா டென்ற
சுனதலைதான் வெந்தநீர்க் கியாழந் தன்னை
விருப்பமாய்க் கொப்பளித்துக் கறியுங் கூட்டில்
விதமான வாய்ச்சூலை யேகுந் தானே.

11 ஏகுமே எட்டாம் நாள் ஏரண் டெண்ணெய்
இட்டுநீ மூழ்கிடவே ஏகும் நோய்கள்
சாகுமே கிரந்திகுட்டம் சூலை அரை யாப்பு
சந்தில்வரும் பவுத்திரங்கள் பிளவைப் புற்று
வேகுமே விப்புருதி கண்ட மாலை
விதனஞ்செய் வாதமெல்லாம் விரைந்து போகும்
தேகமே பெலக்கும்பத் தியமே வேண்டும்
சீனவல் வாதிஒன்று தெரிந்து கேளே.

மேற்சொல்லப்பட்ட மேகத்தால் உண்டாகக்கூடிய குடல் வாதம், திமிர்வாதம், குண்டலவாயு, கழல்வாதம், பச்சைவாதம், உள் நடுக்கல், நரித்தலைவாயு, பலவித புண்கள் எல்லாம் வந்து சேரும். இந்நோய்களெல்லாம் தீரும் பொருட்டு ஒரு சூதவல்லாதி என்னும் மருந்தின் செய்முறையைச் சொல்லுகிறேன் கேட்பாயாக.

## செய்முறை

சேங்கொட்டை இருபத்துநான்கு விராகனெடை எடுத்துச் சுத்தப்படுத்தி கொள்ளுக.

குரோசாணி ஓமம்
தண்ணீர்விட்டான் கிழங்கு
நிலப்பனைக் கிழங்கு

ஆகிய இவற்றை வகைக்கு இரண்டு விராகனெடை எடுத்துக் கொண்டு வெயிலில் காயவைத்து கல்லுரலில் இட்டு கடப்பாரையால் இரண்டு சாமம் இடித்துப் பொடி செய்து பிறகு சேங்கொட்டையை ஒவ்வொன்றாக நன்கு இடித்துச் சேர்த்து அதிலே இரண்டு விராகனெடை சூதம், பூரம் ஆகியவற்றைச் சேர்க்க வேண்டும். இவ்வாறு சேர்த்து இடித்து மைபோல் வரும் பக்குவத்தில் எடுத்து அதை இருபத்திரண்டு உருண்டையாகச் செய்து கொண்டு அவ்வுருண்டைகளைச் சிவனுக்கு படைத்துப் போற்றி ஒன்றை மட்டும் விட்டு மற்றைய இருபத்தொரு உருண்டைகளை எடுத்து வைத்துக் கொள்ளவும்.

**அளவு**: நாள் ஒன்றுக்கு ஓர் உருண்டை வீதம் ஏழு நாட்களுக்குக் கொடுக்கவும்.

**பத்தியம்**: சிறுபயறு, கோழிமுட்டை, துவரம்பருப்பு, நெய், பால் இவை ஆகும். பருப்பு கலந்து காய்ச்சிய பாற் கஞ்சியுமாகும். உப்புக்கூடாது. ஐந்தாம் நாளில் உப்பை வறுத்து சிறிது கூட்டிக் கொள்க. இச்சாபத்தியத்தைக் காக்க வேண்டும்.

**தீரும் நோய்கள்**: இவ்வாறு செய்துவரின் சூலைக்கட்டு அடியோடு ஒழிந்து விடும். முல்லைப் பூவையிட்டுக் காய்ச்சியநீர், வெள்ளாட்டின் தலையைக் கொண்டு தயாரிக்கப்பட்ட கஷாயம், இவற்றைக் கொண்டு வாய் கொப்பளித்து அந்த வெள்ளாட்டின் கறியையுங் கூட்டி உண்டுவரின் எல்லாவகை வாய்ச் சூலையும் நீங்கும். எட்டாம் நாள் ஆமணக்கெண்ணெய் தேய்த்து மூழ்கிடின் கிரந்தி, குட்டம், அரையாப்பு, சூலை, பவுத்திரம்,

பிளவை, புற்று, விப்புருதி, கண்டமாலை, மற்றவாத நோய்கள் இவையெல்லாம் நீங்கும். உடலும் வன்மை பெறும்.

### 4. சீனவல்லாதி மெழுகு

12 தெளிவான சீனமென்ற பட்டையோடு
சேங்கொட்டை வெள்ளைஉள்ளி பேரீச் சங்காய்
சுளிவான எள்ளுவகைப் பலந்தா றுறு
சொல்லுகிறேன் மேல்மருந்து சுக்கு ஓமம்
நெளிவான குரோசாணி மிளகு மஞ்சள்
நீண்டமர மஞ்சள்சிற் றரத்தை மல்லி
ஒளிவான குங்குமப்பூச் சித்திர மூலம்
உயர்தேசா புரங்கிராம்பு சாதிக் காயே.

13 சாதியென்ற பத்திரியும் கடுக்காய் சீரம்
தான்கரிய சீரகமும் தான்றிக் காயும்
ஆதியென்ற சிறுதேக்கு கத்தூரி தானும்
ஆவின்கோ ரோசனையும் வகையொன்றுக்கு
நீதியென்ற விராகனெடை இரண்டு தூக்கி
நேராக இடித்துவஸ்திர காயஞ் செய்து
வாதியென்ற சேங்கொட்டைச் சுத்தி கேளு
வகையான சுண்ணும்புக் கல்லில் நீற்றே.

14 நீற்றுவது காடிவிட்டு நீற்றிக் கொண்டு
நினைவாகக் குளிர்ந்தசலத் தலம்பிப் போடு
ஆற்றுவது மேதியுடை சாணிப்பாலில்
அடைவான புளியிலையின் கியாழந் தன்னில்
மாற்றுவது பிரசம்பூக் கியாழத் தோடு
வகையாமக் கியாழத்தில் ஆவின் பாலில்
கோற்றுவது கஷாயப்பால் கொதிக்கையிலே விட்டு
குளிர்ந்தபின்பு கழுவியெடு சுத்தி யாச்சே.

15 சுத்திசெய்து வறுத்துக்கல் உரலி லிட்டு
துடியாக இடிக்கையில் முன்பொடியைத் தூவு
வெத்தியது பனைவெல்லம் பலம்தான் பத்து
வெள்ளுள்ளி எள்ளுடனே பேரீச் சங்காய்
பத்தியது ஆவின்நெய் படிகா லப்பா
பரிவான தேனதுவும் படிகா லாகும்.
மூத்தியதில் விட்டிடித்து மயனம் போல
மும்மதத்தோன் முன்வைத்துப் பூசை செய்யே.

16 பூசைசெய்து மண்டலநெல் லிக்காய் வீதம்
புகழான அந்திசந்தி கொள்ளும் போது
தேசமெச்சு மருந்திதுபத் தியத்தைக் கேளு
சிறுபயறு பசுவின்பால் தயிர் நெய்யாகும்
வாசமுற்ற துவரையுடைப் பருப்பு மாகும்
மைந்தனே புடலங்காய் அவரைக் காயாம்
நேசமொத்த முருங்கைக்காய் சிறு கீரையாம்
நெல்லிக்காய் தூதுவளை நேராம் பாரே.

17 நேரான வெள்ளாடு சுறுமீன் காடை
நெடியவிரலால் உடும்புடனே முயலுமாகும்
வாரான கரப்பனுடை வஸ்து வாகா
மங்கையரைக் கூடாதே மிளகாய் மாற்று
போரான சூலைபதி னெட்டும் போகும்
பொருந்தியதோர் பதினெட்டுக் குட்டம் போகும்
மேரான கரப்பனது இருபத் தொன்றும்
மேகத்தி னூறலெல்லாம் வெருண்டு போமே.

18 போமென்ற பவுத்திரங்கள் அந்திரவாயு
பொல்லாத குலைமுட்டி பிளவைப் புற்று
ஆமென்ற வாதமெல்லாம் அகன்று போகும்
அப்பனே தேகமது இறுகிப் போகும்
தாமென்ற தாதுநட்டம் இந்திரிய கண்டி
சங்கையில்லா தோடுமடா தாக்கிப் பாரு
நாமென்ற பராபரனுர் உமைக்குச் சொன்னுர்
நாட்டோர்க்கு நாமுரைத்தோம் நயந்து பாரே.

| | |
|---|---|
| செங்கொட்டை | பேரீச்சங்காய் |
| பறங்கிப்பட்டை | எள் |
| வெள்ளைப்பூண்டு | இவை வகைக்கு ஆறு பலம் |
| சுக்கு | திப்பிலிமூலம் |
| ஓமம் | கிராம்பு |
| குரோசாணி ஓமம் | சாதிக்காய் |
| மிளகு | சாதிபத்திரி |
| மஞ்சள் | கடுக்காய் |
| மரமஞ்சள் | சீரகம் |
| சிற்றரத்தை | கருஞ்சீரகம் |
| கொத்துமல்லி | தான்றிக்காய் |

குங்குமப்பூ
சித்திரமூலம்
கோரோசனை

சிறுதேக்கு
கஸ்தூரி

இவை வகைக்கு விராகனெடை—2

எடுத்து இடித்து துணியில் வடிகட்டி வைத்துக் கொள்ள வேண்டும். பிறகு சேங்கொட்டையைச் சுண்ணும்புக்கல்லில் நீற்றிச் சுத்தி செய்து கொள்க. பிறகு அதனைக் காடியை விட்டு நீற்றிக் கொள்ள வேண்டும். பின்னர் குளிர்ந்த நீரில் கழுவியெடுத்துக் கொண்டு எருமைச் சாணிப்பாலில் இட்டு வைக்க வேண்டும். பின்னர் புளி யிலைக்குடிநீர் தயாரித்து அதில் இட்டு வைக்க வேண்டும். அதன் பிறகு புரசம்பூக்குடிநீர் தயாரித்து பசும்பாலை அதில் சேர்த்து அவையிரண்டும் சேர்ந்து கொதிக்கையில் மேற்படி சேங்கொட்டையை அதில் இட்டு அது குளிர்ந்த பின்பு கழுவி எடுத்துக்கொள்ள வேண்டும். இதுவே சேங்கொட்டைச் சுத்தி யாம். சுத்தி செய்யப்பெற்ற சேங்கொட்டையைக் கல்லுரலிலிட்டு நன்ருக இடிக்கையில் முன்பு வடிகட்டிய பொடியைத் தூவ வேண்டும். பின்னர் பனைவெல்லம் 10 பலம், வெள் உள்ளி, எள், பேரீச்சங்காய், பசுநெய் படி ¼ தேன் படி ¼ இவற்றை விட்டு மெழுகு பதம் வரும்வரை இடித்து எடுத்துக்கொள்ள வேண்டும்.

**அளவு**: நெல்லிக்காய் அளவு ஒரு மண்டலத்திற்கு காலை யும், மாலையும் உட்கொண்டு வருக.

**ஆகும் பொருள்கள்**: இக்காலத்தில் சிறுபயறு, பசுவின் பால், தயிர், நெய், துவரம்பருப்பு, ஆகியவை ஏற்றவையாகும். புடலங்காய், அவரைக்காய், முருங்கைக்காய், சிறுகீரை, நெல்லிக் காய், தூதுவளை ஆகிய இவைகளும், வெள்ளாடு, சுரூமீன், காடை, விரால், உடும்பு, முயல், இவைகளும் ஆகும்.

**ஆகாப் பொருள்கள்**: கரப்பான் உண்டாக்கக் கூடிய பொருள்கள் ஆகா. பெண்கூடல் ஆகாது. மிளகாயைப் பயன்படுத் தாதே.

**தீரும் நோய்கள்**: இம்முறைகளைக் கடைப்பிடித்துவரின் பதினெண்வகைச் சூலைகளும், பதினெண்வகைக் குட்டங்களும் இருபத்தொரு வகைக்கரப்பான்நோய்களும். மேகத்தால்ஏற்படும் ஊறல்களும் அஞ்சி ஓடிவிடும். பவுத்திரங்கள், அந்தரவாயு, மூட்டுச்சூலை, பிளவை, புற்று பலவகைப்பட்ட வாதநோய்கள் எல்லாம் அகன்றுவிடும். உடலும் வன்மையுறும், தாதுநஷ்டம், இந்திரியகண்டி ஆகியவை நீங்கிவிடும்.

## 5. அமிர்த கெந்திக்குக்கில் வல்லாதி

19 பாரப்பா அமிர்தகெந்திக் குக்கில்வல் லாதி
பாடுகிறேன் கெந்தகந்தான் பலமே எட்டு
வாரப்பா பாண்டத்தில் அமுரி தன்னை
வாய்வேடு கட்டிகெந்தி தனைப்ப ரப்பி
நேரப்பா மேல்மூடிச் சீலை செய்து
நிரந்தரமாய்க் குழியில்வைத்து வாயில் மட்டும்
சீரப்பா மண்ணிட்டு மேல்புடத்தைப் போடு
சீதளமாய்க் குளிர்ந்தபின்பு எடுத்துக் கொள்ளே.

20 எடுத்ததனைக் குளிர்ந்தசலத் தப்பிப்போடு
ஈருள்ளிச் சாற்றில்முன்போல் புடத்தைப் போடு
அடுத்ததனை ஆவின்பால் தன்னில் போடு
ஆனைகுட்டித் தக்காளிச் சாற்றில் போடு
விடுத்ததனைச் சிறுகீரைச் சாற்றில் போடு
விளங்குமயி லாஞ்சியதைத் தயிரில் சேர்த்துக்
கடுத்ததனை முன்போலே புடத்தைப் போடு
கனகம்போல் கெந்தகம்தான் சுத்தி யாச்சே.

21 ஆச்சப்பா குக்கிலது பலந்தா னெட்டு
அழகான வேம்புமுத்தம் பட்டை தன்னை
காய்ச்சப்பா கியாழத்தில் குக்கில்முடி யிட்டு
கட்டுமது ஆறுமல் மூன்று நாள்தான்
பாய்ச்சப்பா பின்பெடுத்துக் குளிர்ந்தசலம் விட்டுப்
பற்றுமல் பிசைந்துநன்றாய் இறுத்துப் போடு
வீச்சப்பா ஆவின்மோர் படிதான் ஒன்று
விளங்குபழச் சாறரைதான் காடி கூட்டே.

22 காடிபடி ஒன்றப்பா நாளேழுறில்
கசப்பெல்லாம் வாங்குமடா கழுவிப்போடு
நாடியே ஆவின்பால் படியில் போடு
நலமாகக் கொதிக்கவைத்து உலர்த்திப்போடு
தேடியே ஆவினுடை நெய் தான்விட்டு
சிவக்கவறுத் தெடுத்திடுவாய் பலமும் நாலே.
நாடியே அமிர்தசர்க் கரைதான் நாலு
நல்லசுத்தி சேங்கொட்டை வறுத்து நாலே.

23 நாலுபலம் கழுவியெடுத்து லர்ந்த வெள்ளு
நல்லகெந்தி சுத்தி செய்து நலமாய்க் கேளு
பாலினிற மானதொரு பறங்கிப் பட்டை
பாய்ச்சடா வகையிரண்டு பலந்தான் மூன்று
மேலும் வகை ஏழுக்குப் பலம்பத் தாச்சு
மேல்மருந்தைச் சொல்லுகிறேன் விரைந்து கேளு
கோலுமே கொடிவேலி வேரின்பட்டை
குறையாமல் பலமிரண்டு கூறக்கேளே.

24 கேளப்பா வாலுழுவை அரிசி கோட்டம்
கெடியான வால்மிளகு பேரீச் சங்காய்
வேளப்பா சடாமாஞ்சி சிவனார் வேம்பு
வெட்டிவேர் வெள்ளறுகு சங்கங் குப்பி
தாளப்பா திரிகடுகு சிறு நாகப்பூ
தக்கோலம் சீரகமும் தாளி சையும்
நீளப்பா நன்னாரி நெருஞ்சி முள்ளு
நிலைப்பனைதண் ணீர்விட்டான் கொத்துமல்லியாமே.

25 ஆமப்பா கல்மதமும் கல்நார் ஏலம்
அப்பனே திரிபலையும் கருவாப் பட்டை
ஓமப்பா கார்போகம் சிற்ற ரத்தை
உற்றகருஞ் சீரகமும் வகையொன் றுக்கு
தாமப்பா பலமொன்று சூரணமே செய்து
தாக்கடா கல்லுரலில் சாமம் நாலு
நாமப்பா பனைவெல்லம் பலத்தைக் கேளு
நாற்பத்து நாலிட்டு இடித்துக் கொள்ளே.

26 இடிக்கையிலே தேன்வாரு பலந்தா னெட்டு
என்மகனே மயனம்போல் இடித்துக் கொண்டு
பிடிக்கையிலே தான்றிக்காய் அளவு கொள்ளு
பிசகாது மண்டலத்தில் தீரும் நோய்கள்
படுக்கையிலே கிடந்தகைகால் முடக்க மெல்லாம்
பறக்குமடா கிரந்திகுட்டம் சூலை வாயு
எடுக்கையிலே புண் புரைகள் வாத மென்ற
எண்பதுடன் பவுத்திரங்கள் ஏகும் தானே.

27 ஏகுமே உள்குத்து மார்ப டைப்பு
என்னசொல்வேன் கரப்பனொடு யோனிப் புற்று
சாகுமே சூசிகா கிராணி குன்மம்
தரியாது கர்ப்பத்தில் எழுந்த ரோகம்

போகுமே கண்ணோசி கண்டமாலை
பொல்லாத அரையாப்பு ருத்திர வாயு
வேகுமே நாசிகா பீட மெல்லாம்
விப்புருதி பிளவையும்விட் டோடுந் தானே.

28 ஓடுமே பதின்காதம் மார்பி லாணி
உரைக்கவென்றால் முடியாது உயர்த்தி மெத்த
வீடுமே பெலக்கும்பத் தியத்தைக் கேளு
வெள்ளாட்டு வற்றலுடன் அவரைப் பிஞ்சு
தேடுமே முருங்கைசிறு பயறு மாகும்
சிறந்தபுடல் நெல்லிக்காய் அரைக்கீரை யாகும்
நாடுமே துவரையுடை பருப்பு நெய்யாம்
நல்லாவின் மோராகும் நாடிக் காணே.

**செய்முறை:** அமுரியை மண்சட்டியிலிட்டு அதன் வாயில் வேடுகட்டி, அதில் 8 பலம் கெந்தகத்தைப் பரப்பி, மேல்மூடி கொண்டு மூடி, சீலைமண் செய்து, பூமியில் ஒரு குழி தோண்டி, அக்குழியில் மேற்படி சட்டியை வைத்து சட்டியின் வாய்வரையில் மணலிட்டு அதன்மேல் எருவிட்டு புடமிட்டெடுத்து, நன்றாகக் குளிர்ந்தபின்பு நீரில் கழுவி எடுத்துக்கொள்ள வேண்டும். பின்னர்,

வெங்காயச்சாறு, பசும்பால், ஆனைக்குட்டித் தக்காளிச் சாறு, சிறுகீரைச்சாறு, மயில்துத்தமும், தயிரும் கலந்த கலவை.

ஆகிய இவற்றிலும் முன்போலவே தனித்தனியே புடமிட்டெடுக்கக் கந்தகம் தங்கத்தைப் போன்று சுத்தியாகும்.

குங்கிலியம் 8 பலம், முற்றிய வேப்பம்பட்டைக்குடிநீர் — தேவையான அளவு குங்கிலியத்தை துணியிலிட்டு முடிந்து வேப்பம் பட்டைக் குடிநீரிலிட்டு மூன்று நாட்கள் ஊறவைத்தெடுத்துக் குளிர்ந்த நீர்விட்டு நன்றாகப் பிசைந்து, அந்நீரை இறுத்துவிட வேண்டும்.

பசுமோர் 1 படி
பழச்சாறு 1/2 படி
காடி 1 படி

இவற்றிலும் குக்கிலையிட்டு ஏழுநாட்கள் ஊறவைத்து கழுவி எடுக்க, அதிலுள்ள கசப்பெல்லாம் நீங்கிவிடும். பின்னர் ஒரு படி பசுவின் பாலிலிட்டு நன்றாகக் கொதிக்க வைத்து உலர்த்திக் கொள்ள வேண்டும். பின்னர் பசுநெய்விட்டு சிவக்க வறுத்தெடுத்துக் கொள்ளவேண்டும்.

| | |
|---|---|
| மேலே கூறிய முறைப்படி சுத்தித்த கெந்தகம் | 8 பலம் |
| மேலே கூறிய முறைப்படி பாகப்படுத்திய குங்கிலியம் | 4 பலம் |
| சீந்தில் சர்க்கரை | 4 பலம் |
| நன்ருகச் சுத்தித்து வறுத்த சேங்கொட்டை | 4 பலம் |
| கழுவி உலர்த்திய எள் | 4 பலம் |
| சுத்தி செய்த அமுக்குரா (அசுவ கந்தி) | 3 பலம் |
| பறங்கிப்பட்டை | 3 பலம் |
| கொடிவேலிவேர்ப்பட்டை | 2 பலம் |

| | |
|---|---|
| வாலுழுவையரிசி | தாளிசப்பத்திரி |
| கோட்டம் | நன்னரி |
| வால்மிளகு | நெருஞ்சிமுள் |
| பேரிச்சங்காய் | நிலப்பனை |
| சடாமஞ்சில் | தண்ணீர்விட்டான்கிழங்கு |
| சிவனார்வேம்பு | கொத்துமல்லி |
| வெட்டிவேர் | கல்மதம் |
| வெள்ளறுகு | கல்நார் |
| சங்கங்குப்பி | ஏலம் |
| திரிகடுகு | கடுக்காய் |
| சிறுநாகப்பூ | நெல்லிக்காய் |
| தக்கோலம் | தான்றிக்காய் |
| சீரகம் | கருவாப்பட்டை |
| கார்போகி | சிற்றரத்தை |
| கருஞ்சீரகம் | வகைக்கு 1 பலம் |

இவற்றைச் சூரணம் செய்துகொண்டு கல்லுரலிலிட்டு 44 பலம் பனைவெல்லம் சேர்த்து நான்கு சாமநேரம் நன்ருக இடிக்க வேண்டும். இடிக்கும்போது 8 பலம் தேன்விட்டு நன்ருக இடித்து, மெழுகுபதத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

**அளவு**: தான்றிக்காயளவு.

**உட்கொள்ளும் நாளளவு**: ஒரு மண்டலம்.

**தீரும்நோய்கள்**: கைகால்முடங்கல், கிரந்தி, குட்டம், குலை வாயு, புண்புரைகள், எண்பது வகைப்பட்ட வாதநோய்கள், பவுத்திரம், உள்குத்து, மார்படைப்பு, கரப்பன், யோனிப்புற்று. சூசிகா

கிராணி, குன்மம், கெர்ப்பத்தில் உண்டான நோய்கள், கண்ணேசி, கண்டமாலே, அரையாப்பு, உருத்திரவாயு, நாசிகாபீடம், விப்புருதி, பிளவை, மார்புஆணி.

## பத்தியம்

**ஆகும் பொருள்கள்**: வெள்ளாட்டுவற்றல், அவரைப்பிஞ்சு, முருங்கைப்பிஞ்சு, சிறுபயறு, புடலங்காய், நெல்லிக்காய், அரைக்கீரை, துவரம்பருப்பு, நெய், பசுமோர்.

### 6. கெந்தக வல்லாதி

29 நாடியே யின்னமொன்று நவிலக் கேளு
நல்லகெந்தி வல்லாதி நாடிக் காணும்
தேடியே கெந்தகந்தான் பலமூன் றப்பா
சிறப்பான சேங்கொட்டை பலமோரெண்டு
கூடியே செண்பகப்பூ பறங்கிப் பட்டை
சொற்சாதி பத்திரியும் கடுக்காய் ஓமம்
ஆடியே சங்கம்வேர் சிறுகி ளாவேர்
ஆடுதின்னு மூலிசங்கங் குப்பி வேரே.

30 வேரான நிலவாகை கரந்தை தானும்
மிளகரணை அசுவகெந்தி யிலவங்கப் பட்டை
பேரான தலைச்சுருளி மிளகு சுக்கு
பெருமருந்துப் பட்டை பிராயன்பட்டை கோட்டம்
சீரான காட்டுமல்லி கொல்லன் கோவை
சீரகமுஞ் சிற்றரத்தை சாதிக் காயும்
தாரான நெல்லிமுள்ளி லவங்கப்பத்திரி
தவசியென்ற முருங்கைவேர் தான்றிக் காயே.

31 காயான திப்பிலியும் சித்திர மூலம்
கனத்தகோ ரோசனையுங் கரிய சீரம்
தீயான சிறுசெருப் படியின் வேரும்
செப்புகிறேன் வனமூலி பலமொன் றப்பா
ஓயாமல் உலர்த்தியதை நிறுத்துக் கொண்டு
உத்தமனே கடைமருந்து பலமரைய தாகும்
சாயாதே யிடித்து வஸ்திர காயஞ் செய்து
தவறாமல் இடித்திடுவாய் சாமம் நாலே.

32 சாமமது இடிமயன மாகும்போது
சர்க்கரைதான் நாலுபத்து பலமே போடு
சேமமது தேன்படிதான் ஒன்று விட்டு
சேரவே யெடுத்துப்பீங் கானில் வைத்து
நேமமது நெல்லிக்காய் வீதமாக
ஈசனுக்குப் பூசை செய்து மண்டலமே கொள்ளு
ஏமமது போலாகும் தேகந் தானும்
என்னசொல்வேன் நோய்போகும் போக்குத் தானே.

33 போக்குமே திமிர்வாதம் மண்டைச் சூலை
புற்றுடனே வெடிசூலை கபால சூலை
தீர்க்குமே மருள்கிரந்தி கரப்பன் குட்டம்
திரண்டெழுந்த பிளவையுடன் சீழ்மூ லங்கள்
நீக்குமே பலவிரணம் கண்ட மாலை
நீங்காத வாதமுடன் கர்ப்பச் சூலை
கேட்குமே அரையாப்பு பவுத்தி ரத்தை
கேள்தண்டு சூலையொடு லிங்கப் புற்றே.

34 லிங்கத்தில் இருந்ததொரு ரோக மெல்லாம்
நில்லாது பத்தியத்தை நிசமாய்க் கேளு
சங்கொத்த உப்புதனை வறுத்துக் கூட்டு
தவறாதே துவரையுடை பருப்பும் நெய்யும்
நங்குற்ற மாங்கிஷங்கள் ஆகா தொன்றும்
நாடாதே கரப்பனென்ற பதார்த்தம் தன்னை
சிங்கத்தை வெல்வதற்குப் பலமுண் டாகும்
தீராத நோய்பலவும் தீருந் தானே.

| | |
|---|---|
| கெந்தகம் 3 பலம் | மிளகு |
| சேங்கொட்டை 2 பலம் | சுக்கு |
| செண்பகப்பூ | பெருமருந்துப்பட்டை |
| பறங்கிப்பட்டை | பிராயன்பட்டை |
| சாதிபத்திரி | கோட்டம் |
| கடுக்காய் | காட்டுமல்லி |
| ஓமம் | கொல்லன்கோவை |
| சங்கம்வேர் | சீரகம் |
| சிறுகிளாவேர் | சிற்றரத்தை |
| ஆடுதின்னுமுலி | நெல்லிமுள்ளி |

| | |
|---|---|
| சங்கங்குப்பிவேர் | இலவங்கபத்திரி |
| நிலவாகை | தவசிமுருங்கைவேர் |
| கரந்தை | தான்றிக்காய் |
| மிளகரணை | திப்பிலி |
| அசுவகெந்தி (அமுக்கிரா) | சித்திரமூலம் |
| இலவங்கப்பட்டை | கோரோசனை |
| ஈசுரமூலி (தலைச்சுருளி) | கருஞ்சீரகம் |
| நெல்லிமுள்ளி | சிறுசெருப்படிவேர் |

இவற்றின் மூலிகைகள் வகைக்கு 1 பலம்

கடைச்சரக்குகள் வகைக்கு 1/2 பலம்.

**செய்முறை:** இவற்றில் மூலிகைகளை உலர்த்தியெடுத்து நிறுத்துக்கொள்ள வேண்டும். எல்லா மருந்துகளையும் நன்றாக இடித்துத் துணியில் வடிகட்டிக்கொண்டு 40 பலம் சர்க்கரை சேர்த்து நான்கு சாமம் நன்றாக இடித்து, மெழுகு பதம் வந்த போது, ஒரு படி தேன்விட்டுக் கிளறியெடுத்து, பீங்கானில் வைத்துக் கொள்ள வேண்டும்.

**அளவு:** நெல்லிக்காயளவு.

**உண்ணும் நாளளவு:** ஒரு மண்டலம் (48 நாட்கள்)

**தீரும் நோய்கள்:** உடல் பொன்போலாகும். நோய்கள் நீங்கும். உடலில் பலம் உண்டாகும். திமிர்வாதம், மண்டைச் சூலை, கபாலசூலை, மருள்கிரந்தி, கரப்பான், குட்டம், பிளவை, சீழ் மூலம், பலவகை விரணங்கள், கண்டமாலை, வாதம், கர்ப்பசூலை, அரையாப்பு, பவுத்திரம், தண்டுசூலை, இலிங்கப்புற்று, மற்றும் ஆண் குறியில் தோன்றும் நோய்கள் மற்றும் தீராத நோய்கள்.

**பத்தியம்:** உப்பை வறுத்துக் கூட்டிக்கொள்ள வேண்டும்.

**ஆகும் பொருள்கள்:** துவரம்பருப்பும் நெய்யும்.

**ஆகாப் பொருள்கள்:** மாமிசங்கள், கரப்பான் பொருள்கள், பெண்போகம்.

## 7. திலத வல்லாதி

35 தானென்ற திலதவல் லாதி கேளு
தப்பாதே எள்ளதுவும் பலந்தான் ஐந்து
தேனென்ற சேங்கொட்டை பலந்தான் ஐந்து
சிறந்த நல்ல வெல்லமது பலந்தான் ஐந்து

வேனென்ற உரலிலிடு மைனம் போலே
வெருகடிதான் மண்டலமே கொள்ளும் போது
ஊனென்ற கிரந்தியொடு சூலையெல் லாம்
ஓடுமே பத்தியந்தான் உரைக்கக் கேளே.

36 கேளப்பா வாயுவுள்ள பதார்த்தம் தள்ளு
கிருபையாய் மங்கையை நீ கூடி டாதே
நாளப்பா மற்றவெல்லாம் ஆகும் ஆகும்
நாடாதே மிளகாயை மிளகு நாடு
தேளப்பா கொட்டுதல்போல் நோயே கொட்டும்
சிவன்சொல்லி ஆயிசொன்னுள் தெளிந்து காணே
நீளப்பா சிந்துவல் லாதி தன்னை
நீநன்ருய்க் கேளப்பா நினைவாய்த் தானே.

| | | |
|---|---|---|
| எள் | — | 5 பலம் |
| சேங்கொட்டை | — | 5 பலம் |
| நல்லவெல்லம் | — | 5 பலம் |

இவற்றை உரலிலிட்டு மெழுகுபதமாக இடித்து எடுத்து வைத்துக்கொள்ள வேண்டும்.

**அளவு**: வெருகடி

**உண்ணும் நாளளவு**: ஒரு மண்டலம் (48 நாட்கள்)

**தீரும் நோய்கள்**: கிரந்தி எல்லாவகைச் சூலை நோய்கள்

**பத்தியம்: ஆகாதவை**: வாயுவை யுண்டாக்கும் பொருள்கள், பெண் போகம், மிளகாய்.

**ஆகும் பொருள்கள்**: மேலே கூறியவை தவிர மற்றெல்லாப் பொருள்களும் ஆகும். மிளகாய் நீக்கி மிளகைச் சேர்த்துக் கொள்ளலாம்.

## 8. சிந்து வல்லாதி

37 நினைவான பழம்புளிதான் பலமோ நான்கு
நிறையவே சேங்கொட்டை பலந்தான் நான்கு
கனமான முருக்கிலையில் தூளுமூன்று
கட்டான கறியுப்பு பலமோ ரெண்டு
தனமான வெங்காரம் பலமு மொன்று
தப்பாதே வெடியுப்பு இரண்டு தானும்
சினமாக உரலிலிடி மைனம் போலே
திரட்டியே சுண்டைக்காய் அளவு கொள்ளே.

38 கொள்ளவே நீரடைப்பு பவுத்திர சூலை
குடிகெடுத்த கல்லடைப்புக் குன்ம வாயு
மெள்ளவே குடல்படுவன் அண்ட வாயு
விழலான தசையடைப்பு உதிர வாயு
கிள்ளவே மறைந்திருந்த பெருநீர்க் கோவை
கேட்குமடா காந்தத்தைச் சேர்த்துக் கொள்ளு
துள்ளவே வந்தநோய் தொலைந்து போகும்
சுந்தரிக்கு ஈசனன்று சொன்ன வாறே.

| | | | |
|---|---|---|---|
| பழம்புளி | — 4 பலம் | கறியுப்பு | — 2 பலம் |
| சேங்கொட்டை | — 4 பலம் | வெங்காரம் | — 1 பலம் |
| முருக்கிலைப்பொடி | — 3 பலம் | வெடியுப்பு | — 2 பலம் |

இவற்றை உரலிலிட்டு நன்றாக இடித்து, மெழுகு பதத்தில் எடுத்து வைத்துக்கொள்ள வேண்டும்.

**அளவு:** சுண்டைக்காய்

**தீரும் நோய்கள்:** நீரடைப்பு, பவுத்திரம், சூலை, கல்லடைப்பு, குன்மவாயு, குடல்படுவன், அண்டவாயு, தசையடைப்பு, உதிரவாயு, பெருநீர்க்கோவை.

**குறிப்பு:**

இம்மருந்துடன் காந்தபற்பம் அல்லது காந்த செந்தூரம் சேர்த்து உட்கொள்ள வந்த நோய்கள் எல்லாம் தீரும்.

## 10. வல்லாதிச் சூரணம்

39 வாறான வல்லாதிச்சூர ணத்தை
மைந்தனே சொல்லுகிறேன் மகிழ்ந்து கேளு
பேறாகத் தண்ணீர்விட் டான்கிழங்கி னோடு
பெருங்கிழங்கா நிலப்பனையும் உலர்த்திக் கொண்டு
கூறான பறங்கியுடைக் கேசந் தன்னில்
குலவுகின்ற முருங்கையுடைப் பிசினும் கூட்டி
ஆறான ரூமிமஸ்து என்று சொல்வார்
அதுவகைக்கு வராகனெடை யீரா றாமே.

40 ஆமென்ற விராகனெடை சேங்கொட்டை கேளு
அப்பனே யீரெட்டு அசடு போக்கி
ஓமென்ற நாய்க்கடுகு குரோசாணி குப்பை
ஓமமுடன் கருஞ்சீரகம் கிருமாணி ஓமம்

நாமமென்ற வகையாறு விராகனெடை யெட்டு
ரசமொன்று பனைவெல்லம் நாலொன் ருகும்
தாமென்ற மருந்துவகை பதினுன்குக்கும்
தானூறு நாற்பத்து ஒன்றுமாச்சே.

41 ஆச்சிந்த மருந்தையிடி ஆறு சாமம்
அதனேடு வெற்றிலையின் காம்பைந் நூறு
மூச்சிந்தச் சூரணத்தை எடுத்துக் கொண்டு
மும்மதத்தோன் முன்வைத்துப் பூசை பண்ணி
பாச்சிந்த வெருகடிதான் வாயி லிட்டுப்
பண்பாகப் புளித்தமோர் குடிக்கச் சொல்லு
போச்சிந்தக் கிரந்தியொடு சூலை குட்டம்
பொல்லாத திமிர்வாயு போகுந் தானே.

42 போகுமே அரையாப்பு மேக வாயு
புற்றுடனே கரப்பானும் பிளவை யேது
ஏகுமே பவுத்திரங்கள் ரணங்க ளெல்லாம்
ஏழுதினம் தானருந்த சுருக்கு மெத்த
ஆகுமே பத்தியங்கள் இல்லை யில்லை
ஆகாத வஸ்துவெல்லாம் அருந்த வேண்டாம்
நாகமே தரித்தபிரான் உமைக்குச் சொன்னர்
நான்சொன்னேன் இப்போது நாடொண் ணுதே.

| | |
|---|---|
| தண்ணீர்விட்டான் கிழங்கு<br>பெருங்கிழங்கு<br>நிலப்பனை<br>பறங்கிப்பட்டை | வகைக்கு 12 விராகனெடை. |
| முருங்கைப்பிசின்<br>ரூமிமஸ்து | வகைக்கு 12 விராகனெடை. |

அசடுபோக்கிச் சுத்தித்த சேங்கொட்டை 16 விராகனெடை.

| | |
|---|---|
| நாய்க்கடுகு<br>குரோசானி ஓமம்<br>சதகுப்பை<br>ஓமம்<br>கருஞ்சீரகம்<br>கிருமாணி ஓமம் | வகைக்கு 8 விராகனெடை. |

| | |
|---|---|
| இரசம் | 1 விராகனெடை. |
| பனைவெல்லம் | 4 விராகனெடை. |
| வெற்றிலைக் காம்பு | 500 எண்ணிக்கை |

இம்மருந்துகளை நன்றாக உலர்த்திக்கொள்ள வேண்டும். மற்ற எல்லாச் சரக்குகளையும் உரலிலிட்டு ஆறுசாமமிடித்துச் சூரணித்து எடுத்து வைத்துக்கொள்ள வேண்டும்.

**அளவு** : வெருகடி.

**துணைமருந்து** : புளித்த மோர்.

**தீரும் நோய்கள்** : கிரந்தி, சூலை, குட்டம், திமிர்வாயு, அரையாப்பு, மேகவாயு, புற்றுநோய், கரப்பன், பிளவை, பவுத்திரம், விரணங்கள்.

**உண்ணும் நாளளவு** : ஏழு நாட்கள்.

பத்தியம்: பத்தியம் இல்லை. ஆனால் ஆகாப்பொருள்களை உண்ணக்கூடாது.

### 11. நோய் உண்டாவதற்குரிய காரணங்கள்

43. நாடுவாய் நோய்வருவது ஏதென் றக்கால்
நவிலுவோம் அதிபோகச் சையோ கத்தால்
சூடுவாய் மேகமுண்டாய் வாய்வும் சேர்ந்து
சோரவே நோயாச்சு திடமும் போச்சு
கூடுவார் கெற்பமதில் புணர்ச்சி மீறில்
கொல்லுமடா நோயப்பா கூறக் கேளு
தேடுவார் தேகமது எண்சாண் நீளம்
செப்புகிறேன் அங்குலமும் தொண்ணூற் றாறே.

44. தொண்ணூற்றாறு அங்குலத்தின் மூலம் தன்னில்
சொல்நாடி எழுபத்தீ ராயிரந்தான்
தண்ணூற்றும் இதில்நாடி பத்து மாகும்
தப்பாது இதுமூன்றும் தாக்கிப் பாரு
விண்ணூற்று எழுபத்தீ ராயி ரந்தான்
மிகுந்த நோய் தனிற் சுருக்கம் விரைந்து பாரு
எண்ணூற்று தொண்ணூறை ஐந்தி லேற்ற
இதுதொகையில் தசநாடி பகுத்துக் காணே.

பெண் போக மிகுதியினுல் உட்சூடு மிகுந்து மேகநோய் உண்டாகும். பின்னர் வாயுவும் சேர்ந்து நோய்கள் அதிகமாகும். உடல் வன்மையும் குன்றும். கெர்ப்பம் கொண்டிருக்கும் காலத்தில் புணர்ச்சி அதிகமாஞல் நோய்கள் மிகுந்து கொல்லும். உடல் அவரவர்கள் கையால் எட்டு சாண்களான தொண்ணூற்ருறு அங்குலங்களைக் கொண்டதாகும்.

தொண்ணூற்ருறு அங்குலங்களுக்கும் இடமாக இருக்கின்ற உடலில் எழுபத்திரண்டாயிரம் நாடிகள் உள்ளன. இவற்றில் மிகப் பெருமை தரும் நாடிகள் பத்தாம். மேலும் இடகலை, பிங்கலை, சுழிமுனை என்ற மூன்று நாடிகளும் மிகச் சிறந்தனவாகக் கொள்ள வேண்டும். இவ்வாறு எழுபத்தீராயிரம் நாடிகளின் மூலம் அறியப் படுகிற நோய்களின் சுருக்கம் எண்ணூற்றுத் தொண்ணூறை ஐந் திஞல் பெருக்க அது கூடி வரும் தொகையாகும். (4450) இனி தசநாடிகளின் விளக்கம் கூறுவேன்.

## 12. பத்து வகை நாடிகள்

45 காணுவாய் இடைசுழிமுனை பிங்கலையி னேடு
காந்தாரி குகுதன்சங் குனிஅசனி யோடு
பூணுவாய் அலம்புருடன் சிங்குவையு மல்லால்
புகழுமிவர் செய்தொழிலும் பொருந்துமிடம் கேளு
காணுவாய் இடைவலக்கால் அங்குட்டத் திருந்து
கத்திரிமா ருயிடது நாசிதனில் பாயும்
பேணுவாய் பிங்கலைதான் இடது காலின்
பெருவிரலில் இருந்துகத் திரிமாற லாமே.

46 ஆருன வலதுநா சினியில் சாரும்
அப்பனே சுழிமுனைமூ லத்திருந்து மேலே
ஈருன ஆக்கினையின் மட்டும் பாய்ந்து
இதுதாஞம் உச்சியிலஞ் சுருவாணி யாகும்
பேருன சிங்குவையுள் நாக்கில் நின்று
பேணியுண்ணும் அன்னத்தைக் கீழே பாய்ச்சும்
சோருன புருடனது வலது கண்ணில்
சோதியுடன் பார்வைக்கொக்குந் தொழில் கண்டீரே.

47 தொழிலான காந்தாரி இடது கண்ணில்
சோதியுடன் பார்வைதரும் சூட்ச மாக
நெழிலான அசனையது வலது காதில்
நிற்குமடா அலம்புருடன் இடது காதில்

குழலான சங்கினிலிங் கத்தில் நின்று
கொடிபோலே சாற்றுமடா கூறினேன் நான்
எழிலான குகுதன் அபா னத்தைக் கொள்ளும்
இயம்பவே தசவாய்வை இசைந்து கேளே.

இடகலை, பிங்கலை, சுழிமுனை, காந்தாரி, குகு, சங்கினி, அசனிகளாகும்.(அத்தி) அலம்புடை, புருடன், சிங்குவை இவை தசநாடி இனி இவற்றின் பொருந்துமிடங்களையும், இயக்கங்களையும், சொல்லுவோம்; இடகலை வலக்காலின் பெருவிரலிலிருந்து கத்தரிக்கோல் மாறுலாக இடது மூக்கைப்பற்றி நிற்கும்; பிங்கலை, இடதுகாலின் பெருவிரலிலிருந்து கத்தரிக்கோல் மாறுலாக வலது மூக்கைப் பற்றி நிற்கும்.

சுழிமுனை மூலாதாரத்தைத் தொடர்ந்து எல்லா நாடிகளுக்கும் ஆதாரமாய் நடுநாடியாக ஆக்கினை (சிரம்வரையில்) வரையில் முட்டி நிற்கும். இவை பொருந்துமிடங்களாம். சிங்குவையானது உள் நாக்கிலே நிற்கும். உண்ணப்படுகிற உணவைத் தொண்டை வழியாய்க் கீழே தள்ளும். புருடன் என்னும் நாடியானது வலது கண்ணில் நிற்கும். பார்வைக்குரிய ஒளியைக் கொள்ளும்.

காந்தாரியானது இடது கண்ணில் நிற்கும். இதுவும் பார்வைக்குரிய ஒளியைத்தரும். (அசனி) அத்தி என்னும் நாடியானது வலது காதிலும், அலம்புருடன் இடது காதிலும் நிற்கும். சங்கினி குறியில் நிற்கும். குகு அபானத்தில் நிற்கும். இனி தசவாயுவைப் பற்றிச் சொல்வோம்.

## 13. பத்து வகை வாயுக்கள்

48 இசைந்துகேள் பிராணனுடன் அபானன் தானும்
எழிலான வியானனும் உதானன் கூர்மன்
அசைந்துகேள் தேவதத்தன் சமான னுகன்
ஆனகிரி கரன்தனஞ்செ யன் இவர்கள் பத்தாம்
பிசைந்துகேள் பிராணன் மூலத்தி ருந்து
பிங்கலையோடு இடைநடுவாய்க் கபால மட்டும்
பசைந்துகேள் முட்டியது நாசியோடு
பன்னிரண்டங் குலம்பாயும் பாழாம் நாலே.

49 நாலேகும் மற்றெட்டு முள்ளே பாயும்
நாழிகைக்கு முன்னூற்று அறுப தாகும்
ஏலேது நாளொன்றில் சுவாசம் தானும்
இருபத்தோ ராயிரத்து அறுநூ றப்பா

மேலேகும் பிராணன்நெஞ்சில் நின்று ஓடும்
விளங்குமே கிரிகரன்றும் மலையுண் டாக்கும்
காலேகும் குகுதனுடன் அபான னின்று
கழிக்குமே மலசலத்தைக் கருதிப் பாரே.

50 பாரடா நாடிதனில் சாமனன் நின்று
பருகியதோர் அன்னத்தைச் செரிக்கப் பண்ணும்
ஊரடா உதானன்கண் டத்தில் நின்று
உண்டவன்ன பானத்தைக் கீழே பாய்ச்சும்
வீரடா நாகன்விக் கலையுண் டாக்கும்
வியானன்மேல் ஓங்கிவந் ததையில் லாமல்
வாரடா விருத்திதன்னை உறுப்புக் கெல்லாம்
வளமாகப் பாய்ந்துமே இறுகும் பாரே.

51 பார்க்குமே கூர்மனது கண்ணை மூடிப்
பார்த்திருத்தல் சிமிட்ட லுடன் பண்ணு வான்பார்
ஊர்க்குமே தேவதத்தன் செயுங்கொட் டாவி
உடம்புமுறுக் குண்டாகும் உண்மை யாக
கார்க்குமே தனஞ்செயன்தான் உயிர்போ னாலும்
கபாலத்தில் நின்றுடம்பை ஊதப் பண்ணும்
ஆர்க்குமே மண்டைதனைக் கிழித்துப் போவான்
அப்பனே சொல்லிவிட்டேன் அறிந்து கொள்ளே.

52 கொள்ளடா தசநாடி தன்னில் மூன்று
கூறுவேன் இடைசுழினை பிங்கலைதா னென்று
விள்ளடா இடைகலைதான் நிமிர மாறி
மிகுந்தக்கால் அங்குட்டத் திருந்து ஏறி
கள்ளடா கண்டத்தில் மாறி யோடில்
கபாலவரை தனில்முட்டி மார்பில் பாய்ந்து
தள்ளடா வலதுகரம் பிங்கலையி னோடு
தணித்தவிடை இடதுகரம் சாரும் தானே.

53 சாருமடா சுழிமுனைதான் நடுமை யத்தில்
தாதுவிது மூன்றுலே தாக்கிப் பாரு
பேருமடா இடையதுதான் வாத மாச்சு
பிங்கலைதான் பித்தமடா பேணிப் பாரு
சேருமடா சுழிமுனைதான் ஐய மாக்கும்
செப்புவேன் தசவாய்வில் மூன்று வாயு
ஊருமடா வாதபித்த சிலேட்மத் தோடு
ஒன்றுகச் சேர்ந்திருக்க உரைக்கி றேனே.

பிராணன், அபானன், வியானன், உதானன், கூர்மன், தேவதத்தன், சமானன், நாகன், கிரிகரன், தனஞ்செயன் இவை பத்தும் தசவாயுக்கள் ஆகும். இவற்றுள் பிராணவாயு மூலாதாரத்திலிருந்து புறப்பட்டு பிங்கலை, இடகலை இவைகளின் நடுவாகச் சென்று கபாலத்தை முட்டி, மூக்கின் வழியாக வந்து பன்னிரண்டு அங்குலம் பாயும். (மீண்டும் எட்டு அங்குலம் உட்புறம் பாய்வதால்) நான்கு அங்குலம் பாழாகும்.

பன்னிரண்டு அங்குலங்களில் மற்ற எட்டு அங்குலங்களும் உள்ளே பாயும். இவ்வாறு நாழிகை ஒன்றுக்கு முந்நூற்று அறுபது மூச்சு வரும். இந்த முறையில் நாளொன்றுக்கு இருபத்தோராயிரத்து அறுநூறு வாசி (21600) நடைபெறும். இதில் 7200 மூச்சு பாழாகும். பிராணவாயுவானது நெஞ்சில் நின்று ஓடும். கிரிகரன் தும்மலை உண்டாக்கும். குகு அபானத்தில் நின்று மலநீர் ஆகியவைகளைக் கழிக்கும்.

சமானன் என்ற வாயு நாடியுடன் சேர்ந்து உண்ட உணவைச் செரிக்கச் செய்யும். உதானன் கழுத்தில் நின்று உணவு, நீர் இவற்றின் சாரத்தை உடல் முழுவதும் பரவச் செய்து வளர்க்கும். நாகன் என்ற வாயு மனத்தில் நல்ல கலைகளை உண்டாக்கும். வியானன் உணவின் சாரத்தை உடல் முழுவதும் பரவச் செய்து உடலுக்கு வன்மையளிக்கும்.

கூர்மன் கண்ணை மூடுதல், சிமிட்டல் முதலிய செய்கைகளைச் செய்யும். தேவதத்தன் கொட்டாவியையும் உடம்பு முறுக்கலையும் உண்டாக்கும். தனஞ்செயன் உயிர்போன பின்னரும் கபாலத்தில் நின்று உடலை வீங்கச் செய்யும். இதுவே இறுதியில் மண்டையைக் கிழித்துக்கொண்டு வெளியே போகும்.

மேற்சொல்லப்பெற்ற பத்து நாடிகளுக்குள் இடகலை, பிங்கலை, சுழிமுனை என்ற மூன்றையும் சிறப்புடையனவாகச் சொல்லலாம். இவற்றுள் இடகலை, வலது காலின் கட்டை விரலிலிருந்து புறப்பட்டு மூலாதாரத்தின் வழியாகக் கழுத்து வரையில் ஓடி கத்திரிக்கோல் மாறலாக மாறி சிரம் வரையில் சென்று முட்டி, பிறகு மார்பில் பாய்ந்து பின்னர் இடக்கையில் சாரும். இதுபோலவே பிங்கலை என்ற நாடி இடதுகால் பெருவிரலிலிருந்து புறப்பட்டு மூலாதாரத்தின் வழியாகக் கழுத்துவரையில் ஓடி கத்திரிக்கோல் மாறலாக மாறி சிரசுக்கு ஏறி பிறகு வலது நாசியின் வழியாகச் சென்று வலக்கையில் பாயும்.

சுழிமுனை என்ற நாடி மூலாதாரத்திலிருந்து புறப்பட்டு இடகலை, பிங்கலை இவை இரண்டிற்கும் இடையே இயங்கும். தாதுவை இம்மூன்று நாடிகளால் அறிந்துகொள்ள வேண்டும். இடகலை தான் வாதமாகும், பிங்கலைதான் பித்தமாகும். சுழிமுனைதான் கபமாகும். பத்து வாயுக்களுக்குள்ளே அபானன்,பிராணன், சமானன் ஆகிய மூன்றும் வாதம், பித்தம், கபம் ஆகியவற்றுடன் சேர்ந்திருக்கும்போது உண்டாகும் விளைவுகளைச் சொல்லுகிறேன்.

### 14 திரிநாடி விவரம் நாடி பார்க்கும் விதம்

54 உரைக்கிறேன் அபானனது வாதஞ் சேரும்
உற்றுப்பார் பிராணனது பித்தஞ் சேரும்
நிரைக்கிறேன் சமானன்து ஐயம் சேரும்
நேர்வாதம் வாயுபித்தம் நெருப்ப தாகும்
தரைக்கிறேன் சிலேட்மமது தண்ணீ ராகும்
சானுமுதல் உந்திமட்டும் வாத வீடு
விரைக்கிறேன் உந்தியின்மேல் மார்பு மட்டும்
மிக்கபித்தம் இருப்பிடமாய் விளங்கும் தானே.

55 தானென்ற மார்பின்மேல் உச்சி மட்டும்
தான்கபமே இருக்குமடா சல்லி போலே
வானென்ற வாதமது வக்கிரகெதி யாகில்
மயிலோனுன் கோழியன்னம் மாது போலும்
தேனென்ற பித்தத்தை நோக்கி மேலே
சென்றேறிச் சாயலின்றித் தெளிவாய் நிற்கும்
நானென்ற பித்தநடை ஆமை அட்டை
நல்லபுரு போர்ச் சேவல் நாடிப் பாரே.

56 நாடிப்பார் வாதத்தை நோக்கிப் பாயும்
நன்றுகச் சிலேட்டுமந்தான் நாகம் போலும்
சூடிப்பார் மண்டூகம் போலே தத்தில்
சுருக்கில்லை கனமில்லை மெலிந்து நிற்கும்
ஆடிப்பார் வாதமொன்று பித்தம் பாதி
ஐயம்காற் பங்கானல் அசடோவில்லை
தேடிப்பார் மூவிரலும் சமனாய் ஓடில்
தீராது இவைசன்னி வாதந் தானே.

57 தானென்ற வாதமது கோழி போலே
சாவலைப் போல் பித்தமது தாண்டு யாகில்
வேனென்ற வாதபித்தம் தொந்திப் பாகும்
மிகுதியாய் வாதமது ஓணன் போலும்

கானென்ற ஐயமது சர்ப்பம் போலும்
கதித்திடுமேல் வாதம்ஐயந் தொந்திப் பாகும்
ஊனென்ற பித்தமது ஆமை போலும்
ஓடுமே ஐயம்மண் டூகம் என்னே.

58 என்னுமே பித்தமய்யம் தொந்திப் பென்று
இருக்குமே அளவிடைதான் இன்னும் கேளு
பின்னுமே மணிக்கட்டின் கீழு தாக
பெருவிரல் அங்குலத்தில் மூவிரலை வைத்து
மன்னுமே மூவிரலின் இடையின் எல்லை
வைக்குமிடம் விட்டுநீ நாடிப்பாரு
முன்னுமே மணிக்கட்டு தனக்கு மேலே
மூன்றுவிரற் கடையளவில் துடித்தல் காணே.

59 காணுநீ வாதத்தின் கோர மாகக்
கருதினல் விரற்கடைதான் பித்து கோபம்
ஆணுநீ ஐந்துவிரற் கடை யில் தாண்டில்
ஐயத்தின் கோபமென அறிந்து கொள்ளு
பேணுநீ மயிலதுபோல் வாத மாடில்
பெருஞ்சாரைப் பாம்பது போல் ஐயம் ஏறில்
ஊணுநீ பித்தமது அட்டை போலும்
உட்சுருங்கில் சாவாமென் றுரைத்தி டாயே.

60 உரைத்திடவே வாதம்பித் தத்தை நோக்கி
ஓடவே பித்தமந்த ஐயத் தேறில்
நிரைத்திடுமே ஐயமது கண்டத்து ஏறி
நின்றிடுமேல் உண்ணுக்கின் வழியை மூடி
விரைத்திடுமே வாசலைந்தும் அடைத்துக் கொள்ளும்
மேலான சீவகளை மெலிந்து போகும்
மரைத்திடவே கடிகைஐந்தில் மரண மாவான்
மழுவெடுத்தோன் உமைக்குரைத்த வசனம் தானே.

61 வசனமென்ன வாதமொடு சிலேட்மம் ரெண்டும்
வலுவாகில் பித்தமது மாய்ந்து போகும்
அசனமென்ன தொண்ணூறு கடிகை தன்னில்
அவர்மரணம் ஆவதுண்மை அறிந்து கொள்ளு
பிசனமென்ன வாதமொடு ஐயம் பாய்ந்து
பித்தந்தான் புருவென்னத் தணிந்து நின்றல்
விசனமென்ன நான்குநா ழிகையில் சாவார்
மெய்யென்று புலத்தியனே விரிக்கக் கேளே.

62 கேளடா வாதபித்தம் கீழே நோக்கில்
கெடியான துடிநாதம் வீணை நாதம்
நாளடா பாம்பரணை வாலு போலும்
நடுங்கிலும்நா யெலும்புதனைக் கவ்வி யோடி
சூளடா கீழிட்டுக் கடிக்கும் போலும்
சுற்றிவரும் போலவுமே சுழன்றிட் டாலும்
தேளடா பித்தஞ்சி லேட்மத் தேறிச்
சினந்திட்டால் மெய்குளிர்ந்து தெறிக்குந் தானே.

63 தெறிக்குமே வயிற்றுவலி நெஞ்சு வீக்கம்
சிவந்திருக்கு மஞ்சள் நிற்கும் கருகும் நாக்கு
எரிக்குமே முகம்கோணும் இரவுக் கப்பால்
எரிச்சல் உண்டாம் பகல்குளிரும் தேகம் தானும்
முறுக்குமே அடிக்கடிதான் பெருமூச் செய்தும்
முழிபுரட்டும் தாறுமா றுகப் பார்க்கும்
குறிக்குமே உள்ளங்கை உள்ளங் காலும்
குளிர்ந்திருக்கும் உள்நாக்குக் குறியைப் பாரே.

64 குறிகேளு மேற்சுவாசம் தானும் பாயும்
குளிர்ச்சிகண்டு மூக்கன்றி வாயில் பாயும்
அறிகேளு உடல்நடுக்கம் அறிவ ழிக்கும்;
மைந்தவா டாதிருக்கில் அசடுண்டாகும்
வெளிகேளு வுச்சிதனில் சூடுண் டாகும்
மீள்வதில்லை வீழ்ந்திடுதல் மெய் யென் றெண்ணு
துறைகேளு பொறியரவம் தரித்த ஈசன்
சுந்தரிக்குச் சொன்னதிந்தச் சுருதி தானே.

அபானன் என்ற வாயு வாதத்தோடு சேரும்; பிராணன் பித்தத்தோடு சேரும்; சமானன் கபத்துடன் சேரும்; வாதம் என்பது வாயுவாகும்; பித்தம் நெருப்பாகும்; சிலேட்டுமம் தண்ணீராகும். அபானம் முதல் உந்திவரை வாதத்தின் நிலைக்களமாம்; உந்திக்கு மேல் மார்புமட்டும் பித்தத்தின் நிலைக்களம் ஆகும்.

மார்பு முதல் உச்சிவரை கபத்தின் நிலைக்களம். வாதம் வக்கிர நிலையடைந்தால் மயில், ஓணான், கோழி, அன்னம் இவற்றின் நடையை ஒத்து நாடி நடக்கும். பெண் நடையைப்போலும் நாடி நடக்கும். அந்த நாடியானது பித்தத்தை நோக்கி மேலே சென்று தனித்தன்மையோடு தெளிவாய் நிற்கும். பித்த நடை ஆமை, அட்டை, புறு, சேவல் இவைகளின் நடையை ஒத்து நடக்கும்.

இந்த நாடி வாதத்தை நோக்கிப்பாயும். சிலேட்டும நாடி பாம்பு, தவளை இவைகளின் நடைபோல இருக்கும். இதுகனமின்றி மெலிந்து நிற்கும். வாதம் ஒரு மாத்திரை; பித்தம் அரை மாத்திரை; கபம் கால் மத்திரை இருக்குமேயானுல் உடல் நலத்திற்கு அழிவில்லை. இவ்வாறன்றி மூன்று நாடிகளும் ஒத்து நடந்தால் அந்த நடை சன்னிவாத குறியாகும். தீர்வது அரிது.

வாதநாடி கோழி, சேவல் இவற்றைப்போல் நடந்து அதிகமாகப் பித்தத்தைத் தாண்டினுல் அது வாத பித்த தொந்திப்பாகும். வாதநாடி ஓணுன் போல நடந்து தம் மாத்திரைக்கு அதிகமானுலும், ஐயம் பாம்பு போல் ஊர்ந்து தன் மாத்திரைக்கு அதிகமானுலும் வாத ஐய தொந்திப்பாகும். பித்த நாடி ஆமையைப் போலவும் ஐய நாடி தவளையைப் போலவும் நடந்து தன் மாத்திரைகளை மீறுமானுல் அது பித்த ஐய தொந்திப்பாகும்.

மணிக்கட்டின் கீழே பெருவிரலுக்கு ஒரு அங்குலம் தள்ளி மூன்று விரலை வைத்து நாடி பார்த்தல் வேண்டும். மணிக்கட்டின் மேலுள்ள இடைவெளியில் நாடித்துடிப்பை அறிந்து கொள்ள வேண்டும்.

வாதம் தரித்திருந்தால் மூன்று விரற்கிடையில் துடிப்பைக் காண வேண்டும். பித்தம் தரித்திருந்தால் நான்கு விரற்கிடையில் நாடித்துடிப்பை 'யறியவேண்டும். அந்த எல்லையைத் தாண்டினுல் கபத்தின் கோபம் எனத் தெரிந்து கொள்ள வேண்டும். வாதநாடியானது மயில் நடைபோல் நடந்தாலும் கபநாடி சாரைப்பாம்பு போல் ஏறினுலும் பித்தநாடி அட்டையைப்போல் நடந்தாலும் சாவுக்குறிகளாகும்.

வாதநாடி பித்தநாடியை நோக்கி ஓடினுலும் பித்தநாடி கபநாடியை நோக்கி ஏறினுலும் ஐயம் கண்டத்தில் ஏறி நின்று உண்ணுக்கு வழியை மூடுவதுடன் மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐந்தையும் அடைத்துக் கொள்ளும். பின்னர் சீவகளை வாடிவிடும். இந்நிலையிலுள்ளவர் ஐந்து நாழிகையில் மரணமடைவார்.

வாதம், கபம் ஆகிய இரண்டும் வலிவடைந்தால் பித்தம் அழிந்து போகும். அதனுல் தொண்ணூறு நாழிகையில் இந்நிலைமையில் உள்ளவர் மரணமடைவார். வாதத்தோடு கபம் மாய்ந்து பித்தநாடி மட்டும் புரு நடைபோல் தளர்ந்து நின்ருல் இந்நிலைமையிலுள்ளவர் நான்கு நாழிகையில் இறந்துவிடுவார்.

வாதமும் பித்தமும் கீழ் நோக்கி நடந்தால் உடுக்கை போலவும் வீணை போலவும் துடிக்கும். பாம்பரணை வாலைப்போலக் குதித்தாலும் நாய் எலும்பைக் கவ்வி பல இடங்களுக்கு ஓடி அதனை கீழே வைத்து கடிப்பது போலவும் அது சுற்றி வருவது போலவும் நாடி சுழன்று கொண்டிருந்தாலும் பித்தநாடி கபநாடியில் ஏறி தன்னிலை மீறினாலும் உடல் குளிரும்.

மிகுந்த வயிற்றுவலி ஏற்படும். நெஞ்சில் வீக்கம் உண்டாகும். நாக்கு சிவந்து மஞ்சளித்து கறுத்துவிடும். முகம் கோணும். இரவில் உடல் முழுவதும் எரிச்சல் உண்டாகும். பகற்காலங்களில் குளிரும். அடிக்கடி உடல் முறுக்கும். பெருமூச்சு ஏற்படும். விழிகளைப்புரட்டும். தாறுமாறுகப் பார்க்கும். உள்ளங்கால் உள்ளங்கை இவைகள் குளிர்ந்து விடும். இந்நிலையில் உள்நாக்கின் குறியைப் பார்க்கவேண்டும்.

மேல்மூச்சு உண்டாகும். உடல் குளிர்ந்து சுவாசம் மூக்கினுல் மட்டுமல்லாது வாயினுலும் வரும். உடல் நடுங்கும். அறிவு அழிந்துவிடும். உச்சியில் சூடுண்டாகும். இப்பிணியாளி மீள்வதில்லையாய், இறந்துபடல் உறுதி.

## 15. நாடி மாத்திரை நிதானம்

65 தானென்ற வாதமாத் திரைதான் ரெண்டு
தப்பாது பித்தமது தானென் றேறில்
வேனென்ற வாதபித்த தொந்திப் பாகும்
மிகுவாதம் ரெண்டுசிலேட் டுமம்ஒன் றுகில்
ஊனென்ற வாதமய்யந் தொந்திப் பாகும்
உற்றபித்தம் இரட்டிவாதம் ஒன்று சேரில்
கோனென்ற பித்தமுடன் வாதம் சேர்ந்து
கொண்ட திந்த ரோகமெனக் கூறு வாயே.

66 கூறுவேன் பித்தமாத் திரைரெண் டாகிக்
கொடிய சிலேத்துமமொன்று குதிக்கு மாகில்
தூறுவேன் பித்தசிலேத் துமந்தா னென்றும்
துலங்குசிலேத் துமமிரண்டு வாத மொன்று
தேறவே சிலேத்துமவா தந்தான் என்றும்
சிலேத்துமமே இரட்டிபித்தம் ஒன்று சேரில்
வேறுநீ நினையாதே சிலேட்டும பித்தம்
மிகுந்திடுமே சுரபேதி மிகுதி தானே.

67 மிகுதியென்ற ஐயமுடன் வாதம் சேரில்
மேலெழும்பும் நாகத்தின் பிணைச்சல் போல
தகுதியென்ற வாதமுடன் ஐயம் சேரில்
தானுன மயிலரவு போலே ஓடும்
திகுதியென்ற பித்தமுடன் ஐயம் சேரில்
சேற்றிலுறை தவளையொடு அட்டை போலாம்
நிகுதியென்ற ஐயத்தில் பித்தம் சேரில்
நீடரவு வாய்ப்பட்ட எலியு மாமே.

68 ஆமப்பா வாதமது தனித்த போது
அப்பனே மயிற்சாய லாக நிற்கும்
தாமப்பா பித்தநடை பெருக ஓடும்
தனித்துநின்ற ஐயமது அமர்ந்து மீளும்
ஓமப்பா மூவிரலுஞ் சரியே யாகில்
உயர்ந்துநின்ற வாதபித்தம் உற்றுப் பாரு
வேமப்பா மலசலங்கள் கட்டே யானல்
மிச்சமடா வாதமது விளங்கக் கேளே.

69 கேளடா குடெழும்பில் பித்த மிச்சம்
கெடியான குளிர்ச்சிகண்டால் ஐயம் மிச்சம்
தாளடா வாதமது பித்தத் தேறில்
தப்பாது சிலேட்டுமத்தில் பித்தம் சாரும்
வேளடா ஐயமது மேலே ஏறில்
மேலவத்தைக் கடையாளம் மார்பு மூக்கு
கோளடா புறங்கைகள் செவிக ளோடு
குளிர்ந்துச்சி வெதும்பிலையம் மீறுந் தானே.

70 மீறியே கடிகைஐந்தில் மரண மாவார்
வெடவெடத்து பித்தமது மீறினக் கால்
கூறுவேன் வாதமய்யம் குளிர்ந்த தானல்
கொள்ளுமடா பித்தசன்னி அறிவு போகும்
வாறுகேள் வாதமய்யம் மீறிற் றுனல்
வகுத்தபித்தம் அழுந்தினல் மரண சன்னி
சீறியே உட்குத்துப் புறவீச் சாகில்
செணத்திலே இசிவுவரும் திண்ணந் தானே.

71 திண்ணமுடன் ஐயத்தில் வாதஞ் சேரில்
செப்புவேன் சன்னியொடு தோஷ முண்டாம்
எண்ணமுடன் மெய்மயக்கும் சோப முண்டாம்
எழுமூர்ச்சை சோகையுடன் பாண்டு காணும்

வண்ணமுடன் பித்தத்தில் வாதம் வந்தால்
வரும்பாரு பீனிசங்கள் மண்டைக் குத்து
சண்ணுமடா அரையாப்பு பௌத்திரங்கள்
தப்பாது நவமூலம் சாருந் தானே.

72 சாருமடா பித்தமந்த வாதத் தேறில்
தளஞ்செய்யும் பாண்டுகா மாலை காணும்
சேருமடா நீராம்பல் மகோதரங் கவுசி
செப்பரிய அகவைவெப்புப் பாவை தானும்
வாருமடா அய்யமது பித்தஞ் சேரில்
வாயூறல் சுரம்பேதி வாந்தி காணும்
சோருமடா அய்யமது மீறிற் ருனால்
தோன்றுமடா சயகாசஞ் சுருக்காய்த் தானே.

வாதம் இரண்டு மாத்திரையளவாகவும் பித்தம் ஒரு மாத்திரையளவாகவும் ஏறிக் காணப்பட்டால் இது வாதபித்தத் தொந்திப்பாகும். வாதம் இரண்டு மாத்திரையளவாகவும் கபம் ஒரு மாத்திரை அளவாகவும் காணப்பட்டால் இது ஒரு வாத ஐய தொந்திப்பாகும். பித்தம் இரண்டு பங்காகவும் வாதம் ஒரு பங்காகவும் சேர்ந்தால் பித்தவாத நோயாகும்.

பித்தநாடி இரண்டு மாத்திரையளவும் சிலேத்தும நாடி ஒரு மாத்திரையளவாகவும் துடிக்குமானல் பித்த சிலேத்தும மாகும். சிலேத்தும நாடி இரண்டு மாத்திரையளவும் வாதநாடி ஒரு மாத்திரையளவாகவும் துடிக்குமானல் சிலேத்தும வாதமாகும். கபம் இரண்டு மாத்திரையளவாகவும் பித்தம் ஒரு மாத்திரையளவாகவும் சேர்ந்து துடித்தால் கப பித்தமாகும். இதனால் சுரமும் பேதியும் உண்டாகும்.

மிகுதியான கபத்துடன் வாதஞ்சேர்ந்தால் நாகத்தின் பிணைச் சலைப்போல் மேல் எழும்பி நிற்கும். வாதத்துடன் கபம் சேர்ந்தால் மயில் அரவம் இவற்றின் நடைகளை ஒத்து நடக்கும், பித்தத்துடன் கபம் சேர்ந்தால் தவளை போலவும் அட்டை போலவும் நாடி நடக்கும். கபத்தில் பித்தம் சேர்ந்தால் நாடியின் நடை பாம்பின் வாய்ப்பட்ட எலிபோல மிக மெலிந்து நடக்கும்.

வாத நாடி தனித்து நடந்தால் மயில் நடையை யொத்த நடையதாக இருக்கும். பித்தம் தனியாக நடந்தால் மிக விரைந்து ஓடும். கப நாடி தனித்து நடந்தால் மிக அமைதியாகத் துடிக்கும். மூவிரலால் அறிந்து கொள்ளப்படும் சரியான சமநிலையில் ஓடினல் உயர்ந்து நின்ற வாதம் பித்தம் ஆகும். இதனை உற்றுப்பார்த்து

அறிக. இந்நிலையில் மலநீர்க்கட்டு ஏற்பட்டால் வாதம் அதிகரித்திருக்கிறது என்று அறிக.

உடலில் வெப்பம் காணப்பட்டால் பித்தம் அதிகரித்திருக்கிறதென்றும் உடலில் குளிர்ச்சி காணப்பட்டால் கபம் மிகுந்திருக்கிறதென்றும் அறிய வேண்டும். வாதம் பித்தத்தில் ஏறி நடந்தால் கபத்தில் பித்தம் சேரும். கபம் மேல் ஏறி நடந்தால் அது மேலே வரப்போகின்ற நோய்களுக்கு அடையாளமாகும். அவையாவன: மார்பு, மூக்கு, புறங்கைகள், காதுகள் ஆகிய உறுப்புகள் குளிர்ச்சியடைந்து உச்சிமட்டும் வெப்பமடைந்து கபம் மீறும்.

இவ்வாறு மீறி நடந்தால் இந்நிலையிலுள்ளவர் ஐந்து நாழிகையில் மரணமடைவார். உடல் வெட வெடத்து பித்தம் மீறினும் அதனுடன் வாதமும் கபமும் சேர்ந்து உடல் குளிர்ந்த நிலையை அடைந்தாலும் பித்த சன்னி உண்டாகும். இந்நிலையில் அறிவு அழிந்துவிடும். வாதமும் ஐயமும் மீறி பித்தம் அழுந்திக் காணப்பட்டால் அந்நிலை மரண சன்னியாகும். உட்குத்தும் புற வீச்சும் சீறி நிற்குமானால் மிக விரைவில் இசிவு வந்துவிடும்.

ஐயத்தில் வாதம் சேர்ந்தால் சன்னியோடு குற்றம் உண்டாகும். நினைவையும் உடலையும் மயக்கிவிடும். உடல் ஒளி இழந்துவிடும். மூர்ச்சையும், சோகையும் பாண்டும் ஏற்படும். பித்தத்தில் வாதம் சேர்ந்தாலே பீனிசங்களும் மண்டைக்குத்தும் மிகுந்து உண்டாகும். அரையாப்பு, பவுத்திரங்கள், ஒன்பது வகைப்பட்ட மூலம் ஆகியவையும் உண்டாகிவிடும்.

பித்தம் வாதத்தைச் சேர்ந்தால் பாண்டு, காமாலை, நீராம்பல், மகோதரங்கள், கவுசி, அகவை, வெப்புப்பாவை (இவை பெருவயிறு நோயின் பிரிவுகள்) ஆகிய நோய்களும் பித்தத்தில் கபம் சேர்ந்தால் வாயில் நீர் ஊறல், சுரம், பேதி, வாந்தியும் காணும். கபம் தன் அளவைக் காட்டிலும் அதிகமானால் இளைப்பும் காசமும் விரைவில் வந்தடையும்.

### 16: பத்து வகை அவத்தைகள்

73 சுருக்கான அவத்தைபத்தும் சொல்லக்கேளு
துடியான முதலவத்தை பிணமே நாறும்
முருக்கான இரண்டுநலம் வேற்றுமையைக் கூறும்
மூன்றுக்கு தெளிவதுதான் நாற்றமாகும்

அருக்கான நாலின்மேல் இளைப்புக் காணும்
ஐந்துக்கு முகம்வேர்க்கும் ஆறுக்கப்பா
நருக்கான உடம்பதுவும் குளிரும் ஏழில்
நன்றான அன்னத்தை நாடும் பாரே.

74 நாடுமே இருநான்கில் கண்பஞ் சாடும்
நலமாக ஒன்பதிலே உடம்பு வேர்க்கும்
ஓடுமே பத்துக்கு மரண மாவார்
உத்தமனே அவத்தைபத்தும் உரைத்தேன் பாரு
தேடுமே பலநூலும் அறிந்து கொண்டு
தேசத்தில் வைத்தியந்தான் செய்ய வேண்டும்
கூடுமே சாத்தியம் அசாத்தியத் தின்
குணங்குறியும் தாதுபெலங் கூறி னேனே.

பத்து அவத்தை என்பது மரணமுண்டாவதற்கு முன்னம் மனி தர்களுக்கு இயல்பிலே உண்டாகும் பத்துவித வேதனைகள் ஆகும். முதலவத்தையில் பிணநாற்றமும் இரண்டாமவத்தையில் உடல் நலக்குறைவும் மூன்றுமவத்தையில் மதுவின் நாற்றமும் நான்கா மவத்தையில் இளைப்பும், ஐந்தாமவத்தையில் முகம் வேர்த்தலும், ஆறுமவத்தையில் உடல் குளிர்தலும், ஏழாமவத்தையில் பசி வேட்கையும், எட்டாமவத்தையில் கண்பஞ்சாடலும், ஒன்பதா மவத்தையில் உடம்பு வியர்த்தலும், பத்தாமவத்தையில் மரணமும் உண்டாகும். பல நூற்களையும் கற்று அறிந்துகொண்டு நாட்டில் வைத்தியம் செய்தல் வேண்டும். அதற்காக சாத்தியம், அசாத்தி யம் பற்றிய குணங்குறிகளையும் தாதுபலம் பற்றியும் கூறப்பட் டுள்ளன.

## 17. நூற்கோவை

75 கூறினேன் வைத்தியமா யிரத்தைந் நூறு
குணமாகும் அறுநூறு கர்ம காண்டம்
ஏறினேன் பரிபூர ணந்தா னப்பா
இருபத்தோ ராயிரத்து ஆறு நூறு
தேறினேன் ஆயிரத்து இருநூ றுகச்
செப்பினேன் முந்நூறும் முப்பத் தாறும்
வேறுதான் குணம்பன்னீ ராயி ரத்தில்
விரித்திட்டேன் நூறுமைம் பதுவும் தானே.

76 தானென்ற வகைக் கெல்லாம் நாலு காண்டம்
தான்சிந்தா மணிநாலா யிரம் வெண் பாவாய்
கானென்ற பலபூண்டு மூலிகையின் சரக்குங்
கடைமருந்து பாஷாணம் கடல்மீனுப்பு

வேனென்ற சீவசெந்து மிருக வர்க்கம்
மிகுபறவை எண்ணெய் தண்ணீர் வேணதெல்லாம்
நானென்ற நிகண்டு பன்னீ ராயிரத்தில்
நானுரைத்தேன் அதைக்குறுக்கி நாட்டுள் ளோர்க்கே.

அகத்தியர் வைத்தியம் ஆயிரத்தைந்நூறு என்னும் ஒரு நூல் கூறினேன். அதைத் தொடர்ந்து கர்மகாண்டம் அறுநூறு என்னும் நூலும், பரிபூரணம் இருபத்தோராயிரத்து அறுநூறு என்னும் நூலும், ஆயிரத்திருநூறு என்னும் வேறொரு நூலும், முந்நூற்று முப்பத்தாறென்னும் ஒரு சிறு நூலும் பன்னீராயிரத்து நூற்றைம்பது என்னும் பெருநூலும் மேலும் சிந்தாமணி வெண்பா நாலாயிரம் நாலு காண்டம் என்னும் நூலும், பலவகைப் பூண்டு, மூலிகை, சரக்கு, கடை மருந்து, பாஷாணம், கடல்மீன், உப்பு, சீவசெந்து, மிருக வர்க்கம், பறவை, எண்ணெய், தண்ணீர் மற்றும் இன்றியமையாது வேண்டப்படும் பொருள்களெல்லாம் நிகண்டு பன்னீராயிரத்தில் விரித்துக் கூறியுள்ளேன். உலகத்துள்ளோர்க்குப் பயன்படக் கருதி இவ்வகையான நூல்களைக் கூறித் தொகுத்து வைத்தேன்.

77 நாட்டினேன் அதைக்குறுக்கி பதார்த்த மெல்லாம்
நன்றாக ஆயிரத்து இருநூ றாகச்
சூட்டினேன் புசிப்புக்குப் பாக மார்க்கம்
சொன்னேன்நான் பன்னிரண்டு நூறி லப்பா
காட்டினேன் கைப்பாகம் மருந்தின் பாகம்
கட்டினேன் நூல்தோறும் கண்டு பாரு
மாட்டினேன் வாதத்தில் லக்ஷம் காப்பு
வகுத்திட்டேன் அறிந்துகொண்டு மருந்து செய்யே.

சித்த வைத்தியம் என்பது பற்றி ஆயிரத்து ஐந்நூறு பாடல்கள் உள்ள நூலாகவும் கர்மகாண்டம் அறுநூறாகவும், பரிபூரணம் இருபத்தோராயிரத்து அறுநூறாகவும், ஆயிரத்து இருநூறாகவும், முந்நூற்று முப்பத்து ஆறாகவும். பன்னீரயிரமாகவும், நூற்றைம்பதாகவும் செய்துள்ளேன்.

சிந்தாமணி நாலாயிரம் என்னும் நூலில் நான்காயிரம் வெண்பாக்களில் பல பூண்டுகள், மூலிகைகள், கடை மருந்துகள், பாடாணங்கள், கடல் உப்புக்கள், சீவசெந்து, மிருக வர்க்கம், பறவைகள், எண்ணெய், தண்ணீர் ஆகியவைகளைப்பற்றிக் கூறியிருக்கிறேன். மேலும் நாட்டிலுள்ளவர்களுக்காக நிகண்டு பன்னீராயிரத்தில் கூறியுள்ளேன்.

பின்னும் அதைக் குறுக்கி ஆயிரத்துஇருநூருகக் கொண்டு உண்பதற்குரிய பொருள்களின் தன்மை, பக்குவமுறை ஆகிய வற்றைச் சொன்னேன். கைப்பாகம், மருந்தின் பாகம் இவற் றைச் சொல்லியுள்ளேன். இம்முறைகளை என்னுல் சொல்லப்பட்ட நூற்களில் ஆராய்ந்து அறிந்து கொள்ளவும் வாதத்தில் பல முறைகள் வகுத்துச் சொல்லியிருக்கிறேன். அவற்றை நன்கு அறிந்து கொண்டு மருந்துகளைச் செய்வாயாக.

## 18. மருத்துவம் செய்யும் முறை

78 மருந்துதான் கைமுறையாய்ச் செய்ய வேண்டும்
மாநிலத்தில் கற்றறிந்து பார்க்க வேண்டும்
திருந்தவே யுடலறிந்து நோயுங் கண்டு
செப்புமவர் மொழிகேட்டுத் தாது பார்த்து
பொருந்தவே பொசிப்பறிந்து பிலமும் பார்த்து
பொருளேவல் புண்ணியவா னெனஅ றிந்து
அருந்தவே மருந்துசெய்தால் நோய்போம் பாரு
அப்பனே கருத்தரிக்கும் ஆண்மை கேளே.

மருந்து கைபாகம் செய்பாகம் அறிந்து செய்தல் வேண்டும். நிலத்தின் தன்மை, உடல் அமைப்பு, நோயின் தன்மை ஆகிய வைகளை அறிந்தும் நோயாளியின் வாய் மொழியாக வருகின்ற நோயின் வரலாற்றைக் கேட்டும் நோயாளியின் கைத்தாதுவை நாடிப்பார்த்தும் உண்ணுகின்ற உணவுத் தன்மைகளால் உடல் பலத்தைப்பார்த்தும் நோயாளியின் பொருளாதார வசதி (சூழ்நிலை) ஆகிய தன்மைகளை எல்லாம் அறிந்தும் முறைப்படி மருத்துவம் செய்தால் நோய்கள் தீரும். இனி, கருத்தரிக்கும் முறையைக் கூறுகின்றேன் கேட்பாயாக.

## 19. கரு உற்பத்தி

79 ஆண்மையென்று மங்கையர்கள் பூக்குங் காலம்
அன்றுமுதல் பதினுறு நாளு மந்த
தாண்மையன்றிப் பதினுறு இதழாய் நின்ற
தாமரை போல் மலர்ந்திருக்கும் சாற்றக் கேளு
மேன்மையென்ற தினமொன்றுக் கிதழ்தா னென்று
கருவான கருக்குழிதான் இந்நாட் குள்ளே
பான்மை என்ற விந்தங்கே யூரும் போது
பாயுமடா வன்னியொடு வாயு தானே.

80 வாயுவொடு விந்துசென்று மலர்க்குட் சேர்ந்தால்
மலரிலுள்ள இதழ்களெல்லாம் மூடிக் கொள்ளும்
தேயுவொடு வாயுநின்று திரட்டும் பாகு
செப்பரிய தினமொன்றில் கடுகு போலாம்
சாயுமடா நாளிரண்டில் மல்லி போலாம்
தப்பாமல் நாள்மூன்றில் மிளகு போலாம்
சேயுமடா நாலாநா ளவரை வித்தாம்
சேரவைந்தாம் நாள்குமிழி போலாகும்மே.

81 ஆகுமே ஆறுநாள் நெல்லிக் காய் போல்
ஆனநாள் ஏழுக்குப் புன்னைக் காய்போல்
ஏகுமே எட்டாநாள் பஞ்ச பூதம்
இதிலுண்டாம் பஞ்சவர்ணம் இதிலே தோன்றும்
போகுமே நவதினத்தில் காக்கை முட்டை
போலாகும் பத்துமுத லைந்து நாளும்
வேகுமே கோழியண்ட வடிவ மாகும்
விள்ளுகிறேன் திங்களொன்றில் வாழைப் பூவே.

82 பூவிலே இரண்டுதிங்கள் கழுத்துண்டாகும்
புகழ்சிரசும் உறுப்பாகும் மூன்றுந் திங்கள்
தாவிலே சந்துகால் கையுண் டாகிச்
சட்டகம் போல் வடிவாகி விரலு முண்டாம்
நாலிலே வாய் நாக்கு மூக்குண் டாகும்
நவிலுகிறேன் மாதமைந்தில் செவியுண் டாகும்
பாலிலே ஆறுதிங்கள் குய்யத் துவாரம்
பாலிக்கு மேழுக்கும் நரம்பு தானே.

83 நரம்புதான் எழுபத்தீ ராயி ரந்தான்
நாடியெட்டாந் திங்களுக்கு மயிருண் டாகும்
உரம்பவே தாய்புசிக்கு மன்ன சாரம்
உச்சிவழித் தானிறங்கி யுடல் பெருக்கும்
வரம்பெறவே யொன்பதிலே உயிர்தான் வந்து
மறை ஞான முண்டாமுச் சிவழி மூடும்
நிரம்பவே தசமாதம் சென்று விந்த
நெருப்போடு வாயுமிஞ்சிக் கவிழுந் தானே.

ஒரு பெண் பூப்படைந்த நாளன்று அவளது கருக்குழி பதினாறு இதழ்களையுடைய தாமரைப் பூவைப் போல மலர்ச்சி யடைந்து காணப்படும். அன்று முதல் பதினாறு நாட்கள்வரை

ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு இதழாக மூடிக்கொள்ளும். இந் நாட்களுக்குள்ளே, தீயும் வாயுவுமாகிய விந்து உட்சென்று கருக் குழியை அடைந்ததும் இதழ்கள் ஒவ்வொன்றுக மூடிக்கொள் ளும். தீயும் காற்றும் இவற்றைத் திரட்டி முதல் நாள் அன்று கடுகு போன்ற உருவத்தை உண்டாக்கும். இரண்டாம் நாள் கொத்துமல்லி விதையைப் போன்ற தோற்றத்தை உண்டாக் கும். மூன்றும் நாள் மிளகு போன்ற தோற்றத்தை யளிக்கும். நான்காம் நாள் அவரை விதை போல் காணப்படும். ஐந்தாம் நாள் நீர்க்குமிழியைப் போலாகும். ஆறும் நாள் நெல்லிக் காயைப் போலவும், ஏழாம் நாள் புன்னைக்காய் போலவும் தோற்ற மளிக்கும். எட்டாம் நாளில் இக்கருவில் ஐம்பூதத்தன்மையும், ஐவகை நிறங்களும் தோன்றும். ஒன்பதாம் நாளன்று காக்கை முட்டையின் வடிவத்தையடைந்து பத்தாம் நாள் முதல் பதி னைந்தாம் நாள் வரை கோழி முட்டையின் வடிவத்தையடையும். பின்னர் ஒரு மாதத்தில் வாழைப்பூவின் வடிவத்தையடையும்.

இரண்டாம் மாதத்தில் கழுத்து உண்டாகி, தலையும் உறுப்பு களும் உண்டாகும். மூன்றும் மாதத்தில் இடுப்பு, கால்கள், கைகள், விரல்கள் ஆகியவை உண்டாகும். நான்காம் மாதத்தில் தலையில் வாய், நாக்கு, மூக்கு ஆகிய உறுப்புகள் உண்டாகும். ஐந்தாம் மாதம் காதுகளும், ஆறும் மாதம் மலசல துவாரங் களும், ஏழாம் மாதம் 72,000 நாடி நரம்புகளும் உண்டாகும். எட்டாம் திங்களில் மயிருண்டாகும். தாய் உண்ட உணவின் சாரம் உச்சிக்குழியின் வழியாக இறங்கி உடல் வளர்ச்சியை உண்டாக்கும். ஒன்பதாம் திங்களில் உயிரும் அறிவும் உண்டா கும். உச்சி வழியும் மூடப்பெறும். பத்தாம் திங்களில் தீயோடு வாயுவும் அதிகரித்து, தலைகீழாகத் திருப்பிக் குழந்தை யைப் பிறப்பிக்கச் செய்யும்.

## 20: ஆயுட்காலம்

84 தானடா சிரந்திரும்பிப் பிறந்த பிள்ளை
தனக்குப்பிர்ம சிருஷ்டிநா ளுண்டு தன்னில்
ஏனடா வாலையது வீரைந் தாகும்
இருபதுதா னுகுமட்டும் வளரும் பிள்ளை
நானடா வொளிபோகும் முப்ப தாண்டில்
நாற்பதுக்கு ளழகுபோம் நாடிப் பாரு
வேனடா ஐம்பதாம் வயது தன்னில்
விரைந்துபிரு திவியிலப்பு மேவும் பாரே.

85 மேவையிலே யுடல்தளரு மப்புச் சென்று
விளங்குமனல் தனைநோக்கி வெளுக்கும் ரோமம்
தாவையிலே அறுபதாம் வயது தன்னில்
தண்ணீரும் மண்ணுடனே சார்ந்து கொள்ளும்
பாவையிலே கண்ணொளியுங் குறைந்து காட்டும்
பாலகனே நடக்கில்வெகு தடைதான் பண்ணும்
கூவையிலே யெழுபதென்ற வயதிற் றேய்வு
கொண்டலைத்தா னெருக்குமனல் தரத்திற் காணே.

86 காணவே தாதுலரும் அறிவு குன்றும்
கருதிப்பா ரெண்பதென்ற வயதிற் ருனும்
தோணவே வாயுவந்து வெளியிற் பாயும்
சுவாசமேல் நோக்குமடா தொண்ணூ ருண்டில்
பூணவே ஆகாயஞ் சீவ ஞேடு
புலன்களைந்து வசமாகப் பொருந்திக் கொள்ளும்
நாணவே இந்திரிய மற்றுப் போகும்
நலமில்லை நூருண்டில் மரணம் தானே.

87 தானென்ற பிர்மசிருஷ்டி வயது நூறில்
தந்தைதாய் தான் செய்த கருமந் தன்ஞல்
வேனென்ற அவமிருத்து வந்து கூடி
வெகுநோய்கள் விஷக்கடிகள் வெட்டு குத்து
கானென்ற மிருகத்தால் நஞ்சைத் தின்று
கனவயது குன்றுமப்பா கருதிப் பாரு
நானென்ற பிர்மசிருஷ்டி கருமிக் கில்லை
நாதனு ருமைக்குரைத்தார் நாம்சொன் ஞேமே.

முறையாகத் தலை திரும்பப்பெற்றுப் பிறந்த பிள்ளைக்கு 100 ஆண்டு கால வாழ்க்கையுண்டு. அதில் ஒன்று முதல் 10 வயதுவரை பாலப்பருவமாகும். அதிலிருந்து இருபது வயது வரை வளர்ச்சி பெறும் பருவமாகும். முப்பதாம் ஆண்டின் தொடக்கத்திலிருந்து ஒளி குறையத் தொடங்கும். நாற்பது வயதுக்குள் அழகு போகும். ஐம்பதாம் வயதில் நிலம் நீர் இவற்றின் தன்மை மிகுந்து (கபம்) காணப்படும். இதனுல் உடல் தளர்ச்சியுறும். நீர்த்தன்மை மிகுந்து, நெருப்பின் தன்மை குறைவதால் நரை உண்டாகும். அறுபதாம் வயதில் நீர், மண் இவற்றின் தன்மை மிகுந்த அளவில் சேர்ந்துகொள்ளும். கண்மணியின் ஒளி குறைவுறும். நடையில் தடைகள் காணப் படும். எழுபதாம் ஆண்டில் உடல் ஒடுங்குவதுடன் நீர்ச் சத்து

குறைந்து தாதுவில் தீத்தன்மை அதிகமாகும். தாதுக்கள் உலர்ந்து அறிவும் குன்றும். எண்பதாம் வயதில் வாய்வு அதிகம் வெளியாவதுடன் மேல்மூச்சு வாங்கும். தொண்ணூறுமாண்டில் புலன்களைந்தும் சீவனோடு பொருந்தும். விந்தும் மறைந்து போகும். நூறுவது வயதில் நலமென்பதெதுவுமே இல்லையாய் மரணம் உண்டாகும். கடவுளால் விதிக்கப்பட்ட நூறு வயதிற்குள் தாய் தந்தையர்களும் தானும் செய்த கர்மம் காரணமாக அவமரணம் வந்தடையும். நோய்கள், விடக்கடிகள். வெட்டுக்குத்து ஆகியவற்றாலும், மிருகங்களாலும் விடமுள்ள பொருள்களை உட்கொள்வதாலும் வயது குறைவடையும். இவ்வாறுகூறப்பட்ட பிராரத்துவ வாழ்க்கை அகூலமிருத்துவுடைய கருமிகளுக்குப் பொருந்தாது.

## 21. உணவின் ரசமும் பிரிவுகளும்

88 சொன்னேமே யின்னமொரு சூட்சங் கேளு
சொல்லுவேன் பொசித்ததெல்லா மாறு பங்காய்
முன்னேதான் மலத்திலொன்று மூத்திர்த்தி லொன்று
மூளுமே தசையிலொன்று விந்தி லொன்று
தன்னேதான் மூளைதனி லொன்று சேரும்
சார்ந்திடுமே உதிரத்தி லொன்று மாக
மன்னேதான் சயகாச யேக ரோகி
வலுவான அதிசாரம் வந்த பேர்க்கே.

89 வந்தபெருங் கிராணி குன்மம் எலும்பு ருக்கி
வாங்காத சுரத்தோர்கள் சாத்திய ரோகி
பந்தமுறத் தின்றதொன்று மாறி லப்பா
பாலகனே நோயருந்தும் பாரு பாரு
உந்தனுட விந்தழிந்தால் யெல்லாம் போச்சு
உண்டதெல்லாம் பாழாச்சு உறவும் போச்சு
விந்துதனை இழந்துபல பிணிக்குள் ளாகி
மெலிந்துகெட்டுப் போகாமல் விள்ளு வேனே.

உண்ட உணவின் சாரம் ஆறு பங்குகளாகப் பிரிந்து ஒரு பங்கு மலத்திலும், ஒரு பங்கு மூத்திரத்திலும், தசையிலொரு பங்கும், விந்தினிடத்தொரு பங்கும், மூளையில் ஒரு பங்கும், இரத்தத்திலொரு பங்குமாகச் சார்ந்திடும். இவ்வாறில்லாமல் பிரிவு மாறியிருந்தால் நோய்களேற்படும். கிராணி, குன்மம், எலும்புருக்கி நோய், சுரநோய் முதலிய நோய்கள் உண்டாகும். மேலும் இந்நோய்கள் உண்டாவதோடல்லாமல், விந்தும் அழிந்து விட்

டால் நன்மையெல்லாம் போய்விடும். மேலும் உண்டன வெல்லாம் பாழாகிவிடும். தொடர்பும் அழிந்துவிடும். ஆதலால் விந்தை யிழந்து பல பிணிகட்குள்ளாகி மெலிவுற்றுக் கெட்டுப் போக வேண்டாம்.

## 22. பூரண வல்லாதிச் சூரணம்

90 விள்ளுகிறேன் பூரணவல் லாதி தன்னை
மேன்மைபெறச் சுத்திசெய்த சேங்கொட் டைதான்
அள்ளுவேன் பலம்இரண்டு நிறுத்துக் கொண்டு
அமுக்கரா பலம்ஒன்று பாலிற் சுத்தி
எள்ளுமே கழுவியெடு பலமி ரண்டு
இதமான பாக்கதுவும் பலமி ரண்டு
கொள்ளுமே நாயுருவி நத்தைச் சூரி
குணமான குறண்டிநற் கஞ்சா வித்தே.

91 வித்தான துளசிவிதை துத்தி வித்து
மேலான அரசுஅத்தி ஆலம் வித்து
சத்தான முருங்கைநீர் முள்ளி வித்து
தான்பூனைக் காலிவிதை ஆவிரை வித்து
முத்தான திருநீற்றுப் பச்சை வித்து
முள்ளிருக்குங் கருவேலா வித்துங் கூட்டி
சித்தான சிறுகீரை பொன்னு வாரை
தேத்தானல் வித்துடனே பதினெண் வித்தே.

92 பதினெட்டும் வகைக்கிரண்டு கழஞ்சு தூக்கிப்
பாலகனே திப்பிலியு மிளகு சுக்கு
துதியிட்ட சாதிக்காய் கிராம்பு பத்திரி
சோம்க்கரு வாய்ப்பட்டை சாரப் பருப்பு
விதமிட்ட வால்மிளகு மதனப் பூவும்
வேண்டுசிறு நாகப்பூ அபினுந் தானும்
மதமூட்டுங் கசகசா ஏலம் ஓமம்
வாலுளுவை யரிசிகோஷ்டம் வகையொன் றுக்கே.

93 வகையொன்று கழஞ்செடைதான் மூன்று தூக்கி
மைந்தனே ரவியில் வைத்துச்சூர ணித்து
தொகையென்ற பேரீந்து முந்திரிகைப் பழமுந்
தூக்கடா பலமொன்று சொல்லக் கேளு

புகையென்ற கோரக்கர் மூலி தன்னைப்
போக்கன்றி பலம்நாலு வறுத்துக் கொண்டு
பகையென்ற குண்டாவில் கடையத் தூளாம்
பக்குவமாய் பின்வறுத்துக் கடைந்தி டாயே.

94 கடைந்தபின்பு வறுத்துப்பின் கடைந்து வாங்கு
கருகாமல் ஏழுதரங் கடைவ றுப்பாய்
தொடர்ந்தசேங் கொட்டையோ டெள்ளுஞ் சேர்த்து
சூரணமா யிடிமுந்திரி பேரீந் தோடு
படர்ந்ததொரு கல்லுரலில் சாமம் நாலு
பக்குவந்தான் மயினம்போ லான பின்பு
அடர்ந்தவிரு வகைப்பொடியு முறவு செய்து
அதிற்சீனிக் கற்கண்டு கழஞ்சி நூறே.

95 நூறுமே பொடிசெய்து கூடச் சேர்த்து
நுண்மைபெறப் பீங்கானி லடைத்துக் கொண்டு
தேறுமே அரைக்கழஞ்சு சூர ணத்தில்
சேர்த்திடுநீ சூதபற்பம் பணத்திற் பாதி
கூறுமே அந்திசந்தி பாலி லீயக்
கொடியபிணி தீருமடா விந்து கட்டும்
ஏறுமே தாதுமிக வலுக்கும் பாரு
யெளிதல்ல சூரணந்தா னியம்பி னேனே.

96 இயம்பினே னந்திசந்தி கொள்ளும் போது
ஏறுமே போதைகொண்டு மயங்கி வீழ்ந்தால்
இயம்பினே னீருள்ளிச் சாற்றி னோடு
எலுமிச்சம் பழச்சாறுங் கூடச் சேர்த்து
இயம்பினேன் குடிமயக்க மொழியும் பாரு
ஏதேனுங் கொடுக்கலாம் பத்தியமோ யில்லை
இயம்பினேன் லகிரிகொண்டா லந்தி கூட்டு
யென்பகனே காற்கழஞ்சி ஈந்தி டாயே.

| | |
|---|---|
| சுத்திசெய்த சேங்கொட்டை | 2 பலம் |
| பாலிற் சுத்திசெய்த அமுக்கிரா | 1 பலம் |
| நீரிற்கழுவிய எள்ளு | 2 பலம் |
| பாக்கு | 2 பலம் |

நாயுருவி வித்து
நத்தைச்சூரிவித்து
குறண்டி (ஒரு வகை முட்செடி)
கஞ்சாவிதை
துளசிவிதை
துத்திவிதை
அரசு
அத்தி
ஆலம்
முருங்கைவிதை
நீர்முள்ளி வித்து
பூனைக்காலிவித்து
ஆவிரைவித்து
திருநீற்று பச்சைவித்து
கருவேல்வித்து
சிறுகீரைவித்து
பொன்னுவாரை
தேற்றான்வித்து

வகைக்கு 2 கழஞ்சு

திப்பிலி
மிளகு
சுக்கு
சாதிக்காய்
கிராம்பு
சாதிப்பத்திரி
சோம்பு
கருவாப்பட்டை
சாரப்பருப்பு
வால்மிளகு
மதனப்பூ
சிறுநாகப்பூ
அபின்
கசகசா
ஏலம்
ஓமம்
வாலுளுவை அரிசி
கோட்டம்

வகைக்கு 3 கழஞ்சு

மேலே காணப்பெறும் சரக்குகளை வெயிலில் வைத்து இடித்து பொடியாக்கி வைத்துக் கொள்ள வேண்டும். நான்கு பலம் கஞ்சா இலையை சுத்தி செய்து வறுத்து குண்டாவில் இட்டுக் கடைந்து தூளாக்கிக் கொள்ள வேண்டும். இவ்வாறு ஏழு முறை செய்ய வேண்டும். பிறகு அத்துடன் சேங்கொட்டை யும், எள்ளும் சேர்த்து சூரணமாய் இடிக்க வேண்டும். பின்னர் திராட்சை பேரீந்து இவற்றையும் கல்லுரலில் இட்டு நான்கு சாமம் இடித்து மெழுகு பதத்திற்கு வந்த பின்பு மேலே சொல்லப் பெற்ற இருவகைப் பொடிகளையும் நன்கு கலந்து அதில் சீனிக் கற்கண்டு நூறுகழஞ்சு பொடி செய்து அவற்றுடன் சேர்த்துக் கொண்டு பீங்கானில் அடைத்துக் கொள்க.

**அனுபானமும் அளவும்:** அரைக்கழஞ்சு சூரணத்தில் $\frac{1}{2}$ பணவெடை சூதபற்பம் சேர்த்து பாலில் அந்தி சந்தி கொடுக்க வேண்டும்.

**தீரும் பிணிகள்**: கொடிய பிணிகள் தீர்ந்து விந்து கட்டும். உடல் வலிமை பெறும். காலை மாலை மருந்துண்ணும்போது போதை அதிகமாகி மயக்கம்வந்தால் வெங்காயம் எலுமிச்சம் பழம் இவற்றின் சாற்றைக் கலந்து தக்கஅளவு கொடுக்க மயக்கம் தீரும். அடிக்கடி மயக்கம் வருமாயின் மாலையில் மட்டும் காற் கழஞ்சி கொடுக்கவும். பத்தியம் இல்லை.

## 23. மருத்துவர்கட்கு அறிவுரை

97 ஈயாதே இந்நூலை மடையர்கையில்
ஈந்திடுவாய் வாமிக்கும் ஞானிக் கப்பா
நோயான சண்டர்கட் கீந்தா யானல்
நொடியிலே கொலைசெய்வார் நுவலக் கேளு
தீயான பாவிகளை அகலத் தள்ளு
செப்பாதே தொழில்முறைகைப் பாகந் தன்னை
பேயாகிக் குண்டாவிற் கடையும் பாகம்
பேசாதே வெகுபதனம் பேணிச் செய்யே.

98 செய்யையிலே நீபாகஞ் சிதறி டாதே
திருடாதே பொய்சொல்லித் திரிந்தி டாதே
மையலிலே தினமயங்கி அலைந்தி டாதே
வார்த்தைமெத்தப் பேசாதே வலுச்செய் யாதே
பையவரோ டிணங்காதே பாம்பாட் டாதே
பத்தினிமே லிச்சை கொண்டால் பாழாம் பாரு
கொய்யையிலே திரிகின்ற சண்டா ளர்க்குக்
கூறினல் நாகமென்று கூறி னேனே.

இந்நூலை மடையர்களுக்குக் கொடுக்கக்கூடாது. அறிவுடையோர்களுக்கும் ஞானிகளுக்கு மட்டுமே கொடுக்க வேண்டும். சண்டாளர்களிடம் கொடுத்தால் பயனின்றி வீணுகிவிடும். மருந்துகள் செய்யும்போது பாகம் தவருமல் செய்ய வேண்டும். திருட்டு, பொய், பெண்ணிச்சை இவற்றை நீக்க வேண்டும். அதிகமாகப் பேசுதல், தீயவரோடு பழகுதல், பாம்பாட்டுதல் பத்தினிப்பெண்ணின் மேல் இச்சை கொள்ளல் முதலியவற்றை நீக்க வேண்டும். வீணுக அலைந்து திரிகின்ற சண்டாளர்கட்கு இந்நூலைக் கூறினல் விடத்திற் கொப்பாகும்.

## 24. சார்த்தூலாதிக் குளிகை

99 கூறுகிறேன் வாய்வென்ற அனைத்தும் போக
கொடிய சார்த்தூ லாதி குளிகை தன்னை
மீறியதோர் பெருங்காயங் கழஞ்சி யொன்று
மேலான சீரகமோ கழஞ்சி ரெண்டு
தேறியதோர் வாய்விளங்கங் கழஞ்சி மூன்று
செப்பரிய கொத்துமல்லி கழஞ்சி நாலு
மாறியதோர் செவ்வியமைந்து சுக்கு மாறு
அப்பனே மிளகேழு திப்பிலியெண் கழஞ்சே.

100 கழஞ்சொன்ப தாங் கோஷ்டங் கடுக்காய் பத்து
கடுஞ்சித்திர மூலமது பதினொன் றுகும்
விழஞ்சியீ ராறுமடா ஓமந் தானும்
மிதமாகச் சூரணஞ்செய் யிதற்கு ரெட்டி
தழஞ்சவெல்லஞ் சேர்த்துநீ உரலி லிட்டுத்
தானிடித்து மைபோல சாற்றக் கேளு
குழஞ்சபுன்னைக் காய்போல வுருட்டிக் கொண்டு
கூசாம லந்திசந்தி கொடுத் திடாயே.

101 கொடுத்திடுவாய் வாயுவென்ற இருபத் தாறுங்
குன்றவே ரேபறிக்கும் குன்ம மெட்டும்
எடுத்திடவே மார்படைக்கும் ருத்திர வாய்வு
யென்னசொல்வேன் தமரகமு மேகும் பாரு
அடுத்திடவே பத்தியந்தா னிச்சா பத்தியம்
ஆகாது வாயுவென்ற பதார்த்த மெல்லாம்
கடுத்திடவே மகாசார்த்தூலாதி தன்னைக்
காணமக்காள் சொல்லுகிறேன் கருதிக் கேளே.

| | | | |
|---|---|---|---|
| பெருங்காயம் | 1 கழஞ்சு | மிளகு | 7 கழஞ்சு |
| சீரகம் | 2 ,, | திப்பிலி | 8 ,, |
| வாய்விளங்கம் | 3 ,, | கோட்டம் | 9 ,, |
| கொத்தமல்லி | 4 ,, | கடுக்காய் | 10 ,, |
| செவ்வியம் | 5 ,, | சித்திரமூலம் | 11 ,, |
| சுக்கு | 6 ,, | ஓமம் | 12 ,, |

இவற்றைச் சூரணம் செய்து இதற்கு இரண்டு பங்கு நல்ல பனை வெல்லம் சேர்த்து உரலிலிட்டு மைபோல் இடித்து வைத்துக் கொள்ளவும்.

**அளவு:** புன்னைக்காய் அளவு

**காலம்:** காலை, மாலை இருவேளை

**தீரும் நோய்கள்:** இருபத்தாறுவகை வாயு, எண்வகைக் குன்மம், மார்பினை அடைக்கின்ற உருத்திர வாயு, இதய நோய்கள்.

**பத்தியம்:** பெண் சேர்க்கை கூடாது. வாயுவை உண்டாக்கும் பொருட்களை நீக்கவேண்டும்.

### 25. மகாசார்த்தூலாதிக் குளிகை

102 கருதியே வசம்புசுட்ட கரிதான் ரெண்டு
காயமது மூன்றுவாய் விளங்கம் நாலு
தருதியநற்சீரகமைந் துடனே மல்லி
தாறுறு மிளகேழு திப்பிலியு மெட்டு
சுருதியென்ற சுக்கொன்பா ஞேமம் பத்துஞ்
சொல்லும்வரிக் கடுக்காயும் பதினொன் றுகும்
பருதியே கொடிவேலி பனிரெண் டாகும்
பண்பாக மகாமேதை பதின்மூன் றெண்ணே.

103 எண்ணவே கோஷ்டமது ஈரே ழப்பா
வேகமாம் வெள்ளுள்ளி பதினைந் தென்று
உன்னியே பழுத்துலர்ந்த தேங்காயீ ரெட்டு
உயர்ந்தரச கற்பூரம் விராகனெடை யொன்று
பண்ணியே சூரணித்து வைத்துக் கொண்டு
பாறையுப்பு இந்துப்புப் பேதி யுப்பு
வன்னியே வளையலுப்பு கல்லுப் பல்லால்
மாசற்ற அட்டுப்பு கெந்திவெடி யுப்பே.

104 உப்பெல்லாம் வகைவகைக்கு அரைப்பலமேதூக்கி
உடனரைக்க வெருக்கம்பால் கள்ளிப் பாலாம்
செப்பிலே வைத்துமறு செப்பால் மூடி
சீலைமண் செய்துலர்த்திப் புடத்திற் போடு
தப்பில்லா தெடுத்துநீ பொடித்துக் கொண்டு
தனியாக விருகழஞ்சி பொடித்துச் சேரு
மெய்ப்பல்ல காந்தமிரு கழஞ்சி சேர்த்து
மேவான இலைக்கள்ளிப் பாலை வாரே.

105 வார்த்திடுவாய் பொடிநனைய வுலர்த்திக் கொண்டு
மைந்தனே மருந்தில் ரெட்டி வெல்லஞ் சேர்த்து
மாத்திடுவாய் சூரணத்தைத் தூவித் தூவி
வலுவாகச் சாமந்தா னிடிக்கும் போது

கோத்திடுவாய் மயனம்போ லான பின்பு
குளிகைசுண்டைக் காய்போலே வுருட்டிக் கொண்டு
ஏத்திடுவாயு யத்தி லுண்டை யொன்று
ஏகுமல சலக்கிருமி குன்மம் போமே.

106 போகுமே அகவை வெப்புப் பாவை வாய்வு
பொல்லாத பீலிகையும் மகோதரம்நீ ராம்பல்
சாகுமே கவுசிகுலை முட்டி வாதம்
தானேகும் வாய்வுகுடல் வாதந் தீரும்
ஆகுமே பத்தியந்தான் புளிப்பு மோரும்
அரைக்கீரை வழுதலம்பிஞ்சு அவரைப் பிஞ்சும்
தாகுமே வெந்நீரு மற்றொன் றுகா
தப்பாது அயறுதி வடகங் கேளே.

| | | | |
|---|---|---|---|
| வசம்பு சுட்டகரி | 2 கழஞ்சு | ஓமம் | 10 கழஞ்சு |
| பெருங்காயம் | 3 ,, | வரிக்கடுக்காய் | 11 ,, |
| வாய்விளங்கம் | 4 ,, | கொடிவேலி | 12 ,, |
| சீரகம் | 5 ,, | மகாமேதை | 13 ,, |
| கொத்தமல்லி | 6 ,, | கோட்டம் | 14 ,, |
| மிளகு | 7 ,, | வெள்ளுள்ளி | 15 ,, |
| திப்பிலி | 8 ,, | பழுத்துலர்ந்த | |
| சுக்கு | 9 ,, | தேங்காய் | 16 ,, |
| இரசக்கற்பூரம் | 1 விராகனெடை. | | |

மேற்கூறப்பெற்ற சரக்குகளைச் சூரணித்து பொடி செய்து வைத்துக்கொள்ள வேண்டும்.

| | |
|---|---|
| பாறையுப்பு | கல்லுப்பு |
| இந்துப்பு | அட்டுப்பு |
| பேதியுப்பு | கெந்தியுப்பு |
| வளையலுப்பு | வெடியுப்பு |

வகைக்கு 1/2 பலம்

**செய்முறை:** மேற்கூறப்பெற்ற உப்புக்களை வகைக்கு அரைப் பலம் எடுத்து எருக்கன் பால், கள்ளிப்பால் ஆகியவற்றை இட்டு அரைத்து மண்சட்டியில் வைத்து மறு சட்டியால் மூடி சீலைமண் செய்து காயவைத்துப்புடம் போடவும். பிறகு அதை எடுத்துப்

பொடி செய்துகொள்க. பின்னர் அப்பொடியிலிருந்து இரு கழஞ்சி சூரணத்தில் சேர்க்கவும். இரு கழஞ்சு காந்தப் பொடியை எடுத்துக் கொண்டு அதில் இலேக்கள்ளிப்பாலே நன்கு நனையும்படி வார்த்துப் பின்னர் அதனை உலர வைக்க வேண்டும். எல்லா மருந்துகளுக்கும் மொத்த அளவுக்கு இரண்டு பங்கு பனைவெல்லம் சேர்த்துச் சூரணத்தை தூவித் தூவி ஒரு சாம காலம் இடிக்க வேண்டும். மெழுகு பதம் வரும்போது எடுத்து வைத்துக் கொள்ளவும்.

**அளவு:** சுண்டைக்காயளவு விடியற்காலையில்

**தீரும் நோய்கள்:** மலநீர்க் கிருமி, குன்மம், அகவை, வெப்புப் பாவை, வாய்வு, பீலிகை, மகோதரம், நீராம்பல், குலே கவுசி, முட்டிவாதம், குடல்வாயு, வாதநோய்கள்.

**பத்தியம்:** புளி, உப்பு, மோர் இவையாகா. அரைக்கீரை, கத்தரிப்பிஞ்சு, அவரைப்பிஞ்சு, வெந்நீர் இவை ஆகும்.

## 26. அயமாதி வடகம்

107 கேளப்பா அரப்பொடிதான் பலமோ ரெண்டு
கெடியான பழச்சாற்றில் சுத்தி செய்து
நாளப்பா மாதளேயின் பழச்சாற் றிட்டு
நாள்மூன்று நிழலில் வைத்து ரவியிற் போடு
கோளப்பா குமரியதின் நீரிற் போடு
குறிப்பான கருநாவல் பட்டைச் சாற்றில்
ஆளப்பா மூன்றுநா ளூறப் போடு
அப்பனே யரைத்துவில்லே ரவியிற் போடே.

108 போடப்பா கெசபுடந்தா ளூற விட்டுப்
புகழான கரிசாலேச் சாற்றி லிட்டு
தேடப்பா கொதிக்கையிலே மயன மாக்கி
திறமான மிளகுபலம் இரண்டி னோடு
நாடப்பா ஓமமது பலந்தான் ரெண்டு
நலமாகத் தென்னங்காய்க் குள்ளே யிட்டு
சூடப்பா ரவிப்பாலே நிரம்ப விட்டு
துவாரத்தி லாப்பறைந்து சீலே செய்யே.

109 செய்துமே குக்குடமாம் புடத்தைப் போடு
சிரட்டைவெந்த பதத்தெடுத்துக் கல்வத் திட்டு
வெய்துமே முன்னயமுங் கூடப் போட்டு
விளங்குகரிப் பான்சாற்றுல் நாலு சாமம்

நய்யவே அரைத்துருட்டிச் சுண்டைக் காய்போல்
நலமாக நிழலுலர்த்தி வைத்துக் கொண்டு
எய்தவே யொருகுளிகை மேதியுடைத் தயிரில்
ஏழுநா ளந்திசந்தி கொடுத்தி டாயே.

110 கொடுத்திடவே பாண்டுகா மாலை பத்துங்
குணமாகும் பத்தியத்தைக் கூறக் கேளு
தடுத்திடவே எருமைமோ ருப்பி டாமல்
தானருந்து யேழுநாள் தாண்டிப் பின்பு
கடுத்திடவே யெட்டாளுள் வறுத்துப்புக் கூட்டு
கனமான ஒன்பதிலே தலையை மூழ்கு
தடுத்திடவே வெகுநீரா யிறங்கும் பாரு
தினமேழு சென்றபின்பு அகன்று போமே.

இரண்டு பலம் அரப்பொடியை எலுமிச்சம் பழச்சாற்றால் சுத்தம் செய்து பிறகு மாதுளையின் பழச்சாற்றிலிட்டு மூன்று நாள் நிழலில் வைத்து பின்னர் வெயிலில் காயவைக்க வேண்டும். பிறகு கற்றாழைச் சாற்றில் போடவேண்டும். பின் கருநாவல் பட்டை சாற்றில் மூன்று நாள் ஊறவைத்தெடுத்து அரைத்து வில்லை செய்து வெயிலில் காயவைத்து எடுத்து ஆயிரம் எருவில் (கெஜப்) புடமிட வேண்டும். பின்னர் அதை எடுத்து கரிசாலைச் சாற்றிலிட்டு கொதிக்கும்போது மெழுகு பதத்தில் மிளகு ஓமம் இவற்றை வகைக்கு இரண்டு பலம் சேர்த்து தேங் காய்க்குள்ளேயிட்டு மேலும் இரவிப்பால் நிரம்புமாறு ஊற்றி துவாரத்தில் ஆப்பை அறைந்து மண்சீலை செய்து குக்குட புடத்தை இடவேண்டும். பின்னர் தேங்காய் ஓடு வெந்துவிட்ட பதத்தை அறிந்து எடுத்துக் கல்வத்திலிட்டு மேலே சொல்லப்பெற்ற அயத்தை இதனோடு சேர்த்து கரிசாலைச்சாற்றால் நான்கு சாமம் நன்றாக அரைக்கவேண்டும். சுண்டைக்காயளவாக உருட்டி நிழலில் உலர்த்தி வைத்துக்கொள்ள வேண்டும்.

**துணைமருந்து:** எருமைத்தயிர்

**அளவு:** ஒரு குளிகைவீதம் ஏழுநாளைக்குக் காலைமாலை கொடுக்க வேண்டும்.

**தீரும் நோய்கள்:** பாண்டு, பத்துவகைக்காமாலை.

**பத்தியம்:** உப்பில்லாமல் எருமைமோர். எட்டாம் நாள் உப்பை வறுத்துக் கூட்டுக; ஒன்பதாம் நாள் எண்ணெய் தேய்த்து மூழ்க வேண்டும். எட்டாம் நாள் முதல் குணம் தெரியும்.

## 27. திரிலோக வடகம்

111 போமென்ற திரிலோக வடகந் தன்னை
புகலுவேன் மாணுக்காள் புகழ்ந்து கேளீர்
தாமென்ற காந்தமொடு இருப்புக் கிட்டம்
தன்னேடு அரப்பொடியுஞ் சமனுய்க் கூட்டி
நாமென்ற பழச்சாறு காடி மோரில்
நலமாகச் சுத்திசெய்து கல்வத் திட்டு
ஊமென்ற காட்டாம ணக்கின் சாற்றில்
உறுதியா யிருசாமம் அரைத்தி டாயே.

112 அரைத்துநீ வில்லேத்தட்டிக் காயப் போடு
அப்பனே ஓட்டில்வைத்துப் புடத்தைப் போடு
விரைத்துநீ இப்படியே ஆறுபுடம் போடு
விதமான செந்தூர மாகும் பாரு
நிரைத்துநீ திரிகடுகு வாய்விளங்கம் ஓமம்
நேரான வெள்ளுள்ளிப் பலங்கால் வீதம்
திரைத்துநீ கள்ளிப்பால் கழஞ்சி நாலு
திரிலோகம் பலமொன்று சேர்த்து ஆட்டே.

113 ஆட்டுநீ யிருசாமங் கரிப்பான் சாற்றில்
அப்பனே தூதளங்கா யளவ தாக
நாட்டியே குளிகைகட்டி உலர்த்திக் கொண்டு
நலமான மிளகிடுவெந் நீரி லூட்டு
மாட்டுமே இஞ்சிநீர் சுக்கு நீரில்
வகையாகப் பாண்டாறும் குன்ம மெட்டு
நீட்டுமே காமாலே பத்தும் போகும்
நீராம்பல் மகோதரமுங் கவுசி போமே.

| | |
|---|---|
| காந்தம் | 1 பங்கு |
| இரும்புக்கிட்டம் | 1 பங்கு |
| அரப்பொடி | 1 பங்கு |

இவற்றை சமஅளவு எடுத்து பழச்சாறு, காடி, மோர் இம் மூன்றிலும் தனித்தனியே சுத்தி செய்து பின்னர் கல்வத்திட்டு காட்டாமணக்குச் சாற்றினுல் இரண்டு சாம காலம் அரைத்து வில்லே தட்டிக்காய வைத்து ஓட்டில் வைத்துப் புடமிட வேண்டும். இவ்வாறு ஆறுமுறை புடமிட செந்தூரமாம். பின்னர் திரி கடுகு, வாய் விளங்கம், ஓமம், வெள்ளைப்பூண்டு இவற்றைக் கால்

பலம் வீதம் எடுத்துக் கொண்டு அத்துடன் மேற்கூறப்பெற்ற ஒரு பலம் திரிலோகத்தைச் சேர்த்து நான்கு கழஞ்சு கள்ளிப் பாலால் அரைக்க வேண்டும். பின்னர் அதேபோல் கரிசாலைச் சாற்றில் இருசாமம் அரைக்க வேண்டும். தூதுவளைக்காயள வாக குளிகையுருட்டிக் கொண்டு உலரவைத்துக் கொள்ள வேண்டும்.

**அளவு**: தூதுளங்காய் அளவு மாத்திரை

**துணை மருந்து**: மிளகுக்குடிநீர், இஞ்சிச்சாறு, சுக்குக் குடிநீர்.

**தீரும் நோய்கள்**: அறுவகைப்பாண்டு, எண்வகைக்குன்மம்· பத்துவகைக்காமாலை, நீராம்பல், மகோதரம், கவுசி.

### 28. மகாசந்தனாதித் தைலம்

114 போகமது மிகுந்தவர்க்கு நாபி சூடாம்
புண்ணுகிக் கபாலமது வெந்து சீழாம்
ஆகமதிற் கிரந்திபதி னெட்டு முண்டாம்
அடங்காத சூலையது மூன்று மாகி
மேகமது மூவேழு கிரிச்சனங்க ளாறும்
வெந்துவரு கின்றகெந்தத் தாளி மூன்றுள்
தாகமே பெருத்தபீ னிசங்க ளாறுந்
தலைநோவு பிடரிவலி சயங்களைந்தே.

115 சயகாசச் சிலேற்பனங்கள் தொண்ணூற்றுறுந்
தசையடைப்பு நீரடைப்புத் தேகக் காந்தல்
பயமொப்பாய் நொந்தவிந்து தாது நஷ்டம்
பணைத்தெழுந்த சுரங்களறு பத்து நாலும்
நயந்துவந்த வாய்வோடு ரத்த பித்தம்
நாடிவாதம்திமிர்வாதந் தீர்வ தற்கு
தயவுகந்து சொன்னனடா தயில மொன்று
சந்தன மிலா மிச்சாதி தன்னைக் கேளே.

116 சாதியென்ற சந்தனந்தான் பலமோ பத்து
தானமிர்த வள்ளிகூ விளம்சீர முத்தம்
சீதமென்ற சகாதேவி யசுவ கெந்தி
சிற்றுமுட்டி பேராமுட்டி வெருகின் மூலம்
பேதமென்ற குறுந்தொட்டி வகைப்பலந்தா னஞ்சு
பேருன கொம்பரக்குப் பலந்தான் பத்து
ஆதியென்ற அறுகம் வேர் மதுரங் கோஷ்டம்
அகிலோடு நன்னுரி தார மாமே.

117 ஆமென்ற விலாமிச்சு வெட்டிவேரு
அரியசிறு தேக்குடனே சிறுகாஞ் சோரி
நாமென்ற வகையொன்று பலந்தா னுலு
நறுக்கியே இடித்ததனைப் பாண்டத் திட்டு
காமென்ற சுத்தசலங் கலந்தான் வாரு
காட்டமது ஒருவிறகா லெரியா ருமல்
வேமென்ற ஆறுபடி குறுக்கி வாங்கி
விரிந்தவாய்த் தாழிதனில் விட்டி டாயே.

118 விட்டிடுவா யெள்ளெண்ணெய் படிதா னறு
வெண்பசுவின் பாலதுவும் படிதா னறு
அட்டியில்லா அறுகினுடைக் கஷாய மூன்று
அப்பனே தாழிக்குக் காப்புக் கட்டி
இட்டநெருப் பாருமல் புளித்தி டாமல்
இயம்புகிறேன் கற்கவகை இயல்பைக் கேளு
மட்டில்லா சந்தனமு மஞ்ச ளேல
மஞ்சிட்டி கொத்தமல்லி மகரப் பூவே.

119 பூவான நாகப்பூச் சிற்ற ரத்தை
பொன்மெழுகு பூலாவேர் மதுரங்கோஷ்டம்
காவான செண்பகப்பூ வெட்டிவேருங்
கடுகுரோகிணி தகரம் விலாமிச்சம்வேர்
தாவான பச்சிலைகச் சோலமாஞ்சி
தக்கோலஞ் சதகுப்பை சாத்திரபேதி
தேவான தாரமஞ்சி லிலவங்கப்பத்திரி
சிவந்த கெந்தஞ் சாதிக்காய் கிராம்பு காணே.

120 காணை பத்திரியும் லவங்கப் பட்டை
கரும்பிசினும் நறுமிளகும் வெள்ளி லோத்திரங்
கானென்ற அசுவகெந்தி வேரி னேடு
கடிதான நன்னாரி செவ்வள்ளி தானும்
மானென்ற வகைக்கிரண்டு கழஞ்சி வீதம்
மாட்டியரை மை போலே ஆட்டின் பாலில்
கோனென்ற கலக்கிவிட்டுக் கொதித்தா ருமல்
குளிராம லைந்து நாள் வைதப் பாதே.

121 தப்பாதே ஆருநாள் மயனபதந் தன்னில்
சார்ந்த பச்சைக் கற்பூரம் புழுகு சட்டம்
செப்பாதே ரோசனையுங் குங்கு மப்பூ
திறமான கோஷ்டமது கழஞ்சி ரண்டு

மெய்ப்பாகப் பொடித்துவடி கலசத் திட்டு
விமலரொடு கணபதிக்குப் பூசை செய்து
அப்பாகேள் வடித்திறுத்து தான்யந் தன்னில்
அழகாகத் திங்களொன்று வைத்தி டாயே.

122 வைத்ததொரு தயிலமதை முழுகும்போது
மைந்தனே சீயக்கா யரைப்பு வெந்நீர்
மைத்தொன்று மாகாது தீரு நோயை
வழுத்துகிறேன் மாணுக்காள் மகிழ்ந்து கேளு
அத்திசுர முள்ளுருக்கி தாப சோபம்
அரோசிவிட சுரமாந்தை உள்ளு ருக்கி
சத்தியொடு பெரும்பாடு பிணி சங்கள்
சயகாசங் கிருச்சிசுரந் தாகம் போமே.

123 போமப்பா மேகநீ ரெலும்பு ருக்கி
பொல்லாத கிரந்திவெட்டை சூலை வாய்வு
தாமப்பா பித்தசிலேற் பனந்தொந் திப்புத்
தந்தசிங்கி குத்துமுதல் புற்றுத் தீரும்
ஆமப்பா கன்னேசி கன்னப் புற்று
அடிநாவில் சூலைப்புத்துக் கண்ட மாலை
நாமப்பா கைகண்டோம் அறுநூ ருக
நவின்றிட்ட தின்னமுமே நவிலக் கேளே.

124 நவிலக்கேள் நீர்ச்சூலை ரத்தசிங்கி
நயனமதில் தோஷங்கள் தொண்ணூ ற்ருறுந்
தவிருமே தாதுநஷ்டந் திமிர்வா தங்கள்
தளர்ச்சியுற வாதமொடு சந்துவாதம்
புவியதனி லிரவிகண்ட பனிபோல் நீங்கும்
புண்ணியர்களித்தயிலம் புகழ்ந்து செய்வார்
குவிமுலையாய் வயிர்த்தியர்க்கு வயித்திய பாகம்
கொடுத்திடுவாய் வெகுமானங் கொடுத்தி டாயே.

125 கொடுத்தக்கா லவன்தனக்கு வியாதி தீருங்
குவலயத்திற் பெரும்பிணிகள் குடிபோம் பாரு
கடுத்தாக்கால் கருமவினை தீரு மோசொல்
கனமான வைத்தியர்க்கு மனம் நோகாமல்
தடுத்துரைகள் சொல்லாதே விசுவாச மாகத்
தாள்வணங்க கருமவினை சமுத்திரம்புக் கோடும்
மடத்தனமாய்த் திரியாதே பிணிதீ ராது
வல்லமைகள் பேசாதே வணங்கிக் காவே.

| | | |
|---|---|---|
| 1 | நல்ல சந்தனம் | 10 பலம் |
| 2 | சீந்தில் | வகைக்கு பலம் 5 |
| 3 | வில்வம் வேர் | |
| 4 | கோரைக்கிழங்கு | |
| 5 | சீரகம் | |
| 6 | சகாதேவி (நெய்ச்சட்டி) | |
| 7 | அமுக்கிராக்கிழங்கு | |
| 8 | சிற்றுமுட்டி | |
| 9 | பேராமுட்டி | |
| 10 | பூனைக்காலிவேர் | |
| 11 | குருந்தொட்டிவேர் | |
| 12 | கொம்பரக்கு | 10 பலம் |
| 13 | அறுகன்வேர் | வகைக்கு நான்குபலம் |
| 14 | அதிமதுரம் | |
| 15 | கோட்டம் | |
| 16 | அகில் | |
| 17 | நன்னரி | |
| 18 | தேவதாரம் | |
| 19 | விலாமிச்சம் வேர் | |
| 20 | வெட்டிவேர் | |
| 21 | சிறுதேக்கு | |
| 22 | சிறுகாஞ்சொரி | |

இவற்றை நன்ருக இடித்து ஒரு பாண்டத்திலிட்டு இருபத்து நான்குபடி நல்ல நீர் விட்டு ஒரே வகை விறகால் ஆறுமல் எரித்து ஆறுபடியளவாகக் குறுக்கி ஒரு வாய் அகன்ற சட்டியில் ஊற்ற வேண்டும். பின்னர் எள்நெய், பசுவின் பால் இவை வகைக்கு ஆறுபடியும் அறுகினுடைய குடிநீர் மூன்று படியும் அதிலே வார்த்து தாழிக்குக் காப்புக் கட்டவேண்டும். மேலும்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சந்தனம் | 2 | கழஞ்சு | சடாமாஞ்சில் | 2 | கழஞ்சு |
| மஞ்சள் | 2 | ,, | தக்கோலம் | 2 | ,, |
| ஏலம் | 2 | ,, | சதகுப்பை | 2 | ,, |
| மஞ்சிட்டி | 2 | ,, | சாத்திரபேதி | 2 | ,, |
| கொத்தமல்லி | 2 | ,, | தேவதாரம் | 2 | ,, |
| மகரப்பூ | 2 | ,, | அகில் | 2 | ,, |
| நாகப்பூ | 2 | ,, | இலவங்கம் | 2 | ,, |
| சிற்றரத்தை | 2 | ,, | சாதிபத்திரி | 2 | ,, |
| மஞ்சள்மெழுகு | 2 | ,, | சிவப்புச்சந்தனம் | 2 | ,, |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பூலாவேர் | 2 | கழஞ்சு | சாதிக்காய் | 2 | கழஞ்சு |
| அதிமதுரம் | 2 | ,, | கிராம்பு | 2 | ,, |
| கோட்டம் | 2 | ,, | தாளிசபத்திரி | 2 | ,, |
| செண்பகப்பூ | 2 | ,, | இலவங்கப்பட்டை | 2 | ,, |
| வெட்டிவேர் | 2 | ,, | கரும்பிசின் | 2 | ,, |
| கடுகுரோகிணி | 2 | ,, | மிளகு | 2 | ,, |
| தகரை (பொன்னுவரை) | 2 | ,, | வெள்ளிலோத்திரம் | 2 | ,, |
| விலாமிச்சம்வேர் | 2 | ,, | அமுக்கிராவேர் | 2 | ,, |
| பச்சிலை | 2 | ,, | நன்னாரி | 2 | ,, |
| கச்சோலம் | 2 | ,, | செவ்வள்ளிக்கொடி | 2 | ,, |

இவற்றை வகைக்கு இரண்டு கழஞ்சு வீதம் கொண்டு ஆட்டின் பாலால் மைபோல அரைத்து அந்தக் கற்கத்தை மேற் சொல்லப்பட்ட தாழியிற் கலக்கிவிட்டு எரித்து ஐந்து நாள் ஆறுமல் வைக்கவேண்டும். ஆறும் நாள் மெழுகு பதமாக இருக்கும் போது பச்சைக் கற்பூரம், புனுகு, கோரோசனை, குங்குமப்பூ, கோட்டம் இவை வகைக்கு இரண்டு கழஞ்சு வீதம் எடுத்துப் பொடி செய்து தாழியில் இடவேண்டும். பிறகு வடிகட்டி ஒரு மாத காலம் தானியப் புடமிடவேண்டும். இதுவே மகாசந்தனுதித் தைலமாகும்.

**பயன்படுத்தும் முறை:** இத்தைலம் தேய்த்து மூழ்க சிகைக்காய், அரைப்பு, வெந்நீர் இவற்றைப் பயன்படுத்த வேண்டும்.

**தீரும் நோய்கள்:** என்புசுரம், தாபசோபங்கள், சுவை யின்மை, நச்சுசுரம், மாந்தம், உள்ளுருக்கி, வாந்தி, பெரும்பாடு, பீனிசம், சயம்காசங்கள், நீர்ச்சுருக்கு, தாகம், மேகநீர், எலும் புருக்கி, கிரந்தி, வெட்டை, சூலவாயு, பித்தஐய தொந்திப்பு, பல் விரண நோய், பல்வலி, கன்னேசி. கன்னப்புற்று, நாச்சூலை, நாப் புற்று, கண்டமாலை, நீர்ச்சூலை, இரத்தசிங்கி, தொண்ணூற்றாறு கண்ணேய்கள், தாதுநட்டம், திமிர்வாதங்கள், சந்துவாதம், நாபிச் சூடு, கபாலக்கொதிப்பு, பதினெட்டு வகைக்கிரந்தி, பதினெட்டு வகைச்சூலை, இருபத்தொரு வகை மேகங்கள், ஆறுவகைச் கிரிச் சரங்கள், மூன்றுவகை கெந்ததாளி (அசீரணத்தால் ஏற்படும் குன்ம நோய்) ஆறுவகை பீநசங்கள், தலைநோய், பிடரி வலி, தொண் ணூற்று ஆறுவகைக் கபநோய், தசையடைப்பு, நீரடைப்பு, உடற் காந்தல், அறுபத்துநான்குவகை சுரங்கள், இரத்தபித்தம்.

## 29. மகாநயன சஞ்சீவித் தைலம்

126 வணங்கவே சொல்லுகிறேன் மாணுக் காளே
மகாநயன சஞ்சீவித் தயிலந் தன்னை
யிணங்கவே சிறுகீரை பொன்னுங் காணி
எலுமிச்சை நன்னரி முத்தக் காசு
மணங்கமழு நந்தியா வட்டை யின்வேர்
வாதத்தை யடக்கிவேர் சங்கங் குப்பி
உணங்கவே முடக்கொற்றான் முசுட்டை நொச்சி
உத்தமனே கறுத்த காக் கணத்தின் வேரே.

127 வேரான அமுக்கிரா சீந்தில் தண்டு
விளாவான விருவேலி விலாமிச் சம்வேர்
நீரான தாமரையின் வளையங் கையான்
நெய்தலென்ற கிழங்கரத்தை சவுரிக் கொத்து
பேரான பெருமுட்டி ஆலம் பட்டை
பேய்ப்பீர்க்கு அதிமதுரந் தேவ தாரம்
சீரான வேர்வகையுந் தான்றிக் காயுஞ்
செப்புகின்ற வகையொன்று பலமு மூன்றே.

128 மூன்றோடு சந்தனமும் பலந்தா னெட்டு
மொழிசிற்ற முட்டிவேர் பலமு வைந்து
தோன்றுதே வகைய னைத்து மிடித்துக் கொண்டு
சுத்திசெய்த தாழிதனி விட்டு மைந்தா
வான்றான ஆற்றுநீர் படியெண் ணுன்கு
வடிகட்டி விட்டடுப்பி லேற்றி டாய்நீ
ஈன்றுடச் சிறுதீயு மிட்டெ ரித்து
எட்டொன்றாய் நாலுபடி இறுத்தி டாயே.

129 இறுத்திட்ட கஷாயமதி லெள்ளி லெண்ணெய்
யிருமூன்று படியாவின் னெய்தான் ரெண்டு
முறைத்திட்டந் தப்பாதே தாழிதனி விட்டு
முடக்கொற்றான், முசுட்டைநொச்சி, பொன்னுங் [காணி]
கருத்திட்ட கரிசாலை சீந்தில் தண்டு
கற்றாழை தண்ணீர்விட்டான் வாதங் கொல்லி
நிரைத்திட்ட வகையொன்றுக் கரைப்படிசாறாக
நீவிட்டு ஆவின்பால் படிதானுலே.

130 நாலாகு மிளகுநீர்தான் கூட வாரு
நாகங்ணம் பூலாகிழங்கு லவங்கப்பத்திரி
மாலாகும் அகில்கெந்தம் தேவ தார
மஞ்சிட்டி வால்மிளகு மாஞ்சி யேலம்
மேலாகுஞ் சாதிக்காய் கிராம்பு கோஷ்டம்
வெட்டிவேர் அஞ்சனக்கல் விலாமிச் சம்வேர்
கோலாகு மரமஞ்சள் கொத்த மல்லி
குக்கிலுடன் அதிமதுரம் செவியந் தானே.

131 தானென்ற செண்பகப்பூ இலவங்கப் பட்டை
தக்கோலஞ் சதகுப்பை நெல்லி முள்ளி
தேனென்ற திப்பிலியுங் கடுகு ரோணி
சிறுநாகப் பூதெசா வரத்தி னோடு
மானென்ற பச்சிலையும் வகையொன் றுக்கு
மைந்தனே முக்கழஞ்சி பாலா லாட்டி
ஊனென்ற கஷாயத்திற் கலக்கி விட்டு
உத்தமனே சிறுதீயா யெரித்தி டாயே.

132 எரிக்கையிலே அடிப்பற்று திளக்கிக் காய்ச்சி
இறக்கிடுவாய் மெழுகுபதம் தன்னிற் கேளு
திரிக்கையிலே அபின்புழுகு சவுக்காரத் தோடு
சேருங்கோ ரோசனைகஸ் தூரி தானும்
விரிக்கையிலே பச்சைக்கற் பூர மப்பா
விதமொன்று கழஞ்சியொன்று பொடியே செய்து
சரிக்கையிலே வடிகலசந் தன்னிற் போட்டு
தானிறுத்துத் தயிலமதை முழுகும் போதே.

133 முழுகவே சீயக்காய் அரைப்பு வெந்நீர்
முழுக்கதுவு மொன்றைவிட்டு ஒரு நாள் மூழ்கு
நழுகவே தீரும்நோய் நவிலக் கேளு
நயனத்திற் காசமொடு படலம் பில்லம்
ஒழியுமே நீர்ப்பாய்ச்சல் பரிசல் குந்தம்
உத்தமனே திமிர்தமொடு குவளை வீக்கம்
கழியுமே புழுவெட்டு யெரிச்சல் பித்தங்
கண்பூவுங் கண்குருடுங் கடுகப் போமே.

| | | | |
|---|---|---|---|
| சிறுகீரை | 3 பலம் | விலாமிச்சம் வேர் | 3 பலம் |
| பொன்னுங்காணி | 3 ,, | தாமரைவளையம் | 3 ,, |
| எலுமிச்சம்பழம் | 3 ,, | கரிசாலை | 3 ,, |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| நன்னாரி | 3 | ,, | நெய்தற்கிழங்கு | 3 | ,, |
| முத்தக்காசு (கோரைக்கிழங்கு) | 3 | ,, | அரத்தை | 3 | ,, |
| நந்தியாவட்டை யின்வேர் | 3 | ,, | சவுரிக்கொத்து (முதியார் கூந்தல்) | 3 | ,, |
| வாதமடக்கிவேர் | 3 | ,, | பேராமுட்டி | 3 | ,, |
| சங்குங்குப்பிவேர் | 3 | ,, | ஆலம்பட்டை | 3 | ,, |
| முடக்கொற்றான் | 3 | ,, | | | |
| முசுட்டை | 3 | ,, | பேய்ப்பீர்க்கு | 3 | ,, |
| நொச்சி | 3 | ,, | அதிமதுரம் | 3 | ,, |
| கருங்காக் கணத்தின்வேர் | 3 | ,, | தேவதாரம் | 3 | ,, |
| அமுக்கிராவேர் | 3 | ,, | தான்றிக்காய் | 3 | ,, |
| சீந்தில்தண்டு | 3 | ,, | சந்தனம் | 8 | ,, |
| வெட்டிவேர் | 3 | ,, | சிற்றாமுட்டிவேர் | 15 | ,, |

இவற்றை இடித்துத் தூளாக்கி தாழிதனில் இட்டு முப்பத்திரண்டுபடி ஆற்றுநீர் விட்டு அடுப்பிலேற்றி சிறு தீயாக எரித்து எட்டில் ஒன்றாக்கி வடிகட்டிக் கொள்ள வேண்டும்.

வடிகட்டப்பெற்ற குடிநீரில் எள்நெய் ஆறுபடி, பசுவின் நெய் இரண்டுபடி இவற்றையும் தாழிதனிலிட்டு முடக்கொற்றான், முசுட்டை, நொச்சி, பொன்னாங்காணி, கரிசாலை, சீந்தில் தண்டு, கற்றாழை, தண்ணீர்விட்டான், வாதமடக்கி, இவற்றின் சாறுவகைக்கு அரைப்படியும் பசுவின்பால் நான்குபடியும் சேர்க்கவேண்டும். தக்க அளவு மிளகு நீரையும் சேர்க்க வேண்டும். பின்னர்

நாகணம், பூலாங்கிழங்கு, இலவங்கப்பத்திரி, அகில், சந்தனம், தேவதாரம், மஞ்சிட்டி, வால்மிளகு, சடாமஞ்சில், ஏலம், சாதிக்காய், கிராம்பு, கோட்டம், வெட்டிவேர், அஞ்சனக்கல், விலாமிச்சம் வேர், மரமஞ்சள், கொத்தமல்லி, குக்கில், அதிமதுரம், செவ்வியம், செண்பகப்பூ, இலவங்கப்பட்டை, தக்கோலம், சதகுப்பை, நெல்லிமுள்ளி, திப்பிலி, கடுகுரோகிணி, சிறுநாகப்பூ, தெசாவரம் (திப்பிலிவேர்), பச்சிலை

இவற்றை வகைக்கு மூன்று கழஞ்சு வீதம் எடுத்து பால் விட்டு அரைத்து மேற்சொல்லப்பெற்ற குடிநீரில் கலக்கி சிறுதீயாக எரிக்க வேண்டும். அடிப்பிடிக்காமல் காய்ச்சி மெழுகு

பதத்தில் இறக்கி அபின், புனுகு, சவர்க்காரம், கோரோசனை, கஸ்தூரி, பச்சைக்கற்பூரம், வகைக்கு ஒரு கழஞ்சுவீதம் பொடித்து அதில் கலந்து வடிகட்டிக் கொள்ள வேண்டும்.

**பயன்படுத்தும் முறை**: இத்தைலத்தைத் தேய்த்து ஒன்றைவிட்டு ஒரு நாள் மூழ்க வேண்டும். அப்போது சீயக்காய், அரைப்பு, வெந்நீர் இவற்றையே பயன்படுத்த வேண்டும்.

**தீரும் நோய்கள்**: கண்காசம், படலம், பில்லம், நீர் வடிதல், பரிசம், குந்தம், திமிரம், குவளைவீக்கம், புழுவெட்டு கண்எரிச்சல், பித்தம், கண்ணில் பூவிழுதல், கண்குருடு முதலியன.

## 30. மகாதிரிபலாதித் தைலம்

134 கடுகியே நயனநோய் தொண்ணூற் றாறுங்
காணும மேலாடுமடா கண்டு தேறு
முடுகியே வருசிரசு ரோக மல்லால்
விழிமுறுக்கிக் கட்டுகிற சூலை வாதம்
படியவே மகாதிரி பலாதி நன்னை
பாடுகிறேன் மாணுக்காள் பணிந்து கேளு
மிடுகவே திரிபலையும் வேங்கைக் காதல்
இயல்பான முடக்கொற்றான் வில்வ வேரே.

135 வேரப்பா ஆமணக்கு சீந்தித் தண்டு
விளங்கவே தாழையுடை விழுதி னோடு
பாரப்பா வகையொன்று பலந்தான் பத்து
பாலகனே குறுந்தொட்டி பலமூ வைந்து
காரப்பா அதிமதுரந் தேவ தாரம்
கனமிளகு அமுக்கிரா குரோசாணி மோதி
சீரப்பா அதில்வகைக்குப் பலந்தா னைந்து
சேரவே யிடித்தொன்றாய்ப் பாண்டத் தூட்டே

136 ஊட்டியே அறுநான்கு படிநீர் விட்டு
உத்தமனே யெட்டொன்றாய்க் குறுக்கி வாங்கி
கூட்டுவாய் ரெண்டுபடி ஆவின் பாலில்
குறையாமல் நல்லெண்ணெய் படிதான்ரெண்டு
சூட்டியே தாழிக்குள் கொதிக்கும் போது
சொல்லுவேன் கற்கவகை துலக்க மாக
நாட்டுவாய் அதிமதுரம் லவங்கமேலம்
நாகப்பூ புன்னைப்பூக் கோட்டந் தானே.

137 தானுன யிருவேலி கொழுந்து பச்சை
தகரமொடு விலாமிச்சு முத்துச் சிப்பி
நானுன அப்பிரகம் பவளப் புற்று
நாகணமுங் குந்திருக்கம் தூணி யாங்கம்
வானுன மும்மஞ்சள் சாம்பி ராணி
மாஞ்சிலொடு குங்கிலிய மஞ்ச னக்கல்
தேனுன கற்பூரஞ் சித்த ரத்தை
சிறந்த விரு சந்தனமு மகிலுமாமே.

138 அகிலோடு மஞ்சிட்டி தேவ தாரம்
அப்பனே மதிமுகமும் வகையொன் றுக்கு
இகலாதே விராகனெடை ரெண்டு போடு
ரெண்டுபலங் கொம்பரக்கு கஷாயம் வாங்கிப்
புகலாதே பால்தேனி லரைத்துச் சேர்த்து
புண்ணியனே பதமறிந்து வடித்துக் கொண்டு
நிகழாதே சீயக்கா யரைப்பு வெந்நீர்
நீமுழுகு திருநோய் நிகழ்த்து வோமே.

139 நிகழுமே கன்ஞேசி கன்லப் புற்று
நீர்ச்சூலை கபாலவலி மண்டைக் குத்து
இகழவே வரும்பீனிசை நாவிற் சூலை
யிருசெவியிற் குத்தலொடு யெங்கும் வாய்வு
அகலுமே வாதமொடு சூலை தானும்
அப்பனே தந்தவலி யக்க ரங்கள்
புகலுவேன் சிரசில்நோ யெல்லாந் தீரும்
புண்ணியனே யித்தைலம் புகழ்ந்து செய்யே.

கடுக்காய்
நெல்லிக்காய் — வகைக்கு பலம் பத்து
தான்றிக்காய்
வேங்கைக்காதல்
இண்டு, புலித்துடக்கி
முடக்கொற்றான்
வில்வவேர்
ஆமணக்குவேர்
சீந்தில்தண்டு
தாழைவிழுது
குறுந்தொட்டி — வகைக்கு 15 பலம்

அதிமதுரம்
தேவதாரம்
மிளகு
அமுக்கிருவேர்
குரோசாணி ஓமம்
சீரகம்
கருஞ்சீரகம் வகைக்கு பலம் ஐந்து

**செய்முறை:** இவற்றை இடித்துத் தூளாக்கி ஒரு பாண்டத்திலிட்டு இருபத்துநான்கு படி நல்ல நீர் விட்டு எட்டில் ஒன்றுகக் குறுக்கிக் கொண்டு பிறகு இரண்டுபடி ஆவின்பால் இரண்டுபடி எள்நெய் இவற்றையும் அப்பாண்டத்தில் ஊற்றிக் கொதிக்க வைக்க வேண்டும்.

அதிமதுரம்
இலவங்கம்
ஏலம்
நாகப்பூ
புன்னைப்பூ
கோட்டம்
இருவேலி
வெட்டிவேர்
மருக்கொழுந்து
திருநீற்றுப்பச்சை
தகரம்
விலாமிச்சம் வேர்

முத்துச்சிப்பி
அப்பிரகம்
பவளப்புற்று
நாகணம்

வெண்குங்கிலியம்
தூணியாங்கம்
மரமஞ்சள்
கஸ்தூரி மஞ்சள்
கறி மஞ்சள்
சாம்பிராணி
சடாமாஞ்சி
குங்கிலியம்
அஞ்சனக்கல்
கற்பூரம்
சிற்றரத்தை
செஞ்சந்தனம்
வெண்சந்தனம்
அகில்
மஞ்சிட்டி
தேவதாரம்
மதிமுகம்

**செய்முறை:** இவற்றை வகையொன்றுக்கு இரண்டு விராக னெடை எடுத்துக் கொண்டு இரண்டு பலம் கொம்பரக்கைக் குடி நீர் செய்து அதிலும் பால், தேன் இவற்றிலும் தனித்தனியாக அரைத்துச் சேர்த்து கொதிக்கின்ற பாண்டத்தில் இவற்றை இட்டு பதத்தில் வடித்துக் கொள்ள வேண்டும்.

இத்தைலத்தை தேய்த்து மூழ்குவதற்கு சிகைக்காய், அரைப்பு வெந்நீர் இவற்றைப் பயன்படுத்த வேண்டும்.

**தீரும் நோய்கள்**: தொண்ணூற்ருறு வகைக் கண்நோய்கள் தலைநோய்கள் விழிமுறுக்கிக்கொள்ளுகின்ற சூலை வாதம், கன்ஞேசி, கன்னப்புற்று நீர்ச்சூலை, கபாலவலி, மண்டைக்குத்து, பீனிசங்கள், நாச்சூலை, காதில்குத்தல் வாயு, வாதம், சூலை, பல்வலி, அக்கரங்கள்.

## 31. அமிர்தவல்லித் தைலம் (சீந்தில்)

140 செய்யவே அமுதவல்லித் தயில மொன்று
செப்பக்கேள் சன்னிவாத சுரங்களுக்கு
பய்யவே அமுதவல்லி பெரிய தாகப்
பலமிருப திடித்துநீர் பதக்கி ரண்டு
முய்யவே சிறுதீயா யெரித்து வாங்கி
உறுமிரண்டு படியாக்கி வடித்துக் கொண்டு
நய்யவே காடிபடி யிரண்டு சேர்த்து
நல்லெண்ணய் படியிரண்டு கூட வாரே.

141 வாரப்பா தாழிக்குள் கொதிக்கும்போது
மைந்தனே அமுக்கிரா வெருகு மூலம்
சேரப்பா பதினறு கழஞ்ச ரைத்து
சேர்த்துநீ பதம்பார்த்து வடித்துக் கொண்டு
நேரப்பா தயிலம்விட்டு முழுகு வெந்நீர்
நேர்ப்பான சீயக்காய் நினைவாய்க் கேளு
காரப்பா புளிமோரைத் தள்ளவேண்டும்.
கடுஞ்சன்னி வாதசுர மகன்று போமே.

அமிர்தவல்லி இருபது பலம் எடுத்து இடித்து இரண்டு பதக்கு நீர் விட்டு ( 8 படி) சிறுதீயாக எரித்து இரண்டு படியாக அதைக்குறுக்கி வடித்துக் கொண்டு காடி, நல்லெண்ணெய் வகைக்கு இரண்டுபடி கூடச் சேர்த்து தாழியை அடுப்பிலேற்றி கொதிக்கின்றபோது அமுக்கிரா, வெருகுமூலம், (பூனைக்காலி) இவற்றை வகைக்கு பதினறு கழஞ்சு வீதம் அரைத்துத் தாழியில் சேர்த்துக் காய்ச்சி பதத்தில் இறக்கி வைத்துக் கொள்ள வேண்டும்.

**பயன்படுத்தும் முறை**: இத்தைலத்தைத் தேய்த்து வெந்நீரில் மூழ்கவேண்டும்.

**பத்தியம்**: புளி, மோர் ஆகாது.

**தீரும் நோய்கள்**: சன்னி வாத சுரங்கள், பலவகைச் சுரங்கள், பழஞ்சுரம்.

## 32. நாக்குச்சூலைத் தைலம்

142 போமப்பா பலசுரங்கள் மாறல்தானும்
பொல்லாத விஷசுரங்கள் எல்லாந்தீருங்
காமப்பா விதனத்தைத் தள்ள வேணும்
கருநாக்கிற் சூலைக்குத் தயிலங் கேளு
ஆமப்பா ஆற்றுநீர் படிதா னெட்டு
அளந்துவிட்டுக் குறுக்கியது படிதா னென்று
தாமப்பா பொடுதலையைத் தனித்தி டித்து
தன்சாறு படியொன்று தாக்கி டாயே.

143 தாக்கியே கண்கறுத்த தேங்காய் நாலு
தானுடைத்து மெல்லினமாய்த் திருகிச் சேரு
நோக்கியே அடுப்பேற்றி யெரிக்கும் போது
நுவலுவேன் மெழுகுபதந் தன்னில் வாங்கி
தேக்கியே கோணிதனி லிட்டுக் கொண்டு
செணத்திலே கிட்டிகட்டிப் பிழிந்தா யாகில்
பாக்கியே இல்லாமல் தயிலமெல்லாம்
பதருதே குப்பிதனி லடைத்துக் கொள்ளே.

144 கொள்ளவே கழஞ்சியொன்று அந்திசந்தி
குடித்திட்டால் நாக்கில்வரும் சூலை தானும்
மெள்ளவே நாக்கரிக்குங் கிரந்திப் புண்கள்
மேல்வாயைப் பற்றிவரும் ஓடுவைப் புண்ணுந்
துள்ளவே ஈறரிக்குங் கிரந்தி யோடு
தொடர்ந்துவரு உண்ணாக்கில் கிரந்தியல்லால்
விள்ளவே வாயில்வரும் விரணச் சூலை
வெருண்டோடும் பத்தியமாய் வேண்டு வேண்டே.

ஒரு தாழியில் ஆற்று நீர் எட்டுப்படியை இட்டு அதை ஒரு படியாகக் குறுக்கி வாங்கி பொடுதலைச்சாறு ஒருபடியும், முற்றிய தேங்காய் நான்கைத் திருகிய பூவையும் சேர்த்து அடுப்பி லேற்றி எரித்து மெழுகு பதத்தில் இறக்கி கோணியில் கிட்டிகட்டி நன்றாகப் பிழியத்தயிலம் வரும். அதை ஒரு புட்டியில் அடைத்துக் கொள்ளவேண்டும்.

**அளவு:** ஒரு கழஞ்சி வீதம் காலை மாலை.

**தீரும் நோய்கள்:** நாக்குச்சூலை, நாக்கை யரிக்கின்ற கிரந்திப்புண், மேல்வாயில் உண்டாகும் ஓடுவைப்புண், ஈறுகளை அரிக்கும் கிரந்தி, உண்ணாக்குக் கிரந்தி வாயில் உண்டாகும் விரணச்சூலை.

## 33. மகாஏலாதித் தைலம்

145 வேண்டுமகா யேலாதித் தயிலங்கேளு
மிகுத்தபித்த காசமொடு சிரசு நோய்க்கு
பூண்டதொரு யேலம்விலாமிச்சம் வேரும்
புகழ்வெட்டி வேருடனே மருதம்பட்டை
நீண்டகுறுந் தொட்டிவேர் கொன்றைப்பட்டை
நேரிலந்தை வேப்பந்தோல் ஆவரைவேர்ப்பட்டை
ஆண்டஅத்தி ஆலரசு ஆயிலின்பட்டை
ஆற்றரசம் பட்டைநாவல் பட்டையாமே.

146 ஆமடா அழிஞ்சிலொடு கடம்பம் பட்டை
அமுதவல்லி பதினெட்டு வகையுங் கேளு
தாமடா வகைக்கைந்து பலமி டித்துத்
தண்ணீரு மரக்காலெட் டளந்து விட்டு
நாமடா யெட்டொன்றாய்க் குறுக்கி வாங்கி
நலமாக வடிகட்டித் தாழி சேர்த்து
ஓமடா நல்லெண்ணெய் குறுணி வாரு
உத்தமனே ஆவின்பால் குறுணி தானே.

147 தானான யிளநீர்தான் படிதா னெட்டுத்
தான்விட்டுக் சற்கவகை சாற்றக் கேளு
கானான யேலமதி மதுர மஞ்சள்
கடுகுரோ கிணிஅரத்தை செண்ப கப்பூ
ஊனான கண்டில்வெண்ணெய் சிற்ற ரத்தை
உடன்வசம்பு செவ்வள்ளி தேவ தாரந்
தேனான சீரகமு மகரப் பூவுந்
திரிகடுகு மரமஞ்சள் சிறுதேக் காமே.

148 ஆமப்பா அதிவிடையம் கஸ்தூரி மஞ்சள்
அமுக்கிரா நன்னாரி குறுந்தொட்டி வேரும்
தாமப்பா வசுவாசி கிராம்பு முத்தந்
தக்கோலங் கார்போகங் கடுகு கோஷ்டம்
நாமப்பா பச்சிலைவா லுளுவை யோடு
நாகப்பூ மஞ்சனம் வெட்பாலை யோடு
போமப்பா குறிஞ்சானுடன் முப்பத் தாறும்
பொருந்தவே வகைக்கிரண்டு கழஞ்சு தூக்கே.

149 தூக்கியே அரைத்தெண்ணெய் தன்னிற் சேர்த்து
தும்பிமுகன் பூசைசெய்து அடுப்பி லேற்றி
தாக்கியே சிறுதீயா யெரித்துக் கிண்டி
தான்கடுகு பதந்தன்னில் வடித்துக் கேளு
பாக்கியே பொன்மெழுகு புழுகு சட்டம்
பச்சைக்கற் பூரமொடு சாம்பி ராணி
நீக்கியே வகை கழஞ்சி நிறுத்துக் கொண்டு
நிசமான கஸ்தூரி விராகனெடை யரையே.

150 அரைத்துநீ வடிகலசந் தன்னி லிட்டு
அப்பனே தயிலத்தை வடித்துக் கொண்டு
சிரத்திலே தான் பொருத்திக் கடிகை ஐந்து
சென்றபின்பு சீயக்கா யரைப்பு வெந்நீர்
நிரைத்துமே தான்முழுகு பத்தியமே வேணும்
நிலை நயனரோகத்துக் காவின் பாலாந்
துரத்துமே மற்றுள்ள நோய்க்கு வெந்நீர்
சோற்றுக்குச் சிறிதுப்பு வறுத்துக் கூட்டே.

151 கூட்டுவாய் சிறுகீரை முருங்கைப் பிஞ்சு
கொத்தமல்லி வழுதலம்பிஞ் சவரைப் பிஞ்சு
தீட்டுவாய் துவரையுடன் பருப்பு மாகும்
சிறுபயற்றின் பருப்போடு புடலம் பிஞ்சாம்
தேட்டவே மற்றதொன்று மாகா தப்பா
தீண்டாதே மீனிறைச்சி புளிப்பு மங்கை
நாட்டியே நான்குநாட் கொருக்கால் மூழ்க
நலமாகத் தீருநோய் சூட்டக் கேளே.

152 கேளடா மண்டையிடி கபாலக் குத்து
கெடியான கிறுகிறுப்புச் சுவாச காசந்
தாளடா தனிலிறங்கு தந்த சூலை
தலைநீருங் கன்னேசி கன்னப் புற்று
கேளடா விப்புருதி கண்ட மாலை
கெடிசூலை குவளைவருங் கபால சூலை
நாளடா நயனத்திற் படலங் காசம்
நாடறியப் பித்தத்தின் காசம் போமே.

153 போகுமே கண்டத்தின் மேலே வந்த
பொல்லாத நோய்கள் ஆயிரத்து எட்டு
ஏகுமே கர்மத்தை நிவர்த்தி செய்தால்
எழுந்தநோய் தீருமடா ஏழை மக்காள்

நோகவே கர்மங்கள் தீரா விட்டால்
நோய்க்கந்த மருந்தையுண்டுந் தீராதப்பா
ஆகுமே அறமதுசெய் திருந்தாராகில்
அவர்களுக்குக் கர்மமில்லை அறிந்து செய்யே.

154 செய்யவே நயனநோ யெல்லாந் தீரும்
சிரசிலே வந்தபிணி யனைத்தும் போகும்
நய்யவே தேகத்தின் மேல்வியாதி யெல்லாம்
நாலுநாள் மாறலொடு வெதுப்புந் தீரும்
பய்யவே வாதபித்தஞ் சிலேத்துமம் போகும்
பாங்காகச் சுவாசமது பறக்குங் கண்டாய்
அய்யனே கையில்நெல்லிக் கனி யிருக்க
அலையவே வேண்டாங்கா ணறிந்து பாரே.

| | | | |
|---|---|---|---|
| 1 | ஏலம் | 10 | அத்திப்பட்டை |
| 2 | விலாமிச்சம்வேர் | 11 | ஆலம்பட்டை |
| 3 | வெட்டிவேர் | 12 | அரசம்பட்டை |
| 4 | மருதம்பட்டை | 13 | ஆயிலின்பட்டை |
| 5 | குறுந்தொட்டிவேர் | 14 | ஆற்றரசன்பட்டை |
| 6 | கொன்றைப்பட்டை | 15 | நாவல்பட்டை |
| 7 | இலந்தைப்பட்டை | 16 | அழிஞ்சில்பட்டை |
| 8 | வேப்பம்பட்டை | 17 | கடப்பம்பட்டை |
| 9 | ஆவாரம்பட்டை | 18 | அமிர்தவல்லி |

வகைக்கு பலம் ஐந்து

மேற்கண்ட சரக்குகளை ஒரு தாழியில் சேர்த்து அத்துடன் எட்டு மரக்கால் தண்ணீர் ஊற்றி அதை எரித்து ஒரு மரக்காலாகக் குறுக்கி வாங்கி வடிகட்டி தாழியிலிட்டு இரண்டு மரக்கால் எள் நெய் இரண்டுபடி பசும்பால், எட்டுபடி இளநீர் சேர்ப்பதுடன்

| | | | |
|---|---|---|---|
| 1 | ஏலம் | 10 | அதிவிடயம் |
| 2 | அதிமதுரம் | 11 | கத்தூரி மஞ்சள் |
| 3 | மஞ்சள் | 12 | அமுக்கிரா |
| 4 | கடுகுரோகிணி | 13 | நன்னாரி வேர் |
| 5 | பேரரத்தை | 14 | குறுந்தொட்டிவேர் |
| 6 | செண்பகப்பூ | 15 | சாதிபத்திரி |
| 7 | கண்டில்வெண்ணெய் | 16 | கிராம்பு |
| 8 | சிற்றரத்தை | 17 | முத்தக்காசு |
| 9 | வசம்பு | 18 | தக்கோலம் |

19 செவ்வல்லி
20 தேவதாரம்
21 சீரகம்
22 மகரப்பூ
23 சுக்கு
24 மிளகு
25 திப்பிலி
26 மரமஞ்சள்
27 சிறுதேக்கு
28 கார்போகம்
29 கடுகு
30 கோட்டம்
31 பச்சிலை
32 வாலுளுவை
33 நாகப்பூ
34 நுரை
35 வெட்பாலை
36 குறிஞ்சான்.

ஆகியவற்றை வகைக்கு இரண்டு கழஞ்சு எடுத்து அரைத்து எண்ணெயில் கரைத்து அடுப்பிலேற்றி சிறுதீயாக எரித்துக்கிண்டி கடுகு பதத்தில் வடிகட்டிக் கொள்ளவேண்டும். பின்னர் மஞ்சள், மெழுகு, புனுகு, பச்சைக்கற்பூரம், சாம்பிராணி இவற்றை வகைக்கு இரண்டு கழஞ்சாகச் சேர்த்துக் கொண்டு அரைவிராகனெடை கத்தூரியும் சேர்த்து அரைத்து தாழியில் இட்டு மற்றும் ஓர்முறை வடிகட்டிக் கொள்ள வேண்டும்.

**பயன்படுத்தும் முறை:** தைலத்தைத் தலைக்குத் தேய்த்து மூழ்குவதற்கு சிகைக்காய், அரைப்பு, வெந்நீர் இவற்றைப் பயன் படுத்த வேண்டும்.

**பத்தியம்:** கண் நோய்களுக்கு பசுவின் பாலும் மற்ற நோய்களுக்கு வெந்நீரும் பயன்படுத்த வேண்டும். சோற்றுக்கு உப்பை வறுத்துக் கூட்ட வேண்டும்.

சிறுகீரை, முருங்கைப்பிஞ்சு, கொத்தமல்லி, கத்தரிப்பிஞ்சு, அவரைப் பிஞ்சு, துவரம்பருப்பு, சிறுபயறு, புடலம்பிஞ்சு இவை ஆகும். மீன், இறைச்சி, புளிப்பு, பெண்போகம் இவை ஆகா. இவ்வாறு பத்தியம் காத்து நான்கு நாட்களுக்கு ஒரு முறை முழுக வேண்டும்.

**தீரும் நோய்கள்:** மண்டையிடி, கபாலக்குத்து, கிறுகிறுப்பு, சுவாசகாசம், பல்வலி, தலைநீர், கன்னேசி, கன்னப்புற்று, விப்புருதி, கண்டமாலை, சூலை, கண்குவளையினின்றுவரும் சூலை, கண்படலம், கண்காசம், பித்தகாசம், கழுத்திற்கு மேலே வருகின்ற பல நோய்கள் பழஞ்சுரம், வெப்பம், முக்குற்றங்கள், சுவாசகாசம்.

## 34. அமுதாதித்தைலம்

155 அறிந்துபித்தந் தீருதற்கு அப்பா கேளு
அமுதாதித் தயிலமென்ப ததற்கு நாமம்
தெரிந்ததொரு அமுதவல்லி பலத்தைக் கேளு
செப்பியது நாலுபத்துச் சிதைத்து நன்றாய்
சிறந்தகன்னிச் சாறுபடி யொன்ற தாக
சீதாசெங் கழுநீர்தான் பலமோ பத்து
பிழிந்ததனைப் பிடித்துவொரு பாண்டத் திட்டு
பின்பதக்கு நீர்விட்டு யெட்டொன் றுக்கே.

156 ஆக்கடா கஷாயமொன்று நல்ல எண்ணெய்
அதற்குநேர் விட்டுநீ யடுப்பி லேற்றி
தாக்கடா அதிமதுரம் தேவ தாரம்
சந்தனம் பூலாங்கிழங்கு கடுகு ரோணி
நோக்கடா திரிபலைமஞ் சிட்டி யேலந்
நுவலும்பச் சிலையரத்தை முத்தக் காசு
வாக்கடா கோட்டமகில் வெட்டி வேரு
மைந்தனே விலாமிச்சஞ் சிற்ற ரத்தை
நீக்கடா தாமரையின் வளைய மோதம்
நேரிலவம் பட்டைசடா மாஞ்சி தானே.

157 தானென்ற தக்கோலம் வகையொன் றுக்கு
சமனாக விராகனெடை யரைத்துப் போடு
தேனென்ற மெழுகுபத முதிரும் போது
செணத்திலே வடித்தப்பா முழுகச் சொல்லு
கானென்ற சீயக்காயரைப்பு வெந்நீர்
கட்டாக முழுகிவரத் தீரும் நோய்கள்
வானென்ற பித்தத்தின் கதிப்புக் கண்ணோய்
மாறலென்ற சுரமெல்லாம் வாரா தென்னே.

அமிர்தவல்லி நாற்பதுபலம் எடுத்து இடித்து கற்றாழைச் சாறு ஒரு படி, செங்கழுநீர்ச்சாறு பலம் பத்து ஆகியவற்றைச் சேர்த்து ஒரு பாண்டத்திலிட்டு அதில் இரண்டு மரக்கால் நீர் விட்டு எட்டில் ஒன்றாகக் குறுக்கி கஷாயமாகச் செய்து அதற்குச் சமன் அளவு எள்நெய் கூட்டி அடுப்பிலேற்றி அதில்,

| | | | |
|---|---|---|---|
| 1 | அதிமதுரம் | 12 | அரத்தை |
| 2 | தேவதாரம் | 13 | கோரைக்கிழங்கு |
| 3 | சந்தனம் | 14 | கோட்டம் |
| 4 | பூலாங்கிழங்கு | 15 | அகில் |
| 5 | கடுகுரோகிணி | 16 | வெட்டிவேர் |
| 6 | கடுக்காய் | 17 | விலாமிச்சம் |
| 7 | நெல்லிக்காய் | 18 | சிற்றரத்தை |
| 8 | தான்றிக்காய் | 19 | தாமரையின்வளையம் |
| 9 | மஞ்சிட்டி | 20 | இலவம்பட்டை |
| 10 | ஏலம் | 21 | சடாமாஞ்சில் |
| 11 | பச்சிலை | 22 | தக்கோலம் |

இவற்றை வகைக்கு ஒரு வராகனெடை வீதம் அரைத்துச் சேர்த்து விட்டுக் காய்ச்சி மெழுகு பதத்தில் இறக்கி உடனே வடிகட்டி வைத்துக்கொள்ள வேண்டும். இத்தைலத்தை தலையில் இட்டு மூழ்குக. சிகைக்காய், அரைப்பு இவற்றைப் பயன் படுத்த வேண்டும்.

**தீரும் நோய்கள்**: பித்தக்கதிப்பு, கண்ணோய், பழஞ்சுரம்.

### 35. அமிர்தசஞ்சீவித்தைலம்

158 வாராம லொழிவதற்கு அமுத சாலை
மைந்தனே தயிலமொன்று வழுத்தக் கேளு
தோராமல் சீந்திலது பலமோ பத்து
சொல்லுமுத்தம் நன்னாரி விலாமிச் சம்வேர்
நேராகப் பலமைந்து யிடித்துப் போட்டு
நீர்விட்டு யெட்டொன்றுய்ப் படிதா னென்று
ஏராமல் சீந்திற்சாறு படிதா னென்று
எண்ணெய்படி யொன்றுவிட்டுக் கற்கங் கேளே.

159 கேளடா கச்சோலங் கழுநீர் கோஷ்டம்
கெடியான புழுகுசடா மாஞ்சி லேலம்
நாளடா சாதிக்காய் கண்டில் வெண்ணெய்
நாகப்பூ செண்பகப்பூ அகில் நன்னாரி
வாளடா அதிவிடையம் லவங்கப் பட்டை
வசுவாசி யிருவேலி மதுரந் தானும்
வேளடா சந்தனம்பச் சிலைதக் கோலம்
மேலான கஞ்சவளை விராக னென்றே.

160 ஒன்ருக வரைத்திட்டு இளகக் காய்ச்சி
உயர்கடுகு பதந்தன்னில் வடித்துக் கொண்டு
குன்ருமல் சிரசுதனில் தேய்த்து மூழ்கு
குணமாகும் பித்தத்தா லெழுந்த காசம்
நின்ருடும் பலபிணியுந் தீரும் பாரு
. . . . . . . . . . . . .

1 சீந்தில் பத்து பலம்
2 கோரைக்கிழங்கு
3 நன்ஞரி வகைக்கு ஐந்து பலம்.
4 விலாமிச்சம்வேர்

இவற்றை இடித்து தண்ணீர்விட்டு எட்டில் ஒன்ருய்க் குறுக்கி பின்னர் சீந்தில் சாறு ஒரு படி, எள்நெய் ஒரு படி, கச்சோலம், செங்கழுநீர், கோட்டம், புனுகு, சடாமாஞ்சில், 'ஏலம், சாதிக்காய், கண்டில் வெண்ணெய், நாகப்பூ, சண்பகப்பூ, அகில், நன்ஞரி, அதிவிடயம், இலவங்கப்பட்டை, சாதிபத்திரி, இருவேலி, அதிமதுரம், சந்தனம், பச்சிலே, தக்கோலம், தாமரைவளையம் இவற்றை வகைக்கு ஒரு விராகனெடை அரைத்துச்சேர்த்து இளகும்படிக் காய்ச்சி கடுகு பதத்தில் இறக்கி வடித்துக் கொள்ளவும்.

**பயன்படுத்தும் முறை**: தைலத்தைத் தலேயில் தேய்த்து மூழ்கப் பயன்படுத்த வேண்டும்.

**தீரும் நோய்கள்**: பித்தத்தால் வரும் கண்காசம் முதலிய பல பிணிகள்.

### 36 அசனவில்வாதித் தைலம்

நிலேயசன வில்வாதித் தயிலங் கேளு
பொன்ருத வேங்கையுடைப் பட்டை சீந்தில்
புகழ்வில்வங் குறுந்தொட்டி வேருமாமே.

161 வேருடனே வகைக்குவகை பலந்தான் மூன்று
விதமாக இடித்துநீ பாண்டத் திட்டு
நேருடனே சுத்தசலம் படிதா னெட்டு
நீகுறுக்கிப் படியொன்று வடித்து வாங்கி
வாருநீ நல்லெண்ணெய் படிதா ஞென்று
மைந்தனே ஆவின்பால் படிதா ஞென்று
சேருமே கொதிக்கையிலே கற்கங் கேளு
திரிபலேயும் அதிமதுரம் ஏலந் தானே.

162 ஏலமொடு இலவங்கம் அமுக்கி ராவேர்
இருவேலி விலாமிச்சம் முத்தக் காசு
கோலமுடன் மரமஞ்சள் தேவ தாரங்
கோஷ்டமொடு சாதிக்காய் சாதி பத்திரி
சாலமஞ்சள் சுக்கரத்தை செண்ப கப்பூ
சடாமாஞ்சில் கைச்சோலம் புழுகு சட்டம்
மாலநீ ரானவாங் கூகை நீறு
மிலாக்காயும் நெய்தல் சந்தனமு மாமே.

163 ஆமப்பா குங்குமப்பூ சிற்ற ரத்தை
அப்பனே தாமரையின் வளையத் தோடு
நாமப்பா குறுந்தொட்டி வேரு மல்லால்
நற்சீ ரகங்கரிய சீரகத் தோடு
தாமப்பா வகைக்குவகை விராக னென்று
தனித்தாவின் பால்விட்டு அரைத்துச் சேரு
ஓமப்பா மெழுகுபத மாகும் போது
உத்தமனே கிட்டிகட்டிப் பிழிந்தி டாயே.

164 பிழிந்திட்ட தயிலமதை முழுகும் போது
புண்ணியனே தீருநோய் புகலக் கேளு
வழிந்திட்ட பீனிசமுங் கன்ன ரோக
மக்களே சிரசுநோய் நெற்றி வாய்வு
இழிந்திட்ட நயனத்தின் ரோக மெல்லாம்
இடரகலும் புளிபுகையுந் தூரத் தள்ளு
தழிந்திட்ட தந்தத்தின் வாய்வு தீருந்
தப்பாது தயிலத்தின் தன்மை பாரே.

1 வேங்கைப்பட்டை

2 சீந்தில்

3 வில்வப்பட்டை — வகைக்கு மூன்று பலம்

4 குறுந்தொட்டிவேர்

இவற்றை இடித்து ஒரு மட் பாண்டத்தில் இட்டு அத்துடன் சுத்தநீர் படி எட்டு விட்டு அடுப்பேற்றி எரித்து ஒரு படியாகக் குறுக்கி வாங்கி அதில் எள்நெய், பசுவின்பால் வகைக்கு ஒரு படி சேர்த்து அடுப்பேற்றி எரியிட்டுக் கொதிக்கின்றபோது,

| | | | |
|---|---|---|---|
| 1 | கடுக்காய் | 17 | சுக்கு |
| 2 | நெல்லிக்காய் | 18 | அரத்தை |
| 3 | தான்றிக்காய் | 19 | செண்பகப்பூ |
| 4 | அதிமதுரம் | 20 | சடாமாஞ்சில் |
| 5 | ஏலம் | 21 | கச்சோலம் |
| 6 | இலவங்கம் | 22 | புனுகுசட்டம் |
| 7 | அமுக்கிராவேர் | 23 | கூகைநீறு |
| 8 | வெட்டிவேர் | 24 | மிலாக்காய் |
| 9 | விலாமிச்சம்வேர் | 25 | நெய்தல்கிழங்கு |
| 10 | கோரைக்கிழங்கு | 26 | சந்தனம் |
| 11 | மரமஞ்சள் | 27 | குங்குமப்பூ |
| 12 | தேவதாரம் | 28 | சிற்றரத்தை |
| 13 | கோட்டம் | 29 | தாமரைவளையம் |
| 14 | சாதிக்காய் | 30 | குறுந்தொட்டிவேர் |
| 15 | சாதிபத்திரி | 31 | சீரகம் |
| 16 | மஞ்சள் | 32 | கருஞ்சீரகம் |

இவற்றை வகைக்கு ஒரு விராகனெடை எடுத்து பசுவின் பால்விட்டு அரைத்து கொதிக்கின்ற தாழியில் இட்டு மெழுகு பதத்தில் இறக்கி கிட்டி கட்டிப் பிழியத் தைலமாம்.

**பயன்படுத்தும் முறை**: இத்தைலத்தை தலைமுழ்கப் பயன் படுத்த வேண்டும்.

**தீரும் நோய்கள்**: பீனிசம், கன்னரோகம், தலைநோய், நெற்றிவாயு, கண்ணோய்கள், தந்தவாய்வு.

**பத்தியம்**: புளியையும் புகையிலையையும் (எல்லாஉருவி லும்) நீக்கல் வேண்டும்.

### 37. கனனரோகத்திற்குத் தைலம்

165 பாரப்பா கன்னத்தின் ரோகமெல்லாம்
பறந்தோடத் தயிலமொன்று பகரக்கேளு
சாரப்பா நொச்சியொடு முருக்கூமத்தை
தைவேளை பச்சைமஞ்ச ளிஞ்சிச்சாறு
நேரப்பா வாழையுடைக் கிழங்குச்சாறு
நிலப்பனையின் கிழங்குகையான் தகரைச்சாறு
காரப்பா பெருங்குரும்பை வெள்வெங்காயம்
கனத்துளசி வகைக்குச் சாறு படிகாலாமே.

166 காலாகும் நல்லெண்ணெய் படிதான் ரெண்டு
கலந்துவிடு பாண்டத்திற் கற்கங் கேளு
மேலாகுந் திரிகடுகு சித்திர மூலம்
மிக்கநாய்க் கடுகுகோஷ்ட மிந்துப் போடு
மாலாகும் வகைக்கிரண்டு கழஞ்சு தூக்கி
மைந்தனே யரைத்திட்டு கலக்கிக் காய்ச்சி
நாலாநாள் மெழுகுபதந் தன்னில் வாங்கி
நன்ருக வடித்துவைத்துச் சொல்லக் கேளே.

167 சொல்லுவேன் காதில்விடு சிரசில் தேய்த்து
சுடுவெந்நீர் சீயக்கா யரைப்பு மாகும்
அல்லவே கன்னேசி கன்னப் புற்று
அழற்கன்னச் சூலையொடு அரிகி ரந்தி
கொல்லவே வந்ததொரு கரப்ப னோடு
கொடுமைசெய்யும் விப்புருதி பிளவை தானும்
இல்லையே கன்னத்தி லிருபத் தொன்று
யெழுரோகங் காதிற்சீ யில்லை தானே.

| | | | |
|---|---|---|---|
| 1 | நொச்சிச்சாறு | 8 | நிலப்பனைக்கிழங்குசாறு. |
| 2 | கலியாணமுருங்கைச்சாறு | 9 | கரிசாலைச்சாறு |
| 3 | ஊமத்தையின் சாறு | 10 | தகரைச்சாறு |
| 4 | தைவேளைச்சாறு | 11 | பெருங்குரும்பைச்சாறு |
| 5 | பச்சைமஞ்சள்சாறு | 12 | வெள்ளைப்பூண்டுச்சாறு |
| 6 | இஞ்சிச்சாறு | 13 | துளசிச்சாறு |
| 7 | வாழைக்கிழங்குச்சாறு | | |

இவை வகைக்கு கால்படி

மேற்கண்ட சாறுகளுடன் நல்லெண்ணெய் இரண்டுபடி கலக்கவேண்டும். மேலும் சுக்கு, மிளகு, திப்பிலி, சித்திரமூலம், நாய்க்கடுகு, கோட்டம், இந்துப்பு ஆகிய இவற்றை வகைக்கு இரண்டு கழஞ்சு வீதம் எடுத்து அரைத்து அப்பாண்டந்தன்னில் இட்டுக்காய்ச்சி நாலாம் நாளில் மெழுகு பதத்தில் இறக்கி வடித்துக் கொள்ள வேண்டும். இத்தைலத்தைக் காதில்விட்டு, தலையில் தேய்த்து சீயக்காய், அரைப்பு தேய்த்து வெந்நீரில் குளிக்கவேண்டும்.

**தீரும் நோய்கள்:** கன்னேசி, கன்னப்புற்று, கன்னச்சூலை, அரிகிரந்தி, கரப்பன், விப்புருதி, பிளவை ஆகியவையும் கன்னத்தில் வருகின்ற இருபத்தொரு வகை நோய்களும் காதில் வருகின்ற சீழும் தீரும்.

## 38. அதிகரணத்தைலம்

168 தானென்ற விடாச்சுரங்க ளெல்லாந் தீரும்
சாற்றுவேன் அதிகரணத் தயிலந் தன்னை
ஏனென்ற வெருகினுடைக் கிழங்கு தண்டு
இலையுடனே பலம்பத்து இன்னங் கேளு
தேனென்ற குறுந்தொட்டி அமுக்கி ராவேர்
சீந்திலொடு சாரணைவேர் வகையொன் றுக்கு
மானென்ற பல மூன்று யிடித்துப் பாண்ட
மதிலிடுவாய் தண்ணீரு மரக்கால் நாலே.

169 நாலுமே குறுக்கியது படிதான் ரெண்டு
நல்லாவின் அஸ்திமத்து படிதான் ரெண்டு
சாலவே வெள்ளாட்டுப் பால்தான் ரெண்டு
தன்னிலிடு நல்லெண்ணெய் படிதான் ரெண்டு
ஏலமே கற்கமது சுக்குச் சீந்தில்
இலவங்க மிந்துப்புக் குக்கில் தானும்
போலுமே சாரணைவேர் மதுரங் கோஷ்டம்
புகழ்வசம்பு மஞ்சிட்டி முத்தக் காசே.

170 முத்தமொடு சிற்றரத்தை தேவ தாரம்
மும்மஞ்சள் சிறுகீரை வேர்கி ராம்பு
சிற்றுமுட்டி வில்வவேர் அமுக்கி ராவேர்
திப்பிலியுஞ் சந்தனமும் விலாமிச் சம்வேர்
பத்தியுடன் நன்னாரி மிளகி னோடு
பார்லவங்கப் பத்திரியும் வகையொன் றுக்கு
குற்றமது யில்லாமற் கழஞ்சி யொன்று
குறையாம லாட்டினுடைப் பாலி லாட்டே.

171 ஆட்டியே கரைத்துவிட்டு அடிபற் றுமல்
அடுப்பேற்றிக் கிண்டியே சிறுதீ யாக
மூட்டியே மெழுகுபத மாகும் போது
மும்மதத்தோன் பூசைசெய்து வடித்துக் கொண்டு
தீட்டியே சீயக்கா யரைப்பு வெந்நீர்
திறமாக மூழ்கிவரத் தீரும் நோய்கள்
கேட்டியேல் வாதசுர பித்தசுர வெப்புங்
கிளைத்துவரும் விடசுரமு மகலுங் கேளே.

172 கேளுநீ விடாதசுர மூன்றுமாறல்
கேடுகெட்ட சதுர்சீத மிரண்டாமாறல்
தாளுநீ ஒன்றைவிட்ட மாறலோடு
சகலசுர மனைத்துந்தான் தாண்டியோடும்.

1 வெருகின்கிழங்கு, தண்டு, இலை பத்து பலம்
2 குறுந்தொட்டி
3 அமுக்கிராவேர்
4 சீந்தில்
5 சாரணைவேர்

(2–5) வகைக்கு பலம் மூன்று

இவற்றை இடித்துத் துளாக்கிப் பாண்டத்திலிட்டு, நான்கு மரக்கால் நீர்விட்டு எட்டில் ஒன்றுகக் குறுக்கிப் பின்னர் இரண்டு படி பசும்பால் வெள்ளாட்டுப் பால் இரண்டுபடி இவற்றுடன் இரண்டுபடி நல்லெண்ணெயை விட்டு வைத்துக்கொண்டு

1 ஏலம்
2 சுக்கு
3 சீந்தில்
4 இலவங்கம்
5 இந்துப்பு
6 குக்கில்
7 சாரணைவேர்
8 அதிமதுரம்
9 கோட்டம்
10 வசம்பு
11 தேவதாரம்
12 மஞ்சிட்டி
13 சிற்றரத்தை
14 கறிமஞ்சள்
15 மரமஞ்சள்
16 முத்தக்காசு
17 கஸ்தூரி மஞ்சள்
18 சிறுகீரைவேர்
19 சிற்றுமுட்டிவேர்
20 வில்வவேர்
21 அமுக்கிராவேர்
22 திப்பிலிவேர்
23 சந்தனம்
24 விலாமிச்சம்வேர்
25 நன்னாரி
26 மிளகு
27 இலவங்கப்பட்டை
28 கிராம்பு

இவற்றை வகையொன்றிற்கு ஒரு கழஞ்சு வீதம் எடுத்து ஆட்டுப்பால் விட்டுக்கரைத்து மேல் சொல்லப்பெற்ற தாழியில் ஊற்றி அடுப்பிலேற்றி மூடிக் கிண்டி சிறுதீயிட்டுக்காய்ச்சி மெழுகு பதம் வரும்போது இறக்கி வைத்துக் கொள்க.

**பயன்படுத்தும் முறை:** தலைமூழ்க வேண்டும். மூழ்குவதற்கு சிகைக்காய், அரைப்பு வெந்நீர் இவற்றைப் பயன்படுத்துதல் நன்று.

**தீரும் நோய்கள்**: வாதசுரம், பித்தசுரம், விடசுரம். ஒன்றைவிட்டு ஒரு நாள் இரண்டைவிட்டு ஒரு நாள், மூன்றை விட்டு ஒரு நாள் நான்கைவிட்டு ஒரு நாள் வருகின்ற முறை சுரங்கள், மற்றும் எல்லாவகைச் சுரங்கள்.

## 39 சீதேவித் தைலம்

வாளுநீ சீதேவித் தயிலங்கேளு
மைந்தனே சீதாசெங் கழுநீர்ச்சாறு
நாளுநீ படிமூன்று அளந்துவிட்டு
நல்லெண்ணெய் படிமூன்று கூடவாரே.

173 கூடவே கற்கமது மதுரங்கோஷ்டம்
குணமாக இலவங்கப் பட்டையேலந்
தேடவே மஞ்சிட்டி கடுகுரோகணியுஞ்
செண்பகப்பூ சந்தனமு மிலாமிச்சம்வேர்
சாடவே தண்ணீர்விட்டான் கிழங்குமுத்தந்
தாமரையின் வளையங்கத் தூரிமஞ்சள்
நாடவே செங்கழுநீர்க் கிழங்கிளேடு
நன்னாரி வெட்டிவேர் நவிலுந்தானே.

174 நவிலவே விராகனெடை வகைக்குமூன்று
நன்றாக யிடித்தரைத்து எண்ணெய் சேர்த்துக்
கவிலவே தோய்ந்து பத மெழுகுமானால்
கலசத்தில் வடித்துநீ முழுகும்போது
தவிருமே விடாச்சுரமுங் கொதிப்பும் வெப்புந்
தண்ணீரின் தாகமொடு சண்டிக்காய்ச்சல்
புவியிலே வந்தசுரம் இருபத்துநாலும்
பொல்லாத சுரங்களெல்லாம் நில்லாதென்னே.

| | | |
|---|---|---|
| 1 | சீதாசெங்கழுநீர்ச்சாறு | மூன்று படி |
| 2 | நல்லெண்ணெய் | மூன்று படி |

இவற்றுடன்

| | | | |
|---|---|---|---|
| 1 | அதிமதுரம் | 9 | விலாமிச்சம்வேர் |
| 2 | கோட்டம் | 10 | தண்ணீர்விட்டான்கிழங்கு |
| 3 | ஏலம் | 11 | கோரைக்கிழங்கு |
| 4 | இலவங்கப்பட்டை | 12 | தாமரைவளையம் |
| 5 | மஞ்சிட்டி | 13 | கஸ்தூரி மஞ்சள் |
| 6 | கடுகுரோகிணி | 14 | செங்கழுநீர்க்கிழங்கு |
| 7 | செண்பகப்பூ | 15 | நன்னாரிவேர் |
| 8 | சந்தனம் | 16 | வெட்டிவேர் |

வகைக்கு மூன்று விராகனெடை எடுத்துக்கொண்டு அரைத்துச் சேர்த்துக்கொண்டு காய்ச்சி மெழுகு பதத்தில் வரும் போது மற்ருெரு கலயத்தில் வடிகட்டி வைத்துக்கொண்டு தலை மூழ்கிவருக.

**தீரும் நோய்கள்**: முறை சுரங்களும், மற்றும் 24 சுரங்கள், விடாச்சுரம். கொதிப்பும், வெப்பும், தண்ணீர்த் தாகமும், சண்டிக் காய்ச்சலும் நீங்கும்.

## 40 ஏரண்டத் தைலம்

175 என்னவே மகோதரமும் நீராம்பல் தீர
இயம்புவே னேரண்டத் தயில மொன்று
பன்னவே முடக்கொற்ருன் சமூலங் கேளு.
பலமுப்ப தாகுமே சிற்ரு முட்டி
துன்னவே பதினைந்து பலந்தா னப்பா
சொல்சிற்ரு மணக்குவே ரதனிற் பாதி
முன்னவே முள்ளிவே ரிலவம் பட்டை
முருங்கைவேர்ப் பட்டையொடு சிவதை தானே.

176 சிவதைவேர் வீழியொடு முதியார் கூந்தல்
செம்முள்ளி கொடிவேலி தேவ தாரம்
நுவலவே நெருஞ்சிவேர் தண்ணீர் விட்டான்
நோக்கில்வெள்ளைச் சாரணைவேர் கழல் பருப்பு
நவலவே கொள்ளுடனே வகையொன் றுக்கு
நாட்டுவாய் பலமூன்று யிடித்துப் போட்டு
தவருமல் தண்ணீரெண் குறுணி விட்டுத்
தான்குறுக்கி யெட்டொன்ரு யிறுத்தி டாயே.

177 இறுத்திட்ட கஷாயமது படிதா ளுலு
இலைக்கள்ளிச் சதுர மாங்கள்ளிப் பாலும்
பிறித்திட்டுப் படிகாலா யளந்து விட்டு
பெருமைபெறும் ஆவின்பால் படிதா ளுலு
குறுத்திட்ட தேங்காய்ப்பால் படிதா ளுலு
குறையாதுத் தாமணிசாறு படி நாலு
சிறுத்திட்ட ஏரண்டத் தெண்ணெய் நாலு
திறமான பேய்க்கொம்மட்டிச் சாறு நாலே.

178 சாறுடனே யெண்ணெய்பால் கஷாயத் தோடு
தாழிகளில் விட்டுநீ சலித் திடாமல்
ஊறிடவே மூன்றுநா ளான பின்பு
உத்தமனே கற்கவகை யுரைக்கக் கேளு

வீறுடனே திரிகடுகு சித்திர மூலம்
மேலான சாதிக்காய் செவிய மேலம்
கூறிடவே பெருங்காயம் வசம்பு ஓமம்
கொத்தமல்லி சதகுப்பை யிந்துப் பென்னே.

179 இந்துவொடு பொட்டிலுப்பு அமுக் கிராவேர்
இயலான அதிமதுரம் லவங்கப் பட்டை
முந்துசடா மாஞ்சில்வா லுழுவை தானும்
மொழியரத்தை பாலைவேர் சிற்ற ரத்தை
கந்தமடா நன்னாரி அகிலி னோடு
கண்டதிப் பிலிவகைக்குக் கழஞ்சு மூன்று
அந்தமுடன் அரைத்திட்டு உலர வைத்து
ஐந்தாநாள் மெழுகுபதந் தன்னில் வாங்கே.

180 வாங்கியே தேகபலந் தன்னைக் கண்டு
மைந்தனே உள்ளுக்குக் கொடுத் தாயானால்
தேங்கியே யிருந்த நீர்க் கட்டெல் லாமும்
செணத்திலே பேதியினால் வாங்கும் பாரு
ஏங்கியே திரியாதே மிளகு நீரு
மிளங்கோழிச் சாறுகுங் கொள்ளு மாகுந்
தாங்கியே தீருநோய் மகோ தரங்கள்
செய்யு மஷ்டகுன்மங்கள் தவிருந் தானே.

181 தானென்ற விஷபாகங் கவுசி கெண்டை
தான்வெப்புப் பாவையொடு அகுவை தானும்
வேனென்ற நீராம்பல் பெருவயிற்றி னோடு
விப்புருதி பாண்டுவுட னிளைப்பு ரோகம்
கோனென்ற உதிரக்கட் டாலே வந்து
கொடுமைசெய்யும் நோயெல்லாம் குடிபோம் பாரு
ஊனென்ற உடம்புக்குள் தலைக்குள் தேய்க்க
உத்தமனே பிணிநில்லா தோடுந் தானே.

| | | |
|---|---|---|
| 1 | முடக்கொற்றான் சமூலம் | முப்பது பலம் |
| 2 | சிற்றாமுட்டி | பதினைந்து பலம் |
| 3 | சிற்றாமணக்குவேர் | ஏழரைப் பலம் |
| 4 | முள்ளிவேர் | |

| | | | |
|---|---|---|---|
| 5 | இலவம்பட்டை | 12 | கொடிவேலி |
| 6 | முருங்கைவேர் | 13 | தேவதாரம் |
| 7 | முருங்கைப்பட்டை | 14 | நெருஞ்சிவேர் |
| 8 | சிவதை | 15 | தண்ணீர்விட்டான்கிழங்கு |
| 9 | வீழி | 16 | வெள்ளைச்சாரணைவேர் |
| 10 | முதியார்கூந்தல் | 17 | கழற்சிப்பருப்பு |
| 11 | செம்முள்ளி | 18 | கொள் |

இவை வகைக்கு மூன்று பலம்

**செய்முறை:** இவற்றை எடுத்துத்தூளாக்கி எட்டு மரக்கால் நீர்விட்டுக் காய்ச்சி எட்டொன்றாக்கி வடிகட்டி அந்தக் (4படி) குடிநீரில் இலைக்கள்ளிப்பால், சதுரக்கள்ளிப்பால் இவற்றை வகைக்கு கால்படி விட்டு மேலும் பசுவின்பால் நான்குபடி, தேங்காய்ப்பால் நான்குபடி, உத்தாமணிச்சாறு நான்குபடி, ஏரண்டத்தெண்ணெய் நான்குபடி, பேய்கும்மட்டிச்சாறு நான்குபடி இவற்றையெல்லாம் மேற்சொல்லப்பெற்ற குடிநீருடன் ஊற்றி மூன்றுநாள் ஆனபின்பு

| | | | |
|---|---|---|---|
| 1 | சுக்கு | 14 | அமுக்கிராவேர் |
| 2 | மிளகு | 15 | அதிமதுரம் |
| 3 | திப்பிலி | 16 | இலவங்கப்பட்டை |
| 4 | சித்திரமூலம் | 17 | சடாமாஞ்சில் |
| 5 | செவ்வியம் | 18 | வாலுழுவை |
| 6 | ஏலம் | 19 | அரத்தை |
| 7 | பெருங்காயம் | 20 | பாலைவேர் |
| 8 | வசம்பு | 21 | சிற்றரத்தை |
| 9 | ஓமம் | 22 | சந்தனம் |
| 10 | கொத்துமல்லி | 23 | நன்னாரி |
| 11 | சதகுப்பை | 24 | அகில் |
| 12 | இந்துப்பு | 25 | கண்டதிப்பிலி |
| 13 | பொட்டிலுப்பு | | |

இந்தச் சரக்குகளை வகைக்கு மூன்று கழஞ்சு வீதம் எடுத்துக் கொண்டு அரைத்து அதனுடன் சேர்த்துக் காய்ச்சி மெழுகுபதத்தில் இறக்கிவைத்துக் கொள்ள வேண்டும். உடல்வலிமைக்குத் தக்கவாறு உள்ளுக்குக் கொடுத்து வருக.

**அளவு:** கால் தோலா.

**துணை மருந்து:** மிளகுக்குடிநீர், இளந்தோழிக்குடி நீர், கொள்ளுக்குடி நீர்.

**தீரும் நோய்கள்**: நாட்பட்ட பித்தநீர், மகோதரங்கள், எண்வகைக்குன்மங்கள், கவுசி, கெண்டை, வெப்புப்பாவை, அகுவை, நீராம்பல், பெருவயிறு, விப்புருதி, பாண்டு, இளைப்புநோய், உதிரக்கட்டினால் வரும் நோய்கள்.

**குறிப்பு**: இத்தைலத்தைத் தலையிலும் உடலிலும் தேய்த்து மூழ்கலாம்.

## 41. செம்பிரத் தைலம்

182 தானான செம்பிரத் தயிலங்கேளு
தலைக்குத்துக் கரப்பனொடு சூலைதீர
மானான செம்பிர இலையின்சாறும்
மகிழ்சாறு அவுரியொடு துளசிச்சாறுந்
தேனான சங்கினுடைப் பழத்தின் சாறுஞ்
செப்புபுளி யிலைநாரத் திலையின் சாறுங்
கானான ஆற்றரளி இலையின் சாறுங்
கணக்குடனே வகைக்குவகை படிசாறுமே.

183 சாறான எட்டுவகைச் சாறுங்கூட்டி
தனிப்பசுவின் பாலதுவும் படிதான்ரெண்டு
கூறான நல்லெண்ணெய் படிதான்ரெண்டு
கூடவிட்டுத் தாழிதனிற் கற்கங்கேளு
வீறான சாதிக்கா யேலங்கோஷ்டம்
மேலான மும்மஞ்சள் குங்குமப்பூ
ஈறான பச்சிலையும் விலாமிச்சம்வேரும்
இருவேலி அதிமதுர மழிஞ்சிவித்தே.

184 வித்தான கடுகுதிரி பலைமஞ்சிட்டி
மிகுலவங்கப் பட்டையொடு லவங்கப்பத்திரி
சத்தான அழிஞ்சிவேர்ப் பட்டைதானுஞ்
சந்தனமு மகிலோடு மிளகுங்கூட்டி
சித்தான சிவப்புச் சந்தனத்தினோடு
சேரவே வகைவகைக்கு கழஞ்சியொன்று
முத்தான பால்விட்டு மைபோலாட்டி
முன்தயிலந் தனில்விட்டு அடுப்பிலேற்றே.

185 ஏத்தியே மெழுகுபத முதிரும்போது
யிறுத்திடுவாய் கலசத்தி லின்னங்கேளு
தேத்தியே தயிலமதைத் தேய்த்து நீயுஞ்
சீயக்காய் அரைப்புவெந்நீர் மூழ்கச்சொல்லு

சாத்தியே பத்தியந்தான் தயிர்பால்மோராம்
தணித்துவரைப் பருப்போடு பழநெய்யாகும்
மாத்துவாய் புகையிலையும் புளியுந்தள்ளு
மைந்தனே ஒன்றைவிட்டு ஒருநாள்மூழ்கே.

186 மூழ்கையிலே வெந்நீரைப் பரிமாற்றங்கள்
மொழிகிறேன் தீருநோய் கபாலகுஷ்டம்
வாழ்க்கையிலே வெட்டையொடு கபாலக்குத்து
மண்டையிடி பீனிசமோ ராறுந்தீரும்
தாழ்க்கையிலே குட்டத்தில் கிரந்திதீரும்
தலையில்வெடி சிரங்குடனே கபாலச்சூலை
சூழ்கையிலே கபாலத்தில் கரப்பான்வாய்வு
தும்மலொடு மூக்குநீர்ப் பாய்ச்சல்போமே.

187 போமப்பா கபாலத்தில் தினவுகூடப்
புழுவெட்டு மயிருதிர்தல் பொடுகுந்தீரும்
ஓமப்பா மயிர்கறுத்து வளரும்பாரு
உத்தமனே நயனத்தி லுறுத்தல்தீருந்
தாமப்பா சிரசிலய்ய பித்தமெல்லாந்
தட்டுண்டு போகுமடா தயிலந்தன்னில்
நாமப்பா சொல்லிவிட்டோ மிந்தநூலில்
நல்லோர்கள் அறிந்துசெய்ய நன்மையாமே.

1 செம்பிருவிலைச்சாறு
2 மகிழிலைச்சாறு
3 அவுரியிலைச்சாறு
4 துளசிச்சாறு
5 சங்கன்பழச்சாறு
6 புளியிலைச்சாறு
7 நாரத்தையின் இலைச்சாறு
8 ஆற்றலரியிலைச்சாறு

வகைக்கு 1 படி

9 பசும்பால் இரண்டு படி
10 நல்லெண்ணெய் இரண்டு படி

இவற்றை ஒரு தாழியில் இட்டு

1 சாதிக்காய்
2 ஏலம்
3 கோட்டம்
4 மரமஞ்சள்
5 கறிமஞ்சள்
6 கடுகு
7 கடுக்காய்
8 நெல்லிக்காய்
9 தான்றிக்காய்
10 மஞ்சிட்டி

11 கத்தூரிமஞ்சள்
12 குங்குமப்பூ
13 பச்சிலை
14 விலாமிச்சம்வேர்
15 இருவேலி
16 அதிமதுரம்
17 அழிஞ்சிவித்து
18 இலவங்கப்பட்டை
19 இலவங்கப்பத்திரி
20 அழிஞ்சிவேர்ப்பட்டை
21 சந்தனம்
22 அகில்
23 மிளகு
24 செஞ்சந்தனம்

ஆகிய இவற்றை வகைக்கு ஒரு கழஞ்சுவீதம் பால்விட்டு மைபோல் அரைத்து மேற்சொல்லப்பெற்ற தாழியில் இட்டு அடுப்பேற்றிக் காய்ச்சி மெழுகுபதத்தில் இறக்கி மற்றொரு கலத்தில் வடித்துக் கொள்ள வேண்டும். தைலம் தேய்த்து முழுக சிகைக்காய், அரைப்பு, வெந்நீர் இவற்றைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

**பத்தியம்:** தயிர், பால், மோர், துவரம்பருப்பு, பழம், நெய் ஆகும். புகையிலை, புளி இவை ஆகா. ஒரு நாள்விட்டு ஒரு நாள் தலை முழுக வேண்டும்.

**தீரும் நோய்கள்:** கபால குட்டம், வெட்டை, கபாலக் குத்து, மண்டையிடி, ஆறுவகைப் பீனிசங்கள், கிரந்தி, தலையில் வருகின்ற வெடிசிரங்கு, கபாலச்சூலை, கபாலக்கரப்பன், வாயு, தும்மல், மூக்குநீர்பாய்ச்சல், கபாலத் தினவு, புழுவெட்டு, மயிர்உதிர்தல், பொடுகு, கண்உறுத்தல், சிரசில், அதிகரித்த ஐயம், பித்தம்.

மயிர் கறுத்து வளர்ச்சியடையும்.

## 42 புடத் தைலம்

188 நன்மையில்லாப் பவுத்திரங்கள் பிளவைக் கெல்லாம்
நலமாகும் புடத்தயிலம் நவிலக் கேளு
வன்மையில்லா யனிதனுடை மண்டை யோடு
வளர்சிற்று மணக்குமுத்து புங்க முத்து
தன்மையில்லா யிலுப்பைவிரைப் பருப்புங் கூட்டி
சாற்றுபுளி மரத்தினுடை வயிரச் சீவல்
புன்மையில்லா திந்தவகை மருந்து ஐந்தும்
பொருந்தவகை ஒன்றுபலம் ஐம்ப தாமே.

189 ஐம்பதுதா னிறுத்திடித்துத் தூளதாக்கி
ஆட்டுவாய் புங்கன்வேர்ப் பாலைவிட்டு
தென்பதால் பாக்குபோல் வில்லைதட்டித்
திறமாக ரவிதனிலே காய்ந்தபின்பு
இன்பமாய் பானைதனி லடைத்துக் கொண்டு
என்மக்காள் வேம்புபுங்கு குச்சிதன்னைப்
பண்பதாய் மேல்பரப்பிப் பானைவாய்க்குப்
பலக்கவே சட்டிகொண்டு கவிழ்த்துமூடே.

190 மூடினதோர் சட்டிநடுத் தமர்தான்மூன்று
முன்னிட்டுச் சீலைமண்செய் துலர்ந்த பின்பு
நாடினதோர் குழிவெட்டிப் பழக்கஞ் செய்த
நற்கலசந் தனில்வைத்துக் கலசவாயில்
தேடினதோர் மருந்தடைந்த பாண்டஞ்சட்டி
சேரடா தமர்க்கலச நடுமய்யத்தில்
கூடினதோர் தமரிட்ட சட்டித்தூரு
கூறுவோங் கலசவாய் கூட்டித்தானே.

191 கூட்டியே சாணிமண்ணும் பிசைந்துஅப்பிக்
கொடுந்தீயாய் சாமமட்டு மெரித்தாயானல்
காட்டியே பானையடி சிவந்துபோனல்
கனலாறிக் குளிர்ந்தபின்பு பிரித்துப்பாரு
நீட்டியே கீழ்க்கலசந் தயிலம் நிற்கும்
நினைவாக வெடுத்தந்தத் தயிலந்தன்னில்
பூட்டியே சமன்சிற்று மணக்குஎண்ணெய்
புகட்டியே நீர்சுண்டக் காய்ச்சு காய்ச்சே.

192 காய்ச்சியே குப்பிதனி லடைத்துக்கொண்டு
கருத்துடனே யிருக்குமந்தப் பாண்டத்திட்டு
வாச்சுதே அதில்தயிலம் விட்டுமைந்தா
வாயில்வே யாங்குழலை வைத்துக்கட்டி
பாச்சவே புரைவாயில் குழல்வாய் சேர்த்து
பதருமலதைப்பித்துக்கத் தயிலஞ்சென்று
போச்சுதே புரைகளற்றுப் புண்ணுமாறிப்
போகுமே கண்களிலுந் தடவச் சொல்லே.

193 சொல்லவே யொன்றைவிட்டு வொருநாள்பாய்ச்சு
துயர்தீரும் வியாதியின்னஞ் சொல்லக்கேளு
அல்லவே புரையோட்டம் பவுத்திரங்கள்
அரையாப்பு விப்புருதி கண்டமாலை
செல்லவே பிளவைதொடை வாழைகுட்டந்
தீருமே மூலப்புற்று ஒடுவைப்புண்கள்
கொல்லவே வருமமொடு விப்புருதிமுதலாய்
கொண்டபலவிரணங்க ளெல்லாம் போமே.

194 போகுமே புண்புரைகள் எல்லாந்தீரும்
புரைவாயில் பஞ்சுவைத் தடைக்கவேண்டும்.
சாகுமே ஆறுதஅழி புண்கனெல்லாந்
தடவவே யுலருமடா சாற்றக்கேளு
ஏகுமே புளிபுகை கரப்பன்பண்டம்
ஏற்றுதே சடுதியிலே யிடுக்கண்தீரும்
ஆகுமே பத்தியந்தான் அறிந்து செய்தால்
அவர்களுக்குப் பிணிநில்லா தகலுந்தானே.

1 மனிதமண்டையோடு
2 சிற்றாமணக்குப் பருப்பு
3 புங்கன் பருப்பு
4 இலுப்பைப் பருப்பு
5 வயிரம்பாய்ந்த புளியமரத்தின் பட்டை

வகைக்கு ஐம்பது பலம்

இவற்றை எடுத்து இடித்துத்தூளாக்கி, புங்கன்வேர்ப்பாலை விட்டு அரைத்துப் பாக்குபோல் வில்லை தட்டி வெயிலில் காய வைக்கவேண்டும். பின்பு அவற்றை ஒரு பானையில் அடைத்து வேம்பு, புங்கு இவற்றின் குச்சிகளை அதன் வாய் மேல் பரப்பி அதன் மேல் மேற்சட்டி கொண்டு கவிழ்த்து மூடிச் சீலைமண் செய்ய வேண்டும். மருந்திட்ட கலசத்தின் அடிப்பாகத்தில் மூன்று தொளை போட வேண்டும். இதற்கு ஏற்றாற் போன்று ஒரு குழி வெட்டி அதில் ஒரு பழகிய மண்சட்டியை அமைத்து முன் மருந்து கலசத்தைக் கீழ் சட்டியில் பொருந்துமாறு அமைக்க வேண்டும். பொருத்துவாயை சாணியும் மண்ணும் பிசைந்து நன்றாகப் பூசி, மெழுகி, பிறகு அடிச்சட்டியும் மருந்துச் சட்டியின் அடிப்பாகமும் மறையும் அளவுக்கு மண்ணைத்தூர்த்து ஒரு சாமம் கொடுந்தீயால் அடிப்பானை சிவக்குமளவு எரிக்க வேண்டும். ஆறிய பிறகு பிரித்துப்பார்த்தால் கீழ்க்கலசத்தில் தைலம் இறங்கி

நிற்கும். அத்தைலத்திற்கு சமன் அளவு சிற்றுமணக்கெண் ணெயைக் கலந்து நீர்சுண்டக் காய்ச்சி ஒரு குப்பியில் அடைத்து வைத்துக் கொள்ளவேண்டும்.

**பயன்படுத்தும்முறை:** தக்க கருவிகள் மூலம் தைலத்தைப் புரைகளின் உள்ளே செலுத்தவேண்டும். புரைபுண்களின் வாயி லும் இத்தைலத்தைத் தடவவேண்டும். இவ்வாறு ஒரு நாள் விட்டு ஒரு நாள் செய்து வரவேண்டும். புரைவாயிலில் பஞ்சு வைத்து அடைக்கவேண்டும்.

**தீரும் நோய்கள்:** புரையோட்டம், பவுத்திரங்கள், அரை யாப்பு, விப்புருதி, கண்டமாலை, பிளவை, தொடைவாழை, குட் டம், மூலப்புற்று, ஒடுவைப்புண்கள், ஒடுவிப்புருதி, பலவகை விரணங்கள், புண்புரைகள், ஆறாத அழிபுண்கள்.

**பத்தியம்:** புளி, புகையிலே, கரப்பான் பண்டங்களை நீக்க வேண்டும்.

## 43. உள்ளியெண்ணெய்

195 அகலுமே உள்ளியா மணக்கினெண்ணெய்
அறைகிறேன் வெள்ளுள்ளி பலநூறப்பா
புகலுவேன் யெண்குறுணி சலந்தான்விட்டு
புண்ணியனே எட்டொன்றாய்க் குறுக்கிவாங்கி
நிகழவே பிசைந்துவடித் திறுத்துக்கொண்டு
நினைவாகப் பசுவின்நீர் படிதான்ரெண்டு
இகல்சிற்று மணக்கெண்ணெய் படியிரண்டு
இதில்சதுரக் கள்ளிப்பா லுரியுஞ்சேரே.

196 சேர்த்துநீ பாண்டத்தி லூறும்போது
சேர்ப்பதற்குக் கற்கவகை தேவதாரம்
போர்த்துநீ வசம்புகோட்ட முருங்கைவேர்த்தோல்
புங்கன்வேர் கருங்கொள்ளு சித்திரமூலம்
ஏத்துநீ திரிகடுகு பெருங்காயந்தான்
இந்துப்பு பொட்டிலுப்பு வளையலுப்பும்
ஆத்துநீ திரிபலையும் ஆயில்பட்டை
ஆனைத்திப் பிலிதெசா புரமுங்கானே.

197 காணவே தகரமொடு கெந்தியுப்பு
கல்லுப்பு வகைக்கிரண்டு விராகன்போடு
தோணவே அடுப்பேற்றி எரிநேர்பாக
சொல்மெழுகு பதத்திறுத்து வடித்துக்கொண்டு
நாணவே தீருநோய் குன்மசூலை
நாடாது குடலேற்றம் பவுத்திரங்கள்
பூணவே புரையோட்டம் வெப்புப்பாவை
போம்வயிற்றி லேகுத்து வாதம்போமே.

வெள்ளுள்ளி நூறு பலம் எடுத்துக்கொண்டு அதை ஒரு பாண்டத்திட்டு எட்டு மரக்கால் நல்ல நீர் விட்டு அதை அடுப் பேற்றி எரித்து எட்டில் ஒன்ருய்க் குறுக்கி வாங்கி, வெள்ளுள்ளி யைக் கையினுல் நன்ருக பிசைந்து வடிகட்டி இறுத்துக் கொண்டு அதனுடன் இரண்டுபடி பசுவின் நீர், இரண்டுபடி சிற்ருமணக்கு எண்ணெய், ஒரு உரி (அரை நாழி) சதுரக்கள்ளிப்பால் ஆகிய வற்றையும் சேர்த்து ஊறும்படி செய்ய வேண்டும்.

1 தேவதாரம்
2 வசம்பு
3 கோட்டம்
4 முருங்கைவேர்ப்பட்டை
5 புங்கன்வேர்
6 கருங்கொள்
7 சித்திரமூலம்
8 சுக்கு
9 மிளகு
10 திப்பிலி
11 பெருங்காயம்
12 இந்துப்பு
13 பொட்டிலுப்பு
14 வளையலுப்பு
15 கடுக்காய்
16 நெல்லிக்காய்
17 தான்றிக்காய்
18 ஆயில்பட்டை
19 யானைத்திப்பிலி
20 தெசாபுரம்(திப்பிலிமூலம்)
21 தகரம்
22 கெந்தியுப்பு
23 கல்லுப்பு

ஆகிய இவற்றை வகைக்கு இரண்டு வராகனெடை எடுத்துக் கொண்டு கற்கமாக அரைத்து மேற்கூறப்பெற்ற பாண்டத்திலிட்டு அடுப்பேற்றி எரித்து மெழுகுபதத்தில் இறக்கிக்கொள்ள வேண்டும்.

**அளவு:** ½ – 1 அவுன்சு

**தீரும்நோய்கள்;** குன்மசூலை, குடலேற்றம், பவுத்திரங் கள், புரையோட்டம். வெப்புப்பாவை, வயிற்றிலேவரும் குத்துவாதம்.

## 44. பீனிசத்திற்கு நசியம்

198 போமென்ற பீனிசங்கள் தீருதற்கு
புகலுவேன் நசியமொன்று கோட்டமேலம்
ஆமென்ற குங்குமப்பூ லவங்கப்பட்டை
அதிமதுரங் கருஞ்சீரம் லவங்கப்பத்திரி
தாமென்ற விராகனெடை யொன்றுதூக்கி
தனிப்பசுவின் பாலரைக்கால் படிவிட்டாட்டி
ஓமென்ற மாதளம்பூச் சாறவ்வீதம்
உத்தமனே பசுவின்நெய் படியரைக்கால்வாரே.

199 வாரப்பா எரிமெழுகு பதமதானல்
வாங்கியே நசியமிடு பீனிசமோராறும்
சேரப்பா பித்தத்தால் தலைக்குத்தெல்லாந்
தீருமே கண்சிவப்பு நயனவாதம்
பாரப்பா நீர்ப்பில்லம் விழியெரிச்சல்
பறக்குமடா சிறுசூடாய் தாரை விட்டால்
நேரப்பா தேன்கலந்து விட்டுவாநீ
நேரறிந்து வைத்தியந்தா னிலைக்கச்செய்யே.

1 கோட்டம்
2 ஏலம்
3 குங்குமப்பூ
4 இலவங்கப்பட்டை
5 அதிமதுரம்
6 கருஞ்சீரகம்
7 இலவங்கப்பத்திரி

வகைக்கு ஒரு வராகனெடை

இவற்றைப்பசுவின்பால் அரைக்கால் படி விட்டு அரைத்து எடுத்து அதனுடன் மாதளம்பூச்சாறு, பசுவின்நெய் ஆகியவற்றை வகைக்கு அரைக்கால் படி சேர்த்து அடுப்பேற்றி எரித்து மெழுகு பதத்தில் இறக்கிக்கொள்ள வேண்டும்.

**பயன்படுத்தும் முறை**: இத்தைலத்தை நசியமகப் பயன் படுத்தவேண்டும்.

**தீரும் நோய்கள்**: ஆறுவகைப்பீனிசங்கள், பித்தத்தால் ஏற்படும் தலைக்குத்து, கண்சிவப்பு, கண்வாதம், நீர்ப்பில்லம், கண்எரிச்சல்.

கண்வியாதிகளுக்குத் தேன் கலந்து சிறிது சூடு பண்ணிக் கண்ணில் தாரைவிடவேண்டும்.

## 45. வச்சிர கபாடமாத்திரை

200 செய்யடா கிராணி அதி சாரம்போக
செப்புகிறேன் வச்சிரமாங் கபாடந்தன்னை
அய்யடா சாதிலிங்கம் அபின்வெண்காரம்
அதிவிடயஞ் சாதிக்காய் மிளகுசுக்கு
பெய்யடா முள்ளிலவம் பிசினுஞ்சேர்த்துப்
பெருமரத்துப் பட்டை காட் டாத்திப்பூவும்
மெய்யடா சமனிறுத்துக் கல்வத்திட்டு
வில்வவேர் குடசப்பாலே வேர்த்தோலாமே.

201 வேரடா முத்தக்கா சரசம்பட்டை
மேலசிறு காஞ்சொறிவேர் வெவ்வேறுகப்
பாரடா கஷாயமிட்டுச் சாமஞ்சாமம்
பதறும லரைத்தபின்பு அடைபோல்தட்டிச்
சீரடா ஓட்டிலிட்டு அடுப்பிலேற்றி
திறமாக வெந்தயத்தின் கஷாயங்குத்து
வாரடா அடைபிரட்டிச் சாமங்குத்தி
மைந்தனே அரைத்துருட்டி வகையைக் கேளே.

202 கேளடா கஞ்சாவின் சாறிட்டாட்டி
கெடியாகச் சிறுகண்டைக் காய்மட்டுந்தான்
தாளடா நிழலுலர்த்தி வைத்துக் கொண்டு
தப்பாம லனுபான மறிந்து செய்தால்
வேளடா தசக்கிராணி அதிசாரங்கள்
விரைந்தோடும் விமலனு ருமைக்குச்சொன்னர்
நாளடா உலகத்தி லுள்ளபேர்க்கு
நானுரைத்தேன் பிணியகலும் நன்மைதானே.

| | | | |
|---|---|---|---|
| 1 | சாதிலிங்கம் | 6 | மிளகு |
| 2 | அபின் | 7 | சுக்கு |
| 3 | வெண்காரம் | 8 | முள்ளிலவம் பிசின் |
| 4 | அதிவிடயம் | 9 | பெருமரத்துப்பட்டை |
| 5 | சாதிக்காய் | 10 | காட்டாத்திப்பூ. |

| | | | |
|---|---|---|---|
| 1 | வில்வவேர் | 4 | அரசம்பட்டை |
| 2 | குடசப்பாலே வேர்ப்பட்டை | 5 | சிறுகாஞ்சொரிவேர் |
| 3 | கோரைக்கிழங்கு | 6 | சமன் அளவு |

ஆகிய இவற்றைத் தனித்தனியே கஷாயமிட்டு ஒவ்வொரு கஷாயத்திலும் மேற்கூறப்பெற்ற சரக்குகளை ஒவ்வொரு சாமம் அரைத்து, அடைபோல் தட்டிக்கொள்ள வேண்டும். அதை ஒரு சட்டியிலிட்டு அடுப்பேற்றி வெந்தயத்தின் கஷாயத்தை ஊற்றி அடையைப் புரட்டிப் புரட்டி ஒரு சாமநேரம் வேகவைக்க வேண்டும். பின்பு கஞ்சாவின் சாறுவிட்டு அரைக்கவேண்டும். சிறு சுண்டைக்காயளவு மாத்திரைகளாக உருட்டிக் கொண்டு நிழலில் உலர்த்திக் கொள்ள வேண்டும்.

**தீரும் நோய்கள்**: தக்க துணை மருந்துகளில் கொடுக்க தசக் கிராணி அதிசாரங்கள் தீரும்.

### 46. யாத்திரைபோக

203 நன்மைகளாந் திசைநோக்கி யாத்திரைபோக
ஞாயிறுதான் முதலாகச் சனியீறுக
தின்மைகளாஞ் சூலமொன்று நம்மைக்கேட்டார்க்கு
திசைநாடி போகவென்றால் செப்பக்கேளு
தன்மைகளாங் குருவாரங் கடிகையெட்டு
சனியிரவி கடிகையிரு பதுதான்மைந்தா
உண்மையா மதிவெள்ளி பனிரண்டாகும்
உத்தமனே புதன் செவ்வாய் பதினாறுமே.

204 பதிநாடி மானிடர்கள் செல்லும்போது
பருதியது உதயமே முதலதாக
வதிநாடி முன்னுரைத்த கடிகைதன்னில்
வழிநடக்க நன்றென்று வழுத்துவோம்பார்
விதிநாடு மிதிற்சூல மில்லையில்லை
விமலனு ருரைத்தபடி விளங்கக் கேளு
அதினாலே திசைநான்கில் சூலைதோஷம்
அணுகாது யென்றுசொல்லி அறைந்திட்டேனே.

### 47. வில்வாதி இளகம்

205 அறைந்திடவே வில்வாதி லேகியத்தைக்கேளு
அப்பனே வில்வவேர் பட்டைதள்ளி
செறிந்திடவே நடுத்தண்டு பலமுப்பதாகும்
திறமாக நொறுக்கியிடி பாண்டத்திட்டு

நிறைந்திடவே துாணிசலந் தன்னைவிட்டு
நீகுறுக்கிப் படிநாலு வடித்துக்கொண்டு
உறைந்திடவே பனைவெல்லம் பலத்தைக்கேளு
உத்தமனே முப்பதுதான் கரைத்துக் காய்ச்சே.

206 காய்ச்சுவாய் பாகுவரும் பருவந்தன்னில்
கனமிளகு நான்குபலம் சுக்குமூன்று
பாய்ச்சுவாய் செவியமது பலம்ரெண்டாகும்
பருந்தெசா புரம்ரெண்டு பலந்தானப்பா
ஆச்சுதே திப்பிலிதான் பலமுமுக்கால்
ஆகுந்தாளிச பத்திரியோன் றரையாமப்பா
பேச்சுதோ கொடிவேலிவேர்ப் பட்டையொன்று
பின்புசிறு நாகப்பூ பலமொன்றுமே.

207 ஒன்றாக யெட்டுவகை மருந்துமப்பா
உறுதிபதி னைந்தேகால் பலமுமாச்சு
குன்றாம லிடித்துவஸ்த்திர காயஞ்செய்து
கொட்டியே கிண்டிலே கியமாம்போது
நன்றாக யிறக்கியே ஆறவிட்டு
நல்லதேன் படியொன்று விட்டுக்கிண்டி
அன்றாடந் தான்றிக்கா யளவ தாக
அந்திசந்தி யுண்ணவே யகலும் நோயே.

208 நோயேது பாண்டுபித்தம் சோகைவாந்தி
நுவலிளைப்பு இருமலதி சாரந்தானும்
வாயேது உடம்பிளைப்பு குன்மம்வாய்வு
மைந்தனே அக்கினிமந்த மும்போகும்பாரு
நீயேது முண்ணுதே புளிபுகையுந்தள்ளி
நின்றுவிடு சையோகம் நினைக்கொண்ணுது
தீயேது காமத்தீ சேர்ந்ததாலல்
தீராது பிணியொன்றும் தீராதென்னே.

வில்வவேரின் மேல்பட்டையை நீக்கி நடுத்தண்டு முப்பது பலம் எடுத்து நொறுக்கி இடித்து ஒரு பாண்டத்திட்டு நான்கு மரக்கால் நீர்விட்டு அதை எட்டொன்றாய்க்குறுக்கி வடிகட்டிக் கொண்டு முப்பதுபலம் பனைவெல்லத்தைக் கரைத்துக் காய்ச்சிப் பாகுபதத்தில் அதனுடன்

| | | |
|---|---|---|
| 1 | மிளகு | நான்குபலம் |
| 2 | சுக்கு | மூன்றுபலம் |

| | | |
|---|---|---|
| 3 | செவ்வியம் | இரண்டுபலம் |
| 4 | திப்பிலிமூலம் | இரண்டுபலம் |
| 5 | திப்பிலி | முக்கால் பலம் |
| 6 | தாளிசப்பத்திரி | ஒன்றரைப்பலம் |
| 7 | கொடிவேலி வேர்ப்பட்டை | ஒரு பலம் |
| 8 | சிறுநாகப்பூ | ஒரு பலம் |

இந்த பதினைந்தேகால் பலம் எடை மருந்தையும் இடித்துத் துணியில் வடிகட்டி கொட்டிக் கிண்டி லேகியமாக்கி இறக்கி வைத்துக் கொள்ள வேண்டும். ஒரு படி தேனை அதில் விட்டுக் கிண்ட வேண்டும்.

**அளவு:** தான்றிக்காயளவு காலை மாலை உண்ண வேண்டும்.

**தீரும் நோய்கள்**: பாண்டு, பித்தம், சோகை வாந்தி, இளைப்பு நோய், இருமல், உடல் இளைப்பு, குன்மவாயு, அக்கினி மந்தம்,

**பத்தியம்**: புளி, புகையிலை, உடலுறவு கூடாது.

## 48. மகா சிந்தாதி இளகம்

209 தீராத பாண்டுகா மாலைதீர
செப்புமகா சிந்தாதி லேகியந்தான்
தோராத புளியிலைச்சாறு தூணியொன்று
சுற்றிவருங் கடுக்காயு மாறுருகும்
சாராத சிவதைவேர் முள்ளிவேருஞ்
சாரணைவே ரவுரிவேர் முத்தக்காசு
பாராத மஞ்சளொடு சித்திரமூலம்
பாதிரிவேர் முன்னைவேர் வில்வவேரே.

210 வில்வக்காய் தூதுவளை கீழ்க்காய் நெல்லி
வேருடனே பெருவாகை குமிழம் வேரும்
செல்லத்தான் சங்கம்வேர் வேப்பம்பட்டை
சித்தமல்லி நெருஞ்சிவேர் நாயுருவிவேருஞ்
சொல்லத்தா னூசிமல் லிகையின் வேருந்
தொடர்வட்டத் திருப்பிவேர் பேராமல்லி
மெல்லத்தான் கறிமுள்ளி கண்டங்காரி
வேருடனே வகைவகைக்குப் பலந்தான்பத்தே.

211 பத்தான மருந்திடித்துச் சாற்றில்போடு
பசுவினீர் பதினாறு படியும்வாரு
சத்தான யிரும்புபல முந்நூ றிட்டு
தனிற்கிட்டம் நூறுபலந் தகர்த்துப்போடு
முத்தான ஆற்றுநீர் தூணிவாரு
முடாவிலிட்டு அடுப்பேற்றித் தீயைமூட்டு
சித்தான கணபதியைப் பூசைபண்ணித்
தினமேழு சென்றபின்பு குறுக்கிடாயே.

212 குறுக்கியே படியாறு வடித்துக்கொண்டு
குருவேர்பேய்த் தும்பையும் மஞ்சள்தானும்
நறுக்கியே பனங்கதிரும் புளியம்விரைத்தோடு
நாட்டில்முள்ளிக் கீரைத்தண் டதுவுங்கேளு
நொறுக்கியே புரசுடனே யேழுஞ்சுட்டு
நு வல்வகைக்கே யொருபடியாஞ் சாம்பல்வாங்கி
இறுக்கியே தாழிவாய் வேடு கட்டி
ஏழுபடி சாம்பலிட்டுத் தண்ணீர்வாரே.

213 வாரப்பா படிநாலு கஷாயத்தோடு
வார்த்துவிடு சாறுவகை குப்பைமேனி
சாரப்பா நீர்ப்பிரமி நொச்சிசங்கு
சாரணையுங் கல்லுருவி அவுரிச்சாறு
நேரப்பா சதுரக்கள்ளி சாறுவகையொன்று
நினைவாகப் படிரெண்டு கூடவாரு
பேரப்பா நாரத்தம் பழத்தின்சாறு
பிசகாமல் படிநாலு கூடவாரே.

214 கூடவே பனைவெல்லம் பலமறுபதாகும்
கொட்டியே பாகுவரும் பருவந்தன்னில்
நாடவே பசுவின்நெய் படிதானென்று
நல்லெண்ணெய் படியொன்று பாகில்சேரு
ஊடவே கற்கவகைப் பொடிதான் சேரு
ஒன்றுசுத்தி செய்துகரி சாலைச்சாற்றில்
ஆடவே சாமமொன்று வறுப்புச்சாமம்
அப்படியே மூன்றுதர மடங்கச்செய்யே.

215 செய்யடா பொடிபண்ணி வைத்துக்கொண்டு
திரிகடுகு தகரமொடு தேவதாரம்
வய்யடா இலவங்கப் பட்டை ஓமம்
வாய்விளங்க மேலம்இல வங்கப்பத்திரி

மெய்யடா கரியசீ ரகமிந்துப்பு
மிக்கசீ ரகந்தெசா புரத்திஞேடு
பய்யடா திரிபலையும் வகையொன்றுக்குப்
பலமொன்று பொடிபண்ணிப் பாகில்தூ வே.

216 தூவியடி பற்றுமல் கிண்டிக் கிண்டி
துலங்குபத மெழுகாஞ விறக்கிக்கொண்டு
தாவிவிடு தேன்படிதா ஞென்றுசேர்த்து
சாரித்துப் பீங்கானி லடைத்துக்கொண்டு
ஆவலுட னந்திசந்தி தான்றிக்காயி
னளவுண்ணத் தீருநோ யறையக்கேளு
நாவியடி விக்கநீர்க் கோர்வையோடு
நாடாது பெருவீக்கங் கிராணிபாண்டே

217 பாண்டுடனே விடபாகஞ் சோகைகுன்மம்
படிவீக்கம் கடிவீக்கம் பறந்துபோகும்
வேண்டுடனே காமாலை உப்பிசங்கள்
மிகுபித்த வாதமொடு சயபாண்டெல்லா
மூண்டுடனே தீருமடா மோசமில்லை
மூலத்தின் ரத்தமொடு மூலப்பாண்டு
பூண்டுடனே தீருமது பொய்யெண்ணுதே.
புளிக்கசப்பு மாற்றிவிடு புனிதமாமே.

| | | | |
|---|---|---|---|
| 1 புளியிலைக்கொழுந்துச்சாறு | இரண்டுமரக்கால் | | |
| 2 வரிக்கடுக்காய் முப்பத்தாறு | | 15 கீழ்க்காய் நெல்லிவேர் | 10 பலம் |
| 3 சிவதைவேர் | 10 பலம் | 16 பெருவாகைவேர் | |
| 4 முள்ளிவேர் | ,, | 17 குழிழம் வேர் | ,, |
| 5 சாரணைவேர் | ,, | 18 சங்கம்வேர் | ,, |
| 6 கொத்தமல்லிவேர் | ,, | 19 வேப்பம்பட்டை | ,, |
| 7 கோரைக்கிழங்கு | ,, | 20 சிற்றுமல்லிவேர் | ,, |
| 8 மஞ்சள் | ,, | 21 நெருஞ்சிவேர் | ,, |
| 9 சித்திரமூலம் | ,, | 22 நாயுருவிவேர் | ,, |
| 10 பாதிரிவேர் | ,, | 23 ஊசிமல்லிகைவேர் | ,, |
| 11 முன்னைவேர் | ,, | 24 வட்டத்திருப்பிவேர் | ,, |
| 12 வில்வவேர் | ,, | 25 பேராமல்லிவேர் | |
| 13 வில்வக்காய் | ,, | 26 கறிமுள்ளிவேர் | ,, |
| 14 தூதுவளைவேர் | ,, | 27 கண்டங்கத்திரிவேர் | ,, |

இவற்றை வகைக்கு பத்து பலம் எடுத்து இடித்துத் தூளாக்கி மேற்கூறப் பெற்ற சாற்றில் சேர்த்து அதில் பசுவின்நீர் பதினறு படி, இரும்புப்பொடி முந்நூறுபலம், கிட்டம் நூறுபலம், ஆற்று நீர் இரண்டு மரக்கால் ஆகிய இவற்றை ஒரு பெரிய பாத்திரத்தில் இட்டு அடுப்பிலேற்றி ஏழுநாள் எரித்து ஆறுபடியாகக் குறுக்கிக் கொள்ள வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| 1 | வெட்டிவேர் | 5 | புளியம்விதைத்தோல் |
| 2 | பேய்த்தும்பை | 6 | முள்ளிக்கீரைத்தண்டு |
| 3 | மஞ்சள் | 7 | புரசு |
| 4 | பனங்கதிர் | | |

இவற்றை உலர்த்தி நெருப்பிலிட்டு எரித்து சாம்பலாக்கி வகைக்கு ஒரு படி சாம்பல் எடுத்துக்கொள்ளவேண்டும். ஒரு சட்டியை எடுத்துக் கொண்டு அதன் மேல் துணியால் வேடுகட்டி மேற்கூறப்பெற்ற ஏழுபடி சாம்பலைப் போட்டு தக்க அளவு நீர் ஊற்றவேண்டும். இந்த சட்டியிலுள்ள சாம்பல் நீருடன் குறுக்கப் பட்ட குடிநீர் நான்குபடி, குப்பைமேனிச்சாறு, நீர்ப்பிரம்மிச் சாறு, நொச்சிச்சாறு, சங்கன்சாறு, சாரணைச்சாறு, கல்லுருவிச் சாறு, அவுரிச்சாறு, சதுரக்கள்ளிச்சாறு இவற்றை வகைக்கு இரண்டு படியும் நாரத்தம் பழச்சாறு இரண்டு படியும் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| 1 | சுக்கு | 9 | ஏலம் |
| 2 | மிளகு | 10 | இலவங்கப்பத்திரி |
| 3 | திப்பிலி | 11 | கருஞ்சீரகம் |
| 4 | தகரம் | 12 | இந்துப்பு |
| 5 | தேவதாரம் | 13 | சீரகம் |
| 6 | இலவங்கப்பட்டை | 14 | திப்பிலிமூலம் |
| 7 | ஓமம் | 15 | கடுக்காய் |
| 8 | வாய்விளங்கம் | 16 | நெல்லிக்காய் |
| | | 17 | தான்றிக்காய் |

ஆகிய இவற்றை வகைக்குப் பலமொன்று எடுத்துக் கொள்ள வேண்டும். இவற்றை கரிசாலைச்சாற்றில் இட்டுச்சுத்தி செய்து பின்பு கரிசாலைச் சாற்றில் அரைத்து ஒரு சாமம் வறுக்க வேண் டும். இவ்வாறு மும்முறை செய்து உலர்த்திப் பொடி பண்ணிக் கொள்ள வேண்டும்.

பனைவெல்லம் அறுபது பலமும் கூடப்போட்டுக் காய்ச்சிப் பாகுபதம் வரும் தருணத்தில் முன்கூறப்பெற்ற குடிநீரில் நாலு

படி, சாறுவகைகள், பசுவின் நெய் ஒரு படி, நல்லெண்ணெய் படி ஒன்று இவற்றையும் சேர்த்து மருந்து பொடிதனைத் தூவி அடிப் பற்ருமல் கிண்டி மெழுகுபதத்தில் இறக்கிக்கொண்டு ஒரு படி தேன் சேர்த்து நன்ருகக் கலந்து ஒரு பீங்கானில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

**அளவு**: தான்றிக்காயளவு காலை மாலை உண்ண வேண்டும்.

**தீரும் நோய்கள்**: கொப்பூழ்அடியில் வீக்கம், நீர்க்கோவை பெருவீக்கம், கிராணி, பாண்டு, விடபாகம், சோகை, குன்மம், படிவீக்கம், கடிவீக்கம், காமாலை, உப்பிசங்கள், பித்தம், வாயு, சயம், பாண்டு, இரத்தமூலம் மூலப்பாண்டு.

**பத்தியம்**: புளி, கசப்பு, பெண்போகம் ஆகா.

## 49. நெல்லிமுள்ளி இளகம்

218 புனிதமென்ற நெல்லிமுள்ளி லேகியத்தை
புகலுவேன் நெல்லிமுள்ளி பலமிருபதாகும்
குனிதமென்ற ஊற்றுநீர் படியெண்ணுன்கு
குறுக்கியே நாலுபடி வடித்துக்கொண்டு
வனிதமென்ற சர்க்கரையும் பலமிருபத்தஞ்சு
மாட்டியே பாகுவரும் பருவந்தன்னில்
கனிதமென்ற அதிமதுரங் கூகைநீறும்
கானமுந் திரிப்பழந்தான் கருதிடாயே.

219 கருதியே வகைக்கிரண்டு பலமதாக
கனத்தபே ரீந்திஞெடு திப்பிலியுங்கேளு
விருதிஞெடு வகையொன்று பலமூன்றப்பா
மெல்லியதாய்ப் பொடிபண்ணி பாகில்தூவு
பெருதிவிடு தேன்படிதா னரையுங்கூட்டிப்
பேசாதே கிண்டியெடு புன்னைக்காய்ப்போல்
அறுதிகொடு அந்திசந்தி தீருநோய்கேள்
அப்பனே வாந்திபித்த மகலுந்தானே.

220 அகலுமே காமாலை பித்தம்பாண்டு
அழற்சியொடு வறட்சிதிமிர் வாதசோகை
புகலுவேன் நீர்ச்சுருக்குப் பித்தகுன்மம்
போகுமே உடம்பெரிவு போகுங்காண்டி
இகலுமே புளியோடு கைப்புந்தள்ளு
இருபதுநாட் கொள்ளவெல்லா விடருந்தீருஞ்
சகலமே பிராணிதனக் குபசாரங்கள்
தான்செய்தால் கர்மவினை தீருந்தானே.

இருபது பலம் நெல்லிமுள்ளியை எடுத்துக்கொண்டு முப்பத்திரண்டுபடி நல்ல நீரை ஊற்றி அடுப்பிலேற்றி எரித்து நான்கு படியாகக் குறுக்கி அதில் இருபத்தைந்து பலம் சர்க்கரை சேர்த்துக் காய்ச்சி பாகு வருகின்ற பக்குவத்தில் 1. அதிமதுரம், 2. கூகை நீறு, 3. திராட்சை ஆகியவற்றை வகைக்கு இரண்டு பலம் வீதமும் 1. பேரீந்து, 2. திப்பிலி ஆகியவற்றை வகைக்கு மூன்று பலம் வீதமும் எடுத்துப் பொடி செய்து தூவி சேர்த்துக் கிண்டி அரைப்படி தேன்விட்டுக் கலக்கவேண்டும்.

**அளவு**: புன்னைக்காயளவு காலை மாலை.

**தீரும் நோய்கள்**: பித்தவாந்தி, காமாலை, பித்தபாண்டு, அழற்சி, வறட்சி, திமிர்வாதம், சோகை, நீர்ச்சுருக்கு, பித்த குன்மம், உடம்பெரிச்சல்.

**பத்தியம்**: புளி, கைப்புந்தள்ள வேண்டும்.

இவ்வாறு இருபது நாள் உண்ட அளவிலேயே நோய்கள் தீரும். சீவப்பிராணிகளுக்கு பசாரமான புண்ணிய காரியங்கள் செய்து பழைய கர்மவினையைத் தீர்த்துக் கொள்ளவும்.

## 50. சரபுங்க வில்வாதி இளகம்

221 தானேகேள் சரபுங்க வில்வாதியொன்று
சயபாண்டு காமாலை காசந்தீர
மானேகேள் வில்வவேர் பட்டைதள்ளி
மைந்தனே சங்குமுக்கா வேளைவேருந்
தேனேகேள் பலமறுப தெடுத்துக்கொண்டு
சிற்றுமுட்டி பலம்பத்து சித்திரமூலங்
கானேவாழ் முள்ளிவேர் முதியார்கூந்தல்
கண்டங்கத் தரிவேருஞ் சீந்தித்தண்டு.

222 சீந்திவெள்ளைச் சாரணை பொன் முசுட்டை வேருஞ்
சிறுதேக்கு நன்னாரி விலாமிச்சம்வேர்
சேந்ததும்பி வேர்வகைக்கு பலந்தானைந்து
சீர்காட்டு மல்லிகைவேர் பலந்தான்ரெண்டு
பாந்தமுட னறுக்கியிடி பாண்டத்திட்டு
பாணிபடி முப்பத்திரண்டு விட்டு
காந்தஅனல் விட்டெரித்து படியெட்டாக்கி
**கஷாயத்தை வடிகட்டித் தாழிசேரே.**

223 தாழியில்சர்க் கரைபலந்தான் முப்பத்திரண்டு
தனைக்குறுக்கிப் பாகாக்கி கற்கங்கேளு
மாளஅரப் பொடியிரும்புக் கிட்டம்ரெண்டும்
வகைரெண்டு பலமாக வாங்கிக்கொண்டு
கேளுமிதைச் சுத்திசெய்து கரிப்பான்சாற்றில்
கெட்டியா யரைத்திடுவாய் சாமமொன்று
தூளிதனைச் சாற்றிலிட்டுக் கலக்கி ஓட்டில்
சோதிநிற மாகுமட்டும் வறுத்திடாயே.

224 வறுத்ததனைப் பொடிசெய்து வைத்துக்கொண்டு
மைந்தனே திரிகடுகு லவங்கப்பட்டை
கறுத்தகருஞ் சீரகமுஞ் சிறுநாகப்பூ
கண்டத்திப் பிலியரத்தை சித்திரமூலஞ்
சிறுத்ததொரு குரோசாணி கொத்தமல்லி
செவ்வியஞ்சீரகமோமங் கிராம்பு கோஷ்டம்
குறித்ததா ளிசபத்திரி இந்துப்பேலங்
குலக்கனியும் பத்திரியுங் குறையாதென்னே.

225 என்னவிந்த வகையொன்று விராகனெடையெட்டு
யெடுத்திடித்து வடிகட்டி பாகில்தூவு
தன்னையடி பற்றுமல் கிண்டிநீயுந்
தான்மெழுகு பதமாறு லிறக்கியாற்றி
சின்னமில்லை யரைப்படி தேன் விட்டுக்கிண்டித்
தின்னவே அந்திசந்தி தீருநோய்கேள்
மன்னவந்த சயபாண்டு வாதவாய்வுக்
காமாலை சோகையொடு காசம்போமே.

226 போமப்பா பித்தமொடு வாந்திவிக்கல்
பொல்லாத மேகமொடு சோபரோகம்
நாமப்பா நடுக்கலுடன் வாந்திதானும்
நாசிகா பீடமொடு சுரமாந்தைகூட
தாமப்பா வியாதியெல்லாம் தவிர்க்கும்பாரு
சங்கற்பம் புளியுடனே புகையிலையுந்தள்ளு
ஓமப்பா பத்தியந்தா னில்லாவிட்டால்
உற்றபிணி தீராது உண்மைதானே.

1 வில்வவேர் (பட்டை நீக்கிய) கட்டை
2 சங்கன்வேர் வகைக்கு இருபது பலம்
3 முட்காய்வேளைவேர்
4 சிற்றுமுட்டி பத்து பலம்

| | | |
|---|---|---|
| 5 | சித்திரமூலவேர் | |
| 6 | முள்ளிவேர் | |
| 7 | முதியார கூந்தல் வேர் | |
| 8 | கண்டங்கத்திரிவேர் | |
| 9 | சீந்தில்தண்டு | வகைக்கு ஐந்து பலம் |
| 10 | வெள்ளைச்சாரணைவேர் | |
| 11 | பொன்முசுட்டைவேர் | |
| 12 | சிறுதேக்கு | |
| 13 | நன்னாரிவேர் | |
| 14 | விலாமிச்சம்வேர் | |
| 15 | தும்பிவேர் | |
| 16 | காட்டுமல்லிகைவேர் | இரண்டு பலம் |

இவற்றை இடித்து ஒரு பாண்டத்திட்டு முப்பத்திரண்டு படி தண்ணீர் விட்டு எட்டுப்படியாகக் குறுக்கி வடிகட்டி எடுத்துக் கொள்ளவும்.

ஒரு பாண்டத்தில் முப்பத்திரண்டுபலம் சர்க்கரை இட்டு பாகாக்கிக் கொண்டு அதில் 1. இரும்புக்கிட்டம், 2. அரப்பொடி இவற்றை வகைக்கு இரண்டு பலமாக எடுத்துக் கரிசாலைச் சாற்றில் ஒரு சாமநேரம் அரைத்து மீண்டும் அதே சாறுவிட்டு அடுப்பிலேற்றி செந்நிறம் ஆகும்மட்டும் வறுத்துப் பொடி செய்து கொள்ள வேண்டும். அப்பொடியையும்

1 சுக்கு
2 மிளகு
3 திப்பிலி
4 இலவங்கப்பட்டை
5 கருஞ்சீரகம்
6 சிறுநாகப்பூ
7 கண்டத்திப்பிலி
8 அரத்தை
9 சித்திரமூலம்
10 குரோசாணி ஓமம்
11 கொத்துமல்லி
12 செவ்வியம்
13 சீரகம்
14 ஓமம்
15 கிராம்பு
16 கோட்டம்
17 தாளிசபத்திரி
18 இந்துப்பு
19 ஏலம்
20 சாதிக்காய்
21 சாதிப்பத்திரி

இவற்றை வகைக்குஎட்டு வராகனெடை எடுத்து இடித்துத் துணியில் வடிகட்டிய தூளையும் தூவி அடிபற்ருமல் கிண்டி மெழுகு பதத்தில் இறக்கி சிறிது ஆறியபின்தேன் அரைப்படி சேர்த்து நன்ருகக் கிண்டி எடுத்து வைத்துக்கொள்ள வேண்டும்.

**அளவு:** இரண்டு முதல் நான்கு கிராம்வரையில் தினம் இரு வேளை.

**தீரும் நோய்கள்:** இரைப்பு நோய், பாண்டு, வாதவாயு, காமாலை, சோகை, இருமல், பித்த வாந்தி, விக்கல், மேகம், சோபநோய், வாந்தியினால் ஏற்படும் நடுக்கல், நாசிகாபீடம், சுரமாந்தம்

**பத்தியம்:** புளி, புகையிலை நீக்கவேண்டும்.

## 51. வலிப்புக்கு நசியம்

227 உண்மையாய் வலிப்பதுதான் பனிரெண்டுக்கும்
உத்தமனே நசியமொன்று உரைக்கக்கேளு
வெண்மையென்ற வெள்ளுள்ளி இலுப்பைக்கட்டி
மிருவசம்பு அவுரியிலைச் சாறுங்கூட்டி
வன்மையுட னேழுநாள் அந்திசந்தி
மைந்தனே நசியஞ்செய் வலிப்பெல்லாம்போம்
தன்மையா முருங்கைவேர்ப் பட்டையிஞ்சி
தான்முலைப்பால் சேர்த்துவிட்டால் சன்னிபோமே.

| | | |
|---|---|---|
| 1 | வெள்ளைப்பூண்டு | 1 பங்கு |
| 2 | இலுப்பைப்பிண்ணாக்கு | ,, |
| 3 | வசம்பு | ,, |

இவற்றை அரைத்து தேவையான அளவு அவுரியிலைச் சாறு கூட்டிக் கொள்ளவும்.

**பயன்படுத்தும்முறை:** ஏழுநாள் காலை, மாலை நசியம் செய்யப் பன்னிரண்டு வகை வலிப்புகள் தீரும்.

மேற்கூறிய மருந்தோடு முருங்கைவேர்ப்பட்டை, இஞ்சி இவற்றை தாய்ப்பாலில் சேர்த்து அரைத்து நசியமிட சன்னி போகும்.

## 52. சண்டமாருதமை

228 சன்னியொடு சிலேற்பனங்கள் சூலைவாய்வு
தான்தீரச் சண்டமா ருதமையைக்கேளு
பன்னுரசக் கற்பூர லிங்கம்வீரம்
பரிவான கெந்தியொடு தாளகமுஞ்சிலையு

முன்னதனைச் சுத்திசெய்து வைத்துக்கொண்டு
முழுகவிட்டு உன்னம்பால் ரவியில்வைத்துக்
குன்லியது வற்றவற்ற மேல்பால்விட்டு
கொடுரவியில் ஏழுநாள் வைத்துவாங்கே.

229 வாங்கியே எட்டியின் மரத்தின்பாலே
வலுவாக மேல்பூசி ரவியிற்போடு
தேங்கியே மூன்றுதினஞ் சென்றபின்பு
தீயிலே வாட்டியெடு கடிகைரெண்டு
ஓங்கியே வில்வக்காய் நொறுக்கியிட்டு
உத்தமனே குழித்தயில மாகவாங்கி
தாங்கியே சுருக்கி டுவாய் நான்குசாமம்
தப்பாமல் வகையொன்று கழஞ்சியொன்றே.

230 ஒன்ருகத் திரட்டியே கல்வத்திட்டு
உற்றகரு நாவியது கழஞ்சுமூன்று
குன்ருமல் திரிகடுகு வகையொன்றுக்கு
கூட்டுவாய் முக்கழஞ்சு கூடவாட்டிச்
சென்ருட ஐங்கோலத் தயிலம்விட்டுச்
சேர்த்தரைக்க நாற்சாம மெழுகாம்பாரு
நின்ருடத் தேன்விட்டுச் சாமமாட்டி
நீகொம்புச் சிமிழ்தன்னி லடைத்துக்கொள்ளே.

231 கொள்ளடா மண்டலந்தான் வாதஞ்சன்னி
கொடியசுரஞ் சூலையொடு தோஷம்போகும்
அள்ளடா அரையாப்புக் கிரந்திகுட்டம்
அண்டத்தில் பிளவைபுற்று பவுத்திரங்கள்
மெள்ளடா அனுபான மறிந்து செய்தால்
விரட்டுமடா குன்றியெடை வேகமெத்த
தெள்ளடா தினந்தோறும் அந்திசந்தி
தீர்ந்துதடா நோயனைத்துந் தீருந்தானே.

232 தீருந்தான் புகையோடு புளியுந்தள்ளு
தேகபல நோயறிந்து மருந்தையூட்டு
ஆருமே பத்தியந்தான் இருக்காவிட்டால்
அவர்பிணிகள் தீராது அறிந்துகொள்ளு
கோருந்தான் குருவினுட பதத்தை நித்தங்
குறித்துநீ வணங்கவினை குடிபோம்பாரு
சாருந்தான் கருமத்தைத் தள்ளிநீயும்
தன்மத்துக் குடம்பெடுத்துச் சாற்றநன்றே.

1 இரசகர்ப்பூரம்
2 இலிங்கம்
3 வீரம்
4 கந்தகம்
5 தாளகம்
6 மனோசிலை

இவற்றைச் சுத்தி செய்து வகைக்கு ஒரு கழஞ்சு எடுத்து மூழ்கும்படி உன்னம்பால் விட்டு வெளியில் வைத்து பால் குறையக் குறைய மேலும் பால்விட்டு வெயிலில் வைக்க வேண்டும். இவ்வாறு ஏழு நாட்கள் செய்து எட்டி மரத்தின் பாலை அதன் மேல் ஊற்றி மூன்று நாட்கள் வெயிலில் வைத்து எடுத்து, அனலில் இட்டு இரண்டு நாழிகை நேரம் வாட்டி எடுத்துக் கொள்ள வேண்டும். பின்பு வில்வக்காய்க் குழித்தைலத்தால் நான்கு சாம நேரம் சுருக்குக் கொடுக்க வேண்டும். பின்பு அதை ஒரு கல்வத்திட்டு கருநாபி மூன்று கழஞ்சு, சுக்கு, மிளகு, திப்பிலி வகைக்கு மூன்று கழஞ்சு சேர்த்து வேண்டிய அளவு ஐங்கோலத்தைலம் விட்டு நான்கு சாமம் அரைக்க மெழுகாகும். பின்பு தேன் விட்டு ஒரு சாம நேரம் அரைத்து எடுத்து சிமிழில் அடைத்துக் கொள்ள வேண்டும்.

**அளவு:** குன்றியளவு காலை, மாலை.

**துணைமருந்து:** பனைவெல்லம்

**நாளளவு:** ஒரு மண்டலம் (நாற்பது நாட்கள்)

**தீரும் நோய்கள்:** சன்னிவாதம், கொடியசுரம், சூலை, அரையாப்பு, கிரந்தி, குட்டம், பிளவை, புற்று, பவுத்திரம்.

**பத்தியம்:** புகையிலை, புளி ஆகா.

## 53 மிருத்துவாதிக் குளிகை

233 நன்றென்ற மிருத்துவாதிக் குளிகைதன்னை
நவிலக்கே ளரிதாரம் விராகனென்று
மன்றென்ற கெந்தியொடு துரிசுதுத்த
மாணுக்காள் நாவியொடு வகைமூன்றும்பார்
அன்றென்ற விராகனெடை தூக்கிக்கொண்டு
அப்பனே பாகலிலைச் சாறிட்டாட்டு
சென்றசிறு பயறளவு குளிகைசெய்து
திறமாக நிழலுலர்த்தி வைத்துக்கொள்ளே.

1 அரிதாரம் ஒரு வராகனெடை.
2 கந்தகம்

3 துரிசு
4 துத்தம்
5 நாபி

இவற்றைக் கல்வத்திட்டு பாகல் இலைச்சாறு விட்டு அரைத்து பயறு அளவு உருண்டையாக உருட்டி நிழலில் உலர்த்திக் கொள்ள வேண்டும்.

**தீரும் நோய்கள்:** சகலவகை சுரங்கள்.

**குறிப்பு:** மேற்கூறப்பெற்ற சரக்குகளை முறைப்படி சுத்தி செய்து சேர்க்க வேண்டும்.

## 54. மகாமிருத்துவாதிக்குளிகை

234 கொள்ளவே அனுபானம் அறிந்துசெய்தால்
குடிபோகுஞ் சகலசுரக் குடிலமெல்லாம்.
விள்ளவே மகாமிருத்து வாதிதன்னை
விளம்புகிறேன் வெள்ளாட்டின் பித்திைேடு
மெள்ளவே கருநாபி விராகனெடையாறு
மேவுதிரி கடுகுடனே சாதிலிங்கம்
மள்ளவே திரிபலையுங் குடுகுரோகிணியும்
அப்பனே வகையொன்று விராகனெடையாமே.

235 எடையாக நிறுத்துநீ கல்வத்திட்டு
எலுமிச்சம் பழச்சாற்ருலிரண்டுசாமம்
முடைதீர அரைத்துமுடக் கொற்றான்வித்து
முதல்மட்டு முண்டைநிழ லுலர்த்திக்கொண்டு
நடையாக அனுபான மறிந்து செய்தால்
நளிரோடு நடுக்கல்குளிர் சுரங்கள்தீரும்
விடையேறு மீசனன்று உமைக்குச் சொன்னர்
மேதினியில் மனிதருக்காய் விண்டோம்நாமே.

1 வெள்ளாட்டுப்பிச்சு — 6 வராகனெடை
2 கருநாபி — ,,
3 சுக்கு
4 மிளகு
5 திப்பிலி
6 சாதிலிங்கம்
7 கடுக்காய்
8 நெல்லிக்காய்
9 தான்றிக்காய்
10 கடுகுரோகிணி — வகைக்கு ஒரு வராகன் எடை

இவற்றை ஒரு கல்வத்திட்டு இரண்டுசாமம் எலுமிச்சம் பழச்சாற்ருல் நன்ருக அரைத்து முடக்கொற்ருன் விதை அளவு மாத்திரை செய்து நிழலில் உலர்த்தி எடுத்துக் கொள்ள வேண்டும்.

**தீரும் நோய்கள்**: நளிர்சுரம், நடுக்கல் சுரம், குளிர்சுரம்.

## 55. சீதசுராங்குசக்குளிகை

236 விண்டிடவே சீதசுராங் குசத்தைமைந்தா
வெள்ளைப் பாடாணமெடை விராகனறு
உண்டிடவே சாதிலிங்கம் விராகனடைநாலு
ஊமத்தம் வேரதனைக் கஷாயம்வைத்துக்
கண்டிடவே சாமமொன்று மைபோலாட்டி
கருதுசிறு பயறளவு உருண்டைசெய்து
கொண்டதொரு பஞ்சதாரை யிலேயோருண்டை
கொடுத்திடவே சுரமனைத்துங் குடிபோம்பாரே.

| | | |
|---|---|---|
| 1 | வெள்ளைப்பாடாணம் | ஆறு வராகனெடை |
| 2 | சாதிலிங்கம் | நான்கு ,, |

இவற்றைக் கல்வத்திட்டு ஊமத்தம் வேர்க் குடிநீரால் மை போல அரைத்துச் சிறு பயறளவு மாத்திரை செய்து கொள்ள வேண்டும்.

**துணை மருந்து**: பனை வெல்லம்

**தீரும் நோய்கள்**: எல்லாவகைச் சுரங்கள்.

**பத்தியம்**: சீனியிட்டு பாற் சோறு உண்ண வேண்டும்

## 56. அரிதாரக்குளிகை

237 குடிபோகும் பத்தியங்கேள் பசுவின்பாலுங்
கொள்ளன்னஞ் சீனியிட்டுக் குடிக்கச் சொல்லு
அடவாகச் சீதசுர மனைத்தும்போகும்.
அறைகின்றேன் அரிதாரக் குளிகைதன்னைத்
திடமாக அரிதார மெடைதான் ஐந்து
சேரடா துரிசிரெண்டு சீலைதன்னில்
இடமாகுந் தோலாந்திர மாகக்கட்டி
இருகலசந் தனிற்சுண்ணக் கல்லுப்போடே.

238 போடுநீ அமுரிவிட்டு நீற்றியாற்றி
புகழ்மூன்று தரம்நீற்றிக் கழுவிக்காய்ந்தால்
தேடுநீ கற்சுண்ண மெடைதானுலு
திறமான நாவியெடை யொன்றுபோடு
நாடுநீ கற்ருழஞ் சோற்றையிட்டு
நாழிகைமூன் றேயரைத்து உளுந்து போல
வாடிநீ உருட்டிநிழ லுலர்த்திக்கொண்டு
வட்டோடு தன்னிலிட்டு மேலுமூடே.

239 மேலோடு மிடுசீலே மண்ணுஞ்செய்து
மேலுலர்த்திக் குக்குடமாய்ப் புடமிட்டாறிச்
சேலோடு கல்வத்தி லிட்டுநாவி
சேரப்பா விராகனெடை இஞ்சிச்சாற்றில்
பாலோடு தானரைப்பாய் கடிகைரெண்டு
பசும்பச்சைப் பயற்றளவு உண்டைசெய்து
நாலோடு நிழலுலர்த்தி வைத்துக்கொண்டு
நலமான சீரகத்தை வறுத்திடாயே.

240 வறுத்துடனே பொடிபண்ணிக் குளிகையாறு
வைத்துநீ தேன்விட்டு அரைத்துக்கொண்டு
திறத்துடனே மூன்றுநா ளாறு நேரஞ்
செலுத்தினுல் சீதசுர மனைத்தும்போகும்
மறுத்திடுமே விடாச்சுரங்கள் மாறலெல்லா
மைந்தனே விடசுரமு மாறுங்கண்டாய்
வெறுத்திடவே பத்தியந்தான் பசுவின்பாலாம்
வெந்நீராந் துவரையுடைப் பருப்புமாமே.

241 பருப்பாகும் வறுத்தஉப்பு சற்றேகூட்டு
பாங்கான அரைக்கீரை முருங்கைப்பிஞ்சாம்
விருப்பமாம் வழுதலைப்பிஞ் சவரைப்பிஞ்சாம்
வெறுத்திடுவாய் புளிபுகையு மாங்கிஷங்கள்
நெருப்பாகும் பூண்டுள்ளி கடுகுமாகா
நீராட்டிப் பத்தியத்தை நிறுத்திப்போடு
திருப்பாகும் பத்தியந்தா னில்லாவிட்டால்
தீராது சொல்லிவிட்டேன் திறந்தான்காணே.

ஒரு மண்கலசத்தில் பசுவின் நீரையும் கற்சுண்ணத்தையும் இட்டு, அதில் ஐந்து பங்கு அரிதாரத்தையும் இரண்டு பங்கு துருசையும் சீலையில் முடிந்து துலாந்திரமாகக் கட்டி எரிக்க வேண்டும். இவ்வாறு மூன்று முறை செய்து நீற்றிக் கழுவி

உலர்த்திக் கொள்ளவேண்டும். இத்துடன் நான்கு பங்கு கற் சுண்ணம், ஒரு பங்கு நாபி சேர்த்து கற்றாழைச் சோற்றையிட்டு மூன்று நாழிகை (72 நிமிடங்கள்) நன்றாக அரைத்து உளுந்து அளவு மாத்திரை செய்து நிழலில் உலர்த்திக் கொள்ள வேண்டும்.

இதை ஓட்டிலிட்டு மேலோடுகொண்டு மூடி சீலைமண் செய் துலர்த்தி குக்குட புடமிட்டு ஆறியவுடன் கல்வத்திட்டு ஒரு வராகனெடை நாபி சேர்த்து இஞ்சிசாற்றில் பால் கூட்டி இரண்டு நாழிகை நேரம் நன்கு அரைத்து பச்சைப் பயறளவு மாத்திரை செய்து நிழலில் உலர்த்தி வைத்துக் கொள்ள வேண் டும்.

**அளவு:** ஒரு மாத்திரை வீதம் காலை மாலை உண்ண வேண்டும்.

**துணை மருந்து:** சீரகத்தை வறுத்து சூரணித்து தேனுடன் கலந்து கொடுக்க வேண்டும்.

**உண்ணும் நாளளவு:** மூன்று நாள்.

**தீரும் நோய்கள்:** சீதசுரம், விடா சுரம், மாறல்சுரம் நச்சு சுரம்.

**பத்தியம்:** பசுவின்பால், வெந்நீர், துவரம்பருப்பு, அரைக் கீரை முருங்கைப்பிஞ்சு.

**ஆகும் பொருள்கள்:** கத்தரிப்பிஞ்சு, அவரைப்பிஞ்சு, ஆகி யவை ஆகும். உப்பை வறுத்துச் சிறிதளவு கூட்டிக் கொள்ளவும்.

**ஆகாப்பொருள்கள்:** புளி, புகை, மாமிசம், பூண்டு, வெங்காயம், கடுகு.

## 57. அரிதாரக்குளிகை (வேறு)

242 திறமான குளிர்சுரங்க ளனைத்துந்தீர
செப்புகிறே னரிதாரக் குளிகையொன்று
நிறமான கற்சுண்ணங் கழஞ்சிநாலு
நிறுத்திடுவாய் கணக்கென்ன மிளகுநாலு
அறமான அரிதாரம்சுத்தி பண்ணி
அப்பனே கழஞ்சிரெண்டு கல்வத்திட்டு
உறமான கோழிமுட்டை வெண்கருவிலாட்டி
உத்தமனே தூதளங்கா யுண்டையாக்கே.

243 உண்டைபண்ணி நிழலுலர்த்தி வைத்துக்கொண்டு
உத்தமனே அனுபான மறிந்துசெய்தால்
கொண்டதொரு சுரமனைத்தும் குடிபோம்பாரு
கூட்டாதே புளிபுகையு மோர்நெய்யுந்தள்ளு
கண்டபல தீனிதனக் காசையானால்
கடுகவே தோடமொடு சன்னியுண்டாம்
அண்டரொடு முனிவர்பிணிக் கரனார்முன்னாள்
அம்பிகையாள் தனக்கருளு மருளுமாமே.

| | |
|---|---|
| சுத்தி செய்த அரிதாரம் | இரண்டு கழஞ்சு |
| கற்சுண்ணம் | நான்கு ,, |
| மிளகு | நான்கு (எண்ணிக்கை) |

இவற்றை ஒரு கல்வத்திட்டு கோழிமுட்டை வெண்கருவிட்டு நன்கு அரைத்து தூ தளங்காய் அளவு மாத்திரைகளாகச் செய்து நிழலில் உலர்த்தி எடுத்துக் கொள்ள வேண்டும்.

**துணை மருந்து:** சீரகச்சூரணம், தேன்கூட்டிக் கொடுக்க வேண்டும்.

**தீரும் நோய்கள்:** எல்லாவகை சுரங்கள்.

**பத்தியம்:** புளி, புகையிலை, மோர், நெய் ஆகியவைகளை நீக்க வேண்டும். பத்தியம் தவறினால் சன்னிதோடம் உண்டாகும்.

## 58. அரிதார வெள்ளை மாத்திரை

244 அருளுவோஞ் சகலசுரந் தீரவென்றால்
அரிதார வெள்ளைமாத் திரைதானப்பா
வெருளவே அரிதாரம் விராகன்ஐந்து
மேலான துரிசிரெண்டு நாவியொன்று
மிரளவே கற்சுண்ணம் விராகனெடைநாலு
வேறான கற்றாழஞ் சாற்றிலாட்டி
மருளவே துவரையள வுண்டைசெய்து
மைந்தனே நிழலுலர்த்தி வகையைக் கேளே.

245 வகைகேளு ஓட்டிலிட்டு ஓடுமூடி
மண்செய்து காடையென்ற புடத்தைப்போடு
தொகைகேளு ஆறவிட்டு எடுத்துக்கொண்டு
சுகமாகச் சீரகமும் விராகனெடை மூன்று

வகைகேளு வறுத்துநீ பொடிதான்செய்து
பாய்ச்சுவா யதிலாறு குளிகைதன்னை
முகமாரு தேன்விட்டு மைபோலாட்டி
மூன்றுநா ளந்திசந்தி ஈந்திடாயே.

| | |
|---|---|
| சுத்தித்த அரிதாரம் | ஐந்து விராகனெடை |
| துரிசு | இரண்டு ,, |
| நாபி | ஒரு ,, |
| கற்சுண்ணம் | நான்கு ,, |

இவற்றைக் கல்வத்திட்டு கற்றாழைச் சாறுவிட்டு நன்றாக அரைத்து துவரையளவாக மாத்திரை செய்து நிழலில் உலர்த்திக் கொள்ளவேண்டும்.

இதை ஓட்டிலிட்டு மேலோடு கொண்டு மூடிச்சீலை மண் செய்துலர்த்திக் கொண்டு காடைப் புடமிட்டு ஆறவிட்டு எடுத்துக் கொள்ளவேண்டும்.

**அளவு**: ஒரு மாத்திரை வீதம் இரு வேளை.

**துணை மருந்து**: மூன்று வராகனெடை சீரகத்தை வறுத்து சூரணித்து தேன்கலந்து அதில் ஆறு மாத்திரைகளை இட்டு அரைத்து ஆறுபங்காக்கி ஒரு நாளைக்கு இரண்டுபங்கு வீதம் மூன்று நாளைக்குக் கொடுக்க வேண்டும்.

**தீரும் நோய்கள்**: வாத பித்த தொந்தத்தால் வந்த மாறல் சுரங்கள்.

## 59. நாசிகாபரண-சன்னிவிடசுரத்திற்கு

246 ஈந்திடவே வாதபித்தத் தாலேவந்த
இடம்கெட்ட மாறலென்ற சுரங்களெல்லாம்
மாய்ந்திடவே வந்தசுர மெல்லாம் தீரும்.
மாறலுக்கு நாசிகா பரணங்கேளு
காய்ந்திடவே காவியொடு துரிசு நேராய்
கல்வத்தில் பொடிசெய்து வைத்துக்கொண்டு
சாய்ந்திடவே பணவெடைதான் மூக்கிலூது
சகலசுர மாறலெல்லாம் தரியாதென்னே.

247 தரியாது நாலுநாள் மாறலோடு
தான்மூன்று மாறலெல்லாஞ் சமுத்திரமே போகும்.
பிரியாத சன்னிவிட சுரத்துக்கப்பா
பேருன வேளைவேர்ச் சுரசம்வாங்கிச்
சரிபாகம் இஞ்சியதன் சுரசஞ்சேர்த்து
தானுன திரிகடுகு பொடியுங்கூட்டி
உரியாகத் தேன்கழஞ்சி விட்டேயீந்தா
லோடுமே சன்னிவிட சுரமும்பாரே.

சுத்தி செய்த நாவி, துருசு இரண்டையும் சமபங்கு எடுத்துக் கல்வத்திட்டுப் பொடி செய்து கொள்ள வேண்டும்.

**பயன்படுத்தும் முறை**: பணவெடை தூளை எடுத்து மூக்கில், ஊதிச் செலுத்தவேண்டும்.

**தீரும் நோய்கள்**: எல்லாவகை மாறல் சுரங்கள்

### சன்னிவிட சுரத்திற்கு

நல்வேளைவேர்ச் சுரசம் இஞ்சிச்சுரசம் இவற்றைச் சமஅளவு எடுத்து தக்கஅளவு திரிகடுகுப் பொடியுங்கூட்டி கழஞ்சு தேன் சேர்த்துக்கொடுக்க சன்னிவிட சுரம் குணமாகும்.

## 60 திருநேத்திரமை

248 சுரத்தின்மேல் வரும்வாத தோஷத்தோடு
சுரதோடந் திரிதோடம் பிரமதோடம்
உரத்துவருந் தோடமெல்லா மொழிவதற்கு
உரைக்கின்றேன் திருநேத்திர மைதானப்பா
விரித்தசடை அரன்விந்து விராகனெடைரெண்டு
வெடிதேங்கா யோடுசுட்ட கரிதான்ரெண்டு
கரித்தகடல் வித்ததனைச் சுத்திசெய்து
கனக்கவிடு விராகனென்று கல்வத்தாட்டே.

249 ஆட்டையிலே பனைவெல்லம் விராகன்ரெண்டு
அப்பனே தேங்காய்ப்பால் விட்டுஆட்டு
தீட்டியல்லோ மையெடுத்துச் சிமிளில்வைத்துச்
சிறப்பாகப் பணவெடைதான் நாக்கில்தேய்த்து
நாட்டையிலே வெந்நீர்சற் றீந்தாயானல்
நலமாகத் திருநோய் நவிலக்கேளு
ஓட்டுமே சுரதோடம் விக்கல்வாந்தி
ஓடுகிற மேல்மூச்சு ஏங்கல்போமே.

250 போமடா மதிமயக்கம் விடங்கள்பித்தம்
பொல்லாத திரிதோடம் விருமதோடம்
நாமடா சிலேட்டுமமும் சருவதோடம்
நஞ்சுகொண்ட தோடமுட னுதிரதோடம்
ஆமடா நஞ்சுவிட மென்பதெல்லாம்
அகலுமே சுகசன்னி தோடத்தோடு
ஓமடா மலக்கட்டுத் தீருந்தீரும்
உமைக்கரனு ருரைத்தபடி உண்மைதானே.

| | | |
|---|---|---|
| 1 | இரசம் | இரண்டு வராகன் எடை |
| 2 | தேங்காய் ஓடுசுட்ட சாம்பல் | இரண்டு வராகன் எடை |
| 3 | சுத்தி செய்த முத்து | ஒரு விராகன் எடை. |

இவற்றை ஒரு கல்வத்திட்டு அரைத்துக்கொண்டு அதில் இரண்டு வராகன் எடை பனைவெல்லம் சேர்த்து தேவையான அளவு தேங்காய்ப் பால் விட்டு நன்ருக அரைத்து எடுத்து வைத்துக் கொள்ள வேண்டும்.

**பயன்படுத்தும் முறை**: பண எடை அளவு நாக்கில் தேய்த்து வெந்நீர் குடிக்க வேண்டும்.

**தீரும் நோய்கள்**: சுரம், விக்கல், வாந்தி, மேல்மூச்சு, ஏங்கல் (இரைப்பு நோய்) விடங்கள், பித்தம், திரிதோடம், விரும தோடம், கபம், எல்லாவகை தோடங்கள், உதிர தோடம், நஞ்சுவிடம், சுகசன்னி, மலக்கட்டு.

## 61. மகாசுராங்குசக்குளிகை

251 உண்மைமகா சுராங்குசத்தை யுரைக்கக்கேளு
உமைவிந்து ரசநாவி வெள்ளைதானும்
வன்மையென்ற பொன்னூமத்தை வித்திஞேடு
வகைக்கிரண்டு காசெடைதான் கல்வத்திட்டு
தன்மையா மிளகுதுவுங் கழஞ்சிபத்து
தான்சேர்த்து ஊமத்தைச் சாற்ருலாட்டி
வெண்மையாய்க் குன்றியெடை குளிகைகட்டி
மிக்கநிழ லுலர்த்திவைத்து விளம்பக்கேளே.

252 கேள்சன்னி வாதமொடு சீதசுரம் வந்தால்
கெடியான இஞ்சிரசந் தன்னிலூட்டு
தாள்பித்த சுரவிஷமாஞ் சுரத்துக்கெல்லாம்
சம்பழத்தின் சாற்றிலிடப் பித்தசுரந்தீரும்

வாள் வெந்நீ ரன்னமுங்கொள் மற்றொன்றுகா
மைந்தனே வறுத்துப்புச் சற்றேகூட்டு
சூழ்கின்ற சுரம னைத்துந் தீரவென்றால்
சுராங்குசுந்தா னின்னமொன்று சொல்லக்கே ளே.

253 சொல்லுவேன் ரசம்பச்சை நாவியோடு
தொடர்கெந்தி அரிதாரம் லிங்கம்வாளம்
வெல்லுவேன் வெண்காரந் திரிகடுகினோடு
விளங்குதிரி பலாவகைக்குக் கழஞ்சியொன்று
செல்லவே கருப்பஞ்சாறி ட்டுஆட்டிச்
சிறுபயற்றி னளவுருட்டி நிழலுலர்த்தி
அல்லவே சிமிழில்வைத்துச் சுரத்துக்கெல்லாம்
அனுபானஞ் சொல்லுகிறே னறிந்துகொள்ளே.

254 அறிந்துசுர தொந்தங்க ளெல்லா ங்கண்டு
அதிசீத சன்னிசுர மளவும்பார்த்து
முறிந்ததொரு மூலைப்பாலில் இஞ்சிச்சாற்றில்
மூலிகையின் பிட்டுகளில் துளசிச்சாற்றில்
செறிந்ததொரு திரிபலையின் கஷாயந்தன்னில்
சீரகத்தில் திரிகடுகு கஷாயமாதல்
நிறைந்ததொரு தசமூலம் பஞ்சமூலம்
நேரறிந்து குளிகையிட நில்லாதென்னே.

255 நில்லாது வெந்நீரன் னமுந்தான்கொள்ள
நிலைகெட்ட சுரமனைத்தும் நீங்கும் பாரு.

1 கந்தகம் வகைக்கு இரண்டு வராகனெடை
2 இரசம்
3 நாபி
4 வெள்ளைப்பாடாணம்
5 பொன்னூமத்தைவித்து
6 மிளகு பத்துக்கழஞ்சு

இவற்றைக் கல்வத்திட்டு ஊமத்தைச்சாறு விட்டு நன்றாக அரைத்துக் குன்றியளவதாக மாத்திரை செய்து நிழலில் உலர்த்தி எடுத்துக் கொள்ள வேண்டும்.

**துணை மருந்தும் தீரும் நோய்களும்:**

| | |
|---|---|
| இஞ்சிச்சாறு | சன்னிவாதம், சீதசுரம் |
| எலுமிச்சம்பழச்சாறு | பித்தசுரம், விடசுரம் |

**பத்தியம்:** வெந்நீரும் சோறும் கொள்ள வேண்டும். உப்பினை வறுத்துச் சிறிதளவு கூட்டிக் கொள்ளலாம்.

## 62. சுராங்குசக்குளிகை (வேறு)

| | | | |
|---|---|---|---|
| 1 | இரசம் | 8 | சுக்கு |
| 2 | பச்சைநாபி | 9 | மிளகு |
| 3 | கந்தகம் | 10 | திப்பிலி |
| 4 | அரிதாரம் | 11 | கடுக்காய் |
| 5 | இலிங்கம் | 12 | நெல்லிக்காய் |
| 6 | நேர்வாளம் | 13 | தான்றிக்காய் |
| 7 | வெண்காரம் | | |

வகைக்கு ஒரு கழஞ்சு

இவற்றை ஒரு கல்வத்திட்டு கருப்பஞ்சாறு விட்டு நன்கு அரைத்து சிறுபயறளவு மாத்திரையாக உருட்டி நிழலில் உலர்த்தி எடுத்துக்கொள்ளவேண்டும்.

**துணை மருந்து:** தாய்ப்பால், இஞ்சிச்சாறு, துளசிச்சாறு, திரிபலைக்குடிநீர், சீரகக்குடிநீர், திரிகடுகு குடிநீர், தசமூலக்குடிநீர், பஞ்சமூலக்குடிநீர்.

**தீரும் நோய்கள்:** எல்லாவகை சுரங்கள்.

**குறிப்பு:** சுரதொந்தங்களைக்கண்டு ஏற்ற துணைமருந்துகளுடன் கொடுக்க வேண்டும்.

**பத்தியம்:** வெந்நீரும் சோறும் ஆகும்.

**குறிப்பு:** முதல் ஏழுசரக்குகளையும் முறைப்படி சுத்தி செய்து கொள்க.

## 63. இங்குலாதிக்குளிகை

வல்லாது சுரத்துக்கு இங்குளாதி
மாத்திரையைச் சொல்லுகிறேன் மகிழ்ந்து கேளு
சொல்லாதே லோகபற்பங் கற்பூரபற்பந்
தேவிவிந்து சிவன்விந்து கடுகுரோாணி
பொல்லாத பேய்ச்சுரையின் விரைநேர்வாளம்
பொன்னூமத்தை விதையுடனே சிவதைவேரே.

256 வேரப்பா வெள்ளைக்கா வளையின்வேரும்
மேலான திரிகடுகு பச்சைநாவி
ஆரப்பா மால்தேவி வெள்ளைதானும்
அரிதகியும் வகையொன்று கழஞ்சிரெண்டு
பாரப்பா கல்வத்தி லிட்டுஆட்டு
பாங்கான நாகவல்லிச் சாற்றிலேழ்நாள்
சேரப்பா மிளகுத்தூள் கழஞ்செண்ணான்கு
சேர்த்தியிள வெந்நீரா லரைத்துக்கட்டே.

257 கட்டுவாய் மிளகளவு உண்டைகட்டி
கனமான நிழலுலர்த்தி இளவெந்நீரில்
அட்டியில்லா தொருகுளிகை ஈந்தாயானால்
அறுபத்து நாலுசுர மன்றேயேகும்
விட்டிடுமே யொருதரந்தான் பேதியானால்
வெந்நீரு மன்னமுந்தான் கொள்ளச்சொல்லு
தட்டிவிடும் பகலுறக்கம் வேண்டாஞ்சொன்னேன்
சபதமிட்டுச் செய்யப்பா சாற்றெண்ணுதே.

258 ஒண்ணனை திரிதோடஞ் சுரத்திஞேடு
ஓடுங்காத விடசுரங்க ளேழுந்தீரும்
பெண்ணுர்கள் சுகசன்னி சன்னிதோடம்
பெருஞ்சன்னி வாதசுரம் பிரலாபங்கள்
எண்ணுத சுரமனைத்து மில்லையில்லை
யெளிதல்ல செய்துபா ரிடுக்கண்தீருங்
கண்ணுலே திரிபுரத்தை யெரித்தஈசன்
கருத்தறிந்து தேவிசொல்லக் கண்டிட்டேனே.

1 அயபற்பம்
2 கற்பூரபற்பம்
3 கந்தகம்
4 இரசம்
5 கடுகுரோகிணி
6 பேய்ச்சுரைவித்து
7 நேர்வாளம்
8 பொன்னூமத்தைவிதை
9 சிவதைவேர்.
10 வெள்ளைக்காவளை வேர் (காவளை—பேய்த்தும்பை)
11 சுக்கு
12 மிளகு
13 திப்பிலி
14 பச்சைநாபி
15 அரிதாரம்
16 வெள்ளைப்பாடாணம்.
17 கடுக்காய்
வகைக்கு இரண்டு கழஞ்சு

இவற்றைக் கல்வத்திட்டு வெற்றிலைச்சாறுவிட்டு ஏழு நாட்கள் நன்ருக அரைத்து மிளகுத்தூள் முப்பத்திரண்டு கழஞ்சு

சேர்த்து இளவெந்நீரால் அரைத்து மிளகளவு உருண்டை செய்து நிழலில் உலர்த்திக் கொள்ள வேண்டும்.

**துணை மருந்து:** இளவெந்நீர்.

**அளவு:** ஒரு குளிகை

**தீரும் நோய்கள்:** திரிதோடசுரம், ஏழுவகை விட சுரங்கள், பெண்கூடலினுல் வரும் சுகசன்னி, சன்னிதோடம், சன்னி வாத சுரம்.

**பத்தியம்:** ஒரு தரம் பேதியானுல் வெந்நீரும் அன்னமும் கொள்ள வேண்டும். பகல் உறக்கம் கூடாது.

**குறிப்பு:** சுத்தி செய்ய வேண்டிய மருந்துகளை முறைப்படி சுத்தி செய்து கொள்க.

### 64. மகா இங்குலாதிக்குளிகை

259 கண்டபடி குளிகையொன்று மகாஇங்குலாதி
காணுநீ சாதிலிங்கம் பச்சைநாவி
விண்டபடி இந்துப்புச் சூதங்கெந்தி
வெண்காரந் திரிகடுகு கடுக்காய்கூட்டி
கொண்டபடி சிவதையெட்டி விதையினேடு
கொடிவேலி வேர்பட்டைத் தூளுங்கூட்டு
உண்டபடி இவையெல்லாம் சமனதாக
உத்தமனே சதுரக்கள்ளிப் பால்விட்டாட்டே.

260 ஆட்டியே மிளகுபோ லுருண்டைசெய்து
அப்பனே நிழலுலர்த்தி வைத்துக்கொண்டு
கூட்டியே யொருகுளிகை இளவெந்நீரில்
கொடுத்திடவே சுரங்களறு பத்துநாலுங்
கேட்டியே யாமமென்ற சூலைதீருங்
கேடுகெட்ட சுரசூலை கெடிவிட்டோடும்
நாட்டியே அன்னமொடு வெந்நீருந்தான்
நல்கிடுவாய் மற்ருென்றும் நல்கொண்ணுதே.

1 சாதிலிங்கம்
2 பச்சைநாபி
3 இந்துப்பு
4 இரசம்
5 கந்தகம்
6 வெண்காரம்
7 சுக்கு
8 மிளகு
9 திப்பிலி
10 கடுக்காய்
11 சிவதைவேர்
12 எட்டிவிதை
13 கொடிவேலி வேர்ப்பட்டை

சம அளவு

இவற்றை இடித்துச் சூரணித்து கல்வத்திட்டு சதுரக்கள்ளிப் பால் விட்டு அரைத்து மிளகளவு மாத்திரை செய்து நிழலில் உலர்த்திக் கொள்ளவும்.

**அளவு:** ஒரு குளிகை.

**துணை மருந்து:** இளவெந்நீர்.

தீரும்நோய்கள்: அறுபத்துநான்கு வகைச் சுரங்கள், ஆம சூலை, சுரச்சூலை.

**பத்தியம்:** வெந்நீரும் சோறும் உண்ணவேண்டும்.

## 65. கெடிசூரணக்குளிகை

261 நவிலவே கெடிசூரணக் குளிகையொன்று
இரசங்கெந்தி கருநாபி எட்டிக்கொட்டை
கவிலவே இருவியக்கிர காரங்கூட்டி
கனஅவுரி தாமரைக்கிழங்கு கழஞ்சுவீதம்
நுவலுவோம் வெள்ளாட்டுப் பித்திலோர்நாள்
நொறுக்கிவிட்டு ஊறவைத்து கல்வத்திட்டு
குவிமுலையா யிளகளவுந் தண்ணீர்விட்டுக்
குமுறவே சாமமரைத்து ருட்டிக்கொள்ளே.

262 உருட்டுவது வெந்தயம்போ லுருட்டிக்கொண்டு
உலர்த்திய சீரகந்தன்னி லூட்டிஞுக்கால்
வெருட்டுமுடல் வேர்வைமிகும் போர்வைபோர்த்து
வெருளாதே வேர்வைதான் மெத்தக்காணும்
மருட்டுசுரமி ரண்டுநா ழிகையில்தீரும்
மக்களே பத்தியந்தான் மோருஞ்சோறும்
புரட்டுவயி ற்றுளைவுகண்டா லவின்ருள்ளிப்
பேசாதே யனலில்வைத்துப் பெருகவீயே.

| | | | |
|---|---|---|---|
| 1 | இரசம் | 5 | இருவி |
| 2 | கந்தகம் | 6 | அக்கிராகாரம் |
| 3 | கருநாபி | 7 | அவுரி |
| 4 | எட்டிக்கொட்டை | 8 | தாமரைக்கிழங்கு |

வகைக்கு ஒரு கழஞ்சுவீதம்

**செய்முறை:** இவைகளை முறைப்படி சுத்திசெய்து எடுத்து நொறுக்கி வெள்ளாட்டுப் பித்தில் ஓர்நாள் ஊறவைத்து கல்வத்

திட்டு சிறிது நீர்விட்டு ஒரு சாமம் நன்ருக அரைத்து வெந்தயம் அளவு மாத்திரைகளாக உருட்டிக்கொண்டு நிழலில் உலர்த்திக் கொள்ள வேண்டும்.

**துணை மருந்து:** சீரகச் சூரணம் அல்லது சீரகக்குடிநீர்.

**தீரும் நோய்:** சுரங்கள்.

**பத்தியம்:** மோரும் அன்னமும் அருந்தலாம்.

**குறிப்பு:** இக்குளிகையை உண்ணுங்காலத்து வியர்வை மிக உண்டாகும். அதைக்கண்டு அஞ்சவேண்டியதில்லை. வயிற்றுளேவு கண்டால் அபினியையும் வெங்காயத்தையும் அனலில் வெதுப்பி உள்ளுக்குக் கொடுக்கலாம்.

சுரத்திஞல் வருந்துபவர்களுக்கு வியர்வை உண்டாக்கி சுரத்தை தணிக்க கொடுக்கும் மாத்திரை—கெடிசூரணக்குளிகையாம்.

### 66. நாளேயென்பான் நாயகன் குளிகை

263 பெருகவருஞ் சுரமெல்லாந் தீரவேண்டிப்
பேசுகிறேன் நாளேயென்பான் நாயகத்தை
உருகவரும் வெள்ளேப்பா ஷாணமைந்து
உற்றகொத்த மல்லியது சுரசத்திட்டு
தருகிவரு மூன்றுநாள் கல்வத்திட்டு
தானெருக்கங் கரிநாலு தன்னில்தாக்கு
பருகவரும் பச்சரிசித் தவிடுநாலு
பாய்ச்சியே கொத்தமல்லிக் கஷாயத்நாட்டே.

264 ஆட்டுவா யொருசாமம் பயறுபோலே
அப்பனே உருட்டிநிழ லுலர்த்திக்கொண்டு
கூட்டியே ஒருகுளிகை நாகவல்லிச்
சாற்றிலிடச் சகலச்சுரந் தீருந்தானே.
வாட்டியே அன்னமொடு வெந்நீராகும்
மற்ருென்று மாகாது மைந்தாபாரு
நாட்டுவே வின்னமொரு சிகிச்சையப்பா
நாளேயென்பான் நாயகத்தை நவிலொண்ணுதே.

வெள்ளேப்பாடாணம் ஐந்து கழஞ்சு எடுத்துக் கல்வத்திட்டு கொத்தமல்லிச் சுரசத்திஞல் மூன்று நாள் அரைத்து எருக்கினுடைய கரி. பச்சரிசித்தவிடு இவை வகைக்கு நான்கு கழஞ்சு

வீதம் சேர்த்துக் கொத்தமல்லிக் குடிநீரால் ஒரு சாம நேரம் நன்ருக அரைக்க வேண்டும். அவ்வாறு அரைத்தபின்பு பயறு அளவு மாத்திரைகளாக உருட்டி நிழலில் உலர்த்திக் கொள்ள வேண்டும்.

**துணை மருந்தும் அளவும்:** வெற்றிலைச்சாற்றில் ஒருகுளிகை

**தீரும் நோய்கள்:** சகல சுரங்கள்.

**பத்தியம்:** அன்னமும் வெந்நீரும் ஆகும். மற்றவைகள் ஆகா.

### 67. நாகையென்பான் நாயகன் குளிகை வேறு

265 ஒண்ணுத நத்தையது பெரிதாய்ப்பார்த்து
உத்தமனே எடுத்துவந்து மாலின்தேவி
நண்ணுது விராகன் ஐந்து நிறுத்தெடுத்து
நல்வாயைத் திறந்ததற்குள் நறுக்கியிட்டு
மண்ணுல்நற் சீலைசெய்து குப்பைமேட்டில்
வரும்பசுவின் கிடையிரண்டி லொன்றிலாதல்
எண்ணுது குழிகெல்லி வைத்துமூடி
என்மக்காள் மண்டலஞ் சென்றெடுத்திடாயே.

266 எடுத்திடுநீ மாங்கிஷமுங் காரம்ரெண்டு
மெளிதல்ல பாகலிலைச் சாற்ருலாட்டிக்
கடுத்திடுவாய் சாமமொன்று பயறுபோலே
கட்டிஉண்டை நிழலுலர்த்தி வைத்துக்கொண்டு
கொடுத்திடுநீ மிளகுஅஞ்சும் குளிகையொன்றுங்
கொடுத்துமெள்ள விழுங்கச்சொல் ஆறுநேரம்
நடுத்திடுமே சுரமென்ற தனைத்தும் ஓட
நாயகத்தின் பலமறிந்து நான்சொன்னேனே.

267 சொன்னேனுன் புழுங்கரிசிக் கஞ்சிகூட்டு
தொடராதே புளிபுகைப்பு முப்புமாகா
என்னேனு னெட்டுநாள் மட்டுஞ்சொன்னே
னிடரகலு மொன்பதா நாளில்மூழ்கு
முன்னேதான் பத்தியங்கள் பிசகாவண்ணம்
முன்சொல்லிப் பின்புநீ மருந்தையூட்டு
மன்ருகேள் பித்தங்கள் சுரங்கள் தீர
வகுத்திடுவேன் ஏலாதிக் குளிகைதானே.

ஒரு பெரிய நத்தையைக் கொண்டு வந்து ஐந்து விராகன் எடை அரிதாரத்தை எடுத்துத் தூளாக்கி அதை நத்தையின் வாயைத் திறந்து அதற்குள் வைத்து மண்ணால் சீலைசெய்து குப்பை மேட்டிலாவது பசு மாடுகளின் கிடை பூமியிலாவது குழி தோண்டி அதனுள் வைத்து மூடி ஒரு மண்டலம் சென்று எடுக்க வேண்டும்.

பின்பு எடுத்து நத்தையின் மாமிசத்தையும், அரிதாரத்தையும் பாகல் இலைச்சாற்றினால் ஒரு சாம நேரம் நன்றாக அரைத்துச் சிறு பயறளவு மாத்திரைகளாக உருட்டி உலர்த்திக் கொள்ள வேண்டும்.

**துணை மருந்தும் அளவும்:** ஐந்து மிளகுடன் ஒரு குளிகை வீதம் காலை மாலை மூன்று நாட்களுக்கு உண்ண வேண்டும்.

**தீரும் நோய்கள்:** எல்லாவித சுரங்கள்.

**பத்தியம்:** புழுங்கலரிசிக் கஞ்சி ஆகும்.

புளிப்பு, உப்பு, கைப்பும் ஆகா.

இவ்விதம் எட்டு நாள் பத்தியம் காத்து ஒன்பதாம் நாள் எண்ணெய் தேய்த்துத் தலைமுழ்க வேண்டும்.

## 68. ஏலாதிமாத்திரை

268 தானென்ற யேலமதி மதுரஞ்சுக்கு
சாதிக்காய் பொன்மெழுகு லவங்கப்பட்டை
நானென்ற சந்தனமுந் தேவதாரம்
நன்னாரி வேருடனே முத்தக்காசு
கோனென்ற ரோசனையுங் கடுகுரோணி
கோஷ்டமொடு இலுப்பைப்பூ விலாமிச்சம்வேர்
ஊனென்ற முந்திரிகை பேரீந்தோடு
உயர்ந்தசடா மாஞ்சிதிப் பிலியுமாமே.

269 ஆமடா பச்சிலையும் வகையொன்றுக்கு
அப்பனே கழஞ்சியொன்று கல்வத்திட்டுத்
தாமடா கருப்பஞ்சா றிளநீர்விட்டு
தானரைத்துச் சுண்டைக்கா யளவதாக
ஓமடா உருட்டிநிழ லுலர்த்திக்கொண்டு
உத்தமனே இளநீரை வேகவைத்து
போமடா அந்நீரில் சீனியிட்டு
புசிக்கவே குளிகையொன்று போகும்நோயே.

270 நோயேது பித்தசுரம் பித்தமெல்லாம்
நுவலவே சத்திவிக்கல் நொடிக்குள்தீரும்
நீயேது பத்தியந்தா னரையுப்பிட்டு
நேர்துவரைப் பருப்புடனே அன்னங்கொள்ளு
தாயேது பசுவின்பால் சீனியிட்டு
தான்கொள்ளச் சூடெல்லாந் தணியும் பாரு
பேயேது பைத்தியமே கொண்டபேர்க்கு
பெருங்கழுதைப் பாலிலிடு பித்தம்போமே.

| | | | |
|---|---|---|---|
| 1 | ஏலம் | 11 | கோரோசனை |
| 2 | அதிமதுரம் | 12 | கடுகுரோகிணி |
| 3 | சுக்கு | 13 | கோட்டம் |
| 4 | சாதிக்காய் | 14 | இலுப்பைப்பூ |
| 5 | மஞ்சள் மெழுகு | 15 | விலாமிச்சம்வேர் |
| 6 | இலவங்கப்பட்டை | 16 | திராட்சைப்பழம் |
| 7 | சந்தனம் | 17 | பேரீச்சம்பழம் |
| 8 | தேவதாரம் | 18 | சடாமாஞ்சில் |
| 9 | நன்னாரிவேர் | 19 | திப்பிலி |
| 10 | கோரைக்கிழங்கு | 20 | பச்சிலை. |

வகைக்கு ஒரு கழஞ்சு

இவற்றை கல்வத்திட்டு கருப்பஞ்சாறு, இளநீர் ஆகிய இரண்டாலும் தனித்தனியாக அரைத்து சுண்டைக்காயளவு மாத்திரைகளாக உருட்டி நிழலில் உலர்த்திக் கொள்ளவேண்டும்.

**துணை மருந்தும் அளவும்:** இளவெந்நீரில் சீனியிட்டு ஒரு குளிகை கொடுக்க வேண்டும்.

**தீரும் நோய்கள்;** பித்த சுரம், பித்தவகைகள், வாந்தி, விக்கல்.

**பத்தியம்:** அரை உப்புடன் கூடிய துவரைப்பருப்பும் சோறும் பசுவின்பாலும் ஆகும். பைத்திய நோயாளிக்கு இக்குளிகையைக் கழுதைப்பாலில் கொடுக்கப் பைத்தியம் தீரும்.

**குறிப்பு:** ''இளநீரை வேகவைத்து, என்ற பகுதிக்கு மட்டையுடன் கூடிய இளநீரை நெருப்பில் வேகவைத்து பின் அதனுள்ளிருக்கும் நீருடன் சீனி கூட்டித் துணை மருந்தாகக் கொள்க, என்பது பொருந்தும்.

## 69. சுரத்திற்கு அஞ்சனமை

271 பிதத்துகின்ற குளிர்சுரத்துக் கஞ்சனமைகேளு
பேருன சீந்திப்பூற் கழஞ்சிரெண்டு
இதத்துடனே பழச்சாறுவிட் டரைத்துநீயும்
இரும்புமண் வெட்டிபுற மதனிற்பூசி
மதத்துடனே நல்லெண்ணெய் விளக்குமேற்றி
மண்வெட்டிப் புறத்திலந்த மையையேற்றி
விதத்துடனே முன்தடவு மருந்துமையும்வாங்கி
வெண்கலத்தால் கவிழ்த்து மையை மேலுங்கேளே.

272 மேலிட்டுத் தாம்பிரத்தின் செம்பினலே
விளங்கவே நல்லெண்ணெய் குத்தியாட்டு
மாலிட்ட சாமந்தா னுைபின்பு
மாட்டுக்கொம் புச்சிமிழில் மையைவாங்கிக்
காலிட்ட நாள்மூன்று ரெண்டாமாறல்
கண்குளிரும் சுரங்களுக்கு கண்ணில்நீட்டு
மேலிட்ட விழிமாதே பணவெடை மையைத்தான்
விரைந்தோடும் பலசுரங்க ளெல்லாந்தானே.

இரண்டு கழஞ்சு சீந்திற்பூவை (சீந்தில் சர்க்கரையை) எடுத்துக்கொண்டு எலுமிச்சம்பழச்சாறு விட்டு நன்ருக அரைத்து அவ் விழுதை ஒரு இரும்பு மண்வெட்டியின் புறப்பக்கத்தில் பூசி நல் லெண்ணெய் விளக்கேற்றி அதன் புகையை மருந்தின்மீது மை படியுமாறு நெருக்கி வைத்துப் பின்னர் முன்தடவிய மருந்தையும் மையையும் ஒரு வெண்கலப் பாத்திரத்தால் கவிழ்த்து வைத்து பின்பு தாம்பிரச் செம்பினடியில் உள்ள நல்லெண்ணெயை தேவை யான அளவு ஊற்றி ஒரு சாம நேரம் அரைத்து ஒரு சிமிழில் பத்திரப்படுத்தி வைத்துக்கொள்ள வேண்டும். இம்மருந்தை கண் மையாக பயன்படுத்தலாம்.

**தீரும் நோய்கள்:** இரண்டு நாட்களுக்கு ஒரு முறையும் மூன்று நாட்களுக்கு ஒரு முறையும் வருகின்ற சுரங்கள்.

## 70. வாதத்திற்குப்பிட்டு

273 தானென்ற வாதத்தின் கடுப்புக்கெல்லாம்
சாற்றுகிறேன் பிட்டொன்று தன்னைக்கேளு
பானென்ற மஞ்சணத்தி இலைதானப்பா
பலமிருப திடித்துநீ பாண்டத்திட்டு

வேனென்ற வெள்ளமது பதக்குவிட்டு
வேடுகட்டி அடுப்பேற்றி அனலேமூட்டு
கானென்ற கருங்குறுவைப் பச்சையாவைக்
கால்படிநன் னீர் தெளித்துப் பிசறிவையே.

274 வைத்துநீ மேல்மூடிச் சமைத்து வாங்கி
மைந்தனே யதையறிந்த வகையைச்சொல்வேன்
எத்துநீ பனைவெல்லஞ் சற்றேகூட்டு
எட்டுநா ளருந்தவெல்லா வாதந்தீருந்
தைத்துநீ நோயறிந்து உண்ணச்சொல்லு
சார்புடனேபுளி புகையுந் தள்ளச்சொல்லு
நித்தம்நித்தம் உதையத்தே பிட்டுத்தின்னு
நினைவாகப் பத்தாநாள் மூழ்கச்சொல்லே.

இருபது பலம் மஞ்சணத்தியிலையை (நுணா) எடுத்து இடித்து ஒரு பாண்டத்திட்டு இரண்டு மரக்கால் நல்ல நீர்விட்டு வேடு கட்டி அடுப்பில் ஏற்றி அனலை மூட்டவேண்டும். பின்பு கால்படி கருங்குறுவைப் பச்சை அரிசிமாவை தண்ணீர் தெளித்து பிசறி அந்த வேட்டின்மேல் வைத்து அதை மூடி நன்றாக வெந்த பின்பு எடுத்து தேவையான அளவு பனைவெல்லம் சேர்த்து எட்டு நாள் காலையில் மட்டும் உண்ண வேண்டும். ஒவ்வொரு நாளும் காலையில் மட்டும் புதிதாக உண்ணும் அளவு மட்டும் செய்து உண்க.

**தீரும் நோய்கள்:** எல்லாவகை வாதங்கள்

**பத்தியம்:** புளி, புகையிலை நீக்க வேண்டும். பத்தாம் நாள் எண்ணெய் தேய்த்து மூழ்கவேண்டும்.

### 71. மகாஅனலுருவச் சூரணம் (வாதத்திற்கு)

275 சொல்லுவேன் அனலுருவச் சூரணந்தானப்பா
துடியான வாதமெல்லாந் தொலைந்துபோகும்
கொல்லுமே கொடிவேலி புங்கம்வேராம்
கொடியான ஆயிலின் வேருங்கூட
நில்லுமே அதின் பட்டையோடும் வாங்கி
நிழலுலர்த்தி ஒருபலமாய் வகையொன்றுக்கு
வெல்லுமே யிடித்துச்சூ ரணமேசெய்து
மேல்மருந்து வாய்விளங்கங் கடுக்காய்சுக்கே.

276 சுக்குத்திப் பிலிகடுகு கரியசீரஞ்
சுகமாக வகைக்குஅரைப் பலமேகூட்டு
மிக்கவெதுப் பிப்பொடிசெய் தரித்துக்கொண்டு
மேன்பொடியும் முன்பொடியுங் கலந்துபின்பு
தக்கவெரு கடியதுதான் தேனிற்கொள்ள
தணியாத வாய்வோடு வாதந்தீரும்
நிற்குமொரு மண்டலத்திற் பச்சைவாதம்
நீர்ச்சன்னி வாதமுதல் நில்லாதுகாணே.

| | | |
|---|---|---|
| கொடிவேலி | ஆயிலியம் வேர் | |
| புங்கன் வேர் | ஆயிலியப்பட்டை | வகைக்கு ஒரு பலம் |

இவற்றை நிழலில் உலர்த்தி இடித்துச் சூரணம் செய்ய வேண்டும், மேலும்.

| | |
|---|---|
| வாய்விளங்கம் | திப்பிலி |
| கடுக்காய் | கடுகு |
| சுக்கு | கரிய சீரகம். |

இவைகளை வகைக்கு அரைப்பலம் எடுத்து வறுத்துப்பொடி செய்து இரு பொடிகளையும் கலக்கவேண்டும்.

**துணை மருந்தும் அளவும்:** ஒரு வெருகடியளவு தேனில் கொள்ளவும்.

**தீரும் நோய்கள்:** வாதம், பச்சைவாதம், நீர்ச்சன்னி வாதம்.

## 72. மகாகனலுருவச்சூரணம்

277 காணடா சூலைபதி னெட்டுந்தீரக்
கனலுருவச் சூரணத்தைக் கருதிக்கேளு
ஆணடா கருங்குறுவை சம்பாவாதல்
அரிசியது பலம்ரெண்டு ஊறப்போடு
ஊணடா கழற்சிநொச்சி முருங்கைமூன்று
உயர்கொழுந்து பலமுக்கால் வகைக்குப்போடு
நாணடா முன்னரிசி மருந்துமிட்டு
ரசங்கழஞ்சி யொன்றரையும் கூடக்கூட்டே.

278 கூடவே சிவன்வேம்பு சூரணமேசெய்து
கூட்டு கழஞ்சொன்றரைவெற் றிலைதானைந்து
நீடவே உரலிலிட்டு இடிமைபோலே
நீயெடுத்துப் பொடியாக்கி வைத்துக்கொண்டு
ஆடவே வெருகடிஆ ழாக்குவெந்நீர்
அதிற்கொடுக்க ஏழுபொழு தப்பாகேளு
நாடவே ஆறுநாள் அந்திசந்தி
நாளெட்டுக் குளிர்ந்தசலத் திருக்கச்சொல்லே.

279 இருக்கவே ஏரண்டத் தெண்ணெய் தேய்த்து
இதமாக ஒன்றைவிட்டு ஒருநாள்மூழ்குச்
செருக்கவே இருபதுநாள் கழிந்தபின்பு
சேருநீ கோழியதினி றைச்சிகூட்டு
உருக்கவே புளியுப்பு கசப்புந்தள்ளு
உத்தமனே முருங்கைக்கா யிலையுமாகும்
நெருக்கவே நெத்திலியும் அவரைப்பிஞ்சும்
நீகூட்டச் சொல்லுவாய் மாதமொன்றே.

280 மாதமொன்றில் நல்லெண்ணெய் முழுகலாகும்.
மகத்தான சூலையொடு கிரந்தி தீரும்.

இரண்டு பலம் கருங்குறுவை அல்லது சம்பா அரிசியை நீரில் ஊறப்போட்டு கழற்சிக் கொழுந்து, நொச்சிக் கொழுந்து, முருங் கைக் கொழுந்து இவற்றை வகைக்கு முக்கால் பலம் எடுத்து ஊற வைத்துள்ள அரிசியையும் முன் மருந்து சூரணத்தையும் ஒன்றரைக் கழஞ்சு இரசத்தையும் இத்துடன் சேர்க்கவேண்டும். மேலும் சிவனார் வேம்புச் சூரணம் ஒன்றரைக் கழஞ்சும், ஐந்து வெற்றிலை யும் எடுத்து எல்லாவற்றையும் உரலிலிட்டு மைபோல இடித்து வைத்துக்கொள்ள வேண்டும்.

**துணை மருந்தும் அளவும்:** ஒரு ஆழாக்கு வெந்நீரில் வெரு கடியளவு ஏழுநாட்கள் சாப்பிடவும்.

**தீரும் நோய்கள்:** பதினெட்டு வகைச் சூலை, கிரந்தி.

**பத்தியம்:** ஒன்பதாம் நாளிலிருந்து ஒன்றைவிட்டு ஒரு நாள் விளக்கெண்ணெய் தேய்த்து மூழ்க வேண்டும். இவ்வாறு இருபது நாள் கழிந்த பின்னர், கோழியிறைச்சி, முருங்கையிலை, காய் நெத்திலி அவரைப்பிஞ்சு சேர்க்கவேண்டும். புளி, உப்பு, கசப்பு ஆகா. இப்பத்தியத்தை ஒரு மாதம் கடைப்பிடிக்க வேண் டும். ஒரு மாதம் ஆனவுடன் நல்லெண்ணெய்தேய்த்து மூழ்கலாம்.

## 73. கருங்குறுவைச்சூரணம்

பேதமின்றி இன்னமொரு சூரணந்தான்
பேசுகிறேன் கருங்குறுவை யரிசிபச்சையாக
வேதமென்ற படியரிசி கால்தானப்பா
வெற்றிலையின் சாற்றிலிட்டு இரவுமட்டும்
நீதமென்ற மறுநாளில் சாறிறுத்து
நிழலுலர்த்தி மேல்மருந்து நிகழ்த்துவோமே.

281 ஓமென்ற நல்லமின்னி முசுமுசுக்கை
ஓரொன்று ஒருபிடிவெற் றிலைதானெட்டு
நாமென்று நிழலிலிட்டுச் செருக்குவாட்டால்
நன்றாகச் சூதமுக் கழஞ்சுதூக்கித்
தாமென்ற வெற்றிலைச்சாற தனைவிட்டு
தான்முறித்து வெல்லாமொன் றாகச்சேர்த்து
ஆமென்று இடித்துமைபோல் தூளதாக்கி
அப்பனே நிழலுலர்த்திக் கலசத்தூட்டே.

282 கலசமது புதிதாகு மதிலேவிட்டு
கழற்சிக்காய் பிரமாணம் நாளொன்றுக்கு
நிலைப்பசுவின் தயிர்தன்னிற் குழைத்துநன்றாய்
நீயுருட்டிக் கொடுபத்தியந் தயிருஞ்சோறும்
நலமிருபத் தொருநாளும் புளிப்புகைப்பும் ஆகா
நனவான வயிற்றுளைச்சல் உதிரங்கண்டால்
சொல்லரிய தயிர்தன்னில் வெல்லங்கொள்ளச்
சூடுரெத்தக் கடுப்புளைச்சல் தூரப்போமே.

283 தூரப்போ மேரண்டத் தெண்ணெய்சேர்த்து
சுகமாகுங் குளிர்ந்தசலந் தன்னில்மூழ்கு
பாரிப்போம் பத்துமுழுக் கப்பாசொன்னேன்
பறக்குமடா சூலைபதி னெட்டுப்புண்கள்
சாரிப்போங் கிரந்திபதி னெட்டுந்தீருந்
தணியாத வாய்வெல்லாந் தான்கெட்டோடும்
பூரிப்போ டடம்பிறுகிப் பெலக்குஞ் சொன்னேன்
பேசாதே உலுத்தருட னின்னங்கேளே.

---

கால்படி பச்சைக் கருங்குறுவை அரிசியை எடுத்து அதை வெற்றிலையின் சாற்றில் ஓர்இரவு ஊறவைத்து மறுநாள் சாற்றினை இறுத்து அரிசியை நிழலில் உலர்த்திக் கொள்ளவேண்டும். பின்பு கருங்காக்கணம், முசுமுசுக்கை இவ்விரண்டும் வகைக்கு

ஒரு பிடி எடுத்து எட்டு வெற்றிலையும் சேர்த்து நிழலிலிட்டு எடுத்துக் கொள்ளவேண்டும். முக்கால் கழஞ்சு இரசத்தினை எடுத்து வெற்றிலைச்சாறு விட்டு முறித்துக் கொண்டு மேலே கூறிய எல்லாச் சரக்குகளையும் ஒன்று சேர்த்து நன்றாக இடித்து மை போலாக்கி ஒரு மண் கலசத்தில் பத்திரப்படுத்திக் கொள்ளவேண்டும்.

**அளவும் துணை மருந்தும்:** கழற்சிக்காய் அளவு ஒரு வேளைபசுவின் தயிரில் குழைத்துண்ணவேண்டும். இவ்வாறு இருபத்தொரு நாள் உண்ண வேண்டும்.

**தீரும் நோய்கள்:** பதினெட்டுவகைச் சூலை, பதினெட்டு. வகைக் கிரந்தி, எல்லாவகை வாயுவும் தீரும். உடல் இறுகிப்பலக்கும்

**பத்தியம்:** தயிரும் சோறும் ஆகும். புளிப்பு கைப்பு ஆகாது. விளக்கெண்ணெய் தேய்த்துக் குளிர்ந்த நீரில் தலைமூழ்க வேண்டும். பத்து முழுக்கிற்குள் குணமாகும்.

**குறிப்பு:** இம்மருந்துண்ணுங்கால் கடுப்புடன் கூடிய இரத்த பேதி கண்டால் தயிருடன் வெல்லம் சேர்த்துக் கொள்ளத் தீரும்.

## 74. மக்களுக்கு அறிவுரை

284 கேளடா காமத்தால் கெட்டோர்கோடி
கிளர்கின்ற கோபத்தால் மாண்டோர்கோடி
நாளடா ஆணவத்தால் அழிந்தோர்கோடி
நலமான தீனியினால் மாய்ந்தோர்கோடி
வேளடா தோடத்தால் வீழ்ந்தோர்கோடி
வீணாகக் கொலைசெய்து செத்தோர்கோடி
பாழடா நானென்ற வெல்லாந்தள்ளிப்
பரஞான தத்துவத்தைப் பரிந்துபாரே.

285 பரிந்துபா ருனக்குள்ளே பிரமக்கியானம்
பாராக்கால் தோன்றாது படுகுழியில் வீழ்வாய்
திரிந்துபார் தாவரங்கள் செடிபூடெல்லாம்
சீவசெந்து ஊர்வினங்கள் நடப்பினங்கள்
விரிந்துபார் பறப்பினங்கள் விலங்கினங்கள்
வெறும்பாழென் றெண்ணாதே சிவமென்றெண்ணு
சரிந்துபார் நிதானத்தால் அறியலாம்பார்
சகலசரா சரமெல்லாந் தானாய்ப்பாரே.

286 தானான அண்டசரா சரமுந்தானே
தாய்பெண்டிர் மக்கள்சுற்றந் தந்தைதானும்
ஊனான உடலெல்லாந் தனதென்றெண்ணு
உயிரெல்லாந் தன்னுயிர்போல் எண்ணிக்கொள்ளு
மானான விழிமடவார் போகத்தாலே
வருகின்ற நோயப்பா மயங்கவேண்டாம்
தேனான மொழிமாதர்க் கிச்சைகொண்டால்
தேகத்தில் நோயெல்லாஞ் சேருந்தானே.

காமம், கோபம், ஆணவம், அதிக உணவு, தோடம், கொலை இவற்றால் கெட்டழிந்து மாண்டவர்கள் கோடிக்கணக் கானவர்களாவர். எனவே நானென்ற ஆணவம் முதலான எல்லா வற்றையும் விட்டு பரஞான தத்துவத்தை அறியவேண்டும். தனக்குள்ளேயே அமைந்திருக்கும் பிரமக்கியானத்தையறிய வேண் டும். அவ்வாறறியாவிட்டால் படுகுழியில் விழநேரிடும். செடி, பூண்டு, முதலிய தாவரங்கள், ஊர்வன, நடப்பன, பறப்பன, விலங்கினம் முதலிய உயிரினங்கள் எல்லாவற்றையும் எளிதாக எண்ணாமல் எல்லாம் சிவமென்றெண்ணவேண்டும். இவ்வறிவுத் தெளிவால் உலகத்தை யறியலாம். உலகத்திலுள்ள உயிர்கள் எல்லாவற்றையும் தன்னுயிர்போல் எண்ணவேண்டும். மற்றவர் கள் உடலெல்லாம் தன்னுடல் போல் கருத வேண்டும். பெண் போகத்தால் நோய்கள் வந்தடையும். இதில் மயங்கக்கூடாது. பெண்கள் மேல் இச்சை கொண்டால் நோய்களெல்லாம் வந் தடையும்.

## 75. திருநேத்திரச்சூரணம்

287 சேருகின்ற சூலைபல விரணந்தீர
திருநேத்திர சூரணத்தைச் செப்பக்கேளு
நேருகின்ற வெள்ளறுகு சிவனார்வேம்பு
நேரிசங்கு மூன்றுக்கு மாதிவாரஞ்
சாருகின்ற ரவிஉதைய மாகும்போது
தானழியாக் கன்னிநூல் காப்புக்கட்டி
ஓடுகின்ற அங்ரங் இங்ரங் உங் ஏங்
ஓங்ரங் கென்றேயுன்னி யூன்றே.

288 என்றுநீ ஓம்சிவாய நமவென்றுதானே
இயம்பவே சருவசாபம் நசிநசியென்று
மன்றதனில் நூற்றெட்டு தரமேசொல்லி
மத்தியானந் தனில்வேர் பிடுங்கிக்கொண்டு
சென்றிசங்கு வடவேரைப் பறித்துவாங்கி
தெளிவான நிழலுலர்த்திச் சூரணமே செய்து
நன்றுநீ கல்லுரலில் இடித்துத்தூளாய்
நன்றாக வடிகட்டி எடுத்திடாயே.

289 எடுத்திடுவாய் மும்மருந்தும் சமனதாக
என்மக்காள் புதுக்கலசத் திட்டுக்கொண்டு
கொடுத்திடுவா யிரவிநா ளுதிக்குமுன்னே
கோள்நிலையும் அமிர்தமென்னும் யோகந்தன்னில்
தொடுத்திடுவாய் தங்கள்தங்க ளுசிநீரில்
சுருதியாய் முன்பின்னுந் தள்ளச்சொல்லி
அடுத்திடுவாய் நடுநீர்ச்சூ டாறுமுன்னே
அப்பனே வெருகடிச்சூ ரணத்தையிட்டே.

290 சூரணத்தை இருபதுநாட் கொள்ளும்போது
சொல்லுகிறேன் பத்தியந்தான் பசுவின்பாலாம்.
பூரணித்த உப்புடனே பலசம்பாரம்
போடாதே வெங்காயங் காயமாற்றி
தோரணித்த கோழிதனைச் சமைக்கக்கூட்டு
துவரையுடைப் பருப்புடனே முருங்கைக்காயாம்
காரணத்தே வெள்ளாட்டுப் பாலுமாகுங்
காற்றுவெயி லாகாது கருதிக்கேளே.

291 கருதியொரு குளமுமொரு குளத்துநீருங்
கண்டதண்ணீராகாது கருத்தொண்ணூது
விருதுகபந் தீர்நோயை விளம்பக்கேளு
வெடிசூலை நீர்ச்சூலை வாதச்சூலை
பருதியென்ற வெரிசூலை தண்டிற்சூலை
பாருரண சூலையொடு கட்டுஞ்சூலை
குருதியெனுஞ் சூலையண்டச் சூலையோடு
குதிகரட்டில் சூலையொடு சூலைப்புண்ணே.

292 புண்ணென்ற வறட்சூலை உதிரச்சூலை
புற்றாகுஞ் சூலையொடு கபாலசூலை
தண்ணென்ற அடிநாக்கில் சூலையோடு
தணியாத வாதபித்தங் காட்டுச்சூலை

விண்ணென்னும் ஐயத்தின்சூலை உடற்கடுப்பும்
விதங்களென்ற சூலைமுப்பத் தாறுந்தீரும்
எண்ணென்ற நாக்கரிக்குங் கிரந்தியரிகிரந்தி
எழுமாணிக் கிரந்திமருள் கிரந்திபோமே.

293 போமப்பா நாசிதனில் கிரந்தியரிகிரந்தி
புண்ணுகும் வாய்க்கிரந்தி கண்டமாலை
தாமப்பா கருங்கிரந்தி யோனிப்புற்று
தண்டரிக்குங் கிரந்தியொடு கற்பத்தின்கிரந்தி
வேமப்பா யோனிப்புண் கள்ளிப்பூக்கிரந்தி
மேல்வாயின் கிரந்திகண்டக் கிரந்தியோடு
ஆமப்பா கருவழிக்குங்கிரந்தி லிங்கப்புற்று
அத்திக்காய்க் கிரந்தியுஞ் செங்கிரந்திபோமே.

294 கிரந்தியொடு விப்புருதி கரட்டில்புண்ணும்
கேளப்பா கபாலத்தில் கிரந்திமற்றும்
பரந்துவரும் பிளவையொடு குழிவாழைப்புண்
பருப்பருவா யெழுகின்ற மரவைக்கட்டி
எரிந்துவரும் மொட்டியபுண் ணென்பதெல்லாம்
ஏகுமே எளிதென்று யெண்ணுதேநீ
கரிந்துவிடுங் குட்டமெல்லாம் வருடங்கொள்ள
கரைகண்டா ருரைத்தபடி கண்டிட்டேனே.

வெள்ளறுகு, சிவனார்வேம்பு, சங்கங்குப்பி இவற்றின் வட வேரைக் கொணர்ந்து நிழலில் உலர்த்திக் கொண்டு, கல்லுரலி லிட்டு தனித்தனியே தூள் செய்து வடிகட்டி வைத்துக்கொள்ள வேண்டும். இம்மூன்று சூரணத்தையும் சமஅளவாகக் கொண்டு கலந்து ஒரு புதுப் பாத்திரத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்.

**அளவு**: (வெருகடியளவு). மூன்று விரலளவு. 20 நாட்கள் உட்கொள்ள வேண்டும்.

**துணைமருந்து**: சூரியன் உதிக்குமுன்னர் தங்கள் தங்கள் ஊசிநீரில், (சிறுநீர்) முன்னும் பின்னும் தள்ளி நடுநீர் சூடாறுமுன் எடுத்து மருந்தையிட்டு உட்கொள்ள வேண்டும்.

**பத்தியம்**:

**ஆகும்பொருள்கள்**: பசுவின் பால், துவரம் பருப்பு, முருங் கைக்காய், வெள்ளாட்டுப்பால், சம்பாரப்பொடி போடாமல் சிறிது உப்பு மட்டும் கூட்டிச் சமைத்த கோழி உணவு ஆகும்.

**ஆகாதவை:** சம்பாரப் பொருள்கள், வெங்காயம், பெருங் காயம் காற்று, வெய்யில் இளவெந்நீரைத்தவிர்த்து மற்ற நீர் வகை.

**தீரும் நோய்கள்:** கபநோய், வெடிசூலை, நீர்ச்சூலை, வாத சூலை, எரிசூலை, தண்டுசூலை, இரணசூலை, கட்டுசூலை, இரத்தசூலை, அண்டசூலை, குதிகால் கரட்டுசூலை, புண்சூலை, வறட்சூலை, புற்று சூலை, கபாலசூலை, அடிநாக்கு சூலை, வாதகரட்டுச்சூலை, பித்த கரட்டுச்சூலை, கபகரட்டுச்சூலை, இவை முதலிய முப்பத்தாறு வகை சூலைகள், உடல் கடுப்பு நாக்குக் கிரந்தி, அரிகிரந்தி, ஆண்குறிக் கிரந்தி, மருள்கிரந்தி, மூக்குக்கிரந்தி, வாய்க்கிரந்தி, கண்டமாலை, கருங்கிரந்தி, யோனிப்புற்று ஆண்குறி அரிக்கும் கிரந்தி, கற்ப கிரந்தி, யோனிப்புண், கள்ளிப்பூக்கிரந்தி, மேல்வாய்க் கிரந்தி, கண்டக் கிரந்தி, கருஅழிக்கும் கிரந்தி, லிங்கப்புற்று, அத்திக்காய் கிரந்தி, செங்கிரந்தி, விப்புருதி, கரட்டுப்புண். கபால கிரந்தி, பிளவை குழிவாழைப்புண், மரவைக்கட்டி, ஒட்டியபுண்.

இம்மருந்தை ஓராண்டுகாலம் முறையே உண்டுவரின் பெரு நோயும் குணமாகும்.

## 76. இரசச்சீனிச் சூரணம்

295 கண்டிட்ட ரசச்சீனிச் சூரணத்தைக்கேளு
காணுரசஞ் சுத்திசெய்து பலமுக்கால்தான்
விண்டிடவே கெந்தியொரு பலந்தானப்பா
மேலான அரிதாரம் பலந்தான்ரெண்டு
பண்டிட்ட நற்பரங்கிப் பட்டைபலம்நாலு
பாரடா கொடிவேலி வேரின்பட்டை
துண்டிட்டு ஒன்றரைதான் பலமே போடு
சொல்லாதே எட்டிவிதை பலந்தான்ஒன்றே.

296 பலத்தாலே நிறுத்துக்கல் லுரலிலிட்டு
பகருஞ்சேங் கொட்டைஐந்து வறுத்துப்போடு
பெலத்தாலே யிடித்துச்சூ ரணமேசெய்து
பேணியே அந்திசந்தி இளவெந்நீரில்
நலத்தாலே ஒருபொழுதுக் கரைக்கழஞ்சி
நல்கிடவே பத்தியத்தை நாட்டக்கேளு
குலத்தாலே முருங்கைக்கா யிலையுமாகும்
கோழியொடு துவரையுமூர்க் குருவியாமே.

297 ஆகாது புளியுப்புக் கசப்புமூன்றும்
அப்பனே பதினைந்து தினம்போமட்டும்
ஏகாத பிணியகலும் வகையைக்கேளு
எழுமூலங் கருங்குட்ட மண்டவாதம்
போகாத செங்குட்டம் வெண்குட்டங்கள்
புருடருட பிளவைதண்டுக் கிரந்திப்புண்கள்
சாகாத அரையாப்புச் சூலையெல்லாந்
தான்கெட்டே னென்றுபோந் தான்கண்டீரே.

| | | |
|---|---|---|
| சுத்தி செய்த இரசம் | $\frac{3}{4}$ | பலம் |
| சுத்திசெய்த கந்தகம் | 1 | ,, |
| சுத்திசெய்த அரிதாரம் | 2 | ,, |
| பறங்கிப்பட்டை | 4 | ,, |
| கொடிவேலிவேர்ப்பட்டை | $1\frac{1}{2}$ | ,, |
| எட்டிவிதை | 1 | ,, |

இவற்றைக் கல்லுரலிலிட்டு, சுத்தி செய்து வறுத்த சேங் கொட்டை ஐந்து சேர்த்து நன்றாக இடித்துச் சூரணம் செய்து எடுத்துக் கொள்ளவேண்டும்.

**அளவு:** அரைக்கழஞ்சு இருவேளை

**துணைமருந்து:** இளவெந்நீரில்

**பத்தியம்:**

**ஆகும்பொருள்கள்:** முருங்கைக்காய், முருங்கைக்கீரை, கோழி, துவரம்பருப்பு, ஊர்க்குருவி

**ஆகாப்பொருள்கள்:** புளி, உப்பு, கசப்பு.
15 நாள்கள் பத்தியம் காக்க வேண்டும்.

**தீரும் நோய்கள்:** மூலம், கருங்குட்டம், அண்டவாதம், செங்குட்டம், வெண்குட்டம், பிளவை, ஆண்குறிக்கிரந்தி, புண்கள், அரையாப்பு, சூலை.

### 77. கருங்கோழிச் சூரணம் (வாதத்திற்கு)

298 கண்டீரே கருங்கோழிச் சூரணந்தான்
கனமான வேம்பினுடைப் பட்டைதன்னை
தண்டாத மேற்புரணி தன்னைத்தள்ளி
தானிடித்துப் பலமதுதா னிருபதப்பா

உண்டான பதினாறுபடி தான்காடி
ஊறவிடு யிருபதுநாள் மட்டும்போட்டு
வண்டான கருங்கோழி வயதுமூன்று
வாகாக நற்சேவல் கொண்டிடாயே.

299 கொண்டிடவே குடல்தனையும் மயிரும்போக்கி
குணமாகக்கால்தலையுங் கூடத்தள்ளி
விண்டிடவே அசுவகெந்தி பலந்தான்ரெண்டு
விரும்பியே பொடித்துமே தூளதாக்கி
கண்டிடவே கோழியதன் வயிற்றினுள்ளே
கடினமுடன் தானடைத்துத் தைத்துமேதான்
பிண்டிடவே தாழிதனில் அடக்கஞ்செய்து
பிசகாமல் மறுசட்டி யடக்கிவையே.

300 அடக்கிவைத்து சீலைநன்றாய்ச் செய்துபோடு
அகண்டவாய்த் தாழிதன்னிற் கட்டித்தூக்கி
கடக்கவைத்த காடிதன்னைஇறுத்துக் கொண்டு
கருங்கோழி தன்னிலாவி யிட்டுப்பின்பு
மடக்கதினால் மேல்மூடி அடுப்பிலேற்றி
மைந்தனே ஒருசாதி விறகினாலே
துடிக்கவே யரைப்படியாய் சுண்டிற்றானல்
சுகமாக இறக்கிவைத்துக் குளிரவாற்றே.

301 குளிர்ந்தபின்பு எலும்புதள்ளிச் சதைமருந்து
குலாவிநிழ லுலர்த்தியிடி சூரணமாயப்பா
அழுந்துவதை வடிகட்டி வேறேவைத்து
அப்பனே பலம்பத்துப் பறங்கிப்பட்டை
கழுந்ததனை லிடித்துச்சூ ரணந்தான் செய்து
கடக்கவைத்து மேல்மருந்து கடுகுசுக்கு
எழுந்தகருஞ் சீரகந்திப் பிலியுமோமம்
என்மக்காள் கார்போக மிளகுகூட்டே.

302 கூட்டுவது வகைக்குஅரைப் பலமதாகக்
கொடிதாக வறுத்துச்சூ ரணமேசெய்து
மாட்டுவது மூன்றுவகைச் சூரணமுங்கலந்து
வறுத்துநீ கருகாமல் வாங்கியாற்றி
நாட்டுவது கலசத்தில் அடைத்துவைத்து
நாளொன்றுக் கரைப்பலந்தான் தேனிலுண்ண
ஊட்டுவது முப்பதுநாள் கொண்டபோது
ஒடுங்காத சூலைகுட்டம் ஓடிப்போமே.

303 ஓடிப்போங் கிரந்தியொடு வாதவாயு
ஏறண்ட வாதமொடு கிரிச்சனவாயு
சாடிப்போம் பத்தியந்தான் புளியுமுப்புந்
தள்ளிவிடு கோழியொடு முருங்கையாகும்
நாடிப்பா ரவரையொடு துவரையாகும்
நாள்முப்பத் தேழுக்கு அந்திசந்தி
தேடிப்பார் விளாவாத வெந்நீர்தானும்
தேகத்தின் மேல்விட்டால் தீருந்தானே.

304 தானென்ற மண்டையிடி சூலைவந்தால்
தான்கொள்ளும் பட்சத்தில் சாடிப்போகும்
ஊனென்ற மற்றுள்ள வியாதிக்கெல்லாம்
உத்தமனே பத்துநாள் மட்டும்போதுந்
தேனென்ற மொழிமடவார் கூடலாகா
செப்புகிறே னுப்புண்ண வகையைக்கேளு
வானென்ற இந்துப்பைக் கல்வத்திட்டு
மாட்டியரை பொற்றலைச்சாற் சாமம்ரெண்டே.

305 சாமமது அரைத்துவில்லை செய்துலர்த்தி
சலியாம லோட்டில்வைத்து மேலுமூடி
சேமமுடன் சீலைமண்செய் துலர்த்திக்கொண்டு
சேவலென்ற புடம்போடக் கட்டிப்போகும்
நாமமதிற் சிறுகவிடு கறிகட்கெல்லாம்
நலமான பத்தியத்துக் கப்பாசொன்னேன்
நேமமுள்ள கடும்பத்தி யத்திற்காகா
நிறுத்திவிட நன்றாகும் நிலையில்நில்லே.

புறணி நீக்கிய 20 பலம் வேப்பம்பட்டையை இடித்துத் தூளாக்கி 16 படி அளவுள்ள காடியில் 20 நாள் ஊறவைத்துக் கொள்ளவேண்டும். மூன்று வயதாகிய கருஞ்கோழிச் சேவலைக் கொண்டுவந்து குடல், மயிர், கால், தலை, இவற்றை நீக்கி, அதன் வயிற்றினுள் மேலே ஊறவைத்துள்ள சரக்கையும் 2 பலம் அசுவகெந்திப் பொடியையும் அடைத்து எல்லா பக்கங்களையும் நன்றாகத் தைத்து ஒரு தாழியில் அடக்கஞ் செய்து மேல்சட்டி கொண்டு மூடி, சீலைமண் செய்து கொள்ள வேண்டும். பின்னர் ஓர் அகன்ற தாழியில் மேற்சொல்லப்பட்ட காடியை ஊற்றி கோழியுள்ள சட்டியை அதில் கட்டித்தூக்கி, ஒரு சாதி விறகினாலே, அந்தக் காடி ½ படியாகச் சுண்டும் வரை எரித்தெடுத்து ஆற வைக்கவேண்டும். ஆறினபின் கோழியின் எலும்பை மட்டும் நீக்கி

விட்டு, சதையையும் உள்ளிருக்கும் மருந்தையும் நிழலில் நன்ருக உலர்த்தி இடித்துச் சூரணம் செய்து வடிகட்டி வைத்துக் கொள்ள வேண்டும். 10 பலம் பறங்கிபட்டைச் சூரணம் எடுத்துக் கொள்ள வேண்டும். மேலும் கடுகு, சுக்கு, கருஞ்சீரகம், திப்பிலி, ஓமம், கார்போக அரிசி, மிளகு வகைக்கு ½ பலமெடுத்து நன்கு சூரணித்துக் கொள்ளவேண்டும். மேற்கூறப்பட்ட மூன்று வகைச் சூரணத்தையும் கலந்து கருகாமல் சிறிதளவு வறுத்தெடுத்து ஒரு கலசத்தில் அடைத்துக் கொள்ள வேண்டும்.

**அளவு**: தினமொன்றுக்கு ½ பலம்

**துணைமருந்து**: தேன்.

30 நாட்கள் தினம் ஒரு வேளை உட்கொள்ளத் தீராதசூலை, குட்டம் முதலிய நோய்கள் நீங்கும்.

37 நாட்கள் காலையிலும் மாலையிலும் தினம் இருவேளை உட்கொள்ளக் கிரந்தி, வாதவாயு, ஏறண்ட வாதம், கிரிச்சன வாயு முதலியன நீங்கும்.

15 நாட்கள் உட்கொள்ள மண்டையிடி, சூலை ஆகியவைகள் நீங்கும். 10 நாட்கள் உட்கொள்ள மற்ற எல்லா வியாதிகளும் நீங்கும்.

**பத்தியம்**: புளி, உப்பு, பெண்போகம் நீக்க வேண்டும். கோழி, முருங்கை, அவரை, துவரம்பருப்பு ஆகும். வெந்நீரில் குளிக்க வேண்டும்.

## 78. பத்திய உப்பு

வேண்டிய அளவு இந்துப்பு எடுத்து பொற்றலையின் சாற்ருல் இரண்டு சாமமரைத்து (ஆறுமணி நேரமரைத்து) வில்லை தட்டி உலர வைத்து, ஓட்டிவிட்டு மேலோடு கொண்டு மூடி, சீலைமண் செய்து உலர்த்திக்கொண்டு குக்குடபுடமிட உப்பு கட்டிப்போகும்.

**உபயோகம்**: சிறு பத்தியத்திற்கு இதனைக் கறிகளுடன் சிறி தளவு சேர்த்துக் கொள்ளலாம். கடும்பத்தியத்திற்கு ஆகாது.

## 79. பறங்கிப்பட்டைச் சூரணம்

306 நிலையில்லா இடுப்புவலி தீரக்கேளு
லோசான சீனமப்பா பலந்தானைந்து
மலைவில்லா திடித்துச்சூ ரணமேசெய்து
மைந்தனே திரிகடுகு வகைதான் மூன்று

பலமெல்லா மூவைந்து மிளவறுப்பாய்
பதருதே சூரணஞ்செய் துறவேசெய்து
நலமில்லா திளைத்தவுடல் தனக்குநெய்யில்
நல்குவாய் வாதவுட லோர்க்குத்தேனே.

307 தேனேடு நெய்யிலே கொள்ளும்போது
திறமாக வெருகடிதான் தெளிந்துபாரு
வேனேடு பத்தியந்தான் பழஞ்சோறுகும்
விட்டுண்ண நல்லெண்ணெய் பன்றியாகுங்
கானேடு வாய்வென்ற தீனிதள்ளு
கத்தரிக்கா யாகாது கசப்புமாகா
ஊனேடு சூலையொடு கடுப்புவாய்வு
உட்குடைச்சல் வாதத்தின் கடுப்புப்போமே.

ஐந்து பலம் பறங்கிபட்டையைப் பொடித்து பிறகு சுக்கு, மிளகு, திப்பிலி, இவற்றை வகைக்கு (மூன்று பலம்) கொண்டு இளவறுப்பாய் வறுத்து சூரணித்து, இவ்விரண்டு சூரணங்களையும் கலந்து வைத்துக் கொள்ளவேண்டும்.

**அளவு**: (வெருகடி) மூன்று விரலளவு

**துணை மருந்து**: இளைத்த உடம்புடையோர்க்கு நெய்யிலும், வாதவுடலோர்க்குத் தேனிலும் கொடுக்க வேண்டும்.

**பத்தியம்**:

**ஆகாப்பொருள்கள்**: வாயுவை உண்டாக்கும் பொருள்கள், கத்தரிக்காய், கசப்புப் பொருள்கள்,

**தீரும் நோய்கள்**: தசைச்சூலை, கடுப்பு வாயு, உட்குடைச்சல் வாதக்கடுப்பு.

## 80. கருவளர்க்கும் எண்ணெய்

308 போமென்ற கருவழிக்குங் கிரந்திசூலை
போகவே கருவளர்க்கு மெண்ணெய்கேளு
பாமென்ற அவித்தூற்று மேரண்டெண்ணெய்
படியரைதான் பசுவின்பால் படியுங்காலாந்
தாமென்ற ஈருள்ளிபடி ஒன்றேகால்
தானுரித்து அரிந்திட்டுக் கரியசீர
மாமென்று பொடிபண்ணு விராகனெடைரெண்டு
மாங்கழுதை அத்திப்பால் படியுங்காலே.

309 காலாகு மிவையெல்லா மெண்ணெய் சேர்த்து
கலந்தடுப்பி லேற்றியெரி சிறுதீயாக
மேலாக மெழுகுபத மாகும்போது
வேகாது கையைவிட்டா விளவெந்நீராம்
மாலாகும் பதமென்றே வடித்துக்கொண்டு
மங்கையர்க்கு கெர்ப்பமுற்ற ஐந்தாந்திங்கள்
வேலாகும் விழிமடவார்க் கஞ்சுநாளும்
விளங்கு மேழாந்திங்க ளேழுநாளே.

310 திங்களது ஒன்பதுக்கு ஒன்பதேநாள்
திறமாக அந்திசந்தி யிரண்டுநேரம்
பங்கமில்லா திருகழஞ்சி பருகச்சொல்லு
பத்தியந்தான் புளிபுகையு முப்புமாகா
பொங்கமுடன் மறுபத்திய மிருக்கச்சொல்லு
புண்ணியனே நீராட்டி உப்பைக்கூட்டு
அங்கத்தில் நோய்களின்றி அழிவுமின்றி
அழகுமிகும் ஆயுசுண்டாய்ப் பிறக்கும்பாரே.

அவித்து ஊற்றிய ஏரண்டத்தெண்ணெய் $\frac{1}{2}$ படி பசும் பால் $\frac{1}{4}$ படி உரித்து அரிந்த ஈருள்ளி $\frac{1}{4}$ படி கருஞ்சீரகப் பொடி 2 விராகனெடை கழுதைப்பால் $\frac{1}{4}$ படி அத்திப்பால் $\frac{1}{4}$ படி

இவற்றை யெல்லாம் ஒன்றுகக் கலந்து அடுப்பிலேற்றி சிறு தீயாக எரித்து மெழுகு பதத்தில் எடுத்து வைத்துக்கொள்ள வேண்டும்.

**துணைமருந்து:** இளவெந்நீர்

**அளவு:** இருகழஞ்சி

உபயோகிக்கும்முறை: ஐந்து மாதத்தில் சூல் மாதர் களுக்கு ஐந்து நாளும், ஏழு மாதத்தில் ஏழு நாளும், ஒன்பது மாதத்தில் ஒன்பது நாளும், ஒவ்வொரு நாளும் காலை மாலை உட் கொள்ள வேண்டும்.

**பத்தியம்:** புளி, புகை, உப்பு ஆகாது.

**குறிப்பு:** மறுபத்தியம் மேற்கொள்ள வேண்டும். பத்தியம் முடிந்தவுடன் எண்ணெயிட்டு முழுகச் செய்து சிறிது உப்பைக் கூட்டிக்கொள்ளச் செய்யலாம்.

இவ்வாறு செய்துவரின் கருவை நன்முறையில் வளரச் செய்யும் குழந்தை நோயற்றதாகவும், அழகுள்ளதாகவும் நீண்ட ஆயுள் உள்ள தாகவும் பிறக்கும்.

## 81. கரப்பன் எண்ணெய்

311 பிறக்குமைந்தர் தங்களுக்கு கரப்பனெல்லாம்
புறம்போக எண்ணெயொன்று பேசக்கேளு
சிறக்குமந்தக் கற்பூர வல்லிச்சாறு
சிறியசெருப் படிச்சாறு ஈருள்ளிச்சாறு
வெறிக்கும்நரி மிரட்டிசெப்பு நெருஞ்சிச்சாறும்
விளக்கெண்ணெய் வகையொன்று படிதானென்று
பறக்குமந்த மெழுகுபதந் தன்னில்வாங்கி
பாலருக்குக் கொடுத்துடம்பு பூசச்சொல்லே.

312 பூசவே கரப்பனென்ற வெல்லாம்போகும்

| | |
|---|---|
| கற்பூரவல்லிச்சாறு | நரிமிரட்டிச்சாறு |
| சிறு செருப்படிச்சாறு | செப்புநெருஞ்சிச்சாறு |
| ஈருள்ளிச்சாறு | விளக்கெண்ணெய் |

வகைக்கு ஒரு படி

மேலே கூறப்பெற்ற ஆறுவகைச்சாறுகளையும் ஒரு பாத்திரத்திலிட்டு அடுப்பேற்றி சிறுதீயாக எரித்து மெழுகுபதத்திலெடுத்து வைத்துக்கொள்ள வேண்டும்.

**உபயோகம்:** அளவு காலே ¼ அவுன்சு, சிறுவர்களுக்கு கரப்பன் உள்ள இடங்களில் பூசிவர கரப்பன் நோய் குணமாகும்.

## 82. மூலவாயுவுக்கு வெள்ளுள்ளித்தயிர்

புகழ்மூல வாயுதான் போகக்கேளு
பேசவே வெள்ளுள்ளித் தயிர்தானப்பா
பிசகாமல் வெள்ளுள்ளி பலந்தானைந்து
வாசவே ஆவின்பால் படியில்பாதி
வகையாகக் காய்ச்சியே புரையேகுத்தி
ஊசவே நீர்ச்சோறுந் தயிருங்கூட்டி
உண்ணவே அந்திசந்தி ஒழியும்பாரே.

313 ஒழியுமே உதரத்தில் பொருமல்தீரும்
ஒழியாத மூலவாயு ஓடிப்போகும்
சுழியுமே மூன்றுநா ளமுதுகொள்ளு

| | |
|---|---|
| வெள்ளுள்ளி | 5 பலம் |
| பசும்பால் | ½ படி |

வெள்ளுள்ளியைப் பசும்பாலிலிட்டு நன்ருகக் காய்ச்சி, அப்பசும்பாலை முறைப்படி புரைக்குத்தி எடுத்துக் கொள்ளவேண்டும். இது வெள்ளுள்ளித் தயிர் என்று அழைக்கப்படும்.

**உபயோகிக்கும்முறை**: இவ்வெள்ளுள்ளித்தயிரை சோற்றி விட்டு, சிறிது நீரும் சேர்த்துப் பிசைந்து காலையும், மாலையும் மூன்று நாட்கள் சாப்பிடவேண்டும்.

**தீரும் நோய்கள்**: மூலவாயு, வயற்றுப்பொருமல்

## 83. மூலவாயுவுக்கு எண்ணெய்

கபடாக எண்ணெயொன்று கழறக்கேளு
தெளியுமே வரிக்கடுக்கா யிருபதப்பா
செப்பாதே விதைபோக்கிப் பொடிதான்செய்து
வழியுமே ஒருதலைப்பூண் டிருபதாகும்
மைந்தனே மேற்ருேலை வாங்கிப்போடே.

314 வாங்குவாய் பெருங்காயங் கழஞ்சிரெண்டு
மைந்தனே முடக்கொற்ருன் கொழுந்துஒருபிடியாம்
பாங்கிலே எரண்டஎண்ணெய் படிபாதி
பாலகனே முன்மருந்து நறுக்கிப்போட்டு
தாங்குவாய் காய்ச்சிடுநீ மெழுகுபதமாக
தானிறக்கி ஆறவிட்டுக் கடுகைவாங்கி
சாங்கமா யரைத்திடுவாய் யெண்ணெயோடு
தான்கரைத்து ஒரு கரண்டி தாக்கிடாயே.

315 தாக்கிடவே பட்சமொன்றில் மூலவாயு
தான்தீரு மலக்கட்டு தளர்ந்துபோகும்.

| | |
|---|---|
| வரிக்கடுக்காய் | 20 எண்ணிக்கை |
| ஒருதலைப்பூண்டு | 20 எண்ணிக்கை |
| (ஒரு தலைவெள்ளைப்பூண்டு) | |
| பெருங்காயம் | 2 கழஞ்சி |
| முடக்கொற்ருன் கொழுந்து | 1 பிடி |
| ஏரண்டத்தெண்ணெய் | ½ படி |

வரிக்கடுக்காயை, விதை நீக்கிப் பொடி செய்து கொள்ள வேண்டும். ஒரு தலை வெள்ளைப்பூண்டை மேற்ருேல் நீக்கி எடுத்துக் கொள்ள வேண்டும். எண்ணெயை ஒரு பாத்திரத்திலிட்டு

அடுப்பேற்றி, முன்மருந்துகளில் நறுக்கவேண்டியவைகளை நறுக்கிப் போட்டுக் காய்ச்சி மெழுகு பதத்திலிறக்கி ஆறவைத்துக் கொள்ள வேண்டும். ஆறியபின் அப்பாத்திரத்தினடியில் தங்கியுள்ள எண் ணெய் கடுகை எடுத்துக்கொண்டு, குழிஅம்மியிலிட்டு, மேற்படி எண்ணெயை விட்டு நன்றாக அரைத்துக் கலக்கி வைத்துக் கொள்ள வேண்டும்.

**அளவு:** காலையில் மட்டும் ஒரு தேக்கரண்டி அளவு 5 நாட்களுக்கு கொடுக்கவேண்டும்.

**தீரும் நோய்கள்:** மூலவாயு, மலக்கட்டு

### 84. இரத்தமூலத்திற்கு நெய்

தேக்கிடவே இரத்தமூ லத்துக்கப்பா
செப்புகிறேன் நெய்யொன்று ஆவின்நெய்தான்
நோக்கிடவே படியொன்று ஈருள்ளிச்சாற்று
நுவலவே நான்குபடி கூடவாரு
வாக்கிடவே பசுவின்பால் குறுணிவாரு
மதுரமது பலமொன்று அரைத்துப்போடே.

316 அரைத்திட்டு மெழுகுபதந் தன்னில்வாங்கி
அந்திசந்தி இருபதுநாள் கொண்டாயானால்
கரைத்திட்ட சீழ்மூலம் ரத்தமூலம்
கண்காணு தோடுமடா கண்டுபாரு

| | |
|---|---|
| பசுவின்நெய் | 1 படி |
| ஈருள்ளிச்சாறு | 4 படி |
| பசுவின்பால் | 1 குறுணி |
| அதிமதுரம் | 1 பலம் |

அதிமதுரத்தைக் குழிக்கல்லிலிட்டு சிறிது பசும்பால் வார்த்து அரைத்து, மற்ற சரக்குகளுடன் சேர்த்து ஒரு பாத்திரத்திலிட்டு அடுப்பேற்றி எரித்து மெழுகுபதத்தில் இறக்கி ஆறவைத்தெடுத் துக்கொள்ள வேண்டும்.

**அளவு:** ஒரு தேக்கரண்டியளவு காலை மாலை இருவேளையாக 20 நாட்கள் உட்கொள்ளவேண்டும்.

**தீரும் நோய்கள்:** இரத்தமூலம்; சீழ்மூலம்

## 85. நவமூலத்திற்கு நாயுருவி நெய்

நிரைத்திட்ட நவமூல மெல்லாந்தீர
நேரான நாயுருவி நெய்யைக்கேளு
தரைத்திட்ட சிவந்தநா யுருவிதானும்
சமூலந்தான் பதினாறு பலமுமாமே.

317 ஆமப்பா நிறுத்திடித்துப் பாண்டத்திட்டு
அதில்முப்பத் திரண்டுபடி நீர்விட்டொன்றாய்
பாமப்பா வொன்றரைதான் ஆவின்நெய்தான்
படியளந்து விட்டபின்பு பகர்வேன்கற்கம்
நாமப்பா கொடிவேலி வேரின்பட்டை
நற்சிவதை சேங்கொட்டை ஆயில்பட்டை
தாமப்பா திரிகடுகு முன்னைவேருந்
தான்றிபட்டை திரிபலையு முசுட்டைவேரே.

318 வேரான வெட்டிவேர் புங்கம்வேர்பட்டை
விளங்கவே சுத்திசெய்த வாளங்கூட்டி
காரான இந்துப்புப் பாறையுப்பு
காஞ்சுரிவேர் கத்தூரி மஞ்சள்தானும்
நேரான புளியரணைக் கிழங்குமல்லால்
நேர்பிரண்டைக் கிழங்குமருள் கிழங்குமாகும்
பேரான காட்டில்வாழ் கருணைகந்தம்
பேசுவேன் வகையொன்று கழஞ்சுமூன்றே.

319 கழஞ்சாக நிறுத்தாவின் பாலிலாட்டி
கலக்கவிடு நாலுபடி பால்தானப்பா
இளங்கொதியாய் நாலுநாள் அடுப்பிலேற்றி
என்மகனே முதிரவடி அஞ்சாநாளில்
விளைஞ்சதிரி பலையினது கொட்டைநேராய்
விரைந்துசுட்டு நீறாக்கிப் பொடிதான்செய்து
குழைஞ்சதிலே வெருகடிதூள் கையில்வாங்கி
கூட்டுரெண்டு காசெடைநெய் கொடுத்திடாயே.

320 கொடுத்துவரப் பத்துநா ளுதையந்தன்னில்
குணமாகும் வியாதிதனைக் கூறக்கேளு
தடித்துவரு மூலமுட னுறுப்புமூலந்
தழைக்குமந்த முளைமூல முள்மூலங்கள்

வெடித்துவரும் புறமூலம் வறட்சிமூலம்
வெந்துவிடும் தழல்மூலஞ் சீழ்மூலங்கள்
எடுத்தரத்த மூலமுடன் நவமூலங்கள்
ஏகுமடா சொன்னேன் இந்நூலில்தானே.

16 பலம் சிவப்பு நாயுருவிச மூலம் எடுத்து இடித்துத்தூளாக்கி ஒரு பாத்திரத்திலிட்டு அதில் 32 படி தண்ணீர் 1½ படி பசுவின் நெய் சேர்த்து வைத்துக் கொள்ளவேண்டும்.

| | |
|---|---|
| கொடிவேலி வேர்ப்பட்டை | முசுட்டை வேர் |
| சிவதைவேர் | வெட்டிவேர் |
| சேங்கொட்டை | புங்கம்வேர்ப்பட்டை |
| ஆயில்பட்டை | சுத்தித்தவாளம் |
| சுக்கு | இந்துப்பு |
| மிளகு | பாறையுப்பு |
| திப்பிலி | காஞ்சூரிவேர் |
| முன்னைவேர் | கத்தூரி மஞ்சள் |
| தான்றிப்பட்டை | புளியரணைக்கிழங்கு |
| கடுக்காய் | பிரண்டைக்கிழங்கு |
| நெல்லிக்காய் | மருள்கிழங்கு |
| தான்றிக்காய் | காட்டுக்கருணைக்கிழங்கு |

வகைக்கு 3 கழஞ்சு

இவற்றைக் குழிக்கல்லிலிட்டு; பசும்பால்விட்டு நன்முக அரைத்து கற்கமாக்கி மேலே முன்பு சித்தப்படுத்தி வைத்திருக்கிற பாண்டத்திலிட்டுக் கலந்து, அதோடு மேலும் நான்குபடி பசுவின் பால் கலந்து, அடுப்பேற்றி, சிறுதீயாக நான்குநாள் எரித்து, ஐந்தாம் நாள் இறக்கி வடித்து ஆறவைத்துக் கொள்ள வேண்டும்.

**அளவு:** இரண்டு காசெடை காலையில் ஒரு வேளை வீதம் 10 நாட்கள் உட்கொள்ள வேண்டும்.

**துணைமருந்து:** கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், இவைகளை முற்றியதாகப் பார்த்து சமஅளவாக எடுத்துச் சுட்டுப் பற்பமாக்கிக்கொண்டு, இப்பற்பத்தில் வெருகடியளவு மேலே கூறப்பெற்ற நெய்யோடு சேர்த்து உட்கொள்ள வேண் டும்.

**தீரும் நோய்கள்:** தடித்துவரும் மூலம், உறுப்பு மூலம், முளை மூலம், உள்மூலம், புறமூலம், வறட்சிமூலம், அழல் மூலம், சீழ்மூலம், இரத்தமூலம் ஆகிய நவமூலங்கள்.

## 86. வயிற்றுநோய்க்கு நெய்

321 இந்நூலில் வயிற்றில்வரும் வியாதிக்கெல்லாம்
இயம்புகிறேன் நெய்யொன்றுஇதமதாக
முன்னுகை கோசலமும் முருங்கைவேரு
முத்தமனே சிவதைவேர் நொச்சிவேருந்
தன்னுகுஞ் சாரணைவே ராயில்பட்டை
சங்கம்வேர் மாவிலங்கை முக்காவேளை
சொன்னேனுன் வகைவகைக்குப் பலந்தான்ரெண்டு
சோராம லிடித்துநீர் பதக்குவாரே.

322 வார்த்தெடுத்து எட்டொன்றாய்க் குறுக்கிவாங்கி
வலிய நீ சட்டியிலே வடித்துவிட்டு
சேர்த்துவிடு பசுவின்னெய் படிதானென்று
திருகுகள்ளிப் பாலரைக்கால் படியும்வாரு
சாத்தரிய பேய்க்கும்மட்டிக் காயின்கொட்டை
தான்கட்டிச் சுட்டிடித்துச் சாறு வாங்கி
நேர்த்தியரைப் படிவிடுநீ கற்கங்கேளு
நேர்வாளந் தோடுபோக்கி விராகனெடையெட்டே.

323 எட்டடா பெருங்காயம் விராகனெடையாறு
இந்துப்பு வெண்காரங் கடுகுரோகணி
வெட்டடா வெள்ளுள்ளிச் சவுக்காரச்சீனம்
வெட்பாலை யரிசியுடன் வகைவகைக்கு
தட்டடா விராகனெடை அஞ்சுதானும்
தானரைத்துக் கூடவிட்டு நாலுநாளு
மெட்டடா சிறுகொதியா யஞ்சுநாளில்
மெழுகுபதத் தெடுத்துவடித் தடைத்துக்கொள்ளே.

324 அடைத்தநெய்யில் விராகனெடை யொன்றுதானும்
அப்பனே விடிபோது கொள்ளச்சொல்லு
துடைத்துவிடு நீராம்பல் கவுசிகுன்மம்
சொல்லுநீர்க் கோவைகெண்டை திரட்சிவாயு
கிடைத்தவெப்புப் பாவைமுதல் வயிற்றினோய்கள்
கெடிவிட்டே ஓடுமடா பத்தியங்கேள்
உடைத்தசுண்டை வற்றலொடு மிளகுநீரு
முண்ணலாங் கோழிச்சாறு மோரும்கூட்டே.

| | |
|---|---|
| முருங்கைவேர் | ஆயில்பட்டை |
| சிவதைவேர் | சங்கம்வேர் |

| | |
|---|---|
| நொச்சிவேர் | மாவிலிங்கம்வேர் |
| சாரணைவேர் | முக்காவேளை வேர் |

வகைக்கு 2 பலம்

இவற்றைக் குழிக்கல்லிலிட்டு நன்றாக இடித்துத்தூளாக்கி ஒரு பாத்திரத்திலிட்டு, இதில் தண்ணீர் பதக்கு வார்த்து, அடுப்பி லேற்றி 8ல் ஒரு பாகமாகக் குறுக்கி, வடித்து, ஒரு சட்டியிலிட்டு இதனுடன் பசுவின் நெய் 1 படி திருகு கள்ளிப்பால் $\frac{1}{8}$ படி பேய்க்கும்மட்டிக்காய்ச் சாறுபடி $\frac{1}{4}$ ஆகியவைகளைச் சேர்த்து வைத்துக்கொள்ள வேண்டும்.

(பேய்க்கும்மட்டிக்காயை வரகுவைக்கோலால் கட்டிபடி, எரித்து, இடித்துச்சாறு பிழிய வேண்டும்).

| | |
|---|---|
| ஓடு போக்கிசுத்தித்த நேர்வாளம் | 3 விராகனெடை |
| பெருங்காயம் | 6 விராகனெடை |
| இந்துப்பு | சவுக்காரம் |
| வெங்காரம் | சீனக்காரம் |
| கடுகுரோகிணி | வெட்பாலையரிசி |
| வெள்ளுள்ளி | |

வகைக்கு 5 விராகனெடை

இவற்றைக் குழிக்கல்லிலிட்டு சிறிதுநீர் விட்டு நன்றாக அரைத்துக் கற்கமாக்கி எடுத்து, முன்பு மருந்துகள் சேர்த்துத் தயார் செய்து வைத்துள்ள பாண்டத்திலிட்டு, அடுப்பேற்றி சிறுதீயாக நான்கு நாட்கள் எரித்து ஐந்தாம் நாள் மெழுகு பதத்திலெடுத்து, வடித்து வைத்துக் கொள்ள வேண்டும்.

**அளவு**: ஒரு விராகனெடையளவு காலையில் மாத்திரம் உட்கொள்ளவேண்டும்.

**தீரும் நோய்கள்**: நீராம்பல், கவுசிநோய், குன்மம், நீர்க் கோவை, கெண்டைநோய், திரட்சிவாயு, வெப்புப் பாவை முதலான வயிற்றுநோய்கள்.

**பத்தியம்**: சுண்டைவற்றல், மிளகுரசம் கோழிச்சாறு, மோர் இவைகள் சேர்த்துக் கொள்ளலாம்.

## 87. வயிற்று நோய்க்கு நெய்

325 கூட்டடா நெய்க்கடுகு ஒன்றுகேளு
கூறுன சாரணைவேர்ப்பொடி படிதானென்று
சாட்டடா கல்லுப்பு படியரைக்கால்
சாரணையின் சாறுபடி ஒன்றுவிட்டு
மூட்டடா இலைக்கள்ளிப் பால்படிகாலாக
முழங்கவே பசுவின்நெய் படிகாலாகும்
நாட்டடா பசுவின்நீர் படிரெண்டாகும்
நன்றாக விட்டுநீ யடுப்பிலேற்றே.

326 ஏற்றியே கடுகுபத மாகவாங்கி
எடுத்துவெரு கடிகொள்ளத் திரும்நோய்கேள்
மாற்றுமே நீராம்பல் பேராம்பலோடு
வயிற்றில்வந்த நோயெல்லா மாண்டுபோகும்
சாற்றுமே மோர்கூட்டில் பேதிநிற்கும்
சமுசயங்க ளெண்ணாதே தாக்கிப்பாரு

| | |
|---|---|
| சாரணைவேர்ப்பொடி | 1 படி |
| கல்லுப்பு | $\frac{1}{8}$ படி |
| சாரணையின்சாறு | 1 படி |
| இலைக்கள்ளிப்பால் | $\frac{1}{4}$ படி |
| பசுவின்நெய் | $\frac{1}{4}$ படி |
| பசுமூத்திரம் | 2 படி |

இவற்றை ஒரு பாத்திரத்திலிட்டு அடுப்பேற்றி எரித்து, கடுகு பதத்தில் இறக்கி ஆறவைத்து எடுத்துக் கொள்ளவேண்டும்.

**அளவு:** வெருகடியளவு

**தீரும் நோய்கள்:** நீராம்பல், பேராம்பல், வயிற்றுநோய்கள்.

**குறிப்பு:** பேதியானல் மோர் கூட்ட பேதி நிற்கும்.

## 88. வெள்ளுள்ளிப்பற்பம்

தேற்றியே உதரநோய்க் குள்ளிப்பற்பஞ்
செப்புகிறே னன்றாகத் தெளிந்துபாரே.

327 தெளிந்துரித்த வெள்ளுள்ளி படிதானென்று
சேருகருஞ் சீரகமே பலம்ரெண்டரையாம்
பொழிந்தபால் காயமது பலமொன்றேகால்
புறஞ்சீவு சுக்குபல மொன்றேகாலாம்
நெளிந்தமிள கொருபலந் திப்பிலிதானென்று
நேரான கார்போகம் பலமுமொன்று
தளிந்தவுள்ளி வேறுவைத்து சரக்கெல்லாந்தான்
சட்டியொன்றில் விட்டுவிடு தான்சொன்னேனே.

328 சொன்னேனே இந்துப்பு பலத்திற்பாதி
தூக்கியிட்டு மேல்மூடிச் சீலைசெய்து
முன்னேநீ குக்குடமாய்ப், புடத்தைப்போடு
முழுசத்துப் போகாம லிருக்கவாங்கி
பின்னேநீ பொடிசெய்து முன்னுள்ளிசேர்த்து
பிரட்டியரை மைபோலே யெடுத்துக்கொண்டு
மன்னேநீ வெருகடிதா னுதயங்கொள்ள
வாந்தியுமாம் பேதியுமாம் மக்காள்பாரே.

329 பாரப்பா குளித்துச்சா றன்னமுண்ணு
பகருவது நாற்பதுநா ளுதையகாலங்
காரப்பா தீருநோய் குன்மமெட்டுங்
கடுஞ்சூலைபதி னெட்டுங் கவுசியெட்டும்
போமப்பா பீலிபத்தும் அண்டவாயு
பெருவயிறு கிரிச்சியுடன் வெப்புப்பாவை
ஊரப்பா விட்டோடுஞ் சொன்னேனின்னம்
உரைக்கிறேன் கேள்மகனே கும்மட்டிக்காய்குழம்பே.

| | |
|---|---|
| உரித்த வெள்ளைப்பூண்டு | 1 படி |
| கருஞ்சீரகம் | 2 ½ பலம் |
| பால்பெருங்காயம் | 1¼ பலம் |
| தோல்சீவிய சுக்கு | 1¼ பலம் |
| மிளகு | 1 பலம் |
| திப்பிலி | 1 பலம் |
| கார்போக அரிசி | 1 பலம் |
| இந்துப்பு | ½ பலம் |

இவற்றில் வெள்ளைப்பூண்டு நீங்கலாக மற்ற சரக்குகளை ஒரு சட்டியிலிட்டு மேல்சட்டிகொண்டு மூடி, சீலைமண் செய்து உலர்த்திக் கொண்டு குக்குடபுடமிட்டெடுத்து, குழிக்கல்லிலிட்டு நன்கு

அரைத்துப் பொடி செய்து, முன்பு தனியாக எடுத்து வைத்துள்ள வெள்ளுள்ளியைக் கூட்டி நன்கு நெகிழ மைபோலரைத்து எடுத்துக் கொள்ளவேண்டும்.

**அளவு**: மூன்றுவிரலளவு (வெருகடியளவு) காலையில் மட்டும் 40 நாள் உட்கொள்ள வேண்டும்.

**குறிப்பு**: உண்ணும்போது வாந்தியும் பேதியும் உண்டாகும். வெந்நீரில் தலைமுழுகி இரசமும் சோறும் உண்ணவேண்டும்.

**தீரும் நோய்கள்**: எட்டுவகைக் குன்மம், பதினெட்டு வகைச் சூலை, எட்டுவகைக் கவுசிநோய், பத்துவகைப் பீலிநோய், அண்டவாயு, பெருவயறு, கிரிச்சனம், வெப்புப்பாவை.

### 89. கும்மட்டிக்காய்க் குழம்பு

330 காயான வரிக்குமட்டி ஐந்துபத்து
கல்லுரலி லிடித்துத்தான் பாண்டத்திட்டு
தாயான பசுவின்கோ மியம்பதக்குத்
தான்விட்டு அடுப்பேற்றி நாலொன்ருக்கித்
தீயான பலம்பணிரெண் டரைதான்வெல்லஞ்
சேர்த்துவிடப் பாகாகும் பருவந்தன்னில்
மாயாத திரிகடுகு காந்தமுள்ளி
மாசீனக் காரமும்வெண் காரந்தானே.

331 காரமாம் வெடியுப்புச் சவுக்காரந்தான்
கரியசீ ரகமுமிந்துப் புடனேகேளு
பாரமாம் விராகனெடை வகையொன்றப்பா
பாச்சுறவே நேர்வாள மரையுங்கூட்டு
சாரமாந் திருகுகள்ளிப் பாலுங்கேளு
தானரைக்கால் படிசேர்த்து மருந்தையாட்டு
வீரமாம் பாகுதனிற் கலக்கிக்காய்ச்சி
மேல்வாரு பசுவின்பால் படிதானென்றே.

332 படியரைக்கா லேரண்டத் தெண்ணெய்வாரு
பசுவின்நெய் படியரைக்கால் கூடத்தாக்கு
திடமுறத்தான் காய்ச்சியே குழம்புபோலச்
சேரப்பா கலசத்தில் பத்துநாள்தான்
இடமுறவே தானியத்தில் வைத்தெடுத்து
இறையளவு வெல்லத்தினுடனேயுண்ண
துடியறுமேநீராம்பல் கவுசிவாய்வு
சொல்பாண்டு ரோகநீர்ச் சுரப்பும்போமே.

333 போகுமே கெர்ப்பவிப் புருதிதானும்
பொல்லாத மகோதரங்கள் கவுசிகெண்டை
ஏகுமே உதரத்தி லெழுந்தநோய்கள்
என்மக்காள் வாய்வென்ற வெல்லாந்தள்ளும்

ஐம்பது வரிக்கும்மட்டிக்காயை உரலிலிட்டு இடித்து ஒரு பாண்டத்திலிட்டு ஒரு பதக்கு பசு மூத்திரத்தை அதில் ஊற்றி, அடுப்பேற்றி 4ல் 1 ஆகக் குறுக்கி, (12 ½ பலம்) வெல்லம் சேர்த்துக் கிண்டி, பாகாக வரும் பக்குவத்தில்,

சுக்கு
மிளகு
திப்பிலி
காந்தம்
உள்ளிப்பூண்டு

சீனக்காரம்
வெங்காரம்
வெடியுப்பு
சவுக்காரம்
கருஞ்சீரகம்
இந்துப்பு

இவற்றை வகைக்கு (1 வராகனெடை) எடுத்துப் பொடி செய்து கலந்து, மேலும் நேர்வாளம் ½ விராகனெடை, திருகு கள்ளிப்பால் $\frac{1}{8}$ படி இவற்றை அந்தப்பாலில் ஊற்றி அதன் மேல் பசுவின் பால் 1 படி, ஏரண்டத் தெண்ணெய் $\frac{1}{8}$ படி, பசு நெய் $\frac{1}{8}$ படி இவற்றையும் ஊற்றி, கிண்டி காய்ச்சவேண்டும். காய்ச்சிய குழம்பை எடுத்து ஒரு கலசத்திலிட்டு மூடி 10 நாள் தானிய புடமிட்டெடுத்துக் கொள்ளவேண்டும்.

**துணைமருந்து:** வெல்லத்தில் சிறிதளவு மருந்து கூட்டி உண்ணவேண்டும்.

**தீரும் நோய்கள்:** நீராம்பல், கவுசி, வாய்வு, பாண்டு நோய் நீர்ச்சுரப்பி, கெர்ப்பவிப்புருதி, மகோதரங்கள், கவுசி, கெண்டை, வயிற்று நோய்கள், வாய்வு நோய்கள்.

## 90. கும்மட்டிக்காய்க்கடுகு

வாகுபெற இன்னமொன்று உதரநோய்க்கு
வகுத்துரைப்பேன் குமட்டிக்காய்க் கடுகையப்பா
ஆகுமே ஐம்பதுகாய் பேய்க்கும்மட்டி
அதையிடித்துச் சாறுபிழிந் தப்பால்கேளே.

334 கேளடா கல்லுப்பு படிதானென்று
கெடியான வெடியுப்பு வளையலுப்புத்
தாளடா இந்துப்புக் காந்தஞ்சுக்கு
தாக்கடா திப்பிலிவெள் ளுள்ளிகூட
நாளடா வகைக்கரைதான் பலமுந்தூக்கு
நல்லபெருங் காயமது பலமுங்கால்தான்
தேனடா வாளமொடு சாதிலிங்கம்
திறமாகப் பலமொன்று சேர்த்துத்தூக்கே.

335 தூக்கியே பொடிசெய்து சாற்றில்போடு
சொல்லுமிலைக் கள்ளிப்பால் படிதான்வாரு
தாக்கியே காய்ச்சியெடு கடுகுபதமாகத்
தானெடுத்து ஆள்பலமும் நோய்பலமுங்கண்டு
நீக்கியே விராகனெடை யுண்ணச்சொல்லு
நீராகும் வியாதிதன்னைக் கழறக்கேளு
போக்குமே கெர்ப்பத்தில் விப்புருதிதன்னை
பொல்லாத கெர்ப்பவாய் வகலப்போமே.

336 அகலுமே மகோதரங்கள் கெர்ப்பச்சூலை
அட்டகுன்மம் வயிற்றுவலி வெப்புப்பாவை
இகலுமே சுரோணிதத்தில் வாய்வுதானும்
ஏகுமே பீலிகைநீ ராம்பலோடு
புகலுவேன் கவுசிகெண்டை மலட்டுப்பூச்சி
பொல்லாத வயிற்றுநோ யெல்லாந்தீரும்
பகலிலே சுடுகஞ்சி கொள்ளச்சொல்லு
பத்தியமே இல்லையடா பரிந்துகாணே.

50 கும்மட்டிக்காயை இடித்துச்சாறு பிழிந்து ஒரு பாத்திர ரத்தில் வைத்துக் கொள்ளவேண்டும்.

| | | |
|---|---|---|
| கல்லுப்பு | 1 படி | |
| வெடியுப்பு | | சுக்கு |
| வளையலுப்பு | | திப்பிலி |
| இந்துப்பு | | வெள்ளுள்ளி |
| காந்தம் | | |
| | வகைக்கு ¼ பலம் | |
| நல்ல பெருங்காயம் | ¼ பலம் | |
| நேர்வாளம் | 1 பலம் | |
| சாதிலிங்கம் | 1 ,, | |

இவற்றை தனித்தனியே கல்லுரலிலிட்டு அரைத்துப் பொடி செய்து முன்பு சாறு வைத்துள்ள பாண்டத்தில் சேர்க்க வேண்டும். மேலும் இதில் 1 படி இலேக்கள்ளிப்பால் சேர்த்து அடுப்பிலேற்றி சிறுதீயாக எரித்து, காய்ச்சி, கடுகுபதத்தில் எடுத்து ஆறவைத்துக் கொள்ளவேண்டும்.

**அளவு:** நோய் வன்மை, நோயாளியின் வன்மையறிந்து ஒரு விராகனெடை வரை.

**தீரும் நோய்கள்:** கெர்ப்பவிப்புருதி, கெர்ப்பவாயு, மகோதரங்கள், கெர்ப்பச்சூலை, எண்வகைக்குன்மம், வயிற்றுவலி, வெப்புப்பாவை, சுரோணிதவாயு, பீலிகைநோய், நீராம்பல், கவுசி கெண்டைநோய், மலட்டுப்பூச்சி, வயிற்றுநோய்.

**பத்தியம்:** சிறப்பாக பத்தியம் ஒன்றும் இல்லை.

**உணவு:** பகலில் சுடுகஞ்சி சாப்பிட வேண்டும்.

## 91. குண்டலாதிக்குழம்பு

337 பரிந்துண்ணக் குண்டலாதிக் குழம்புகேளு
பாரடா சங்குவடி வேரைவாங்கி
சரிந்துநன்று யரைத்திடுநீ விளாங்காய்மட்டுஞ்
சாதியாம் பெருங்காயம் விராகன்றெண்டு
புரிந்துநீ பொடிசெய்து இவையிரண்டினையும்
புதுக்கலசத் திட்டுநீ கலசச்சட்டி
திருந்தவைத்து மருந்திட்டக் கலசமேலே
சேரவைத்துச் சம்பழச்சாற் செப்பக்கேளே.

338 செப்பமுடன் காலரைக்கால் படிதான்விட்டுச்
சேர்த்தொன்றாய்க் கிண்டிரவி தன்னில்வைக்க
குப்பென்று பொங்குமது தன்னைவாங்கி
குளிர்ந்தநிழல் தன்னில்வைத்து வழித்துக்கொண்டு
தப்பில்லா மறுகலசந் தன்னில்வைத்து
தான்முள்ளிக் காயளவு நாளொன்றுக்கு
இப்புவியி லாறுநாள் கொள்ளச்சொல்லு
இல்லையடா காமாலை பாண்டுதானே.

சங்கஞ்செடியின் அடிவேரை குழிக்கல்லிலிட்டு நன்கு நெகிழ வரைத்து விளாங்காயளவெடுத்து இதனுடன் நல்ல பெருங்காயம் 2 விராகனெடை பொடி செய்து, சேர்த்து, ஒரு புதுக் கலசத்திலிட்டு இதில் காலேயரைக்கால் படி எலுமிச்சம்பழச் சாறு விட்டு நன்றாகக் கிண்டி சூரிய ஒளியில் வைக்கப் பொங்கி

வரும். அதுபோது அதைக் குளிர்ந்த நிழலிலிட்டு ஆறவைத்து மருந்தை வழித்து வேறொரு கலசத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்.

**அளவு:** முள்ளிக்காயளவு ஒரு நாளைக்கு ஒரு வேளை வீதம் ஆறு நாட்கள் உட்கொள்ள வேண்டும்.

**தீரும் நோய்கள்:** காமாலை, பாண்டு.

## 92. கடுக்காய் நெய்

339 தானென்ற கடுக்காய் நெய் சாற்றக்கேளு
தங்கம்போல் வரிக்கடுக்காய் நூறுவாங்கி
ஏனென்ற கீழ்க்காய்நெல்லி யதுவுந்தானும்
இருபதடா பலமிடித்துப் பாண்டத்திட்டு
வானென்ற தூணிநீர் விட்டுக்காய்ச்சு
மைந்தனே ரெண்டுபடி வடித்துவிட்டு
தேனென்ற ஆவின்நெய் படிதான்விட்டு
திறமாகச் செண்பகப்பூ ஏலந்தானே.

340 ஏலமொடு சிவதைவேர் சுக்குமஞ்சள்
இதமான சீரகமுங் கடுகுரோகணியும்
சீலமொடு திப்பிலியும் வகைக்குத்தானும்
திறமாகப் பலமரைதா னரைத்துப்போடு
பாலிரண்டு படிவிட்டு சிறுதீயிட்டு
பதத்தில்வடித் திருகழஞ்சி பருகக்கேளு
தூலமெனும் விக்கமொடு பித்தஞ்சோகை
சோபமுட னெரியக்கினி மந்தம் போமே.

போகுமே மலசலக்கட் டிளைப்புந்தீரும்
பொல்லாத பித்தவெப்பு வெல்லாந்தீரும்

| | |
|---|---|
| வரிக்கடுக்காய் | 100 எண் |
| கீழ்க்காய் நெல்லிச்சமூலம் | 20 பலம் |

இவற்றைக் கல்லுரலிலிட்டு நன்முக இடித்து ஒரு பாத்திரத்திலிட்டு ஒரு தூணி நீர் சேர்த்துக் காய்ச்சி 2 படியாக குறுக்கிக் கொண்டு இதனுடன் பசுநெய் ஒரு படியும் சேர்த்து வைத்துக் கொள்ளவேண்டும்.

| | |
|---|---|
| செண்பகப்பூ | சீரகம் |
| ஏலக்காய் | கடுகுரோகணி |
| சிவதைவேர் | சீந்தில் |
| சுக்கு | திப்பிலி |
| மஞ்சள் | வகைக்கு (½ படி) |

இவற்றைக் கல்லுரலிலிட்டு நன்றாக அரைத்து, முன் மருந்து வைத்துள்ள பாண்டத்தில் சேர்த்து அதில் இரண்டுபடி பசும்பாலும் கூட வார்த்து அடுப்பிலேற்றி சிறுதீயாக எரித்துப் பதத்தில் வடிகட்டி வைத்துக் கொள்ள வேண்டும்.

**அளவு**: இருகழஞ்சு

**தீரும் நோய்கள்**: துாலநோய், பித்தசோகை, சோபம், அக்கினிமந்தம், மலக்கட்டு, நீர்க்கட்டு, இளைப்புநோய், பித்தவெப்பு.

### 93. வல்லாரை நெய்

341 ஆகுமே வல்லாரை நெய்யைக்கேளு
அழகான வல்லாரைச் சாறுபடிநாலு
ஏகுமே பசுவின்பால் படிநாலு
இளநீர்தான் ரெண்டுபடி நெய்தான்ரெண்டு
வேகுமே சீதாசெங் கழுநீரொன்று
விட்டிடுவாய் பதின்மூன்று படிதான்பாரே.

342 படியுமே தான்விட்டு அடுப்பிலேற்றி
பாருமே கற்கமதி மதுரங்கோட்டம்
விடியுமே செங்கழுநீர்க் கிழங்குகுன்றி
வேருடனே அவுரியிலை மேலுங்கேளு
முடியுமே பச்சைக்கற் பூரத்தோடு
பூதன்மைக்கோ ரோசனையும் வகையொன்றுக்கு
தடையுமே விராகனெடை மூன்றுதூக்கு
தானரைப்பாய் பால்விட்டுக் கலக்கிவாரே.
தடையுமே விராகனெடை மூன்றுதூக்கு
தானரைப்பாய் பால்விட்டுக் கலக்கிவாரே.

343 கலக்கிவிட்டு மூன்றுநாள் சிறுதீயிட்டுக்
கட்டிவடி நாலாநாள் மயனந்தன்னில்
துலக்கமுட னந்திசந்தி காசெடைதான்கொள்ள
சோருமே சயமீளை இருமல்மாந்தை
குலைக்கவரு மருந்திடு தொண்டைக்கம்மல்
கொண்டநஞ்சின் விஷக்கொடுமை குலைந்துபோகும்
மலைக்கவரு மேல்மூச்சு உடம்பிற்காந்தல்
வாய்நாக்கில் நெஞ்சுடலில் வறட்சிபோமே.

| | | |
|---|---|---|
| வல்லாரைச்சாறு | 4 | படி |
| பசும்பால் | 4 | ,, |
| இளநீர் | 2 | ,, |
| பசுநெய் | 2 | ,, |
| **சீதாசெங்கழுநீர்ச் சாறு** | **1** | **,,** |

ஆக 13 படியையும் ஒரு பாத்திரத்திலூற்றி அடுப்பிலேற்றி, பின்னர்,

| | |
|---|---|
| அதிமதுரம் | அவுரியிலை |
| கோட்டம் | பச்சைக்கற்பூரம் |
| செங்கழுநீர்க்கிழங்கு | கோரோசனை |
| குன்றிவேர் — வகைக்கு 3 விராகனெடை | |

கொண்டு பால்விட்டரைத்துக் கலக்கி அதில் கற்கமாகச் சேர்த்து 3 நாள் சிறுதீயிட்டுக் காய்ச்சி நான்காம் நாள் மெழுகு பதத்திலிறக்கி வடிகட்டி வைத்துக் கொள்ள வேண்டும்.

**அளவு:** காசெடை காலை மாலை இருவேளை.

**தீரும் நோய்கள்:** இளைப்புநோய், ஈளை, இருமல், உளமாந்தை, மருந்தீடு, தொண்டைக்கம்மல், உட்கொண்ட நஞ்சின் தீமை, மேல்மூச்சு, உடம்பெரிச்சல், வாய், நாக்கு, நெஞ்சு இவற்றிலேற்படும் வறட்சி.

### 94. கண்டங்கத்திரி நெய் (காசத்திற்கு)

344 வறட்சியென்ற காசங்கள் தீரவேண்டில்
வையப்பா கண்டங்கத் தரிநெய்தானும்
திறட்சிகண்டங் காரிச்சாற் படிதாறுலு
திறமான ஆவின்நெய் படிதான்ரெண்டு
முறிச்சிடுமே கற்கஞ்சா ரணைவேரோடு
மூதண்டசிறு காஞ்சொரி கீழ்க்காய்நெல்லி
தறிக்கவே நெருஞ்சிவேர் தூதுவளையின்வேர்
தான்வகைக்கு பலமொன்று தூக்கிடாயே.

345 தூக்கடா சிறுதேக்கு தாளிசபத்திரியும்
சுகமான அரத்தைவெட்பா லையரிசிதானுந்
தாக்கடா வகைவகைக்குக் கழஞ்சிமூன்று
தானரைத்துப் பால்தன்னிற் கலக்கிவிட்டு
தேக்கடா தீயெரித்து மெழுகுபதமாகச்
செலுத்திவடி காசெடைதான் அந்திசந்தி
நோக்கடா மண்டலந்தான் கொள்ளும்போது
நுவலுவேன் காசமென்ற நோய்போம்பாரே.

| | |
|---|---|
| கண்டங்கத்திரிச்சாறு | 4 படி |
| பசுநெய் | 2 படி |
| சாரணைவேர் | கீழ்க்காய் நெல்லிவேர் |
| கஞ்சா | நெருஞ்சில் வேர் |

| | |
|---|---|
| சிறுகாஞ்சொரிவேர் | தூதுவளை வேர் |

வகைக்கு 1 பலம்

| | |
|---|---|
| சிறுதேக்கு | அரத்தை |
| தாளிசபத்திரி | வெட்பாலையரிசி |

வகைக்கு 3 கழஞ்சு

சாறு நீங்கலாக மற்றவற்றை பால்விட்டரைத்து பாலில் கலக்கி, பின்பு எல்லாவற்றையும் சேர்த்து அடுப்பிலேற்றி எரித்து மெழுகுபதத்தில் வடிகட்டிவைத்துக் கொள்ள வேண்டும்.

**அளவு**: காசெடை. ஒரு மண்டலம் காலை மாலை

**தீரும் நோய்கள்**: காசம் (இருமல்)

### 95. மாந்தநெய்

346 பாரிலே பாலருட மாந்தந்தீர
பரிந்துபார் நெய்யொன்று குப்பைமேனி
நீரிலே பொடுதலையுஞ் சிறுபூனைக்காலும்
நெடியஇண்டு வறட்பூலா தானுமாகுங்
கூறிலே விடத்தலை வேலிப்பருத்தி
கோடகசா லையிவற்றின் கொழுந்தெல்லாந்தான்
சேரிலே கருஞ்சீர முள்ளிசுக்கு
திப்பிலியு மருந்தெல்லாஞ் சேர்த்திடாயே.

சேர்த்துவிடு சமனுக வறுத்துக்கொண்டு
செப்புவேன் பசுவின்வெண்ணெய் சேர்த்துக்காய்ச்சி
வார்த்துவிடு வறுத்துவிடு சிறுகரண்டிநெய்தான்
மாந்தமது பதினெட்டு வகையுந்தீரும்

| | |
|---|---|
| குப்பைமேனிச்சாறு | 1 படி |
| சிறுபூனைக்காலி | 1 பலம் |
| இண்டு | 1 ,, |
| வறட்பூலா | 1 ,, |
| விடத்தலை | 1 ,, |
| வேலிப்பருத்தி | 1 ,, |
| கோடகசாலை | 1 ,, |

இவற்றின் கொழுந்துகளை போதுமான அளவு சேகரித்துக்கொண்டு,

| | |
|---|---|
| கருஞ்சீரகம் | 1 ,, |
| உள்ளிப்பூண்டு | 1 ,, |
| சுக்கு | 1 ,, |
| திப்பிலி | 1 ,, |

இவற்றை வறுத்துப் பொடி செய்து கொண்டு மேற் கண்ட சாறு கொழுந்துகள் இவற்றுடன் சேர்த்து பசுவெண் ணெயும் கூட்டி, அடுப்பிலேற்றிக் காய்ச்சிப் பதத்தில் வடிகட்டி வைத்துக் கொள்ள வேண்டும்.

**அளவு**: சிறுகரண்டி

**தீரும் நோய்கள்**: 18 வகை மாந்தங்கள்

## 96. குட்டத்திற்கு எண்ணெய்

347 தீர்த்துவிடு எண்ணெயொன்று குட்டத்துக்குத்
திறமான மால்தேவி கழஞ்சுமூன்று
பார்த்துவிடு கெந்தகந்தான் கழஞ்சியொன்று
பாலகனே இவையிரண்டும் பொடியாய்ப்பண்ணே.

348 பண்ணியே எண்ணெய்தனிற் போட்டுக்கிண்டி
பதருதே இலுப்பைவிற கெரிக்கவேண்டும்
எண்ணியே கடுகுபதம் போலேயானல்
இறக்கியே நிதம்ரண்டு காசெடைதான்கொண்டு
உண்ணவே புளியுப்புச் கசப்புமாகா
உற்றவாவின் பாலோடு சீனியாகும்
மண்ணிலே மானிடர்க்கு வந்தகுட்டம்
வாரிதனிற் புக்கோடும் மைந்தாகேளே.

| | |
|---|---|
| சுத்தித்த அரிதாரம் | 3 கழஞ்சு |
| சுத்தித்த கெந்தகம் | 1 ,, |
| எண்ணெய் | தேவையான அளவு |

முதலிரண்டு சரக்குகளையும் குழிக்கல்லிலிட்டு நன்ருக அரைத்துப் பொடி செய்து கொண்டு, எண்ணெயோடு கலந்து, நன்ருக உறவுபடக்கிண்டி, அடுப்பேற்றி இலுப்பை விறகால் சிறுதீயாக யெரித்து கடுகு பதத்தில் இறக்கி ஆறவைத்துக் கொள்ள வேண்டும்.

**அளவு**: ஒரு நாளைக்கு இரண்டு காசெடை.

**பத்தியம்**: புளி, உப்பு, கசப்பு இவற்றை நீக்கவேண்டும். பசுவின்பால் சீனி சேர்த்துக் கொள்ள வேண்டும்.

**தீரும் நோய்கள்**: பெருநோய்.

## 97. குட்டத்திற்கு மலைபாம்பெண்ணெய்

349 மைந்தனே குட்டநோய் கிரந்திசூலை
மகத்தான விப்புருதி பிளவை தீர
சுந்தரமே எண்ணெயொன்று சொல்லக்கேளு
துரிசுதுத்தம் அரிதாரங் கெந்திலிங்கம்
முந்துமே வெள்ளையொடு கௌரிசூத
முழுநாபி எட்டிவிதைக் கரியசீரம்
இந்தவகை மருந்தெல்லாங் கழஞ்சிரண்டு
என்மகனே பொடிபண்ணி எடுத்திடாயே.

350 எடுத்திட்டுப் பாண்டமதிற் புங்கனெண்ணெய்
ஏரண்டத் தெண்ணெயொடு நிம்பஎண்ணெய்
கடுத்திட்ட வகைமூன்று படிதான்மூன்று
கண்டாயே சேங்கொட்டை பலமுமூன்று
மடித்திட்ட மயிலிறகு பலந்தான்மூன்று
மலைப்பாம்புக் கண்டமது பலந்தாறு
தொடுத்திட்ட சங்கன்வேர் பலந்தாறு
தூளாக்கி எண்ணெயொடு பாண்டஞ்சேரே.

351 சேர்த்துவிடு மருதோன்றி அழிஞ்சில்வேருஞ்
சேர்த்துநீ குழித்தைலம் படிகாலப்பா
வார்த்துவிடு பாண்டத்தி லெல்லாமொன்றாய்
வாகாக ஏழுதினம் ரவியில்வைத்து
நேர்த்தியடா கெருடனுடக் கிழங்குகண்டம்
நீபோடு பலம்நான்கீ ருள்ளிநான்கு
சார்த்திடவே சங்கங்குப்பி படிதானொன்று
தான்விட்டுச் சிறுகொதியாய் தாக்கிமூட்டே.

352 மூட்டுவாய் மயிலிறகு கரையுமட்டும்
உத்தமனே எண்ணெய்தனை வடித்துவாங்கு
நீட்டுவாய் கழஞ்சியரை அந்திசந்தி
நீபோடு புண்தன்னி லிந்தயெண்ணெய்
காட்டுவாய் பத்தியந்தான் மூன்றுதிங்கள்
காத்திருக்கில் தீருநோய் கழறக்கேளு
மாட்டுமே குட்டமது எழுபத்திரெண்டும்
வருகிரந்தி கரப்பனொடு சூலைபோமே.

353 சூலையொடு பிளவைபுற்று கண்டமாலை
தொட்டவுட னொட்டுகின்ற ஒட்டியப்புண்
மேலிட்ட பலவிரண மெல்லாந்தீரும்
வெயிலோடு காற்றுகா புணர்ச்சியாகா

வாலையடா இந்தயெண்ணெய் கொள்ளும்போது
வளருமே குறைந்தவெல்லா மைந்தாபாரு
காலிட்ட விடக்கடிகள் கடலேயோடும்
கனமான பத்தியந்தான் காருகாரே.

354 காராட்டால் மருந்துதா னென்னசெய்யும்
கருங்குறுவை யரிசிசிறு பயறுமாகும்
நேராட்டால் சம்பாப்பச் சரிசியாகும்
நீகூட்டு ஆவின்நெய் சர்க்கரையுமேதான்
சேராட்டால் சூடுகொண்டு வெடிக்குமேனி
செப்பினே னிதையறிந்து யெண்ணெயுண்ணு
போராட்டங் கோபத்தை அகலத்தள்ளு
புண்ணியனே களிம்பொன்று புகலக்கேளே.

| | | | |
|---|---|---|---|
| சுத்தித்த | துரிசு | சுத்தித்த | கௌரிப்பாடாணம். |
| ,, | துத்தம் | ,, | இரசம் |
| ,, | அரிதாரம் | ,, | நாபி |
| ,, | கெந்தகம் | ,, | எட்டிவிதை |
| ,, | இலிங்கம் | ,, | கருஞ்சீரகம் |
| ,, | வெள்ளைப்பாடாணம் | | |

வகைக்கு 2 கழஞ்சு

இவற்றைக் குழிக்கல்லிலிட்டு பொடி செய்து வைத்துக் கொள்ள வேண்டும்.

புங்கெண்ணெய்
ஏரண்டத்தெண்ணெய் வகைக்கு 3 படி
வேப்பெண்ணெய்

இவற்றை ஒரு பாத்திரத்திலிட்டு வைத்துக்கொள்ள வேண்டும்.

| | |
|---|---|
| சுத்தித்த சேங்கொட்டை | 3 பலம் |
| மயிலிறகு | 3 ,, |
| மலைப்பாம்பு கண்டம் | 6 ,, |
| சங்கன்வேர் | 4 ,, |

இவற்றைக் குழிக்கல்லிலிட்டுத் தூளாக்கி வைத்துக் கொள்ளவேண்டும்.

எண்ணெய் வைத்துள்ள பாத்திரத்தில் மேலே கூறிய இரண்டு வகைப் பொடிகளையும் சேர்த்துப் பின்னர்

மருதோன்றி வேர்
அழிஞ்சில் வேர்

இவற்றைச் சேர்த்து குழித்தைலமாக இறக்கி இதில் 1/4 படி எடுத்து மேலே கூறிய எண்ணெய் மருந்துகள் வைத்துள்ள பாத்தி ரத்திலிட்டு நன்ருகக் கலந்து, ஏழு நாட்கள் சூரிய ஒளியில் வைத்து எடுத்துக்கொள்ள வேண்டும்.

| | |
|---|---|
| கருடன் கிழங்குத்துண்டு | 4 பலம் |
| ஈருள்ளி | 4 ,, |
| சங்கங்குப்பிச்சாறு | 1 படி |

இவற்றையும் மேலே கூறிய மருந்து பாத்திரத்தில் சேர்த்து அடுப்பிலேற்றிச் சிறுதீயாக யெரித்து மயிலிறகு கரையும் பக்குவத்தில் இறக்கி, வடிக்கட்டி எடுத்துக்கொள்ள வேண்டும்.

**அளவு:** 1/2 கழஞ்சு காலே, மாலே இருவேளே. புண் களுக்கு **மேலே த**டவ வேண்டும்.

இம்மருந்தை மூன்றுமாத காலம் பத்தியத்துடன் உண்ண வேண்டும்.

**தீரும் நோய்கள்:** 72 வகைக்குட்ட நோய்கள், கிரந்தி நோய், கரப்பன், சூலே, பிளவை, புற்று, கண்டமாலே, தொட்ட வுடன் ஒட்டிக்கொள்ளும் ஒட்டியப்புண், பலவகைப்பட்ட விரணங்கள், குட்டநோயில் கைகால் விரல்கள் குறைவு, நச்சுக்கடிகள்.

**பத்தியம்:** மருந்து உட்கொள்ளும்போது வெய்யில், காற்று, புணர்ச்சி, முதலியவற்றை நீக்க வேண்டும். மனக்கவலே, கோப உணர்ச்சி இவைகளே நீக்க வேண்டும்.

**ஆகும் பொருள்கள்:** கருங்குறுவையரிசி, சிறுபயறு சம்பாப் பச்சரிசி, பசுநெய், சர்க்கரை முதலியவை.

**குறிப்பு:** இம்மருந்தை உட்கொள்ளும் காலத்து மிகவும் கடுமையாகப் பத்திய விதிகளேக் கடைப்பிடிக்க வேண்டும். அப்படிக் கடைப்பிடிக்காவிடில் உடலில் சூடு கண்டு வெடிப் புகள் தோன்றும். இம்மருந்தை உட்கொள்ளுபவர் இதை நன்ருக அறிந்து கொள்வது அவசியம்.

## 98. விரணக் களிம்பு

355 புகலரிய வீரமொடு ரசகற்பூரம்
புதியதொரு சாதிலிங்கம் வகைதான்மூன்று
செகமறிய வகைக்கிரண்டு கழஞ்சிதூக்கு
சேரடா ஆறுபங்கு மேதிநெய்யை

பகல்முழுது மரைத்துநீ குளிர்சலத்திலிட்டு
பாரடா அதையெடுத்து நீரைவாங்கி
இகமதனில் மானிடர்க்குப் புண்ணிலிட்டால்
எழுந்தபல விரணமெல்லா மேகுந்தானே.

356 ஏகுமடா தர்மமது பெரிதென்றெண்ணி
ஏழையைப் பார்த்தன்னமிடக் கர்மந்தீரும்
போகுமடா வைத்தியர்க்கு மனம் நோவாமல்
பொன்னோடு வஸ்திரா பரணமீந்து
தாகமடா தீருதற்கு உபசாரஞ்செய்தால்
சண்டாளப்பிணி யெல்லாஞ் சமுத்திரமேயோடும்
நாகமடா தரித்தசிவன் சொன்னமார்க்கம்
நலமென்ற வுலகத்தோர் நாடும்நாடே.

சுத்தித்த வீரம்
இரசக்கற்பூரம் வகைக்கு 2 கழஞ்சு
சாதிலிங்கம்

இவற்றை குழிக்கல்லிலிட்டு 36 கழஞ்சு எருமை நெய்விட்டு நன்கு ஒரு பகல் முழுவதும் அரைத்து வழித்தெடுத்து, குளிர்ந்த நீருள்ள பாத்திரத்திலிட்டு நன்றாகக்கலக்கி, பின்னர் நீரை நீக்கி விட்டு மருந்தை மட்டும் எடுத்து வைத்துக் கொள்ள வேண்டும்.

**குறிப்பு:** மேல் உபயோகத்திற்கு மட்டும்

**தீரும் நோய்கள்:** புண்களின் மீது தடவி வர பலவகைப் பட்ட விரணங்கள் குணமாகும்.

**தர்மம் செய்தலின் சிறப்பு:** ஏழைகளுக்கு அன்னமிட்டுத் தர்மம்செய்ய கர்மவினைகள் நீங்கும். வைத்தியருக்கு மனம் நோவாமல் பொன்ஆடை ஆபரணங்கள் கொடுத்து உப சரித்தால் கொடிய பிணிகள் எல்லாம் தீரும்.

### 99. சண்டரசபற்பம்

357 நாடுகின்ற சண்டரச பற்பந்தன்னை
நாட்டுகிறேன் வெடியுப்பு பலந்தானூறு
ஆடுகின்ற சவுக்கார மைம்பதாகும்
அப்பனே யிரண்டையுந்தான் அரைத்துக்கொண்டு
கூடுகின்ற கலசத்தில் அரைவாசியிட்டு
கூர்மமா மெந்திரத்தைக் கவிழ்த்துமூடித்
தேடுகின்ற சீலமண் ஏழுசெய்துலர்த்தி
திறமாக அடுப்பேற்றித் திராவகத்தைவாங்கே.

358 வாங்கியே குப்பிதனில் அடைத்துக் கொண்டு
வாகான லிங்கமது பலந்தானாலு
தாங்கியே கல்வத்தி லிட்டுக்கொண்டு
சாமமது திராவகத்தா லாட்டிவாங்கி
ஓங்கியே வில்லைதட்டி சட்டிதனிலிட்டு
ஒப்புரவாய் சட்டிக்கு முருக்கம்பூச்சாறு
ஏங்கியே போகாமல் பூசிமுடி
எழுசீலை மண்செய்து அடுப்பிலேற்றே.

359 ஏற்றியே சாமமது எரித்திட்டாற்றி
எடுத்துப்பார் பதங்கமது மேலேநிற்கும்
தேற்றியே மயிற்குச்சால் துடைத்துவாங்கி
திறமாக அடிச்சட்டி மருந்துசேர்த்து
மாற்றியே திராவகத்தில் சாமமாட்டி
வாங்கிவில்லை செய்துமுன்போ லெரித்துப்போடு
சாற்றியே ஏழுதர முன்போலப்பா
தப்பாது செயரசந்தான் தவளமாமே.

360 தவளநிற மாகியதோர் தளபற்பத்தைத்
தாலவெல்லந் தனிற்பணந்தான் வைத்துக்கொள்ள
துவளுகின்ற வாதமொடு பக்கசூலை
தொலையாத கிரந்திப்புற்று குட்டந்தானும்
நுவளுகின்ற சூலையொடு கரப்பான்தானும்
நொடிக்குமுன்னே கொல்லுகின்ற ருத்திரவாயு
புவனமதி லண்டாது பத்தியமேவேணும்
புகலுகிறே னின்னமொன்று புகலக்கேளே.

| | |
|---|---|
| சுத்தித்த வெடியுப்பு | 100 பலம் |
| சுத்தித்த சவுக்காரம் (வழலை) | 50 ,, |

இவ்விரண்டையும் கல்வத்திட்டு நன்றாக அரைத்தெடுத்து ஒரு கலசத்தில் அரைவாசியிருக்கும்படியிட்டு கூர்ம எந்திரத்தைக் கவிழ்த்து மூடி ஏழு சீலைமண் செய்துலர்த்திக் கொண்டு அடுப்பேற்றி, எரித்து, திராவகத்தை வடித்து ஒரு குப்பியில் வைத்துக் கொள்ள வேண்டும். சுத்தித்த இலிங்கம் 4 பலம் எடுத்துக் கல்வத்திட்டு, முன்பு தயாரித்து வைத்துள்ள திராவகத்தைத் தேவையான அளவுவிட்டு ஒரு சாம நேரம் நன்கு நெகிழ வரைத்து, வழித்து, வில்லை தட்டி உலர்த்திக் கொள்ள வேண்டும். ஒரு சட்டியில் மேற்படி வில்லையை வைத்து, முருக்கம் பூச்சாறு பூசி, உலர்ந்த வேறொரு சட்டியால் மூடி, ஏழுசீலைமண் செய்து உலர்த்திக் கொண்டு, பின்பு அடுப்பேற்றி ஒரு சாமநேரம் எரித்தெடுத்து ஆறியபின் பார்க்க மேற்

**சட்டியில்** மருந்து பதங்கமாக ஒட்டியிருக்கும். இதை மயிற் குச்சியால் துடைத்து எடுத்துக் கொண்டு பின்னர் அடிச்சட்டியில் தங்கியுள்ள மருந்தையும் சேர்த்து கல்வத்திட்டு முன் போல் திராவகம் விட்டரைத்து, வழித்து வில்லை செய்து, முருக்கம்பூச்சாறு பூசி உலர்ந்த சட்டியில் சட்டியால் மூடி சீலை மண் செய்து அடுப்பேற்றி எரித்தெடுக்க வேண்டும். இவ்வாறு ஏழுமுறை முன்போல் செய்தெடுக்க செயரசம் வெண்மையான பற்பமாகயிருக்கும். இதுவே சண்டரச பற்பமாகும்.

**அளவு**: பணவெடையளவு என்று கூறப்பட்டிருப்பினும் 1 அரிசியெடை கொடுப்பதே சிறப்பாகும்.

**துணை மருந்து**: பனைவெல்லம்.

**தீரும் நோய்கள்**: வாதநோய், பக்கசூலை, கிரந்திநோய், புற்றுநோய், குட்டநோய், சூலைநோய், கரப்பன், உருத்திரவாயு.

**பத்தியம்**: பத்தியமாக உண்ண வேண்டும் என்பதால் இரசமருந்துகளுக்கு உள்ள பத்தியங்களை மேற் கொள்ள வேண்டும்.

## 100. இரசபற்பம்

361 கேளப்பா சீனமது பலந்தானூறு
கெடியான கம்பியுப் பெழுபத்தைந்து
தாளப்பா சவுக்கார மிருபத்தைந்து
தாக்கியே முன்போலே தீநீர்வாங்கி
கோளப்பா வாராம லடைத்துக்கொண்டு
குப்பிவைப்பு லிங்கமதை கல்வத்திட்டு
தூளப்பா திராவகத்தால் கடிகைமூன்று
துவளவரை அடைதட்டி சட்டியினிற்போடே.

362 சட்டிமேல் சட்டிக்கு முருக்கிலையின்சாறு
தாக்கியே பூசிநன்றுய்க் கவிழ்த்துமூடி
ஊட்டியே சீலைமண்ணேழ் பொருந்தச்செய்து
உத்தமனே நாழிகைமூன் றெரித்து ஆற்றி
அட்டியில்லா விதத்தெடுத்த பதங்கத்தோடு
அடியில்நின்ற பற்பமுடன் அரைமுன்னீரால்
கெட்டியாய் வில்லைதட்டிச் சட்டிதனிலிட்டுக்
கேள்மகனே மேற்சட்டி பூசக்கேளே.

363 பூசுவாய் வேலியென்ற பருத்திச்சாறு
பொருந்தமண்செய் தெரித்திடுவாய் கடிகைமூன்று
நேசமாய் ஆறியபின் பதங்கத்தோடு
நிலைத்துநின்ற தளத்தோடு அரைமுன்போலே

வாசமாய் மூன்றுக்கு முருங்கைச்சாறு
மக்களே நாலுக்குக் கொடிவேலிச்சாறு
தேசிகனே அஞ்சுக்கு கொடுப்பைச்சாறு
செப்பாதே யாறுக்கு மல்லிகைப்பூச்சாறே.

364 சாறுகேள் ஏழுக்கு உப்பிலியின்சாறு
தப்பாது தளபற்ப மெடைபோகாது
வாறுகே ளனுபானத் தோடேயுண்ண
வாதமொடு சன்னிபதி னெட்டுந்தீரும்
கூறுவேன் சீனப்பாச் சூரணத்திற்
கொடுத்திடவே சூலையொடு கிரந்திதீரும்
வீறுகேள் அரிதார பற்பத்தோடுண்ண
வீருகுங் குஷ்ட்டமெல்லா மேகுந்தானே.

365 ஏகுமே புளியாரை நெய்யிற்கொள்ள
என்னசொல்வேன் கிராணியெல்லா மேகும்பாரு
தாகுமே கந்தாதி லேகியத்தில்
தாதுமெத்த வர்த்திக்கு மூலம்போகும்
வேகாமல் வல்லாதி தன்னிற்கொள்ள
வெடிசூலை யரிகிரந்தி வெருண்டேபோகும்
பாகமாம் அமிர்தரச சஞ்சீவிதன்னில்
பதித்துண்ண மேகமெல்லாம் பறக்குந்தானே.

366 தானென்ற பத்தியத்தைச் சொல்லக்கேளு
தனிப்பசுவின் நெய்பாலும் பயறுமாகும்
வானென்ற முருங்கையிலைப் பிஞ்சுமாகும்
வழுதலையின் பிஞ்சுடனே அவரைப்பிஞ்சாம்
கானென்ற தூதுவளைப் பிஞ்சுமாகும்
கண்டங்கத் தரிமணத்தக் காளியாகும்
மேனென்ற புளியாரைக் கொடுப்பையாகும்
மேன்மக்காள் புளிகசப்பை யெண்ணெண்ணுதே.

| | |
|---|---|
| சீனக்காரம் | 100 பலம் |
| வெடியுப்பு | 75 ,, |
| சவுக்காரம் (வழலை) | 25 ,, |

முன்பு சண்டரசபற்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முறைப்படி, இங்கு கூறிய மூன்று மருந்துகளிலிருந்தும் தீநீர் இறக்கி வைத்துக் கொள்ள வேண்டும்.

குப்பிவைப்பு இலிங்கத்தைக் கல்வத்திட்டுப் பொடி செய்து, மேலே கூறப்பட்டுள்ள தீநீர் தேவையான அளவிட்டு மூன்று கடிகை நேரம் நன்றாக நெகிழ வரைத்து வில்லை (அடை)

தட்டி உலர்த்தி ஒரு சட்டியிலிட்டு, பின்னர் வேறொரு சட்டியில் உட்பாகத்தில் முருங்கிலைச்சாறு பூசி உலர்த்திக் கொண்டு அச் சட்டி கொண்டு மூடி, ஏழு சீலை மண் செய்து உலர்த்திக்கொண்டு அடுப்பேற்றி மூன்று கடிகை நேரம் எரித்து ஆறியபின் பார்க்க மேல் சட்டியில் மருந்து பதங்கமாக இருக்கும். இப்பதங்கத்தை மயிர்க்குச்சியால் சுறண்டியெடுத்து, அதோடு கீழ்ச்சட்டியிலுள்ள பற்பத்தையும் சேர்த்து, கல்வத்திட்டு தீநீரால் அரைத்து, வழித்து வில்லை தட்டி, உலர்த்தி ஒரு சட்டியிலிட்டு, பின்னர் வேறொரு சட்டிக்குட்புறத்தில் வேலிப்பருத்திச் சாறு பூசி உலர்த்தி, முன் சட்டியை மூடி சீலைமண் செய்துலர்த்தி அடுப்பேற்றி மூன்று கடிகை நேரம் எரித்தெடுத்து ஆறவைத்து எடுத்துப்பார்க்க மேற் சட்டியில் பதங்கமேறியிருக்கும். கீழ்ச்சட்டியில் பற்பமிருக்கும். இவ்வாறு ஏழுமுறை செய்ய வேண்டும். ஒவ்வொரு முறையும் மேற்சட்டிக்கு வெவ்வேறு மூலிகைச்சாறு கொண்டு பூசிச் செய்ய வேண்டும். மூன்றும் முறை எரித்தெடுக்க முருங்கைச்சாறும், நான்காம் முறை எரித்தெடுக்க கொடிவேலிச்சாறும், ஐந்தாம் முறைக்கு கொடுப்பைச்சாறும்; ஆறும் முறைக்கு மல்லிகைப்பூச் சாறும், ஏழாம் முறைக்கு உப்பிலாங்கொடிச்சாறும் பயன் படுத்த வேண்டும். இவ்வாறு செய்தெடுத்த இரசபற்பம் எடை குறையாமல் சிறந்த முறையில் அமைந்திருக்கும்.

**துணைமருந்தும் தீரும் நோய்களும்:** பனைவெல்லத்தில் இரசபற்பத்தை அனுபானித்துக் கொடுக்க வாதநோய், 18 வகை சன்னி தீரும். 2. பரங்கிபட்டைச் சூரணத்தில் உட்கொள்ள சூலைநோய், கிரந்திநோய், குணமாகும். 3. அரிதார பற்பத்துடன் சேர்த்து மென்றுண்ண குட்டநோய் குணமாகும். 4. புளியாரை நெய்யில் உட்கொள்ள கிராணிநோய் தீரும். 5. கந்தாதி இளகத்தில் உட்கொள்ள உடல்தாதுக்கள் வன்மையடையும். மூலநோய் குணமாகும். 6. வல்லாதி இளகத்தில் உட்கொள்ள வெடிசூலை அரிகிரந்தி குணமாகும். 7. அமிர்தரசசஞ்சீவி எனும் மருந்தில் பொதிந்துட் கொள்ள எல்லாவகையான மேகநோய்களும் குணமாகும்.

**பத்தியம்:**

**ஆகும் பொருள்கள்:** பசும்பால், பசுநெய், பயறு, முருங் கையிலை, முருங்கைப்பிஞ்சு, கத்தரிப்பிஞ்சு, அவரைப்பிஞ்சு, தூதுவளைப்பிஞ்சு, கண்டங்கத்திரி, மணத்தக்காளி, புளியாரை, கொடுப்பை முதலியவற்றைச் சேர்த்துக் கொள்ளலாம்.

**ஆகாப் பொருள்கள்:** புளி, கசப்பு.

## 101. தாளக பற்பம்

367 எண்ணரிய தாளகத்தைப் பற்பம்பண்ண
ஏவராலும் முடியாது சித்தர்க்காகும்
ஒண்ணரிய நாதாக்க ளாடுமோட்டம்
உத்தமனே வாதத்தி லுயர்ந்தவேதை
உண்ணரிய மானிடர்க்கு நோய்களேது
உத்தமமாம் வித்தையிது உயர்த்திமெத்த
பண்ணரிய சுந்தரமே சொல்லக்கேளு
பாசமற்ற ஞானிகள்தான் பண்ணுவாரே.

368 பண்ணப்பா மேனிச்சாற் படிதான்ரெண்டு
பழங்காடி ரெண்டுபடி கல்லுச்சுண்ணங்
கண்ணப்பா தேங்காயின் அளவாயிட்டு
கல்வமத்தால் கடைந்திடுவாய் கடிகைரெண்டு
நண்ணப்பா தாளகந்தான் பலமிரண்டு
நடுநிற்க துலாந் திரமாகக் கட்டி
எண்ணப்பா அடுப்பேற்றி எரிநேர்ப்பாக
இருந்ததண்ணீர் வற்றினபின் எடுத்துக் கொள்ளே.

369 எடுத்தபுளி பலம்பத்து பாண்டத்திட்டு
இரவிநீர் படிநாலுங் கூடவிட்டு
அடுத்ததினம் மூன்றங்கே கடைந்துவாநீ
அப்பனே தாளகந் துலாந்திரங்கட்டிக்
கொடுத்தசிறு தீயிட்டுக் கனிபோலானால்
குலாவியதோர் தாளகத்தை எடுத்துக்கொண்டு
கடுத்தஅப்பைச் சாற்றினிலே சாமம்ரெண்டு
கனகமென்ற தாளகத்தை அரைத்திடாயே.

370 அரைத்திட்டு ரூபாய்போல் வில்லைதட்டி
அப்பனே உலரவைத்துப் பின்புகேளு
நிரைத்திட்ட முன்களியை அடுப்பிலேற்றி
நீர்வற்ற வறுத்திரண்டு பங்குசெய்து
உரைத்திட்ட சட்டிதனில் பங்கொன்றிட்டு
ஒப்புரவா யமுத்தியதில் வில்லைவைத்து
மறைத்திட்ட மறுபஞ்சு மேலேயிட்டு
வாய்க்கிணங்கு சட்டிகொண்டு கவிழ்த்துமூடே.

371 மூடியே சீலைமண்ணேழ் செய்துலர்த்தி
மூதண்ட வயிரவர்க்கும் நிருவாணிக்கும்
தேடியே பானமது சுத்திவைத்து
செபஞ்செய்து அடுப்பேற்றி எரிநேர்ப்பாக

கூடியே எண்சாம மானபின்பு
குளிர்ந்தபின்பு எடுத்துப்பார் கறுத்துப்போகும்
வாடியே மயங்காதே அப்பைச்சாற்றில்
மாட்டியரை வில்லேதட்டி உலரப்போடே.

372 உலர்ந்தபின்பு முன்சாம்ப லமுரியாலே
ஒப்புரவாய் பதங்கெடுத்து சட்டிநடுக்குவித்து
மலர்ந்திடவே அடுப்பேற்றி எரிப்பாய் சாமம்
மைந்தனே விபூதிபோல் நீறிப்போகும்
மலர்ந்தஅண்ட நீராலே அரைத்துவாங்கி
அகலிரண்டு செய்துலர்த்தி வில்லேவைத்து
புலர்ந்தஅகல் மேல்மூடிச் சீலேசெய்து
புகழாகக் குக்குடமாய்ப் புடத்தைப்போடே.

373 போடவே நீறியது வெள்ளேயாகும்
பொன்னுன வயிரவனேப் பூசைபண்ணு
வாடவே வேண்டாநீ கலிவராது
மக்களே பணவெடைகால் நிறுத்துக்கொண்டு
கூடவே சண்டரச பற்பஞ்சேர்த்து
- கொடுத்திடவே குட்டமொடு குறைநோயெல்லாம்
ஓடவே கொல்லுமடா கிரந்தியேது
உடல்கெடுத்த சூலேயொடு வாதம்போமே.

374 வாதமொடு பவுத்திரங்கள் கண்டமாலே
வளருகின்ற புற்றுடனே பிளவைவிப்புருதி
காதமென்ற தூரமல்ல வோடும்வேகம்
கலங்காதே பத்தியத்தைக் காருகாரு
ஆதியென்ற வழலேதன்னே அணேத்தாயானுல்
அப்பனே காட்டுமுன்னே அலறிவாங்கும்
பேதமென்ற மூடருக்குக் கருச்சொல்லாதே
பித்தர்களேப் போலிருக்கப் பிழைப்பாய் நீயே.

| | |
|---|---|
| தாளகம் | 2 பலம் |
| கல்சுண்ணம் | ஒரு தேங்காயளவு |
| குப்பைமேனிச்சாறு | 2 படி |
| பழங்காடி | 2 படி |

இவற்றில் குப்பைமேனிச்சாற்றையும் பழங்காடியையும் ஒரு பாத்திரத்திலிட்டு, அதில் கல்சுண்ணத்தையிட்டு மத்தால் இரண்டு கடிகை நேரம் நன்ருகக் கடைந்து கொள்ள வேண்டும். பின்னர் தாளகத்தை அச்சட்டியின் மத்தியில் தூலாயயந்திர மாகக் கட்டி, அடுப்பேற்றி பாத்திரத்தில் உள்ள நீர் சுண்டும்

வரை எரித்துப் பின்னர் தாளகத்தை எடுத்துக் கொள்ள வேண் டும். ஒரு பாத்திரத்தில் 10 பலம் புளியிட்டு அதில் 4 படி இரவிநீர் (இரவிசெய நீர்) வார்த்து மூன்று நாட்கள் மத்தால் கடைந்து கொள்ள வேண்டும். பின்னர் தாளகத்தை மறுபடியும் துாலாயந் திரமாகக் கட்டி சிறுதீயிட்டெரித்து புளியும் இரவி நீரும் களி போல் பக்குவத்திற்கு வந்ததும் அடுப்பை விட்டிறக்கி தாளகத்தை எடுத்துக் கொண்டு, பாத்திரத்திலுள்ள களியையும் எடுத்து வைத்துக் கொள்ள வேண்டும். பின்னர் இவ்வாறு பாகப் படுத்தப்பட்ட தாளகத்தை குழிக்கல்லிலிட்டு தேவையான அளவு அப்பைச்சாறு விட்டு இரண்டு சாமநேரம் நன்றாக நெகிழ வரைத்து வழித்தெடுத்து ரூபாய் நாணயத்தைப் போல் வில்லை தட்டி உலர்த்தி வைத்துக் கொள்ள வேண்டும்.

முன்பு தனியே எடுத்து வைக்கப்பெற்றுள்ள களியை ஒரு சட்டியிலிட்டு அடுப்பேற்றி அதிலிருக்கும் நீர்வற்றும் வரை வறுத்தெடுத்துக் கொள்ள வேண்டும். இதை இரண்டு பங்காக்கி ஒரு பங்கை சட்டியிலிட்டு அதில் முன்பு சித்தப்படுத்தி வைத்திருக் கிற வில்லையை யழுத்தி வைத்து, அதன் மேல் மறு பங்கு வறுத் தெடுத்த சாம்பலையும் இட்டு மேல்சட்டி கொண்டு மூடி ஏழு சீலைமண் செய்துலர்த்திக் கொள்ள வேண்டும். பின்னர் இதை அடுப்பேற்றி ஒரே தீயாக எட்டுசாம நேரம் எரித்தெடுத்து ஆறிய பின் பார்க்க மருந்து கருமை நிறமடைந்திருக்கும். இவ்வாறு கருமை நிறமடைந்த மருந்தைக் கல்வத்திலிட்டு அப்பைச்சாறு விட்டு நன்கு அரைத்து வில்லை தட்டி உலர்த்திக் கொள்ள வேண்டும்.

முன்பு சட்டியில் வில்லையை வைத்தெரித்த சாம்பலுடன் அமுரி நீர் சேர்த்து ஒரு பாத்திரத்திலிட்டு அடுப்பேற்றி ஒரு சாமநேரம் எரித்தெடுக்க விபூதியைப் போல நீற்றிருக்கும். இதை முட்டை வெண்கரு விட்டரைத்து பதத்தில் இரண்டு அகல் செய்து உலர்த்திக் கொள்ள வேண்டும். இவ்வகையில் மேலே சித்தப்படுத்தி வைத்திருக்கிற வில்லையை வைத்து மேலகல் கொண்டு மூடி, சீலை மண் செய்து உலர்த்திக் கொண்டு குக்குட புடமிட்டெடுக்க தாளகம் சிறந்த முறையில் பற்பமாகியிருக்கும்.

**அளவு**: 1/4 பனவெடை.

**தீரும் நோய்கள்**: சண்டரசபற்பம் சேர்த்து உட்கொள்ள பெருநோய், குறைநோய், கிரந்தி, சூலை, வாதநோய், பவுத்திரங் கள், கண்டமாலை, புற்றுநோய், பிளவை விப்புருதி, ஆகிய நோய்கள் தீரும்.

**குறிப்பு:** பத்தியமாக இருந்து மருந்து சாப்பிட வேண்டும். இம்மருந்தோடு வழலை (முப்பூ) சிறிது கூட்டிக் கொடுக்க மிகச் சிறந்த பலனை கொடுக்கும்.

## 102. தாளகக் கட்டு

375 பிழைப்பதற்கு தாளகத்தின் கட்டைக்கேளு
பிசகாதே தாளகத்தின் கட்டிவாங்கி
திழைப்பதற்கு குறுகினவாய்க் கலசந்தன்னில்
திருகுகள்ளிப் பாலதனில் நிறையவிட்டு
உழைப்பதற்கு தாளகத்தை இட்டுமூடி
ஒருதிங்கள் புதைத்தெடுத்து நண்டுச்சாறு
தழைப்பதற்குள் விட்டுமுன்போல் புதைத்துப்போடு
தப்பாமல் திங்கள்சென்று எடுத்துக்கொள்ளே.

376 கொள்ளடா பெருவாயினீர் படிதானுலு
கூறுத பழம்புளியும் பலந்தானெட்டு
விள்ளடா ஊசிநீர் படிதானுலு
விட்டுநீ பாண்டத்தில் கடைந்துகொண்டு
தள்ளடா மூன்றுநா ளானபின்பு
தாளகத்தை துலாந்திர மாகக்கட்டி
மெள்ளடா அடுப்பேற்றித் தீபம்போலே
விறகதுவுந் தென்னமட்டை யாகுந்தானே.

377 தானென்ற மெழுகதுபோல் சுண்டிற்றுனல்
தாளகத்தை யெடுத்துநீ வைத்துக்கொண்டு
ஊனென்ற மெழுகுதனை வில்லைதட்டி
உலர்த்தியே குழித்தைலம் வாங்கிக்கொண்டு
நானென்ற தயிலமதில் வீரம்பூரம்
நலமாகப் பொடித்திட்டுக் கடக்கவைத்து
தேனென்ற மால்தேவி அயக்குகையில்வைத்து
செங்குமரிப் பாலதுவுஞ் சுருக்குத்தாக்கே.

378 சுருக்கடா யிருசாமம் பூரநீறுஞ்
சொல்லரிய அண்டநீ ரதுவுங்கூட்டு
இருக்கடா வகைக்கிரண்டு சாமந்தாக்கு
என்மகனே முன்தயிலம் பூசிவாட்டு
குறுக்கடா இந்தவழி உலகத்துள்ளே
கூறுதே யிருசாமம் பூசிப்பூசி
முறுக்கடா வாட்டதிலே சிவக்கமட்டும்
முறையாக ரவிமதிக்கு ளீந்திடாயே.

379 ஈந்திடவே கறுப்பாகி யிருக்கும்பாரு
எடைக்கெடை நீவங்கத்தைக் குத்தியூது
வாய்த்திடுமே வயதெட்டுக் குறையாதப்பா
வலுவான சயரோக மாந்தைதீரு
முய்த்திடுமே சுரமனைத்துங் காசரோகங்கள்
ஓடிவிடும் அனுபானம் அறிந்துபோடு
ஆய்ந்திடவே பலநூலும் வெளியாய்க்காணும்
அப்பனே பதங்கமொன்று அறையக்கேளே.

தாளகத்தை ஒரே கட்டியாக இருக்கும்படி எடுத்துக் கொள்ள வேண்டும். வாய்குறுகலாக உள்ள ஒரு கலசத்தில், திருகுகள்ளிப்பால் நிறைய விட்டு, அதில் தாளகக்கட்டியையிட்டு, கலசத்தை மூடி சந்துவாய்க்குச் சீலே மண்செய்து, அக்கலசத்தைப் பூமியில் ஒரு மாத காலம் புதைத்தெடுத்து தாளகத்தை எடுத்துக் கொள்ள வேண்டும். இதே போல் நண்டுச் சாற்றையும் கலசத்தி லிட்டு அதில் தாளகத்தைப் போட்டு, மூடி ஒரு மாதகாலம் புதைத் தெடுத்து, தாளகத்தை எடுத்து வைத்துக் கொள்ள வேண்டும்.

| | |
|---|---|
| வாய்நீர் | 4 படி |
| பழய புளி | 8 பலம் |
| ஊசிநீர் | 4 படி |

இவற்றை ஒரு பாண்டத்திலிட்டு மத்தால் நன்றுகக் கடைந்து மூன்று நாட்களான பின்பு தாளகத்தைத் தோலாயந் திரமாகக் கட்டித் தொங்கவிட்டு, அடுப்பேற்றி தென்னமட்டை விறகால் தீபம்போல் எரிக்க வேண்டும். பாத்திரத்திலுள்ள நீரும் புளியும் மெழுகுபோல் சுண்டிய பக்குவத்தில் தாளகத்தைத் தனியே எடுத்து வைத்துக் கொள்ள வேண்டும். இம்மெழுகை வில்லைதட்டி உலர்த்திக்கொண்டு முறைப்படி குழித்தைலம் இறக்கி வைத்துக் கொள்ள வேண்டும். இத்தயிலத்தில் சுத்தி செய்த வீரத்தையும் பொடித்துப் போட்டு வைத்துக் கொள்ள வேண்டும்.

தாளகத்தை அயக்குகையில் வைத்து செங்கற்முழைச் சாற்றுல் 2 சாம நேரம் சுருக்குக் கொடுக்க வேண்டும். இதே போல பூரபற்பமும் கோழி முட்டை வெண்கருவும் கலந்து தாள கத்திற்கு இரண்டு சாம நேரம் சுருக்குக் கொடுக்க வேண்டும். இவ்வாறு சுருக்குக் கொடுத்தெடுத்த தாளகத்திற்கு முன்பு செய்து வைத்துள்ள குழித்தைலம், நன்கு பூசி அனலிலிட்டு வாட்ட வேண்டும். இவ்வாறு இரண்டு சாம நேரம் குழித்தைலம் பூசிப் பூசி தாளகம் சிவக்கும் வரை வாட்டி எடுத்து சூரிய ஒளியிலும், சந்திர ஒளியிலும் வைத்தெடுக்கத் தாளகம் கருமை நிறமடைந் திருக்கும். பின்னர் இதனெடைக்குச்சமன் வங்கம் சேர்த்து ஊதி யெடுக்கவேண்டும். ஊதியெடுக்க எட்டுமாத்தாகும்.

**அளவு:** 1/2 அரிசிஎடை

**தீரும் நோய்கள்:** தகுந்த அனுபானத்தில் தேனில் உட்கொள்ள இளைப்பு, நோய், உளமாந்தை, எல்லாவகையான சுரங்கள், காசநோய்.

### 103. இரசபதங்கம்

380 அறையக்கேள் சுத்திசெய்த சூதந்தானும்
அப்பனே பலம்நாலு நிறுத்துக்கொண்டு
பறையக்கே ளடிகனத்த பாண்டந்தன்னில்
பாய்ச்சடா கறியுப்புப் படிதான்நாலு
துறையக்கேள் கொடிவேலி விளைந்தவேரை
சொர்ணமென்ற நாதநீ ரண்டநீரால்
முறையக்கேள் சாமமொன்று ஆட்டிவாங்கி
மூசைசெய்து சூதத்தை அதற்குட்சேரே.

381 சேரப்பா உப்பின்மேல் குகையைவைத்து
திறமான பாண்டத்தால் பொருந்தமூடி
காரப்பா வச்சிரமாஞ் சீலைசெய்து
கனமான வாலுகையில் நாலுசாமந்
தீரப்பா வேம்பினுடை விறகுபோட்டு
தீயதுகா டாக்கினிதான் எரித்துஆற்றி
ஆரப்பா எடுத்தப்பா மேற்பாண்டத்துள்
ஆனவிந்து கற்பமதா யிருக்குந்தானே.

382 இருக்குமந்த பற்பத்தை யெடுத்துநீயும்
ஏமமென்ற வயிரவன்முன் வைத்துப்போற்று
உரைக்கின்ற கருநாகம் பத்துக்கொன்று
ஊட்டவே ஒன்பதரை யப்புக்கேக
விரைக்கின்றேன் வெள்வங்க நீரைவாங்கு
மேலான விந்தையிது வெகுபதனமப்பா
நிரைக்கின்றேன் வஞ்சமுற்ற சண்டாளருக்கு
நீகருவைக் காட்டாதே நிசஞ்சொன்னேமே.

383 சொன்னதொரு சூலைபதி னெட்டும்போகும்
துடியான கிரந்தியரை யாப்புப்போகும்
வண்ணமுள்ள பொன்போலத் தேகமாகும்
வச்சிரம்போல் மேனியது வலுத்துப்போகும்
மின்னமொரு பத்தியத்தைச் சொல்லக்கேளு
மேதியுடை நெய்பாலு மோருமாகா
பின்னமொரு கைப்புடனே புளிப்புமாற்று
பிசகாமல் பத்தியமா யுண்டுதேறே.

சுத்தி செய்த இரசம் 4 பலம்
நன்ருக விளைந்தகொடிவேலி வேர் வேண்டிய அளவு

கொடிவேலி வேரை குழிக்கல்லிலிட்டு நாதநீர், அண்டநீர் இவற்ருல் ஒவ்வொரு சாமம் நன்ருக அரைத்தெடுத்து மூசை செய்து உலர்த்திக் கொண்டு இரசத்தை இம்மூசைக்குள்ளிட்டு வைத்துக் கொள்ள வேண்டும்.

ஒரு அடிகனத்த பாண்டத்துள் நான்குபடி கறியுப்புப்போட்டு இதன் மேல் மேற்படி மூசையை வைத்து மண்பானைக்கு பொருத்தமான மேல்பானை கொண்டு மூடி, சந்துவாய்க்கு வச்சிரத்தால் சீலை செய்து உலர்த்திக் கொண்டு வாலுகாயந்திரத்திலிட்டு, வேம்பு விறகு கொண்டு, காடாக்கினியாக நான்கு சாமநேரம் எரித்தெடுத்து ஆறியபின் பார்க்க மேற்பானையின் உட்பகுதியில் இரசம்பதங்கி பற்பமாக இருக்கும். இதுவே இரசபற்பமாகும்.

**அளவு**: (இந்த இரசபற்பத்தோடு 1/10 பாகம் கருநாகத்தை உருக்கிச் சேர்க்க ஒன்பதரை மாற்ருகும். வெள்வங்கத்தின் நீரை வாங்கும்).

**அளவு**: 1/2 அரிசி எடை

**தீரும் நோய்கள்**: 18 வகைசூலை, கிரந்தி, அரையாப்பு ஆகியவை தீரும். உடல் பொன்னிறமடையும். உடல் வச்சிரம் போல் வலுவடையும்.

**பத்தியம்**: எருமை நெய், பால், மோர் முதலியன.

**ஆகா**: கைப்பு, புளிப்புப்பொருள்களை நீக்கவேண்டும். மற்றும் இரச மருந்துகளுக்குரிய பத்தியங்களுடன் உண்டுவர வேண்டும்.

## 104. இரசவேக்காட்டிற்குக் குடிநீர்

384 உண்டுவரில் வாயுசூலை கட்டிற்ருனல்
உத்தமனே ஏரண்டத் தெண்ணெய் தேய்த்து
மண்டலத்தி லொன்றைவிட் டொருநாள்மூழ்க
வாயுசூலை வாங்குமடா கியாழங்கேளு
கண்டுபார் கருவேலங் காசுக்கட்டி
களிப்பாக்கும் வெற்றிலையும் மருதம்பட்டை
சுண்டிடவே எரித்திறக்கி கியாழந்தன்னை
சுகமாகக் கொப்புளிக்கச் சுகமதாமே.

இரசபற்பம் உண்டுவரும் போது வாயுசூலை உண்டானல், எரண்டத்தெண்ணெயை ஒரு மண்டலம் ஒரு நாள் விட்டு ஒரு நாள் தேய்த்து முழுக வேண்டும்.

குடிநீர்

| | | |
|---|---|---|
| கருவேலம்பட்டை | 1/2 | பலம் |
| காசுக்கட்டி | 1/2 | பலம் |
| களிப்பாக்கு | 1/2 | பலம் |
| வெற்றிலை | 1/2 | பலம் |
| மருதம்பட்டை | 1/2 | பலம் |

இவற்றை முறைப்படி குடிநீர் செய்து வாய் கொப்பளிக்க இரசவேக்காட்டினால் வந்த வாயுசூலை நீங்கும்.

## 105. மருத்துவத்தைப் பிறருக்குச் சொல்ல விதிமுறைகள்

385 சுகமாக நாகமது தரித்தவீசன்
சுந்தரிக்குச் சொல்லவென்பால் சூட்டினுள்பார்
செகமாகும் பருவதம்போல் வளருமக்காள்
தேசத்தோர் தான்பிழைக்க செப்பினேன்பார்
அகங்கொண்ட உலுத்தருக்குச் செப்பாதேநீ
ஆசைகொண்ட உலுத்தரைத்தா னகலத்தள்ளு
நிகமதுவும் முன்னைப்போ லிருந்தாராகில்
நீபன்னி ரெண்டாண்டு சோதிப்பாயே.

386 சோதித்துப் பார்க்கையிலே கலங்கானாகில்
சொல்லடா தீட்சைமுன்னே கற்பமீந்து
சாதித்து தான்பணிந்து காத்தானாகில்
தயங்காதே என்றுபூர கருவைச்சொல்லு
போதித்த வழிப்படியே நடந்தானாகில்
புகலுவாய் பிராணயக் கருவைமைந்தா
சூதத்து உனக்குதவி யானானாகில்
துவங்குகின்ற வேதைமுறை சொல்லுவாயே.

387 முறைகண்டு கருவமது வில்லானாகில்
மூதண்ட லேகியமுந் தயிலஞ்சொல்லு
நெறிகொண்ட லகிரிதன்னில் நிலைத்தானாகில்
நேமமாய்ப் பூரணசூத் திரத்தைவிட்டு
வெறிகொண்ட பூரணத்தில் நிலைத்தானாகில்
மெய்ஞ்ஞானக் கருவையுடன் விள்ளுவிள்ளு
துறைகண்டு அப்பதத்தில் காத்திருந்தானாகில்
சொல்லடா உட்கருவுந் துறையுந்தானே.

'தான்' என்ற அகந்தை கொண்டு செருக்குற்றவர்கட்கு இந்நூலைக் கூறக்கூடாது. பேராசை கொண்டவர்களையும் நீக்கிவிட வேண்டும். பன்னிரெண்டாண்டுகள் சோதனை செய்ய வேண்டும். அவ்வாறு சோதனை செய்யும்போது (கலங்காமல்) தெளிவுற்றால்

கற்பமுறைகளேயும் தீட்சை முறைகளேயும் சொல்ல வேண்டும். கூறியவற்றை நன்முறையில் செய்து, கற்றமுறைப்படி நடந்து, பணிவுடன் ஒழுகிஞல், அம்மாணவனுக்கு பூரக்கருவையும் பிராணுயாமத்தின் கருவையும் கூற வேண்டும். இரச முறைகளில் உதவி செய்தால், வேதை முறையைக் கூற வேண்டும். கற்ப முறைப்படி ஒழுகி நின்ருல் மூதண்ட இளகம், தயிலம் முதலியவற்றைக் கூற வேண்டும். பின்பு நெறிகொண்ட லகிரிதன்னில் நிலேத்து நின்ருல் பூரண சூத்திரத்தைக் கூறவேண்டும். இவ்வாறு எல்லாத் துறைகளேயும் கற்று, அதன்படி ஒழுகினவனுய் உட்கருவையும், அதன்முறையையும் கூறவேண்டும்.

## 106. நாகக்கட்டு

388 தானென்ற பராபரையாள் சொன்னவித்தை
சாற்றுகிறேன் சுந்தரமே சம்புளோர்க்கு
பானென்ற ஆலமுண்ட கண்டன்பூண்ட
பரிவான நாகத்தைக் கட்டக்கேளு
வானென்ற பலம்நூறு நிறுத்துவாங்கி
வையப்பா அயக்குகைக்குள் மாட்டியூது
கானென்று உருக்கையிலே சாரந்தூவு
கருவான இலுப்பெண்ணெய் மேலேகுத்தே.

389 குத்தையிலே முகந்தெளித்து உருகும்போது
கொடிகள்ளிச் சாற்றிலே சாய்த்துவாநீ
பத்தயிலே இருபத்து ஒன்றுசாய்த்து
பதருதே இலேக்கள்ளி அவ்வீதந்தான்
சத்தியிலே அயந்தன்ஞல் கனமதாக
தளராதே மறக்காமல்மேல் மூடிசெய்து
வித்தையிலே அதீதவித்தை மரக்காலுக்குள்
மேலான சுத்திசெய்த நாகந்தாக்கே.

390 தாக்கியல்லோ மேஷத்தி ஞுதிரம்விட்டு
தகடுவாய் பொருத்திமே லள்ளுக்கட்டி
வீக்கியல்லோ யெண்சீலே மண்ணுஞ்செய்து
மேலான வயிரவனேப் பூசைபண்ணி
தூக்கியல்லோ குழிவெட்டிக் கனப்புடமேபோடு
சொல்லேது நாகமது கட்டிப்போச்சு
தேக்கியே புகைமேலுந்தான் அடங்கிப்போச்சே
செப்பாதே வழலேக்குத் திறமிதாமே.

391 திறமான நாகமது பணந்தான்மூன்று
செயமான நாகமெடைக் குருவைக்கூட்டு
அறமான தொன்றுரவி நாலும்போடு
அளவற்ற மதியெட்டுக் கூடத்தாக்கு
துறமான மகாநன்று யறவைத்தூது
சொர்ணமது வயதெட்டுப் புடத்துக்கேகா
நெறியான மனத்தோர்க்கு இந்நூல்கிட்டும்
நிலைத்துப்பார் குருவென்ற நினைவாய்த்தானே.

392 நினைவாக இத்தொழிலால் சீவனமே செய்து
நீபாரு வைத்தியந்தான் தருமமாகும்
தனமான ஆசைவைத்து பொன்னைத்தேடி
சணத்திலே வீழாதே பேயாகாதே
மனமான திளையாதே சாபந்தீரும்
வல்லமைகள் பேசாதே வாயாடாதே
கனமான புத்திகொண்டு இல்லத்துள்ளே
காத்திருந்து கற்பமுண்ணு கனகந்தானே.

100 பலம் நாகத்தை நிறுத்தெடுத்து அயக்குகையிலிட்டு, உலையிலிட்டு ஊதி உருக்க வேண்டும். உருகும்போது நவச்சாரப் பொடித்தூவி உருக்க வேண்டும். இவ்வாறு உருக்கிய நாகத்தை இலுப்பெண்ணெயில் சாய்த்தெடுக்க வேண்டும். இவ்வாறு 21 முறை இலுப்பெண்ணெயில் உருக்கிச் சாய்க்கவேண்டும். நாகம் உருகும் போது சீறலடங்கி தெளிந்து உருகும். பிறகு நாகத்தை இலைக்கள்ளிச் சாற்றிலும் 21 முறை உருக்கிச் சாய்த்தெடுக்க வேண்டும். இவ்வாறு மேலான முறையில் சுத்தியடைந்த நாகத்தை ஒரு இரும்பு மரக்காலுக்குள்ளிட்டு, அதில் ஆட்டு இரத்தம் சேர்த்து மூடி, சந்துவாய்க்கு எட்டு சீலை மண் செய்து உலர்த்திக் கொள்ள வேண்டும். பூமியில் குழிவெட்டி அதனுள் இம்மரக் காலையிட்டு கனபுடமிட்டெடுக்க நாகம் கட்டாகும். இவ்வாறு கட்டிய நாகம் நெருப்புக்குப் புகையாமல் அடங்கியிருக்கும்.

| | |
|---|---|
| நாகக்கட்டு | 3 விராகனெடை |
| குரு | 3 ,, |
| இரவி | 4 ,, |
| மதி | 8 ,, |

இவற்றை நன்றாக ஊதியெடுக்க எட்டுமாற்று தங்கமாகும். இது நன்னெறியில் மனதை செலுத்தி ஒழுகுபவர்களுக்கு கை கூடும். இத்தொழிலால் வாழ்க்கை நடத்தி வைத்தியம் செய் வதே தருமமாகும். அதிகமாக பொருள்கள் மேல் ஆசை கொண்டு, பொன்மேல் ஆசை கொண்டலைந்து, பேயின் குணத்

தைப் பெற்று, கெட்டுப் போகமலிருந்தால் பாவங்கள் நீங்கி சாபம் தீரும். தன்னால் எல்லாம் முடியும் என்று வல்லமை பேசி வாயாடக்கூடாது. நல்ல அறிவு கொண்டு கற்பமுறைப்படி வாழவேண்டும்,

### 107. கனகசெந்தூரம்

393 கனகமென்ற நாகமது பலந்தானொன்று
கருதிப்பார் தங்கமது பலந்தானொன்று
முனைவதென்ன அயநாகம் பலந்தானொன்று
மூட்டப்பா காந்தமென்ற சத்துமொன்று
சனவப்பா குகையில்வைத்து உருகும்போது
தாக்கடா குடோரியது விராகனொன்று
நினைவுகொண்டு ஆவிரையின் வேராற்கிண்டு
நீர்போல உருகையிலே கெந்திதாக்கே.

394 கெந்திசம னிட்டுருக்கி வாங்கியாற்றி
கேளடா கல்வத்தி லிட்டுக்கொண்டு
வந்ததொரு அரிதாரம் பலந்தான்மூன்று
மகத்தான வீரமது பலந்தானொன்று
முந்துமரன் விந்துபலம் ரெண்டுவாரு
முழுகட்டுக் கௌரிபலம் ஒன்றுபோடு
தொந்தித்த எடைக்கெல்லாம் பாதிகெந்தி
கூட்டியே சிலையொன்று லிங்கம்ரெண்டே.

395 இலிங்கத்தி னெடைபாதி கூட்டுச்சாரம்
இரண்டுநாள் குமரியுடை பாலாலாட்டி
சங்கொத்த அயச்சட்டி தன்னிலிட்டுச்
சாடையாய் நீர்வற்ற வறுத்த பின்பு
அங்கொத்த புரசம்பூச் சாறுவிட்டு
ஆட்டடா தினம்ரண்டு அரசம்பட்டை
இங்கொத்த அமுரிவிட்டு இடித்த சாற்றில்
இரண்டுநாள ரைத்துவறுத் தெடுத்திடாயே.

396 எடுத்திட்ட பொடியதனைக் கல்வத்திட்டு
என்மக்காள் பொற்றலையின் சாற்றுலாட்டி
தடுத்திட்ட மண்வரையில் புடத்தைப்போடு
தப்பாமல் ஐந்துதரம் போட்டுத்தீரு
கடுத்திட்ட மூலவேர்த் தயிலம்விட்டு
கிளறிநீ வறுத்திடுவாய் கவுசிமாறத்
தொடுத்திட்ட நாலிலொன்று கெந்திகூட்டி
துடியான செங்கீரைச் சாற்றிலாட்டே.

397 சாற்றிலரைத் திருசாம முலர்த்திக்கொண்டு
தயங்காதே பொடிபண்ணி மேருக்கேற்றி
மூத்தவர்க்கும் வயிரவர்க்கும் கந்தனுக்கும்
முறையோட ஆயிக்கும் வாமபூசை
ஏத்திடுவாய் சாபங்க ளனைத்துந்தீரும்
எருதேறுஞ் சிவன்செய்ய வாலையேத்து
சூத்திரமா யெண்ணிரண்டு சாமந்தானும்
சூட்சமாங் கமலாக்கினி சூட்டிடாயே.

398 சூட்டியே ஆறவிட்டு யெடுத்துப்பாரு
சூதமது மூன்றிலொன்று மேலேநிற்கும்
மாட்டியே செங்கீரைச் சாற்றுலாட்டி
வறுப்பொன்று அரைப்பொன்று மேருக்கேற்றி
நாட்டியே முன்போலே யெரித்துநீறு
நலமாக முருக்கன்பூப் போலாம் பாரு
ஆட்டியே பணவெடைதான் தேனிற்கொள்ள
அரகரா அந்தகனு ரணுகார்தானே.

399 அணுவொன்று நவலோகத் துள்ளேகொள்ள
ஆணியுண்டோ வுரையுண்டோ ஐயாசொல்லு
பணமென்ற ஆசைகொண்ட உலுத்தருக்கு
பகராதே உட்கருவைப் பகர்ந்தாயாகில்
பிணியென்ற ரவிகோடி நரகில்வீழ்ந்து
பேயாகிப் பித்தாகி உழன்றுசாவாய்
சிணமென்ற சிற்றின்பங் கோபந்தள்ளு
சிவன்மேலே சிந்தையாய் இருக்கச்செய்யே.

| | | |
|---|---|---|
| நாகம் | அயநாகம் | |
| தங்கம் | காந்தசத்து | வகைக்கு ஒரு பலம். |

இவற்றைக் குகையிலிட்டு உருக்க வேண்டும். உருக்கும் போது, ஒரு விராகனெடை வெள்ளைப்பாடாணம் சேர்த்து, ஆவாரை வேரால் கிண்டிக் கொடுக்க வேண்டும். நன்றாக நீர்போல உருகியதும் சமஅளவு கெந்தகம் சேர்த்து உருக்கி, ஆற்றிக் கொள்ள வேண்டும். இதைக் கல்வத்திலிட்டு

| | |
|---|---|
| அரிதாரம் | 3 பலம் |
| வீரம் | 1 பலம் |
| இரசம் | 2 பலம் |
| கௌரிபாடாணம் | 1 பலம் |
| கெந்தகம் | 3 1/2 பலம் |
| மனோசிலை | 1 பலம் |
| இலிங்கம் | 2 பலம் |
| நவச்சாரம் | 1 பலம் |

இவற்றையும் சேர்த்து குமரிச்சாற்றால் விடாமல் இரண்டு நாட்கள் நன்றாக நெகிழவரைத்த பின்னர் அயச்சட்டியிலிட்டு, நீர்வற்ற வறுத்தெடுத்துக் கொள்ள வேண்டும். பின்னர் புரசம் பூச்சாறுவிட்டு இரண்டு நாட்கள் அரைத்தெடுக்க வேண்டும். அரசம் பட்டைக்கு அமுரிநீர்விட்டு இடித்து எடுத்த சாற்றிலும் இரண்டு நாட்கள் அரைத்தெடுத்து வறுத்துக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு வறுத்தெடுத்த பொடிதனைக் கல்வத்திலிட்டுப் பொற்றலைக் கையான்தகரைச்சாறு விட்டு நன்கு நெகிழ வரைத்து வில்லை தட்டி உலர்த்தி மண் அகலிலிட்டு ஐந்து முறை புடம் போட்டு எடுத்துக் கொண்டு சிறிது மூலவேர்த்தயிலம் விட்டுக் கிளறி வறுத்தெடுத்துக் கொள்ள வேண்டும். இதனுடன் கால் பங்கு கெந்தகம் கூட்டி கல்வத்திலிட்டு, செங்கீரைச்சாறு விட்டு நன்றாக இரண்டு சாமநேரமரைத்தெடுத்து உலர்த்திப் பொடி செய்து எடுத்துக் கொள்ள வேண்டும். இப்பொடியைக் குப்பியிலிட்டு வாலையேற்றி, மேற்சட்டி கொண்டுமூடி 16 சாமநேரம் கமலாக்னியாக எரித்தெடுத்து ஆறியபின் பார்க்க மூன்றில் ஒரு பங்கு இரசம் மேல் சட்டியில் இருக்கும். இதை எடுத்து செங்கீரைச்சாற்றால் நன்றாக அரைத்து வறுத்தெடுத்துப் பொடி செய்து குப்பியிலிட்டு, முன்போல ஒரு தடவை எரித்தெடுக்க இரசம் முருக்கன்பூ நிறத்துடன் இருக்கும்.

**அளவு**: பணவெடை.

**துணை மருந்து**: தேன்.

**தீரும் நோய்**: ஆயுள் நீடிக்கும். சாவைத்தடுக்கும்.

திணையளவு, நவலோக (பற்பத்துள்) உட்கொள்ள கருவிழி நோய், முதுமையடைதல் ஆகியவை நீங்கும்.

**பத்தியம்**: பெண்போகம், கோபம் இவற்றை நீக்கி தூய சிந்தையுடன் இருக்கவேண்டும்.

## 108 சலசரி மெழுகு

400 செய்யவே சொல்லுகிறே னுகக்கட்டி
திடமான கிண்ணியைப்போற் செய்துகொண்டு
உய்யவே அயத்தால்தாம் பாளஞ்செய்து
உத்தமனே கிண்ணியதிற் பதியக்கொண்டு
வெய்யவே கிண்ணியுந்தாம் பாளந்தானும்
விடவுசற்று மில்லாமல் பொருந்தச்செய்து
கொய்யவே சலசரியு மயனந்தன்னை
கூறுகிறேன் சுந்தரமே கூர்ந்துகேளே.

401 கூர்ந்துகே ளயந்தன்னைத் தகடுதட்டிக்
குகைசுற்றும் பரப்பிவைத்து பழுக்கவூது
சார்ந்துகேள் கெந்தகந்தான் கட்டியாகத்
தாக்கடா சமனுக வுருகும்போது
ஓர்ந்துகேள் காரீயம் அயம்நேராக
உருக்குமுகந் தனிற்கொடுக்கக் கலந்துபோகும்
நேர்ந்துகேள் நொறுக்கியதைத் தூளாய்வாங்கி
நினைவாக வைத்தபின்பு நிகழ்த்தக்கேளே.

402 கேளப்பா ஆலம்பால் படியிற்பாதி
கெடியான அயக்கரண்டி தன்னில்வார்த்து
கோளப்பா வாரமாற் கிண்டிக்காய்ச்சு
கொடிபோலே வரும்பருவந் தன்னிலப்பா
வாளப்பா முன்பொடியைத் தூவிக்கிண்டி
மைந்தனே நீர்வற்றத் திரட்டிவாங்கி
நாளப்பா பட்டையதின் மேலேவைத்து
நன்றாக எரிக்கவது மயனமாமே.

நாகக் கட்டியைத் தகடாக்கிக் கிண்ணிபோற் செய்து கொண்டு, பிறகு அயத்தினால் தாம்பாளம் செய்து நடுவில் கிண்ணி வாய் பொருந்தும்படி சுற்றிலும் வரிகிழித்துக் காற்றுப் புகாத வண்ணம் செய்து வைத்துக்கொள்ள வேண்டும். (இது சலசரியந்திரம் என்றழைக்கப்படும்).

அயத்தைத் தகடாகத்தட்டிக் குகையைச் சுற்றிப் பரப்பி வைத்து குகை பழுக்குமளவு ஊதவேண்டும். அயம் உருகும் போது அயத்திற்கு சமஅளவு கெந்தகக் கட்டியைச் சேர்க்க வேண்டும். இதே போல அயம் உருகு முகத்தில் இதற்குச் சமன் காரீயம் சேர்க்க ஒன்றாகக் கலந்து விடும். பின்னர் இதை எடுத்துக் குழிக்கல்லிட்டு, இடித்துப் பொடி செய்து வைத்துக் கொள்ள வேண்டும்.

ஒரு அயக்கரண்டியில் அரைப்படி ஆலம்பால் வார்த்து அனலிலிட்டுக் கிண்டி காய்ச்ச வேண்டும். காய்ச்சிய ஆலம்பால் கொடிபோல் வரும் பக்குவத்தில், முன்பு செய்து வைத்துள்ள பொடியைத் தூவி, நன்றாகக் கிண்டி, நீர்வற்றியபின் எடுத்துக் கொண்டு மேலே குறிப்பிட்ட சலசரி இயந்திரத்திலிட்டு எரிக்க மெழுகாகும். இதுவே சலசரி மெழுகென அழைக்கப்படும்.

**குறிப்பு**: இம்மெழுகு செய்முறை திருமூலர் வைத்தியத் திருமந்திரம் 1000 எனும் சுவடியிலும் உள்ளது. ஒப்பிட்டுக் காணவும்.

## 109. வெடியுப்புக்கட்டு

403 மயனமென்ற மெழுகதனை வைத்துக்கொண்டு
மருந்துவகை சொல்லுகிறேன் மாணுகேளு
சயனமென்ற கம்பியுப்பு வராகன்மூன்று
தானுனைக் கோடதுவும் விராகன்மூன்று
நயனமென்ற கல்வமதி லண்டநீரால்
நாட்டியரை ஒருசாமம் ரவியிற்போடு
வயணமுடன் கற்பூர வெற்றிலையின்சாற்றில்
மாட்டியரை சாமமொன்று வில்லைகட்டே.

404 கட்டியே ரவியிலிடு உலருமட்டுங்
கணீரிட்டா லோட்டில்வைத்து ஓடுமூடி
அட்டியில்லை மண்செய்து புடத்தைப்போடு
அப்பனே யெருமூன்றுக் கதிகம்வேண்டாம்
வட்டுப்போல் கட்டுமது எடைபோகாது
மாட்டடா கம்பியுப்பு வராகன்மூன்று
தட்டியே முன்போலே சேர்த்தரைத்து
தப்பாமல் நாலெருவிற் புடத்தைப்போடே.

405 போடப்பா முன்போலே அரைத்தரைத்து
புகழாக எருவேற்றிப் புடத்தைப்போடு
நாடப்பா இப்படியே தொந்தங்கோடி
நாட்டவே உப்பதுவு மெடைபோகாது
சாடப்பா இந்தவுப்பில் சாரஞ்சாகும்
தனிச்சாரஞ் சாரத்தில் தாக்கச்சாகும்
ஆடப்பா சாரத்தில் தொந்தங்கோடி
அனைத்துநீ சாரத்தால் வீரங்கட்டே.

406 வீரத்தால் வீரமது தொந்தங்கோடி
மேலான சாரத்தால் பூரங்கொல்லும்
பூரத்தால் அண்டமது தண்ணீராகும்
பூட்டடா துறைதோறும் அரைப்புக்கெல்லாம்
காரத்தால் சரக்கெல்லாங் கட்டிப்போகும்
கசடருக்கு பூநீற்றைக் காட்டொண்ணுது
தாரத்தால் புருடனுயி ரிழந்தாப்போலே
சண்டாள அண்டநீர்க் கொல்லுந்தானே.

407 கொல்லடா இணங்கனது காரந்தன்னை
கொடிதிரண்டு சாரத்தைக் கொல்லும்பாரு
அல்லடா வீரத்தால் சாரஞ்சாகும்
அப்பனே யிதனுலே துரிசு சாகும்

சொல்லடா துரிசாலே யெல்லாஞ்சாகும்
செயசார வீரத்தால் சூதஞ்சாகும்
நல்லடா வெடியுப்பு நீறச்செய்தால்
நலமான சரக்கையெல்லாங் கொல்லுந்தானே.

| | |
|---|---|
| வெடியுப்பு | 3 விராகனெடை |
| யானைக்கொம்பு | 3 விராகனெடை |

இவற்றைக்கல்வத்திட்டுப் பொடித்துக்கொண்டு அண்ட நீரால் ஒருசாம நேரம் நன்றாக நெகிழவரைத்துச்சூரிய ஒளியிலிட்டு நன்றாக உலர்த்திக் கொள்ள வேண்டும். பின்னர் கற்பூர வெற்றிலைச் சாற்றாலும் ஒரு சாமமரைத்து வில்லை செய்து சூரிய ஒளியில் உலர்த்திக் கொள்ள வேண்டும். இவ்வில்லையை ஓட்டிலிட்டு மேலோடு கொண்டு மூடி, சீலைமண் செய்து உலர்த்திக் கொண்டு மூன்று எருவில் புடமிட்டெடுக்க வெடியுப்பு எடை குறையாமல் கட்டியிருக்கும். மூன்று விராகனெடைக் கம்பியுப்பை முன்போலரைத்து வில்லை செய்து லர்த்தி நான்கு எருவில் புடமிட்டெடுக்கவேண்டும். இவ்வாறு ஓவ்வொரு எருவாக ஏற்றி, முன்போலரைத்து வில்லை செய்து பலமுறை புட மிட்டெடுத்தாலும் வெடியுப்பு எடைபோகாமல் சிறந்தமுறையில் கட்டாகியிருக்கும்.

இப்படிக் கட்டான வெடியுப்பால் நவச்சாரம் மடியும். இந்தச்சாரத்தில் தனிச்சாரத்தைத் தாக்க மடியும். வீரம் சாரத்தால் மடியும். சாரத்தால் பூரம் மடியும். பூரத்தால் அண்டம் தண்ணீராகும். இதை அரைப்புக்கெல்லாம் பயன் படுத்தலாம். காரத்தால் (முப்பு சுண்ணத்தால்) எல்லாச் சரக்கும் கட்டிப்போகும். இந்த அண்ட நீர் வெடியுப்பு, வெங் காரம், நவச்சாரம், துருசு, முதலியவற்றை மடியச் செய்யும். இவ்வாறு முடிந்த துருசால் எல்லா சரக்குகளும் மடியும். செய சாரவீரத்தால் இரசம் மடியும். வெடியுப்பை நீற்றினால் அதைக் கொண்டு எல்லாச் சரக்குகளையும் மடியச் செய்யலாம்.

### 110. (வேதைப்பற்றியது) (முப்புக்கரு)

408 தானென்ற அண்டமொடு காரஞ்சாரந்
தான்மூன்று முப்புவாய் முடிந்தவாறு
ஊனென்ற முப்புவும் பிரும்மவிஷ்ணு
உருத்திரனைப் பாகுமப்பா மாட்டிப்பாரு
பானென்ற சட்டைமுனி நிகண்டிற்சொன்ன
பஞ்சபூ தச்சரக்கைப் பார்த்துத்தேறு
வேனென்ற வெண்ணெயது சுழன்றுதானால்
வேதையது எளிதாகு முற்றுக்கேளே.

409 உற்றுமே பார்க்கையிலே கருவுந்தோன்றும்
உனக்குள்ளே பஞ்சபூ தத்தைப்பாரு
சற்றுமனஞ் சங்கையற்றுப் பார்த்தாயானல்
தானான முக்கோணவல்லபையைக்காண்பாய்
மற்றுமொரு கருவில்லை குண்டலியாந்தாய்தான்
மாலினுடை கருவறிந்தால் வல்லமையுன்வசமாம்
ஏற்றதொரு கற்சுண்ணஞ் செய்தாயாகில்
யென்னுணை சரக்கெல்லாங் கொல்லுந்தானே.

அண்டம், காரம், சாரம் ஆகிய இம்மூன்றும் சேர்ந்து முப்புவாக முடிந்தது. அதேபோல் பிரம்மன், விட்டுணு, உருத்திரன் ஆகிய மூவரும் சேர்ந்தது முப்புவாகும். இதையறிய சட்டை முனிநிகண்டிற் கூறப்பட்டுள்ள பஞ்ச பூதச்சரக்குகளைக் கற்றறிய வேண்டும். (சவுக்காரத்தில்) எண்ணெய் கழன்று போனால் வேதை எளிதாகும். பஞ்ச பூதச்சரக்கைப்பற்றி நன்கு அறிய வேதையின் கருவறியலாம் வல்லமைகள் தன் வசமாகும். குண்டலித்தாயாகிய முக்கோணவல்லபையைக் காணலாம். குண்டலியை எழுப்ப அறிந்தால் இதைவிட சிறந்ததொரு கரு இல்லை. கற்சுண்ணத்தை முறைப்படி செய்தால் எல்லாச் சரக்குகளையும் மடியச் செய்யலாம்.

## 111. இரசவீரபற்பம்

410 கொல்லுமடா வீரமொடு சாரந்தானும்
கூறக்கேள் வகையொன்று வராகனென்று
வெல்லுமடா சூதமொடு பலந்தான்ரெண்டு
விதமூன்றுங் கல்வத்தி லண்டநீரால்
அல்லவடா சாமமொன்று அரைத்துவாங்கி
ஆதியுப்புச் செயநீரால் கடிகையாட்டிச்
சொல்லுமடா அயச்சட்டி நடுவேவைத்து
திறமாக நாகமென்ற கிண்ணிமூடே.

411 மூடியே சலசரியை வளைத்துக்கட்டி
மூதண்ட நிருவாணி சீலைசெய்து
தேடியே வாலுகையின் மேலேவைத்து
சலத்தையதில் நிரம்பவிட்டு எரிக்கும்போது
வாடியே சலமதுவும் சுட்டுதானல்
வாங்கிமறு தண்ணிவிட்டுச் சூடுவாங்கு
ஓடியே அலையாதே வெகுபதனம் சொன்னேன்
உத்தமனே எரிப்பிரண்டு தினமுந்தானே.

412 தினஞ்சென்ற தாறியெடு பற்பமாகும்
சித்தர்புகழ் சுந்தரமே தின்றுயாகில்
மனஞ்சென்று சமாதியிலே கூர்ந்து பாயும்
வலுவாகு முன்தேக மலேதானீடோ
கனஞ்செய்யும் நோய்களெல்லாங் கடலேயோடும்
கருமமொடு வந்தகலுங் கதறியோடும்
தனஞ்சென்று வறுமையெல்லா மோடிப்போகுஞ்
சகலகலேக் கியானமெல்லாந் தங்குந்தானே.

413 தங்குமடா தலேசரியாய்ச் சரக்கெல்லாந்தான்
தாக்கவே இக்கோர்வை பெருநூல்பாரு
பொங்குமடா வாதமென்ன நொடிக்குமுன்னே
பொல்லாத நோய்களெல்லாம் போகுந்தூரம்
எங்குமடா உன்தேகம் மேருவாகும்
என்மக்காள் யெட்டெட்டு மெய்தும்பாரு
தொங்குமடா வளேயலுப்பு பட்டதாளுல்
சுகபற்ப செந்தூரம் வேதையாமே.

414 வேதையென்ற சலசரியின் கருவை நன்றுய்
வெளித்திறந்து சொல்லிவிட்டேன் மயக்கமில்லே
பாதையென்ற துரிசுகுரு வில்லாததற்குப்
பாடினே னித்தொழிலேப் பரிந்துகாணும்
போதையென்ற நாதவிந்தை மறந்திடாதே
பொன்னடியில் மூலத்தை இழந்திடாதே
சூதையொன்று மாடாதே பொய்சொல்லாதே
சுருக்காக இன்னமொரு துறையைக்கேளே.

| | |
|---|---|
| இரசம் | 2 பலம் |
| வீரம் | 1 விராகனெடை |
| நவாச்சாரம் | 1 ,, |

இவற்றைக் கல்வத்திலிட்டு அண்டநீரால் ஒருசாமம் நன்றுக அரைத்தெடுத்து பின்னர் ஆதியுப்பு செயநீர்விட்டு ஒரு கடிகை நேரம் அரைத் தெடுத்து ஒரு அயச்சட்டியில் நடுவில் வைத்து, நாககிண்ணத்தால் மூடி சலசரி யந்திரத்திலிட்டு நன்றுகச் சீலே செய்து வாலுகையிலேற்றி நீர்நிரம்பவிட்டு இரண்டு நாட்கள் எரித்தெடுத்து ஆறியபின் எடுத்துக் கொள்ளப்பற்பமாம். நீர் சூடாகியதும், வேறு தண்ணீர் ஒவ்வொருமுறையும் ஊற்ற வேண்டும்.

**இதன்பெருமை:** இப்பற்பத்தையுண்டால் மனம் சமாதியிலே கூர்ந்து பாயும். அதாவது அறிவு தெளிந்து மனம் ஒரு

நிலையடையும். உடல் மலையைப்போல் வலுவடையும். உடலிலுள்ள நோய்களெல்லாம் அகலும். ஆயுள் நீடிக்கும். கொடிய நோய்களெல்லாம் தீரும்.

## 112. கிரிச்சனங்களாறுக்கும் எண்ணெய்

415 துறையேது கிரிச்சனங்க ளாறுந்தீரக்
சொல்லுகிறேன் ஏரண்டத் தெண்ணெயொன்று
முறையேது தேங்காய்ப்பால் படிதானென்று
முற்றியநல் லெலுமிச்சம்பழச்சாறதொன்று
குறையேது யீருள்ளிச் சாறதொன்று
கூட்டடா பசுவின்பால் படிதானென்று
நிறையேது நெருஞ்சிலுடைச் சாறதொன்று
நீசேர்த்துத் தாழிதனில் அடுப்பிலேற்றே.

416 ஏற்றுவாய் கற்கமது வெந்தயஞ்சீரகமும்
ஏலமதி மதுரமுடன் மிலாக்காய்கெந்தஞ்
சாற்றுவாய் வகையொன்று கழஞ்சிமூன்று
தானரைத்துக் கலக்கியே மூன்றுநாளில்
போற்றுவாய் மெழுகுபதந் தனிலிறுத்து
பொடித்திடுவாய் குங்குமப்பூ கழஞ்சிமூன்று
ஆற்றுவாய் கொண்டிடவே மூலவாயு
அழற்சியுடன் கிரிச்சனமு மணுகாதெண்ணே.

| | |
|---|---|
| ஏரண்டத்தெண்ணெய் | 1 படி |
| தேங்காய்ப்பால் | 1 ,, |
| எலுமிச்சம்பழச்சாறு | 1 ,, |
| ஈருள்ளிச்சாறு | 1 ,, |
| பசுவின்பால் | 1 ,, |
| நெருஞ்சிச்சாறு | 1 ,, |

இவற்றை வகைக்கொரு படி எடுத்து மண்பானையில் சேர்த்து வைத்துக் கொள்ள வேண்டும்.

| | |
|---|---|
| வெந்தயம் | |
| சீரகம் | |
| ஏலம் | வகைக்கு 3 கழஞ்சு |
| அதிமதுரம் | |
| மிலாக்காய் கிழங்கு | |

இவற்றைக்கல்வத்திட்டு அரைத்துக் கற்கமாக்கி மேற்படி பாத்திரத்தில் இட்டு எண்ணெய், சாறு, பால் இவைகளில் நன்கு கலக்கி அடுப்பேற்றி மூன்று நாட்கள் எரித்து மெழுகுபதத்தில்

வடித்துக் கொண்டு, இதனுடன் 3 கழஞ்சு குங்குமப்பூ பொடி சேர்த்து வைத்துக் கொள்ள வேண்டும்.

**தீரும் நோய்கள்:** மூலவாயு, அழற்சி, கிரிச்சனம், மேக வெட்டை, அந்திரதாகம்.

## 113. பூசணி எண்ணெய்

417 அணுகாது மேகவெட்டை அந்திரதாகம்
அகற்றுவிக்கு மின்னமொன்று அறையக்கேளு
பிணியேது ஏரண்டத்தெண்ணெய் படிரெண்டு
பெரும்பூசணிக் காய்ச்சாறு படியிரண்டு
நணுகாத ஈருள்ளிச் சாறுபடிரெண்டு
நாட்டெலுமிச் சம்பழச்சாற் படிதானென்று
தணியாத ஓரிதழின் சாறுபடியொன்று
தாழிதனில் விடுகற்கஞ் சாற்றக்கேளே.

418 கேளுநீ வெந்தயமோ பலந்தான்ரெண்டு
கெடியாக அரைத்திட்டு மயனமாக்கி
நாளுநீ வடித்திடுவாய் கலசந்தன்னில்
நல்லகோ ரோசனையுங் குங்குமப்பூதானும்
தாகுநீ சீரகமும் வகையொன்றுக்குத்
தப்பாமல் கழஞ்சிரெண்டு பொடித்துப்போடு
வாளுநீ அந்திசந்தி கொள்வாயாகில்
மகாமேக மென்றவெல்லாம் வாராதென்னே.

419 வாராது மேகசுரம் வசூரிவெட்டை
வளர்மூலக் கிராணியோடு பிரமியங்கள்
சேராது அக்கினியா மந்தவாயு
செப்பரிய நீர்கட்டுந் தீர்ந்துபோகும்
நேராது சீழ்மூலமி ரத்தமூலம்
நெடுநாளை மலக்கட்டு வறட்சிமூலஞ்
சாராது இன்னமொரு யெண்ணெய்தன்னை
சாற்றுகிறேன் சயந்தீரத் தயவாய்த்தானே.

| | |
|---|---|
| ஏரண்டத்தெண்ணெய் | 2 படி |
| பெரியபூசணிக்காய்ச்சாறு | 2 ,, |
| ஈருள்ளிச்சாறு | 2 ,, |
| நாட்டு எலுமிச்சம்பழச்சாறு | 1 ,, |
| ஓரிதழ்தாமரைச்சாறு | 1 ,, |

இவற்றை ஒருதாழியிலிட்டு இரண்டு பலம் வெந்தயத்தைக் கற்கமாக்கிச் சேர்த்து அடுப்பேற்றி எரித்து மெழுகு பதத்திலிறக்கி வடித்துக் கொண்டு இதனுடன்

நல்ல கோரோசனை
குங்குமப்பூ
சீரகம்

வகைக்கு இரண்டு கழஞ்செடுத்துப் பொடித்துச் சேர்த்து வைத்துக் கொள்ள வேண்டும்.

**தீரும் நோய்கள்**: ஒரு நாளைக்கு இரு வேளை வீதம் உட்கொள்ள மேகநோய், மேகசுரம், வைசூரி, வெட்டை மூலக் கிராணி, பிரமியங்கள், அக்னிமந்தம், வாயு, நீர்க்கட்டு, சீழ் மூலம், இரத்தமூலம், நாட்பட்ட மலக்கட்டு, வறட்சி மூலம் முதலியன தீரும்.

### 114. சயத்திற்கு எண்ணெய்

420 தயவான பூவந்திப் பட்டைதானும்
தறித்திடித்து நூறுபலஞ் சலமீரெட்டு
நயமான வெட்டொன்றாய் குறுக்கிவாங்கி
நல்லயே ரண்டயெண்ணை படிதான்ரெண்டு
இயல்பான வெண்ணெயொடு கியாழஞ்செய்து
இரண்டுபலங் கத்தூரி மஞ்சள்தானும்
மயமான கடுக்காயும் பலந்தான்ரெண்டு
வன்னிவேர் பலமரைத்து யெண்ணெய்தனிற்போடே.

421 அரைத்திட்டு மெழுகுபதந் தன்னில்வாங்கி
அதில்கரிய சீரகமும் பலந்தானென்று
நிரைத்திடவே பொடிசெய்து வைத்துக்கொண்டு
நேரமிரு காசெடைதான் அந்திசந்தி
கரைத்திட்டக் கசரோகம் இருமலீளை
காசமொடு கக்கலுள மாந்தைரெண்டு
குறைத்திட்டுக் கபம்விழுதல் சுவாசகாசம்
கொடுஞ்சயந்தொண் ணூற்றாறுங் குடிபோம்பாரே.

422 போமப்பா பாலருட சுழிகணங்களெல்லாம்
பொல்லாத யிரைப்புடனே கக்குவானும்
நாமப்பா விலாவிழுப்பு சுழிமாந்தங்கள்
நலமின்றி யிரைக்குமிந்த கோழைகட்டும்
தாமப்பா கோழையென்ற விப்புருதியோடு
தான்ரெத்த மாந்தையொடு பீனிசங்கள்
ஓமப்பா மோருடனே புளியுந்தள்ளு
உண்ணயிந்த நோயெல்லா மோடுந்தானே.

பூவந்திப்பட்டை 100 பலமெடுத்திடித்து ஒரு மண்பானையி விட்டு 16 படி நீர் சேர்த்து அடுப்பேற்றி எரித்து 2 படியாக குறுக்கிக் கொண்டு, வடித்தெடுத்து, இதனுடன் 2 படி ஏரண்டத் தெண்ணெய் சேர்த்து வைத்துக் கொள்ள வேண்டும்.

| | |
|---|---|
| கத்தூரி மஞ்சள் | 2 பலம் |
| கடுக்காய் | 2 ,, |
| வன்னிவேர் | 1 ,, |

இவற்றைக் கல்வத்திட்டரைத்து எண்ணெயுடன் சேர்த்து அடுப்பேற்றி எரித்து மெழுகுபதத்தில் இறக்கி வைத்துக் கொண்டு இதில் 1 பலம் கருஞ்சீரகப்பொடி சேர்த்து வைத்துக் கொள்ள வேண்டும்.

**அளவு**: இரு காசெடை—ஒரு நாளைக்கு காலை மாலை இரு வேளை.

**தீரும் நோய்கள்**: காசம், இருமல், ஈளை, கக்கல்நோய், இரண்டுவகை உளமாந்தை, கபம் குறைந்த அளவில் வெளி யாதல், இரைப்பு நோய், 96 வகை இளைப்பு நோய்.

பாலர்கட்குப் புகட்ட சுழிகணங்கள், இரைப்புநோய், கக்கு வான், விலாவை இழுக்கும் சுழிமாந்தங்கள், இரைப்புடன் கோழைக்கட்டு, விப்புருதி, இரத்தமாந்தம், பீனிசங்கள் முதலியவை தீரும்.

**பத்தியம்**: மோர், புளி நீக்க வேண்டும்.

### 115. மேகசூலைக்கு கெருடன் கிழங்கெண்ணெய்

423 ஓடவே மேகமொடு சூலைபோக
உயர்கருடன் கிழங்கெண்ணெய் வுரைக்கக்கேளு
போடவே கெருடனுடை கிழங்குபலம்நூறு
பொடியாக்கி யெண்ணிரண்டு படிநீர்விட்டு
வாடவே யிரண்டுபடி யாகக்காய்ச்சி
வடித்துவிடு யேரண்டத் தெண்ணெய்படிரண்டு
தேடவே ரோகணியும் கரியசீரகமும்
சேர்மிளகு வகையொன்று பலந்தான்ரெண்டே.

424 ஒன்றாக அரைத்திட்டு அடுப்பிலேற்றி
உத்தமனே சிறுதீயா லனலைமூட்டி
நன்றாக மூன்றுநாள் மெழுகுபதமானால்
நல்லாவின் ரோசனையுங் குங்குமப்பூ
குன்றுமல் வகைக்கிரண்டு கழஞ்சிதூக்கி
குப்பிரசக் கற்பூரம் கழஞ்சியொன்று
சென்றாடப் பொடித்திட்டுக் கலசந்தன்னில்
சேரவே யெண்ணெய்தனை வடித்திடாயே.

425 வடித்திட்ட யெண்ணெய்தனை ஆழாக்குகொள்ள
வாதமென்ற யெண்பதுவுங் கிரந்திசூலை
பிடித்திட்ட சிலேற்பனங்கள் தொண்ணூற்றாறும்
பேசாம லோடுமடா பெருங்கானகத்தே
நடித்திட்டால் போலவே பிழிந்தசாறு
நாட்டு படியொன்றேதான் வடிக்குமுன்னே
கடித்திட்ட மெழுகுபதத் திறுத்துப்போடு
கனமான பத்தியந்தா னுப்புமாற்றே.

426 உப்பைவிட்டு வெந்நீரும் அன்னங்கொள்ளு
உத்தமனே மறுபத்திய மிருக்கவேணும்
அப்பைவிட்டு உப்பங்கே வறுத்துக்கூட்டு
அங்கத்தில் கறுப்புவங்கு அகலும்பாரு
கொப்பைவிட்டுக் குதித்தமந்தி போலேயோடும்
கூறுவேன் யெண்ணெய்விட்டுப் புளியைக்கூட்டு
செப்பைவிட்டுப் போனபந்து போலவேதான்
தீராத நோய்களெல்லாந் தீருந்தானே.

427 தீருமே மூன்றுநா ளானபோது
திறமாக மறுபத்திய மூன்றுநாள்வை
ஆறுமே நாற்பதுநாள் கரப்பன்பண்டம்
அகற்றடா யேரண்டத் தெண்ணெய்மூழ்கு
வாருமே வெந்நீரைப் பரிமாற்றங்கள்......

100 பலம் கெருடன் கிழங்கெடுத்துப் பொடியாக்கி 16 படி நீர் விட்டுக் காய்ச்சி இரண்டுபடியாகக் குறுக்கிக் கொண்டு, இதனுடன் இரண்டுபடி ஏரண்டத்தெண்ணெய் சேர்த்து வைத்துக் கொள்ள வேண்டும்.

| | |
|---|---|
| கடுகுரோகிணி | |
| கருஞ்சீரகம் | வகைக்கு இரண்டு பலம் |
| மிளகு | |

இவற்றைக் கல்வத்திட்டரைத்து மேற்படி எண்ணெயுடன் சேர்த்து அடுப்பேற்றி சிறுதீயாக மூன்று நாட்களெரித்து மெழுகுபதத்தில்

| | |
|---|---|
| கோரோசனை | 2 கழஞ்சு |
| குங்குமப்பூ | 2 ,, |
| இரசகற்பூரம் | 1 ,, |

ஆகியவற்றைப் பொடித்து ஒரு கலசத்தில் வைத்துக் கொண்டு, அக்கலசத்தில் எண்ணெயை வடித்து எடுத்துக் கொள்ள வேண்டும்.

**அளவு**: ஆழாக்கு (¼ அவுன்ஸ்)

**தீரும் நோய்கள்**: 80 வகை வாதம், கிரந்தி, சூலே, 96 வகைச் சிலேற்பனங்கள்.

**பத்தியம்**: உப்பு நீக்க வேண்டும். வெந்நீரும் சோறுமுண்ண வேண்டும். மறுபத்தியம் இருக்க வேண்டும். வறுத்த உப்பு கூட்டிக் கொள்ளலாம். பிறகு எண்ணெய்விட்டு புளிக்கூட்டலாம்.

**தீரும் நோய்கள்**: உடலில் ஏற்பட்ட கறுப்பு வங்கு நோய், மற்றும் தீராத நோய்கள்.

மூன்று நாட்கள் இம்மருந்தை உண்ணும்போது பத்தியமாக இருந்து மறுபத்தியம் மூன்று நாட்கள் இருக்க வேண்டும். 40 நாட்கள் கரப்பன் பண்டங்களை நீக்க வேண்டும். ஏரண்டத் தெண்ணெய் தேய்த்து, வெந்நீரில் மூழ்க வேண்டும்.

### 116. நவமூலத்திற்கும் சகலவியாதிகட்குமெண்ணெய்

427 ......வலுவான மூலநோய் தீரக்கேளு
சாறுமே கற்றாழஞ் சோறுவாங்கித்
தாக்கடாப் பூலாவேர் பட்டைத்தூளே.

428 தூளிடவே பிசைந்தழுத்தி பிழியத்தண்ணீர்
தூளாகப் படியெட்டுப் பாண்டஞ்சேர்த்து
நாளிட்ட படிநான்கு சிறுமுத்தெண்ணெய்
நற்றாழை விழுதுச்சாற் படிதான்நான்கு
வேளிட்ட இளநீர்தான் படியும்நான்கு
வெள்ளாட்டுப் பால்படிதா னுன்குவாரு
தாவிட்ட அல்லியுடைச் சாறுநான்கு
தானுன அறுகன்வேர் கஷாயம் நான்கே.

429 நாலான இவையெல்லாம் பாண்டஞ்சேர்த்து
நல்ல அதிமதுரமது பலந்தானெட்டு
மேலான குன்றிவேர் பலந்தான்ரெண்டு
விளங்குகின்ற ஏலமது பலந்தாெனுன்று
பாலினு லிவைதன்னை அரைத்துப்போடு
பாலகனே சிறுதீயிட் டேழுநாள்வை
மாலான தெட்டாநா ளனலேமூட்டி
மயனபத மாச்சுதென்றால் நிலேத்துக்கேளே.

430 நிலேத்திட்ட குங்குமப்பூ பலந்தானுென்று
நீபொடித்து வடிகலசந் தன்னிற்போட்டு
மலேத்திட்ட எண்ணெய்தனே வடித்துக்கொண்டு
வராகனெடை அந்திசந்தி அருந்துவார்க்கு

குலைத்திட்ட மேகமொடு எலும்புருக்கி
குலைவலியும் அதிசாரங் கிராணிமூலந்
துலைத்திட்ட நீரிழிவு அந்திரதாகம்
சுரமஸ்தி சுரமெல்லாந் தொலைந்துபோமே.

431 போமப்பா மூலத்தா லெழுந்தபேதி
பொல்லாத சீழ்மூலம் ரத்தமூலம்
ஆமப்பா வறள்மூல மிறுக்குமூலம்
அடித்தள்ளி கடுத்துளையு மபானவாயு
ஓமப்பானவசூரியினு லெழுந்தசூடு
முள்ளிறங்கிச் சீழ்மூலம் உளைவுரத்தம்
நாமப்பா இவையெல்லாந் தீரும்தீரும்
நலமாக இன்னமொன்று நவிலக்கேளே.

கற்றாழைச் சோறெடுத்து ஒருமண்பானையிலிட்டு, பூலா வேர்ப்பட்டைத் தூளிட்டு நன்றாகப் பிசைந்து அழுத்திப்பிழியச் சாறு வரும். இவ்வாறெடுத்த

| | |
|---|---|
| கற்றாழைச்சாறு | 8 படி |
| சிறுமுத்தெண்ணெய் | 4 ,, |
| தாழைவிழுதுச்சாறு | 4 ,, |
| இளநீர் | 4 ,, |
| வெள்ளாட்டுப்பால் | 4 ,, |
| அல்லிச்சாறு | 4 ,, |
| அறுகன்வேர்க்குடிநீர் | 4 ,, |

இவற்றை ஒரு பாத்திரத்திலிட்டு வைத்துக் கொள்ள வேண்டும்.

| | |
|---|---|
| அதிமதுரம் | 8 பலம் |
| குன்றிவேர் | 2 ,, |
| ஏலம் | 1 பலம் |

இவற்றைக் குழிக்கல்லிலிட்டுப் பால்விட்டரைத்து. சாறு எண்ணெய் முதலியவை வைத்துள்ள பாண்டத்தில் சேர்த்து அடுப்பேற்றி ஏழுநாட்கள் சிறுதீயிட்டு எரித்து எட்டாம் நாள் தீயை அதிகரிக்கச் செய்து மெழுகுபதத்தில் ஒரு பலம் குங்குமப்பூ பொடியிட்டு வைத்துள்ள கலசத்தில் வடித்தெடுத்து வைத்துக் கொள்ள வேண்டும்.

**அளவு:** ஒரு விராகனெடை, காலை மாலை இருவேளை.

**தீரும் நோய்கள்:** மேகம், எலும்புருக்கி, சூலைவலி, அதிசாரம், கிராணி, மூலம், நீரிழிவு, அந்திரதாகம், சுரம், என்புசுரம்,

மூலத்தால் எழுந்த பேதி, சீழ்மூலம் இரத்த மூலம், வறள் மூலம், இறுக்குமூலம், அபானவாயு பிறழ்ந்த செயலாலேற்படும் கடுத் துளையும் அடித்தள்ளல், வைசூரியினுலெழுந்தசூடு.

## 117. சகலநோய்களுக்குமெண்ணெய்

432 நவிலுகிறேன் சிறுபுடலங்காய் பலந்தானூறு
நன்னாரி முத்தக்காசு விலாமிச்சம்வேர்
புகலுகிறேன் சித்திரப்பா லாடையல்லி
புண்ணாக்குப் பூடுடனே பனையின்வேரும்
நுவலுகின்ற மாதளையுமோ ரிதழ்த்தாமரையும்
நுகர்சதா வேரியொடு பூலாவேரும்
அகலுகிற ஆல்விழுது நெருஞ்சிக்கொற்றான்
ஐம்பதடா வகையொன்றுக் கிடித்துவாங்கே.

433 வாங்கியே கலந்திரண்டு பாண்டத்திட்டு
வார்த்திடுவாய் ஆற்றுநீர் படியெண்ணான்கு
தாங்கியே தீயெரித்து எட்டொன்றாக்கி
தாழிதனில் வடித்துவிட்டுத் தனிஎள்ளெண்ணெய்
தேங்கியே இளநீரும் பசுவின்பாலும்
சீதாசெங் கழுநீர்வில்வம் வல்லாரைச்சாற்
ஓங்கியே அவரை சிறு கீரைகொற்றான்
ஓரிதழ்த் தாமரை அல்லி செங்கழுநீர்ச்சாறே.

434 சாறாகு மாளையுடை நெருஞ்சிச்சாறும்
தப்பாமல் வகைவகைக்கு நான்குபடிவிட்டு
மாறும லடுப்பில்வைத்து அனலைமூட்டி
மைந்தனே நவதினந்தா னூறவைத்து
வீறான கற்கமது மலாக்காய் கெந்த
மிளகுடனே வசுவாசி மதுரமேலங்
கூறான சாதிக்காய் பத்திரிகிராம்பு
குன்றிவேர் பாகமசுவ கெந்திசேரே.

435 சேரப்பா சீரகமுங் கொத்தமல்லி
சிறுநாகப் பூவிடையஞ் சாத்திரவேதி
காரப்பா செஞ்சந்தன மகரப்பூவுங்
காட்டாத்திப் பூவபினி கஞ்சாவித்து
ஆரப்பா தக்கோலஞ் சுக்குநாவி
அத்திதிப் பிலிலவங்க மாசிக்காயும்
நேரப்பா வகையொன்று கழஞ்சிரண்டு
நீயாட்டுப் பால்தனிலே கரைத்துவாரே.

436 கரைத்துவிட்ட மூன்றுநாள் வடிக்கும்போது
கலசத்தி லிடிமருந்து கழறக்கேளு
உரைத்துவிட்டேன் குங்குமப்பூ கத்தூரியல்லால்
உற்றகோ ரோசனையும் புழுகுதானும்
நிரைத்துவிட்டேன் கழஞ்சிரண்டு பொடித்துப்போடு
நீமெழுகு பதந்தன்னில் வடித்துக்கொண்டு
குரைத்துவிட்ட கழஞ்சொன்று அந்திசந்தி
கொள்ளவே வேகமெல்லாம் குடிபோம்பாரே.

437 குடிபோகுங் கிராணிபத்தும் அதிசாரங்கள்
குலமுறையாய் வருகின்ற மூலரோகம்
அடிபோகும் பெரும்பாடு சலகிரிச்சு
அரிகிருமி இவையெல்லா மகலும்பாரு
துடிபோகும் கரப்பனொடு கண்டமாலை
சூலையொடு மார்பாணி பிளவைகட்டி
கடிபோகும் குட்டமொடு கிரந்திப்புற்று
காணாத குடற்படுவன் பிளவைக்காணே.

438 பிளவையொடு பவுத்திரங்கள் வங்குவெள்ளைப்
பெலங்கெடுக்கும் விப்புருதி அண்டவாயு
அளவதென்ன நசிகா பீடத்தோடு
அரிகிரந்தி வெடிசூலை ஆணியெல்லாம்
கழிவதில்லை யென்றுசொன்ன மாரோகங்கள்
கட்டோடே போகவென்று கழறக்கேளு......

| | |
|---|---|
| சிறுபுடலங்காய் | 100 பலம் |
| நன்னாரி | 50 ,, |
| முத்தக்காசு | ஓரிதழ்தாமரை |
| விலாமிச்சம்வேர் | சதாவேரி |
| சித்திரப்பாலாடை | பூலாவேர் |
| அல்லி | ஆலம்விழுது |
| புண்ணாக்குப்பூண்டு | நெருஞ்சி |
| பனைவேர் | முடக்கொற்றான் |
| மாதுளை | |

வகைக்கு 50 பலம்

இவற்றைக் குழிக்கல்லிலிட்டு இடித்துபாண்டத்திலிட்டு, ஆற்றுநீர் 32 படிவிட்டு அடுப்பேற்றியெரித்து 4 படியாகக் குறுக்கி ஒரு தாழியில் வடித்துக் கொள்ள வேண்டும்.

| | |
|---|---|
| எள்ளெண்ணெய் | சிறுகீரைச்சாறு |
| இளநீர் | முடக்கொற்றான்சாறு |
| பசுவின்பால் | ஓரிதழ்த்தாமரைச்சாறு |

சீதேவிசெங்கழுநீர்ச்சாறு
வில்வச்சாறு
வல்லாரைச்சாறு
அவரைச்சாறு
அல்லிச்சாறு
செங்கழுநீர்ச்சாறு
ஆனைநெருஞ்சில்சாறு

வகைக்கு 4 படி

மேற்படிச்சாறு வகைகள், எள்ளெண்ணெய், இளநீர், பசும்பால் முதலியவற்றை முன்பு குடிநீர் வைத்துள்ள தாழியில் சேர்த்து ஒன்பது நாட்கள் ஊறவைத்துக் கொள்ள வேண்டும்.

மலாக்காய் கிழங்கு
மிளகு
சாதிபத்திரி
அதிமதுரம்
ஏலம்
சாதிக்காய்
இலவங்கப்பத்திரி
கிராம்பு
குன்றிவேர்
அசுவகெந்தி
சீரகம்
கொத்தமல்லி
சிறுநாகப்பூ
அதிவிடயம்
சாத்திரவேதி
செஞ்சந்தனம்
மகரப்பூ
காட்டாத்திப்பூ
அபினி
கஞ்சாவிதை
தக்கோலம்
சுக்கு
நாபி
அத்தி
திப்பிலி
இலவங்கம்
மாசிக்காய்

வகைக்கு 2 கழஞ்சு

இவற்றைக்குழிக்கல்லிலிட்டரைத்து, பாலில் கலக்கிக் கொண்டு, முன் மருந்துகளிட்டு ஊறவைத்துள்ள தாழியில் சேர்த்து, அடுப்பேற்றி மூன்று நாட்கள் எரித்து,

குங்குமப்பூ
கஸ்தூரி
கோரோசனை
புனுகு

வகைக்கு இரண்டு கழஞ்செடுத்துப் பொடித்து ஒரு வடி கலத்திலிட்டுக் கொண்டு மேலே தாழியிலுள்ள மருந்து மெழுகு பதம் வந்தவுடன் இவ்வடிகலத்தில் வடித்தெடுத்துக்கொள்ள வே வேண்டும்.

**அளவு:** ஒரு கழஞ்சு இருவேளை

**தீரும் நோய்கள்:** மேகநோய்கள், 10 வகை கிராணி, அதிசாரங்கள், மூலநோய், பெரும்பாடு, நீர்க்கிரிச்சரம், அரிகிருமி, கரப்பன், கண்டமாலை, சூலை, மார்பாணி, பிளவைக்

கட்டி, குட்டம், கிரந்திப்புற்று, குடற்படுவன், பிளவை, பவுத்திரம், வங்கு, வெள்ளை, விப்புருதி, அண்டவாயு, நாசிகாபீடம், அரிகிரந்தி, வெடிசூலை, ஆணி.

## 118. சகலநோய்க்குமெண்ணெய் (வேறு)

438 ... ..தெளிவதென்ன நல்லெண்ணெய் படிதானெட்டு
சீந்தில்வேர் கொடிவேலி தில்லம் பாலே

439 பாலான திருகுகள்ளி சதுரக்கள்ளி
பாடாண கொடிக்கள்ளி எருக்குகொன்றை
வேலாலும் கருவேலும் புங்குசங்கு
வெள்ளறுகு நன்னாரி நத்தைச்சூரி
ஆலாவேர் அரசத்தி இத்திவேம்பு
அமுக்கிரா ஆடுதின்னா மூலிதானும்
பூலாவேர் நீர்ப்பூலாக் குப்பைமேனி
பொடுதலை கையாந்தகரை பீளைவேரே.

440 பீளையொடு இலைக்கள்ளி சிவனார்வேம்பு
பொற்றலைக் கையாந்தகரை சின்னியோடு
கோழையறுந் தேற்றான்வேர் காக்கரட்டான்
கொடிதூது வளையும்செஞ் சூரைப்பட்டை
வேளைவேர் நாய்வேளை முடக்கொற்றான்வேர்
விடத்தலைவேர் உசிலம்வேர் வெள்ளைக்குன்றி
காளையே தேள்கொடுக்கு கரந்தைரெண்டு
கழற்சிவே ரழிஞ்சிகரு டன்கிழங்கே.

441 கிழங்கென்ற சாரணைமா வெருக்கினோடு
கேள்புரசு முருக்குமுன்னை யிண்டுதோடை
வழங்கிநின்ற கற்றாழை காட்டுமல்லி
வன்னிஆ யிலியமொடு கருக்குவாயும்
புழுங்கிநின்ற பொன்முசுட்டை அவுரியோடு
பூவரசு நிலவாகை அப்பைக்கோவை
முழங்குகின்ற கொளுஞ்சிமகிழ் புன்னையோடு
முத்தெருக்கஞ் செவிசங்கன் குப்பிவேரே.

442 வேரென்ற அரளிஉள்ளி மிளகுநாபி
வெந்தோன்றி நிர்விடம்மந் தாரங்கெந்தி
காரென்ற சீரகமும் நாலுசுக்கு
கார்போகம் ஏலம்கத் தூரிமஞ்சள்
பாரென்ற பீநாறி கரப்பன்பட்டை
பார்கெவுரி வீரமொடு சூதம்பூரஞ்
சீரென்ற வலம்புரிக்காய் வசம்புவாளஞ்
சேருநீ ரெட்டிமுத்து பூவந்திக்காயே.

443 காயான சாதிக்காய் கிராம்புபத்திரி
காராவின் ரோசனைஊ மத்தின்வித்து
தாயான அகில்கட்டை தேவதாரம்
சந்தனமுந் திரிபலையும் திரிவல்லாதி
தீயான சடைக்கஞ்சா அபினிக்காயுந்
திப்பிலியுமூன்றுசெந்நா யுருவிசேரு
பேயான தும்பையொடு கவிழ்த்தும்பைநொச்சி
பெருந்தும்பை வகையொன்று பலந்தானென்றே

444 பலமொன்று வேர்வகைகள் நிறுத்துக் கொண்டு
பாச்சடா கடைச்சரக்கு பலத்திற்பாதி
செலஞ்சற்று மில்லாம லுலர்த்திக்கொண்டு
சேரவே யிடித்துத்தூ ளாகவாங்கி
பிலமென்ற பூரவல்லிக் கொடிசேங்கொட்டை
பேசாதே பலம்பத்துப் பச்சையாகத்
தலமென்ற கல்லுரலி லிடிக்கும்போது
தாக்கப்பா முன்தூ ளைச் சிறுகத்தூவே.

445 சிறுகவே தூவியிடித் தெடுத்துக்கொண்டு
சேரவே வெள்ளாவிச் சட்டிதன்னில்
இறுகவே தூளையிட்டு எண்ணெய்விட்டு
இரவிமுகங் காணவைப்பாய் மண்டலந்தான்
குறுகவே பெரும்பாம்பு சாரைப்பாம்பு
கொடியநல்ல பாம்பினுடை மூன்றுகண்டம்
மறுகவே கண்டிதனி லெண்ணெய்விட்டு
மடியாமல் சர்ப்பகண்டஞ் சிவக்கக்காய்ச்சே.

446 காய்ச்சியே சட்டிதனில் மருந்தோடிட்டு
கலந்துரவி காணயிலே தெளிந்தயெண்ணெய்
வாச்சுதே யென்றுசொல்லிப் பதனம்பண்ணி
வாரப்பா கால்கழஞ்சி அந்திசந்தி
பேச்சேது மண்டலமே கொண்டபோது
பிணியெல்லாந் தீர்ந்ததடா பெருமைமெத்த
பாய்ச்சியே கால்கரங்கள் விரலுக்கெல்லாம்
பழுத்ததொரு வாழையிலை போட்டுக்கட்டே.

447 கட்டடா காற்றுடனே வெய்யிலாகா
காலையந்தி யெண்ணெயிட்டுக் காக்கச்சொல்லு
விட்டுவிடு புளியுப்பு குளிர்ந்ததண்ணீர்
விதமான பதார்த்தமெல்லாம் விரைந்துதள்ளு

மட்டடா புதுப்பாண்டந் தனிலேபொங்கி
வார்த்துண்ணப் பசுவின்பால் வெந்நீராகும்
மெட்டடா யெண்ணெயுட வாசம்பட்டால்
மேதினியோர் நோயெல்லாம் விலகிப்போமே.

448 விலகுமடா விரிகுட்டம் குறைகுட்டங்கள்
வெண்புள்ளி அழிகுட்டம் முதலாயுள்ள
பலகுட்டம் அழிகிரந்தி வளரும்புற்று
பறங்கிப்புண் வெடிசூலை பலவிடங்கள்
இலகுமே மேனியது பொன்போலாகும்
என்மக்காள் சண்டரச பற்பத்தோடு
நலதுஅரி தாரபற்பம் கட்டிக்கொள்ளு
நாடாது பிணியனைத்தும் நாடிக்காணே.

449 காணவே வெண்ணுத்திச் சற்பந்தன்னை
கண்டித்து உலர்த்திவிடு கருதிக்கேளு
தோணவே யிதற்குநேர் பூரஞ்சாரந்
துத்திவெள்ளை வீரபற்பம் சமனேதூக்கி
நாணவே யிதையுலர்த்திஇடித்துக்கொண்டு
நன்றாக குழித்தயில மிறக்கிவாங்கி
பேணியே பாண்டத்தில் கருக்கைவாங்கி
பின்சார நீர்விட்டு இடித்திடாயே.

450 இடித்ததொரு மருந்தெடுத்துப் புடத்தைப்போடு
என்மக்காள் வெந்நீரா யிருக்கும்பாரு
கடுத்ததொரு நீரதனிற் கழஞ்சிவாங்கி
கண்டாயே முன்தயிலங் கால்கழஞ்சிவிட்டு
விடுத்ததொரு அந்திசந்தி மண்டலந்தான்
விரும்பியே கொண்டவர்க்கு விரணகுட்டம்
மடுத்ததொரு பதினெட்டு மகன்றுபோகும்
மார்க்கமாய்ப் பத்தியந்தா னறையக்கேளே.

451 அறைகிறே னுள்ளியோடு கடுகாகாது
அப்பனே புளியுமாகா தறிந்துகொள்ளு
பறைகிறேன் கட்டினதோ ருப்புமாகும்
பாலாகும் பொன்பழம் புளியுமாகும்
நிறைகிறேன் சீரகமுங் கொத்தமல்லி
நேரான அவரையுடன் முருங்கைப்பிஞ்சுங்
குறையறவே தூதுவளை மணத்தக்காளி
குரவையொடு வெள்ளாட்டு வற்றல்கூட்டே.

452 கூட்டலாம் புருவோடு முயலின்வற்றல்
கூட்டாதே கரப்பனென்ற வெல்லாந்தள்ளு
மாட்டடா சிறுபயறு துவரையாகும்
மைந்தனே வெள்ளாடு பசுவின்நெய்யாம்
தேட்டடா தலைமுழுக பஞ்சகற்பஞ்
சேருநீ வெப்பெண்ணெய் ஆவின்நெய்யாம்
நாட்டடா அரைப்பு சிறுபயறுவெந்நீர்
நன்றாக இந்தமுறை நாடிக்காணே.

நல்லெண்ணெய் 8 படி
சீந்தில்வேர்
கொடிவேலி
தில்லைப்பால்
திருகுகள்ளி
சதுரக்கள்ளி
கொடிக்கள்ளி
எருக்கு
நத்தைச்சூரி
ஆலவேர்
அரசு
அத்தி
இத்தி
வேம்பு
அமுக்கிரா
ஆடுதின்னாமூலி
பூலாவேர்
நீர்ப்பூலா
குப்பைமேனி
பொடுதலை
கையாந்தகரை
பீளைவேர்
இலைக்கள்ளி
சிவனார்வேம்பு
பொற்றலைக்கையாந்தகரை
சின்னி
புரசுவேர்
முருக்கு
முன்னைவேர்
இண்டு
ஆடாதோடைவேர்
கொன்றை
வேல்
ஆல்
கருவேல்
புங்கு
முட்சங்கன்
வெள்ளறுகு
நன்னாரி
தேற்றான்வேர்
காக்கட்டான்
தூதுவளை
செஞ்சூரைப்பட்டை
வேளைவேர்
நாய்வேளைவேர்
முடக்கொற்றான்வேர்
விடத்தலைவேர்
உசிலம்வேர்
வெள்ளைக்குன்றிமணி
தேள்கொடுக்கு
சிவகரந்தை
விஷ்ணுகரந்தை
கழற்சிவேர்
அழிஞ்சில்வேர்
கெருடன்கிழங்கு
சாரணைவேர்
எருக்கன்வேர்
மகிழம்வேர்
புன்னைவேர்
முத்தெருக்கஞ்செவிவேர்
சங்கங்குப்பிவேர்
அரளி

கற்ருழை
காட்டுமல்லிவேர்
வன்னி
ஆயிலியம்
கருக்குவா (கருவாலி)
பொன்முசுட்டை
அவுரி
பூவரசு
நிலவாகை
அப்பைக்கோவைவேர்
கொளுஞ்சிவேர்
கஸ்தூரிமஞ்சள்
பீநாறிப்பட்டை
கரப்பன்பட்டை
கெவுரிப்பாடாணம்
வீரம்
இரசம்
பூரம்
வலம்புரிக்காய்
வசம்பு
நேர்வாளம்
நீரடிமுத்து
பூவந்திக்காய்
சாதிக்காய்
கிராம்பு
சாதிபத்திரி
கோரோசனை
உள்ளி
மிளகு
நாபி
ஆகாயக்கருடன்கிழங்கு
நிர்விடம்
மந்தாரை
கந்தகம்
சீரகம்
சுக்கு
கார்போகி
ஏலம்
ஊமத்தன்விதை
அகில்கட்டை
தேவதாரம்
சந்தனம்
கடுக்காய்
நெல்லிக்காய்
தான்றிக்காய்
திரிவல்லாதி
சடைக்கஞ்சா
அபினிக்காய்
திப்பிலிக்காய்
செந்நாயுருவி
பேய்த்தும்பை
கவிழ்தும்பை
நொச்சி
பெருந்தும்பை

இவற்றில் வேர்வகைகள் வகைக்கு ஒரு பலமும், கடைச் சரக்குகள் வகைக்கு அரைப்பலமும் எடுத்து, ஈரமின்றி நன்ருக உலர்த்திக் கொண்டு, கல்லுரலிலிட்டு, இடித்துப் பொடித்து எடுத்து வைத்துக் கொள்ள வேண்டும்.

| | |
|---|---|
| பூரவல்லிக்கொடி | 10 பலம் |
| சேங்கொட்டை | 10 ,, |

இவற்றைப் பச்சையாக எடுத்துக்கல்லுரலிலிட்டு இடிக்கும் போது முன்பு சித்தப்படுத்தி வைத்துள்ள பொடியைச் சிறிது சிறிதாகத் தூவி, நன்ருக இடித்தெடுத்து, ஒரு வெள்ளாவிச் சட்டி யில் கொட்டி, அதில் எண்ணெயை விட்டுச் சூரிய ஒளியில் ஒரு மண்டலம் வைத்தெடுக்க வேண்டும்.

பெரும்பாம்பு
சாரைப்பாம்பு
நல்ல பாம்பு

இவற்றின் கண்டங்களை (பாம்பின்சட்டை) எண்ணெயிலிட்டு அடுப்பேற்றி சிவக்குமட்டும் காய்ச்சி எடுத்துச் சட்டியிலுள்ள மருந்திலிட்டு நன்ருகக் கலந்து வைத்து, எண்ணெய் தெளிந்தபின் எடுத்து வடித்து வைத்துக் கொள்ள வேண்டும்.

**அளவு**: $\frac{1}{4}$ கழஞ்சு. காலையும் மாலையும் (ஒரு மண்டலம்) கால் கை விரல்களில் எண்ணெயை விட்டுப் பழுத்த வாழையிலை யினுல் கட்டவேண்டும்.

**பத்தியம்**: காற்று, வெய்யில் இவற்றை நீக்க வேண்டும். புளி, உப்பு, குளிர்ந்த தண்ணீர் முதலியவற்றை விலக்க வேண்டும்.

பசுவின்பால், வெந்நீர் இவற்றைப் புதுப்பாண்டத்திலிட்டு காய்ச்சி உபயோகிக்க வேண்டும்.

**தீரும் நோய்கள்**: விரிகுட்டம், குறைகுட்டம், வெண்புள்ளி அழிகுட்டம் முதலிய பலகுட்டங்கள், அழிகிரந்தி, வளரும் புற்று, பறங்கிப்புண், வெடிசூலை, பலநச்சுக்கடிகள் முதலியவை நீங்கும். உடல் பொன்போலாகும்.

இதனுடன் சண்டரசபற்பமும் அரிதாரபற்பமும் சேர்த்து உட்கொள்ள எவ்வகைப் பிணிகளும் நாடாது.

வெண்ணுத்திப் பாம்பைத் துண்டுகளாக்கி உலர்த்திக் கொள்ள வேண்டும். இதற்கு சம எடை பூரம், சாரம், துத்தம், வெள்ளைப்பாடாணம், வீரபற்பம் முதலியவற்றையெடுத்து உலர்த்தி இடித்துத் தூளாக்கிக் கொள்ள வேண்டும். பின்னர் இவற்றைக் கொண்டு முறைப்படி குழித்தைலம் இறக்கி எடுத்துக் கொள்ள வேண்டும். பின்னர் ஒரு பாண்டத்தில் கருக்கையிட்டு சாரநீர் ஊற்றி இடித்தெடுத்துப்புடமிட்டெடுக்க வெந்நீராக இருக்கும் இதில் ஒரு கழஞ்செடுத்து, முன்பு தயார் செய்துவைத்துள்ள தயிலம் 1/4 கழஞ்சி கூட்டி, தினமும் காலை, மாலை இருவேளையாக ஒரு மண்டலம் உட்கொள்ள வேண்டும்.

**தீரும் நோய்கள்**: 18 வகை விரணகுட்டம்

**பத்தியம்**: உள்ளி, கடுகு, புளி முதலியன ஆகாது. கட்டின உப்பு, பழய புளி, சீரகம், கொத்தமல்லி, அவரைப்பிஞ்சு, முருங் கைப்பிஞ்சு, தூதுவளை, மணத்தக்காளி, குரவை, வெள்ளாட்டு

வற்றல், புறு, முயல்வற்றல் முதலியன சேர்த்துக் கொள்ள லாம். கரப்பன் பண்டங்களை நீக்க வேண்டும். சிறுபயறு, பசு நெய், வெள்ளாட்டு நெய் சேர்த்துக் கொள்ளலாம்.

**தலை முழுகுவதற்கு:** வேப்பெண்ணெய், ஆவின்நெய் இவற் றுடன் கஸ்தூரி மஞ்சள், மிளகு, வேப்பங்கொட்டை, கடுக்காய்த் தோல், நெல்லிப்பருப்பு, சேர்த்துக் கொள்ளவேண்டும். அரைப்பு சிறுபயறு தேய்த்து வெந்நீரில் தலை முழுகவேண்டும்.

### 119. சகல குட்டத்திற்கு மருந்து

453 நாடியே சுந்தரமே சொல்லக்கேளு
நாட்டிலுள்ள குட்டங்க ளனைத்துந்தீர
வாடியே மயங்காதே நாகஞ்சாரை
மலைப்பாம்பு இம்மூன்றும் வெவ்வேறாகத்
தேடியே புதுப்பாண்டந் தன்னிலிட்டு
சிறுமிளகு தனிலவங்கப் பட்டைதானும்
நேடியே கூடவிட்டு வாயைமூடி
நிசமாக முட்டளவு குழிதான்வெட்டே.

454 வெட்டினதோர் குழிதன்னிற் பாண்டம்வைத்து
மேன்மூடி மண்டலந்தான் கழித்து வாங்கி
விட்டுநீ சலத்தாலே கழுவிப்போட்டு
வெய்யிலிலே காயவைத்துப் பதனம்பண்ணு
தெட்டினதோர் சமையலிலேற் றரிசிபோடு
சிறுகறிக்கு மிளகைந்து சேர்த்துக்கொள்ளு
கட்டினதோர் சங்கிலைக் உப்புயிட்டு காய்ச்சி
கலங்காதே அரையுப்புக் காணுங்காணே.

455 காணவே புளிக்கசப்பு கரப்பான்பண்டங்
கருதாதே மண்டலந்தான் காற்றுடாதே
வீணப்பா பத்தியமே யில்லாவிட்டால்
வெறும்பாழாய்ப் போகுமடா விள்ளக்கேளு
பூணப்பா பெண்வாடை யாகாதப்பா
புன்மையாம் நல்லெண்ணெய் வாடையாகா
தோணப்பா குட்டமுடன் குறைநோயெல்லாம்
சூரியனைக் கண்டபனி போலாமென்னே.

456 என்னவே கடலையைந்து பருப்போடிட்டு
இதமுடனே கொண்டவர்க்குத் தாதுமீளும்
பன்னவே நூலெல்லாம் வெளியாய்த்தோன்றும்
பகராதே நூலெல்லாம் வெளிக்காட்டாதே

தன்னவே நூல்கேட்டு அரசர்வந்தால்
தானில்லை யென்றுசொல்லி மறைத்துப்போடு
பொன்னையே கொடுத்தாலும் நூல்கொடாதே
புலனென்றுஞ் சொல்லாதே புத்திதானே.

நாகப்பாம்பு
சாரைப்பாம்பு
மலைப்பாம்பு

இவற்றைக் [புலிப்பாணி 500ல் பாம்புச்சட்டை கூறியிருப்பது காண்க]. கொணர்ந்து ஒரு புது பாண்டத்திலிட்டு, தேவையான அளவு, மிளகு, இலவங்கப்பட்டை சேர்த்து பாண்டத்தின் வாயைமூடி, பூமியில் குழிவெட்டி, அதில் புதைத்துமேலே மூடிவிட வேண்டும். இவ்வாறு ஒரு மண்டலம் பூமியில் புதையுண்டிருந்த பின்னர் வெளியே எடுத்து நீர்விட்டு கழுவி உலர்த்தி வைத்துக் கொள்ள வேண்டும். பின்னர் சமையல் பாத்திரத்தில் காய வைக்கப்பட்டவற்றையும், அரிசியையும், ஒரு சேர இட்டுப் பொங்கிச் சோறுகச் சமைத்துக் கொள்ள வேண்டும். இதற்கு வியஞ்சனமாக ஐந்து மிளகையும் சங்கனிலையிருந்து தயாரிக்கப்பட்ட உப்பையும் அரையுப்பாகச் சேர்த்துக் கொண்டுண்ணவேண்டும்.

**ஆகாப்பொருள்கள்:** புளி, கசப்பு, கரப்பன்பண்டங்கள், நீக்க வேண்டும். ஒரு மண்டலம் வரை காற்றிலலையக்கூடாது. பெண்போகம், நல்லெண்ணெய் இவற்றை நீக்க வேண்டும்.

**தீரும் நோய்கள்:** குட்டம், குறைநோய்.

இம்மருந்தை ஐந்து கடலைப் பருப்போடு சேர்த்து சாப்பிட இழந்த தாது மீளும்.

### 120. மருத்துவர் ஒழுக்கம்பற்றியது

457 புத்திதா னுண்டானல் பெரியோனுவாய்
பொய்புரட்டுக் காமத்தால் நரகில்வீழ்வாய்
பத்திதா னுண்டானல் நோய்கள்தீரும்
பலிக்குமடா வாதமொடு கற்பந்தானும்
பித்தனய்த் திரியாதே கருவைப்பாரு
பேசாதே ஒருத்தரிடம் வாயாடாதே
எத்தராய்ப் பெரியோர்கள் சோதிப்பார்கள்
எளிதாகச் சொல்லிவிட்டால் சபிப்பார்தானே.

458 சாபங்கள் நிவர்த்திசெய்யப் பூரணத்தில்
சாற்றினேன் வெளிதிறந்து சார்ந்துபாரு
பாபங்கள் தீரவே கர்மகாண்டம்
பாடினதி லொளிப்பொன்று யாகசாலே
சோபங்கள் தீரவே இந்நூல்தன்னில்
சொல்லுகிறேன் மாணுக்காள் சுருதியொன்று
தீபங்க ளாகுமடா இந்நூல்தன்னில்
திறமுடைய சுந்தரமே செப்பக்கேளே.

தெளிந்த அறிவுடையோரே பெரியோர் என மதிக்கப்படுவர். பொய், ஏமாற்று, காமம் இவற்ருல் நரகில் விழநேரிடும், துன்பம் ஏற்படும். பக்தி இருந்தால் நோய்கள் எல்லாம் தீரும். மேலும் வேதைமுறை காயகற்பம் ஆகியவை கைகூடும். அறிவுகெட்டுத் திரியாமல் கருவை அறிந்து கொள்ளவேண்டும். ஒருவரிடமும் வாயாடாமல், பெரியோர்கள் சோதிக்கையில் எளிதாகச் சொல்லி விடக்கூடாது. அப்படிக் கூறினுல் அவர்கள் சபிப்பார்கள். இவ்வாறு ஏற்பட்ட சாபங்கள் நீங்க அகத்தியர் பூரணத்தில் வழிகள் கூறப்பட்டுள்ளன. பாவங்கள் தீர அகத்தியர் கர்மகாண்டத்தில் வழிகள் கூறப்பட்டுள்ளன.

## 120. அ. கருமவினை நீக்கி நோய் நீக்கும் மருந்து செய்வதற்குரிய வேள்விமுறை

459 செப்பமாய்க் கறுப்பில்லாப் பூமிதன்னில்
செய்யவே அங்குலமா யிரத்தெண்ணூறு
ஒப்பமாய் நாற்சதுரம் வாசல்நான்கு
முள்வட்டம் கூரம்ஒரு வாய்நீள்வாசல்
இப்பவே உட்சதுரம் ரேகைமூன்று
எண்கோணம் அஷ்டகும்பத் தியல்பதாகும்
அப்பனே நடுவட்ட மத்துக்குள்ளே
அறிவாய்நீ நாற்சதுரம் வாசல்நான்கே.

460 வாசலுக்குள் விலாசத்தை ஒன்பதாக்கி
மைந்தனே நிருதிதிக்கில் சிதம்பரத்தைவைத்து
ஈசனென்ற கும்பத்தை அதன்மேல்வைத்து
என்மக்காள் அதன்வடக்கு ஈசானமூலே
நேசமென்ற நாற்பத்து முக்கோணந்தான்
நீபோடு சத்திகும்பம் நடுமய்யத்தில்
வீசமென்ற ஈசான மூலேதன்னில்
மேலான அட்டசத்தி பீசம்போடே.

461 போடப்பா அவரவர்கள் மூலபீசம்
புகழாக அட்டகும்பம் வைத்துநீயும்
சாடப்பா கீழ்வாசல் கணபதியுங்கந்தன்
தப்பாமல் மேன்முகத்தில் மதங்கநிருவாணி
தேடப்பா தென்வாசல் வீரவாகு
தேவரொடு வயிரவனுஞ் சேரப்போடு
நீடப்பா வடவாசல் நீலகண்டி
நெட்டூர ரணபத்திர காளியாமே.

462 ஆமப்பா இவ்வண்ண மாபாணித்து
அப்பனே முப்புரிநூல் பட்டுவஸ்த்திரம்
தாமப்பா கும்பவஸ்த்திரம் சேரப்போட்டு
தானுன மாங்குலையுந் தேங்காய்வைத்து
நாமப்பா பரிமளங்கள் சவ்வாதுபுனுகு
நறுமஞ்சள் சந்தனமும் சுகந்தம்சாற்றி
ஓமப்பா மந்திரத்தா லர்ச்சனையுஞ்செய்து
உத்தமனே பூரணசூத் திரத்தைத்தாக்கே.

463 தாக்கப்பா பறித்தகட்டில் மாரணத்தைக்கீறி
தப்பாமல் நடுமய்ய மட்டகோண
மாக்கடா அதனடுவில் அநேக சூட்சம்
அப்பனே எண்கோண மெட்டெழுத்தும்போடு
நோக்கடா எட்டெழுத்தின் விவரந்தன்னை
நுவலக்கேள் மேல்கோணம் அங்ரங்கொன்று
வீக்கடா மறுகோணம் இங்ரங்கென்று
வீதிமறுக் கோணத்தில் உங்ரங்கென்றே.

464 என்றுநீ மறுகோணம் எங்—ரிங்கென்று
என்மக்காள் ஓங்—ரங் கென்று
சென்றுநீ மூன்றில் ஐயுங்—கிலியும்சவ்வும்
சேர்ந்தெழுதிச் சத்திகும்பந் தன்னிற்போடு
குன்றதே பூமிதனில் மாயோனுக்குக்
குறைவில்லாபீசமிட்டர்ச் சனையுஞ்செய்து
நன்றுக ஆகாயம் பிர்மபூசை
நல்கிடுவாய் தியானமதில் நாடித்தானே.

465 தானென்ற பூரணசூத் திரத்தைப்பாரு
தப்பாமல் பூசைவிதி கர்மகாண்டம்
தேனென்ற மச்சமுனி பெருநூல்தன்னில்
செப்பினு ரவரவர்தம் மூலபீசம்

மானென்ற யெந்தனுடை நூலைப்பாரு
மைந்தனே தீட்சைகலைக் கியானம்பாரு
நானென்ற கொங்கணவர் கடைக்காண்டத்தில்
நாட்டினார் சக்கரமட் சரமுந்தானே.

466 அட்சரங்க ளறியவென்றால் பலநூல்பாரு
அங்கனியா சங்கரனி யாசம்பாரு
பட்சமுள்ள ஆசானை அடுத்துக்காரு
பணங்காசு இச்சையென்றால் பாளித்தள்ளு
நீச்சமாய்ச் சொல்லிவிட்டேன் கர்மந்தீர்க்க
நினைவாக ஓமத்தைச் செய்துதீரு
உச்சரித்த மந்திரத்தி யானம்வேண்டும்
உலகத்தில் சாபநிவாரணைகள் செய்யே.

467 செய்யவே கர்மவினை தீருந்தீரும்
சிவபூசை பரைபூசை விஷ்ணுபூசை
அய்யனே கணபதியுங் கந்தன்பூசை
அட்டதிக்குப் பாலகரும் அட்டசத்தி
கைவசமாய் காளியொடு வடுகன்பூசை
கட்டாக நிருவாணி பூசைசெய்து
உய்யவே தியானமொடு நைவேத்தியங்கள்
உத்தமனே அன்னமிடக் கர்மம்போமே.

468 போமடா வேதியர்க்கு அன்னதானம்
புகழாக இயன்றமட்டும் செய்துவாநீ
ஆமடா தர்மத்தால் கர்மந்தீரும்
அடங்காத நோயெல்லாம் அகன்றுபோகும்
நாமடா சொல்லிவிட்டோம் பொய்யோயில்லை
நலமான மருந்துசெய்து நாடிப்பாரு
தாமடா மருந்திற்குக் குருவோவொன்று
சாற்றுகிறேன் துருசுகுரு சார்ந்துகேளே.

செப்பமும் பெருமையும் வாய்ந்த ஒரு நல்ல இடத்தில் 1800 அங்குல அளவில் யாகசாலைக்கு இடம் வகுத்துக் கொள்க. அவ்விடத்தை நாற்சதுரமாக்கி நான்கு வாசல்களையும் உள்வட்டத்தையும், கரையையும் அகன்ற முற்றத்தையும் அமைத்துக் கொள்ளவும். உட்சதுரத்தில் மூன்று கோடுகள் அமைத்து அதனுள்ளே எண்கோணம் அமைத்துக் கொள்ளவும். இது அட்டகும்பத்தின் இயல்பாகும். நடுவட்டத்தினுள் நாற்சதுரம் அமைத்து நான்கு வாசல்களையும் அமைத்துக் கொள்க. வாசலுக்குள் இருக்கும் உட்பகுதியை ஒன்பது பங்குகளாக்கு. அதனுடைய நிருதிதிக்கில்

சிதம்பரச் சக்கரத்தை அமைத்து சிவகும்பத்தை அதன் மேல் வைத்து பின்னர் ஈசான மூலையில் நாற்பத்து முக்கோண சக்க ரத்தை அமைத்து அதன் நடுவில் சத்திகும்பத்தை அமைக்கவும். ஈசான மூலையில் அட்டசத்தி மூலமந்திரத்தை எழுதி அமைக்க வேண்டும். அந்தந்த தேவதைகளுக்கு உரிய மூலமந்திரத்தை அமைத்து அவற்றின்மேல் அட்டகும்பத்தை நிறுவ வேண்டும். கிழக்கு வாசலில் கணபதியையும் கந்தனையும், மேற்குவாசலில் சிவனையும் பார்வதியையும்; தெற்கு வாசலில் வீரவாகு தேவரை யும் வயிரவனையும்; வடக்கு வாசலில் துர்க்கையையும் இரண பத்திரக்காளியையும் அமைக்க வேண்டும். இவ்வாறு அமைத்து கும்பங்களுக்கு, பூணூல், பட்டுத்துணி, கும்பத்துணி இவற்றைச் சாத்தி மாவிலைக்கொத்து தேங்காய் இவற்றையும் அமைத்து, மிக்க வாசனையுள்ள சவ்வாது, புனுகு, மஞ்சள், சந்தனம், நறு மணமுள்ள பூக்கள் இவற்றையும் சாத்தி, மந்திரங்களைச் சொல்லி அர்ச்சனை செய்து, கடைசியாக தெய்வபலிகளைக் கொடுக்க வேண் டும். (பூரணுகுதி) பொற்றகட்டில் மாரணமந்திரத்தைக் கீறி நடுமையத்தில் அட்ட கோணம் அமைத்து, அதன் நடுவில் எட்டுக் கோணத்திற்குரிய எழுத்துக்களையும் கீழ்வருமாறு அமைத்துக் கொள்க.

மேல் கோணத்தில், அங்ரங்கென்றும், மறு கோணங்களில் முறையே இங்ரங், உங்ரங், எங்—ரிங், ஓங்—ரங் ஐயும், கிலியும், சவ்வும், என்று எழுதி சத்திகும்பத்தில் போட்டு விட வேண்டும். பின்னர் பூமியில் திருமாலுக்குரிய மூலமந்திரத்தைச் சொல்லி அர்ச்சனை செய்து ஆகாயத்தை நோக்கி பிரமனுக்குரிய பூசையைச் செய்து தியானம் செய்ய வேண்டும்.

இம்முறைகளையறிய வேண்டுமானுல் அகத்தியர் பூரண சூத்திரம், அகத்தியர் பூசாவிதி, அகத்தியர் கர்மகாண்டம், மச்சமுனி பெருநூல் இவைகளைக் கற்றறிய வேண்டும். மற்றும் அகத்தியரது நூற்களையும், கலைஞானத்தையும் பார்த்து அறிந்து கொள்ள வேண்டும். கொங்கணர் கடைக்காண்டத்தில் சக்கரங்களையும் அவற்றிலடைக்கும் எழுத்துக்களையும் பற்றி அறிந்து கொள்ள வேண்டும். எழுத்துக்களின் விளக்கங்கள் அறிய விரும்பினுல் பலநூல்களைப் பார்க்கவும். மேலும் அங்க நியாசம், கரநியாசம் இவற்றின் விளக்கங்களையும் அறிந்து கொள்ள வேண்டும். மேலும் ஆசான் மூலம் அறிந்து கொள்ள வேண்டும். பொருளிச்சையைத் தள்ளிவிடு. வினைகளைத் தீர்க்க வேண்டுமானுல் வேள்விகளைச் செய்ய வேண்டும். மந்திரங்களை உச்சரித்து வழிபட வேண்டும். உலகம் நலம் பெற வேண்டு மென்ற நல்ல செயல்களைச் செய்ய வேண்டும். சிவன், உமை,

திருமால், கணபதி, கந்தன், எட்டுதிக்கு காவலர்கள், எட்டு சக்திகள், காளி, வடுகன், சிவன், இவர்களை முறைப்படி வழி பட்டு படையலிட்டு ஏழைகளுக்கு உணவு அளித்துவரின் வினைகள் போகும். அந்தணர்களுக்கு அன்னமிடுவதுடன் மற்ற அறங்களையும் செய்துவர வேண்டும். இவ்வாறு செய்தால் கரும வினைகள் தீரும். பின்னர் தீராத நோய்களெல்லாம் தீர்ந்து விடும். இவையெல்லாம் பொய்யல்ல. மருந்துகளை முறைப்படி செய்ய வும்.

## 121. சாரச்செயநீர்

469 சார்ந்துகேள் நவச்சாரம் பூச்சாரந்தான்
தனித்தனியே சமனிறுத்துக் கல்வத்திட்டு
கூர்ந்துகேள் கைவிடா தரைக்கவப்பா
கொடுமைமெத்த நெட்டேறி வேகும்பாரு
சேர்ந்துகேள் சாமமட்டு மரைத்துக்கொண்டு
செப்புகிறே னயக்கரண்டி துலக்கியிட்டு
வார்ந்துகேள் உலையில்வைத்துச் சிறுகவூதி
வறுத்திடவே சாரமது மடங்கிச்சாமே.

470 ஆமப்பா மெழுகாகி யிருக்கும்பாரு
அப்பனே சுத்தசலந் தன்னிற்கேளு
ஓமப்பா ஒன்றரையாம் படிநீரப்பா
உத்தமனே யதிற்கரைத்துத் தெளியவைத்து
தாமப்பா தெளிவிறுத்துக் காய்ச்சவுப்பாந்
தனைப்பீங்கான் தனிலிட்டுப் பனியில்வைக்க
நாமப்பா மூன்றுநாள் செயநீராகும்
நலமான சுண்ணநீர் நாடிப்பாரே.

471 நாடிப்பா ரிந்நீரை யொளித்தார்சித்தர்
நான்சொன்னேன் திருமூல நாயன்சொன்னான்
தேடிப்பார் மற்றநூல் தெளிவோயில்லை
செகத்திலே சித்தரெல்லா மறைத்திட்டார்கள்
மூடினார் சாரத்தின் சுண்ணநீரை
முறையறிந்து செய்தவரே சித்தராவார்
ஆடிப்பா ரெத்தொழிலும் பொய்போகாது
அப்பனே சித்தாகு மறிந்திடாயே.

நவாச்சாரம்
பூநீறு

சமஅளவு இவற்றைத் தனித்தனியே கல்வத்திலிட்டு நன்றாகக் கைவிடாமல் அரைக்க வேண்டும். ஒரு சாம நேரம்

அரைக்க மருந்து நெட்டேறி வேகும். பின்னர் இம்மருந்தை ஒரு சுத்தமான அயக்கரண்டியிலிட்டு உலையில் வைத்து சிறு கவூறி வறுத்தெடுக்க நவாச்சாரம் மடிந்து மெழுகாக இருக்கும். பிறகு இதை ஒன்றரைப்படி சுத்த நீரிலிட்டுக் கரைத்துத் தெளி விறுத்துக் காய்ச்ச உப்பாகும். இவ்வுப்பை ஒரு பீங்கானிலிட்டு மூன்று நாட்கள் பனியில் வைத்தெடுக்க செயநீர் இறங்கி இருக்கும்.

இந்த செயநீரை சித்தர்கள் வெளிப்படையாகச் சொல்லாமல் மறைத்து வைத்தார்கள். திருமூலநாயனுரும் அகத்தியருமே சொன்னுர்கள். மற்ற நூல்களில் தெளிவாயில்லை. இச்செய நீரை முறையறிந்து செய்தவரே சித்தராவார். இதனுல் எல்லாத் தொழிலும் சித்தியாகும், பொய்யாகாது.

## 122. துருசுச்சுண்ணம்

472 அறிந்திடவே இந்நீரில் துரிசுதன்னை
அப்பனே பாக்குபோ லுடைத்துநீயும்
சிறந்திடவே இந்நீரைப் பீங்கானிலிட்டு
திறமான துருசிட்டு மேலேமூடி
நிறைந்திடவே சீலைமண்செய் துலர்த்திக்கொண்டு
நீபோடு பூப்புடத்தில் தசநாலப்பா
திறந்துடனே நீயெடுத்து ரவியிற்போடு
திறமான கண்டரது வெளுக்கும்பாரே.

473 வெளுத்திருந்த துரிசதுதான் கழஞ்சுபத்து
வீரமொடு பூரமப்பா புழுகுங்கேளு
களித்திடவே வகையொன்று கழஞ்சியொன்று
கல்வத்தில் விட்டரைத்து வில்லைபண்ணி
நெளித்திடவே கடுங்காரம் உமியோட்டிலூது
நேரான கண்டரது சுண்ணமாகும்.

ஒரு பீங்கானில் முன்பு கூறிய சாரச்செயநீர் எடுத்துக் கொண்டு இதில் துருசைப்பாக்கு போலுடைத்துச் சேர்த்து மேலே மூடி சீலைமண் செய்து உலர்த்திக் கொண்டு 10 நாட்கள் பூப்புட மிட்டெடுத்து மருந்தை சூரிய ஒளியில் வைத்தெடுக்க துருசு வெண்மை நிறமாயிருக்கும். மேலே கூறியபடி

| | | |
|---|---|---|
| வெண்மையான துருசு | 10 | கழஞ்சு |
| வீரம் | 1 | ,, |
| பூரம் | 1 | ,, |
| புனுகு | 1 | ,, |

இவற்றைக் கல்வத்திட்டரைத்து வில்லை செய்து கொள்ள வேண்டும். இது கடுங்காரமாயிருக்கும். இவ்வில்லையை உமியோட்டிலிட்டு ஊதிஎடுக்க துருசு உயர்ந்த முறையில் சுண்ணமாகும்.

**அளவு:** *1/4 குன்றியளவு*

**தீரும் நோய்கள்:** குன்மம், சூலை, மகோதரம்

## 123. வெடியுப்புச்சுண்ணம்

473 . . முளித்திடவே கடுங்கார மெத்தக்கேளு
மூவிரண்டு காய்ச்சலுப்பு பலந்தான்பத்தே.

474 பத்தாகுங் கம்பியுப்பு மூதண்டப்புளிதான்
பகரவே பலமெட்டுச் சீனமொன்று
சத்தாகும் பூநாகத் துருசுசூடன்
தானான நவச்சாரக் காரந்தானும்
வித்தாகும் பலமொன்று வகைதானென்று
விளங்கவே ஒன்ருக அரைத்துக்கொண்டு
சித்தாக ஓட்டிலிட்டுக் கொளுத்தச்சுண்ணம்
செப்புவே னிறுத்திநீ பொடித்திடாயே.

| | |
|---|---|
| ஆறுங்காய்ச்சல் வெடியுப்பு | 10 பலம் |
| மூதண்டப்புளி | 8 ,, |
| சீனக்காரம் | |
| பூநாகம் | |
| துருசு | வகைக்கு 1 பலம் |
| சூடன் | |
| நவாச்சாரம் | |
| வெங்காரம் | |

இவற்றைக் கல்வத்திலிட்டு நன்ருக அரைத்து ஓட்டி லிட்டுக் கொளுத்தி எடுக்கச் சுண்ணமாக இருக்கும். இதைப் பொடித்து வைத்துக் கொள்ள வேண்டும்.

## 124. வெடியுப்புச்செயநீர் கடுங்காரச்சுண்ணம்

475 பொடித்தசுண் ணந்தனக்கு பதினறிலொன்று
பொடிபண்ணிச் சாரத்தைக் கூடச்சேரு
எடுத்துமதைப் பீங்கானி லிட்டுக்கொண்டு
என்மகனே மூன்றுநாள் பனியில்வைக்க

கடுத்ததுவுஞ் செயநீராம் படிகால்வாங்கி
கனமான பீஞ்காளுஞ் சாடிவார்த்து
மடித்தஅண்ட வெண்கருதான் படிதாளென்று.
மாவெருக்கன் பாலதுதான் படிகாலாமே.

476 காலாக இம்மூன்றுங் கலக்கிவைத்துக்
கடுங்கார மேறுதற்கு வகையைக்கேளு
வாலாகும் அண்டவோடு சங்குநத்தை
வளர்சிப்பி நண்டோடு வெள்ளைக்கல்லு
மேலாக இவையாறுங் கல்வத்திட்டு
வெடியுப்புச் செயநீரா லரைத்துக்கொண்டு
சேலாகும் வில்லைகட்டி ரவியிற்போடு
திறமாக கணீரிட்டால் செப்பக்கேளே.

477 கேளடா வட்டோட்டில் சுண்ணநீறு
கேளிரண்டு விரல்கனமாய்ப் பரப்பியந்த
வாளடா வில்லைவைத்து மேல்நீறிட்டு
வட்டோடு மேல்மூடி சீலைசெய்து
தாளடா கெசபுடத்தில் இட்டாயாகில்
தப்பாது கொடியசுண்ணந் தாக்கிப்பாரு
நாளடா காற்ருடா விடத்தில்வைத்து
நன்ருக இன்னமொன்று நவிலக்கேளே.

478 நவிலுவேன் கடல்நுரைதான் பலந்தாளென்று
நன்ருகச் சீனமொன்று கூடவென்று
புவியிலே இணங்கனென்று கல்லுப்பொன்று
புகழைந்துங் கல்வத்தி லிட்டுப்பின்பு
குவியவே இணங்கனீர் தன்னிலப்பா
கொடியவறு சுண்ணமதில் பலமரைதானிட்டு
கவியவே கலக்கிவைத்துத் தெளிவைவாங்கி
கட்டாக ஐந்தையுந்தா னரைத்திடாயே.

479 அரைத்திடுவாய் நாற்சாமம் வில்லைதட்டி
அப்பனே கடுரவியி லுலர்த்திக்கொண்டு
நிரைத்திடுவாய் சுண்ணத்தி னடுவேவைத்து
நீமூடி சீலைசெய்து கனபுடமேபோடு
விரைத்திடுமே குளிர்ந்தபின்பு எடுத்துவில்லை
வெண்கருவின் தெளிவிறுத்து அரைத்துக்கேளு
உரைத்திடவே காசுபோல் வில்லைதட்டி
ஊதிடுவாய் தணலுமியா வோட்டிலூதே.

480 ஊதையிலே கொடியதொரு சுண்ணமாகும்
உத்தமனே அஞ்சுசுண்ணக் குகைதானப்பா
பாதையிலே முன்வைத்த கடுங்காரநீறு
பாலகனே இச்சுண்ணங் கழஞ்சிபோடு
வேதையிலே பூரமொடு காரஞ்சாரம்
வீரம்பூ நீறுசவுக் காரச்சுண்ணம்
வாதையிலே சீனமண்டச் சுண்ணம்வெள்ளை
மாகூடன் ஞானிவெண் மலமுங்கூட்டே.

481 கூட்டடா உரத்தோடு கழஞ்சிவீதங்
குறையாமல் புழுகுடனே பொடித்துப்போடு
நாட்டியே மூன்றுநா ளந்திசந்தி
நலமான கவர்மத்தால் கடைந்துமூடு
மாட்டுவாய் முன்வைத்து துருசிற்குத்தி
மகத்தான ரவிதனிலே மூன்றுநாள்வை
நீட்டியே அஞ்சுசுண்ணக் குகையில்வைத்து
நேராக ஊதிடவே சுண்ணந்தானே.

482 சுண்ணந்தா லூதுதற்குத் தெளியா விட்டால்
சுகமாக கெசபுடத்திற் சுண்ண மாகும்
எண்ணந்தான் குருவண்டு கூடச் சேரில்
இச்சுண்ணம் வாதத்துக் காதி யாகும்
வண்ணந்தான் தொட்டதெல்லாஞ் சுண்ணஞ் சுண்ண
மகத்தான துருசதுதான் கொடுமை மெத்த
திண்ணமுட னிதன்பெருமை ஆயி சொல்லச்
செய்துநா னுலகத்தில் செப்பி னேனே.

| | | |
|---|---|---|
| வெடியுப்புச்சுண்ணம் | 16 | பங்கு |
| நவச்சாரம் | 1 | ,, |

இவற்றை ஒரு பீங்கானிலிட்டு மூன்று நாட்கள் பனியில் வைக்கச் செயநீர் வடிந்திருக்கும்.

| | | |
|---|---|---|
| வெடியுப்புச்செயநீர் | 1/4 | படி |
| கோழிமுட்டைவெண்கரு | 1 | படி |
| எருக்கம்பால் | 1/4 | படி |

இம்மூன்றையும் ஒரு பீங்கான் சாடியிலிட்டு கலக்கி வைத்துக் கொள்ள வேண்டும்.

அண்டவோடு
சங்கு
நத்தை
சிப்பி
நண்டோடு
வெள்ளைக்கல்

இவற்றைக் கல்வத்திலிட்டு வெடியுப்புச் செயநீர்விட்டு நன்ருக அரைத்து வில்லை தட்டி சூரிய ஒளியிலிட்டெடுக்க கடுங் காரச் சுண்ணமாகும். சிறந்த முறையில் சுண்ணமாகாவிட்டால் ஒருவட்டோட்டில் மேற்படி சுண்ணத்தை இரண்டு விரற்கனம் பரப்பி வைத்து அதன்மேல் வில்லையை வைத்து அதன்மேல் மேலும் சுண்ணத்தையிட்டு மேலோடு கொண்டு மூடிச் சீலைமண் செய்து உலர்த்திக் கொண்டு காற்றில்லாத இடத்தில் கெசபுடமிட்டெடுக்க கடுங்காரச் சுண்ணமாக இருக்கும்.

| | |
|---|---|
| கடல்நுரை | 1 பலம் |
| சீனக்காரம் | 1 ,, |
| சூடன் | 1 ,, |
| வெடியுப்பு | 1 ,, |
| கல்லுப்பு | 1 ,, |

இவற்றை யெடுத்துக் கல்வத்திலிட்டுக்கொள்ள வேண்டும். வெடியுப்புச் செயநீரில் அரைப் பலம் சுண்ணமிட்டுக் கலக்கி வைத்துத் தெளிவையெடுத்து மருந்திட்டு வைத்துள்ள கல்வத்தில் வார்த்து ஐந்து சரக்குகளையும் நன்ருக அரைக்க வேண்டும். நான்கு சாமமரைத்து வில்லை தட்டி கடுவெய்யிலில் வைத்துலர்த்தி எடுத்துக்கொள்ள வேண்டும். ஒரு ஓட்டில் சுண்ணத்தையிட்டு அதன் நடுவில் மேற்படி வில்லையை வைத்து மேலோடு கொண்டு மூடி, சீலைமண் செய்து உலர்த்தி கனபுடமிட்டெடுத்துக்கொள்ள வேண்டும். குளிர்ந்த பின் இதைக் கல்வத்திலிட்டு, கோழி முட்டை வெண்கருவின் தெளிவுவிட்டு நன்கு அரைத்து காசுபோல் வில்லை தட்டி உலர்த்திக்கொள்ள வேண்டும். இவ்வில்லையை ஓட்டிலிட்டு உமிநெருப்பிலூதியெடுக்கக் கொடிய கடுங்காரச் சுண்ணமாகும்.

| | | |
|---|---|---|
| கடுங்காரச்சுண்ணம் | 1 கழஞ்சு | |
| பூரம் | | சீனக்காரம் |
| வெங்காரம் | | அண்டச்சுண்ணம் |
| நவச்சாரம் | | வெள்ளைப்பாடாணம் |
| வீரம் | | சூடன் |
| பூநீறு | | கோழிமலம் |
| சவுக்காரச்சுண்ணம் | | புனுகு |

வகைக்கு ஒரு கழஞ்சு

இவற்றைப் பொடித்துக்கொண்டு கவர்மத்தால் காலையும் மாலையும் நன்கு கடைந்து மூடிவைக்க வேண்டும். பின்னர் இதனுடன் துருசு சேர்த்து சூரிய ஒளியில் மூன்றுநாள் வைத்

தெடுத்து ஐந்து சுண்ணக் குகையிலிட்டு ஊதி எடுக்கச் சுண்ண மாகும். குகையிலிட்டு ஊதியெடுக்க நன்முறையில் முடியா விட்டால் கெஜபுடமிட்டெடுக்க உயர்ந்த முறையில் சுண்ண மாகும்.

இச்சுண்ணத்துடன் முப்புக்குரு (குருவண்டு) சேர்க்க, வேதைகளுக்கு ஆதி மருந்தாகும். இதை எந்த சரக்கிலிட்டா லும் சுண்ணமாகும். துருசு இதனால் கடுங்காரச் சுண்ணமாகும்.

## 125. இலிங்க மெழுகு

483 செப்பினேன் ஒளிப்பில்லைச் சுந்தரமே கேளு
திறமான வீரமது பணவெடை தானென்று
தப்பில்லை முன்செய்த செயசார வுப்பு
தன்னிலொரு பணவெடைதான் ரவியி னுப்பு
ஒப்பில்லா துரிசினுடைச் சுண்ணந் தானும்
ஒவ்வொன்று பணவெடைதான் பொடித்துக் கொண்டு
இப்புவியில் பூரமொன்று புழுகு வொன்று
இயல்பான் சீனமொன்று சவ்வா தொன்றே.

484 ஒன்றொன்று பணவெடைதான் எட்டுஞ் சேர்த்து
உத்தமனே மத்தித்து எருக்கன் பாலால்
நன்றென்று கலக்கிவைத்துப் பார்க்கும் போது
நாழிகைக்குள் சுத்தசல மாகும் பாரு
ஒன்றன்று லிங்கத்தைச் சுத்தி செய்து
உத்தமனே பால்தண்ணீர் தன்னில் தோய்த்து
என்றுநீ இலுப்பைநெய் தீபத்தி லாட்டு
எளிதல்ல மெழுகாகு மாகுந் தாமே.

| | | |
|---|---|---|
| வீரம் | 1 | பணவெடை |
| செயசாரவுப்பு | 1 | ,, |
| இரவியுப்பு (இந்துப்பு-வழலையுப்பு) | 1 | ,, |
| துருசு சுண்ணம் | 1 | ,, |

இவற்றைப்பொடித்துக்கொண்டு, இதனுடன்

பூரம்
புனுகு
சீனக்காரம்

சவ்வாது வகைக்கு ஒரு பணவெடை எடுத்துச் சேர்த்து எருக்கன் பால்விட்டு மத்தித்துக் கலக்கி ஒரு நாழிகை நேரம் வைத்திருந்தால் சுத்தமான தண்ணீராகும். இலிங்கத்தை சுத்தித்

தெடுத்துக்கொண்டு ஒரு பாத்திரத்திலிட்டு மேலே தயாரித்து வைத்துள்ள எருக்கன் பால் தண்ணீர் வேண்டிய அளவு சேர்த்து, இலுப்பை நெய் தீபத்தில் வாட்டி எடுக்க இலிங்கம் மெழுகாகும்.

## 126. அரிதார மெழுகு

485 மெழுகெடுத்துப் பதனமாய் வைத்துக் கொண்டு
மேலான மால்தேவி சுத்தி செய்து
பழுதில்லா பால்தண்ணீர் தன்னிற் றேய்த்துப்
பாலகனே தீபத்தில் வாட்டு வாட்டு
எளிதல்ல மெழுகாகும் எடுத்துக் கொண்டு
ஏறடா வங்கத்தைச் சுத்தி செய்து
வழிநல்ல வங்கமது கட்டிப் போகும்
மகத்தான கட்டிதுதான் வங்கந் தானே.

486 வங்கத்தி லோர்பலந்தா னிறுத்துக் கொண்டு
மைந்தனே குகையிலிட்டு வுருகும் போது
இலிங்கத்தின் மெழுகுதன்னைத் தங்க ரேக்கில்
நீபொதிந்து பத்துக்கொன் றீய்ந்தா யானால்
தங்கத்தின் மாற்றுபத் தரைதா னப்பா
தப்பாது சின்மயமே சாட்சி யாகும்
பங்கமில்லா தொழிலப்பா இன்னங் கேளு
பால்தெளிந்த தண்ணீரின் பருவந் தானே.

அரிதாரத்தை முறைப்படி சுத்தம் செய்தெடுத்து, முன்பு கூறிய எருக்கன்பால் தண்ணீரில் தோய்த்து, இலுப்பை நெய் தீபத்தில் வாட்டி எடுக்க அரிதாரம் மெழுகாகும்.

சுத்தம் செய்யப்பெற்று கட்டப்பெற்ற வங்கம் ஒரு பலம் கட்டியாக எடுத்து குகையிலிட்டு உருகும்போது, இலிங்க மெழுகில் தங்க ரேக்கைப் பொதிந்து சேர்க்க பத்தரை மாற்றுத் தங்கமாகும்.

## 127. கௌரி மெழுகு

487 தானென்ற கௌரிதன்னைச் சுத்தி செய்து
சார்வான சலந்தன்னில் துவைத்து வாட்ட
வேனென்ற மெழுகாகு மெடுத்துக் கொண்டு
விளங்கவே அயம்பத்தி லொன்றுங் கூட்டித்
தேனென்ற காரமிட்டு உருக்கி னுக்கால்
செப்பாதே தங்கமது பத்தரையேயாகும்
ஊனென்ற கெந்தகத்தை வைத்துவாட்ட
**உத்தமனே மெழுகாகு முவந்துசெய்யே.**

சுத்தித்த கௌரிப்பாடாணத்தை முன்பு கூறப்பெற்ற எருக்கன்பால் நீரில் துவைத்து வாட்டி எடுக்க மெழுகாகும். அயம் 10 பங்குக்கு 1 பங்கு கௌரிமெழுகு கூட்டி வெங்காரமிட்டு உருக்கினுல் அயம் பத்தரைமாற்றுத் தங்கமாகும்.

## 128. கெந்தக மெழுகு

488 செய்யடா கெந்தகத்தி லனந்தம் வேதை
திறமாகப் பாடாண மெழுகு மாகும்
வையடா வீரமது துவைத்து வாட்ட
மைந்தனே மெழுகாகும் வேதை கோடி
உய்யடா மனுேசிலையுந் துவைத்து வாட்ட
உத்தமனே மெழுகாகு மின்னங் கேளு
அய்யடா கண்டரொடு சரக்கெல் லாந்தான்
அப்பனே துவைத்துமெள்ள வாட்டு வாயே.

489 வாட்டையிலே மெழுகாகும் வேதை கோடி
மைந்தனே உனக்குள்ள தேகம் பொன்னும்
கூட்டையிலே நோயெல்லாங் கடலே யோடும்
குடிகெடுக்கும் மூடருக்கு கூறுண் ணுது
நீட்டையிலே கல்முதலாய் குகையி லாடும்
நிசமாகச் சொல்லிவிட்டே னினைத்துப் பாரு
ஏட்டிலே எழுதிவைத்தால் பலனே யுண்டோ
இயம்புவேன் கெந்தகத்தி னியல்பைக் கேளே.

490 கேளப்பா நாகத்தைச் சுத்தி செய்து
கெடியாகப் பலமொன்று உருகும் போது
தாளப்பா கெந்திமெழு கொன்று தாக்க
தான்மாற்று ஐம்பதடா தாக்கிப் பாரு
நாளப்பா தாம்பிரத்தில் பத்துக் கொன்று
நாகத்தை ஈந்திடவே தசமாற் றுகும்
வேளப்பா எரித்தசிவ னுமைக்குச் சொன்னுர்
மேதினியி லுள்ளவர்க்காய் விளம்பி னேனே.

491 விளம்பினேன் பாடாண மெழுகு தன்னை
மேலான தாம்பிரத்தி லீந்தா யானுல்
உளம்பலக்கும் வெள்ளியடா வயது மெத்த
உலகத்தில் காட்டினுல் உயிருக் கீனம்...

சுத்தித்த கெந்தகத்தை எருக்கன்பால் நீரிலிட்டு இலுப்பை நெய் தீபத்தில் வாட்டி எடுக்க மெழுகாகும்.

வெள்ளைப்பாடாணம், வீரம், மனோசிலை, துருசு, முதலியவற்றையும் எருக்கன் பால் நீரில் துவைத்து வாட்ட மெழுகாகும்.

இம்மெழுகினால் உடல் பொன்னிறமடையும். உடலிலுள்ள நோயெல்லாம் நீங்கிவிடும்.

முறைப்படி சுத்தி செய்த நாகம் ஒரு பலமெடுத்து உருக்கி, உருக்குமுகத்தில் கெந்திமெழுகு ஒரு பலம் சேர்க்க ஐம்பது மாற்றுத் தங்கமாகும். தாம்பிரம் ஒரு பங்கிற்கு 10ல் 1 பங்கு மேற் சொல்லப்பெற்ற இந்நாகம் சேர்த்திட பத்து மாற்றுத் தங்கமாகும். பாடாண மெழுகை தாம்பிரத்திலீய்ந்தால் நல்ல வெள்ளியாகும்.

## 129. தாளகச் சுண்ணம்

491...வளம்பெறவே துரிசினுடைச் சுண்ணந் தன்னில்
மைந்தனே வீரமுடன் புழுகு சேர்த்து
குழம்புபோல் மத்தித்து தாளகத்தி லப்பி
குணமான அஞ்சுசுண்ணக் குகையி லூதே.

492 ஊதையிலே உமியோட்டி லூது வூது
உயர்ந்ததொரு மல்லிகைப்பூ போலே நீறும்
பாதையிலே வெகுபாதை சார நீரால்
பாடவென்று லென்னாலு முடியா தப்பா
வேதையிலே எடுத்தாட்ட வேண்டு மென்றால்
மேதினியுங் கொள்ளாது மலையோ யில்லை
போதையிலே நாதாக்க ளறிய மாட்டார்
புனலான சாரத்தின் புதுமை தானே.

துரிசுச்சுண்ணம்
வீரம்
புனுகு

இவற்றைக் குழம்புபோல் நன்றாக மத்தித்தெடுத்து, தாளகத்திற்குப் பூசி, அஞ்சு சுண்ணக்குகையிலிட்டு, உமி யோட்டில் வைத்து ஊதி எடுக்க மல்லிகைப்பூ நிறம் போன்று வெண்மையான சுண்ணமாகும்.

## 130. பூநீறு தீட்சை

493 புதுமைகேள் ஊசிநீர் படிதா னெட்டு
போட்டக்கால் சுண்ணமது படிதான் ரெண்டு
கதுமைபெற கலக்கிவைத்து தெளிவை வாங்கி
காசினியில் மலைச்சார்பில் பூநீர் வாரு

பதுமமென்ற தெளிந்தநீர் தன்னை விட்டு
பகருவேன் மூன்றுதினங் கலக்கிவைத்து
நிதுமமென்ற பீங்கானில் தெளிவை வாங்கி
நீரவியில் போடுமுதல் தீட்சை யாமே.

494 தீட்சையது தினம்பத்துக் காய வேண்டும்
தினமான சவுக்காரஞ் செய்ய வேண்டும்
காட்சிபெறுங் கல்சுண்ண மறிய வேண்டும்
கற்பமது கொண்டுமுத்தி சேர வேண்டும்
தாட்சியில்லா தாய்ப்பூசை செய்ய வேண்டும்
சங்கற்ப யோகத்தைச் சார வேண்டும்
ஆட்சிபெற சிவபூசை யறிய வேண்டும்
ஆகாச வுப்பறிந்தோன் ஞானி யாமே.

8 படி ஊசிநீரில் (சிறுநீர்) 2 படி கற்சுண்ணத்தையிட்டுக் கலக்கி வைத்திருந்து தெளிவையிறுத் தெடுத்துக்கொள்ள வேண்டும். இத்தெளிநீரில் பூநிறிட்டுக் கலக்கி மூன்று நாட்கள் வைத்துத் தெளிவை ஒரு பீங்கானில் எடுத்துக்கொண்டு சூரிய ஒளியில் வைத்து எடுத்துக்கொள்ள வேண்டும். இது முதல் தீட்சை யாகும். இவ்வாறு 10 நாட்கள் சூரிய ஒளியில் காயவைத்தெடுக்க வேண்டும்.

சவுக்காரம் செய்யும் முறையறிந்து செய்யவேண்டும். கல் சுண்ணம் அறிய வேண்டும். கற்பம் கொண்டு முத்தியடைதல் வேண்டும். தாயைப் பூசை செய்ய வேண்டும். சங்கற்ப யோகத்தைக் கைக்கொள்ள வேண்டும். சிவபூசை அறிய வேண்டும். ஆகாச உப்பை யறிந்தவர் ஞானியாவர்.

## 131. கடுங்காரச் சுண்ணம்

495 ஆமப்பா ராமதேவர் ஆயிரத்தில்
அரகரா கல்தீட்சை நன்றாய்ச் சொன்னார்
தாமப்பா தீட்சைசெய்த கல்தா னென்று
தாயான கம்பியுப்பு சரிநே ராக
வாமப்பா கல்வத்தி விட்டுக் கொண்டு
மாட்டியரை கம்பியுப்புச் செயநீ ராலே
நாமப்பா வொளிக்கவில்லை சாமம் ரெண்டு
நலமான முத்தீட்சை பூநீறு போடே.

496 போடப்பா கம்பியுப்புக் கெட்டி லொன்று
போட்டரைத்து வில்லைதட்டி ரவியிற் போடு
நாடப்பா தினம்பத்து காய்ந்த வில்லை
நன்றாகக் கணீரிட்டால் ஓட்டில் வைத்து

ஓடப்பா மேல்மூடிச் சீலை செய்து
உத்தமனே குழிக்குள்ளே வராகபுடம் போடு
சூடப்பா குளிர்ந்தபின்பு யெடுத்து நீயும்
சுருக்காக கல்வத்தி லிட்டு ஆட்டே.

497 ஆட்டுவாய் கடுங்காரச் செயநீர் விட்டு
அதட்டியரை சாமமொன்று ஆன பின்பு
பூட்டுவாய் துட்டதுபோல் வில்லை தட்டி
புகழ்ரவியில் ஏழுநாள் காயப் போடு
மாட்டுவாய் கடுங்காரச் செயநீர் குத்தி
மகத்தான கடுரவியில் வாரம் போடு
நாட்டுவா யுமியோட்டில் வெளுக்க வூது
நன்றாக கடுஞ்சுண்ணக் கார மாச்சே.

498 ஆச்சப்பா இச்சுண்ணம் வழலைக் கொப்பு
அடங்காத சரக்கையெல்லா மடக்கிக் கொல்லும்
பேச்சப்பா சவுக்காரஞ் செய்யும் போது
பேறாக எண்ணெய்விடும் பருவம் சொன்னேன்
காச்சப்பா காரெள்ளி னெண்ணெய் படிகாலில்
கல்சுண்ணங் கழஞ்சிபதி னாறு போடு
பாச்சப்பா யெண்ணெய்விடு பருவஞ் சொன்னேன்
பங்கயன்மா லறியாத பரமன் சொல்லே.

499 சொல்லென்ற காரெள்ளி னெண்ணெ யேது
சுருதிமொழி படியெனக்குச் சொல்லு மையா
அல்லென்ற இருட்டுக்குள் ஒளிபோல் சொன்னீ
ரதுதெரிய என்குருவே கடாட்ச மாக
இல்லென்ற இருள்நீக்கி அடியே னுக்கு
இக்கருவைத் தெளிவாக இயம்ப வேண்டும்
கல்லென்ற மனமிரங்கிக் கருணை கூர்ந்து
கடாட்சிக்க வேண்டுமென்று பணிந்திட் டேனே.

| | |
|---|---|
| தீட்சை செய்த கல் | 1 பங்கு |
| கம்பியுப்பு | 1 ,, |

இவற்றைக் கல்வத்திலிட்டு வெடியுப்புச் செயநீர் விட்டு இரண்டு சாமநேரம் நன்றாக அரைத்து வெடியுப்புக்கு எட்டில் ஒரு பங்கு பூநீறு சேர்த்து நன்றாக அரைத்து வில்லை தட்டி சூரிய ஒளியிலிட்டு உலர்த்திக் கொள்ள வேண்டும். இவ்வாறு 10 நாட்கள் சூரிய ஒளியிலிட்டு உலர்த்திய வில்லையை, ஓர் ஓட்டி லிட்டு, மேலோடு கொண்டு மூடி, சீலைமண் செய்து உலர்த்திக் கொண்டு, பூமியில் ஒரு குழிவெட்டி அதில் வைத்து வராக புடமிட்டெடுத்து ஆறியபின் கல்வத்திலிட்டு கடுங்காரச் செய

நீர் விட்டு ஒரு சாமம் நன்ருக அரைத்துக்கொள்ள வேண்டும். அரைத்தெடுத்துத் துட்டுபோல் வில்லை தட்டி சூரிய ஒளியில் ஏழு நாட்கள் வைத்து உலர்த்திக் கொள்ள வேண்டும். பிறகு கடுங்காரச் செயநீர்விட்டு ஒரு வாரம் கடுமையான வெய்யிலில் வைத்துலர்த்திக் கொள்ள வேண்டும். இவ்வில்லையை ஒரு ஓட்டிலிட்டு, உமிநெருப்பில் நன்ருக வெண்மையாகும் வரை ஊதி எடுத்துக் கொள்ள வேண்டும். இதுவே கடுங் காரச்சுண்ணமாகும்.

இச்சுண்ணம் வழலைக்கு ஒப்பானது. மடியாத சரக்கையெல்லாம் மடியச் செய்யும். சவுக்காரம் செய்யும்போது எண்ணெய் விடும் பருவம் சொன்னேன். காரெள்ளின் எண்ணெய் 1/4 படியில், 16 கழஞ்சு கற்சுண்ணம் சேர்த்துக் காய்ச்ச வேண்டும். இதுவே எண்ணெய் விடும் பருவமாகும்.

### 132. கற்பம் (காரெள்ளின் எண்ணெய்)

500 பணிந்திட்ட சிறுபிள்ளாய் பகரக் கேளு
பாரிலுள்ளோ ரிக்கருவை பகரொண் ணுது
அணிந்திட்ட நாதவிந்தா லுருவே யாகி
அதுதவழும் பருவத்தை யமைப்பே யாஞல்
கொணர்ந்திட்ட அறுகுதள்ளி நொறுக்கி யப்பா
கூசாமல் கல்லுரலில் இடித்துக் கொண்டு
தணிந்திட்ட கைபழகும் பாண்டத் திட்டு
சாரநீர் படியெட்டுத் தாக்கி டாயே.

501 தாக்குவாய் காரமிருத் தேங்காய் மட்டும்
காஞ்சொரி கொம்பிஞல் எரிநேர்ப் பாகம்
நோக்குவாய் அடிப்பற்ரு திளகக் காய்ச்சி
நுவலுவேன் கடுகுமெழு காகும் போது
தூக்குலாய் துணியிலிட்டுக் கிட்டி கட்டிச்
சூடாறு முன்பிழிந்து பதனம் பண்ணு
வாக்குண்டோ கடுகெடுத்து கற்பங் கொள்ளு
வலுவான நோயெல்லாம் அகலுந் தானே.

502 தாஞன கலைக்கியானந் தன்னைப் பாரு
சாற்றிஞல் ராமதேவர் தன்னூல் பாரு
வாஞன போகருடை யெழுநூற்றி லப்பா
வைத்தசவுக் காரமது தன்னைச் செய்து
கோஞன சட்டைமுனி நூலுக் குள்ளே
கூட்டினதோர் சவுக்காரந் தன்னைப் பாரு
நாஞன துறையெல்லாம் பார்த்துத் தேறி
நான்சொன்ன கற்சுண்ணஞ் செய்து போடே.

503 போடுவதி லொளிப்பொன்று சொல்லக் கேளு
பூரணமாய் கற்சுண்ணத் தெண்ணெ யொன்று
நாடுவது மதிலிரண்டுஞ் சேர்த்தா யானல்
நலமான சவுக்கார மிதுதா னப்பா
ஊடுகின்ற வாதத்துக் குயிர்தா னுக
உத்தமனே வைத்தியத்துக் குரிமை மெத்த
சாடுவது அவிழ்தங்கள் செய்யும் போது
தனித்தீட்சைப் பூவுடனே காரசுண்ணஞ் சேரே.

504 சேர்த்திடவே வெகுசுருக்கு மருந்தின் வேகம்
திறமான பற்பங்கள் செந்தூ ரங்கள்
நீற்றுதற்கு வழலையுப்புச் சுண்ணஞ் சேரு
நீற்ருட்டா லொன்றுமில்லை விழலாய்ப் போகும்
பார்த்திடவே லேசாகுங் கனமி ராது
பாயாது பிணியதுவுந் தீர்ந்தி டாது
காற்றுப்போ லேயிருந்தால் பலனே துண்டு
கனத்திருந்தால் சிங்கம்போல் கவ்வுந் தானே.

505 கவ்வுமடா வழலையினுல் வசிய மாச்சு
கனமான அஞ்சனமு மறைப்பு மாச்சு
வவ்வுமடா வாதமொடு அட்ட கர்மம்
வழலைவிட்டா லெல்லாம்போய் மண்ணுய்ப் போச்சு
குவ்வுமடா வங்கமொடு ரசத்தி னீரைக்
கொல்லுமடா யெட்டெட்டு சரக்கே யெல்லாம்
ஒவ்வுமடா திராவகத்துக்குக் குயிராம் பாரு
உற்றசெய நீருக்கு உயிர தாமே.

நாதவிந்தாலுருவாகி தவழும் பருவத்தையடைந்த பொருளைக் கொணர்ந்து அறுகுதள்ளி, நொறுக்கிக் கல்லுரலிலிட்டு இடித்து, ஒரு பழகிய பாண்டத்திலிட்டு எட்டு படி சாரநீர் இரு தேங்காயளவு காரம் முதலியவற்றைச் சேர்த்து, அடுப்பேற்றி, காஞ்சொறி விறகால் எரித்து அடிப்பற்ருமல் இளகக் காய்ச்சிக் கடுகு மெழுகுபதமானவுடன் எடுத்துத் துணியிலிட்டுக் கட்டி, சூடாறும்முன் பிழிந்து கடுகை எடுத்து வைத்துக்கொள்ள வேண்டும்.

**பெருமை:** இக்கடுகைக் கற்பமாக உட்கொள்ள வன்மையான நோயனைத்தும் நீங்கும்.

இந்நூலில் கூறியுள்ள கற்சுண்ணம் செய்ய அமுத கலைஞானம், இராமதேவர் நூல், போகர் 700—ல் கூறியுள்ள சவுக்கார முறை, சட்டைமுனி நூலிலுள்ள சவுக்கார முறை முதலிய

வற்றை அறிந்துகொள்ள வேண்டும். இதில் மறைவாகக் கூறப் பட்டுள்ள கற்சுண்ணத்தெண்ணெய் இரு மடங்கு சேர்ந்தால் சிறந்த சவுக்காரமாகும். இது வாதத்திற்கு உயிர் போன்றது. வைத்தியத்திற்கும் நன்மை பயக்கும். மருந்துகள் செய்யும் போது தீட்சை (சுத்தி) செய்த பூநீறு, காரச்சுண்ணம் சேர்த்துச் செய்தல் வேண்டும். இவ்வாறு செய்ய மருந்தின் வேகம் அதிகரிக்கும். பற்பம் செந்தூரங்கள் செய்வதற்கு வழலையுப்புச் சுண்ணம் சேர்க்கவேண்டும். இப்படிச் சேர்க்காவிட்டால் வீணுகிவிடும். கனமிராது. இலேசாக இருக்கும். பிணி தீராது. கனத்திருந்தால் நோய்கள் தீரும். வழலையினுல் வசியமுண்டாகும். வாதம், அட்டகர்மம் முதலியன கைகூடும். வழலே சேரா விட்டால் எல்லாம் மண்ணுய்ப் போய்விடும். வங்கம், இரசம் இவற்றின் நீரை எடுத்துவிடும். 64 வகைச் சரக்கையும் மடியச் செய்யும். திராவகம் செயநீர் முதலியன செய்வதற்கு இதுவே உயிராகும்.

## 133. சவுக்காரப் பூநீர் வழலே

506 உயிரான சவுக்காரஞ் சொல்லக் கேளு
உத்தமனே முதல்தீட்சை பூநீறு நாலு
மயமான வெள்ளைக்கற் சுண்ணம் இரண்டு
மகத்தான கல்லுப்புக் காலும் போடு
செயமான ஊசிநீர் சுண்ணம் போடு
தெளிந்தநீர் படியெட்டுச் சேர வாரு
புயலான தில்கரைத்துக் கவர்மத் தாலே
பொருந்தவே யேழுதினங் கடைந்து வையே.

507 கடைந்துவைத்த மறுநாளில் தெளி விறுத்து
காய்ச்சுவாய் சிறுதீயிட் டெரித்துக் கொண்டு
குடைந்தபெருங் கரண்டிதனைத் துலக்கி வாங்கி
கூசாமல் உலையில்வைத்துப் பழுக்க வூது
அடைந்தகம்பி யுப்பதுதான் பலமோ பத்து
அதிலிட்டு உருக்கிவரி லண்டந் தாக்கு
தொடர்ந்தபல மெட்டுநீ கொடுத்தா யானுல்
துடியாமற் கட்டியது சுண்ண மாமே.

508 சுண்ணத்தைத் தண்ணீரில் கரைத்து வைத்து
சுத்தமாய்த் தெளிந்தபின்பு இறுத்துக் காய்ச்சு
எண்ணத்த சுண்ணத்தில் பலமோ ரெட்டு
இட்டுநீ காய்ச்சியே குழம்பே யானுல்

விண்ணுைத்த எண்ணெய்படி காலி லப்பா
மேலான கற்சுண்ணம் பொடித்துப் போடு
கண்ணுைத்த சவுக்காரந் தன்னி லிட்டு
கலரவே யிறக்கிவிடு பதமாம் போதே.

509 பதமான பருவத்தே திருநீர் தன்னை
பரப்பியே குழிபண்ணி துணிமே லிட்டு
இதமான அகப்பையினுல் முகந்து விட்டு
இருக்கையிலே உண்டைபண்ணி உலரப் போடு
நிதமான தினமப்பா பதினஞ் சாகும்
நீயெடுத்து சுண்ணும்புக் குள்ளே வைத்து
விதமான குருசெய்யும் வகையைக் கேளு
விமலனு ருரைத்தபடி விள்கின்றேனே.

510 விள்ளுகிறே னயக்கரண்டி துலக்கிப்போடு
மேலான சவுக்காரம் பலமொன்றிட்டு
கொள்ளுகிறேன் கறியுப்பு மணியாய்வாங்கு
குலவிநன்ருய்ப் பொடிபண்ணி வைத்துக்கொண்டு
கள்ளமறக் கரியோட்டில் வைத்துவூது
காய்ச்சியது வுருகையிலே கழறக்கேளு
மெள்ளவே முன்பொடித்த கறியுப் பையொரு
விராகனெடை யதிற்போட்டுக் கிண்டு கிண்டே.

511 கிண்டையிலே வலுவான துணியிற் கொட்டி
கிட்டிகட்டிப் பிழியயிலே யெண்ணெய் கக்கும்
விண்டதே யெண்ணெய்தனை வேறே வாங்கி
மிக்கசவர்க் காரத்தைத் துணியில் கட்டி
கொண்டுசுண்ணக் கல்லில்வைத்து மூடிக் கொண்டு
கொடுப்பைவெந்த தண்ணீரைத் தெளிநேர்ப் பாக
மண்டவிடா திப்படியே ஐம்பத் தொன்று
மட்டுமே வைத்தெடுத்து வாங்கிக் கொள்ளே.

512 கொள்ளவே சீனமொரு பலத்துக் கப்பா
கூட்டுசமன் வெடியுப்புச் செயநீர் தன்னை
துள்ளவே பொடித்துநீ பொங்கி நீறுந்
துடியான ரவிதனிலே யேழு நாள்வை
மெள்ளவே சீனமது கட்டி நீறு
மேலான கம்பியுப்பு நீரா லாட்டி
வள்ளலே வழலைக்குங் கவசங் கட்டி
மைந்தனே பூநீறின் சீலை சுற்றே.

513 சுற்றியே சுண்ணநீற் றுள்ளே வைத்துச்
சொல்லுவேன் தீபம்போல் சாம மூட்டி
நத்தியே கமலம்போல் சாம மூட்டு
நன்றாகக் குளிர்ந்தபின்பு எடுத்துப் பாரு
முற்றியே கடுங்காரச் செயநீர் குத்தி
முழுரவியில் பட்சமடா காயப் போடு
சத்தியைநீ பூசைபண்ணு அஞ்சுசுண்ணக் குகையில்
தான்வைத்து மேன்மூடிப் புடத்தைப் போடே.

514 புடம்போடச் சவுக்காரங் கொடியசுண்ண மாச்சு
புலிபோலச் சரக்குகளில் பாயும் பாரு
நடம்போடு மிந்தமுறை ஒளித்தார் சித்தர்
நான்வெளியில் சொன்னடா நாடிப் பாரு
வடம்பூண்ட முலையாள்தன் நாதம் வாங்கி
மைந்தனே வழலையுடைச் சுண்ணம் போட்டு
திடமுடைய சலமாகுந் துருசிற் குத்தி
செய்துருசு நூறுதொந்தஞ் செல்லுந் தானே.

515 செல்லுமடா சூதத்தில் நூற்றுக் கொன்று
சேர்த்தரைத்துச் சாரநீர் விட்டு ஆட்டு
அல்லவடா அரியின்முன் ஞனை போலே
அலறுமே சூதமது கசடோ யில்லை
நல்லதடா தங்கமுடை நாகஞ் சேர்த்து
நாயகிதன் பீசமிட்டுச் செந்தூ ரித்தால்
சொல்லவடா நாக்குண்டோ வேதைப் போக்கு
தொல்லுலகில் நமனில்லை சொல்லத் தானே.

| | |
|---|---|
| முதல் தீட்சை பூநீறு | 4 பங்கு |
| வெள்ளைக் கற்சுண்ணம் | 2 பங்கு |
| கல்லுப்பு | 1/4 பங்கு |
| ஊசிநீர் சுண்ணத் தெளிநீர் | 8 படி |

தெளிநீரில் சரக்குகளைக் கரைத்துக் கொண்டு கவர்மத்தால் ஏழு நாட்கள் நன்றாகக் கடைந்து, எட்டாம் நாள் தெளி விறுத்துக்கொள்ள வேண்டும். இதை அடுப்பேற்றிச் சிறு தீயிட்டெரித்தெடுத்து, சுத்தமான குழிக்கரண்டியிலிட்டு, உலை யில் வைத்துப் பழுக்க ஊதவேண்டும். ஊதும்போது 10 பலம் வெடியுப்புச் சேர்த்து ஊத வேண்டும். உருகுமுகத்தில் 8 பலம் அண்டம் சேர்த்து உருக்கச் சுண்ணமாகும். இச்சுண்ணத்தை நீரில் கரைத்து வைத்திருந்து தெளிந்தபின் இறுத்தெடுத்துக்

காய்ச்சிக்கொள்ள வேண்டும். இச்சுண்ணத்தில் எட்டுபலமெடுத்துக் காய்ச்சிக் குழம்பு போன்று வரும் பக்குவத்தில், கால்படி எண்ணெயில் கற்சுண்ணம் பொடித்துச் சேர்த்து பதத்தில் இறக்கிக் கொள்ள வேண்டும். துணியில் குழி செய்து இதில் மருந்தை அகப்பையால் முகந்து இட்டு, உருண்டையாகச் செய்து 15 நாட்கள் வரை உலர வைத்தெடுத்துக்கொள்ள வேண்டும். இவற்றை யெடுத்து சுண்ணும்புக்குள் பொதிந்து வைத்துக்கொள்ள வேண்டும். இதில் ஒரு பலமெடுத்துச் சுத்தமான அயக்கரண்டியிலிட்டுக் கரியோட்டில் வைத்து ஊதிக் காய்ச்சி, உருக்குமுகத்தில் கறியுப்புத்தூள் ஒரு விராகனெடை போட்டுக் கிண்டி, பின்னர் ஒரு துணியிற் கொட்டி கிட்டி கட்டிப் பிழிய எண்ணெய் வரும். இந்த எண்ணெயைத் தனியே எடுத்து வைத்துக்கொண்டு, சவுக்காரத்தை துணியில் கட்டி சுண்ணக் கல்லிலிட்டு மூடி, கொடுப்பைக் குடிநீர் தெளிக்கவேண்டும். இவ்வாறு 51 முறை செய்து வைத்துக்கொள்ள வேண்டும்.

ஒரு பலம் சீனக்காரத்தைக் கல்வத்திலிட்டு வெடியுப்புச் செயநீர் விட்டரைக்கப் பொங்கி நீறும். இதையெடுத்து ஏழு நாட்கள் சூரிய ஒளியில் வைத்தெடுக்க சீனக்காரம் கட்டி, நீற்றிருக்கும். இதை வெடியுப்புச் செயநீராலரைத்து, முன்பு தயாரித்து வைத்துள்ள வழலைக்குக் கவசங்கட்டி, பூநிறின் சீலையை நன்கு, சுண்ண நீற்றுள்ளே வைத்து அடுப்பேற்றித் தீபாக்னியாக ஒரு சாம நேரமும், கமலாக்னியாக ஒரு சாமநேரமு மெரித்தெடுத்து, நன்ருக ஆறியபின் எடுத்து, இதில் கடுங்காரச் செயநீர் விட்டு 15 நாட்கள் சூரிய ஒளியில் வைத்து உலர்த்தி எடுத்துக்கொள்ள வேண்டும். இதை அஞ்சு சுண்ணக் குகையிலிட்டு மூடி, சீலை மண் செய்து உலர்த்திக்கொண்டு, புடம் போட்டெடுக்க சவுக்காரம் கொடியசுண்ணமாகும்.

பெண்ணின் நாதத்தில் வழலைச் சுண்ணம் போட்டுக் கலந்து துருசு உருகி நீராக இருக்கும்போது மேற்படி மருந்திட்டு உருக்க, துருசு சுண்ணமாகும். இத்துருசு சுண்ணம் நூற்றுத் தொந்தம் மருந்து செய்யும் முறையில் வல்லமை பெற்றது.

இரசம் 1 பங்கிற்கு 100—ல் 1 பங்கு வழலைச்சுண்ணம் சேர்த்து, சாரநீர் விட்டரைத்தெடுக்க இரசம் கசடின்றி உயரிய முறையில் சுத்தமாகிச் சுண்ணமாகும். தங்கத்துடன் நாகம் சேர்த்து இரசச்சுண்ணமிட்டு (நாயகிதன்பீசம்) செந்தூரம் செய்தெடுத்துக்கொள்ளுக. இது வேதை முறையில் சிறந்ததொன்ருகும்.

## 134. சவுக்கார எண்ணெய்

516 தானென்ற சவுக்காரத் தெண்ணெய் தன்னில்
தனித்தரச கற்பூரந் தன்னை வாங்கி
கானென்ற அப்பிரகத் தகட்டின் மேலே
கட்டிவைத்த யெண்ணெய்தனை சுருக்குத் தாக்கு
வேனென்ற யிருசாமம் போட்டா யானல்
மேலாகுங் கற்பூர மெடுத்துக் கொண்டு
வானென்ற வெள்ளியெட்டுச் செம்பு நான்கு
மாட்டொன்று பூரமடா வயது நூறே.

இரசக் கற்பூரக்கட்டியை, அப்பிரகத் தகட்டின் மேலே வைத்து, சவர்க்காரத்தெண்ணெயினல் இரு சாம நேரம் சுருக்குக் கொடுக்க இரசகற்பூரம் சிறந்த முறையில் சுத்தியாகி மேலானதாக இருக்கும். இதை யெடுத்துக்கொண்டு வெள்ளியில் கொடுக்க 8 மாற்ருகும்; செம்பில் கொடுக்க நான்கு மாற்ருகும்; பூரத்தில் கொடுக்க ஒரு மாற்ருகும்.

## 135. சவுக்கார எண்ணெய் எடுக்கும் முறை

517 ஆருன வழலையுடை யெண்ணெய் வாங்க
அறைகிறேன் மாணுக்காள் அதிக மாகும்
கூருன வழலைக்குச் சமன தாக
கூட்டியே சீனத்தைச் சேர்த்து ஆட்டு
சேருன பருவத்தைச் சாய்த்து வைக்க
சிவசிவா யெண்ணெயது வடியும் பாரு
வேருன யெண்ணெய்தனைப் பதனம் பண்ணு
வெகுகார மேற்றுதற்குத் துறையைக் கேளே.

வழலை, சீனக்காரம் இவற்றைச் சமஅளவெடுத்தரைத்து சேருகும் பதத்தில் ஒரு பாத்திரத்திலிட்டுச் சாய்த்து வைத்திருக்க எண்ணெய் வடியும். இதுவே சவுகாரத்தெண்ணெயாகும்.

## 136.. சவுக்காரச் சுண்ணம்

518 துறையென்ன முன்செய்த சவுக்காரந் தான்
சொல்லடங்கா துரிசென்ற சுண்ணத் தோடு
முறையென்ன வீரமொடு புழுகு சீனம்
மூட்டப்பா விராகனெடை சார நீரால்
நிறையென்ன சவுக்காரப் பலந்தான் மூன்று
நேர்ப்பாக உருட்டியந்த ரவியிற் போட்டு
குறையென்ன சவுக்காரத் துருண்டை மேலே
கூசாம லரைத்தகுழம் பதன்மேற் பூசே.

519 பூசியே ரவியிலிடு வார மொன்று
புகழான வழுரியுனடச் சாரந் தன்னை
வீசியே வெடியுப்பு நீரா லாட்டி
மேற்பூசி ரவியிலிட்டுக் காய்ந்த பின்பு
பேசியே பூநீறுச் சுண்ணம் ரெண்டு
பெருவாயின் நீராலே அரைத்துப் பூசி
வாசியே கற்சுண்ணஞ் சீலை செய்து
மைந்தனே குக்குடமாம் புடத்தைப் போடே.

520 புடம்போடச் சவுக்காரங் கட்டி நீறும்
புகலுவேன் கடுங்காரச் செயநீர் குத்தி
விடம்போன்ற ரவியிலே பட்சம் போடு
மேலான நாதவிந்து வாங்கிக் கொண்டு
தடம்போன்ற வழலையொடு துருசு சுண்ணந்
தானுன வீரமொடு புழுகு சீனம்
படம்போன்ற நாகவிடம் சார வுப்பு
பாங்கான குருவண்டு உரமுஞ் சேரே.

521 சேரப்பா வகைவகைக்கு பலந்தா னைந்து
சேர்த்தாட்டி வழலையின்மேற் சிறக்கப் பூசி
காரப்பா அஞ்சுண்ணக் குகையில் வைத்துக்
கனமான சில்லிட்டுச் சீலை செய்து
சாரப்பா உலையில்வைத்து சிறுக ஊதி
தான்குகையும் பழுத்தபின்பு ஆற வைத்து
நேரப்பா இப்படித்தான் மூன்றுதர மூது
நேரான வழலைகொடுஞ் சுண்ண மாச்சே.

522 ஆச்சடா பீங்கானில் பரணி தன்னில்
அப்பனே அடைத்துவைத்து அறையக் கேளு
பாச்சடா வழலைப்பட்ட தெல்லாஞ் சுண்ணம்
பாங்கான உருக்கினமோ கோடா கோடி
போச்சடா வறுமையொடு நமனும் போனுன்
பொல்லாத பிணியெல்லாங் கடலிற் போச்சு
நீச்சடா சமுத்திரமும் நிலைத்துப் போச்சு
நேரான சரக்கெல்லாம் நிலைத்துப் போச்சே.

523 நிலைத்ததடா தேகமதுக் கழிவோ யில்லை
நேரான நவலோகம் நவரத்தி னங்கள்
மலைத்தடங்கள் பூமியொடு சுண்ணம் பற்பம்
வாச்சுதடா செந்தூரம் வழலை பட்டால்

தலத்திலொன்று இதற்கீடோ யில்லை யில்லை
சாற்றினேன் கசடருக்குச் சாற்றெண் ணாது
நலத்திஞல் பசப்பியவர் நூலைக் கேட்டால்
நவின்றிடிலோ ரவிகோடி நரகந் தானே.

524 நரகமென்ன சொர்க்கமென்ன வென்று யாஞல்
நாட்டிலே கோடிசென்மம் புழுதா னையா
உரகமது தவிறவிட செந்து சீவன்
உயர்சென்மம் மல்லவடா நரக சென்மம்
பரகெதிக ளில்லையடா ஆவியுள மட்டும்
பாலகனே இதையறிந்து இந்நூ லாய்வாய்
அரனுடைய வாக்கிதற்குத் தப்போ யில்லை
ஆறுமுக னறியவுந்தா னறைந்திட் டேனே.

| | | |
|---|---|---|
| முன்செய்த சவுக்காரம் | 1 | வராகனெடை |
| துருசுச் சுண்ணம் | 1 | ,, |
| வீரம் | 1 | ,, |
| புனுகு | 1 | ,, |
| சீனக்காரம் | | ,, |

இவற்றைக் கல்வத்திலிட்டு ஒரு விராகனெடை சார நீர்விட்டு நன்கு அரைத்துக் குழம்பாக்கிக்கொள்ள வேண்டும். மூன்று பலம் சவர்க்காரத்தை உருட்டி சூரிய ஒளியிலிட்டெடுத்து முன்பு செய்து வைத்துள்ள குழம்பை இதன் மேல் நன்ருகப் பூசி ஏழு நாட்கள் சூரிய ஒளியில் வைத்துக் காயவைக்க வேண்டும். பின்னர் அமுரியுப்பை வெடியுப்புச் செயநீராலரைத்து சவர்க்காரத்திற்குப் பூசி உலரும் வரை சூரிய ஒளியிலிட்டெடுக்க வேண்டும். பூநீர்ச் சுண்ணம் இரண்டு பங்கெடுத்து வாய் நீராலரைத்து மேற்படி மருந்துக்குப் பூசி கற்சுண்ணத்தால் சீலை செய்து குக்குடப்புடமிட்டெடுக்கச் சவுக்காரம் கட்டி, நீற்றுப் போகும். கடுங்காரச் செயநீரிலிடு மருந்தை 15 நாட்கள் சூரிய வொளியிலிட்டெடுத்துக்கொள்ள வேண்டும்.

| | |
|---|---|
| இரசம் | புனுகு |
| கெந்தகம் | சீனக்காரம் |
| வழலைச் சுண்ணம் | நாகவிடம் |
| துருசுச் சுண்ணம் | நவச்சார உப்பு |
| வீரம் | குருவண்டு உரம் |

வகைக்கு 5 பலம்

இவற்றை ஒன்ருகச் சேர்த்து அரைத்து வழலை (சவர்க்காரம்)யின் மேல் நன்ருகப் பூசி, அஞ்சு சுண்ணக் குகையில்

வைத்து கனமான சில்லிட்டு மூடி சீலைசெய்து, உலையிலிட்டுச் சிறுகவூதி, குகை பழுத்த பின்பு எடுத்து ஆறவைத்துக்கொள்ள வேண்டும். இவ்வாறு மூன்று முறை உலையிலிட்டு ஊதியெடுக்க வழலை (சவர்க்காரம்) உயர்ந்த முறையில் சுண்ணமாகும். இதை ஒரு பீங்கானில் அடைத்து வைத்துக்கொள்ள வேண்டும்.

இவ்வழலைச் சுண்ணத்தால் உருக்கினங்கள் யாவற்றையும் சுண்ணமாக்கலாம். பொல்லாத நோய்களெல்லாம் குணமாகி விடும். உடலுக்கு அழிவில்லை. நவலோகங்கள், நவரத்தினங்கள், பூமியில் உள்ள சரக்குகள் முதலியன வழலைச் சுண்ணத்தால், சுண்ணம், பற்பம், செந்தூரம் முதலியனவாகிவிடும். இதற் கீடானதோர் மருந்து இல்லை.

அறிவில்லாத கசடர்களுக்கு இந்நூலைக் கொடுக்கக் கூடாது. அப்படிக் கொடுத்தால் நரகத்தில் வீழ்ந்து துன்பப்பட நேரிடும். நரகம், சொர்க்கம், இவைகள் இல்லையென்றெண்ணி இவ்விதிமுறையை மீறினல் கோடி காலம் வரை நரக சென்மம் எடுக்க நேரிடும். உயர் சென்மம் அடையமுடியாது. இதை யறிந்து இந்நூலை மற்றவர்கட்குக் கொடுக்க வேண்டும்.

## 137. வீரமருந்து—வேதை

525 அறைந்ததங்கக் கிண்ணமது விராகனெடை ரண்டு
அதில்போடு கொச்சியென்ற வீரமது பலந்தான்
நிறைத்தபின் பேயெடுத்துச் சவுக்காரத் தெண்ணெய்
நீசுருக்கித் தாக்கியிலுப் பைநெய்யில் தீபங்
குறைத்திடா தொருசாம மட்டு மீந்து
குறைவில்லா துருசுசுண்ணம் பணவெடைதா னப்பா
கரைத்திடவே யுமிழ்நீ ராலரைத்துப் பூசி
கற்பூர தீபத்தில் வாட்டு வாட்டே.

526 வாட்டியெடுத் ததைத்தங்க ரேக்கு சுற்றி
மைந்தனே உமியோட்டில் வாட்டி வாங்கு
பூட்டியதோ ரேக்குதா னுள்ளே வாங்கும்
போடடா மதிபத்துக் கொன்றே வீரங்
காட்டையிலே மேலெழும்பி வாங்கிக் கொள்ளும்
கனகமது பத்தரைதான் காணுங் காணும்

இரண்டு வராகனெடையுள்ள தங்க கிண்ணத்தில் 1 பலம் எடையுள்ள வீரத்தையிட்டு, இலுப்பை நெய் தீபத்தில், ஒரு சாமம் சவுக்காரத்தெண்ணெயினுல் சுருக்கிக் கொடுத்து எடுத்துக்கொள்ள வேண்டும். பின்னர் ஒரு பணவெடை துருசு

சுண்ணத்தை உமிழ்நீராலரைத்து மேற்படி மருந்துக்குப் பூசி, கற்பூர தீபத்திலிட்டு வாட்டி எடுத்துக்கொள்ள வேண்டும். இதற்கு தங்க ரேக்கு சுற்றி உமியோட்டிலிட்டு வாட்டி எடுக்க தங்கரேக்கு மருந்தோடு கலந்துவிடும். 10 பங்கு வெள்ளிக்கு (மதி—வெள்ளி) 1 பங்கு வீரமருந்து சேர்க்க பத்தரைமாற்றுக் கனகமாகும்.

## 138. களங்கு செந்தூரம் செய்ய

526 நாட்டியதோர் நாதவிந்து சவ்வாதுகாரம்
நலமாகச் சாரித்துக் குருவைஈயே.

527 ஈயவே துருசுகுரு பணவெடைதான் போட்டு
ஈந்திடமேல் நில்லாது இழுத்துக் கொள்ளும்
பாயவே களங்க செந்தூரஞ் செய்ய
பழுக்குமடா நூற்றுக்கு ஒன்று போடு
காயுமே நோயனைத்துங் கடலே யோடும்
கனமான தேகமது காற்றுப் போலாம்
வாயுவே வெளியோடா குளிகை யிட்டால்
வாங்குமே கவனவழி வலுக்குங் காணே.

இரசம்
கெந்தகம்
சவ்வாது
வெங்காரம்

இவற்றுடன் ஒரு பணவெடை துருசுகுரு சேர்த்து வீர மருந்திலீய்ந்திட மேல் நில்லாது இழுத்துக்கொள்ளும்.

களங்கு, 100 பங்கு சரக்கிற்கு ஒரு பங்கு மருந்து போட களங்கு செந்தூரமாகும். இதனால் நோய்கள் அனைத்தும் விலகும். உடல் கனமின்றி மென்மையடையும். வானவெளி மார்க்கங்கள் கைகூடும்.

## 139. சூதகக் கட்டு

528 வலுவான சூதத்தைக் கட்டக் கேளு
மங்கையர்கள் நாதமொடு விந்துங் கூட்டி
நலியாமல் வழலையொடு சுண்ணத் தோடு
நலமான வீரமொடு புழுகு கூட்டிச்
சலியாதே குருவண்டு உரமுஞ் சூதந்
தாக்கப்பா பூரமொடு சீனந் தானு
முலையாமல் வகையொன்று பணந்தா னென்று
ஊட்டுமுலைப் பாலமுரி வாய்நீர் தானே.

529 நீரெல்லாம் பஞ்சபூதத் தடைவாய்ச் சேர்த்து
நீயரைத்து நீலகண்டன் கழஞ்சி மூன்றில்
சேரெல்லாந் தேன்சீலே மேலே சுற்றி
திறமான இளங்கன்றின் சாணி யப்பி
கூரெல்லாஞ் சீலேசுற்றிக் குறட்டிற் பற்றி
குகைதனிலே வெள்வங்க முருக்கிக் கொண்டு
வீரெல்லா மடங்கவே அமுக்கி யாற்றி
விதமாக யேழுதர முருக்கி வாங்கே.

530 வாங்குவாய் சூட்டோடே மேல்சீலே வாங்கி
மைந்தனே அரைமருந்தை கவசம் போட்டு
தாங்கியே ரவியிலிட்டுக் காய்ந்த பின்பு
தப்பாமல் அஞ்சுசுண்ணக் குகையில் வைத்து
பாங்குபெற மேன்மூடிச் சீலே செய்து
பழுக்கநீ ஊதியெடு சுண்ண மாச்சு
ஏங்கியே சரக்கெல்லாம் சாகும் பாரு
என்மகனே துருசினுடை வேகங்கேளே.

531 கேளடா துருசுதன்னில் வீரங் கூட்டி
கெடியாக வாய்நீரால் அரைத்துக் கொண்டு
வேளடா அரிதாரந் தனக்குப் பூசி
மேலான அஞ்சுசுண்ணக் குகையில் வைத்து
நாளடா மேல்மூடிச் சீலே செய்து
நன்ருக வூதிடவே சுண்ண மாச்சு
கோளடா மிருதார சிங்கு தன்மேல்
கொடுவீர மரிதாரச் சுண்ணம் பூசே.

532 பூசியே வெயிலிட்டுக் காய்ந்த பின்பு
புகழான அஞ்சுசுண்ணக் குகையி லிட்டு
வாசியே மேன்மூடிச் சீலே செய்து
வகையாக ஊதியெடு சுண்ண மாச்சு
ரேசியே நவலோகம் நவரத் தினங்கள்
நீருகுந் தொட்டவிடம் பட்டவிட மெல்லாங்
கூசவே வேண்டாங்காண் நிமிளேக் கப்பு
கொடியதொரு நிமிளேதன்னே சாரத்திற் கப்பே.

533 அப்பவே சாரமது கட்டி நீறும்
அரியதொரு சாரத்தைக் காரத் தப்பு
செப்புவேன் காரமது சுண்ண மாச்சு
திறமான துறைக்கெல்லாம் வீரமுடன் புழுகு
தப்பல்ல அஞ்சுசுண்ணக் குகையில்வைத்துச்
சரவுலேயி லூதிவிடச் சுண்ண மாகும்.

நாதம்
விந்து
வழலைச் சுண்ணம்
வீரம்
புனுகு
குருவண்டுஉரம்
சூதம்
பூரம்
சீனம்

இவற்றை வகைக்கு ஒரு பணஎடை எடுத்துக்கொள்ள வேண்டும். இவற்றைப் பஞ்சபூத முறைப்படி சேர்த்து தாய்ப்பால், அமுரி, வாய்நீர் இவற்றாலரைத்து மூன்று கழஞ்சு துருசு சேர்த்து தேன்சீலையை மேலே சுற்றி இளங்கன்றுக்குட்டியின் சாணியால் பூசி மேலும் சீலை சுற்றிக்கொள்ள வேண்டும். வெள்வங்கத்தைக் குகையிலிட்டு உருக்கி, மேற்படி மருந்தைக் குறட்டால் பிடித்து, உருக்குமுகத்தில் அமுக்கி ஆற வைத்துக்கொள்ள வேண்டும். இவ்வாறு வெள்வங்கத்தை ஏழு முறை உருக்கி, மருந்தையதில் அமுக்கி மேற்படி முறையாகச் செய்து, சூட்டோடெடுத்து மேல்சீலையை நீக்கிவிட்டு மருந்தை அரைத்துக் கவசமிட்டுப் பின்னர் சூரிய ஒளியிலிட்டுக் காய்ந்த பின்பு அஞ்சு சுண்ணக் குகையிலிட்டு மேல்மூடி சீலைமண் செய்து சரவுலையிலிட்டு ஊதியெடுக்கச் சுண்ணமாகும். இச்சுண்ணத்தால் எல்லாச் சரக்குகளையும் மடியச் செய்யலாம்.

துருசு, வீரம் இவற்றைக் கல்வத்திலிட்டு, வாய்நீர்விட்டு நன்கு அரைத்தெடுத்து அரிதாரகட்டிக்குப்பூசி, அஞ்சு சுண்ணக் குகையில் வைத்து, மேல்மூடிச் சீலைசெய்து உலையிலிட்டு ஊதியெடுக்கச் சுண்ணமாகும்.

மிருதார்சிங்கியின் மேல் இவ்வீரமரிதாரச் சுண்ணத்தைப் பூசி வெய்யிலிலிட்டு காய்ந்தபின் அஞ்சு சுண்ணம் குகையிலிட்டு மேல்மூடி, சீலைமண் செய்து, உலையிலிட்டு ஊதியெடுக்கச் சுண்ணமாகும். நவலோகங்கள் நவரத்தினங்கள் சுண்ணமாகும். இச்சுண்ணத்தை நிமிளைக்கப்பி ஊதியெடுக்க நிமிளைச் சுண்ணமாகும். இந்நிமிளைச் சுண்ணத்தை சாரத்திற் கப்பி உலையிலிட்டு ஊதிஎடுக்கச் சுண்ணமாகும். இச்சார சுண்ணத்தைக் காரத்திற்கப்பி பழுக்க ஊதி எடுக்கக் காரம் சுண்ணமாகும். இம்முறைகளுக்கெல்லாம் அஞ்சு சுண்ணக் குகையில் வீரமும் புனுகும் வைத்துச் சரவுலையிலிட்டு ஊதி எடுக்கச் சுண்ணமாகும்.

### 140. சூதச்செந்தூரம்

533 இப்பவே சுண்ணமெல்லாங் கழஞ்சி வீதம்
என்மக்கா ளெடுத்துப்பி னியம்பு வேனே.

534 இயம்புகிற சூதமது பலந்தா னூறு
என்மகனே அதிற்போட்டு தண்ணீர் வார்த்து
நயம்பெறவே அடுப்பேற்றிக் கொதிக்கும் போது
நலமாக வீறிட்டுச் சூதஞ் சாகும்
மயம்பெறவே பின்னெடுத்துத் தங்க நாகம்
மாட்டுவா யொருநிறையாய்க் கெந்தி ரெட்டி
செயம்பெறவே குப்பியிலே செந்தூ ரித்தால்
தேகமதுக் கழிவில்லை திண்ணந் தானே.

535 திண்ணந்தான் நோயனைந்துந் தீர்ந்து போகும்
செப்பினே னதிலொளிப்பு ஒன்று மில்லை
எண்ணந்தா னினைத்தபடி முடியு மப்பா

மேலே கூறப்பெற்ற சுண்ணங்களில் வகைக்கு ஒரு கழஞ்சும், 100 பலம் இரசமும் சேர்த்து ஒரு பாண்டத்திலிட்டு, தண்ணீர் வார்த்து, அடுப்பேற்றி எரிக்கத் தண்ணீர் கொதிக்கும் போது இரசம் மடிந்து போகும். பின்னர் மடிந்த இரசத்தை எடுத்துக்கொள்ள வேண்டும். இவ்வாறு மடிந்த இரசம், தங்கம், நாகம் ஆகியவற்றை சம எடையாகவும், கெந்தகம் இருமடங்கெடுத்து, குப்பியிலிட்டுச் செந்தூரம் செய்து கொள்ள வேண்டும்.

இச்செந்தூரத்தை உட்கொள்ள உடலுக்கு அழிவில்லை. உடலிலுள்ள நோய்களெல்லாம் நீங்கிவிடும்.

## 141. நாகக்கட்டு

535 எளிதல்ல நாகத்தின் கட்டைக் கேளு
வண்ணந்தான் இலுப்பைநெய் விட்டு ருக்கி
நாகம்வைத்து சாரநீர் தன்னில் சாய்த்து
மண்ணில் தான்ஐந்து—தரஞ் சாய்த்தா யானல்
மயங்கியே நாகமது கட்டும் பாரே.

536 கட்டுமே நாகத்தை உருக்கிக் கொண்டு
கனமான கெந்தகத்தைச் சமன்தான் தாக்கு
மட்டுமே நவச்சாரஞ் சமனே தூக்கி
மாட்டியே பொடித்திரெண்டும் வேறேவைத்து
கொட்டியே யிருபொடியும் மாறித் தூவி
குமுறவே யெடுத்துப்பின் குணத்தைக் கேளு
தட்டியே அயக்குகையி லிட்டு வெள்ளை
தான்மேஷ ரத்தமிட்டுத் தகடு போடே.

537 தகடிட்டுச் சீலைமண்ணுஞ் செய்துலர்த்தி
தணியவே குழிவெட்டிப் புடத்தைப் போடு
செகமெச்ச நாகமது கட்டுப் போகும்
செப்பாதே வெகுகோடி திறமிதப்பா
முகடிட்ட வாயுவெங்கே குன்ம மெங்கே
முழுமோச மாச்சுதென்று முடுகி யோடும்
அகடிட்ட சண்டாளர்க் குரைத்தாயானால்
அருநரகை யாள்வாய் நீ யறைந்திட்டேனே.

இலுப்பை நெய்யில் நாதத்தை வைத்து உருக்கி சாரநீரில் சாய்த்துப் பின்னர் ஐந்துமுறை மண்ணில் சாய்த்து எடுத்துக் கொள்ள வேண்டும். இவ்வாறு சாய்த்து எடுக்க நாகம் ஒருவாறு கட்டிவிடும்.

| | |
|---|---|
| இவ்வாறு கட்டிய நாகம் | 1 பங்கு |
| கெந்தகம் | 1 ,, |
| நவச்சாரம் | 1 ,, |

கெந்தகத்தையும், நாகத்தையும் தனித்தனியே பொடித்து எடுத்து வைத்துக்கொள்ள வேண்டும். நாகத்தை உருக்கி, உருக்கு முகத்தில் மேற்படி கெந்தகப் பொடியையும், நவச்சாரப் பொடியையும் மாறி மாறித் தூவிப் பின் நாகத்தை எடுத்துக் கொள்ளவேண்டும். பின்னர் இதைத் தகடாகத் தட்டிக் கொண்டு ஓர் அயக் குகையிலிட்டு வெள்ளாட்டு இரத்தம் வார்த்து மூடி சீலைமண் செய்துலர்த்திக்கொண்டு, பூமியில் குழிவெட்டி, அதிலிட்டுப் புடமிட்டெடுக்க நாகம் கட்டிச் சுண்ணமாகும்.

**அளவு**: ½ குன்றியளவு

**தீரும் நோய்கள்**: வாய்வு, சூன்மம் முதலியவை நீங்கும்.

## 142. கெந்தகக்கட்டு

538 அறைந்திட்ட கெந்தகத்தின் கட்டைக் கேளு
அப்பனே வெள்ளாட்டுச் சப்பையெலும் பாக
நிறைந்திடவே நொறுக்கியிடு பாண்டத் துள்ளே
நினைவாக மேன்மூடிக் குழித்தைலம் வாங்கி
மறைந்திடவே கெந்தகத்தைப் பீங்கானி லிட்டு
மண்சட்டித் தூரிலே தட்டிக் கொண்டு
குறைந்திடவே பீங்கானைப் பொத்தலிலே வைத்து
கொளுத்திவெளி காணவே அடுப்பி லேற்றே.

539 ஏற்றிவிடு நல்லெண்ணெய் தீபந் தன்னை
என்மக்காள் முன்தைலஞ் சுருக்கே தாக்கு
காற்றதுமே படாவிடத்தில் நான்கு சாமம்
கடந்தபின்பு ஆறவிட்டு எடுத்துக் கொண்டு
மாற்றடவே கெந்தியது கறுப்பாய் நிற்கும்
மகத்தான கட்டதுதான் மக்காள் பாரு
தேற்றிடவே கறுப்பதுதான் வாங்கிப் போகத்
திறமான பாண்டத்திற்கு சலத்தை வாரே.

540 செலத்திலே வில்வயிலை இடித்துப் போட்டு
சீலைஐந்து நனைத்துமே வேடு கட்டி
புலத்தியனே மேல்வேட்டில் மல்லியிலை பரப்பி
புகழாகக் கெந்தியை மேல்பரப்பிப் போட்டு
கலத்திலே மேலுமந்த இலையால் மூடிக்
கவிழ்சட்டிச் சீலைமண்செய் தெரியோர் சாமம்
நலத்திலே கெந்தகந்தான் வெண்மை யாகும்
நன்மையுள்ள கட்டப்பா நான்கண் டேனே.

541 கண்டனடா செந்தூரக் குருவுக் கெல்லாம்
கட்டுகின்ற நற்கெந்தி கருதிச் சேரு
கொண்டபச்சை கெந்திதனைச் சேர்த்தா யானால்
குலாமரே தீப்படவும் ஓடிப் போகும்
பண்டுசொன்ன சாத்திரங்கள் பொய்யென் பார்கள்
பாவியவர் கைமுறையைக் காண மாட்டார்
தொண்டருக்கு மண்சுமந்த சிவனால் சொன்ன
சுருதியா மிந்தக்கைம் முறையைப் பாரே.

வெள்ளாட்டின் சப்பையெலும்பெடுத்து நொறுக்கியொரு பாண்டத்திலிட்டு மேல்மூடி, முறைப்படி குழித்தயிலம் இறக்கி வைத்துக் கொள்ள வேண்டும். ஒரு மண்சட்டியின் தூரில் தட்டிப் பொத்தலாக்கிக்கொள்ள வேண்டும். தேவையான கெந்தகத்தை ஒரு பீங்கானிலெடுத்துக்கொண்டு, மேற்படி மண்சட்டியின் பொத்தலின் மேல் வைத்துக்கொள்ள வேண்டும். பின்னர் இதை அடுப்பேற்றி நல்லெண்ணெய் தீபத்தாலெரித்து, முன்பு சித்தப்படுத்தி வைத்திருக்கும் குழித்தைலத்தால் சுருக்குக் கொடுக்க வேண்டும். இவ்வாறு நான்கு சாமம், சுருக்குக் கொடுத்தெடுத்து ஆறவைக்க கெந்தகம் கறுப்பாக இருக்கும். இதுவே கெந்தகக் கட்டாகும். இக்கந்தகக் கட்டு கறுமை நிறம் மாறி வெண்மையடைய ஒரு பாண்டத்தில் நீரை வார்த்து, அந்நீரில் வில்வ இலையை இடித்துச் சேர்த்து, ஐந்து சீலையை நனைத்து அதற்கு வேடுகட்டி இவ்வேட்டின்

மேல் மல்லிகையிலையைப் பரப்பி அதன் மேல் கெந்தகத்தைப் பரப்பிப்போட்டு கெந்தகத்தின்மேல் வில்வ இலையைப் போட்டு மூடி, மேல் சட்டியால் மூடி சீலைமண் செய்து, அடுப்பிலேற்றி ஒரு சாமமெரித்தெடுக்க கெந்தகம் வெண்மையாக இருக்கும். இவ்வாறு செய்து முடிக்கப்பட்ட கெந்தகக்கட்டு மிகவும் நன்மை பயக்கும்.

துருசு செந்தூரம், துருசுகுரு, இவைகளுக்கு மேலே கூறப் பட்ட கெந்தகக்கட்டினையே உபயோகிக்க வேண்டும். பச்சை கெந்திதனை சேர்த்தால் நெருப்புப்பட்டால் புகைந்தோடிவிடும்.

### 143 நாகக்கட்டு

542 பாருநீ இன்னமொரு கட்டுக்கேளு
பாங்கான நாகமது பலந்தா னெட்டு
வாருநீ இலுப்பைநெய்விட் டுருக்கி யப்பா
வளமான சிற்றேருடுவைதனிச் சாருக
சேருநீ எழுதர முருக்கிச் சாய்த்து
சிறக்குமந்த இலையரைத்துக் கவசங் கட்டி
தாருமே சீலைமண்தான் மூன்றுஞ் செய்து
தப்பாமல் அஞ்செருவிற் புடத்தைப் போடே.

543 போட்டபுட மாறியெடுத் திலையை யாட்டி
பொருந்தவே கவசமிட்டுச் சீலைமண் செய்
நாட்டுவாய் எருப்பத்தில் புடத்தைப் போடு
நன்றாக ஆறினபின் முன்போ லப்பா
மாட்டுவாய் பதினைந்து எருவிற் போடு
வளமான நாகமது கட்டிப் போகும்
கூட்டியே சாரமென்ற செயநீர் தன்னில்
குகையில்வைத்து நாகத்தை யுருக்கி வாரே.

544 வாரப்பா கட்டியது காியி லாடும்
மைந்தனே முழுக்கட்டா மூற வில்லை
நேரப்பா தங்கம்போ லுருக்கி யாடும்
நிசவேதை காவிக்கு முப்புக் கோடா
காரப்பா குருநிலையைக் காத்து நில்லு
களிம்பற்ற செம்பாறு வெள்ளி நான்கு
சேரப்பா நாகமொன்று லிங்க மொன்று
சேர்த்திடவே தெசமாற்றுந் தெளிந்துபாரே.

8 பலம் நாகத்தை யெடுத்து உருக்கிக்கொண்டு இலுப்பை நெய்யோடு சிற்றேருடுவைச் சாறு சேர்த்து இதில் உருக்கிய நாகத்தைச் சாய்த்தெடுக்க வேண்டும். இவ்வாறு ஏழு முறை

உருக்கிச் சாய்க்கவேண்டும். பின்னர் சிற்ெறுடுவைவயிலையை யரைத்து நாகத்திற்குக் கவசித்து, சீலைமண் செய்து 10 எருவில் புடம்போட்டு எடுத்து, ஆறியபின் முன்போலவே செய்து 15 எருவில் புடமிட்டெடுக்க நாகம் கட்டிப்போகும். இவ்வாறு கட்டிய நாகத்தைக் குகையிலிட்டு உருக்கி சாரச் செயநீரில் காய்த்தெடுக்க வேண்டும். இந்நாகக்கட்டை கரியிலிட்டு உருக்க தங்கம்போல் உருகியாடும். இவ்வாறு முடிக்கப்பட்ட நாகக்கட்டு குற்றமற்ற முழுக்கட்டாகும்.

| | |
|---|---|
| களிம்பு நீங்கிய செம்பு | 6 பங்கு |
| வெள்ளி | 4 ,, |
| நாகக்கட்டு | 1 ,, |
| இலிங்கம் (மெழுகு) | 1 ,, |

இவற்றைச் சேர்க்கத் தசமாற்றுத் தங்கமாகும்

## 144 அயச்செம்பு

545 தெளிந்துதா னயச்செம்பு செப்பக் கேளு
சிற்ெறுடுவை தனிச்சாறு பிழிந்து கொண்டு
குளிர்ந்தஅரப் பொடிபத்து அதனி லிட்டுக்
குறையாமல் ஏழுதினஞ் சென்ற பின்பு
பொழிந்தகட்டு வெண்கார மிரண்டுங் கூட்டிப்
பிசகாமல் குகையிலிட்டுச் சில்லுபோட்டு
அழிந்திடவே உருக்கிப்பார் கடிதாய் நிற்கும்
அப்பனே யுடைத்துவெண் காரங் கூட்டே.

546 கூட்டியே முன்சாற்றில் பிசறிக் கொண்டு
குகையிலிட்டுச் சில்லிட்டுச் சீலை செய்து
மாட்டியே குகைபழுக்க வூதிஞக் கால்
வலுக்குறைந்து வுருகியது மணியாய் நிற்கும்
நாட்டியே யேழுதர முருக்கிப் பாரு
நல்லசெம்பாய் பின்புவெண் காரங் கூட்டி
ஆட்டியே குடகரியி லேழுதர முருக்கில்
அப்போவல்லோ தங்கம்போ லாகுந் தானே.

547 ஆகுமே அயச்செம்பு பத்துக் கொன்று
அணைத்திடுநீ கட்டவைத்த நாக மொன்று
வேகமாய் மாற்றேழு நிசமாய்க் காணும்
மேதினியில் விள்ளாதே அயத்தின் மார்க்கம்
நாகமே கட்டுவது கடினஞ் சொன்னேன்
நல்லகட்டி அயச்செம்பு சேர்ந்த போது
பாகமாய் லிங்கமொன்று கொடுத்தா யானல்
பத்தரைமாற் ருகுமடா பணிந்து கேளே.

சிற்றேருடுவைச் சாறு பிழிந்து ஒரு பாண்டத்திலிட்டு அரப்பொடி 10 பங்கு விட்டு ஏழு நாட்கள் வைத்தெடுத்து, இரண்டு பங்கு வெண்காரம் கூட்டிக் குகையிலிட்டுச் சில்லிட்டு மூடி, உருக்கியெடுக்கக் கடிதாக இருக்கும். பின்னர் எடுத்து மீண்டும் வெண்காரம் சேர்த்து சிற்றேருடுவைச் சாறு விட்டு பிசறிக் கொண்டு குகையிலிட்டுச் சில்லிட்டுச் சீலை செய்து, குகை பழுக்க ஊதி எடுக்க, மருந்து வலுக் குறைந்து, உருகி மணியாக நிற்கும். இவ்வாறு ஏழு முறை உருக்கி எடுக்க நல்ல செம்பாக இருக்கும். இதையெடுத்து வெண்காரம் கூட்டிக் குடகரியிலிட்டு (உலோகத்தை உருக்குவதற்காகக் குடைந்து உபயோகிக்கும் அடுப்புக்கரி) உருக்க வேண்டும். இவ்வாறு ஏழு முறை செய் தெடுக்க அயச்செம்பு தங்கம் போன்றிருக்கும்.

நாகக்கட்டு ஒரு பங்கிற்கு 1/10 பங்கு அயச்செம்பு சேர்க்க ஏழுமாற்றுகும். நாகத்தைக் கட்டுவது எளிதல்ல. மிகவும் கடினமாகும். இதோடு இலிங்க மெழுகு ஒரு பங்கு சேர்க்க பத்தரைமாற்றுகும். (இங்கு முன்பு சொல்லப்பட்ட இலிங்க மெழுகைப் பயன்படுத்த வேண்டும்).

## 145 வெண்காரகட்டு

548 பணிந்துநீ வெண்காரங் கட்டக் கேளு
பருங்கட்டி வெண்காரம் பலகை யாகும்
துணிந்தெருமைக் கன்றுசாணி தன்னில் வைத்துத்
தோராக நீர்ப் பாண்டத் தடியி லேதான்
கணிந்தகுழி தோண்டியதில் புதைத்துப் போடு
கசடற்றசுத்தியா மைந்தா நாளில்
தணிந்திட்ட ஆறுநாள் கழுவிப் போடு
சார்வான செந்நா யுருவிச் சாறே.

549 சாறுரியில் தானனைத்து ரவியிற் போடு
சாறுலர்ந்தாற் பின்னுமந்தப் படியே செய்து
மாறியே மூன்றுதினஞ் சென்ற பின்பு
மைந்தனே யீனுத மேதிச் சாணி
தேறியே அப்பாலுங் கள்ளிப் பாலுந்
திறமான வெடியுப்புச் செயநீர் தானு
மாறியே சமனுகப் பீங்கானில் விட்டு
அமுரியுப்பு நாயுருவிச் சார வுப்பே.

550 உப்பெல்லாங் கழஞ்சிரண்டு பொடித்துப் போட்டு
உத்தமனே காரத்தை நனைத்துப் போடு
தப்பல்ல செயநீர்தான் படிய ரைக்கால்
தான்சுவறக் காய்ந்தபின்பு சாற்றக் கேளு
இப்புவியில் ரவிகாண ஏழு நாளும்
இட்டெடுக்க வெண்காரங் கட்டிப் போச்சு
ஒப்பில்லா வுருக்கினத்துக் கெல்லா மாகும்
உத்தமனே தாம்பிரத்தின் பற்பங் கேளே.

வெண்காரத்தைப் பெருங்கட்டியாக இருக்கும்படி யெடுத்து எருமைக் கன்றின் சாணியினுள் வைத்து நீர்ப் பாண்டத்தினடியில் பூமியில் குழிதோண்டிப் புதைத்து விடவேண் டும். இவ்வாறு ஐந்து நாட்கள் புதைத்து வைத்திருந்தெடுத்து ஆறும் நாள் கழுவிக்கொள்ள வெண்காரம் குற்றமற்ற முறையில் உயர்ந்த சுத்தியாகும். பின்னர் இதனுடன் செந்நாயுருவிச் சாறு சேர்த்துச் சூரிய ஒளியிலிட்டெடுக்க வேண்டும். சாறு சுண்டிப்போனல் புதுச்சாறு சேர்த்துக்கொள்ள வேண் டும். இவ்வாறு மூன்று நாட்கள் செய்தெடுத்துக்கொள்ள வேண்டும்.

கன்று ஈனுத எருமையின் சாணிப்பால்
கள்ளிப்பால்
வெடியுப்புச் செயநீர்

இவற்றைச் சமஅளவாக எடுத்து பீங்கானில் சேர்த்து, இதில் அமுரியுப்பு, நாயுருவிப்பு வகைக்கு இரண்டு கழஞ்சு பொடித்துச் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

இதில் வெண்காரத்தை ஊறப்போட்டு அதிலுள்ள செய நீர் அரைக்கால் படியாக வற்றிய பின்னர் வெண்காரத்தை எடுத்து சூரிய ஒளியில் ஏழு நாள் வைக்க வெண்காரம் கட்டிப் போகும்.

உருக்கினங்கள் எல்லாவற்றிற்கும் இவ்வெண்காரக்கட்டுப் பயன்படும்.

### 146 தாமிரபற்பம்

551 கேளப்பா தாம்பிரத்தைப் பனையி லேலைக்
கிணையாகத் தட்டிக்கா சகல மாகத்
தாளடா னறுக்கியெடு கழஞ் சிபத்து
தன்னையே குகையிலிட்டுச் சிவக்க வூதி

வேளடா ரவிப்பாலி லிட்டு வாங்க
விசைபத்து மூன்றுமடா விளங்கச் சொன்னேன்
தூளடா பழங்கோணி தன்னை வாங்கி
சுகமாக ரவிப்பாலை யூட்டு வாயே.

552 ஊட்டடா தாளகமா யுருட்டி வாங்கி
உத்தமனே தாம்பிரத்தில் பரப்பிக் கொண்டு
காட்டடா சுருட்டியந்தக் கோணி நாரில்
கட்டியே மண்செய்து வுலர்த்திக் கொண்டு
நீட்டடா குழிவெட்டி வெருக்கீ ழிட்டு
நேரான புளிபுறணி யொருசா ணிட்டு
மாட்டடா மண்செய்த கோணிதன்னை
வைத்துமேல் புறணியிட்டு எருவும்போடே.

553 போடப்பா அக்கினியைக் கீழ மேலும்
போட்டிடவே தாம்பிரமது பற்ப மாச்சு
கூடப்பா வெண்மையது குறைந்து கண்டால்
கொடுரவியின் பாலாலே அறைத்துப் போடு
வீடப்பா முன்போல புடந்தான் போடு
வெண்மையது குன்றுது விளங்கக் கேளு
ஆடப்பா அனுபானங் கருவாய்ப் பட்டை
அழகான சாதிக்காய் கிராம்பு மாமே.

554 ஆமென்ற வால்மிளகு சாதி பத்திரி
அப்பனே சமனிடித்துப் பொடிதான் செய்து
தாமென்ற கழஞ்சரைதான் சூர ணத்தில்
தாமிரபற்பம் பணமரைதான் தாக்கச் சொல்லே
நாமென்ற நோய்களெல்லாங் கடலே யோடும்
நமனில்லை பிணியில்லை நாடிப் பாரு
தேமென்ற தேகமது இறுகிப் போச்சு
சிறந்துண்ணில் நெய்வெண்ணெய் விரும்பு வாயே.

555 விரும்பியே முன்கட்டு கெந்த கத்தில்
வேண்டியே நாய்ப்பாகற் சாறு விட்டு
திரும்பவே அரைத்திடுவாய் பணம்போல் கட்டி
திறமான தங்கத்தில் கழஞ்சி வாங்கி
அரும்பவே குகையிலிட்டு வுருக்கிக் கொண்டு
அரைத்தகெந்தஞ் சமன்சரக்கு காரம் போடு
சுரும்புபோல் பின்னுமந்த கெந்தி யூட்டி
சுகமாக ஓட்டிலிட்டு ஊதி டாயே.

556 ஊதவே தங்கமது ரவிபோ லாச்சு
உத்தமனே தாய்பத்துக் கொன்று தாக்கு
வாதமே தொந்தமது பத்துக் கேறும்
மகத்தான மதிபத்துக் கொன்று போடு
நீதமே தசமாற்றுப் பிசகி டாது
நீகுருவின் பதம்போற்றி நினைவாய் நில்லு
காதமே தூரமல்ல செய்து பாரு
களிம்பற்ற வேதையடா கண்டு பாரே.

தாம்பிரத்தைப் பனையோலைக் கனத்திற்குத் தட்டி, காசு கலமிருக்குமாறு நறுக்கிக்கொள்ள வேண்டும். அதில் 10 கழஞ்சி எடுத்துக் குகையிலிட்டு சிவக்க ஊதி எடுத்துக்கொள்ள வேண்டும். இதை இரவிப்பாலிலிட்டு ஊறவைக்க வேண்டும். இவ்வாறு பதின்மூன்று முறை செய்ய வேண்டும். பழைய கோணியை இரவிப்பா விட்டு நனைத்தெடுத்து இதில் தாம் பிரத்தைப் பரப்பி, சுருட்டிக்கொண்டு கோணி நாரால் நன்றாகக் கட்டி, மண்சீலை செய்து நன்றாக உலர்த்தி எடுத்துக் கொள்ள வேண்டும். பூமியில் குழிவெட்டி கீழே எருவிட்டு (விராட்டி) அதன்மேல் ஒரு சாண் உயரம் புளியம்புறணி யிட்டு, அதன்மேல் மண்செய்த கோணியை வைத்து இதன் மேல் புறணியிட்டு, மேலும் எருவிட்டு கீழேயும் மேலேயும் தீயிட்டு புடமிட்டெடுக்க தாம்பிரம் பற்பமாகும். இப்படிச் செய்த தாம்பிரபற்பம் வெண்மை நிறம் குறைந்து காணு மேயானல், இரவிப்பால் விட்டரைத்து முன்போல புட மிட்டெடுக்க, நல்ல வெண்மையான பற்பமாகும்.

**அளவு**: அரைப் பணவெடை.

**துணைமருந்து**: சாதிக்காய், கிராம்பு, வால்மிளகு, சாதி பத்திரி.

இவற்றைச் சமஅளவெடுத்திடித்துச் சூரணம் ½ கழஞ்சு.

**தீரும் நோய்கள்**: எல்லா நோய்களும் நீங்கும். உடலுக் கழிவில்லை. உடலுக்குப் பிணியில்லை. உடல் இறுகிப்போகும்.

**உணவு**: நெய், வெண்ணெய் சேர்த்துகொள்ள வேண் டும்.

(முன்பு கூறிய முறைப்படி முடிக்கப்பட்ட கெந்தகக்கட்டை நாய்ப்பாகற்சாறு விட்டு நன்கு அரைத்தெடுத்துக்கொள்ள வேண்டும். தங்கம் ஒரு கழஞ்சு எடுத்து, குகையிலிட்டு உருக்கிக் கொள்ள வேண்டும். பின்னர் அரைத்தெடுத்த கெந்தகக்கட்டு,

தங்கம், காரம், சமஅளவுச் சேர்த்து ஓட்டிலிட்டு ஊதி யெடுக்க தங்கம் இரவி போலாகும். வாத முறைகளில் மற்ற சரக்குகளுக்கு 10—ல் ஒரு பங்கு இம்மருந்தைச் சேர்க்க வேண் டும். ஒரு பங்கு வெள்ளிக்கு 1/10 பங்கு இம்மருந்தைச் சேர்க்க பத்து மாற்றும்.

### 147 கெந்தகபற்பம்

557 கண்டுநீ கெந்தகத்தின் பற்பங் கேளு
கனமான கெந்தகத்தைக் கல்வத் திட்டு
மண்டுதான் சிற்றெருடுவை சாறு விட்டு
மாட்டியரை இருசாமம் வில்லை செய்து
கொண்டுதா னிலையரைத்துக் 'கவசங் கூட்டி
கூறுசீலை மண்செய்து வுலர்த்திக் கொண்டு
விண்டிடவே மணவரையிற் புடந்தா னைந்து
வெளியேற்றிப் புடமைந்தில் பற்ப மாச்சே.

558 ஆச்சப்பா வெடைகுறையா பற்பந் தன்னை
அப்பனே பணவெடைதா னுண்டு தேறு
வாச்சப்பா குட்டமொடு கிரந்தி சூலை
வந்தபுற்று பிளவையொடு கண்ட மாலை
போச்சப்பா கரப்பனொடு வூற லெல்லாம்
போகுமப்பா பால்சீனி நெய்யுங் கூட்டிப்
பேச்சப்பா ஒன்றுமில்லைப் புளியைத் தள்ளு
பேறான வாலைரசம் பேசு வேனே.

கெந்தகத்தைக் கல்வத்திலிட்டு சிற்றெருடுவைச் சாறுவிட்டு இரண்டு சாம நேரம் நன்கரைத்து வில்லை செய்து (சிற் றெருடுவை) இலையை அரைத்து, கெந்தகத்தைக் கவசித்து சீலைமண் செய்துலர்த்திக்கொண்டு, மணல் மறைவுப் புடம் ஐந்து இட்டெடுக்க கெந்தகம் பற்பமாகும். இக்கெந்தகப் பற்பம் எடை குறையாமலிருக்கும்.

**அளவு**: பணவெடை

**தீரும் நோய்கள்**: குட்டநோய், கிரந்தி, சூலை, புற்று, பிளவை, கண்டமாலை, கரப்பன், ஊறல்

**உணவு**: பால், சீனி, நெய் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

**பத்தியம்**: புளிநீக்கவும்.

## 148 தாமிரத்துச்சூதம்

559 பேசுறேன் அயக்கரண்டி துலக்கிக் கொண்டு
பேரான துருசுதனைப் பொடித்துப் போட்டு
மாசறவே காடிதன்னை நிரம்ப விட்டு
மைந்தனே காற்றில்லா இடத்தில் வைத்து
வீசுறேனைந்துநாள் சென்ற பின்பு
விட்டகாடி யையகற்றிப் போடு போடு
மாசறவே சூரியனால் குத்திப் பார்க்க
மகத்தான தகடுபோல் தாம்பிரந் தானே.

560 தாம்பிரத்தில் விராகனெடை நிறுத்துக் கொண்டு
சாதிலிங்கம் வாலைரசம் பலந்தான் சேர்த்து
ஏம்பிநீ திரியாதே கல்வத் திட்டு
என்மக்கா ளரைக்கையிலே இறுகும் பாரு
சோம்பாமல் வீரமது கழஞ்சி போட்டு
துடியான பனியில்வைக்கச் சூத மாகும்
ஆம்படியி லிவ்விதமிருபத்து நான்கு
அரைத்திடவே தாம்பிரத்துச் சூத மாச்சே.

561 சூதத்தில் தங்கமிட சூத மாகுந்
துறைக்கெல்லாம் வீரமிடு சுத்தி யொப்பாம்
நாதத்தில் குருவிட்டுச் சுருக்குத் தாக்கு
நாகமொடு கெந்தியிட்டுச் செந்தூ ரித்தால்
காதத்தில் தூரங்கைக் கனியே யாகும்
கசடற்ற மதியிலிடு கனக மாகும்
வாதத்தில் முடிவெல்லாஞ் சூதத் தாயே
மைந்தனே காயசித்தி மகிழ்ந்து செய்யே.

ஒரு அயக்கரண்டியைத் துலக்கி அதில் துருசைப் பொடித்துப் போட்டு, நிறைய காடி சேர்த்து, காற்றில்லாத இடத்தில் ஐந்து நாட்கள் வைத்தெடுக்க காடியை நீக்கி கத்தியினால் குத்தி எடுக்க தாமிரம் தகடுபோல இருக்கும்.

| | |
|---|---|
| மேற்கூறியவாறு செய்த தாமிரம் | 1 விராகனெடை |
| சாதிலிங்கம் | 1 பலம் |
| வாலைரசம் | 1 ,, |

இவற்றைக் கல்வத்திலிட்டு அரைக்க மருந்து இறுகி வரும் அதனை எடுத்து ஒரு கழஞ்சு எடை வீரம் சேர்த்து, பனியில் வைக்க மருந்து சூதமாகும். இவ்வாறு இருபத்து நான்கு தடவை யரைத்து மேற்சொல்லியபடியே செய்ய தாமிரச்

சூதமாகும். ஒவ்வொரு முறையும் வீரம் சேர்க்க வேண்டும். இவ்வாறு செய்து முடிக்கப்பெற்ற சூதத்தில் தங்கம் சேர்க்க சூதமாகும். ஒவ்வொரு முறையும் வீரம் சேர்க்க வேண்டும்.

நாதத்தில் குருவிட்டு (முப்புக்கரு) சுருக்குக்கொடுத்து, நாகத்தோடு சேர்த்து செந்தூரம் சேய்து கொண்டால் எல்லாம் கிட்டும். கசடற்ற வெள்ளியில் சேர்க்கத் தங்கமாகும். இவ்வாறு செய்து முடிக்கப்பட்ட சூதத்தால் இரசவாதம், காயசித்தி முதலியன கைகூடும்.

### 149 பூவழலைக்குரு

562 செய்யவே பூவழலைச் சொல்லக் கேளு
செயமான காரமென்ற பூநீ றப்பா
நையவே சட்டிதனி லடுப்பி லேற்றி
நன்றாகப் பற்பமா யெரித்துக் கொண்டு
பய்யவே படிநான்கு சாரநீர் தான்
படியிட்டுச் சுருக்கிட்டுப் பற்ப மாக்கி
கய்யநெல்லிக் கனிபோலே சலத்தி லிட்டு
கடைந்துவைத்து மூன்றுநாள் இறுத்துக் காய்ச்சே.

563 காய்ச்சியே நீர்வற்றிக் குழம்பே யானால்
கடுரவியிற் போட்டிடவே கல்லுப் பாச்சு
தாய்ச்சியொன்று மில்லையடா வீரம் சற்று
தான்சுத்தி பூநீறு கல்சுண் ணாம்பு
பாய்ச்சுகறி யுப்பிட்டுச் சாரநீர் விட்டு
பாங்காகத் தெளிவிறுத்துக் கலக்கிப் போட்டு
வாய்ச்சுதே யடுப்பில்வைத்துக் கொதிக்கும் போது
மருவுகின்ற மெழுகதுபோல் சுத்தி யாமே.

564 சுத்தித்த அமுரியுடன் சார நீரும்
சுருக்கடா கொதியிட்டு ஆற விட்டு
வெத்திக்கு உருக்கட்டி ரவியிற் போடு
விதமான அமுரிவிட்டு சுண்டக் காய்ச்சி
பத்திக்கும் பனம்பாலை விட்டுக் காய்ச்சி
பாங்கான தேசிநீர் தன்னிற் காய்ச்சி
புத்திக்கு முலர்த்தியதை யூதிப் போடு
புகழான பிரமக்கல் சுண்ண மாச்சே.

565 சுண்ணத்தில் படியொன்று அளந்து கொண்டு
சுருதியாஞ் சாரநீர் படிதான் நான்கு
எண்ணெுத்த பரும்பீங்கான் தன்னிற் சேர்த்து
என்மக்காள் கலக்கியதை இருளாம் வீட்டில்

கண்ணொத்த கண்மணியுங் காணொண் ணாது
கட்டாகப் பட்சமொன்று காத்தா யானால்
விண்ணொத்த உப்பதுதான் மேலே யேறும்
மேலான தெளிவிறுத்துக் காய்ச்சு வாயே.

566 வாயேது சிவவுப்பு மைந்தா பாரு
வாச்சுதே வாதமடை திறந்து போச்சு
நோயேது நமனேது சாவோ யில்லை
நொடிக்குமுன்னே சரக்கெல்லா மடக்கிக் கொல்லும்
நீயேது மயங்காதே வழலை செய்ய
நிமிடத்தில் பூவழலை முடிந்து போச்சு
தாயான வெடியுப்புப் படிய தொன்று
தண்ணீரோ நாலுபடி தாக்கி டாயே.

567 தாக்கியே தெளிவிறுத்துக் காய்ச்சி வாங்கி
தப்பாம லூசிநீர் படிதா னாலு
தேக்கியே காய்ச்சிவற்றித் தேசிநீர் தான்
சேரப்பா நான்குபடி சுண்டக் காய்ச்சி
நீக்கியே ரவியிலிட்டு வுலர்ந்த பின்பு
நீயெடுத்துப் பதனமாய் வைத்துக் கொண்டு
நோக்கியே மலைச்சார்பு நீறு தன்னை
நுவலுகிறேன் மண்ணின்றி நோக்கி வாரே.

568 வாறுவாய் படியொன்று அமுரி யெட்டு
வார்த்துநீ ஏத்தியே கலக்கிக் கொண்டு
மாறுமே தெளிவிறுத்துக் காய்ச்சு காய்ச்சு
மைந்தனே குழம்பானால் ரவியிற் போடு
சேறுமே அமுரிமுன்போல் தேற்றி வாங்கி
திரும்பவே காய்ச்சிவிட்டு ரவியிற் போடு
கோறுமே தேசிநீர் தன்னிற் காய்ச்சி
கொடுரவியில் காய்ந்தபின்பு எடுத்துக் கொள்ளே.

569 எடுத்திடுவாய் வகையொன்று பலந்தா னென்று
இதமான தேசிநீர் தன்னை விட்டு
கடுத்திடவே ரவியிலிட்டுக் காய்ந்த பின்பு
கனமான வழலைதன்னை வழலைநீர் விட்டு ஆட்டு
பிடித்திடுவாய் வழலைதன்னை ரவியிற் போட்டு
பேராகக் காய்ந்தபின்பு எடுத்துக் கொள்ளே
அடுத்திடவே வட்டோட்டில் பூநீ றிட்டு
அப்பனே வில்லைவைத்து பூநீறு போடே.

570 போடப்பா மேல்மூடிச் சீலை செய்து
புகழாக மணவரையிற் புடத்தைப் போடு
நாடப்பா ஆறினபின் னெடுத்துக் கொண்டு
நலமான கல்வத்தி லிட்டு நீயும்
சூடப்பா வீரமுடன் காரஞ் சாரஞ்
சுகமான பூரமொடு நாலுங் கேளு
தேடப்பா வகையொன்று வராக னென்று
சேரடா புழுகதுவும் அரைதான் கூட்டே.

571 கூட்டியே வெடியுப்புச் செயநீர் விட்டு
கூட்டியரை சாமமொன்று வில்லை பண்ணி
காட்டியே ரவியிலிட்டுக் காய்ந்த பின்பு
கனத்தசட்டி தன்னிலே சுண்ண நீற்றை
மாட்டியே பூநீறு மேலே யிட்டு
வளமான வில்லைவைத்து மேல்பூ விட்டு
நாட்டுவாய் சுண்ணும்பு மேலே யிட்டு
நலமான சட்டிகொண்டு கவிழ்த்து மூடே.

572 மூடியே மண்சீலை ஏழுஞ் செய்து
முன்னவனைத் தான்பணிந்து அடுப்பி லேற்றி
நாடியே வாலையுடன் திருவா ணிக்கும்
நலமாகப் பூசைபண்ணி எரிநேர்ப் பாக
சாடியே நாற்சாமம் நாலு தீயுந்
தானெரித்து மேல்சட்டி திறந்து போடு
கூடியே ஆறவிட்டு எடுத்துப் பாரு
குருவாச்சு கர்மவினை குடிபோம் பாரே.

573 போமப்பாக் கடுங்கார மேற்றிப் பாரு
புகையாமற் சரக்கெல்லா மடக்கிக் கொல்லும்
நாமப்பா வொளிக்கவில்லை சிவனறியச் சொன்னேன்
நாதாக்க ளுட்கருவை மறைத்துச் சொன்னார்
தாமப்பா இக்கருவில் வீரங் கூட்டிச்
சாரித்துத் துருசுக்குப் பூசிப் போடு
ஆமப்பா ரவியிலிட்டுக் காய்ந்த பின்பு
அப்பனே சுணங்கன்மல மரைத்தி டாயே.

574 அரைத்தந்த துருசின்மே லப்பிப் போடு
அதுரவியிற் காய்ந்தபின்பு அப்பா கேளு
நரிவிரட்டி வேர்க்கள்ளி வேரு மாக
நாடியே சமனிறுத்து வாய்நீ ராலே

விரவியரை அதன்மேலே கவசங் கட்டி
வெயிலுலர்த்திச் சீலைமண்செய் வெடித்தி டாமல்
கிருபையுடன் கணபதியுந் தாயைப் போற்றி
கேள்காடைப் புடம்போடக் குருவு மாமே.

575 குருவெடுத்துப் பதனமாய் வைத்துக் கொண்டு
கூட்டடா கூட்டுகிற இனத்துக் கெல்லாம்
தருவெடுத்துப் பால்களிலே குன்றி யிட்டால்
சலமாகும் பாடாண மெல்லாங் கட்டும்
கருவெடுத்த நாதவிந்தி லிட்டா யானல்
கடிகைக்குள் சலமாகுஞ் சூதங் கட்டுந்
திருவெடுத்த இச்சலத்தில் துவைத்து வாட்ட
செணத்திலே மெழுகாகும் வேதைக் காமே.

பூநீற்றை ஒரு சட்டியிலிட்டு அடுப்பேற்றி நன்ருக எரித்து பற்பமாக்கிக்கொண்டு நான்கு படி சாரநீர் விட்டு சுருக்குக்கொடுத்துப் பின்னர் பற்பமாக்கிக்கொள்ள வேண்டும். இதை நீரிலிட்டுக் கடைந்து, மூன்று நாட்கள் வைத்து, வடித்துக்கொண்டு, அடுப்பிலேற்றிக் காய்ச்சி நீர் வற்றிக் குழம்பு பக்குவம் வந்தவுடனிறக்கி கடுமையான வெய்யிலில் வைத்தெடுக்கக் கல்லுப்பாகும்.

வீரம், சுத்தித்த பூநீறு, கல்சுண்ணும்பு, கறியுப்பு, இவற்றுடன் சாரநீர் சேர்த்துக் கலக்கி வைத்திருந்து, தெளி விறுத்து, அடுப்பிலிட்டுக் காய்ச்சி கொதிக்கும்போது சுத்தித்த அமுரிநீர், சாரநீர் சேர்த்து மெழுகுபதத்திலெடுத்து, ஆறவைத் துக்கொள்ள வேண்டும். பின்னர் இதை சூரிய ஒளியிலிட்டெ டுத்து, அமுரிநீர் விட்டு சுண்டக் காய்ச்சி எடுத்துக்கொள்ள வேண்டும். இதேபோல் பனம்பால், தேசிநீர் இவற்றிலுமிட்டுக் காய்ச்சி எடுத்து உலர்த்திக்கொண்டு, உலையிலிட்டு ஊதி எடுத்துக்கொள்ள வேண்டும். இது பிரமக்கல் சுண்ணமெனப் படும்.

| | |
|---|---|
| சுண்ணம் | 1 படி |
| சாரநீர் | 4 படி |

இவற்றை ஒரு பெரிய பீங்கானிலிட்டுக் கலக்கி ஒரு வரும் காணுத இருளடைந்த இடத்தில் 15 நாட்கள் வைத் தெடுக்க உப்பு மேலே ஏறியிருக்கும். இதன் தெளிவிறுத்துக் காய்ச்ச உப்புக் கிடைக்கும். இது சிவவுப்பு என்றழைக்கப்படும். இவ்வுப்பால் இரசவாதம் கைகூடும். நோய் இல்லை. சாவு இல்லை, நொடிப்பொழுதில் எல்லாச் சரக்குகளையும் மடியச் செய்யும்.

| | |
|---|---|
| வெடியுப்பு | 1 படி |
| சாரநீர் | 4 படி |

இவற்றைச் சேர்த்து வைத்துத் தெளிவிறுத்துக் காய்ச்சி எடுத்து, நான்குபடி ஊசிநீர் விட்டுக் காய்ச்சி, பின்னர் நான்கு படி தேசிநீர் விட்டு சுண்டக் காய்ச்சி எடுத்து வெயிலிலிட்டு உலர்ந்த பின்னெடுத்துக் கொள்ள வேண்டும்.

| | |
|---|---|
| பூநீறு | 1 படி |
| அமுரிநீர் | 8 படி |

இவற்றை நன்ருகக் கலக்கி வைத்திருந்து தெளிவெடுத்துக் காய்ச்சி குழம்பு பக்குவத்திலெடுத்து சூரியஒளியிலிட்டு உலர்த்திக்கொள்ள வேண்டும். மீண்டுமொருமுறை காய்ச்சி சூரிய ஒளியிலிட்டெடுத்து தேசிநீர் விட்டுக் காய்ச்சிக் கடுமையான வெய்யிலிலிட்டு உலர்ந்தபின் எடுத்துக்கொள்ள வேண்டும்.

| | |
|---|---|
| வெடியுப்பிலிருந்தெடுத்தவுப்பு | 1 பலம் |
| பூநீற்றிலிருந்தெடுத்தவுப்பு | 1 ,, |

இவற்றை தேசிநீர் விட்டு சூரிய ஒளியில் வைத்துக் காய்ந்த பின்னர் வழலைநீர் விட்டரைத்து வில்லை செய்து வெய்யிலிலிட்டு உலர்த்திக்கொள்ள வேண்டும். ஒரு வட்டோட்டில் பூநீறு சிறிது இட்டு, இதன் மேல் வில்லையை வைத்து, மேலும் சிறிது பூநீறு போட்டு மேலோடு கொண்டு மூடி, சீலைமண் செய்து, உலர்த்தி மணல் மறைவில் புடமிட்டெடுத்து, ஆறியபின் கல்வத்திலிட்டு, வீரம், காரம், சாரம், பூரம், இவற்றை வகைக்கொரு விராகனெடை, புனுகு 1/2 விராகனெடை சேர்த்து வெடியுப்புச் செயநீர் விட்டு ஒரு சாமநேரம் நன் கரைத்து வில்லை செய்து, சூரிய ஒளியிலிட்டு உலர்ந்தபின்னர் எடுத்துக்கொள்ள வேண்டும்.

ஒரு கனத்தசட்டியில் சுண்ணநீறு போட்டு, அதன்மேல் பூநீறு போட்டு, அதன்மேல் மேலே கூறிய வில்லையை வைத்து, அதன்மேல் பூநீறு, சுண்ணநீறு இவற்றை முறையே போட்டு மேல் சட்டி கொண்டு மூடி, சீலைமண் ஏழு செய்துலர்த்திக்கொண்டு, அடுப்பேற்றி நான்கு சாம நேரம் நான்கு வகைத் தீயாலும் எரித்துப் பின்னர் மருந்தை ஆறிய பின் எடுத்து வைத்துக்கொள்ள வேண்டும். இதுவே குரு வென்றழைக்கப்படும். கடுங்காரமேற்றிப் பார்க்க எல்லா சரக்குகளும் புகையாமல் அடங்கி மடிந்துப்போகும். இம்மருந்தோடு வீரம் கூட்டி சாரித்துத்துருசுக்குப் பூசி, சூரிய ஒளியிலிட்டுக் காய்ந்த பின்னர், நாய் மலத்தையரைத்து துருசுக்குப் பூசி

சூரிய ஒளியிலிட்டு உலர்த்திக்கொள்ள வேண்டும். பின்னர் நரிமிரட்டிவேர், கள்ளிவேர் இவற்றை வாய்நீராலரைத்து மேற்படி துருசுக்குக் கவசங்கட்டி வெயிலிலிட்டு சீலைமண் செய்துலர்த்திக்கொண்டு காடைப் புடமிட்டெடுக்கத் துருசு குருவாகும். இக்குருவை எடுத்து வைத்துக்கொள்ள வேண்டும். இக்குருவையெடுத்து, கூட்டவேண்டிய சரக்குகளோடு கூட்ட கட்டிவிடும். இக்குருவை ஒரு குன்றியளவு, பாலிலிட்டால் நீராகிவிடும். பாடாண வகைகள் எல்லாவற்றையும் கட்டிவிடும். கருவெடுத்த நாதவிந்திவிட்டால் கடிகை நேரத்தில் நீராகி விடும். இரசத்தைக் கட்டும். இம்மருந்தில் துவைத்து வாட்ட இரசம் மெழுகாகும் வேதைக்குப் பயன்படும்.

## 150. காய்ச்சுவழலைக்குரு

576 ஆமப்பா காய்ச்சுகின்ற வழலை தன்னை
அறைகிறேன் பூநீறு படிதா னுலு
தாமப்பா கல்லுப்பு படிதான் முக்கால்
தன்னோடு கல்சுண்ணம் படிவொன்ற ரையாம்
நாமப்பா ஊசிநீர் படிதா னெட்டு
நன்றாக கலக்கிவைத்துத் தெளிவை வாங்கி
வேமப்பா வெள்ளையொன்று வீர மொன்று
மிகுந்தபச்சைக் கற்பூரம் காலுங் கூட்டே.

577 காலான யிரண்டேகால் பலமுஞ் சேர்த்து
கல்வத்திற் பொடிபண்ணிக் கலக்கிப் போட்டு
நாலான நாளப்பா சிறுநீ ரிட்டு
நன்றாகத் திரட்டியே உலர்த்திக் கொண்டு
மாலான பலமூன்று கல்வத் திட்டு
மைந்தனே வெடியுப்புச் செயநீராலே
பாலான சாரமொன்று அரைத்துப் பின்பு
பரிவான சாரநீர் தன்னு லாட்டே.

578 ஆட்டுவது சாமமொன்று வில்லை தட்டி
அடர்ந்தரவி தனிற்போடு ஆற விட்டு
நாட்டுவது மண்வரையில் புடத்தைப் போடு
நன்றான கடுங்காரச் செயநீர் விட்டு
நீட்டுவது சாமமொன்று அரைத்து வாங்கி
நேராக வில்லைபண்ணி ரவியிற் போடு
காட்டுவது கடுங்கார செயநீர் குத்து
கனமாகப் பட்சமொன்று கடத்து வாங்கே.

579 கடந்தபின்பு அடிகனத்த பாண்டந் தன்னில்
கல்ச்சுண்ண நீறிட்டுப் பூநீ றிட்டுப்
படர்ந்தவில்லை மேல்வைத்துப் பூநீ றிட்டு
பாலகனே கற்சுண்ண நீறும் விட்டு
தொடர்ந்தவாய் சட்டியிட்டுச் சீலைமண் செய்து
துடியான வாலுகையின் மேலே ஏற்றி
அடர்ந்த வன்னி நாற்சாம மெரித்து ஆறி
ஆதியா முப்பூவிங் குருவு மாச்சே.

580 குருவென்ன வழலைதனை வைத்துக் கொண்டு
குடிலமது பாடாணங் கூறக் கேளு
கருவென்ன கட்டுக்குச் செந்தூரக் குளிகை
கனகமென்ற பற்பங்கள் தயில மெண்ணெய்
மருவென்ன கிருதமொடு சூர ணங்கள்
மைந்தனே குருக்கழுஞ்சி மருவச் சித்தித்
தருவென்ன முப்பூவின் குருவில் லாட்டால்
சாராது கண்ணில்லான் தாளுப் பாமே.

581 ஒப்பேது வுன்னைவிட்டால் வேறுன் றில்லை
உத்தமனே வூர்தோறும் அலைய வேண்டாம்
அப்பேது சாரநீ ரப்பே யாகும்
அதைநிதஞ் சொன்னுக்கால் குருவா காது
தப்பேது கல்லைவிட்டால் தப்பிப் போகுந்
தாயில்லாச் சூதமணி ஒப்பே றுது
கொப்பேது உன்னுக்குள் மூன்று வுப்புங்
கூடினல் சகலசித்துங் கூடுந் தானே.

582 கூடுகிற யினமென்ன என்குருவே சொல்லுங்
சொல்லுகிற மூன்றுப்புச் சொன்னீ ரய்யா
ஆடுகிற வழிகாட்டி அருளைக் காட்டி
அடங்காத வழலையுடை யெடையுங் காட்டி
நாடுகிற உன்னுக்குள் மூன்றுப் பென்றீர்
நற்கருவை என்றனக்கு நல்கு தேவா
வாடுகிற மனந்தேற அருளிச் செய்து
வழிகாட்ட வேண்டுமென்று வணங்கி னேனே.

583 வணங்கிநின்ற என்மகனே சொல்லக் கேளு
மாறுட்ட மில்லையடா மனதிற் காணும்
உணங்கிநின்ற சமாதியிலே உப்பென் பார்கள்
உன்னுக்குள் புகையூறல் உப்பென் பார்கள்

இணங்கிநின்ற கடல்பாறை வுப்பென் பார்கள்
இந்துப்புக் கறியுப்புப் பூநீ ரென்பார்
குணங்கள்தன்னைச் சரிபார்க்கில் முப்பா மென்று
கூறினார் பெரியோர்கள் குணத்தைப் பார்த்தே.

584 பார்த்தல்லோ முக்கருவை மறைக்க வேண்டி
பாடினார் வெகுகோடி நூல்க ளாக
சேர்த்தல்லோ ஒன்றிலொன்று சரியில் லாமல்
சேர்த்திட்டார் தெரிந்தாலு முரைகா ணாது
காத்தல்லோ பிறந்திடத்தை மறைத்துப் பாடிக்
கரைகாணா சாத்திரங்க ளனந்தங் கோடி
மாதல்லோ பிறந்திடந்தா னறிய வேண்டும்
மைந்தனே உலகத்தோர் வசனங்கேளே.

585 வசனமென்ன என்குருவே தஞ்ச மென்ற
மலரடியில் தான்பிடித்து வணங்கி னார்பார்
வசனமென்ன எண்சாண முடம்புக் கெல்லாம்
மைந்தனே சிரசல்லோ பிரதான மென்பார்
அசனமென்ன நீயுண்ட அன்ன சாரம்
ஆகியது அளவாக வான்மேற் சென்று
வசனமென்ன புகையூற லுப்பு மாச்சே
மகத்தான ரவிமதியில் பூநீ ராச்சே.

586 ஆச்சப்பா சமாதியினால் கல்லுப் பாச்சு
ஆதியென்ற வுப்பாச்சு இந்துப் பாச்சு
நீச்சப்பா பாழிடத்திற் பிறந்த முப்பு
நீயறிந்தால் காயசித்தும் வாத மாச்சு
போச்சப்பா நோயுடனே நமனோ யெல்லாம்
பொல்லாத சண்டாளர் நிகழ்தம்பேசி
ஏச்சப்பா பணம்பறித்து ஓடிப்போவார்
என்மகனே தெளிவாக இயம்பினேனே.

587 இயம்பிடவே மாணுக்கா ளினிய தொன்றும்
என்மக்காள் வேரென்று கொடிதா னென்றும்
நயம்படவே சல்லியென்றும் பாத்தா னென்றும்
நஞ்சென்று மிலையென்றும் பைதா னென்றும்
பயம்படவே உடன்பிறந்தா ரென்றுஞ் சொல்வார்
பஞ்சபூ தப்பொருளாம் பாரு பாரு
மயம்படவே தானெடுத்து அதற்கு நேராய்
வாங்குவாய் கம்பியுப்பை மைந்தா கேளே.

588 கேளப்பா அயச்சட்டி தன்னி லிட்டுக்
கெடியாக உலையில்வைத் துருகும் போது
வாளப்பா துண்டுதுண்டாய் அறுத்துத் தாக்கு
வாங்கியது கொடியசுண்ண மாகும் பாரு
நாளப்பா எட்டிலொன்று சாரங் கூட்டி
நன்றாகத் தானரைத்துப் பீங்கா னுள்ளே
தாளப்பா குழிவெட்டிப் பாண்டம் வைத்து
சாணியிட்டு மேல்பீங்கான் தன்னில் வையே.

589 வையப்பா மேல்மூடிச் சீலை செய்து
மண்ணிட்டு மூடியே வீரம் போடு
பையப்பா பட்சத்தில் செயநீ ராகும்
பாலகனே செயநீரைப் பதனம் பண்ணு
அய்யப்பா சமாதிதனிற் கல்லை வாங்கி
அறுத்துமே வழலைதனை வாங்கிக் கொண்டு
செய்யப்பா தீட்சைசெய்த கம்பி யுப்பு
திறமாகப் பலம்பத்து நிறுத்தி டாயே.

590 நிறுத்துநீ அயச்சட்டி தன்னிற் போட்டு
நீயடுப்பின் மேல்வைத்து நெருப்பு மூட்டு
மறுத்துமே வழலையது பலந்தா னெட்டு
மாட்டுவாய் சிறுகவதில் வாங்கிக் கொள்ளு
நிறுத்தடா அடிவழலை யுப்பு நான்கு
நேரடா கற்சுண்ணத் துப்பு ரெண்டு
திறத்துடனே பொடிபண்ணிக் கூடச் சேரு
சேர்ந்தவெல்லாங் கட்டியது செயமு மாமே.

591 செயமான உப்பெல்லாம் உருகும் போது
திறமான வீரமொடு சூடன் வெள்ளை
நயமாகப் பலமொன்று பொடித்துத்தூவி
நன்றாக விரவிநீ இறக்கிப் போடு
புயலாகக் குளிர்ந்தபின்பு வாங்கி யப்பா
போட்டடா கல்வத்தி லரைக்கக் கேளு
மயமான தேசிநீர் தன்னை வாங்கி
மாட்டியே தெளிவிறுத்து வார்த்தி டாயே.

592 வார்த்துநீ யரைக்கையிலே பூவி னீறு
மைந்தனே தீட்சைசெய்து பலந்தான் மூன்று
சேர்த்துமே சாமமொன்று அரைத்து லர்த்தி
செய்துவைத்து வெடியுப்புச் செயநீர் வார்த்து

நேர்த்தியாம் சாமமொன்று அரைத்து வாங்கி
நேராக வில்லைதட்டி உலரப் போடு
காத்திடுவாய் பட்சமொன்று ரவியிற் காய்ந்தால்
கட்டாக மணவரையில் புடத்தைப் போடே.

593 போடப்பா ஓட்டிலிட்டு ஓடு மூடிப்
புத்தியுடன் சீலைசெய்து போட்டு வாநீ
ஆடப்பா யிப்படியே ஐந்துபுடம் போடு
அப்பனே பின்புநீ கல்வத் திட்டு
தேடப்பா சுடுங்காரச் செயநீர் விட்டு
சேர்த்துநீ சாமமொன்று திறமாயாட்டி
நாடப்பா வில்லைதட்டி ரவியிற் போடு
நன்றான சுடுங்காரச் செயநீர் குத்தே.

594 குத்தியே ரவியிலிடு பட்ச மொன்று
குறையாம லடிக்கடியே செயநீர் குத்து
பத்தியே யுலர்ந்தபின்பு சட்டி யொன்றில்
பாங்கான சுண்ணத்தைப் பரப்பிக் கொண்டு
நத்தியே பூநீறு மேலே யிட்டு
நடுவிலே வில்லைவைத்து மேலும் போட்டு
சுத்தியே மேல்மூடிச் சீலை செய்து
துடியாக வாலுகையின் மேலே யேற்றே.

595 ஏற்றியே கணபதிக்கும் வயிர வர்க்கும்
என்தாயார் திருவடிக்கும் பூசை செய்து
நேர்த்தியாய் நால்சாம மனலை மூட்டு
நெருப்பாறிக் குளிர்ந்தபின்பு எடுத்து ப்பாரு
பார்த்திபனே குருவென்ன கொடிய வேகம்
படுமுன்னே அண்டரண்டம் நீறுய்ப் போகும்
காத்திருந்த தவமுனக்குச் சித்தி யாச்சு
கைத்தொட்ட சரக்கெல்லாங் கட்டுந் தானே.

596 கட்டினார் திருமூலர் கொங்கணரு மய்யா
கருவென்ன மூத்தானுப் பென்றே சொன்னார்
ரெட்டி களிச் சுண்ணமென்று மிதனைச் சொல்வார்
இதமான போகருமே முப்பா மென்றார்
தட்டினார் பிரமமுனி கொடிமா வென்றார்
தானான ரோமரிஷி நஞ்சா மென்றார்
முட்டினா ரவரவர்கள் வெவ்வே றாக
மொழிந்திட்டார் கருவெல்லா முமக்குத் தானே.

597 தானான ஆணவத்தால் விரித்துச் சொன்னேன்
சண்டாளர்க் கின்னூலை ஈந்தா யானால்
வானான தனங்குலைந்து நரகில் வீழ்ந்து
வானிலிடி தான்விழுந்து மாண்டு பின்னுங்
கானான பர்வதங்கள் செடிப்பூ டாகும்
கண்கெட்டு வெகுகோடி கால மட்டும்
வேனான ரெண்டுதலைச் சர்ப்ப மாகி
விழுந்திடுவாய் சத்தியமாய் விளம்பி னேனே.

598 விளம்பினேன் தாய்சொன்ன படியே யானும்
வேறுமினிக் கருவில்லை விரைந்து பாரு
குழம்பிமனம் போகாமல் திடமாய் நில்லு
கூறுவார் வெவ்வேறு கொள்கிச் சொல்வார்
உளம்பெலத்துப் பலநூலு முற்றுப் பாரு
உன்னைவிட்ட தொன்றுமில்லை உண்மை யாக
தளம்பிவனாய் என்னமனத் தனித்துப் பாரு
தாயை நீ மறவாதே சாற்றி னேனே.

| | |
|---|---|
| பூநீறு | 4 படி |
| கல்லுப்பு | $\frac{3}{4}$ படி |
| கல்சுண்ணம் | $1\frac{1}{2}$ படி |
| ஊசிநீர் | 8 படி |

ஊசிநீரில் சரக்குகளையிட்டு நன்றாகக் கலக்கி வைத்துத் தெளிவை எடுத்துக்கொள்ள வேண்டும்.

| | |
|---|---|
| வெள்ளைப் பாடாணம் | 1 பலம் |
| வீரம் | 1 பலம் |
| பச்சைக் கற்பூரம் | $\frac{1}{4}$ பலம் |

இவற்றைக் கல்வத்திலிட்டுப் பொடித்துக்கொண்டு சிறு நீரிலிட்டுத் திரட்டி உலர்த்திக்கொள்ள வேண்டும். இதில் 3 பலம் கல்வத்திட்டு சாரம் 1 பலம் சேர்த்து வெடியுப்புச் செயநீராலரைத்துப் பின்னர் சாரநீர் விட்டு ஒரு சாம நேர மரைத்து வில்லை தட்டி, வெய்யிலிலிட்டு உலர்த்திக்கொண்டு, முறைப்படி மணல் மறைவில் புடமிட்டெடுத்துக்கொள்ள வேண்டும். இதைக் கல்வத்திலிட்டு கடுங்காரச் செயநீர் விட்டு ஒரு சாம மரைத்து, வில்லைசெய்து வெய்யிலில் உலர்த்திக் கொண்டுச் கடுங்காரச் செயநீர் விட்டு 15 நாட்கள் வைத்திருந் தெடுத்துக்கொள்ள வேண்டும்.

ஒரு அடிகனத்த மண்பானையில் கல்ச்சுண்ண நீறிட்டு, அதன்மேல் பூநீறிட்டு, இப்பூநீற்றின் மேல் வில்லையை

வைத்து, வில்லையின் மேல் பூநீறு, கற்சுண்ணம் இவற்றை முறையே வைத்து மேல்சட்டி மூடி, சீலை மண் செய்துலர்த்திக் கொண்டு வாலுகையிலேற்றி அடர்ந்த தீயாக நான்கு சாம மெரித்து, ஆறியபின் எடுத்துக்கொள்ள வேண்டும். இது முப்புக்குருவாகும். பாடாணங்களின் கட்டு, செந்தூரம், குளிகை முதலிய செய்வதற்கு உதவும். தங்கபற்பம், தயிலம், எண்ணெய், நெய், சூரணங்கள் முதலியவற்றில் இம்முப்புக்குரு வில் ஒரு கழஞ்சி சேர்க்கச் சித்தியாகும். முப்புவில் குரு சேராவிட்டால் பயன் தராது. இம்முப்பு குருவைத் தேடி ஊர் தோறும் அலையவேண்டாம். சாரநீரே அப்பாகும். கல்ச்சுண்ணம் விட்டால் குருதப்பிப் போகும். தாயாகிய இக்குரு சேராத இரசமணி சிறப்புத் தராது. உனக்குள் மூன்று உப்புங் கூடி னுல் சகலசித்துங் கைகூடும்.

'உன்னுக்குள் மூன்றுப்பு' என்பது சமாதியுப்பு, புகை யூறலுப்பு, கடல் பாறையுப்பு என்பார்கள். மேலும் இந்துப்பு, கறியுப்பு, பூநீறென்பார்கள். குணங்களைச் சரிபார்த்து முப் புவை யறியவேண்டும். நூல்களில் இம்முக்கருவை மறைத்து ஒன்றுக்கொன்று சரியில்லாமல் சேர்த்துவிட்டனர். தெரிந் தாலும் உரை காண முடியாமல் பிறந்திடத்தை மறைத்துப் பாடியுள்ளனர். உண்ட அன்னசாரம் வான்நோக்கி மேற்சென்று புகையூறலுப்பாகும். இரவிமதியில் பூநீருகும். சமாதியினுல் கல்லுப்பாகும்: ஆதியென்ற வுப்பு இந்துப்பாகும். இம்முப் பூவின் பிறப்பிடங்களையறிந்தால் காயசித்தியும், வாதமும் கைகூடும். எல்லா நோய்களும் நீங்கும்.

இக்குருவை இனியதென்றும், வேரென்றும், கொடியென்றும் பாத்தானென்றும் இலையென்றும், சல்லியென்றும், நஞ்சென்றும், பைதானென்றும், உடன்பிறந்தாரென்றும் ஒவ்வொருலரும் வேறுவேருங் கூறுவர். இது பஞ்சபூதப் பொருளாம். இதையெடுத்து இதற்குச் சமன் வெடியுப்பெடுத்து ஒரு அயச்சட்டியிலிட்டு உலையிலிட்டு உருகும்போது துண்டு துண்டாய் அறுத்துச் சேர்க்கக் கொடிய சுண்ணமாகும். இதனெடைக்கு எட்டிலொருபங்கு சாரங்கூட்டிக் கல்வத்திலிட்டு நன்கு அரைத்து ஒரு பீங்கானிலிட்டு, வீரம் போட்டு, மேல் பீங்கான் கொண்டு மூடி, சீலைமண் செய்து, ஒரு குழிவெட்டி ஒரு பாண்டம் வைத்து, அதில் சாணியிட்டு, அதன் மேல் மேற்படி பீங்கானை வைத்து மண்ணிட்டு மூடி 15 நாட்கள் வைத்திருந்தெடுக்கசெயநீராக இருக்கும். இச்செயநீரை யெடுத்து வைத்துக் கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| தீட்சை செய்த கம்பியுப்பு | 10 | பலம் |
| வழலை | 8 | ,, |
| அடிவழலையுப்பு | 4 | ,, |
| கற்சுண்ண உப்பு | 2 | ,, |

இவற்றில் கம்பியுப்பை ஒரு அயச்சட்டியிலிட்டு, அடுப் பேற்றி எரித்து, வழலையைச் சிறுகச் சிறுகக் கம்பியுப்போடு சேர்க்க ஒன்ருகக் கலந்துவிடும். பின்னர் மற்ற இரண்டு சரக்குகளையும் பொடி பண்ணி, மேற்படி சரக்கோடு சேர்க்க எல்லாச் சரக்குகளு மொன்ருகிக் கட்டிப் போகும். இவ்வுப்பு களெல்லாம் உருகும்போது, வீரம், சூடன், வெள்ளைப் பாடா ணம் வகைக்கொரு பலமெடுத்துப் பொடித்துத் தூவி, நன் ருகக் கலந்து பின்னர் இறக்கி ஆறின பின் எடுத்துக்கொள்ள வேண்டும். இதைக் கல்வத்திலிட்டு, தேசிநீரின் தெளிநீர் விட்டு அரைக்க வேண்டும். அரைக்கும்போது பூநீறு மூன்று பலம் சேர்த்து ஒரு சாமமரைத்து, உலர்த்திக் கொண்டு, பின்னர் ஓட்டிலிட்டு, மூடி, சீலைமண் செய்துலர்த்தி மண வரையில் புடமிட்டெடுக்க வேண்டும். இவ்வாறு ஐந்து முறை புடமிட்டெடுத்த பின்னர் கல்வத்திலிட்டு, கடுங்காரச் செயநீர்விட்டு, ஒரு சாமமரைத்து வில்லைதட்டி வெய்யிலில் உலர்த்திக்கொண்டு, கடுங்காரச் செயநீர் அடிக்கடி வில்லைக்கிட்டு 15 நாட்கள் சூரிய ஒளியிலிட்டு உலர்த்தி எடுத்துக் கொள்ள வேண்டும். ஒரு சட்டியில் கல்ச்சுண்ணம் இட்டு அதன்மேல் பூநீறு பரப்பிக்கொண்டு, வில்லையை மேலே வைத்து, பூநீறு, கல்ச்சுண்ணம் இவற்றை முறையே மேலும் போட்டு, மேல் மூடிச் சீலைமண் செய்துலர்த்தி வாலுகாயந்திரத்திலிட்டு நான்கு சாம மெரித்தெடுத்து, ஆறிய பின் எடுத்துக் கொள்ள கொடிய வேகமுடைய குருவாகும். இக்குருவினுல் எல்லாச் சரக்குகளையும் சுண்ணமாக்கலாம். எல்லாக் காரியமும் சித்தியாகும். எல்லாச் சரக்குகளையும் கட்டலாம். (இக்குரு சுண்ணத்தை மூத்தானுப்பென்று திருமூலரும், கொங்கண ரும் கூறுவர்; களிச்சுண்ணமென்றும் இதனைக் கூறுவர்; **போகர்** இதை முப்பாழ் என்றழைப்பார்; பிரமமுனி கொடிமா என்பார்; உரோம முனிவர் நஞ்சு என்பார்; இவ்வாறு ஒவ்வொருவரும் ஒவ்வொரு பெயரிட்டழைப்பர்).

சண்டாளர்களுக்கு இந்நூலை ஈந்தால் தவமெல்லாம் வீணுகி, நரகத்தில் வீழ்ந்து துன்பப்பட நேரிடும். இடி விழுந்து, மாண்டுபோய் மரம், செடி, பூண்டாக பிறப்பெடுப்பர். மேலும் வெகுகோடி காலம் இரண்டு தலைப் பாம்பாகித் துன்பப்படுவர்.

மனம் குழம்பிப் போகாமல், ஒவ்வொருவர் சொல் வதையும் ஆராய்ந்து, பல நூல்களைப் பார்த்துத் தெளிவு பெறவேண்டும்.

## 151 பாடாணக்கட்டு

599 சாற்றுவா ருலகத்தில் வசனங் கேளீர்
தாயான மலம்போனல் வாதம் போச்சு
ஆற்றினர் பணமென்ன பாடாணந் தான்
ஆகுமென்று சொல்வார்க ளறிந்து பாரு
மாற்றுவார் பிரிதீவீன் பெருமாளைச் சேவி
வசனமிதை அறிந்துகொண்டு தாயைப் பூசி
கூற்றுவனும் பாடாணந் தன்னைக் கட்டக்
கூறுகிறேன் மாணுக்காள் குறியில் நில்லே.

600 குறியென்ன சாரநீர் தன்னில் வைத்து
குடிலமற்ற துருசுவொரு பணந்தா னப்பா
நெறியென்ன கல்வத்தி லிட்டு மைந்தா
நீரோடு வழலையிலோர் காசு தூக்கி
அறிவென்ன வீரமொடு சூதம் பூரம்
அழகான உரம்புழுகு குருவண் டோடு
முறையென்ன வகைவகைக்குக் காசு போடு
முன்வைத்தக் கடுங்கார நீரி லாட்டே.

601 நீரினிலே யாட்டுவது சாம மொன்று
நெறியான நாதவிந்தில் வழலை யிட்டு
பாரிலிது நீருகும் அந்நீர் விட்டு
பதருமல் கடிகையொன்று அரைத்துப் போடு
சீரிலதை வில்லைதட்டி உலரப் போடு
திறமான பூநீறுக் குள்ளே வைத்து
வீரியமா யஞ்செருவிற் புடத்தைப் போடு
வேகமென்ற துருசினுடைச் சுண்ணந் தானே.

602 சுண்ணத்தைப் பீங்கானில் சிமிழில் வைத்து
சுத்தமாய்த் திருகுகள்ளிப் பாலை வாங்கி
எண்ணுைத்த திருகுகள்ளி உப்பி னேடு
இதமான துரிசிலொரு காசு போடு
தண்ணுைத்த சலமாகு மிறுத்துக் கொண்டு
தான்வெள்ளைப்பாடாணம் பலந்தான் வாங்கி
மண்ணுைத்த கற்சுண்ணத் துள்ளே வைத்து
வாரடா பனம்பாலை விட்டு நீற்றே.

603 நீற்றுவது ஏழுதரங் கழுவிப்போடு
நினைவாக ரவியிலிட்டு உலர்ந்த பின்பு
ஏற்றுவது வழலையுடைச் சுண்ணந் தன்னில்
எடுத்திடுவாய் காசெடைதான் வாய்நீர் விட்டு
சாற்றுவது பாடாணந் தன்னிற் பூசி
தப்பாமல் ரவியிலிட்டுக் காய்ந்த பின்பு
கூற்றுவனு மப்பிரகத் தகட்டில் வைத்து
குறிப்பான பானீரைச் சுருக்குத் தாக்கே.

604 தாக்கப்பா சாமமொன்று எடுத்துக் கொண்டு
தனித்ததேனே கடிகைரெண்டு சுருக்குத் தாக்கு
நோக்குதற்குப் பாடாணங் கட்டிப் போகும்
நொடிக்குமுன்னே வாதவித்தை கைக்குள் ளாச்சு
வீக்குவது வெள்வங்கஞ் சுத்தி செய்து
மேலான குகையில்வைத்து வுருகும் போது
ஆக்குவது திசைக்கொன்று பாடா ணத்தை
அதுவாங்க வங்கமது கட்டிப் போச்சே.

605 கட்டினவெள் வங்கத்தி லொன்று வாங்கி
கசடற்ற வெள்ளிபத்து ஈந்தா யானல்
பட்டுதடா வெள்ளியது நொறுங்கிப் போச்சு
பலம்நிறுத்து வெள்வங்கக் கல்வத் திட்டு
கொட்டப்பா பாடாணம் பலந்தா னென்று
கூடவிட்டுச் சூதமொன்று வீர மொன்று
தட்டியரை திருகுகள்ளிப் பால்நீர் விட்டுச்
சாமமொன்று அரைத்துவில்லை தட்டிப் போடே.

606 போடப்பா ரவியிலிட்டுக் காய்ந்த பின்பு
புகழான திருகுகள்ளிச் சாம்ப லோடு
கூடப்பா பூநீறுஞ் சமனுய்ச் சேர்த்து
குமுறவே ஒட்டிலிட்டு வில்லை வைத்து
மூடப்பா மேலுமிட்டுச் சீலை செய்து
முறையோடே குக்குடமாம் புடத்தைப் போடு
காடப்பா திரிவானேன் குருவு மாச்சு
கைலாய கிரிவசமாய்க் காணுங் காணே.

## துருசுச்சுண்ணம்

| | |
|---|---|
| துருசு | 1 பலம் |
| வழலை | 1 காசு |
| வீரம் | 1 ,, |
| சூதம் | 1 ,, |

| | | |
|---|---|---|
| பூரம் | 1 | ,, |
| உரம் | 1 | ,, |
| புனுகு | 1 | ,, |
| முப்புகுரு (குருவண்டு) | 1 | ,, |

இவற்றைக் கல்வத்திலிட்டு சாரநீர் விட்டு ஒரு சாமம் நன்கு அரைத்துக்கொள்ள வேண்டும். நாத விந்தில் வழலையிட்டு வைக்க நீராகும். இந்நீர்விட்டு ஒரு கடிகை நேரமரைத்து வில்லை செய்துலர்த்திக்கொண்டு, இவ்வில்லையைப் பூநீறுக்குள்ளே வைத்து ஐந்தெருவில் புடமிட்டெடுக்கத் துருசு சிறந்த முறையில் சுண்ணமாகும்.

திருகுகள்ளிப்பால், திருகுகள்ளியுப்பு இவற்றையொரு பீங்கானிலிட்டு, மேலே செய்து முடிக்கப்பெற்ற துருசுச் சுண்ணம் ஒரு காசெடை சேர்க்க மருந்து நீராகிவிடும். இதை வடித்து வைத்துக்கொள்ள வேண்டும்.

வெள்ளைப்பாடாணம் ஒரு பலமெடுத்துக் கற்சுண்ணத்துள் வைத்து, பனம்பாலிட்டு (பனங்கள்) நீற்றிக்கொள்ள வேண்டும். இவ்வாறு ஏழு முறை பனம்பாலிட்டு நீற்றியெடுத்துக் கழுவிக்கொண்டு சூரிய ஒளியிலிட்டு உலர்த்திக்கொள்ள வேண்டும். வழலைச் சுண்ணம் ஒரு காசெடை யெடுத்து வாய் நீர்விட்டரைத்து, மேற்படி பாடாணத்திற்குப் பூசி சூரிய ஒளியிலிட்டு உலர்ந்தபின்பு அப்பிரகத் தகட்டின்மேலே வைத்து அடுப்பேற்றி முன்பு செய்து வைத்துள்ள திருகுகள்ளிப் பால் நீரால் ஒரு சாமம் சுருக்குக் கொடுத்தெடுத்து, மேலும் தேன்விட்டு இரண்டு கடிகை நேரம் சுருக்குக் கொடுத்தெடுக்க பாடாணம் கட்டிப் போயிருக்கும். இப்பாடாணக் கட்டினுல் வாதவித்தை கைகூடும்.

சுத்தித்த வெள்வங்கத்தைக் குகையிலிட்டு உருக்கி, உருகும்போது 10—ல் 1 பங்கு பாடாணம் (கட்டியது) சேர்க்க வெள்வங்கம் கட்டிப் போகும். இவ்வாறு கட்டிய வெள்வங் கத்தையொரு பங்கெடுத்து, பத்து பங்கு வெள்ளியில் கொடுக்க வெள்ளி நொறுங்கிப்போகும். (மடியும்)

| | | |
|---|---|---|
| வெள்வங்கக் கட்டு | 10 பலம் | |
| பாடாணக் கட்டு | 1 | ,, |
| இரசம் | 1 | ,, |
| வீரம் | 1 | ,, |

இவற்றைக் கல்வத்திலிட்டு திருகுகள்ளிப்பால் நீர்விட்டு ஒரு சாமமரைத்து வில்லை தட்டி வெய்யிலிலிட்டு உலர்த்திக் கொள்ளவேண்டும். பின்னர் திருகுகள்ளிச் சாம்பலும் பூநீறும்

சமனுகச் சேர்த்து ஒரு ஓட்டிலிட்டு, வில்லையை வைத்து, மேலும் திருகுகள்ளிச் சாம்பலும் பூநீறும் போட்டு, மேலோடு கொண்டு மூடி, சீலைமண் செய்து உலர்த்திக்கொண்டு முறைப்படி குக்குட புடமிட்டெடுக்கச் சிறந்த குருவாகும்.

## 152 இலிங்கமெழுகு

607 காணவே செம்பரத்தம் பூவை வாங்கி
கசக்கியே துருசுவென்ற சுண்ணம் போட்டு
பூணவே பிசைந்தமுக்கிக் கடிகை சென்று
பிழிந்திடவே தண்ணீராம் புனலை வாங்கி
நாணவே வழலையிட்டு வைத்துக் கொண்டு
நலமான குப்பிவைப்பு லிங்கம் வாங்கி
தோணவே பொடிபண்ணி அயக்கரண்டி தன்னிற்
துலக்கியதி லிட்டுநீ சொல்லக் கேளே.

608 கேளடா செம்பரத்தம் பூச்சா றேடு
கெடியான முலைப்பாலுந் தேனுங் கூட்டி
தாளடா எலுமிச்சம் பழச்சா றேடு
சமன்சேர்த்து வெண்காரஞ் சற்றே யிட்டு
நாளடா நீர்வற்றி வரும்போ தப்பா
நன்ருகக் கிண்டிவரில் மெழுகாம் பாரு
வேளடா எரித்தசிவன் சொன்ன ரிந்த
மேலான மெழுகுதனில் தங்கஞ் சேரே.

609 தங்கமது ரேக்கடித்துப் பத்துக் கொன்று
தான்சேர்த்து வீரமிட்டு ஆட்டிப் போடு
பங்கமின்றிப் பிசைந்துநவ லோகத் தீய்ந்தால்
பத்தரைமாற் ருகுமடா பரிந்து பாரு
சிங்கமதுக் கெதிர்ப்பட்ட யானை போலே
செயமான துருசுகண்டால் சூதஞ் சாகும்
வங்கமதுக்கோடாது வேதை தானும்
மைந்தனே சவ்வாதுசற்றே மாட்டிப் போடே.

610 மாட்டுகிற துறைக்கெல்லாஞ் சவ்வாது வேண்டும்
மகத்தான சுண்ணமெல்லாம் வேதை யாகும்
கூட்டுகிற இனமெல்லாஞ் சுத்தத் தங்கங்
கொண்டதொரு நாகமுடன் அயத்தி ஞகம்
பூட்டியே தொந்தித்து கெந்தி தன்னைப்
போடுவாய் சமனுகக் கல்வத் திட்டு
ஆட்டுவாய்க் காசாம்புச் சாறு விட்டு
அப்பனே உலர்த்தியதைக் குப்பிக் கேற்றே.

611 ஏற்றியே பன்னிரண்டு சாமந் தானும்
எடுத்தாறி எடுத்துப்பார் செந்தூ ரந்தான்
சாற்றியே பணவெடைதான் நவலோ கத்தில்
தாக்கடா ரசந்தன்னில் தசமாற் றுரும்
தேற்றியே குன்னியெடைத் தேனிற் கொள்ள
தேகத்துக் கழிவில்லை தேவியைநீ பூசி
கூற்றுவனுர் வரும்போது கற்ற வெல்லாங்
குறுக்கேநின்று தடுக்குமே கூறி னேனே.

செம்பரத்தம்பூவைக் கசக்கி, துருசுச் சுண்ணம் சேர்த்துப் பிசைந்து ஒரு கடிகை நேரம் அமுக்கி வைத்திருந்து சாற்றைப் பிழிந்து எடுத்து வழலை சேர்த்து எடுத்து வைத்துக்கொள்ள வேண்டும்.

குப்பி வைப்பு இலிங்கத்தை யெடுத்துப் பொடி செய்து, துலக்கிய அயக்கரண்டியிலிட்டுக் கொண்டு மேலே கூறிய செம்பரத்தம் பூவிலிருந்தெடுத்த நீரையும் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

செம்பரத்தம்பூச்சாறு
தாய்ப்பால்
தேன்
எலுமிச்சம்பழச்சாறு

இவற்றைச் சமஅளவெடுத்து இதனுடன் சிறிளதவு வெண்காரம் கூட்டி, மேற்படி மருந்துடன் கலந்தெரித்து, நீர் வற்றிவரும்பொழுதில் நன்ருகக் கிண்டிக் கொடுத்து, மெழுகானதும் எடுத்து வைத்துக்கொள்ள வேண்டும். இவ் விலிங்க மெழுகு ஒரு பங்குக்கு பத்திலொரு பங்கு தங்க ரேக்கும், வீரமும் சேர்த்து அரைத்தெடுத்துப் பிசைந்து நவலோகத்தில் கொடுத்தால் பத்தரை மாற்ருகும். துருசு சுண்ணத்தால் இரசம் மடியும். வேதை முறையில் சவ்வாது கூட்ட வேண்டும். சிறந்த சுண்ணங்களெல்லாம் வேதையாகும். இவற்றைக் கூட்டிச் செய்யப்படுகின்ற எல்லா சரக்குகளும் சுத்தத் தங்கமாகும். நாகம் (நாகக்கட்டு) அயநாகம் (இதில் கூறப்பட்டுள்ள முறை) இவற்றைத் தொந்தித்து சம அளவு கெந்தி (மெழுகு) சேர்த்துக் கல்வத்திட்டு, காசாம்புச் சாறுவிட்டு நன்கு அரைத்தெடுத்து, உலர்த்தி, குப்பியிலிட்டு 12 சாமமெரித்தெடுத்து, ஆறியபின் பார்க்க செந்தூரமாக இருக்கும். இதை நவலோகங்கள், இரசம் இவற்றில் தாக்கப் பத்து மாற்ருகும்.

குன்றியெடை தேனில் உட்கொள்ள காயசித்தி உண் டாகும்.

## 153 பூபதிச்செந்தூரம்

612 கூறினேன் முன்னூறு முப்பத் தாறு
கொடியதொரு பூபதிதா னென்று சொன்னேன்
நூறிலே நூறுமுறை நன்றாய்ச் சொன்னேம்
நுவலுவேன் பூபதிதான் ஒன்று கேளு
தேறியே அயச்சத்துக் காந்தச் சத்து
திறமான அப்பிரகச் சத்துத் தங்கம்
வீறுமே திருநாக வெள்ளி செம்பு
வெங்கலமும் பித்தளையுந் திராவு மாமே.

613 ஆமென்ற முளைச்சங்கு நண்டு நத்தை
ஆமையோ டானையின் பல்லுங் கூட்டு
தாமென்னக் கழுதைப்பல் மாட்டுக் கொம்பு
தந்தமொடு மானஸ்தி அஞ்ச னக்கல்
நானென்ற கல்நாரு புலிப்பால் தானும்
நல்லசிப்பி கரும்பூனை நாயி னஸ்தி
கோனென்ற முதலைப்பல் பன்றிக் கொம்பு
கொடிய காண்டாமிருகக் கொம்பு தானே.

614 கொம்புடனே கரடியுடைத் தந்த மெல்லாங்
கொடியசத்து வாங்குவதற்கு திராவகமெண்ணூற்றில்
தெம்புடனே சொன்னேன்நீ வழலைக் கூட்டி
திராவகத்தின் முறைப்படியே சத்தை வாங்கி
நம்பியே இந்தவகைச் சத்தை யெல்லாம்
நன்றாக ஒருநிறையாய்க் குகையி லிட்டு
அன்புடைய குருவுடனே குடோரி காரம்
அணைத்தூத ச்சத்தெல்லா மாடுந் தானே.

615 ஆடையிலே தசையண்டச் சத்தைத் தாக்கு
அதன்பிறகு நவரத்தினச் சத்தை நீட்டு
நாடையிலே குறையாத சத்தை வாங்கி
நாட்டிலே கல்வத்தில் நொறுக்கிக் கொண்டு
சாடையிலே அரிதாரஞ் சிலையும் வீரஞ்
சாதிலிங்கங் கெவுரிவெள்ளை நிமிளை தானும்
தேடையிலே குதிரைப்பல் உருக்குத் தொட்டி
சிங்கிகரு நாபியுடன் செயசூதந் தானே.

616 சூதமொடு ராசாவா மிவையெல்லாந்தான்
தூக்கடா நவரத்தின மெடைக்கெடை நேராக
நாதமுடன் காசாம்பூச் சாறு மல்லால்
நாட்டிலுள்ள முருக்கம்பூக் கற்றாழம் பால்

நீதமுடன் பொற்றலையும் வகையொன் றுக்கு
நீயாட்டு இருசாமம் வில்லை தட்டி
சேதமென்ன இரவிதன்னி லுலர்த்திப் போடு
செப்பினே னெடைக்கெடைதான் கெந்தி கூட்டே.

617 கூட்டியே பொடித்திடுவாய் வழலை சேர்த்து
குறையாமல் முன்னெடையாய்க் குப்பிக் கேற்றி
நாட்டியே அரைமண்ணால் சீலை செய்து
நன்றான வாலுகையில் பாண்டம் வைத்து
காட்டியே நாலுவிரல் மணல்தா னிட்டுக்
காசியென்ற மேருவைத்தான் நடுவே வைத்து
தீட்டியே குப்பியுனடக் கழுத்து மட்டுஞ்
சிறுமணலை விட்டுமேல் செம்மி டாயே.

618 செம்மிடுவாய் குப்பிவாய் வளப்பக் கல்லால்
செம்மிநீ மண்கட்டி அனலை மூட்டிப்
பம்மிடுவாய் வாலையுடன் றிருவா ணிக்கும்
பரமசிவன் கணபதிக்கும் திருமா லுக்கும்
நம்முடனே அறுமுகற்குந் தியான பூசை
நாதாக்கள் பூசைபண்ணிச் சாபந் தீர்த்து
உம்முடனே மந்திரங்க ளுச்ச ரித்து
ஒருவிறகாய் மூன்றுநாள் எரித்தி டாயே.

619 எரித்திடுவாய் நாற்றீயு மெரிக்கும் போது
என்மகனே கெந்தியில் தீயெழும்பு மாகில்
தரித்தகுப்பி வாய்திறந்து சலாகை யிட்டுத்
தான்கிண்டிச் சலாகைமுனை கருகருக்கு மாகில்
பெருத்ததொரு செந்தூர மாச்சு தென்று
பேறான அக்கினியை நிறுத்திப் போட்டு
உருத்துடனே தீயாற்றி எடுத்துப் பாரு
உசராது தலத்தில்செந் தூரந் தானே.

620 தானென்ற செந்தூர மொருமா வீதந்
தான்கொள்ள மண்டலத்தில் சட்டை போகும்
வேனென்ற நோயெல்லாங் கடலே யோடும்
வேதைஅணுப் பட்டக்கால் மேருவ தாகும்
நானென்ற ஆணவத்தை விட்டா லய்யா
நமனொருநா ளில்லையடா நாடிக் காணும்
ஊனென்ற தேகத்தில் வாசி தானும்
உள்ளடங்கும் வெளியோடா உற்றுப் பாரே.

621 உற்றுற்றுப் பார்க்கையிலே ஞான மார்க்கத்
தொளிகாணுங் கர்மமெல்லா மோடிப் போகும்
சற்றுமனந் தளராதே பலநூல் பாரு
சற்குருவின் பதம்போற்றி நிலையில் நில்லு

மற்றுமிந்தக் கருவெளியிற் சொன்ன யானல்
மாமுனிவர் சித்தரிட்ட சாப மெய்தும்
குற்றமற்று நிலையில்நின்ருல் சாப மேது
கூடாதே பலகூட்டம் கூறி னேனே.

622 கூறினசொல் மறவாதே தாயைப் போற்று
குணமான வைத்தியத்தைப் கூர்ந்துபாரு
வேறுமொரு பொருளில்லை அடிமுடிதா னப்பா
விளங்கிநின்ற காவியத்தில் விளங்கும் பாரு
மாறிநின்று திருடாதே மதம்பே சாதே
மற்றநூல் பொய்யென்று வசனிக் காதே
ஆறுமுகன் பதம்போற்றி கையில் நெல்லி
அருங்கனிபோல் சொன்னவிந்த வறுநூறு முற்றே.

| | |
|---|---|
| அயச்சத்து | யானைப்பல் |
| காந்தசத்து | கழுதைப்பல் |
| அப்பிரகச்சத்து | மாட்டுக்கொம்பு |
| தங்கம் | மானின்எலும்பு |
| நாகம் | அஞ்சனக்கல் |
| வெள்ளி | கல்நார் |
| செம்பு | புலிப்பல் |
| வெங்கலம் | நற்சிப்பி |
| பித்தளை | கரும்பூனையெலும்பு |
| திரா | நாயெலும்பு |
| சங்கு | முதலைப்பல் |
| நண்டு | பன்றிக்கொம்பு |
| நத்தை | காண்டாமிருகக்கொம்பு |
| ஆமையோடு | கரடிப்பல் |

1 பங்கு

இவற்றைத் திராவகம் 800 என்ற நூலில் கூறியுள்ள முறைப்படி வழலைகூட்டி, திராவகமுறைப்படி சத்து எடுத்துக் கொள்ள வேண்டும். இவற்றைச் சமஅளவெடுத்துக் குகையிலிட்டுக் குரு, குடோரி, காரம் முதலியன சேர்த்து ஊத உருகி ஆடும். அப்போது தசையண்டச் சத்தையும் நவரத்தினச் சத்தையும் சேர்த்து, கல்வத்திலிட்டுப் பொடித்துக்கொள்ள வேண்டும்.

| | |
|---|---|
| அரிதாரம் | குதிரைப்பல் பாடாணம் |
| மனோசிலை | உருக்குத்தொட்டிப்பாடாணம் |
| வீரம் | சிங்கிப் பாடாணம் |
| சாதிலிங்கம் | கருநாபி |

| | |
|---|---|
| கெவுரி பாடாணம் | இரசம் |
| வெள்ளைப் பாடாணம் | நவரத்தினம் |
| நிமிளை | |

சமஅளவு எடைக்கெடை

இவற்றைக் கல்வத்திலிட்டு, காசாம்பூச்சாறு, முருக்கம் பூச்சாறு, கற்றாழம்பால், பொற்றலைச்சாறு, இவற்றால் தனித் தனியே இரண்டிரண்டு சாமமரைத்து, வில்லை தட்டி, வெய்யிலில் உலர்த்திக்கொண்டு, இதனெடைக்குச் சமனெடை கெந்தகத்தை வழலை சேர்த்துப் பொடித்து, பின்னர் மருந்து கெந்தகப் பொடி இவற்றை ஒரு காசிக்குப்பியிலிட்டு, சீலை மண் செய்து கொள்ள வேண்டும்.

ஒரு வாலுகாயந்திரத்தில் பாண்டம் வைத்து, நான்கு விரலுயரத்திற்கு மணலிட்டு, இதன் நடுவில் காசிக்குப்பியை வைத்து, காசிக்குப்பியின் கழுத்துவரை சிறுமணலிட்டு, குப்பி வாயை வளப்பக்கல்லால் மூடி, மேலும் மணலிட்டு, ஒரு சாதி விற கால் நாற்றீயாக மூன்று நாட்கள் எரிக்க வேண்டும். எரிக்கும் போது கெந்தகத்தில் தீயெழும்புமானால் குப்பி வாய் திறந்து சலாகையிட்டுக்கிண்ட வேண்டும். சலாகை முனை கருகருக்குமே யானால் சிறந்த முறையில் செந்தூரம் முடிந்திருக்கும். தீயை அணைத்து, மருந்தை ஆறிய பின் எடுத்துக்கொள்ள வேண் டும். இது ஒரு சிறந்த செந்தூரமாகும்.

**அளவு**: ஒருமா வீதம் ஒரு மண்டலம் உட்கொள்ள வேண்டும்.

**தீரும் நோய்கள்**: உடல்சட்டை நீங்கப்பெற்று புதிய ஒளி உண்டாகும். நோய்களெல்லாம் விலகிப் போகும். ஆயுள் நீடிக்கும். வாசிவெளியேறி வீணாகாமல் உள்ளடங்கும்.

இச்செந்தூரம் வேதை முறைக்குப் பயன்படும். இச் செந்தூரத்தால் ஞானமார்க்கங்களில் தெளிவு ஏற்படும். வினைகள் நீங்கும். மனம் தளராமல் பல நூற்களையும் கற்க வேண்டும். குருவை வணங்கிக் கற்றுக்கொள்ள வேண்டும். இதில் கூறப் பெற்றுள்ள கருவைச் சண்டாளர்களுக்குச் சொன்னால் மாமுனிவர் சித்தர்களிட்ட சாபங்கள் வந்தடையும். சொன்ன சொல் தவறாமல் பக்தியோடு வைத்தியத்தைக் கை யாள வேண்டும். இதைவிடச் சிறந்த பொருள் வேறொன் றில்லை. திருடாமல், மத நிந்தனை செய்யாமல் வேறு பல நூற்களையும் பொய் என்று இகழாமல் ஒழுக்க நெறி யோடிருக்க வேண்டும்.

# விளக்க அட்டவணை


| | | |
|---|---|---|
| I. | உடல் தத்துவ இயல் | i |
| II. | மூலிகைகளின் அட்டவணை | ix |
| III. | தாதுப் பொருள்களின் அட்டவணை | xxvi |
| IV. | சீவப் பொருள்களின் அட்டவணை | xxxi |
| V. | சரக்கியல் — நீர்ப் பொருள்கள் | xxxiii |
| VI. | சுத்தி முறைகள் | xxxv |
| VII. | நோய்களின் அட்டவணை | xxxvi |
| VIII. | மருந்துகளின் அட்டவணை | xLix |
| IX. | துணை மருந்துகள் | LV |
| X. | பத்தியப் பொருள்கள் — ஆகும் பொருள்கள் | Lvi |
| XI. | பத்தியப் பொருள்கள் — ஆகாப் பொருள்கள் | Lviii |
| XII. | பொது இயல் — மருந்து செய்முறைக் கருவிகள் | LX |
| XIII. | பொது இயல் — அளவைகள் | Lxii |
| XIV. | பொது இயல் — புடஇயல் | Lxiii |
| XV. | பொது இயல் | Lxiv |

## உடல் தத்துவ இயல்


| வ.எண். | உடல் தத்துவங்கள் | செய்யுள் எண். |
|---|---|---|
| | **(அ)** | |
| 1. | அசனி | 45 |
| 2. | அசனியின் பொருந்துமிடம் | 47 |
| 3. | அட்டைபோல் பித்தநாடி சுருங்கில் குணம் | 59 |
| 4. | அட்டைபோன்ற நாடிநடை | 67 |
| 5. | அபானன் | 48 |
| 6. | அரவுவாய்ப்பட்ட எலிபோன்ற நாடிநடை | 67 |
| 7. | அலம்புடை | 45 |
| 8. | அலம்புருடன் பொருந்துமிடம் | 47 |
| 9. | அவமரணம் ஏற்படக் காரணம் | 87 |
| 10. | அறுபது வயதில் உடலின் நிலை | 85 |
| | **(ஆ)** | |
| 11. | ஆக்கினை | 46 |
| 12. | ஆக்கினையின் செய்தொழிலும் பொருந்துமிடமும் | 46 |
| 13. | ஆயுட்காலம் | 84 |
| 14. | ஆறுமவத்தையின் குணம் | 73 |
| 15. | ஆறும் நாள் கருவின் வடிவம் | 81 |
| 16. | ஆறு திங்கள் கருவின் வளர்ச்சி | 82 |
| | **(இ)** | |
| 17. | இடகலை | 45,52 |
| 18. | இடகலை பாயும் இடம் | 52 |
| 19. | இடகலையின் செய்தொழிலும் பொருந்துமிடமும் | 45 |
| 20. | இடகலைதான் வாதம் | 53 |
| 21. | இரண்டாமவத்தையின் குணம் | 73 |
| 22. | இரண்டாம் நாள் கருவின் வடிவம் | 80 |
| 23. | இரண்டு திங்கள் கருவின் அமைப்பு | 82 |
| 24. | இரண்டு வயதில் உடலின் நிலை | 84 |

(உ)

25. உடலில் வாத பித்த கபப் பிரிவு 55
26. உணவின் சாரமும் பிரிவுகளும் 88
27. உதானன் 48
28. உதானன் செய்தொழில் 50

(எ)

29. எட்டாமவத்தையின் குணம் 74
30. எட்டாம் திங்கள் கருவின் வளர்ச்சி 83
31. எட்டாம் நாள் கருவின் அமைப்பு 81
32. எண்பது வயதில் உடலின் நிலை 86
33. எழுபது வயதில் உடலின் நிலை 85

(ஏ)

34. ஏழாமவத்தையின் குணம் 73
35. ஏழாம் நாள் கருவின் வடிவம் 81
36. ஏழு திங்கள் கருவின் வளர்ச்சி 82

(ஐ)

37. ஐந்தாமவத்தையின் குணம் 73
38. ஐந்தாம் நாள் கருவின் வடிவம் 80
39. ஐந்து கடிகையில் மரணம் உண்டாகும் நாடி நடை 60
40. ஐந்து திங்கள் கருவின் வளர்ச்சி 82
41. ஐம்பது வயதில் உடலின் நிலை 84
42. ஐயகோபம் 59
43. ஐயத்தில் வாதம் சேரில் குணம் 71
44. ஐய நாடியின் தனித்த நடை 68
45. ஐய நாடியின் மாத்திரை அளவு 56
46. ஐயபித்த நாடி நடை 67
47. ஐயமிகுதியின் குணம் 69
48. ஐயமுடன் வாதம் சேர்ந்த நாடி நடை 67
49. ஐயம் பித்தத்தைச் சேர்தலின் குணம் 72
50. ஐயம் மீறியதன் குணம் 72
51. ஐயம் மேலேயேறில் குணம் 69

(ஒ)

52. ஒன்பதாமவத்தையின் குணம் 74
53. ஒரு மாதக் கருவின் வடிவம் 81
54. ஒன்பதாம் நாள் கருவின் அமைப்பு 81

(க)

55. கபத்தினிருப்பிடம் 55
56. கரு அமைப்பில் வன்னி, வாயு இவற்றின் செயல் 80
57. கரு அமையும் விதம் 79
58. கரு உற்பத்தி விளக்கம் 79
59. காந்தாரி 45
60. காந்தாரியின் செய்தொழிலும் பொருந்துமிடமும் 47
61. கிருகரன் 48
62. கிருகரன் செயல் 49
63. குகு 45
64. குகுவின் செயல் 49
65. குகுவின் பொருந்துமிடம் 47
66. கூர்மன் 48
67. கூர்மன் செய்தொழில் 51
68. கையில் நாடி பார்க்குமிடம் 58
69. சங்கினி 45
70. சங்கினியின் பொருந்துமிடம் 47
71. சமானன் 48
72. சமானன் செய்தொழில் 50
73. சாகும்போது வாத பித்த கப நாடி நடை 59
74. சாரைப்பாம்புபோல் ஐயநாடி ஏறில் குணம் 59
75. சிகுவை 45
76. சிகுவையின் செய்தொழிலும் பொருந்துமிடமும் 46
77. சிலேட்டும பித்த தொந்திப்பு 66
78. சிலேட்டும பித்த தொந்திப்பு நாடியின் குணம் 66
79. சிலேட்டும தண்ணீர் 54
80. சிலேத்தும நாடி நடையின் இலக்கணம் 56
81. சிலேத்தும வாத தொந்திப்பு 66
82. சுவாசம் 49
83. சுழிமுனை தான்ஐயம் 53
84. சுழிமுனையின் செய்தொழிலும் பொருந்துமிடமும் 46
85. சுழிமுனையோடும் இடம் 53
86. சுழினை 45,52
87. சேற்றுத்தவளை போன்ற நாடிநடை 67
88. தசநாடி 44

89. தசநாடியில் மூன்று நாடிகள் 52
90. தசவாயுவில் மூன்று வாயு, வாத பித்த சிலேட்டுமத்தோடு ஒன்ருகச் சேர்ந்திருத்தல் 53
91. தனஞ்செயன் 48
92. தனஞ்செயன் செய்தொழில் 51
93. தாய்புசிக்கு மன்னசாரம் 83
94. தேவதத்தன் 48
95. தேவதத்தன் செய்தொழில் 51
96. தொண்ணூறு கடிகையில் மரணம் ஏற்படும் நாடி நடை 61
97. தொண்ணூறு வயதில் உடலின் நிலே 86
98. நாகத்தின் பிணைச்சல் போன்ற நாடி நடை 67
99. நாகன் 48
100. நாகன் செய்தொழில் 50
101. நாடி எழுபத்திராயிரம் 44
102. நாடி பத்து 44
103. நாற்பது வயதில் உடலின் நிலே 84
104. நான்காமவத்தையின் குணம் 73
105. நான்காம் நாள் கருவின் வடிவம் 80
106. நான்கு திங்கள் கருவின் வளர்ச்சி 82
107. நான்கு நாழிகையில் மரணம் உண்டாகும் நாடி நடை 61
108. நூருண்டு ஆயுள் குறையக் காரணங்கள் 87
109. பதினைந்து நாள் கருவின் வடிவம் 81
110. பத்தாம் நாள் கருவின் வடிவம் 81
111. பத்துத் திங்கள் கருவின் நிலே 83
112. பத்து வகை அவத்தைகள் 73
113. பத்து வகை வாயுக்கள் 48
114. பிங்கலே 45,48,52
115. பிங்கலேதான் பித்தம் 53
116. பிங்கலே பாயுமிடம் 53
117. பிங்கலேயின் செய்தொழிலும் பொருந்துமிடமும் 45
118. பித்த கோபம் 59
119. பித்த ஐய தொந்திப்பு 58
120. பித்த ஐய நாடி நடை 67
121. பித்த சிலேத்தும தொந்திப்பு 66
122. பித்தத்தில் வாதம் சேரில் குணம் 71
123. பித்தத்தின் இருப்பிடம் 54

124. பித்த நாடி நடையின் இலக்கணம் 55
125. பித்த நாடியின் தனித்த நடை 68
126. பித்த நாடியின் மாத்திரை அளவு 56
127. பித்த மிகுதியின் குணம் 69
128. பித்தம் அதிகரித்தலின் குணம் 70
129. பித்தம் சிலேட்டுமத்திலேறி சினந்திட்டால் குணம் 62
130. பித்தம் நெருப்பாகும் 54
131. பித்தம் வாதத்தேறில் குணம் 72
132. பித்தவாத தொந்திப்பு 65
133. பிராணன் 48
134. பிராணன் இருப்பிடம் 49
135. புருடனது செய்தொழிலும் பொருந்துமிடமும் 46
136. புருடன் 45
137. மயில், அரவு போன்ற நாடி நடை 67
138. மயில் போல் வாதநாடியோடில் குணம் 59
139. மயிற்சாயல் நாடி நடை 68
140. மலசலம் கழித்தல் 49
141. முதலவத்தையின் குணம் 73
142. முதல் நாள் கருவின் உருவம் 80
143. முப்பது வயதில் உடலின் நிலை 84
144. மூலம் 48
145. மூவிரலும் சமனுய் ஓடியதன் குணம் (நாடி) 56
146. மூன்றுமவத்தையின் குணம் 73
147. மூன்றும் நாள் கருவின் வடிவம் 80
148. மூன்று திங்கள் கருவின் வளர்ச்சி 82
149. மூன்று நாடிகளது விவரம் 53
150. மூன்றுநாடிகளின் இயல்பான நிலையில் மாத்திரையளவு 56
151. மூன்று விரல்களிலும் நாடி சரியேயோடில் குணம் 68
152. மெய் குளிர்ந்து தெறிக்கையில் நாடி நடை 62
153. வாத ஐய தொந்திப்பு 57
154. வாத ஐய நாடி நடை 67
155. வாத கோபம் 59
156. வாத சிலேட்டுமம் வலுவாகி பித்தம் மாய்ந்தால் குணம் 60
157. வாதத்தினிருப்பிடம் 54

| | | |
|---|---|---|
| 158. | வாதத்தோடு ஐயம் பாய்ந்து பித்தம் புருவென தணிந்து நின்ருல் குணம் | 61 |
| 159. | வாத நாடி நடையின் இலக்கணம் | 55 |
| 160. | வாத நாடியின் தனித்த நடையின் குணம் | 68 |
| 161. | வாத நாடியின் மாத்திரையளவு | 56 |
| 162. | வாத பித்த தொந்திப்பு | 57 |
| 163. | வாத பித்தம் கீழே நோக்கில் குணம் | 62 |
| 164. | வாத மிகுதியின் குணம் | 68 |
| 165. | வாதமும் ஐயமும் அதிகரித்து மீறி பித்தம் குறைந்தால் குணம் | 70 |
| 166. | வாதமும் ஐயமும் குளிர்ந்தால் குணம் | 70 |
| 167. | வாத ஐய தொந்திப்பு | 65 |
| 168. | வாதம் பித்தத்தேறில் குணம் | 69 |
| 169. | வாதம் பித்தத்தை நோக்கியும், பித்தம் ஐயத்தை நோக்கியும் ஏறில் குணம் | 60 |
| 170. | வாதம் வாயுவாகும் | 54 |
| 171. | வியானன் | 48 |
| 172. | வியானன் செய்தொழில் | 50 |

# மூலிகைகளின் அட்டவணை


| வ. எண் | மூலிகைப் பெயர் | செய்யுள் எண் |
|---|---|---|
| 1. | அகில் | 116, 119, 130, 137, 156, 159, 179, 184 |
| 2. | அகில்கட்டை | 443 |
| 3. | அக்கிராகாரம் | 261 |
| 4. | அசுவகெந்தி | 30, 116, 120, 299, 434 |
| 5. | அதிமதுரம் | 116, 119, 127, 130, 135, 136, 147, 156, 159, 161, 169, 172, 179, 183, 198, 218, 268, 315, 342, 416, 429, 434 |
| 6. | அதிவிடையம் | 148, 159, 200, 435 |
| 7. | அத்தி | 91, 145, 435, 439 |
| 8. | அத்திப்பால் | 308 |
| 9. | அபினிக்காய் | 443 |
| 10. | அபின் | 92, 132, 200, 435 |
| 11. | அப்பைக்கோவை | 441 |
| 12. | அப்பைச்சாறு | 369, 371 |
| 13. | அமிர்தசர்க்கரை | 22 |
| 14. | அமுக்கிரா | 90, 127, 135, 141, 148, 162, 168, 170, 179, 439 |
| 15. | அமுர்தவல்லி | 116, 140, 146, 155 |
| 16. | அரசம்பட்டை | 201, 395 |
| 17. | அரசு | 91, 145, 439 |
| 18. | அரத்தை | 156, 162, 179, 224, 127, 345 |
| 19. | அரிதகி | 256 |

| | | |
|---|---|---|
| 20. | அலரி | 442 |
| 21. | அல்லி | 432 |
| 22. | அல்லிச்சாறு | 428, 433 |
| 23. | அவரைச்சாறு | 433 |
| 24. | அவித்தூற்றிய ஏரண்டத்தெண்ணெய் | 308 |
| 25. | அவுரி | 261, 441 |
| 26. | அவுரிஇலை | 342, 227 |
| 27. | அவுரிச்சாறு | 182, 213 |
| 28. | அவுரிவேர் | 209 |
| 29. | அழிஞ்சில் | 146 |
| 30. | அழிஞ்சில் வித்து | 183 |
| 31. | அழிஞ்சில்வேர் | 351, 440 |
| 32. | அழிஞ்சில்வேர்ப்பட்டை | 184 |
| 33. | அறுகம்வேர் | 116, 428 |
| 34. | அறுகுகஷாயம் | 118 |
| 35. | ஆடுதின்னாமூலி | 29, 439 |
| 36. | ஆமணக்குவேர் | 135 |
| 37. | ஆயிலியம் | 441 |
| 38. | ஆயில்பட்டை | 145, 196, 275, 317, 321 |
| 39. | ஆயில்வேர் | 275 |
| 40. | ஆலம்பட்டை | 127 |
| 41. | ஆலம்பால் | 402 |
| 42. | ஆலம்வித்து | 91 |
| 43. | ஆலம்விழுது | 432 |
| 44. | ஆல் | 145, 439 |
| 45. | ஆவிரைவித்து | 91 |
| 46. | ஆவிரைவேர்ப்பட்டை | 145 |
| 47. | ஆவிரைவேர் | 393 |
| 48. | ஆற்றரசம்பட்டை | 145 |
| 49. | ஆற்றலரியிலைச்சாறு | 182 |
| 50. | ஆனைக்குட்டித் தக்காளிச்சாறு | 20 |
| 51. | ஆனைத்திப்பிலி | 196 |
| 52. | ஆனைநெருஞ்சில்சாறு | 434 |
| 53. | இசங்கு | 287 |
| 54. | இஞ்சி | 227 |
| 55. | இஞ்சிச்சாறு | 165, 239 |
| 56. | இஞ்சிச்சுரசம் | 247 |
| 57. | இண்டுக்கொழுந்து | 346 |

| | | |
|---|---|---|
| 58. | இண்டுவேர் | 441 |
| 59. | இத்தி | 439 |
| 60. | இருவி | 261 |
| 61. | இருவேலி | 127, 137, 159 |
| | | 162, 183 |
| 62. | இலந்தை | 145 |
| 63. | இலவங்கப்பட்டை | 30, 120, 131, 159, 173 |
| | | 179, 184, 198, 215, 224 |
| | | 268, 453 |
| 64. | இலவங்கப்பத்திரி | 30, 119, 130, 170 |
| | | 184, 198, 215 |
| 65. | இலவங்கம் | 136, 162, 169, 435 |
| 66. | இலவம்பட்டை | 156, 175 |
| 67. | இலைக்கள்ளி | 440 |
| 68. | இலைக்கள்ளிச்சாறு | 389 |
| 69. | இலைக்கள்ளிப்பால் | 104, 177, 325, 335 |
| 70. | இலுப்பெண்ணெய் | 388 |
| 71. | இலுப்பைக்கட்டி | 227 |
| 72. | இலுப்பைநெய் | 535, 542 |
| 73. | இலுப்பைப் பூ | 268 |
| 74. | இலுப்பை விரைப்பருப்பு | 188 |
| 75. | ஈருள்ளி | 308, 351 |
| 76. | ஈருள்ளிச்சாறு | 20, 96, 311 |
| | | 315, 415, 417 |
| 77. | உசிலம்வேர் | 440 |
| 78. | உத்தாமணிச்சாறு | 177 |
| 79. | உப்பிலிச்சாறு | 364 |
| 80. | உரோகணி | 423 |
| 81. | உள்ளி | 330, 346, 442 |
| 82. | உன்னும்பால் | 228 |
| 83. | ஊசிமல்லிகைவேர் | 210 |
| 84. | ஊமத்தன்வித்து | 443 |
| 85. | ஊமத்தன்வேர் | 236 |
| 86. | ஊமத்தைச்சாறு | 165, 251 |
| 87. | எட்டிக்கொட்டை | 261 |
| 88. | எட்டிமரப்பால் | 229 |
| 89. | எட்டிவிதை | 259, 295, 349 |
| 90. | எண்ணெய் | 118, 129, 149, 158, 174, 347 |
| 91. | எருக்கங்கரி | 263 |

| | | |
|---|---|---|
| 92. | எருக்கம்பால் | 104, 475, 484 |
| 93. | எருக்கன்வேர் | 441 |
| 94. | எருக்கு | 439 |
| 95. | எலுமிச்சம்பழச்சாறு | 96, 235, 415, 417, 608 |
| 96. | எலுமிச்சை | 126 |
| 97. | எள் | 12, 15, 23, 35, 90 |
| 98. | ஏரண்டநெய் | 11, 117, 314, 332, 350, 415, 417, 420, 423 |
| 99. | ஏலம் | 25, 92, 118, 130, 136, 145, 147, 156, 159, 161, 173, 183, 198, 215, 224, 268, 339, 416, 429, 434, 442 |
| 100. | ஒருதலைப்பூடு | 313 |
| 101. | ஓமம் | 12, 29, 40, 92, 100, 102, 108, 112, 178, 215, 224, 301 |
| 102. | ஓரிதழ்சாறு | 417 |
| 103. | ஓரிதழ்த்தாமரை | 432, 433 |
| 104. | கசகசா | 92 |
| 105. | கச்சோலம் | 119, 159, 162 |
| 106. | கஞ்சவளை | 159 |
| 107. | கஞ்சா | 443 |
| 108. | கஞ்சாச்சாறு | 202 |
| 109. | கஞ்சாவித்து | 90, 435 |
| 110. | கடப்பம்பட்டை | 146 |
| 111. | கடுகு | 148, 184, 275, 301 |
| 112. | கடுகுரோகணி | 119, 131, 147, 156, 173, 234, 255, 268, 323, 340 |
| 113. | கடுக்காய் | 13, 29, 100, 209, 259, 275, 420 |
| 114. | கண்டங்கத்திரிவேர் | 221 |
| 115. | கண்டங்காரிச்சாறு | 344 |
| 116. | கண்டங்காரிவேர் | 210 |
| 117. | கண்டந்திப்பிலி | 179, 224 |
| 118. | கண்டில்வெண்ணெய் | 147, 159 |
| 119. | கத்தூரிமஞ்சள் | 318, 442 |
| 120. | கரந்தை | 30 |

| | | |
|---|---|---|
| 121. | கரப்பன் பட்டை | 442 |
| 122. | கரிசாலை | 129 |
| 123. | கரிசாலைச்சாறு | 108, 109, 113, 214, 223 |
| 124. | கரிமுள்ளிவேர் | 210 |
| 125. | கருக்குவா | 441 |
| 126. | கருங்காக்கணவேர் | 126 |
| 127. | கருங்குறுவைச் சம்பா அரிசி | 277 |
| 128. | கருங்குறுவைப் பச்சையரிசி | 280 |
| 129. | கருங்கொள்ளு | 196 |
| 130. | கருஞ்சீரகம் | 13, 25, 31, 40, 163, 198, 215, 224, 275, 301, 308, 327, 331, 346, 349, 421, 423 |
| 131. | கருடன்கிழங்கு | 351, 440 |
| 132. | கருநாபி | 230, 234, 261, 615 |
| 133. | கருநாவல்பட்டைச்சாறு | 107 |
| 134. | கருப்பஞ்சாறு | 253, 269 |
| 135. | கருவாப்பட்டை | 25, 92 |
| 136. | கருவேலம் | 384 |
| 137. | கருவேல் | 439 |
| 138. | கருவேல்வித்து | 91 |
| 139. | கல்நார் | 25 |
| 140. | கல்லுருவிச்சாறு | 213 |
| 141. | கவிழ்தும்பை | 443 |
| 142. | கழல்பருப்பு | 176 |
| 143. | கழற்சிக்காய் | 282 |
| 144. | கழற்சிக்கொழுந்து | 277 |
| 145. | கழற்சிவேர் | 440 |
| 146. | களிப்பாக்கு | 384 |
| 147. | கள்ளிப்பால் | 104, 112, 549 |
| 148. | கள்ளிவேர் | 574 |
| 149. | கறிமஞ்சள் | 170 |
| 150. | கறுங்குறுவை | 274 |
| 151. | கறும்பிசின் | 120 |
| 152. | கற்பூரவல்லிச்சாறு | 311 |
| 153. | கற்பூரவெற்றிலைச்சாறு | 403 |
| 154. | கற்றாழஞ்சோறு | 238, 427 |
| 155. | கற்றாழம்பால் | 616 |
| 156. | கற்றாழை | 129, 441 |

| | | |
|---|---|---|
| 157. | கற்றாழைச்சாறு | 244 |
| 158. | கன்னிச்சாறு | 155 |
| 159. | கஸ்தூரி மஞ்சள் | 148, 170, 173, 420 |
| 160. | காக்கட்டான் | 440 |
| 161. | காசாம்புச்சாறு | 610, 616 |
| 162. | காசுக்கட்டி | 384 |
| 163. | காஞ்சுரிவேர் | 318 |
| 164. | காட்டாத்திப்பூ | 200, 435 |
| 165. | காட்டுக்கருணைக்கிழங்கு | 318 |
| 166. | காட்டுமல்லி | 30, 441 |
| 167. | காட்டுமல்லிகைவேர் | 222 |
| 168. | காயம் | 162, 301 |
| 169. | காரெள்ளிநெய் | 498 |
| 170. | கார்போகம் | 25, 148, 327, 442 |
| 171. | கிராம்பு | 12, 92, 119, 130, 148 170, 224, 434, 443 |
| 172. | கிருமாணி ஓமம் | 40 |
| 173. | கீழ்க்காய் நெல்லி | 339, 344 |
| 174. | கீழ்க்காய் நெல்லிவேர் | 209 |
| 175. | குக்கில் | 21, 130, 137, 169 |
| 176. | குங்குமப்பூ | 12, 121, 163, 183, 198 416, 418, 424, 430, 436 |
| 177. | குடசப்பாலைவேர்த்தோல் | 200 |
| 178. | குந்திருக்கம் | 137 |
| 179. | குப்பை | 40 |
| 180. | குப்பைமேனி | 439 |
| 181. | குப்பைமேனிக்கொழுந்து | 346 |
| 182. | குப்பைமேனிச்சாறு | 213 |
| 183. | குமரிச்சாறு | 107 |
| 184. | குமரிப்பால் | 395 |
| 185. | குமிழம்வேர் | 210 |
| 186. | குருவேர் | 212 |
| 187. | குரோசாணி | 8, 12, 40, 135, 224 |
| 188. | குலக்கனி | 224 |
| 189. | குறண்டி | 90 |
| 190. | குறிஞ்சன் | 148 |
| 191. | குறுந்தொட்டி | 116, 135, 145, 148, 160 163, 168 |
| 192. | குன்றிவேர் | 342, 429, 434 |

193. கூகைநீறு 162, 218
194. கூவிளம் 116
195. கெருடன்கிழங்கு 423
196. கையாந்தகரை 439
197. கையாந்தகரைச்சாறு 165
198. கொடிக்கள்ளி 439
199. கொடிக்கள்ளிச்சாறு 389
200. கொடிவேலி 102, 176, 275, 380
201. கொடிவேலிச்சாறு 363
202. கொடிவேலிவேர்ப்
பட்டை 23, 206, 259, 295, 317
203. கொடுப்பைச்சாறு 363
204. கொத்தமல்லி 24, 99, 118, 130, 178
224, 263, 435
205. கொல்லன்கோவை 30
206. கொளுஞ்சி 441
207. கொற்றான் 432, 433
208. கொன்றை 439
209. கொன்றைப்பட்டை 145
210. கொள்ளு 176
211. கோடகசாலைக்கொழுந்து 346
212. கோட்டம் 24, 30, 92, 100, 103, 119
116, 121, 130, 136, 148
156, 159, 162, 166, 169
173, 183, 196, 198, 224
268, 342
213. கோரக்கர் மூலி 93
214. சகாதேவி 116
215. சங்கங்குப்பி 24, 29, 126, 321, 357, 441
216. சங்கன்பழச்சாறு 182
217. சங்கன்வேர் 29, 210, 337, 350
218. சங்கு 439
219. சங்குச்சாறு 213
220. சங்குவேர் 221
221. சடாமாஞ்சில் 24, 119, 130, 137, 156
159, 162, 179, 268
222. சதகுப்பை 119, 131, 178
223. சதாவேரிக்கிழங்கு 8,432
224. சதுரக்கள்ளி 439

225. சதுரக்கள்ளிச்சாறு 213
226. சதுரக்கள்ளிப்பால் 177, 195, 259
227. சந்தனம் 116, 118, 127, 137, 156, 159, 162, 170, 173, 184, 268, 443
228. சம்பழச்சாறு (எலுமிச்சை) 337
229. சர்க்கரை 32, 218 223
230. சவுரிக்கொத்து 127
231. சாதிக்காய் 12, 30, 92, 119, 130, 159, 162, 178, 183, 200, 268, 434, 443
232. சாதிப்பத்திரி 13, 29, 92, 162, 224, 434, 443
233. சாத்திரபேதி 119, 435
234. சாம்பிராணி 137, 149
235. சாரணைச்சாறு 213, 325
236. சாரணைவேர் 168, 169, 209, 321, 325, 344, 441
237. சாரப்பருப்பு 92
238. சித்திரப்பாலாடை 432
239. சித்திரமூலம் 12, 31, 100, 166, 178, 196, 209, 221, 224
240. சிவகரந்தை 440
241. சிவதை 175, 209, 255, 259, 317, 321, 340
242. சிவந்தகெந்தம் (சிவப்புச்சந்தனம்) 119
243. சிவப்புச்சந்தனம் 137, 184
244. சிவப்பு நாயுருவி 316
245. சிவனார்வேம்பு 24, 278, 287, 440
246. சிறுகிகாஞ்சொரி 117, 201, 344
247. சிறுகிளாவேர் 29
248. சிறுகீரை 91, 126
249. சிறுகீரைச்சாறு 20, 433
250. சிறுகீரைவேர் 170
251. சிறுசெருப்படிச்சாறு 311
252. சிறுசெருப்படிவேர் 31
253. சிறுதேக்கு 13, 117, 147, 222, 345
254. சிறுநாகப்பூ 24, 92, 131, 206, 224, 435

255. சிறுபயறு 9
256. சிறுபுடலங்காய் 432
257. சிறுபூனைக்காலிக்கொழுந்து 346
258. சிறுமுத்தெண்ணெய் 428
259. சிற்றரத்தை 12, 25, 30, 119, 137, 147, 156, 163, 170, 179
260. சிற்றாமணக்கு முத்து 188
261. சிற்றாமணக்குவேர் 175
262. சிற்றாமணக்கெண்ணெய் 191, 195
263. சிற்றாமல்லி 210
264. சிற்றாமுட்டி 116
265. சிற்றாமுட்டிவேர் 128, 170, 175, 221
266. சிற்றெருடுவைஇலை 542, 557
267. சிற்றெருடுவைச்சாறு 542, 545, 557
268. சின்னி 440
269. சீதாசெங்கழுநீர் 155, 433
270. சீதாசெங்கழுநீர்ச்சாறு 172, 341
271. சீந்தில் 158, 160, 168, 169
272. சீந்தில்சாறு 158
273. சீந்தில்தண்டு 127, 129, 135, 221
274. சீந்தில்பூ 271
275. சீரகம் 13, 24, 30, 99, 102, 116, 147, 163, 215, 224, 239, 245, 340, 416, 418, 435, 442
276. சீனப்பட்டை 12
277. சீனம் 306
278. சுக்கு 12, 30, 92, 99, 102, 169, 200, 206, 268, 275, 301, 327, 334, 340, 346, 435, 442
279. செங்கழுநீர் 159
280. செங்கழுநீர்க்கிழங்கு 173, 342
281. செங்கழுநீர்ச்சாறு 433
282. செங்கீரைச்சாறு 396, 398
283. செங்குமரிப்பால் 377
284. செஞ்சந்தனம் 435
285. செஞ்சூரப்பட்டை 440
286. செண்பகப்பூ 29, 119, 131, 147, 159, 162, 173, 339
287. செந்நாயுருவி 443

| | | |
|---|---|---|
| 288. | செந்நாயுருவிச்சாறு | 548 |
| 289. | செப்புநெருஞ்சில்சாறு | 311 |
| 290. | செம்பரத்தம்பூ | 607 |
| 291. | செம்பரத்தம்பூச்சாறு | 608 |
| 292. | செம்பிருஇலைச்சாறு | 182 |
| 293. | செம்முள்ளி | 176 |
| 294. | செவ்வல்லி | 120, 147 |
| 295. | செவ்வியம் | 99, 130, 178, 206, 224 |
| 296. | சேங்கொட்டை | 7, 8, 12, 22, 29, 35, 37<br>40,90,94,296,317,350,444 |
| 297. | சோம்பு | 92 |
| 298. | தகரம் | 137, 197, 215 |
| 299. | தகரை | 119 |
| 300. | தக்கோலம் | 24, 119, 131, 148, 157<br>159, 435 |
| 301. | தண்ணீர்விட்டான்கிழங்கு | 24,39,129,173,176 |
| 302. | தலைச்சுருளி | 30 |
| 303. | தவசிமுருங்கைவேர் | 30 |
| 304. | தாமரைக்கிழங்கு | 262 |
| 305. | தாமரை வளையம் | 127, 156, 163, 173 |
| 306. | தாழைவிழுது | 135 |
| 307. | தாழைவிழுதுச்சாறு | 428 |
| 308. | தாளிசபத்திரி | 120, 206, 224, 345 |
| 309. | தாளிசை | 24 |
| 310. | தான்றிக்காய் | 13, 30, 127, 207 |
| 311. | தான்றிப்பட்டை | 317 |
| 312. | திப்பிலி | 31, 92, 99, 102, 131, 170<br>206, 219, 268, 275, 301<br>327, 334, 340, 346, 435, 443 |
| 313. | திரிகடுகு | 24, 112, 147, 166, 178<br>196, 215, 224, 230, 234<br>247, 253, 256, 259, 306<br>317, 330 |
| 314. | திரிபலை | 25, 134, 156, 161, 184<br>196, 215, 234, 253, 317, 319, 443 |
| 315. | திரிவல்லாதி | 443 |
| 316. | திருகுகள்ளி | 439 |
| 317. | திருகுகள்ளிச்சாம்பல் | 606 |
| 318. | திருகுகள்ளிப்பால் | 322, 331, 375, 602, 605 |

| | | |
|---|---|---|
| 319. | திருகுகள்ளியுப்பு | 602 |
| 320. | திருநீற்றுப்பச்சை | 137 |
| 321. | திருநீற்றுப்பச்சைவித்து | 91 |
| 322. | துத்திவித்து | 91 |
| 323. | தும்பிவேர் | 222 |
| 324. | துவரைப்பருப்பு | 9 |
| 325. | துளசிச்சாறு | 165, 182 |
| 326. | துளசிவிரை | 91 |
| 327. | தூணியாங்கம் | 137 |
| 328. | தூதுளை | 209, 440 |
| 329. | தூதுளைவேர் | 344 |
| 330. | தெசாபுரம் | 12, 131, 196, 206, 215 |
| 331. | தென்னங்காய் | 108 |
| 332. | தேங்காயோட்டுக்கரி | 248 |
| 333. | தேங்காய் | 103, 143 |
| 334. | தேங்காய்ப்பால் | 177, 249, 415 |
| 335. | தேசிநீர் | 564 |
| 336. | தேவதாரம் | 116, 119, 127, 130, 135 138, 147, 156, 162, 170 176, 196, 215, 268, 443 |
| 337. | தேள்கொடுக்கு | 440 |
| 338. | தேற்றான்வித்து | 91 |
| 339. | தேற்றான்வேர் | 440 |
| 340. | தைவேளைச்சாறு | 165 |
| 341. | தோடைவேர் | 441 |
| 342. | நத்தைச்சூரி | 90, 439 |
| 343. | நந்தியவட்டைவேர் | 126 |
| 344. | நரிமிரட்டிச்சாறு | 311 |
| 345. | நரிமிரட்டிவேர் | 574 |
| 346. | நல்லெண்ணெய் | 136, 140, 146, 156, 161 166, 169, 172, 183, 214, 271 |
| 347. | நன்னாரி | 24, 116, 120, 126, 148, 158 159, 170, 173, 179, 222, 432 439 |
| 348. | நன்னாரிவேர் | 268 |
| 349. | நாகணம் | 130, 137 |
| 350. | நாகப்பூ | 119, 136, 148, 159 |
| 351. | நாகவல்லிச்சாறு | 256, 264 |
| 352. | நாபி | 349, 442 |

| | | |
|---|---|---|
| 353. | நாயுருவி | 90 |
| 354. | நாயுருவிவேர் | 210 |
| 355. | நாய்க்கடுகு | 40, 166 |
| 356. | நாய்ப்பாகல்சாறு | 555 |
| 357. | நாய்வேளை | 440 |
| 358. | நாரத்தம்பழச்சாறு | 213 |
| 359. | நாரத்தையிலைச்சாறு | 182 |
| 360. | நாவல்பட்டை | 145 |
| 361. | நாவி | 233, 238, 239, 244, 246, 251, 435 |
| 362. | நிம்பஎண்ணெய் | 350 |
| 363. | நிர்விடம் | 442 |
| 364. | நிலப்பனை | 8, 24, 39 |
| 365. | நிலப்பனையின் கிழங்குச்சாறு | 165 |
| 366. | நிலவாகை | 30, 441 |
| 367. | நீரடிமுத்து | 442 |
| 368. | நீர்ப்பிரமிச்சாறு | 213 |
| 369. | நீர்ப்பூலா | 439 |
| 370. | நீர்முள்ளிவித்து | 91 |
| 371. | நெய்தல் | 127, 162 |
| 372. | நெருஞ்சிமுள் | 24 |
| 373. | நெருஞ்சில் | 432 |
| 374. | நெருஞ்சில்சாறு | 415 |
| 375. | நெருஞ்சில்வேர் | 176, 210, 344 |
| 376. | நெல்லிமுள்ளி | 30, 131, 218 |
| 377. | நேர்வாளம் | 255 |
| 378. | நொச்சி | 126, 129, 443 |
| 379. | நொச்சிக்கொழுந்து | 277 |
| 380. | நொச்சிச்சாறு | 165, 213 |
| 381. | நொச்சிவேர் | 321 |
| 382. | பச்சரிசித்தவிடு | 263 |
| 383. | பச்சிலை | 119, 131, 148, 156, 159, 183, 269 |
| 384. | பச்சைநாவி | 253, 256, 259 |
| 385. | பச்சைமஞ்சள்சாறு | 165 |
| 386. | பழச்சாறு | 21, 107, 271 |
| 387. | பழம்புளி | 37, 376 |
| 388. | பறங்கிப்பட்டை | 23, 29, 39, 295, 301 |
| 389. | பனங்கதிர் | 212 |

| | | |
|---|---|---|
| 390. | பனம்பால் | 564, 602 |
| 391. | பனைவெல்லம் | 15, 25, 40, 205, 214, 249, 274 |
| 392. | பனைவேர் | 432 |
| 393. | பாகலிலைச்சாறு | 233, 266 |
| 394. | பாக்கு | 90 |
| 395. | பாதிரிவேர் | 209 |
| 396. | பாலைவேர் | 179 |
| 397. | பால்காயம் | 327 |
| 398. | பிரண்டைக்கிழங்கு | 318 |
| 399. | பிராயன்பட்டை | 30 |
| 400. | பீநாறிப்பட்டை | 442 |
| 401. | புங்க எண்ணெய் | 350 |
| 402. | புங்கங்குச்சி | 189 |
| 403 | புங்கமுத்து | 188 |
| 404 | புங்கம்வேர் | 196, 275 |
| 405 | புங்கம்வேர்ப்பட்டை | 318 |
| 406 | புங்கம்வேர்ப்பால் | 189 |
| 407 | புங்கு | 439 |
| 408 | புண்ணாக்குப்பூடு | 432 |
| 409 | புரசம்பூக்கியாழம் | 14 |
| 410. | புரசம்பூச்சாறு | 395 |
| 411. | புரசு | 212, 441 |
| 412. | புளி | 369 |
| 413. | புளியமரப்பட்டை | 188 |
| 414. | புளியம்விரைத்தோடு | 212 |
| 415. | புளியரணைக்கிழங்கு | 318 |
| 416. | புளியிலைச்சாறு | 182, 209 |
| 417. | புன்னை | 441 |
| 418. | புன்னைப்பூ | 136 |
| 419. | பூசனிக்காய்ச்சாறு | 417 |
| 420. | பூரவல்லிக்கொடி | 444 |
| 421. | பூலாங்கிழங்கு | 130, 156 |
| 422. | பூலாவேர் | 119, 432, 439 |
| 423. | பூலாவேர்ப்பட்டை | 427 |
| 424. | பூவந்திக்காய் | 442 |
| 425. | பூவந்திப்பட்டை | 420 |
| 426. | பூனைக்காலிவிரை | 91 |
| 427. | பூவரசு | 441 |
| 428. | பெருங்காயம் | 99, 178, 196, 314, 323, 334, 337 |

| | | |
|---|---|---|
| 429. | பெருங்கிழங்கு | 39 |
| 430. | பெருங்குரும்பைச்சாறு | 165 |
| 431. | பெருந்தும்பை | 443 |
| 432. | பெருமரத்துப்பட்டை | 200 |
| 433. | பெருமருந்துப்பட்டை | 30 |
| 434. | பெருவாகைவேர் | 210 |
| 435. | பேய்க்குமட்டிக்காய் | 332, 333 |
| 436. | பேய்க்கொம்மட்டிச்சாறு | 177 |
| 437. | பேய்ச்சுரைவிதை | 255 |
| 438. | பேய்த்தும்பை | 212, 443 |
| 439. | பேய்ப்பீர்க்கு | 127 |
| 440. | பேரரத்தை | 147 |
| 441. | பேராமல்லிவேர் | 210 |
| 442. | பேராமுட்டி | 116, 127 |
| 443. | பேரீச்சங்காய் | 11, 15, 24 |
| 444. | பேரீந்து | 93, 219, 268 |
| 445. | பொடுதலை (பொடிதிலை) | 439 |
| 446. | பொடுதலைக்கொழுந்து | 346 |
| 447. | பொடுதலைச்சாறு | 142 |
| 448. | பொற்றலைக்கையாந்தகரை | 440 |
| 449. | பொற்றலைச்சாறு | 396, 616 |
| 450. | பொன்முசுட்டை | 222, 441 |
| 451. | பொன்னுங்காணி | 126, 129 |
| 452. | பொன்னுவாரை | 91 |
| 453. | பொன்னூ மத்தைவித்து | 251, 255 |
| 454. | மகரப்பூ | 118, 147, 435 |
| 455. | மகாமேதை | 102 |
| 456. | மகிழிலைச்சாறு | 182 |
| 457. | மகிழ் | 441 |
| 458. | மஞ்சணத்தி இலை | 273 |
| 459. | மஞ்சள் | 12, 118, 147, 162, 209 212, 340 |
| 460. | மஞ்சனம் | 148 |
| 461. | மஞ்சிட்டி | 118, 130, 138, 156, 169 173, 184 |
| 462. | மதனப்பூ | 92 |
| 463. | மதிமுகம் | 138 |
| 464. | மந்தாரை | 442 |
| 465. | மரமஞ்சள் | 12, 130, 147, 162, 170 |
| 466. | மருக்கொழுந்து | 137 |

467. மருதம்பட்டை 145, 384
468. மருதோன்றி 351
469. மருள்கிழங்கு 318
470. மலாக்காய் 434
471. மல்லி 12, 102
472. மல்லி இலை 540
473. மல்லிகைப்பூச்சாறு 363
474. மாசிக்காய் 435
475. மாதுளம் பழச்சாறு 107
476. மாதுளம்பூச்சாறு 198
477. மாதுளை 432
478. மாவிலங்கு 321
479. மிலாக்காய் 162, 416
480. மிளகரணை 30
481. மிளகு 12, 30, 92, 99, 102, 108
120, 135, 170, 184, 200 206
242, 251, 256, 301, 327
423, 434, 442, 453
482. மின்னி 281
483. முக்காவேளை 321
484. முசுட்டை 126, 129, 317
485. முசுமுசுக்கை 281
486. முடக்கொற்றன் 126, 129, 134
487. முடக்கொற்றன் கொழுந்து 314
488. முடக்கொற்றன் சமூலம் 175
489. முடக்கொற்றன் வித்து 235
490. முடக்கொற்றன்வேர் 440
491. முதியார்கூந்தல் 176, 221
492. முத்தக்காசு 116, 126, 148, 156, 158, 162
169, 173, 201, 209, 268, 432
493. முத்தெருக்கஞ்செவி 441
494. முந்திரி 268
495. முந்திரிப்பழம் 93, 218
496. மும்மஞ்சள் 137, 183
497. முருக்கம்பூச்சாறு 358, 616
498. முருக்கிலைச்சாறு 361
499. முருக்கிலைத்தூள் 37
500. முருக்குச்சாறு 165
501. முருக்குவேர் 441
502. முருங்கைக்கொழுந்து 277

503. முருங்கைச்சாறு 363
504. முருங்கைப்பிசின் 39
505. முருங்கைவித்து 91
506. முருங்கைவேர் 321
507. முருங்கைவேர்த்தோல் 175, 196, 227
508. முள்ளிக்கீரைத்தண்டு 212
509. முள்ளிலவம் பிசின் 200
510. முள்ளிவேர் 175, 209, 221
511. முன்னைவேர் 209, 317, 441
512. மூதண்டம் 364
513. மூதண்டப்புளி 474
514. மூலவேர் 396
515. மேதி 135
516. மேனிச்சாறு 368
517. ரூபிமஸ்து 39
518. வசம்பு 147, 169, 178, 196, 227, 442
519. வசம்புசுட்டகரி 102
520. வசுவாசி 148, 159, 434
521. வட்டத்திருப்பிவேர் 210
522. வரிக்கடுக்காய் 102, 339, 313
523. வரிக்கும்மட்டி 330
524. வலம்புரிக்காய் 442
525. வல்லாரைச்சாறு 341, 433
526. வறட்பூலாக்கொழுந்து 346
527. வனமூலி 31
528. வன்னி 420, 441
529. வாதங்கொல்லி 129
530. வாதமடக்கிவேர் 126
531. வாய்விளங்கம் 99, 102, 112, 215, 275
532. வாலுழுவை 24, 92, 148, 179
533. வால்மிளகு 24, 92, 130
534. வாழைக்கிழங்குச்சாறு 165
535. வாளம் 318, 334, 442
536. விடத்தலைக்கொழுந்து 346
537. விடத்தலைவேர் 440
538. விட்டுணுகரந்தை 440
539. விலாமிச்சம்வேர் 119, 127, 130, 145, 158, 162, 170, 173, 183, 222, 268, 432
540. விலாமிச்சு 116, 137

541. விலாமிச்சை 156
542. வில்வ இலை 540
543. வில்வக்காய் 209, 229
544. வில்வம் 160, 433
545. வில்வ வேர் 134, 170, 200, 205, 209, 221
546. விளக்கெண்ணெய் 311
547. வீழி 176
548. வெட்டிவேர் 24, 117, 119, 130, 145, 156, 173, 318
549. வெட்பாலையரிசி 148, 323, 345
550. வெந்தயம் 201, 416, 417
551. வெந்தோன்றி 442
552. வெருகனிலை 168
553. வெருகன் கிழங்கு 168
554. வெருகுதண்டு 168
555. வெருகுமூலம் 116, 141
556. வெல்லம் 35, 100, 105
557. வெள்வெங்காயச்சாறு 165
558. வெள்ளறுகு 24, 287, 439
559. வெள்ளிலோத்திரம் 120
560. வெள்ளுள்ளி 12, 15, 103, 112, 195, 227, 312, 323, 327, 334
561. வெள்ளைக்காவளைவேர் 256
562. வெள்ளைக்குன்றி 440
563. வெள்ளைச்சாரணைவேர் 176, 222
564. வெற்றிலை 278, 281, 384
565. வெற்றிலைக்காம்பு 41
566. வெற்றிலைச்சாறு 280, 281
567. வெங்கைக்காதல் 134
568. வேங்கைப்பட்டை 160
569. வேப்பங்குச்சி 189
570. வேப்பந்தோல் 145
571. வேப்பம்பட்டை 210, 298
572. வேப்பமுத்துப்பட்டை 21
573. வேம்பு 439
574. வேலிப்பருத்திக்கொழுந்து 346
575. வேலிப்பருத்திச்சாறு 363
576. வேல் 439
577. வேளைவேர் 247, 440

# தாதுப் பொருள்களின் அட்டவணை


| வரிசை எண். | தாதுப்பொருள்களின் பெயர் | செய்யுள் எண் |
|---|---|---|
| 1. | அஞ்சனக்கல் | 130, 137, 613 |
| 2. | அடிவழலையுப்பு | 590 |
| 3. | அட்டுப்பு | 103 |
| 4. | அண்டச்சுண்ணம் | 480 |
| 5. | அண்டம் | 408 |
| 6. | அப்பிரகச்சத்து | 612 |
| 7. | அப்பிரகம் | 137 |
| 8. | அமுரிச்சாரம் | 519 |
| 9. | அமுரியுப்பு | 549 |
| 10. | அயச்சத்து | 612 |
| 11. | அயச்செம்பு | 547 |
| 12. | அயநாகம் | 393, 610 |
| 13. | அயம் | 401, 487 |
| 14. | அரப்பொடி | 107, 111, 223, 545 |
| 15. | அரன்விந்து | 248 |
| 16. | அரிதாரம் | 233, 237, 244, 253, 295, 349 394, 531, 615 |
| 17. | அரிதேவி | 242 |
| 18. | ஆதிஉப்பு | 586 |
| 19. | இணங்கன் | 407, 478 |
| 20. | இந்துப்பு | 103, 166, 169, 178, 196, 215 224, 259, 318, 323, 328, 331 334, 583 |
| 21. | இரசகற்பூரம் | 103, 228, 355, 424, 516 |
| 22. | இரசகுரு | 614 |
| 23. | இரசம் | 40, 251, 253, 261, 277, 295 |
| 24. | இரவி | 391 |
| 25. | இரவியுப்பு | 483 |
| 26. | இரும்பு | 211 |
| 27. | இரும்புகிட்டம் | 111, 223 |
| 28. | இலிங்கம் | 228, 253, 349, 357, 394, 484 544, 547 |
| 29. | உமைவிந்து | 251 |

| | | |
|---|---|---|
| 30. | உருக்குத்தொட்டிப்பாடாணம் | 615 |
| 31. | உலோகபற்பம் | 255 |
| 32. | கடல்நுரை | 478 |
| 33. | கடல்வித்து | 248 |
| 34. | கடுங்காரம் | 473 |
| 35. | கடற்பாறையுப்பு | 583 |
| 36. | கண்டர் | 488 |
| 37. | கம்பியுப்பு | 361, 403, 404, 495, 507, 587 589 |
| 38. | கருநாகம் | 382 |
| 39. | கல்நார் | 613 |
| 40. | கல்மதம் | 25 |
| 41. | கல்லுப்பு | 103, 197, 325, 334, 478, 506, 576 |
| 42. | களிச்சுண்ணம் (குரு) | 596 |
| 43. | கறியுப்பு | 37, 380, 510, 583 |
| 44. | கற்சுண்ணஉப்பு | 590 |
| 45. | கற்சுண்ணநீறு | 579 |
| 46. | கற்சுண்ணம் | 242, 244, 368, 498, 576, 602 |
| 47. | கற்பூரபற்பம் | 255 |
| 48. | கற்பூரம் | 137 |
| 49. | காந்தசத்து | 393, 612 |
| 50. | காந்தம் | 38, 104, 111, 330, 334 |
| 51. | காய்ச்சலுப்பு | 473 |
| 52. | காரம் | 406, 408, 474, 480, 487, 526 532, 549, 570, 614 |
| 53. | காரீயம் | 401 |
| 54. | கிட்டம் | 211 |
| 55. | குடோரி | 393, 614 |
| 56. | குதிரைப்பல்பாடாணம் | 615 |
| 57. | குப்பிவைப்பு இலிங்கம் | 361, 607 |
| 58. | குரு | 391 |
| 59. | குருவண்டு | 482, 600 |
| 60. | குருவண்டு உரம் | 520, 528 |
| 61. | கெந்தகம் | 19, 29, 347, 349, 400, 487, 536 538, 555, 557 |
| 62. | கெந்தி | 19, 23, 228, 233, 253, 259, 261 295, 393, 396, 534, 610, 616 |
| 63. | கெந்தியுப்பு | 103, 197 |
| 64. | கெவுரி | 442, 615 |
| 65. | கொடிமா (குரு) | 596 |

| | | |
|---|---|---|
| 66. | கோரோசனை | 121 |
| 67. | கௌரி | 349, 394 |
| 68. | சங்கு | 476, 613 |
| 69. | சமாதிஉப்பு | 583 |
| 70. | சவுக்கார எண்ணெய் | 525 |
| 71. | சவுக்காரச்சுண்ணம் | 480 |
| 72. | சவுக்காரம் | 132, 323, 331, 357, 361, 510, 518 |
| 73. | சாதிலிங்கம் | 200, 234, 236, 259, 334, 355, 560, 615 |
| 74. | சாரஉப்பு | 520 |
| 75. | சாரம் | 388, 395, 405, 408, 410, 449, 475, 480, 532, 570, 577 |
| 76. | சிங்கிப்பாடாணம் | 615 |
| 77. | சிப்பி | 476 |
| 78. | சிலை | 228, 394, 615 |
| 79. | சிவன்விந்து | 255 |
| 80. | சீனக்காரம் | 330 |
| 81. | சீனம் | 323, 361, 474, 478, 480, 483, 512, 517, 518, 520, 528 |
| 82. | சீனிக்கற்கண்டு | 94 |
| 83. | சுண்ணக்கல் | 237 |
| 84. | சுண்ணநீறு | 477 |
| 85. | சுண்ணும்பு | 509, 571 |
| 86. | சுண்ணும்புக்கல் | 13 |
| 87. | சூடன் | 474, 478, 480, 591 |
| 88. | சூதம் | 8, 259, 281, 349, 380, 398, 410, 442, 515, 528, 534, 600, 605, 615 |
| 89. | செம்பு | 516, 544, 612 |
| 90. | செயசாரஉப்பு | 483 |
| 91. | சொர்ணம் | 391 |
| 92. | தங்கக்கிண்ணம் | 525 |
| 93. | தங்கம் | 393, 515, 534, 561, 610, 612 |
| 94. | தங்கரேக்கு | 486, 526, 609 |
| 95. | தாம்பிரம் | 490, 551 |
| 96. | தாளகம் | 228, 368, 375, 491 |
| 97. | திரா | 612 |
| 98. | துத்தம் | 233, 349, 449 |
| 99. | துரிசு | 233, 407, 472, 518, 602 |
| 100. | துரிசுபற்பம் | 473 |

101. துருசு 237, 244, 246, 349, 474, 481, 514, 531, 559, 573, 600
102. துருசுக்குரு 527
103. துருசுச்சுண்ணம் 483, 520, 607
104. தேவிவிந்து 255
105. நஞ்சு (குரு) 596
106. நவச்சாரம் 536
107. நவரத்தினங்கள் 532
108. நவரத்தினசத்து 615
109. நவலோகம் 532
110. நவாச்சாரம் 469, 474
111. நற்சிப்பி 613
112. நாகம் 388, 389, 391, 393, 490, 515, 534, 535, 542, 544, 547, 561, 610, 612
113. நாதம் 520, 526, 601
114. நாயகிதன்பீசம் 515
115. நாயுருவிச்சார உப்பு 549
116. நிமிளை 532, 615
117. நீலகண்டன் 529
118. பச்சைக்கற்பூரம் 121, 132, 149, 342, 576
119, பவளப்புற்று 137
120. பாடாணம் 599, 605
121. பாறையுப்பு 103, 318
122. பித்தளை 612
123. புகையூறலுப்பு 583, 585
124. புழுகு 473, 491, 518
125. பூச்சாரம் 469
126. பூநாகம் 474
127. பூநீறு 406, 480, 493, 562, 569, 571, 576, 579, 583, 592, 594, 601, 606
128. பூநீறுசுண்ணம் 519
129. பூரநீறு 378
130. பூரம் 8, 377, 405, 442, 473, 480, 483, 516, 528, 570, 600
131. பெண்நாதம் (கெந்தகம்) 514
132. பேதியுப்பு 103
133. பொட்டிலுப்பு 179, 196
134. மங்கையர்நாதம் (கெந்தகம்) 528

135. மண் 19
136. மதி 391, 526, 556
137. மயிலாஞ்சி 20
138. மஞேசிலே 488
139. மால்தேவி 256, 265, 347, 377, 485
140. மிருதார்சிங்கி 531
141. முதல்தீட்சைப்பூநீறு 495, 506
142. முத்துசிப்பி 137
143. முப்பாழ் (குரு) 596
144. மூத்தானுப்பு 596
145. வங்கம் 379, 485
146. வழலே 512, 517, 520, 569, 590, 600, 614, 617
147. வழலேச்சுண்ணம் 603
148. வளையலுப்பு 103, 196, 334
149. வறுத்தஉப்பு 10
150. வாலேரசம் 560
151. வாளம் 253
152. விந்து 394, 520, 526, 528, 601
153. வீரபற்பம் 449
154. வீரம் 228, 355, 377, 394, 405, 410, 442, 473, 480, 483, 488, 491, 518, 520, 525, 528, 531, 533, 560, 561, 570, 573, 576, 589, 591, 600, 605, 609, 615
155. வெங்கலம் 612
156. வெங்காரம் 37,200
157. வெடியுப்பு 103, 331, 334, 357, 566
158. வெண்காரம் 253, 259, 323, 330, 545, 546, 548, 608
159. வெள்வங்கம் 382, 527, 604
160. வெள்ளி 516, 544, 605, 612
161. வெள்ளே 615
162. வெள்ளேக்கல் 476
163. வெள்ளேக்கற்சுண்ணம் 506
164. வெள்ளேப்பாடாணம் 236, 251, 256, 263, 349, 449, 480, 576, 591, 602

# சீவப்பொருளின் அட்டவணை

| வ. எண் | சீவப்பொருளின் பெயர் | செய்யுள் எண் |
|---|---|---|
| 1. | அண்டவெண்கரு | 475 |
| 2. | அண்டவோடு | 476 |
| 3. | அமுரி | 528 |
| 4. | ஆட்டுப்பால் | 120, 170, 435 |
| 5. | ஆமையோடு | 613 |
| 6. | ஆவின்அஸ்திமத்து | 169 |
| 7. | ஆவின்நெய் | 15, 22, 315, 317, 339, 344 |
| 8. | ஆவின்பால் | 14, 20, 22, 129, 136, 146, 161<br>163, 177, 312, 319 |
| 9. | ஆவின்மோர் | 21 |
| 10. | ஆனைக்கோடு | 403 |
| 11. | ஆனைப்பல் | 613 |
| 12. | கத்தூரி | 13, 132, 149, 436 |
| 13. | கரடித்தந்தம் | 614 |
| 14. | கருங்கோழி (சேவல்) | 298 |
| 15. | கரும்பூனை எலும்பு | 613 |
| 16. | கழுதைப்பால் | 308 |
| 17. | காண்டாமிருகக்கொம்பு | 613 |
| 18. | காராம் பசுவின்ரோசனை | 443 |
| 19. | கொம்பரக்கு | 116, 138 |
| 20. | கோரோசனை | 13, 31, 132, 268, 342, 418<br>424, 436 |
| 21. | கோழிமுட்டை | 9 |
| 22. | கோழிமுட்டை வெண்கரு | 242 |
| 23. | சவ்வாது | 483, 526, 610 |
| 24. | சாரைப்பாம்பு | 453 |
| 25. | சாரைப்பாம்புக்கண்டம் | 445 |
| 26. | சுணங்கன்மலம் | 573 |
| 27. | ஞானிவெண்மலம் | 480 |
| 28. | தசையண்டச்சத்து | 615 |
| 29. | தயிர் | 20 |
| 30. | தேன் | 15, 26, 32, 138, 216, 219, 225,<br>230, 240, 245, 247, 604, 608 |
| 31. | நண்டு | 613 |
| 32. | நண்டுச்சாறு | 375 |
| 33. | நண்டோடு | 476 |

34. நத்தை 265, 476, 613
35. நல்லபாம்புக்கண்டம் 445
36. நாகம் 453
37. நாகவிடம் 520
38. நாய்எலும்பு 613
39. நெய் 9,341.
40. பசுநெய் 214, 322, 325, 332.
41. பசுந்தயிர் 282
42. பசும்பால் 183, 198, 308, 315, 331, 341, 415, 433.
43. பசுவெண்ணெய் 347
44. பன்றிக்கொம்பு 613
45. பால் 10, 90, 138, 184, 239
46. புலிப்பல் 613
47. புழுகு 132, 436, 481, 483, 520, 528, 533, 570, 600.
48. புழுகுசட்டம் 149, 159, 162.
49. புனுகுசட்டம் 121
50. பூரம் 449
51. பெரும்பாம்புக்கண்டம் 445
52. பொன்மெழுகு 119, 149, 268.
53. மயிலிறகு 350
54. மலைப்பாம்பு 453
55. மலைப்பாம்புக் கண்டம் 350
56. மனிதமண்டையோடு 188
57. மாட்டுக்கொம்பு 613
58. மான்அஸ்தி 613
59. முதலைப்பல் 613
60. முலைப்பால் 227, 528, 608
61. மேதிநெய் 355
62. மேஷத்தினுதிரம் 390
63. மேஷரத்தம் 537
64. வாய்நீர் 528
65. வெண்கருவின் தெளிவு 479
66. வெண்ணுத்தி சர்ப்பம் 449
67. வெண்பசுவின்பால் 118
68. வெள்ளாட்டுக்கறி 10
69. வெள்ளாட்டுச்சப்பை எலும்பு 538
70. வெள்ளாட்டுப்பால் 169, 428
71. வெள்ளாட்டுப்பித்து 234, 261.

# சரக்கியல் - நீர்ப்பொருள்கள்

| வ. எண். | பெயர் | செய்யுள் எண். |
|---|---|---|
| 1. | அண்டநீர் | 372, 378, 380, 403, 406, 410 |
| 2. | அமுரி | 19, 238, 372, 395 |
| 3. | அமுரிநீர் | 564, 568 |
| 4. | ஆதியுப்புச்செயநீர் | 410 |
| 5. | ஆற்றுநீர் | 128, 142, 211 |
| 6. | இஞ்சிநீர் | 113 |
| 7. | இஞ்சிரசம் | 252 |
| 8. | இணங்கனீர் | 478 |
| 9. | இரவிநீர் | 369 |
| 10. | இரவிப்பால் | 108, 551, 553 |
| 11. | இளநீர் | 147, 269, 341, 428, 433 |
| 12. | இளவெந்நீர் | 256 |
| 13. | ஈருதமேதிச்சாணிப்பால் | 549 |
| 14. | உமிழ்நீர் | 525 |
| 15. | ஊசிநீர் | 376, 493, 567, 576 |
| 16. | ஊசிநீர்ச்சுண்ணத்தெளிநீர் | 506 |
| 17. | ஊற்றுநீர் | 218 |
| 18. | கடுங்காரச்செயநீர் | 497, 513, 520, 578, 593 |
| 19. | கடுங்காரநீர் | 600 |
| 20. | கம்பியுப்புச்செயநீர் | 495 |
| 21. | காடி | 14, 21, 111, 140, 298, 559 |
| 22. | காடாமணக்குச்சாறு | 111 |
| 23. | குளிர்ந்தசலம் | 14, 20, 21 |
| 24. | குளிர்ந்த தண்ணீர் | 447 |
| 25. | கொடுப்பை வெந்தநீர் | 511 |
| 26. | சாரச்செயநீர் | 543 |
| 27. | சாரநீர் | 449, 500, 515, 518, 535, 562, 564, 565, 577, 600 |
| 28. | சிறுநீர் | 577 |
| 29. | சுக்குநீர் | 113 |
| 30. | சுண்ணநீர் | 470 |
| 31. | சுத்தசலம் | 117, 161, 466 |
| 32. | தண்ணீர் | 146, 566 |

| | | |
|---|---|---|
| 33. | தேசிநீர் | 567, 568, 569, 591 |
| 34. | நாதநீர் | 380 |
| 35. | பசுநீர் | 195, 211, 325 |
| 36. | பழங்காடி | 368 |
| 37. | பழச்சாறு | 111 |
| 38. | புளியிலைக்கியாழம் | 14 |
| 39. | மிளகுநீர் | 130 |
| 40. | மிளகுவெந்நீர் | 113 |
| 41. | முல்லைவெந்தநீர் | 10 |
| 42. | மேதியுடைசாணிப்பால் | 14 |
| 43. | மோர் | 111 |
| 44. | வழலைநீர் | 569 |
| 45. | வாய்நீர் | 376, 519, 531, 574, 603 |
| 46. | வெடியுப்புச்செயநீர் | 476, 512, 549, 571, 577 592 |
| 47. | வெடியுப்புநீர் | 519 |
| 48. | வெந்நீர் | 122, 133, 139, 278 |
| 49. | வெள்ளாட்டுத்தலைவெந்தநீர் | 10 |

## சுத்தி முறைகள்

| வ. எண் | பெயர் | செய்யுள் எண் |
|---|---|---|
| 1. | அமுக்கிரா சுத்தி | 90 |
| 2. | கெந்தக சுத்தி | 20 |
| 3. | சேங்கொட்டைச்சுத்தி | 13, 14 |
| 4. | வெண்காரசுத்தி | 548 |

# நோய்களின் அட்டவணை


| வரிசை எண் | நோய்ப் பெயர் | செய்யுள் எண் |
|---|---|---|
| 1. | அகவை | 72, 106 |
| 2. | அகுவை | 181 |
| 3. | அக்கரங்கள் | 13 |
| 4. | அக்னிமந்தம் | 208, 340 |
| 5. | அக்னி மந்தவாயு | 419 |
| 6. | அடித்தள்ளல் | 431 |
| 7. | அடிநாக்குச்சூலை | 292 |
| 8. | அட்டகுன்மம் | 336 |
| 9. | அண்டசூலை | 291 |
| 10. | அண்டப்பிளவை | 231 |
| 11. | அண்டவாதம் | 297 |
| 12. | அண்டவாயு | 38, 329, 438 |
| 13. | அதிசாரங்கள் | 202, 437 |
| 14. | அதிசாரம் | 88, 200, 430 |
| 15. | அத்திக்காய்க்கிரந்தி | 293 |
| 16. | அத்திசுரம் | 122 |
| 17. | அந்திரதாகம் | 417, 430 |
| 18. | அந்திர வாயு | 18 |
| 19. | அபானன் கடுத்துளைதல் | 431 |
| 20. | அரிகிரந்தி | 167, 292, 293, 365, 438 |
| 21. | அரிகிருமி | 437 |
| 22. | அருசி | 122 |
| 23. | அரையாப்பு | 5, 11, 27, 33, 42, 71, 193 231, 383 |
| 24. | அரையாப்புச்சூலை | 297 |
| 25. | அழல்மூலம் | 320 |
| 26. | அழற்கன்னச்சூலை | 167 |
| 27. | அழற்சி | 220, 416 |
| 28. | அழிகிரந்தி | 448 |
| 29. | அழிகுட்டம் | 448 |
| 30. | அற்வழிதல் | 64 |
| 31. | அஷ்டகுன்மங்கள் | 180 |
| 32. | அஸ்திசுரம் | 430 |
| 33. | ஆணி (கருவிழி நோய்) | 399 |

34. ஆமசூலை 260
35. ஆறுத அழிபுண்கள் 194
36. இசிவு 70
37. இடுப்புவலி 306
38. இந்திரியகண்டி 18
39. இரண்டாம் மாறல் சுரம் 172, 272
40. இரத்தக்கடுப்புளைச்சல் 282
41. இரத்தசிங்கி 124
42. இரத்த பித்தம் 115
43. இரத்தமாந்தை 422
44. இரத்தமூலம் 217, 316, 320, 419, 431.
45. இரத்தவயிற்றுளைச்சல் 282
46. இரவில் உடலெரிச்சல் 63
47. இருமல் 208, 342, 421
48. இரைப்பு 422
49. இலிங்கப்புற்று 293
50. இலிங்கவியாதிகள் 34
51. இளைப்பு 73, 181, 208, 341
52. இறுக்குமூலம் 431
53. ஈளை 342, 421
54. ஈற்றையரிக்கும் கிரந்தி 144
55. உச்சி சூடைதல் 69
56. உடம்பெரிவு 220
57. உடலில் பிணநாற்றம் வீசுதல் 74
58. உடலில் மதுநாற்றமடித்தல் 73
59. உடல் இளைப்பு 306
60. உடல் குளிர்தல் 73
61. உடல் நடுக்கல் 64
62. உடல் வறட்சி 343
63. உடல் வியர்த்தல் 74
64. உடற் கடுப்பு 292
65. உடற் காந்தல் 343
66. உடற் குளிர்ச்சி 69
67. உடற்சூடு 69, 270
68. உட்குடைச்சல் 307
69. உட்குத்து 70
70. உண்ணுக்கில் கிரந்தி 144
71. உதரப் பொருமல் 313
72. உதரவாயு 333

| | | |
|---|---|---|
| 73. | உதிரக்கட்டு | 181 |
| 74. | உதிரசூலை | 292 |
| 75. | உதிரதோடம் | 250 |
| 76. | உதிரவாயு | 38 |
| 77. | உப்பிசங்கள் | 217 |
| 78. | உருத்திரவாயு | 27, 360 |
| 79. | உளமாந்தை | 421 |
| 80. | உள்குத்து | 26 |
| 81. | உள்நடுக்கல் | 7 |
| 82. | உள்நாக்குக்குறியை நோக்கல் | 63 |
| 83. | உள்மூலங்கள் | 320 |
| 84. | உள்ளங்கை, உள்ளங்கால் குளிர்தல் | 63 |
| 85. | உள்ளுருக்கி | 122 |
| 86. | உறுப்புமூலம் | 320 |
| 87. | ஊறல் | 558 |
| 88. | எரிசூலை | 291 |
| 89. | எலும்புருக்கி | 89, 123, 430 |
| 90. | எல்லாவகைச்சுரங்கள் | 255 |
| 91. | எல்லாவகைத் தோடங்கள் | 250 |
| 92. | ஏங்கல் | 249 |
| 93. | ஏறண்டவாதம் | 303 |
| 94. | ஐயசூலை | 292 |
| 95. | ஒடுவைப்புண்கள் | 193 |
| 96. | ஒட்டியப்புண் | 5, 294, 353 |
| 97. | ஒன்றுவிட்ட மாறல்சுரம் | 172 |
| 98. | ஓடுவிப்புருதி | 193 |
| 99. | கக்கல் | 421 |
| 100. | கக்குவான் | 422 |
| 101. | கடிவீக்கம் | 217 |
| 102. | கடுப்புவாய் | 307 |
| 103. | கட்டுசூலை | 291 |
| 104. | கண்காசம் | 133, 152 |
| 105. | கண்குருடு | 133 |
| 106. | கண்டக்கிரந்தி | 293 |
| 107. | கண்சிவப்பு | 199 |
| 108. | கண்டத்திற்கு மேலே வரும் நோய்கள் | 153 |
| 109. | கண்டமாலை | 5, 11, 27, 33, 123, 152, 193, 293, 353, 374, 437, 558 |
| 110. | கண்நீர்ப்பாய்ச்சல் | 133 |

| | | |
|---|---|---|
| 111. | கண்நோய் | 157 |
| 112. | கண்பஞ்சடைதல் | 74 |
| 113. | கண்படலம் | 133, 152 |
| 114. | கண்பூ | 133 |
| 115. | கபாலகரப்பன் | 186 |
| 116. | கசரோகங்கள் | 379 |
| 117. | கசரோகம் | 421 |
| 118. | கபாலகிரந்தி | 294 |
| 119. | கபால குஷ்டம் | 186 |
| 120. | கபாலக்குத்து | 152, 186 |
| 121. | கபாலக் கொதிப்பு | 114 |
| 122. | கபாலசூலை | 33, 152, 186, 292 |
| 123. | கபாலத்தினவு | 187 |
| 124. | கபாலவலி | 139 |
| 125. | கபாலவாயு | 186 |
| 126. | கரட்டில்புண் | 294 |
| 127. | கரட்டுச்சூலை | 291 |
| 128. | கரப்பன் | 5, 17, 27, 33, 42, 167, 182, 312, 352, 360, 437, 558 |
| 129. | கருங்கிரந்தி | 293 |
| 130. | கருங்குட்டம் | 297 |
| 131. | கருவழிக்கும் கிரந்தி | 293 |
| 132. | கருவழிக்கும் கிரந்திசூலை | 308 |
| 133. | கர்ப்பச்சூலை | 33 |
| 134. | கர்ப்பத்திலெழுந்த நோய்கள் | 27 |
| 135. | கல்லடைப்பு | 38 |
| 136. | கவுசி | 72, 106, 113, 181, 324, 329, 332, 338, 336 |
| 137. | கழல்வாதம் | 7 |
| 138. | கள்ளிப்பூக்கிரந்தி | 293 |
| 139. | கறுப்புவங்கு | 426 |
| 140. | கற்பக்கிரந்தி | 293 |
| 141. | கன்னப்புற்று | 123, 139, 152, 167 |
| 142. | கன்னரோகம் | 164, 165 |
| 143. | கன்னேசி | 27, 123, 139, 152, 167 |
| 144. | காசங்கள் | 344 |
| 145. | காசம் | 5, 72, 115, 122, 221, 225, 345, 421 |
| 146. | காது சீழ் | 167 |

147. காமாலை 6, 72, 110, 113, 209, 217, 220
221, 225, 338

148. கிரந்தி 5, 11, 26, 35, 41, 114, 123, 186
231, 280, 283, 303, 349, 352, 360
364, 373, 383, 425, 437, 558

149. கிராணி 5, 89, 200, 202, 216, 365, 437

150. கிரிச்சரம் 122, 329

151. கிரிச்சனம் 114, 416

152. கிரிச்சனவாயு 303

153. கிறுகிறுப்பு 152

154. குடலேற்றம் 197

155. குடல்வாதம் 7, 106

156. குடற்படுவன் 38, 437

157. குட்டங்கள் 453, 349

158. குட்டம் 5, 11, 17, 26, 33, 41, 186, 193
231, 294, 302, 348, 352, 360, 364
373, 437, 455, 558

159. குண்டலவாயு 7

160. குந்தம் (கண்) 133

161. குருதிச்சூலை 291

162. குலைமுட்டி 106

163. குலைவலி 430

164. குவளைவீக்கம் 133

165. குழிவாழைப்புண் 294

166. குளிர்சுரம் 235, 271, 272

167. குறைகுட்டங்கள் 448

168. குறைநோய் 37

169. குறைநோய் 353

170. குறைநோய் 455

171. குறைந்துகபம் விழுதல் 421

172. குன்மசூலை 197

173. குன்மம் 5, 27, 89, 101, 105, 113, 217
324, 329, 537

174. குன்மவாயு 38, 208

175. கெடிசூலை 152

176. கெண்டை 181, 333, 336

177. கெண்டைவாயு 324

178. கெந்ததாளி 114

179. கெர்ப்பச்சூலை 336

180. கெர்ப்பவாயு 335
181. கெர்ப்பவிப்புருதி 333, 335
182. கொடுஞ்சுரம் 31
183. கொதிப்பு 174
184. கோழைக்கட்டு 422
185. கைகால் முடக்கு 26
186. சகலசுரங்கள் 244, 264
187. சண்டிக்காய்ச்சல் 174
188. சதைச்சூலை 307
189. சத்தி 122, 270
190. சந்துவாதம் 124
191. சயம் 5, 72, 114, 122, 217, 221, 225, 342, 379, 419, 421
192. சலகிரிச்சு 437
193. சன்னி 71, 227, 243, 247, 364
194. சன்னிவாதசுரம் 140, 141, 258
195. சன்னிவாதம் 56, 252, 276
196. சிங்கி (விரணம்) 123
197. சிரங்கு 5
198. சிரசுநோய் 134, 139, 145, 154, 164, 187
199. சிலேத்துமப்பிணிகள் 115, 228, 250, 425
200. சீதசுரம் 237, 240, 252
201. சீழ்மூலங்கள் 33, 320, 419, 431
202. சுகசன்னி 250, 259
203. சுரங்கள் 142, 234, 243, 260, 379
204. சுரசூலை 260
205. சுரதோடம் 248, 249
206. சுரபேதி 66
207. சுரமாந்தை 226
208. சுரம் 6, 72, 115, 122, 174, 257, 262, 430
209. சுரோணிதவாயு 336
210. சுவாசகாசம் 152, 421
211. சுவாசம் 154
212. சுவாசம் மூக்கிலன்றி வாயினுல் பாய்தல் 64
213. சுழிகணங்கள் 422
214. சூசிகாகிராணி 27
215. சூலை 5, 11, 17, 35, 38, 41, 114, 139, 182, 231, 277, 280, 283, 287, 302, 329, 349, 353, 360, 364, 383, 425, 437, 558

216. சூலைக்கட்டு 10
217. சூலைவாயு 26, 228
218. செங்கிரந்தி 293
219. செங்குட்டம் 297
220. செவிக்குத்தல் 139
221. சோகை 71, 208, 216, 220, 225
222. சோபம் 71, 226, 340
223. தடித்தமூலம் 320
224. தண்டரிக்கும் கிரந்தி 293
225. தண்டுக்கிரந்திப்புண்கள் 297
226. தண்டுசூலை 33, 291
227. தசையடைப்பு 38, 115
228. தந்தசூலை 152
229. தந்தவலி 139
230. தந்தவாயு 164
231. தமரகநோய் 101
232. தலைஉச்சியில் சூடு 64
233. தலைக்குத்து 182
234. தலைநோவு 114
235. தலையில் நீர்கோத்தல் 152
236. தலையில் வெடிசிரங்கு 186
237. தாகம் 122, 174
238. தாதுநட்டம் 18, 115, 124
239. தாபசோபங்கள் 122
240. திமிரம் 133
241. திமிர்வாதம் 7, 33, 115, 124, 220
242. திமிர்வாயு 41
243. திரட்சிவாயு 324
244. திரிதோடம் 248, 250
245. திரிதோடசுரம் 258
246. தும்மல் 186
247. தேகக்காந்தல் 115
248. தொடைவாழை 193
249. தொண்டைக்கம்மல் 343
250. நஞ்சுஅருந்தலால் ஆயுள் குறைவு 87
251. நஞ்சுவிடம் 250, 343
252. நடுக்கல் 226
253. நடுக்கல்சுரம் 235
254. நயனஉறுத்தல் 187

255. நயனதோடங்கள் 124
256. நயனநோய் 6, 134, 150, 154, 164
257. நயனவாதம் 199
258. நரித்தலைவாதம் 7
259. நலவேற்றுமை 74
260. நவமூலம் 71, 316, 320
261. நாக்கரிக்கும் கிரந்தி 292
262. நாக்கு சிவப்பு, மஞ்சள், கருமை நிறமடைதல் 63
263. நாக்குசூலை 142, 144
264. நாக்குவறட்சி 343
265. நாக்கை அரிக்கும் கிரந்திப்புண்கள் 144
266. நாசிகாபீடம் 27, 226, 438
267. நாசிக்கிரந்தி 293
268. நாபிச்சூடு 114
269. நாச்சூலை 123, 139
270. நாபியடி வீக்கம் 216
271. நாப்புற்று 123
272. நான்கு நாட்களுக்கொரு முறைவரும் மாறல் சுரம் 246
273. நீரடைப்பு 38, 115
274. நீராம்பல் 72, 106, 175, 324, 326, 332, 336
275. நீராம்பல் பெருவயிறு 113, 181
276. நீரிழிவு 6, 430
277. நீர்க்கட்டு 5, 180, 341, 419
278. நீர்க்கோவை 216, 324
279. நீர்ச்சுரப்பு 332
280. நீர்ச்சுருக்கு 220
281. நீர்ச்சூலை 124, 139, 291
282. நீர்ப்பில்லம் 199
283. நெஞ்சு வறட்சி 343
284. நெஞ்சுவீக்கம் 63
285. நெற்றி வாயு 164
286. பகலில் உடல்குளிர்தல் 63
287. பக்கசூலை 360
288. பசிவேட்கை 73
289. பச்சைவாதம் 7
290. படிவீக்கம் 217
291. பட்சவாதம் 276

292. பரிசல் (கண்) 133
293. பவுத்திரங்கள் 5, 18, 71, 188, 193, 197, 231, 374, 437
294. பவுத்திரம் 11, 26, 33, 38, 42
295. பறங்கிப்புண் 448
296. பாண்டு 5, 71, 72, 110, 113, 181, 208, 209, 216, 217, 221, 225, 332, 338
297. பிடரிவலி 114
298. பித்த அதிகரிப்பு 157
299. பித்தளரிச்சல் 133
300. பித்தகாசம் 145, 152, 160
301. பித்தகுன்மம் 220
302. பித்தசன்னி 70
303. பித்தசுரம் 171, 252, 270
304. பித்தசூலை 292
305. பித்தசோகை 340
306. பித்ததலைக்குத்து 199
307. பித்தபாண்டு 220
308. பித்தம் 208, 250, 270
309. பித்தவாத நோய்கள் 217
310. பித்தவாந்தி 219, 226
311. பித்தவெப்பு 341
312. பிரமதோடம் 248
313. பிரமியம் 419
314. பில்லம் 133
315. பிளவை 5, 11, 18, 27, 33, 42, 167, 188, 193, 294, 297, 349, 353, 374, 437, 558
316. பிளவைக்கட்டி 437
317. பீலிகை 106, 329, 336
318. பீனிசங்கள் 5, 6, 71, 122, 139, 164, 186, 199, 422
319. புண் 355
320. புண்சூலை 291
321. புண்புரைகள் 26, 194
322. புரையோட்டம் 193, 197
323. புழுவெட்டு (இமை) 133
324. புழுவெட்டு (தலையில்) 187
325. புறமூலம் 320

| | | |
|---|---|---|
| 326. | புறவீச்சு | 70 |
| 327. | புற்று | 5, 11, 18, 33, 42, 123, 231, 353, 360, 374, 437, 558 |
| 328. | புற்றுச்சூலை | 292 |
| 329. | பெருநீர்க்கோவை | 38 |
| 330. | பெரும்பாடு | 122, 437 |
| 331. | பெருமூச்சு | 63 |
| 332. | பெருவயிறு | 329 |
| 333. | பெருவீக்கம் | 216 |
| 334. | பேதி | 72, 328 |
| 335. | பேராம்பல் | 326 |
| 336. | பைத்தியம் | 270 |
| 337. | பொடுகு | 187 |
| 338. | போதை மயக்கம் | 96 |
| 339. | மகோதரம் | 72, 106, 175, 180, 333, 336 |
| 340. | மண்டைக்குத்து | 71, 139 |
| 341. | மண்டைச்சூலை | 33 |
| 342. | மண்டையிடி | 152, 186 |
| 343. | மண்டையிடிச்சூலை | 304 |
| 344. | மதிமயக்கம் | 250 |
| 345. | மயிருதிர்தல் | 187 |
| 346. | மரணசன்னி | 70 |
| 347. | மரணம் | 74 |
| 348. | மரவைக்கட்டி | 294 |
| 349. | மருந்தீடு | 343 |
| 350. | மருள்கிரந்தி | 33, 292 |
| 351. | மலக்கட்டு | 5, 68, 250, 315, 340, 419 |
| 352. | மலசலக்கிருமி | 105 |
| 353. | மலட்டுப்பூச்சி | 336 |
| 354. | மாணிக்கிரந்தி | 292 |
| 355. | மாந்தம் | 122, 342, 347, 379 |
| 356. | மார்படைக்கும் உருத்திரவாயு | 101 |
| 357. | மார்படைப்பு | 27 |
| 358. | மார்பாணி | 28, 437 |
| 359. | மாறல்சுரங்கள் | 142, 154, 157, 246 |
| 360. | மாறுபட்டபார்வை | 63 |
| 361. | முகம்கோணல் | 63 |
| 362. | முகம்வியர்த்தல் | 73 |
| 363. | முக்குற்றநோய் | 154 |

| | | |
|---|---|---|
| 364. | முட்டிச்சூலை | 18 |
| 365. | முழிபுரட்டல் | 63 |
| 366. | மூளைமூலம் | 320 |
| 367. | மூக்குநீர்ப்பாய்ச்சல் | 186 |
| 368. | மூர்ச்சை | 71 |
| 369. | மூலக்கிராணி | 419, 430 |
| 370. | மூலநோய் | 427 |
| 371. | மூலபேதி | 431 |
| 372. | மூலப்புற்று | 193 |
| 373. | மூலப்பாண்டு | 217 |
| 374. | மூலம் | 297, 365, 437 |
| 375. | மூலவாயு | 312, 313, 315, 416 |
| 376. | மூன்றும் மாறல் சுரம் | 172, 247, 272 |
| 377. | மெய்குளிர்ந்து தெறித்தல் | 62 |
| 378. | மெய்மயக்கம் | 71 |
| 379. | மேகஊறல் | 17 |
| 380. | மேகத்தாலெழுந்தரோகம் | 7 |
| 381. | மேகசுரம் | 419 |
| 382. | மேகசூலை | 423 |
| 383. | மேகநீர் | 123 |
| 384. | மேகம் | 43, 114, 226, 365, 418, 430, 436 |
| 385. | மேகவாயு | 42, 43 |
| 386. | மேகவெட்டை | 417 |
| 387. | மேல்மூச்சு | 249, 343 |
| 388. | மேல்வாயில்வரும் ஓடுவைப்புண் | 144 |
| 389. | மேல்வாய்க்கிரந்தி | 293 |
| 390. | மேற்சுவாசம் | 64 |
| 391. | யோனிப்புண் | 293 |
| 392. | யோனிப்புற்று | 27, 293 |
| 393. | வசூரியாலெழுந்த சூடு | 431 |
| 394. | வயிற்றில் குத்துவாதம் | 197 |
| 395. | வயிற்றுநோய் | 324, 336 |
| 396. | வயிற்றுவலி | 63, 336 |
| 397. | வயிற்றுளைவு | 262 |
| 398. | வலிப்பு | 227 |
| 399. | வளரும்புற்று | 448 |
| 400. | வறட்சி | 220 |
| 401. | வறட்சிமூலம் | 320, 419 |
| 402. | வறட்சூலை | 292 |

403. வறள்மூலம் 431
404. வாதக்கடுப்பு 273, 307
405. வாத சன்னி 231
406. வாதசுரம் 171
407. வாதசூலை 291, 292, 373
408. வாததோடம் 248
409. வாதநோய் 18, 26, 33, 274, 306, 425
410. வாதபித்தமாறல் சுரம் 246
411. வாதம் 11, 106, 139, 275, 276, 360, 364
412. வாதவாயு 225, 303
413. வாந்தி 72, 208, 226, 249, 328
414. வாயில்வரும் விரணச்சூலை 144
415. வாயு 101
416. வாயுசூலை 123
417. வாயூறல் 72
418. வாய்க்கிரந்தி 293
419. வாய்ச்சூலை 10, 384
420. வாய்வறட்சி 343
421. வாயு 99, 106, 115, 276, 283, 332, 537
422. விக்கல் 226, 249, 270
423. விடக்கடிகள் 87, 353
424. விடங்கள் 250, 448
425. விடசுரங்கள் 122, 171, 240, 247, 252, 258
426. விடபாகம் 216
427. விடாச்சுரங்கள் 168, 174, 240
428. விப்புருதி 11, 27, 152, 167, 181, 193, 294
349, 374, 422, 438
429. வியாதிகள் தோன்றுவதற்குரிய
காரணங்கள் 5, 6, 43
430. விரணங்கள் 7, 33, 42, 193, 287, 353
431. விரணகுட்டம் 450
432. விரணசூலை 291
433. விரிகுட்டம் 448
434. விருமதோடம் 250
435. விலாஇழுப்பு சுழிமாந்தம் 422
436. விழி முறுக்கிக்கட்டும் சூலைவாதம் 134
437. விழியெரிச்சல் 199
438. விஷசுரம் 142
439. விஷபாகம் 181

| | | |
|---|---|---|
| 440. | வீக்கம் (தூலநோய்) | 340 |
| 441. | வெடிசூலை | 33, 291, 365, 438, 448 |
| 442. | வெட்டுக்குத்துக்காயம் | 87 |
| 443. | வெட்டை | 123, 186, 419 |
| 444. | வெண்குட்டம் | 297 |
| 445. | வெண்புள்ளி | 448 |
| 446. | வெப்பு | 174 |
| 447. | வெப்புப்பாவை | 72, 106, 181, 197, 324, 329, 336 |
| 448. | வெள்ளைவங்கு | 438 |
| 449. | வைசூரி | 419 |

# மருந்துகளின் அட்டவணை

## சூரணங்கள்


| வ. எண். | சூரணங்களின் பெயர் | செய்யுள் எண். |
| --- | --- | --- |
| 1. | இரசச்சீனிச்சூரணம் | 295 |
| 2. | கருங்குறுவைச்சூரணம் | 280 |
| 3. | கருங்கோழிச்சூரணம் | 298 |
| 4. | திருநேந்திரச்சூரணம் | 287 |
| 5. | பறங்கிபட்டைச்சூரணம் | 306 |
| 6. | பூரணவல்லாதிச்சூரணம் | 90 |
| 7. | மகாஅனலுருவச்சூரணம் | 275 |
| 8. | மகாகனலுருவச்சூரணம் | 277 |
| 9. | வல்லாதிச்சூரணம் | 39 |


## பற்பங்கள்

பற்பங்களின் பெயர்


| | | |
| --- | --- | --- |
| 1. | இரசபற்பம் | 361 |
| 2. | இரசவீரபற்பம் | 410 |
| 3. | கெந்தகபற்பம் | 557 |
| 4. | சண்டரசபற்பம் | 357 |
| 5. | சூதபற்பம் | 95 |
| 6. | தாம்பிரபற்பம் | 550 |
| 7. | தாளகபற்பம் | 367 |
| 8. | வெள்ளுள்ளிபற்பம் | 326 |


## செந்தூரங்கள்


| | | |
| --- | --- | --- |
| 1. | கனக செந்தூரம் | 393 |
| 2. | சூதசெந்தூரம் | 533 |
| 3. | பூபதிச்செந்தூரம் | 612 |

## மாத்திரைகளின் பெயர்


| | | |
|---|---|---|
| 1. | அரிதாரக்குளிகை | 237 |
| 2. | அரிதாரக்குளிகை (வேறு) | 242 |
| 3. | அரிதாரவெள்ளைமாத்திரை | 244 |
| 4. | அயனுதிவடகம் | 106 |
| 5. | இங்குலாதிக்குளிகை | 255 |
| 6. | ஏலாதிக்குளிகை | 267 |
| 7. | கெடிசூரணக்குளிகை | 261 |
| 8. | சார்த்துலாதிக்குளிகை | 99 |
| 9. | சீதசுராங்குசக்குளிகை | 236 |
| 10. | சுராங்குசக்குளிகை | 252 |
| 11. | சூதவல்லாதி உருண்டை | 7 |
| 12. | திரிலோக வடகம் | 111 |
| 13. | நாளையென்பான் நாயகன் குளிகை | 263 |
| 14. | நாளையென்பான் நாயகன் குளிகை (வேறு) | 265 |
| 15. | மகாஇங்குலாதிக்குளிகை | 259 |
| 16. | மகாசார்த்துலாதிக்குளிகை | 101 |
| 17. | மகாசுராங்குசக்குளிகை | 251 |
| 18. | மகாமிருத்துவாதிக்குளிகை | 234 |
| 19. | மிருத்துவாதிக்குளிகை | 235 |
| 20. | வச்சிரகபாடமாத்திரை | 200 |


## குடிநீர்


| | | |
|---|---|---|
| 1. | இரசவேக்காட்டிற்குக் குடிநீர் | 384 |


## செயநீர்கள்


| | | |
|---|---|---|
| 1. | சாரச்செயநீர் | 469 |
| 2. | வெடியுப்புச் செயநீர் | 475 |


## களிம்பு


| | | |
|---|---|---|
| 1. | விரணக்களிம்பு | 355 |

## பிட்டு

| | | |
|---|---|---|
| 1. | வாதத்திற்குப் பிட்டு | 273 |

## தயிர்

| | | |
|---|---|---|
| 1. | மூலவாயுவுக்கு வெள்ளுள்ளித்தயிர் | 312 |

## பதங்கம்

| | | |
|---|---|---|
| 1. | இரசபதங்கம் | 380 |

## சுண்ணங்கள்

| | | |
|---|---|---|
| 1. | கடுங்காரச்சுண்ணம் | 495 |
| 2. | காய்ச்சுவழலைக்குரு (முப்புக்குரு) | 576 |
| 3. | சவுக்காரச்சுண்ணம் | 518 |
| 4. | சவுக்காரப்பூநீறுவழலை (சவுக்காரச்சுண்ணம்) | 506 |
| 5. | தாளகச்சுண்ணம் | 491 |
| 6. | துருசுசுண்ணம் | 472 |
| 7. | பிரம்மக்கல்சுண்ணம் | 564 |
| 8. | பூவழலைக்குரு | 562 |
| 9. | வெடியுப்புச் சுண்ணம் | 473 |

## கட்டுமருந்துகள்

| | | |
|---|---|---|
| 1. | கெந்தகக்கட்டு | 538 |
| 2. | சூதக்கட்டு | 528 |
| 3. | தாளகக்கட்டு | 375 |
| 4. | நாகக்கட்டு | 388 |
| 5. | நாகக்கட்டு (வேறு) | 535 |
| 6. | நாகக்கட்டு (வேறு) | 542 |
| 7. | பாடாணக்கட்டு | 599 |
| 8. | வெடியுப்புக்கட்டு | 403 |
| 9. | வெண்காரக்கட்டு | 548 |

## மெழுகுகள்


| | | |
|---|---|---|
| 1. | அமிர்தகெந்திகுக்கில் வல்லாதி | 19 |
| 2. | அரிதார மெழுகு | 485 |
| 3. | இலிங்கமெழுகு | 483 |
| 4. | இலிங்கமெழுகு (வேறு) | 607 |
| 5. | கெந்தகமெழுகு | 488 |
| 6. | கெந்தகவல்லாதி | 29 |
| 7. | கௌரிமெழுகு | 487 |
| 8. | சலசரிமெழுகு | 400 |
| 9. | சிந்துவல்லாதி | 36 |
| 10. | சீனவல்லாதி | 11 |
| 11. | திலதவல்லாதி | 35 |


## மை


| | | |
|---|---|---|
| 1. | சண்டமாருத மை | 228 |
| 2. | சுரத்திற்கு அஞ்சனமை | 271 |
| 3. | திருநேத்திர மை | 248 |


## இளகங்கள்


| | | |
|---|---|---|
| 1. | சரபுங்கவில்வாதி இளகம் | 221 |
| 2. | நெல்லிமுள்ளி இளகம் | 218 |
| 3. | மகாசிந்தாதி இளகம் | 209 |
| 4. | வில்வாதி இளகம் | 205 |


## எண்ணெய்கள்


| | | |
|---|---|---|
| 1. | உள்ளியெண்ணெய் | 195 |
| 2. | கரப்பன் எண்ணெய் | 311 |
| 3. | கருவளர்க்கும் எண்ணெய் | 308 |
| 4. | கிரிச்சனங்களாறுக்கும் எண்ணெய் | 415 |
| 5. | குட்டத்திற்கு எண்ணெய் | 347 |
| 6. | குட்டத்திற்கு மலைப்பாம்பெண்ணெய் | 349 |

7. சகல நோய்களுக்கும் எண்ணெய் 432
8. சகல நோய்களுக்கும் எண்ணெய் 438
9. சயத்திற்கு எண்ணெய் 420
10. சவுக்கார எண்ணெய் 516
11. சவுக்கார எண்ணெய் எடுக்கும் முறை 517
12. நவமூலத்திற்கும் சகல வியாதிகட்கும் எண்ணெய் 427
13. பூசணி எண்ணெய் 417
14. மூலவாயுவுக்கு எண்ணெய் 313
15. மேகசூலைக்குக்கெருடன் கிழங்கெண்ணெய் 423


## குழம்புகள்


1. குண்டலாதிக் குழம்பு 337
2. கும்மட்டிக்காய்க் குழம்பு 329


## தைலங்கள்


1. அசனவில்வாதித் தைலம் 160
2. அதிகரணத் தைலம் 168
3. அமிர்தசஞ்சீவித் தைலம் 158
4. அமிர்தவல்லித் தைலம் 140
5. அமுதாதித் தைலம் 155
6. ஏரண்டத் தைலம் 175
7. இங்கோலத் தைலம் 230
8. கன்னரோகத்திற்குத் தைலம் 165
9. சீதேவித் தைலம் 172
10. செம்பிருத் தைலம் 182
11. நாக்குச்சூலைக்குத் தைலம் 142
12. புடத்தைலம் 188
13. மகாஏலாதித் தைலம் 145
14. மகாசந்தனாதித் தைலம் 114
15. மகாதிரிபலாதித் தைலம் 134
16. மகாநயனசஞ்சீவித் தைலம் 126

## நாசிகாபரணம்

1. சன்னிவிடசுரத்திற்கு நாசிகாபரணம் 246

## நசியங்கள்

1. பீனிசத்திற்கு நசியம் 198
2. வலிப்புக்கு நசியம் 227

## நெய்கள்

1. இரத்தமூலத்திற்கு நெய் 315
2. கடுக்காய் நெய் 339
3. கண்டங்கத்திரிநெய் 344
4. நவமூலத்திற்கு நாயுருவிநெய் 316
5. மாந்தநெய் 346
6. வயிற்றுநோய்க்கு நெய் 321
7. வல்லாரை நெய் 341

## கடுகு

1. கும்மட்டிக்காய்க்கடுகு 333
2. வயிற்று நோய்க்கு நெய்க்கடுகு 325

## இதரமருந்துகள்

1. அயச்செம்பு 545
2. களங்குசெந்தூரம் செய்யமருந்து 526
3. கற்பம் 500
4. சகலகுட்டத்திற்கும் மருந்து 453
5. தாமிரச்சூதம் 559
6. வீரமருந்து – வேதை 525

## துணை மருந்துகள்

| வ.எண். | பெயர் | செய்யுள் எண். |
|---|---|---|
| 1. | அமிர்தரச சஞ்சீவி | 365 |
| 2. | அரிதாரபற்பம் | 364 |
| 3. | இஞ்சிச்சாறு | 254 |
| 4. | இளவெந்நீர் | 260, 296 |
| 5. | ஈருள்ளி | 262 |
| 6. | ஊசிநீர் | 289 |
| 7. | கந்தாதி லேகியம் | 365 |
| 8. | கருவாப்பட்டை | 553 |
| 9. | கழுதைப்பால் | 270 |
| 10. | கிராம்பு | 553 |
| 11. | கொதிக்கவைத்த சீனியிட்ட இளநீர் | 269 |
| 12. | சாதிக்காய் | 553 |
| 13. | சாதிபத்திரி | 554 |
| 14. | சீரகக்கஷாயம் | 254 |
| 15. | சீரகம் | 262 |
| 16. | தசமூலக்குடிநீர் | 254 |
| 17. | திரிகடுகுக்கஷாயம் | 254 |
| 18. | திரிபலைக்கஷாயம் | 254 |
| 19. | துளசிச்சாறு | 254 |
| 20. | தேன் | 302, 306, 398, 611 |
| 21. | நவலோகம் | 399 |
| 22. | நெய் | 306 |
| 23. | பஞ்சமூலக்குடிநீர் | 254 |
| 24. | புளியாரை நெய் | 365 |
| 25. | மிளகு | 266 |
| 26. | முலைப்பால் | 254 |
| 27. | மூலிகைப்பிட்டு | 254 |
| 28. | வல்லாதிஇளகம் | 365 |
| 29. | வால்மிளகு | 554 |
| 30. | வெந்நீர் | 106, 150 |
| 31. | வெல்லம் | 332, 360 |

# பத்தியப் பொருள்கள்

| வ. எண். | ஆகும் பொருள்கள். | செய்யுள் எண். |
|---|---|---|
| 1. | அரைக்கீரை | 28, 106, 241 |
| 2. | அரையுப்பு | 270 |
| 3. | அவரைப்பிஞ்சு | 16, 28, 106, 151, 241, 303, 366, 451 |
| 4. | ஆவின்நெய் | 354 |
| 5. | ஆவின்பால் | 348 |
| 6. | ஆவின்மோர் | 28 |
| 7. | இளங்கோழிச்சாறு | 180 |
| 8. | உடும்பு | 17 |
| 9. | உப்பிடாத எருமைமோர் | 110 |
| 10. | உப்புக்கட்டு | 451 |
| 11. | ஊர்க்குருவி | 296 |
| 12. | ஒரேகுளத்துநீர் | 291 |
| 13. | கண்டங்கத்திரி | 366 |
| 14. | கருங்குறுவையரிசி | 354 |
| 15. | கல்லுப்புக்கட்டு | 305 |
| 16. | காடை | 17 |
| 17. | குரவை | 451 |
| 18. | கொடுப்பை | 366 |
| 19. | கொத்தமல்லி | 151, 451 |
| 20. | கொள்ளு | 180 |
| 21. | கோழி | 296, 303 |
| 22. | கோழி இறைச்சி | 279 |
| 23. | கோழிச்சாறு | 324 |
| 24. | சம்பாப்பச்சரிசி | 354 |
| 25. | சர்க்கரை | 354 |
| 26. | சிறுகீரை | 16, 151 |
| 27. | சிறுபயறு | 16, 28, 354, 452 |
| 28. | சிறுபயற்றம்பருப்பு | 151 |
| 29. | சீரகம் | 451 |
| 30. | சீனி | 237, 348, 558 |
| 31. | சுடுகஞ்சி | 336 |
| 32. | சுண்டை வற்றல் | 324 |

33. சுறுமீன் 17
34. தயிர் 16, 185
35. துவரம்பருப்பு 240, 270, 290, 296, 303, 452
15, 16, 28, 34, 185
36. தூதுவளை 16, 451
37. தூதுவளைப்பிஞ்சு 366
38. நெத்திலி 279
39. நெய் 16, 28, 34, 554, 558
40. நெல்லிக்காய் 16, 28
41. பசுநெய் 366
42. பசும்பால் 240, 290, 366
43. பசுவின்நெய் 452
44. பசுவின்பால் 16, 237, 447
45. பயறு 366
46. பழம்புளி 451
47. பழயநெய் 185
48. பால் 185, 451, 558
49. புடலங்காய் 16
50. புடலம்பிஞ்சு 151
51. புடல் 28
52. புழுங்கலரிசிக்கஞ்சி 266
53. புளித்தமோர் 41
54. புளியாரை 366
55. புரு 452
56. மணத்தக்காளி 366, 451
57. மிளகு 36
58. மிளகுநீர் 180, 324
59. முயல்வற்றல் 452
60. முருங்கை 28, 303
61. முருங்கைக்காய் 16, 279, 290, 296
62. முருங்கைப்பிஞ்சு 151, 241, 366, 451
63. முருங்கையிலை 279, 296, 366
64. மோர் 185, 324
65. மோர்ச்சோறு 262
66. வழுதலைப்பிஞ்சு 106, 151, 241, 366
67. வறுத்தஉப்பு 110, 150, 240, 252, 426
68. விரால் 17
69. வெண்ணெய் 554
70. வெந்நீர் 240, 447

| | | |
|---|---|---|
| 71. | வெந்நீரன்னம் | 252, 260, 264, 426 |
| 72. | வெள்ளாடு | 16 |
| 73. | வெள்ளாட்டுநெய் | 452 |
| 74. | வெள்ளாட்டுப்பால் | 290 |
| 75. | வெள்ளாட்டுவற்றல் | 28, 451 |

---

## பத்தியப் பொருள்கள்

| வ. எண் | ஆகாரப் பொருள்கள் | செய்யுள் எண் |
|---|---|---|
| 1. | இறைச்சி | 151 |
| 2. | உப்பு | 106, 266, 279, 290. 297, 303 310, 348, 425, 447 |
| 3. | உள்ளி | 241, 251 |
| 4. | கசப்புப்பொருள்கள் | 217, 279, 297, 307, 348 366, 455 |
| 5. | கடுகு | 241, 251 |
| 6. | கத்தரிக்காய் | 307 |
| 7. | கரப்பன்பண்டம் | 17, 34, 194, 427, 452, 455 |
| 8. | காமம் | 208 |
| 9. | காயம் | 290 |
| 10. | காற்று | 290 |
| 11. | கைப்புப்பொருள்கள் | 220, 266, 282, 383 |
| 12. | சம்பாரப்பொருள்கள் | 290 |
| 13. | சையோகம் | 28 |
| 14. | நல்லெண்ணெய் | 455 |
| 15. | நெய் | 243 |
| 16. | பகலுறக்கம் | 257 |
| 17. | புகை | 164, 194, 208, 232, 241, 243, 310 |
| 18. | புகையிலை | 185, 226 |
| 19. | புளி | 106, 141, 164, 185, 194, 208, 217 220, 226, 232, 241, 243, 279, 297 303, 310, 348, 366, 422, 447, 451 455, 558 |

| | | |
|---|---|---|
| 20. | புளிப்பு | 151, 266, 282, 383 |
| 21. | பூண்டு | 241 |
| 22. | மங்கையரைக்கூடல் | 17, 36 |
| 23. | மாங்கிஷங்கள் | 34, 241 |
| 24. | மிளகாய் | 17, 36 |
| 25. | மீன் | 151 |
| 26. | மேதிநெய் | 383 |
| 27. | மேதிப்பால் | 383 |
| 28. | மேதிமோர் | 383 |
| 29. | மோர் | 106, 141, 243, 422 |
| 30. | வாயுபதார்த்தம் | 36, 101 |
| 31. | வாயுவை உண்டாக்கும் பொருள்கள். | 307 |
| 32. | வெங்காயம் | 290 |
| 33. | வெய்யில் | 290 |

# பொது இயல் – மருந்து செய்முறைக் கருவிகள்

| வ. எண் | | செய்யுள் எண் |
|---|---|---|
| 1. | அகன்றவாய்த்தாழி | 300 |
| 2. | அகப்பை | 509 |
| 3. | அகல் | 37 |
| 4. | அஞ்சுசுண்ணக்குகை | 480, 481, 491, 513, 421, 530, 531, 533 |
| 5. | அடிக்கனத்த பாண்டம் | 380 |
| 6. | அப்பிரகத்தகடு | 516, 603 |
| 7. | அயக்கரண்டி | 402, 469, 510, 559, 607 |
| 8. | அயக்குகை | 377, 388, 536 |
| 9. | அயச்சட்டி | 395, 410, 586 |
| 10. | அயத்தாம்பாளம் | 400 |
| 11. | இரும்புமண்வெட்டி | 271 |
| 12. | உரல் | 35, 37 |
| 13. | உலை | 469, 507 |
| 14. | கடப்பாரை | 8 |
| 15. | கரண்டி | 507 |
| 16. | கலசம் | 174, 418 |
| 17. | கல்லுரல் | 8, 15, 25, 94, 330, 500 |
| 18. | கல்வம் | 111, 557 |
| 19. | கவர்மத்து | 368, 481, 506 |
| 20. | குகை | 486 |
| 21. | குண்டா | 93 |
| 22. | குப்பி | 143, 610, 617 |
| 23. | குறடு | 529 |
| 24. | குறுவாய்க்கலசம் | 375 |
| 25. | கூர்மயெந்திரம் | 357 |
| 26. | கொம்புச்சிமிழ் | 230 |
| 27. | சட்டி | 189 |
| 28. | சரவுலை | 533 |
| 29. | சலாகை | 619 |
| 30. | சிமிழ் | 249, 253, 602 |
| 31. | செப்பு | 104 |
| 32. | தமர்க்கலசம் | 190 |

| | | |
|---|---|---|
| 33. | தாழி | 117, 136, 140, 178, 183, 212 |
| 34. | தாம்பிரச்செம்பு | 271 |
| 35. | நாகக்கிண்ணி | 400, 410 |
| 36. | பாண்டம் | 19 |
| 37. | பானை | 189 |
| 38. | பீங்கான் | 31, 95, 470, 475, 602 |
| 39. | மண்சட்டி | 538 |
| 40. | மயிர்க்குச்சி | 359 |
| 41. | மாட்டுக்கொம்புச்சிமிழ் | 272 |
| 42. | மிடா | 211 |
| 43. | வடிகலசம் | 121, 132, 150, 430 |
| 44. | வட்டோடு | 238 |
| 45. | வாலுகை | 381, 411, 579, 594, 617 |
| 46. | வாலை | 397 |
| 47. | வெள்ளாவிச்சட்டி | 444 |
| 48. | வேய்ங்குழல் | 192 |

## பொது இயல் - அளவைகள்


1. ஆழாக்கு 278, 425
2. உரி 195
3. உளுந்து (பருமன்) 238
4. ஒருகரண்டியளவு 314
5. கழஞ்சு 92, 95, 99, 132, 166, 349, 435, 436
6. கழஞ்செடை 93
7. காசெடை 251, 319, 348, 421, 600, 602, 603
8. குறுணி (அளவு) 146
9. குன்றி எடை 231, 251, 611
10. சிறுகரண்டியளவு 347
11. சிறுசுண்டைக்காய் (அளவு) 202
12. சிறுபயறு (அளவு) 233, 236, 253
13. சுண்டைக்காய் (அளவு) 37, 105, 109, 269
14. தான்றிக்காய் (அளவு) 26, 216
15. துவரை (அளவு) 244
16. தூணி 209, 339
17. தூதளங்காய் (அளவு) 113, 242
18. தேங்காய் (அளவு) 368, 501
19. நெல்லிக்காய் (அளவு) 16, 32
20. பச்சைப்பயறு (அளவு) 239
21. படி 15, 140
22. பணஎடை 95, 246, 249, 398, 483, 558, 611
23. பதக்கு 155
24. பயறு (அளவு) 264
25. பலம் (எடை) 12, 15, 19
26. பாக்கு (அளவு) 189, 472
27. புன்னைக்காய் (அளவு) 100, 219
28. மா (எடை) 620
29. மிளகு 257, 260
30. முள்ளிக்காய் (அளவு) 338
31. ரூபாய் (எடை) 370
32. வராகனெடை 13, 39, 40, 149, 157
33. விளாங்காய் (அளவு) 337
34. வெந்தயம் (அளவு) 262
35. வெருகடி (அளவு) 35, 41, 278, 307, 319, 326, 328

## பொது இயல் - புடஇயல்


| | | |
|---|---|---|
| 1. | கஜபுடம் | 390, 479 |
| 2. | காடைப்புடம் | 245, 574 |
| 3. | குக்குடபுடம் | 109, 239, 328, 372, 519, 606 |
| 4. | குழிப்புடம் | 537 |
| 5. | கெசபுடம் | 108, 477, 482 |
| 6. | சேவல்புடம் | 305 |
| 7. | தானியபுடம் | 121, 332 |
| 8. | பூப்புடம் | 472 |
| 9. | மணவரைப்புடம் | 396, 557, 570, 578 |
| 10. | மேல்புடம் | 19 |
| 11. | வராகபுடம் | 496 |

## பொது இயல்


| வ. எண். | | செய்யுள் எண். |
|---|---|---|
| 1. | ஆசிரியர் இந்நூலில் கூறியுள்ள மருந்துகள் | 2, 3 |
| 2. | ஆசிரியர் எழுதியுள்ள நூற்களின் பெயர்களும் விளக்கங்களும் | 75–77 |
| 3. | ஆசிரியர் காரெள்ளின் எண்ணெயது கருஅறிய வேண்டுதல் | 499 |
| 4. | கருமவினைநீக்கி நோய் நீக்கும் மருந்து செய்வதற்குரிய வேள்விமுறை | 459–468 |
| 5. | காப்பு | 1 |
| 6. | நூற்கோவை | 75 |
| 7. | பத்தியத்தின் இன்றியமையாமை | 226 |
| 8. | மருத்துவர்களுக்கு அறிவுரை | 3, 4 |
| 9. | நோயாளிகளுக்கறிவுரை கர்மவினைதீர | 220, 243 |
| 10. | எல்லா சரக்குகளையும் மடியச் செய்ய வழி | 408, 409 |
| 11. | செந்தூரம், குருமருந்துகளுக்கு கெந்தகக்கட்டு சேர்த்தலின் அவசியம் | 541 |
| 12. | மக்களுக்கு அறிவுரை | 74, 97, 98, 124, 125, 232, 367, 374, 392, 399, 414, 456, 494, 503, 504, 597, 598, 621, 622 |
| 13. | மருத்துவத்தைப் பிறருக்குச் சொல்ல விதிமுறைகள் | 385, 386, 387 |
| 14. | மருத்துவம் செய்யுமுறை | 78 |
| 15. | மருத்துவர் ஒழுக்கம் | 457, 458 |
| 16. | மருத்துவர்கள் அறியவேண்டிய நூல்கள் | 502 |
| 17. | மக்களுக்கு அறிவுரை | 284, 285, 286 |
| 18. | முப்புகுருவின் மகிமை | 580, 581 |
| 19. | யாத்திரைபோக | 203, 204 |
| 20. | வழலையின் பெருமை | 505 |


11130